பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதி வெளியீடு எண்: 13

உ

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை

திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பதின்மர்

அருளிச் செய்த

திருவிசைப்பா

திருப்பல்லாண்டு

[ஒன்பதாம் திருமுறை]

[தெளிவுரை]

குரோதி ஆண்டு மார்கழித் திருவாதிரை வெளியீடு

20—12—1964

ஸ்ரீ குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம்

பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதி வெளியீடு எண் 13.

உ

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவிசைப்பா

திருப்பல்லாண்டு

[ஒன்பதாம் திருமுறை]

தெளிவுரை

திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்து அதிபர்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி

அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

8-4-1950-ல் நிறுவிய

ஸ்ரீ ஆதி குமரகுருபரசுவாமிகள் நினைவுப் பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதியிலிருந்து ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் திருவுளப் பாங்கின்வண்ணம் வெளியிடப்பெற்றது.

*

திருப்பனந்தாள், ஸ்ரீகாசிமடம் இளவரசு, வித்துவான்

ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

அவர்கள் எழுதிய பதிப்புரையுடன் கூடியது,

*

உரையாசிரியர் :

திருமுறைக் கலைஞர்

வித்துவான் திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்

மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி-2

*

பதிப்பாசிரியர் :

T. M. குமரகுருபரன் பிள்ளை, B, A., B. L.,

நிரந்தரத் தலைவர்

ஸ்ரீ குமரகுருபரன் சங்கம், ஸ்ரீவைகுண்டம்.

(குரோதி ஆண்டு மார்கழித் திருவாதிரை)

ஸ்ரீவைகுண்டம்] 20-12-1964 [விலை ரு. 1-50

பன்னிரு திருமுறைப் பதிப்புநிதி வெளியீடுகள்:

நூற்பெயர்	ஆண்டு	பிரதிகள்	விலை ரூ.
1. திருமந்திரம்	1956	1000	2–50
2. அகத்தியர் தேவாரத் திரட்டு	1956	2000	0–37
3. திருநாவுக்கரசர் தேவாரம் தலமுறை	1957	2000	2–25
4. திருவாசகம்	1957	2000	0–60
5. சுந்தரர் தேவாரம் தலமுறை	1958	3000	1–30
6. திருக்கோவையார் பேராசிரியருரையும் பழையவுரையும்	1960	2000	2–90
7. திருமந்திரம் (2-ம் பதிப்பு)	1960	3000	2–25
8. திருஞானசம்பந்தர் தேவாரம் தலமுறை	1961	3000	2–75
9. திருநாவுக்கரசர் தேவாரம் தலமுறை (2-ம் பதிப்பு)	1961	3000	2–00
10. திருவாசகம் (2-ம் பதிப்பு)	1962	10000	0–56
11. பதினோராந் திருமுறை	1963	3000	1–50
12. திருத்தொண்டர் புராணம்	1964	3000	3–00
13. திருவிசைப்பா–திருப்பல்லாண்டு (தெளிவுரை)	1964	3000	1–50

புத்தகம் கிடைக்கும் இடம் :

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோவில்
ஸ்ரீவைகுண்டம் P. O.
(திருநெல்வேலி ஜில்லா.)

2. தியாகராச விலாசம்
53, பிள்ளையார் கோவில் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை–5.

குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம். 12-64

உ

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை

பதிப்புரை

சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் ஒன்பதாம் திரு முறையாகத் திகழ்வது, திருவிசைப்பா ஆகும். இத்திருமுறையை, “மோகமெறி திருவிசைப்பா மாலை” என்று திருமுறை கண்ட புராண ஆசிரியர் குறிப்பிடுவர். இந்நூலில் 29 பதிகங்களும், மொத்தம் 301 செய்யுட்களும் உள்ளன. சைவர்கள் கோயில் என்று சிறப்பித்துக் கூறும் சிதம்பரத்துக்கு இந்நூலில் 16 பதிகங்கள் இருத்தல் கவனிக்கத்தக்கது. திருவாலியமுதனுர் பாடிய இந்தளப் பண் திருவிசைப்பாவில்,

‘உமையாள் காண விகிர்தன் ஆடுமே,
‘நந்தி முழவங் கொட்ட நாத ளுடுமே,
‘தீமெய்ச் சடைமேல் திங்கள்சூடித் தேவன் ஆடுமே,
‘அரவம்ஆட அனல் கையேந்தி அழகன் ஆடுமே,
‘கொத்தார் சடைகள்தாழ நட்டம் குழக ளுடுமே”

என்று வானோர் பணியவும் மண்ணோர் ஏத்தவும் மன்னியாடும் ஆனந்த தாண்டவத்தைப் புகழ்ந்துள்ளதிலிருந்து தில்லைப்பெரு மானிடத்து அடியார்களுக்கு இருந்த பக்தியும் பற்றும் தெள்ளிதின் புலப்படும்.

இத்திருவிசைப்பா ஆசிரியர்களுள் சோழவரசர் ஒருவர்; அவர்தாம் கண்டராதித்தர் ஆவர். இராசராச சோழன் காலத் திலும் இராசேந்திரன் காலத்திலும் வாழ்ந்த கருவூர்த்தேவர் பாடிய பதிகங்களும் இதில் இடம்பெற்றுள்ளன. வேணாட்டடிகள் திருவாங்கூர்ப் பகுதியில் வாழ்ந்த சிற்றரசர் ஆவர். புருடோத்தம நம்பி வைணவராயிருந்து சிவத்தொண்டராயினவர் என்பர்.

தில்லையைப் பற்றிய திருப்பதிகங்களுள், 'செல்வ மூவாயிரம் செழுஞ் சோதி யந்தணர், தெய்வ வாய்மொழியார் திருவாளர் மூவாயிரவர், வேத வென்றி மாருத மூவாயிரவர்' என்று இன்னேரன்னவாறு தில்லைவாழந்தணர்கள் புகழப்பட்டுள்ளனர். திருவீழிமிழலையில் ஐஞ்ஞூற்றந்தணர் ஏத்துவர் என்று சேந்தனர் திருவீழிமிழலைத் திருவிசைப்பாவில் பாடியுள்ளார். பூந்துருத்தி நம்பி காட நம்பி திருவிசைப்பாவில் கணம்புல்லர், கண்ணப்பர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சேரமான்பெருமாள், சுந்தரர் ஆகிய இவர்கள் குறிக்கப் பெற்றுள்ளனர். திருவாலி அமுதனர், 'சிற்றம்பலந்தன்னுள் அடிகள் அவரை ஆரூர் நம்பியவர்கள் இசைபாட' என்று சுந்தரரைக் குறிப்பிட்டிருக்கிறர்.

கண்டராதித்தர், ''வெங்கோல் வேந்தன் தென்னனடும் ஈழமும் கொண்டதிறற் செங்கோல் சோழன் கோழி வேந்தன் செம்பியன் பொன்னணிந்த....தில்லையம்பலம்' என்ற பாடற் பகுதியில் தம் தந்தை முதற் பராந்தக சோழனையும், 'கோழி வேந்தன் தஞ்சையர் கோன்' என்று தம்மையும் குறித்துள்ளமை வரலாற்று ஆய்வாளர்க்குப் பெருவிருந்தாகும்.

வேணுட்டடிகள், 'கைச்சாலும் சிறுகதலி இலை வேம்பும் கறிகொள்வார்', 'தம்பானை சாய்ப்பற்றர்', 'பொசியாதோ கீழ்க் கொம்பு நிறைகுளம் என்றதுபோல' என்ற முதுமொழிகளைத் திருவிசைப்பாவில் பயின்றுள்ளார். (உரை நோக்கி விளக்கம் அறிக.)

திருமாளிகைத்தேவர் பஞ்சமப் பண்ணில் பாடிய 'உயர்கொடியாடை' என்ற கோயில் திருவிசைப்பாவும், திருவாலியமுதனர் அப்பண்ணிலேயே பாடிய கோயில் திருவிசைப்பாவும் பாதாதிகேசம் ஆக உள்ளன. அந்தாதித் தொடை அமைந்தவை சில.

'திருநீறிடாவுருத் தீண்டேன் என்னும்', 'ஐந்தெழுத்தும் பிதற்றிப் பிணிதீர் வெண்ணீறிடப் பெற்றேன் என்னும்' என்ற

விடங்களில் திருநீறு ஐந்தெழுத்துக்களின் பெருமையும், 'உறைப் புடை அடியர்' என்ற பகுதியால் சமயப்பற்று உடையராதல் வேண்டும் என்பதும், 'சில தெய்வ நெறிக்கே திகைக்கின்றேன் எனைத்திகையாமே' என்ற விடத்துச், 'சில்லாண்டிற் சிதையும் சிறுநெறி சேராமே' என்று பல்லாண்டிற் கூறியவண்ணம் ஈசன் ஒருவனையே ஏத்துதல் வேண்டும் என்பதும், 'தத்தையங் கனையார் தங்கள் மேல்வைத்த' என்ற கருவூர்த்தேவர் பாடிய கங்கை கொண்ட சோளேச்சரத் திருவிசைப்பாப் பாடலால் இறைவனிடத்தில் அன்பு பூண்டொழுகல் வேண்டும் என்பதும், இன்னும் 'இறைவன் கருதுவார் கருதும் உருவில் வந்தருள்வன்', 'இறைவன் சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த தனி முழுமுதலாய் இருக்கிறார்' என்றின்னோரன்ன பிறவும் இத்திரு முறையினின்றும் அறியலாம்.

இந்நூலில் மழலைச் சிலம்பு, நீறணி பவளக்குன்றம், மொழுப்பு, பேழ்கணித்தல் முதலிய பல அருஞ்சொற்றொடர் களும், அருஞ்சொற்களும் பயின்றுள்ளன.

இனிச் சைவ அன்பர்கள் பஞ்ச புராணம் ஓதுதல் தொன்று தொட்ட வழக்கமாயுள்ளது. இவ்வைந்து திருப்பாடல்களுள் திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் இடம்பெற்றுள்ளன என் பதை நோக்கின் இவ்விரண்டையும் சைவ நன்மக்கள் மிகவும் சிறப்பாகப் போற்றினர் என்பது போதரும்.

திருப்பல்லாண்டு கடல்கடந்த நாடுகளிலும் செல்வாக்குப் பெற்றிருந்தது என அறிய வருகின்றது. "இந்தோனேசியாவில் தொல்குடிச் செல்வர் வீடுகளில் திருமணக் காலத்தில் இத் திருப்பல்லாண்டு ஓதப் பெறுகிற தென்றும், இதற்கு அவர்கள் 'லாண்டுபாடு' என்று பெயர் கூறுவர் என்றும், இது, 'மான்கடில்' எனத் தொடங்கும் என்று மேனாட்டறிஞர் உரைக்கின்றனர். 'மான்கடில்' என்பது திருப்பல்லாண்டின் முதற்பாட்டின் முதற்

சீராகிய 'மன்னுக தில்லை' என்றதன் 'சிதைவு'. (ஔவை-சு- துரைசாமிப்பிள்ளை-சைவ இலக்கிய வரலாறு, பக்கம்: 394.)

இத்தகைய சிறப்புக்களையுடைய 9ஆம் திருமுறைக்கு முன்னர்ப் பலர் உரைகளை எழுதியுள்ளனர். அவை: (1) 1949ல் ஸ்ரீகாசி மடத்து வெளியீடு. சென்னை திரு. வி. மு. சுப்பிரமணிய ஐயர் M. A. அவர்கள் எழுதிய குறிப்புரைகள்; (2) சென்னை, சைவ சித்தாந்த மகா சமாஜம் 1939ஆம்ஆண்டில் வெளியிட்டது. திருவாளர் அ. சோமசுந்தரம் செட்டியார் M. A. அவர்கள் எழுதிய குறிப்புரைகள்; (3) திருவாவடுதுறை ஆதீன வித்துவான், உயர்திரு சு. பொன்னு ஓதுவாமூர்த்திகள் அவர்கள் எழுதி வைத்திருந்த குறிப்புக்கள்; (4) காஞ்சிபுரம் மகா வித்துவான் திரு. இராமசாமி நாயுடு (ஸ்ரீமத் இராமாநந்த யோகிகள்) அவர்கள் எழுதி 1938ல் வெளியிட்ட மூலமும் உரையும் ஆம்.

இப்பொழுது வெளியிடப் பெறும் இவ்வுரையை எழுதியவர் திருச்சிராப்பள்ளி திருமுறைக் கலைஞர், வித்துவான் திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர்கள் ஆவர். இவர் ஸ்ரீகாசி மடத்து நூல் வெளியீடுகள் பெரும் பாலனவற்றைப் பதிப்பிக்கும் பணியில் முழுவதும் ஈடுபட்டவர்; பல நூல்களுக்கு உரைகளை எழுதியவர்; திருமுறைகள் முதலாயவற்றுள் நல்ல தோய்வு உடையவர்; தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஆழ்ந்த அறிவு பொருந்தியவர். இத்தகைய பழுத்த தமிழ்ப் புலவர் தம்முடைய ஆழ்ந்த திருமுறைப் பயிற்சியறிவைக் கொண்டும், முன் உரைகளைத் தழுவியும், இச்சிறந்த தெளிவுரையைத் திருவிசைப்பாவுக்கு எழுதியுள்ளார். இவ்வுரை மிகத் தெளிவாகவும், திருமுறையில் குறைந்த பயிற்சியுள்ளவர்களுக்கும் ஏற்றவாறு எளிமையாகவும் அமைந்துள்ளது.

பன்னிரு திருமுறைகளையும் பதிப்பித்தற் பொருட்டு எங்கள் தலைவர் திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்து அதிபர், ஸ்ரீ-ல-ஸ்ரீ

காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதி என்று ஒரு அறக்கட்டளை நிறுவி, அந் நிதி வருமானத்தைக் கொண்டு திருமுறைகளை அச்சிட்டு வெளிப் படுத்துதல் யாவரும் அறிந்ததே. ஒன்பதாம் திருமுறையாகிய 'திருவிசைப்பா—திருப்பல்லாண்டு' தெளிவுரையுடன் பன்னிரு திருமுறைப்பதிப்பு நிதி வெளியீடாகத் திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்து அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம் நிகழும் குரோதி ஆண்டு மார்கழித் திருவாதிரை நன்னாளில் (20–12–1964ல்) வெளியிடப் பெறுகின்றது.

திருவிசைப்பாவில் பல பதிகங்கள் சிதம்பரத்தைப்பற்றி யனவாக இருத்தலாலும், 9ஆம் திருமுறை ஈற்றிலமைந்துள்ள 'திருப்பல்லாண்டு' தில்லையில் தேரோடுதற் பொருட்டுப் பாடப் பெற்றதாதலாலும் மார்கழித் திருவாதிரை நன்னாளில் இந்நூல் வெளியிடப் பெறுவது சாலவும் பொருத்தமுடையதேயாம்.

இந்நூற்குச் சிறந்த முறையில் தெளிவுரை எழுதிய திரு முறைக் கலைஞர் வித்துவான் திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார் அவர் களுக்கும் இந்நூல் அச்சிடப் பெறுங்கால் ஒப்புநோக்குதல் முத லாய பணிகளில் ஈடுபட்ட ஸ்ரீவை-அருணந்தி நகர், ஸ்ரீ குமர குருபர சுவாமிகள் ஆர்ட்ஸ் காலேஜ், தமிழ்ப் பேராசிரியர் திரு. பொ. முத்தரசு M.A., B.T., அவர்களுக்கும், உரையைப் பார்வை யிட்டுத் தம் கருத்துக்களையும் அவ்வப்பொழுது அளித்து இப்பதிப் புச் செவ்வனே அமையச் செய்த திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் சிவநெறிச் செல்வர் வித்துவான் திரு. K. M. வேங்கடராமையா M. A., B. O. L. அவர்களுக்கும், இவ்வுரை எழுதுங்கால் பல கருத்துக்களையும் விளக்கங்களையும் அளித்துத் திரு. ஓதுவார் அவர்களை ஊக்கிய பல அன்பர்களுக்கும் செந்திலாண்டவன் திருவருள் துணை செய்க,

எங்கள் தலைவர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் ஸ்ரீவைகுண்டத்தில் நிறுவப் பெற்ற பல தருமங்களையெல்லாம் நன்கு மேற்பார்வை செய்து நடத்துபவரும், ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அவதரித்த குடும்பத்தில் வந்தவரும், ஸ்ரீவை-ஸ்ரீகுமர குருபரன் சங்கத்து நிரந்தரத் தலைவரும், ஸ்ரீவை-ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் ஆர்ட்ஸ் காலேஜ் முதலாகிய கல்வி நிலையங்களைச் சிறப்புற நடத்தத் துணைபுரிந்து வருபவரும் ஆகிய திரு. T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L., அவர்கள் திருமுறைகளின் தேவைகளை நன்குணர்ந்து, ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம், பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதி வெளியீடாக, இவ்வொன்பதாம் திருமுறையைச் செவ்வனே தெளிவுரையுடன் வெளிவரச் செய்தமைக்குச் செந்திலாண்டவன் திருவருள் பாலிப்பாராகுக.

இப்பதிப்பு நன்கு அமையுமாறு கட்டளையிட்டருளிய திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்து அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்குச் சைவ வுலகம் கடப்பாடுடையது. இப்பணியில் அடியேனையும் ஈடுபடுத்தியருளியமைக்கு ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களுக்கு மன மொழி மெய்களால் ஆகிய வந்தனை வழிபாடுகளை நன்றியறிதலோடு சமர்ப்பணம் செய்து கொள்கிறேன்.

"மன்னுக தில்லை வளர்க நம் பத்தர்கள்"!

இங்ஙனம்,

திருப்பனந்தாள், 20-12-1964.

வித்துவான்,
முத்துக்குமார சுவாமித் தம்பிரான்,
இளவரசு, ஸ்ரீகாசி மடம்

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை

உள்ளுறை

உ

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவிசைப்பா ஆசிரியர்கள்

ஒன்பதின்மரின் வரலாற்று ஆராய்ச்சி

திருமுறைக் கலைஞர்

[வித்துவான் திரு. தி. பட்டுச்சாமி ஓதுவார்]

திருவிசைப்பா விளக்கம்:

திருவிசைப்பா: திரு + இசைப்பா. திரு - தெய்வத் தன்மை; அழகு. இசை-புகழ். பா-பாடல். அதாவது நல்ல தெய்வத் தன்மை வாய்ந்த இசையுடன் பாடும் பாடல் என்பது பொருள். அல்லது இறைவனின் பொருள் சேர் புகழ்களைச் சொல்லும் பாடலுமாம்: "....இறைவன், பொருள் சேர் புகழ்" என்பது திருக்குறள்.

"திரு, கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் என்றது அழகு" என்று பேராசிரியர் உரை கூறினுரேனும், இங்குத் தெய்வத்தன்மை என்பதே சிறப்புடைத்தாம். திரு-அருட்டிரு எனப்பொருள் கொண்டு, அருள்நாத வடிவான இசைப்பாடலே திருவிசைப்பா என்றலுமாம். திருவிசைப்பா, "திருவிசைப்பாமாலை" எனவும் பெயர் பெறும்.

திருவிசைப்பா - அஃது இசைப்பாடலைக் கொண்ட நூலை உணர்த்தியதால், அன்மொழித் தொகை.

திருவிசைப்பாவின் பெருமையினைத் திருமுறை கண்ட புராண ஆசிரியர், "மோகமெறி திருவிசைப்பா மாலை" எனக் கூறுகின்றுர்.

பசுகரணம் முற்றிலும் நீங்கிப் பதி கரணம் உற்ற தூய உள்ளமுடைய மெய்யடியார்களால் சிவபெருமான் மீது கொண்ட ஆராக் காதலினுல் (பக்தியினுல்) உள்ளங் கசிந்துருகிப் பாடப்பெற்ற தோத்திரங்களான தேவாரம் திருவாசகம் முதலிய அருட்பாக்களின் தொகுதியே 'பன்னிரு திருமுறை' களாம்*அவற்றுள் திருஞானசம்பந்தர், திருநாவுக் கரசர், சுந்தரர் ஆகியோர் பாடியருளிய தேவாரம் § முதல் ஏழு திருமுறைகள் ஆகும். மாணிக்கவாசகர் பாடியருளிய திரு வாசகம், திருக்கோவையார் இரண்டும் எட்டாந் திருமுறை ஆகும். திருமாளிகைத்தேவர், சேந்தனுர் முதலிய ஒன் பதின்மர் பாடியருளிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகிய இவை ஒன்பதாம் திருமுறை ஆகும்.

சைவத் திருமுறைகளில் ஒன்பதாம் திருமுறையினைப் பாடியருளிய அடியார்களும் ஒன்பதின்மர் ஆவர். அவர்கள் திருமாளிகைத் தேவர், சேந்தனுர், கருவூர்த்தேவர், பூந் துருத்தி நம்பி காடநம்பி, கண்டராதித்தர், வேணுட்டடிகள், திருவாலியமுதனுர், புருடோத்தம நம்பி, சேதிராயர் என் போர். இதனை,

"செம்பொன்மணி அம்பலத்து நிருத்த னுர்க்குத்
திருவிசைப்பா உரைத்தவர்தம் திருப்பேர் சொல்லில்
பம்புபுகழ் செறிதிருமா ளிகைமெய்த் தேவர்
பரிவுடைய சேந்தனுர் கருவூர்த் தேவர்

---

*திருமுறை: திரு-தெய்வத்தன்மை. முறை-நூல். அதாவது கடவுளின் வடிவு, தன்மை, அவர் வீற்றிருக்கும் இடம், வழிபடும் முறை, வழிபட்டோர் வரலாறு, பயன் முதலியவற்றை முறைப் படுத்திக் கூறும் அருள் நூல் திருமுறை என்பதாம்.

§ முன்னர், திருஞானசம்பந்தர் பாடியருளியவற்றிற்குத் 'திருக் கடைக் காப்பு' என்றும், திருநாவுக்கரசர் பாடியருளியவற்றிற்குத் 'தேவாரம்' என்றும், சுந்தரர் பாடியருளியவற்றிற்குத் 'திருப்பாட்டு' என்றும் பெயர் வழங்கியதாகும். பின்னர், மூவர் பாடலுக்கும் தேவாரம் என்றே பெயர் வழங்கலாயிற்று.

நம்பிகா டவர்கோன்நற் கண்டரா தித்தர்
நன்குயர்வே ணுட்டடிகள் திருவாலி யமுதனுர்
அம்புவியோர் புகழ்புருடோத் தமர்சேதி ராயர்
ஆகஇவர் ஒன்பதின்மர் தாமுறைகண் டடைவே"
என்ற பழம்பாடலால் அறியலாம்.

திருவிசைப்பாப் பாடிய ஆசிரியர்கள், கோயிலாகிய சிதம்பரம், திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருப்பூவணம், திரு இடைமருதூர், திருவாரூர் என்னும் ஆறு தேவாரப் பாடல் பெற்ற தலங்களையும், திருவிடைக்கழி*, திருக்களந்தை யாதித்தேச்சரம், திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திரு முகத்தலை, திரைலோக்கியசுந்தரம், கங்கை கொண்ட சோளேச்சரம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராசராசேச் சரம் என்னும் எட்டு(த் தேவாரப்பாடல் பெருத) வைப்புத் தலங் களையும் பாடியுள்ளனர். கோயிலைப்பற்றிய பதிகங்கள் பதினைந்து; மற்றைய பதின்மூன்று தலங்களிலும் ஒவ்வொரு தலத்துக்கும் ஒவ்வொன்ருகப் பாடிய பதிகங்கள் பதின்மூன்று; ஆகத் திருவிசைப்பாத் திருப்பதிகங்கள் 28 ஆகும். சேந்த ஞர் கோயிலைப்பற்றிப் பாடிய திருப்பல்லாண்டு என்றதிருப் பதிகம் ஒன்றும்சேர்ந்து 29 திருப்பதிகம் ஆகும். தற்போது, 29 திருப்பதிகங்களுக்கும் உள்ள பாடல்கள் 301. ஆனுல்,

"அடைவுறுமா ளிகைத்தேவர் நான்கு சேந்தர்
அன்புறுபல் லாண்டொன்ருே(டு) இசைப்பா மூன்று
திடமுடைய கருவூரர் பத்து, வீறிற்
சிறந்தகா டவர்இரண்டு, கண்டர்வே ணுடர்
படிபுகழ்ஒவ் வொன்று,திரு வாலி நான்கு,
பன்னுபுரு டோத்தமனுர் இரண்டு,சேதி ராயர்
உடையதிருக் கடைக்காப்பொன்(று) ஆகஇரு பத்தொன்
பான்ஓது செய்யுள்முந்நூற் றறுபதினேே(டு) ஐந்தே"

---

* இத்தலத்துத் திருவிசைப்பா முருகனைப்பற்றியது.

என்ற பழம்பாடலில் செய்யுள் 365 என்று குறிக்கப்படுகிறது. எஞ்சிய 64 பாடல்களும் சில பதிகங்களிலிருந்து தற்போது சிதைந்துவிட்டன.

திருவிசைப்பாப் பதிகம் ஒவ்வொன்றுக்கும் பண்வரையறுக்கப் பெற்றிருக்கிறது. பஞ்சமம், காந்தாரம், புறநீர்மை, சாளரபாணி, நட்டராகம், இந்தளம் என்னும் ஆறு பண்கள் திருவிசைப்பாவில் அமைந்துள்ளன. சாளரபாணி என்ற பண் ஒன்று மட்டும் தேவாரங்களில் இல்லாத பண் ஆகும். பண் என்பது தமிழுக்கு உரிய இசை : "பழத்தின் இரதமாம் பாட்டிற் பண்ணும்" என்பது அப்பர் தேவாரம்.

தேவார ஆசிரியர் மூவரும் தங்கள் தங்கள் தேவாரப் பதிகங்களில் சிற்சில இடத்துச் சில பண்களின் பெயர்களைக் குறிப்பிட்டிருக்கின்றனர். ஆனால், பதிகத்திற்குரிய பண்ணின் பெயரைப் பதிக இறுதிப் பாடலில் குறிப்பிடவில்லை. ஆனால், கருவூர்த் தேவர் மட்டும் தாம் பாடிய திரைலோக்கிய சுந்தரம் என்ற தலத்துத் திருப்பதிகத்தில் மட்டும் அப்பதிகத்திற்குரிய பண், காந்தாரம் என்பதை அப் பதிக இறுதிப்பாடலில், "போற்றிசைப்பார் காந்தாரம்" என்று அருளி இருக்கிறார். அவ்வப்பதிகத்திற்கு அந்த அந்த ஆசிரியர்களே பண்வரையறுத்தனர் போலும்.

"ஐந்துடன்நால் வருமுரைத்த திருக்கடைக்காப் பிறபண்
அறையின்மா ளிகைத்தேவர் நான்கில்ஒன்று காந்தாரம்
முந்துகரு வூரர்பத்தின் இரண்டுபுற நீர்மை
மொழிந்திடுகாந் தாரம்ஒன்று காடவர்கோன் இரண்டின்
நந்தலில்சா ளரபாணி ஒன்றுவேணாட் டடிகள்
நவின்ற தொன்று புறநீர்மை திருவாலி யமுதர்
பந்தமறச் சொல்நான்கின் ஒன்றுநட்ட ராகம்
பகர்ந்திடின் ஒன்(று) இந்தளம்மற்(று) எவையும் பஞ்சமமே"

என்ற தனிப்பாடலால் திருவிசைப்பாப் பண்கள் இன்னவை என்று அறியப்பெறும்.

திருவிசைப்பா ஆசிரியர் வரலாறு :

1. திருமாளிகைத்தேவர்: திருவிசைப்பாவை அருளிய ஆசிரியர்கள் ஒன்பதின்மருள் திருமாளிகைத்தேவர் முதலாமவராகத் திகழ்பவர். இவர் சுத்த சைவ வேளாளர் மரபில் தோன்றியவரும்,* சோழமன்னர்களின் தீட்சா குருவாக விளங்கியவருமான திருவிடைமருதூரில் வாழ்ந்து வந்த ஐந்து கொத்தாருள்† ஒருவரான சைவராயர் வழியில் தோன்றிய உத்தமர். இவர் தம் முன்னோர்கள் வாழ்ந்த மடம் 'மாளிகை மடம்' (பெரிய மடம்) எனப் பெயர் பெறும். அம்மடத்தின் சார்பால் இவர் திருமாளிகைத் தேவர்‡ என்ற பெயரைப் பெற்றனர் என்பர். திரு - அடைமொழி. இவர் துறவுபூண்டு திருவாவடுதுறையை அடைந்து படர் அரசின் கீழிருந்து சிலகாலம் தவம் புரிந்தார் என்பர்.

பின்பு இவர் திருவாடுதுறையில் சிவாலயத்திற்கு அருகே தென்றிசையில் தமக்கென ஒரு மடாலயம் ('அருட்டுறை மடம்') அமைத்துக் கொண்டு இறைவழி பாட்டில்

---

* இவர் ஆதிசைவ (சிவப்பிராமண) குலத்தில் தோன்றியவர் என்றும் கூறுவர்.

† ஐந்து கொத்தார் – இவர் பரியேறும் பெரியோர், தெய்வப் படிமப் பாதம் வைத்தோர், மாணிக்கக் கூத்தர், குருராயர், சைவ ராயர் என ஐந்து வகையினர். இம்மரபில் வந்தவர் சிலர் தென்னுட்டிலுள்ள பல தலங்களில் உள்ளனர்.

‡ சிவதீட்சை பெற்றவர் அந்தணராகில் தம்பெயர் இறுதியில் 'சிவம்' என்றும், சுத்தசைவராகில் தம்பெயர் இறுதியில் 'தேவர்' என்றும், மற்றையோராகில் தம் பெயர் இறுதியில் 'கணம்' என்றும் சேர்த்து வழங்கல் வேண்டும் எனச் சிவாகமத்தின் சாரமான சித்தாந்த சாராவளி என்ற நூல் கூறும்.

நின்றவர்; அதுபோழ்து அங்குச் சிவயோகத்தில் அமர்ந் திருந்த சித்தரான போகநாதரிடம் ஞானேபதேசம் பெற் வர்; தம் தவத்தின் பயனுக அழகிய ஒளி வீசும் உடலைப் பெற்று விளங்கியவர். அப்பொழுது இவர் பல சித்திகளைப் பெற்றுத் திகழ்ந்தார்; சைவ சமயத்தை நன்கு வளர்த்துப் போற்றினுர்; பற்பல சைவ சித்தாந்த நூல்களை ஆராய்ந்து உணர்ந்த வித்தகராக விளங்கினுர்.

ஒருநாள் திருமாளிகைத் தேவர் காவிரியில் நீராடிச் சிவபூசைக்குத் திருமஞ்சனம், புட்பம் ஆகிய இவற்றை ஏந்திக்கொண்டு வரும்போது, வழியில் மக்கள் ஒரு சவத் தினைச் சுடலைக்கு எடுத்துச் செல்வதைக் கண்டு சவத்தீட் டினுல் சிவ பூசைக்கு முட்டு நேராவண்ணம் திருமஞ்சனக் குடம் முதலியவற்றை ஆகாயத்தில் எறிந்து அங்கே நிற்கச் செய்து, அச்சவத்தினைச் சுடலை வரை நடந்து செல்லுமாறு பணித்தார். பிறகு, திருமஞ்சனக் குடம் முதலி யவற்றை எடுத்துக் கொண்டு சென்றுர். ஒரு சமயம் இவர் திருவீழிமிழலையிலிருந்த காலத்தில் அங்கு நடக்கும் தேர்த் திருவிழாவின்போது மக்கள் இழுக்கமுடியாமல் ஓடா திருந்த திருத்தேரினை வடம் கழற்றிவிட்டுத் தானே ஓடும் படி செய்தார்.

இவர் தம் தவ வலிமையால் பேரழகு கொண்டு விளங்க, அதனைக் கண்ட மாதர்பலர் அவர் உருவத்தினைத் தம் மனத்தில் கொண்டனர். அதனுல் அம்மாதர்கள் அவரைப்போலவே புதல்வர்களைப் பெற்றெடுத்தனர். இச் செயலைக் கண்ட அந்த அந்த மாதர்களின் கணவன்மார் களும் பிறரும் திருமாளிகைத் தேவர்மீது சந்தேகங் கொண்டு பழிச்சொல் கூறலாயினர். பிறகு அங்கு ஆட்சி புரிந்த காடவர்கோன் கழற்சிங்கன் (கி. பி. 825 – 850)

ஆகிய பல்லவ அரசனின் சிற்றரசனுன 'நரசிங்கன்'§ என்னும் அரசனிடம் சென்று முறையிட்டனர். அப்போது அம்மன்னன் உண்மை அறியாது தேவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டு வரக் காவலாளிகளிடம் கட்டளையிட்டான். அவர்கள் உடனே திருமாளிகைத் தேவர் திருமடத்திற்குச் சென்று தாம் ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு அரசனிடம் வந்து சேர்ந்தனர். அது கண்ட அரசன் வெகுண்டு படையெடுத்து வந்தபோது திருமாளிகைத் தேவர் அரசனின் உள்ளக்கிடக்கையை அறிந்து துறைசை - கோமுத்தீசுவரர் திருக்கோயிலின் திருமதிலின்கண் இருந்த நந்திகளை உயிர்ப்பித்து ஏவி நரசிங்கனுடைய படையினை முறியடிக்கச் செய்தார்.

திருமாளிகைத்தேவர் ஒரு சமயம் சுடுகாட்டில் எழும் சவப்புகையின் நாற்றத்தை மாற்றியதும், கொங்கணவர் என்ற சித்தருடைய கமண்டலத்தில் என்றும் வற்ருத தண்ணீரை வற்றச்செய்ததும் சிவ நைவேத்தியமாகித் தமக்கு வந்த பயற்றஞ் சுண்டலைத் தம்மடாலயத்தின் புழக்கடையில் ஒரு பாத்தி கட்டி விதைத்துப் பலன் பெறச்செய்ததும் ஆகிய அற்புதச் செயல்களைச் செய்தனர். இவற்றை,

"குடங்கர்விசும் பிடைநிறுவிக் குணபநடந்
திடஇயக்கிக் கொடிஞ்சிப் பொற்றேர்
வடங்கழற்றி ஓட்டிமதில் நந்திகளை
வரவழைத்து வரைநன் காட்டின்
உடம்பின்எழு புகைமாற்றிக் கொங்கணர்பாத்
திரம்சுவற்றி உணவ தாய்வெந்
திடும்பயறு முளைசெய்தெமக்(கு) அருள்திருமா
ளிகைத்தேவர் இணைத்தாள் போற்றி"

§ இவ்வரசன் வந்து தங்கும் இடம் 'நரசிங்கன் பேட்டை' என்பதாம். இவனது ஆட்சி நடுநாட்டிலுள்ள திருமுனைப்பாடி நாடும் சோழ நாட்டில் சில பகுதியும் ஆகும் என்பர்.

எனவரும் தொட்டிக்கலை ஸ்ரீ சுப்பிரமணிய முனிவர் பாடலால் அறியலாம்.

திருவாவடுதுறை ஆதீன மடாலயத்துள் திருமாளிகைத் தேவருக்குத் தனிக்கோயில் உள்ளது. அவருடைய திருவுருவம் நான்கு திருக்கைகளுடன்* திகழ்கின்றது. ஸ்ரீ கோமுத்தீசுவரர்க்கு உச்சிக் கால பூசை முடிந்தபின் உடனே திருமாளிகைத் தேவருக்கும் பூசை நடைபெறும்; அதன்பின்னர், மடாலயத்தில் பகற்பந்தி போசனம் நடைபெறுவது வழக்கமாக இன்றும் இருந்து வருகிறது. "பேசு புகழ்ச்சுப் பிரமணிய தேசிகன்பொன், வீசு கழற்கடியேன் விண்ணப்பம்-நேசம், வருதிரு மாளிகைத்தே வன்பூசையாயே, கருதுபந்தி யாதல்வழக் கம்" என்பது மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் தனிப்பாடல்.

திருமாளிகைத்தேவர் தில்லைக்கூத்தப்பெருமானை வழிபட்டுப் பாடியனவாகக் காணப்படும் திருவிசைப்பாத் திருப்பதிகங்கள் நான்கு ஆகும்.

காலம்: கி. பி. 985-1014 வரை ஆட்சி புரிந்த முதலாம் இராசராசசோழனுல் தஞ்சையில் இராசராசேச்சரம் (பெரிய கோயில்) கட்டப்பெற்று அக்கோயிலின் ஸ்கங்கரியங்களுக்கு நியமிக்கப்பெற்ற தளிச்சேரிப்பெண்டுகளில் (தேவரடியார்களில்) ஒருத்தி பெயர், "நீறணி பவளக்குன்றம்"என்று ஒரு கல்வெட்டில் (S.I.I.Vol, ii No. 66) கூறியுள்ளது. 'நீறணி பவளக்குன்றம்' என்ற தொடர் திருமாளிகைத் தேவர் திருவிசைப்பா முதற்பதிகத்து ஆரும் பாட்டில் முதலடியில் உள்ளது. ஆகவே, திருமாளிகைத்தேவர் காலம் கி.பி.10ஆம்

---

* திருமாளிகைத்தேவர் குரு பணிவிடைக்கும் சிவபூசா காரியங்களுக்கும் தம் தவ வலிமையால் இன்னும் வேறு இரண்டு கைகளை உண்டாக்கிக்கொண்டார். அதனுல், அவர் நான்கு கைகளுடன் திகழ்கின்ருர் என்பது கன்னபரம்பரைச் செய்தியாகும்.

நூற்றுண்டின் இடைப்பகுதிக்கு முன்னர் எனக் கொள்ளக் கிடக்கின்றது; கி. பி. 9ஆம் நூற்றுண்டின் இடைப் பகுதியில் இருந்தவர் என்றலுமாம்.

2. சேந்தனுர் : திருவிசைப்பாவை அருளிய ஆசிரியர்கள் ஒன்பதின்மருள் சேந்தனுர்* இரண்டாமவராகத் திகழ்பவர். இவர் பட்டினத்தடிகளின் தலைமைக் கணக்கராக இருந்தவர்; திருவெண்காட்டுக்கு அண்மையிலுள்ள நாங்கூர் என்ற ஊரினர். இதனை, நாங்கூர்ச் சேந்தனை வேந்துவிட்ட, கைத்தளை நீக்கி யென்முன் காட்டுவெண் காட்டுளானே" என்ற பட்டினத்தடிகள் பாட்டற்பகுதியால் அறியலாம். அன்றியும், 'செப்புறைச் சேந்தன்' என்று திருவிடைக்கழித் திருவிசைப்பாவில் வந்துள்ளமையால் இவர், 'செப்புறை' என்ற ஊரினர் என்பர். செப்புறை என்பதனைச் சேந்தனுரின் குடிப்பெயர் என்றும் சிலர் கூறுகின்றனர்.

சேந்தனுர் பட்டினத்தடிகளின் கணக்கராக இருந்தபோது, அவரது ஏவலால் அவரது நிதியறையை எல்லோர்க்கும் திறந்து விட்டார். அப்பொழுது அடிகளின் சுற்றத்தாரது தூண்டுதலால் சோழ அரசன் சேந்தனுரைச் சிறையிலிட்டான். சேந்தனுர் அடிகளின் அருளால் சிறை

*திருவிசைப்பா பாடிய சேந்தனுரை 'வீழிச் சேந்தனுர்' என்றும், திருப்பல்லாண்டு பாடிய சேந்தனுரை நாங்கூர்ச் சேந்தனுர் என்றும் துடிசைக்கிழார் கூறுவர். (வீழி-திருவீழிமிழலை.) சேந்தனுர் ஒருவரே ஆவர் என்பது பலர் கருத்து.

இச்சேந்தனுரே அன்றித் திவாகரம் செய்வித்த 'சேந்தனுர்' என்ற பெயரினர் ஒருவர் உண்டு. அவர் சோழநாட்டு அம்பர் என்னும் ஊரினர்; தமிழ், ஆரியம் என்ற இரு மொழிகளிலும் வல்லவர்; புலவர்களை ஆதரித்தவர். இனி, வீரசோழியம் என்ற இலக்கண நூல் உரை மேற்கோள் பாடலில் பாராட்டப்பெற்ற 'சேந்தனுர்' என்ற பெயரினர் ஒருவரும் உண்டு. அவர் பொன்பற்றி என்ற ஊரினர்; குறுநிலமன்னர்; புத்த சமயத்தைப் போற்றியவர்.

நீக்கப்பெற்று மனைவி மக்களுடன் தில்லைக்குச் சென்றார்; அங்கு விறகு வெட்டி விற்று வாழ்க்கை நடத்தி வந்தார்; ஒவ்வொரு நாளும் விறகு விற்பனையால் வரும் சிறு ஊதியத்தைக் கொண்டு ஒரு சிவனடியாரை உண்பித்து வந்தார். ஒருநாள் கூத்தப்பெருமானே சிவனடியாராக அவர் வீட்டிற்கு எழுந்தருளி, அன்புடன் அளித்த களியாகிய உணவினை ஏற்று அதன் மிகுதியைத் தமது திருமேனியில் காட்டிச் சேந்தனாரின் பேரன்பை யாவரும் உணரச் செய்தருளினார். இதனை, "... செம்பொன் அம்பலத்து வேந்தன் தனக்கு... பழைய அவ்விழை அன்பாகிய பண்டைப் பறைச் சேந்தன் கொடுக்க அதுவும் திருவமிர் தாகியதே" எனவரும் கோயில் திருப்பண்ணியர் விருத்தம் 26ஆம் செய்யுளால் அறியலாம்.

பின்னர், ஒரு சமயம் சேந்தனார் தில்லைப்பதியில் இருக்கும்போது 'மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் ஓடாது தடைப்பட்டு நின்றதிருத்தேரைத் திருப்பல்லாண்டு பாடித் தானே ஓடி நிலையினை அடையுமாறு செய்தார்.

சேந்தனார் இறுதியில் திருவிடைக்கழி என்ற தலத்தை யடைந்து முருகக் கடவுளை வழிபட்டுக் கொண்டு அங்கேயே ஒரு திருமடம் அமைத்து வசிக்கலானார் என்றும், சேந்தனார் திருமடத்திற்கு அக்காலத்து அரசனால் நிலம்விடப் பட்டது என்றும், அந்நிலப்பகுதி உள்ள கிராமம் சேந்தமங்கலம் என்றும், பின்னர்ச் சேந்தமங்கலத்தில் முகமதியர் குடியேறினர் என்றும், தைப்பூச நன்னாளில் சேந்தனார் சிவபெருமான் திருவடி நீழலை அடைந்தார் என்றும் திருவிடைக்கழிப் புராணம் கூறுகிறது.

முதலாம் இராசராசன் (கி.பி. 985-1014) ஆட்சியில், திருவீழிமிழலைக் கோயிலில் நந்தாவிளக்குவைத்த 'ஜயந்தன்'

என்பாரைச் சிவஞானி என்றும், திருமாளிகைத் தேவர் என்றும் குறிக்கப் பெற்றுள்ளது. ஜயந்தன் என்றபெயரின் திரிபே சேந்தன் என ஆயிற்று என்பர். திருமாளிகைத் தேவர் பாடிய திருவிசைப்பாப் பதிகங்கள் நான்கினையும் அடுத்துச் சேந்தனூர் பாடிய திருவிசைப்பாப் பதிகங்கள் மூன்றும் அமைந்திருத்தலையும், திருமாளிகைத் தேவர் பாடியனவாக அமைந்த பதிகங்களில் இறுதிப் பதிகத்தின் இறுதிப் பாடலில் அவரது பெயர் குறிக்கப் பெறுமல் அவற்றின் பின் அமைந்த சேந்தனூர் பாடிய திருவிடைக் கழித் திருவிசைப்பாவின் இறுதிப்பாடலில் 'சேந்தன்' என்ற பெயர் குறிப்பிட்டிருத்தலையும் கூர்ந்து நோக்கித் திரு மாளிகைத் தேவர் என்பவரும் சேந்தனூர் என்பவரும் ஒரு வரே என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். (சாசனத் தமிழ்க்கவி சரிதம்-மு.ரா.)

இந்த ஆராய்ச்சிக் கருத்து, 'திருவிசைப்பா'பாடிய ஆசிரியர் ஒன்பதின்மர் என்று தொன்று தொட்டு வழங்கும் செய்திக்கு மிக முரணுகும். ஜயந்தன் என்ற பெயரையுடையவர் திரு விசைப்பா பாடிய திருமாளிகைத் தேவரதுபெயரைத் தாங் கிய வேருெருவராவர் எனக் கோடலேபொருந்தும். அவ ரைச் சேந்தனூர் என்று கருதுவதற்குச் சிறிதும் இடனில்லை.

திருமாளிகைத் தேவர் தாம் பாடிய திருவிசைப்பா முதல் பதிகத்து இறுதிப்பாடலில், 'மூர்க்கனேன்' என்றும், இரண்டாம் பதிகத்து இறுதிப் பாடலில் "தவப்பெருந் தொண்டர் தொண்டனேன்" என்றும் தம்மைப் பணிவுடன் குறிப்பிடுதல் அன்றித் தம்இயற்பெயரைக் குறிப்பிடவில்லை. ஆனுல், சேந்தனூர் தம் இறுதிப் பதிகத்தில் (மூன்ரும் பதி கத்தில்) தம் பெயரைக் குறிப்பிடுகின்ருர். ஆகவே, திரு மாளிகைத் தேவரும் சேந்தனூரும் இருவேறு ஆசிரியர்கள் என்பதே ஏற்புடைத்தாகும்,

சேந்தனூர் திருவீழிமிழலை, திருவாவடுதுறை, திருவிடைக் கழி என்ற மூன்று தலங்களுக்குத் திருவிசைப்பாப் பதிகங்களும், தில்லையம்பதியாகிய கோயிலுக்குத் திருப்பல்லாண்டு என்னும் பதிகமும் அருளிச் செய்துள்ளார்.

காலம் : சேந்தனூர், பட்டினத்தடிகளின் கணக்கர் என்று அறிவதால் காலம் கி.பி. 9ஆம் நூற்றாண்டின் இறுதியும், கி.பி. 10ஆம் நூற்றாண்டின் தொடக்கமும் ஆகும். கண்டராதித்த சோழன் (கி.பி. 947-957) ஆட்சிக் கல் வெட்டில் "கலிவிசயன்" "தருணேந்துசேகரன்" என்ற தொடர்கள் காணப்படுகின்றன. "தருணேந்து சேகரன்" என்ற தொடர் சேந்தனூர் பாடிய இரண்டாம் பதிகம் 3 ஆம் பாடலில் உள்ளது. ஆகவே, சேந்தனூர் கண்டாராதித்த சோழர் காலத்திற்கு முற்பட்டவர் என்பது துணிபு.†

3. கருவூர்த் தேவர் : திருவிசைப்பாவை அருளிய ஆசிரியர்கள் ஒன்பதின்மருள் கருவூர்த்தேவர் மூன்றாமவராகத் திகழ்பவர். இவர் கொங்கு நாட்டிலுள்ள கருவூரில் பிறந்தவர்; அதனால் கருவூர்த்தேவர் எனப் பெயர் பெற்றார். இவரது இயற்பெயர் இன்னது என்று விளங்கவில்லை. இவர் அந்தணர் குலத்தினர்; வேதங்களையும் பல கலைகளையும் நன்கு கற்றவர்; இனிய தமிழ்ப் பாடல் பாடுவதில் ஆற்றல் பெற்றவர்; சைவ சமயத்தின் வழி ஒழுகியவர்; போகநாதரிடம் உபதேசம் பெற்று ஞான நூல்கள் பல ஆராய்ந்து சிவ யோகத்தில் நின்றவர்; காயகற்பம் உண்டவர்; பல சித்திகள் கைவரப் பெற்றவர்; தம்மை இகழ்ந்த

---

† சேந்தனூரைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளில் சில, அண்ணாமலைப்பல்கலைக் கழகத்துத் தமிழ் ஆராய்ச்சித் துறைரீடரும், எனது நண்பருமான திருவாளர் வித்துவான் க. வெள்ளைவாரணனூர் அவர்கள் அளித்து உதவியனவாம்.

வர்களுக்குப் பற்பல அற்புதங்களைச் செய்து காட்டியவர்; பித்தர் என்று தம்மைப் பிறர் மதிக்கத் திரிந்தவர்; பிச்சை ஏற்று உண்ணும் துறவு வாழ்க்கையைக் கைக்கொண்டவர்; தாமரையிலைத் தண்ணீர்போல எச்செயலிலும் பற்றற்றிருந்தவர்; மலைகளிலும் வனங்களிலும் சஞ்சரித்தவர்.

ஒருசமயம் கருவூர்த்தேவர் வடநாடு, கொங்கு நாடு, தொண்டைநாடு, நடுநாடு முதலிய இடங்களிலுள்ள தலங்களைத் தரிசித்துக் கொண்டு, தென்பாண்டி நாட்டுத் திருப்புடைமருதூர் சென்று இறைவனிடம் திருவடி தீட்சை பெற்ருர்; ஸ்ரீவைகுண்டத்தை அடுத்த காந்தீசுவரம் என்ற சிவத்தலத்தில் இறைவனின் பேரொளியைக் கண்டு தரிசித்தார். பின்னர், இவர் நெல்லைப்பதியை அடைந்து, நெல்லையப்பர் சந்நிதியில் நின்று, "நெல்லையப்பா" என்று அழைக்க, அப்பொழுது நெல்லையப்பர் இவரது பெருமையைப் பலரும் அறியும் பொருட்டுச் சிறிது தாமதிக்க, 'இங்குக் கடவுள் இல்லை போலும்' என்று அவர் சினத்துடன் நீங்க, ஆலயம் பாழாகியது. அஃது அறிந்த ஊரார் நெல்லையப்பரை வேண்ட, நெல்லையப்பர் கருவூர்த் தேவரை மானூரில் சந்தித்து அருள்புரிந்து நெல்லைப்பதிக்கு அழைத்து வந்து காட்சி யளித்தார். பின்பு ஆலயம் செழித்தோங்கியது என்பர்.

கருவூர்த்தேவர் நெல்லைப்பதியை விடுத்துத் திருக்குற்ருலம் சென்று அங்குச் சிலநாள் தங்கியிருந்து, பின்னர்ப் பொதிய மலையை அடைந்து அகத்தியரைத் தரிசித்து அருள் பெற்றுப் பலநாள் அங்கே இருந்தார்.

அப்பொழுது தஞ்சாவூரில் முதலாம் இராசராசசோழன் (கி. பி. 983 - 1014) தனது ஆட்சி 20 ஆம் ஆண்டு முதல் 23 ஆம் ஆண்டு வரை கட்டிய தஞ்சை இராசராசேச்

சரத்து*ப் பேராவுடையார்க்கு (பெருங்கடவுளுக்கு) அட்ட பந்தன மருந்து பல முறை சாத்தியும் இறுகாமல் இளகி நின்றது. அது கண்டு அரசன் வருந்தி நின்றான். அதனை அறிந்த போகநாதர் பொதியமலையில் இருந்த கருவூர்த் தேவரை அழைப்பித்தார். கருவூர்த் தேவர் விரைந்து தஞ்சைக்கு வந்து, தம் குருவையும் அரசனையும் கண்டார்; எம்பெருமானை வழிபட்டு அட்டபந்தன மருந்தை இறுகச் செய்து பேராவுடையாரை நிலை நிறுத்தினார்.

கருவூர்த்தேவர் தஞ்சையினின்றும் ஸ்ரீரங்கம் சென்று அரங்கநாதர் அருள் பெற்றுச் சிலநாள் அங்குத் தங்கியிருந்துஅதன்பின் தமது கருவூரை அடைந்தார். கருவூரிலுள்ள வைதிகப் பிராமணர்கள் கருவூர்த்தேவரை வைதிக ஒழுக்கத்தை விட்டவர் என்றும், வாமபூசைக்காரர் என்றும் பழிச்சொல் தூற்றி அவர்க்கு அடிக்கடி பற்பல தொல்லைகளைக் கொடுக்கத் தொடங்கினர். ஒருநாள் கருவூர்த் தேவர் அவர்களுக்குப் பயந்தவர்போல் நடித்து கருவூர்த் திருஆனிலை ஆலயத்தை அடைந்து பசுபதீசுவரரைத் தழுவிக் கொண்டார் என்பது புராண வரலாறு.

---

* இந்தத் தஞ்சை -இராசராசேச்சரம் என்னும் பெரிய கோயில் முதன்முதல் வெற்றிடத்தில் புதிதாக முதலாம் இராசராச சோழனால் எடுப்பித்ததன்று. திருவிழிமிழலைத் திருத்தாண்டகத்தில் அப்பர் சுவாமிகள், ''தஞ்சைத் தளிக்குளத்தார்'' என்ற ஒரு சிவத்தலத்தைக் குறிப்பிடுகின்றார். அது தஞ்சாவூரில் இருந்த தேவாரப்பதிகம் இல்லாத வைப்புத் தலமாகிய பழைய சிவாலயமே ஆகும். அப் பழமையாக இருந்த சிவாலயத்தையே முதலாம் இராசராச சோழன் சிறந்த முறையில் யாவரும் வியக்கும் வண்ணம் திருப்பணி செய்து 'இராசராசேச்சரம்' என்ற பெயர் சூட்டிச் சிறப்பித்தான் என்று பிற்காலச் சோழர் சரித்திரம்-I. முதலாம் இராசராசசோழன் (பக்கம் 126–127) வரலாற்றில் எழுதியிருக்கிறது.

கருவூர்த் தேவர் திருவுருவச்சிலை சிறு சந்நிதியாகக் கருவூர்ப் பசுபதீசுவரர் ஆலயத்துள் வெளிப்பிரகாரத்திலே தென்மேற்குத் திக்கிலும், தஞ்சாவூர் பிரகதீசுவரர் ஆலயத் துள் வெளிப்பிரகாரத்திலே தென்மேற்குத் திக்கிலும் தெய்வீகச் சிறப்புடன் உள்ளது. அங்கு நாடோறும் பூசை யும் பிரார்த்தனைகளும் நடைபெறுகின்றன.

கருவூர்த்தேவர் கோயில், திருக்களந்தையாதித்தேச் சரம், திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கை கொண்ட சோளேச்சரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராச ராசேச் சரம், திருவிடை மருதூர் என்ற பத்துச் சிவத்தலங்களுக்கும், தலங்களுக்கு ஒவ்வொன்ருகத் திருவிசைப்பாப் பதிகங்கள் பத்துப் பாடியுள்ளார். திருவிசைப்பாப் பாடிய ஆசிரியர் களுள் இவர் பாடிய பதிகங்களே மிகுதியாக உள்ளன.

காலம்: கருவூர்த் தேவர் தஞ்சை இராசராசேச்சரம், கங்கை கொண்ட சோளேச்சரம் ஆகிய இரண்டு சிவத் தலங்கள் கட்டி முடித்த பின்னரே அத்தலங்களின் மீது திருவிசைப்பாப் பாடியதால், இவர் கி.பி. 10 ஆம் நூற் ருண்டின் கடைப்பகுதியிலும் 11 ஆம் நூற்ருண்டின் முற் பகுதியிலும் திகழ்ந்தார் என்னலாம். எனவே, முதலாம் இராசராச சோழன், அவன் மகன் முதலாம் இராசேந்திர சோழன் ஆகிய இவர்கள் காலத்தில் கருவூர்த் தேவர் விளங்கினுர் என்பது பெறப்படும்

4. பூந்துருத்தி நம்பிகாட நம்பி: திருவிசைப்பாவை அருளிய ஆசிரியர்கள் ஒன்பதின்மருள் பூந்துருத்தி நம்பிகாட நம்பி நான்காமவராகத் திகழ்பவர் ஆவர். பூந்துருத்தி என்பது சோழநாட்டுக் காவிரியின் தென்கரையில், தஞ்சா வூர்-திருவையாற்றின் இடையேயுள்ள கண்டியூரின் நேர்

மேற்கே சுமார் 2½ மைல் தொலைவில் உள்ள 11ஆவது சிவத்தலம் ஆகும்.

இப்பூந்துருத்தி என்னும் சிவத்தலத்தில் ஆத்திரேய கோத்திரத்திலே அந்தணர் குலத்தில் தோன்றியவர் 'நம்பி காடநம்பி' ஆவர். நம்பி*என்பது அந்தணர் குலத்தில் தோன்றியவர்க்குப் பெயருடன் அமைத்துக் கொள்ளும் ஒரு சிறப்புப் பெயர் ஆகும். நம்பி என்ற பெயருடன் காடவர் என்ற சொல்கூடி நிற்றலால் இவர் பல்லவர் வமிசத்தில் வந்தவர் என்றும் கூறுவர். எவ்வாருயினும், இப் பெரியார் முதிர்ந்த சிவபக்தர்; இறைவனிடம் இடையருத அன்பு கொண்டவர்; சிவத்தலங்கள் தோறும் சென்று சிவபெருமானை வழிபடுவதிலும், மூவர் பாடலாகிய தேவாரங்களை இடைவிடாது ஓதுவதிலும் காலம் கழித்தவர்; கண்ணப்பர், கணம்புல்லர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், சேரமான்பெருமாள் முதலாயினேரைத் தம் பதிகத்துள் வைத்துப் புகழ்ந்து பாராட்டியுள்ளவர்.

இவர் திருவாரூர், கோயில் என்ற இருதலங்களுக்கும் திருவிசைப்பாப் பதிகங்கள் பாடியுள்ளார். திருவாரூர் திருப் பதிகத்துள் இரண்டு பாடல்களே உள்ளன. இப்பூந்துருத்தி நம்பி காடநம்பி, தேவாரம் பாடிய மூவர் பாடாத சாளரபாணி என்ற ஒரு பண்ணில் கோயிற்பதிகம் பாடியுள்ளார்.

காலம்: முதல் இராதிராசனது (கி. பி. 1018-1054) 32 ஆம் ஆட்சியாண்டில் அமைந்த திருவையாற்றுக் கல் வெட்டில், 'ஒலோக மாதேவீச் வரத்து ஸ்தானமுடைய கேத்திர சிவபண்டிதர்க்காகத் திருவாராதனை செய்யும் ஆத்திரையன் நம்பி காடநம்பி'' (S.I.I. Vol. iv No. 520)

---

* நம்பி-ஆண் மகனில் சிறந்தவன் என்றலுமாம். நம்பிஎன்பது தற்போது அம்பி என மருவி வழங்குகிறது.

என்று காணப்படுவதால் பூந்துருத்தி நம்பி காடநம்பியின் காலம் கி.பி. 10ஆம் நூற்ருண்டின் இறுதி அல்லது கி.பி. 11ஆம் நூற்ருண்டின் தொடக்கம் ஆகலாம் என்பர்.

5. கண்டராதித்தர்: திருவிசைப்பாவை அருளிய ஆசிரியர்கள் ஒன்பதின்மருள் கண்டராதித்தர் ஐந்தாமவராகத் திகழ்பவர் ஆவர். இவர், சோழநாட்டை ஆண்டவனும் தில்லைச் சிற்றம்பலத்திற்குப் பொன்னேடு வேய்ந்து புதுப்பித்தவனுமான முதற்பராந்தக சோழன் (கி.பி. 907-953) என்பவனின் இரண்டாவது குமாரர் ஆவர். கண்டராதித்தர் (கி.பி. 950-957) சோழநாட்டைத் திறம்பட ஆண்டவர்; சிறந்த சிவபக்தர்; மூவர் தேவாரப்பாடலில் மிக்க பற்றுடையவர். இவரைச் 'சிவஞான கண்டராதித்தர்'* என ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. கண்டராதித்தர் தில்லைப்பதியில் எழுந்தருளிய கூத்தப் பெருமானிடத்தும், திருவாரூர்த் தியாகேசப் பெருமானிடத்தும் பெரிதும் ஈடுபாடுடையவர்; செந்தமிழ்ப் புலமை வாய்ந்தவர்; பல சிவாலயத்திருப்பணிகளைப் புரிந்தவர்; புறச்சமயத்தினரையும் நன்கு மதித்து அவர்கள்பால் அன்புடன் ஒழுகியவர்; திருச்சிராப்பள்ளிக்கு வடக்கே கொள்ளிடத்திற்கு வடகீழ்ப்பகுதியில் கீழ்மழநாட்டின் தலைநகரான திருமழபாடிக்கு மேற்கே ஒருமைல் தொலைவில் ''கண்டராதித்த சதுர்வேதி மங்கலம்'' என்ற ஊர் ஒன்று இவர் பெயரால் அமைக்கப்பட்டுள்ளது; தற்போது இவ்வூர் 'கண்டிராச்சியம்' என்று வழங்குகிறது.

கண்டராதித்தரின் மனைவியார், மழவர் குலத்துத் தோன்றிய 'செம்பியன் மாதேவியார்' ஆவர். இவர் உத்தம சோழன் (மதுராந்தகன்) என்பவனைப் புதல்வனுகப் பெற்றவர்; சிறந்த சைவப் பெண்மணியார். கி.பி. 957ல் தன்

---

* Ep. Car. ix. P. 99.

கணவன் சிவபெருமான் திருவடி நீழலை அடைய, இவர் தம் புதல்வனைப் பாதுகாக்கும் கடமையை மேற்கொண்டு உடன் கட்டை ஏருது உயிருடன் இருந்து,கோனேரிராசபுரம் (திருநல்லம்), திருவக்கரை முதலிய சிவாலயங்களுக்குத் திருப்பணி புரிந்தவர். இச்செம்பியன் மாதேவியார் சிவ பக்தியிலும், சிவத்தொண்டிலும் சிறந்து இருந்தமை பற்றி, 'மாதேவடிகள்'* என்ற சிறப்புப் பெயர் வழங்கப்பெற்றவர். முதலாம் இராசராச சோழன் (கி.பி. 985-1014) தென் ஞட்டைச் சிவனுறை நாடாகச் செய்வதற்குச் செம்பியன் மாதேவியார் தூண்டுகோலாக இருந்தவர். இவனது ஆட்சி 16ஆம் ஆண்டாகிய கி. பி. 1001ல் இவர் இறைவன் திருவடியை அடைந்தவர்.

கண்டராதித்தர் திருச்சிற்றம்பலமுடையாரைப் பற்றிப் பாடியதாகக் கிடைத்த திருவிசைப்பாத்திருப்பதிகம் ஒன்றே யாம். அப்பதிகத்தின் எட்டாவது பாடலில் கண்டராதித்தர் தம் முன்னேரின் சிறப்புக்களையும், இறுதியிலுள்ள திருக் கடைக் காப்புச் செய்யுளில் தம்மைக் 'கோழிவேந்தன்' எனவும், "தஞ்சையர்கோன்" எனவும் கூறியிருப்பதும் அறியத்தக்க தாம். (கோழி-உறையூர்).

காலம்: கண்டராதித்தர் கி. பி. 950 முதல் 957 வரை ஆண்ட சோழ அரசர் ஆதலின்,இவர் காலம் கி.பி. பத்தாம் நூற்ருண்டின் இடைப்பகுதி என்பது போதரும்.

6. வேணுட்டடிகள்: திருவிசைப்பாவை அருளிய ஆசிரியர்கள் ஒன்பதின்மருள் வேணுட்டடிகள் ஆருமவராகத் திகழ்பவர். வேணுடு என்பது கொடுந்தமிழ்நாடு பன்னி

---

* மாதேவடிகள்—மாதேவர்க்கு (சிவபெருமானுக்கு) ஏகாந்த ரான பெரியார் என்பது பொருள்.

ரண்டனுள் ஒன்று; அது கேரளநாடாகிய சேரநாட்டிற்கும் தென்பாண்டி நாட்டிற்கும் நடுவே திகழும் தென் திருவாங் கூருக்கு அண்மையில் உள்ளது.

வேணுடாகிய கொடுந்தமிழ் நாட்டில் சிவபக்தியில் முதிர்ந்த சிவஞானி ஒருவர் தோன்றினர்; அவரது இயற் பெயர் (பிள்ளைப் பெயர்) இன்னது என்று விளங்கவில்லை. பிறந்த நாட்டைக் குறிக்க அவருக்கு வேணுட்டடிகள் என வழங்கலாயிற்று. அடிகள் என்ற பெயர் துறவி என்பதைக் காட்டும். வேணுட்டடிகளை அந்நாட்டு அரசர் குலத்தில் வந்த துறவி என்பர். இவர் சிவபக்தியின் மேலீட்டினுல் தென்னுட்டிலுள்ள பல சிவத்தலங்களை அடைந்து, சிவ பெருமானை வாயார வாழ்த்தி வணங்கித் துதித்து வந்தவர் ஆவர்.

வேணுட்டடிகள் பாடிய திருவிசைப்பாப் பதிகம் ஒன்றே உள்ளது. அது கோயில் என்னும் சிதம்பரத்தைப் பற்றியது. இவர் உலகானுபவம் மிகுதியும் உடையவர் என்பது இவரது பாடல்களால் அறியக்கிடக்கின்றது. இவரைப்பற்றிய பிற செய்தி, காலம் முதலியன அறிதற் கில்லை.

7. திருவாலி யமுதனுர்: திருவிசைப்பாவை அருளிய ஆசிரியர்கள் ஒன்பதின்மருள் திருவாலி யமுதனுர் ஏழாமவ ராகத் திகழ்பவர். இவர் திருமயிலையில் வைணவ அந்தணர் குடியில் தோன்றியவர் ஆவர். சோழ நாட்டில் சீகாழிப் பதிக்குக் கிழக்கே அருகிலுள்ளது ஆலிநாடு. அதன் தலைமை ஊர் திருவாலி என்பது. இங்குத் திருக்கோயில் கொண்டுள்ள திருமாலுக்கு 'அமுதனுர்' என்ற பெயர் ஆகும். இவரது பெற்ருேர்கள், திருவாலி யமுதனுரிடம் மிகுந்த பக்தி பூண்டவர்கள். அதனுல், தம் புதல்வர்க்குத் திருவாலி

யமுதனர் என்ற பெயரையே இட்டுவழங்கினர் போலும். வைணவ அந்தணர் குடியில் தோன்றிய திருவாலி யமுதனர் சிவபக்தியில் ஈடுபட்டுச் சைவ அடியாராக மாறினர்; தில்லை நடராசப்பெருமானைத் தம் குலதெய்வமாகக் கொண்டு அடியார் பக்தி, சிவபக்தி முதலியவற்றில் சிறந்து விளங்கினர். பக்தி முதிர்ச்சியினல் சிவத்தலங்கள் தோறும் சென்று சிவபெருமானை வழிபட்டு வரலானர். பெரும்பாலும் இவர் தில்லைப்பதியிலேயே வசித்து வந்தவர் என்பர்.

திருவாலியமுதனர் தம்மை 'மயிலையர் மன்னன்' என்றும், 'அந்தணன்' என்றும், தாம் பாடியருளிய திருவிசைப்பா இரண்டாம் பதிகத் திருக்கடைக்காப்பிலே "வரைசெய் மாமதில் மயிலையர் மன்னவன் மறைவல திருவாலி" எனவும் கூறிக் கொள்கின்றர். அமுதனர் தம் ஊராகிய திருமயிலையைத் தாம் பாடியருளிய திருவிசைப்பா நான்காம் பதிகத்திருக்கடைக்காப்பிலே, "அறைசெந்நெல் வான்கரும்பின் அணியாலைகள் சூழ்மயிலை" என்று கூறுவதால், செந்நெல் கரும்பு விளையும் மருத நிலத்துள்ள மயிலாடுதுறையே (மாயூரமே) அமுதனர் பிறந்தவூர் என்பர்.

திருவாலி யமுதனர் பாடியனவாகக் கிடைத்துள்ள திருவிசைப்பாப் பதிகங்கள் நான்கு ஆகும். அவையாவும் கோயில் என்னும் சிதம்பரத்தலத்தைப் பற்றியனவே.

காலம்: இத்திருவாலி யமுதனர் பாடியருளிய திருவிசைப்பா மூன்ரும் பதிகத்தில் 5ஆம் பாடலில் 'எடுத்த பாதம்'; 'மழலைச் சிலம்பு' என்ற தொடர்கள் முதலாம் இராசராசனல் தஞ்சைப் பெரிய கோயில் கைங்கரியங்களுக்காக நியமிக்கப் பெற்ற தளிச் சேரிப்பெண்கள் (தேவரடியார்கள்)

சிலருக்குப் பெயராக இருந்ததை ஒரு கல்வெட்டுக் குறிப்பிடுதலின், திருவாலி யமுதனுர் காலம் மூதலாம் இராசராச சோழன் (கி. பி. 985–1014) காலத்திற்கு முன்னர் என்பது பெறப்படுகிறது.

8. புருடோத்தம நம்பி: திருவிசைப்பாவை அருளிய ஆசிரியர்கள் ஒன்பதின்மருள் புருடோத்தம நம்பி எட்டாமவராகத் திகழ்பவர். புருடோத்தமர் என்பது திருமால் பெயர்களில் ஒன்ருகும். இவர் தம்மை "மாசிலா மறைபல ஓதுநாவன் வண்புருடோத்தமன்" என்றுகூறிக் கொள்வதால், இவர் வைணவ அந்தணர் குலத்திலே தோன்றியவர் என்பது பெறப்படுகிறது. இவர் வைணவகுலத்தில் தோன்றிப் பின்னர்ச் சிவபக்தியின் முதிர்ச்சியினுல் சைவ சமயத்தை அடைந்தவர் ஆவர். நம்பி என்பது சிறப்புப் பெயர்.

புருடோத்தம நம்பி கல்வி கேள்விகளில் சிறந்து, தில்லையில் எழுந்தருளிய நடராசப்பெருமானை வழிபட்டுக் கொண்டு பெரும்பாலும் சிதம்பரத்திலேயே வசித்துவந்தவர் என்பர். இவரது காலம் முதலிய பிறசெய்தி அறிதற்கு ஒன்றும் இல்லை.

புருடோத்தம நம்பி பாடியனவாகக் கிடைத்துள்ள திருவிசைப்பாப் பதிகங்கள் இரண்டு ஆகும். அவை கோயில் என்னும் சிதம்பரத்தைப் பற்றியனவே ஆகும்.

9. சேதிராயர்: திருவிசைப்பாவை அருளிய ஆசிரியர்கள் ஒன்பதின்மருள் சேதிராயர் ஒன்பதாமவராகத் திகழ்பவர். இவர் சேதிநாட்டை ஆண்ட குறுநில மன்னர் ஆவர். சேதியர்-ஒருவகை மரபினர். சேதியர் ஆண்ட நாடு சேதி நாடு. இது தென்னுர்க்காடு மாவட்டத்தின் வடமேற்கிலுள்ள நடுநாட்டின் ஒரு சிறுபகுதி. தொண்டைநாட்டிற்கும் சோழநாட்டிற்கும் நடுவில் உள்ள நாடே நடுநாடு

என்பதாம். சேதி நாடு மலையமானுடு எனவும் வழங்கப் பெறும். சேதிநாட்டுக் குறுநில மன்னர், 'சேதிராயன்', 'மலைய குலராசன்' என்னும் பட்டங்களை உடையவர்கள். சேதிநாட்டின் தலைநகரம் திருக்கோவலூர்,கிளியூர்என்பன. கிளியூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டவரே சேதி ராயர் ஆவர்.

திருவிசைப்பாப் பாடிய சேதிராயர் தம்மை, "ஏயுமா றெழிற் சேதியர் கோன்" என்கின்றார்; சுந்தரமூர்த்தி சுவாமிகளை அபிமான புத்திரராக வளர்த்த நரசிங்க முனை யரையர் வழியில் வந்தவர் இச்சேதிராயர் என்றும் கூறுவர். சேதிராயர் தம்முன்னோர்களைப் போலவே, அடியார் பக்தி, சிவபக்தி இவற்றில் சிறப்புற்றவராய்ப் பல தலங்களையும் தரிசித்து வழிபட்டவர் ஆவர். இவரைப்பற்றிய பிறசெய்தி கள் ஒன்றும் அறிதற்குக் கூடவில்லை.

இச்சேதிராயர் பாடியதாக உள்ள திருவிசைப்பாப் பதிகம் ஒன்றே ஆகும். அப்பதிகம் கோயில் என்னும் சிதம்பரத்தைப் பற்றியதாகும்.

காலம்: இவர் முதற்குலோத்துங்கன் (கி.பி. 1070-1120) காலத்தவராக அல்லது பிற்பட்ட காலத்தவராக இருக்க லாம் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர்.*

---

* திருவிசைப்பா ஆசிரியர் ஒன்பதின்மரின் வரலாற்று ஆராய்ச்சி எழுதப் பல குறிப்புக்கள் உதவி, சீர்திருத்தம் செய்தவர்கள் திருப் பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி-முதல்வர் சிவநெறிச் செல்வர் திரு. கே. எம். வேங்கடராமையா M.A., B.O.L. அவர்கள் ஆவர்.

உ

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை

1. திருமாளிகைத் தேவர்

அருளிய

திருவிசைப்பா

[தெளிவுரை]

1. கோயில் – ஒளிவளர் விளக்கே

பண் – பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா வொன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

கோயில்: சைவ வரம்பின்படி கோயில் என்பது சிதம்பரத் தலத்தைக் குறிப்பதாகும். இத்தலம் சோழ நாட்டுக் காவிரிக்கு வடகரையில் உள்ள சிவத்தலங்களுள் முதன்மை பெற்றது; பஞ்சபூதத் தலங்களில் ஒன்று (ஆகாயம்). தில்லை-நகரின்பெயர். திருச்சிற்றம்பலம்-கோயிலின் பெயர்.

இதனை வடமொழியாளர் சிதம்பரம் என்பர். சிதம்பரம் என்பது சித் அம்பரம் எனப் பிரிக்கப்பட்டு (சித் - அறிவு; அம்பரம் - வெட்டவெளி) ஞானாகாசம் என்ற பொருளுடையது. இத்தலம் பொன்னம்பலம், சிற்றம்பலம், புலியூர், பெரும்பற்றப்புலியூர், தில்லைவனம், பூலோக கயிலாயம் முதலிய பல திருப்பெயர்களைக் கொண்டு மிளிர்வது; அர்த்தசாம பூசையில் 1000 சிவ கலைகளுடன் நடராச மூர்த்தி விளங்குவர். தரிசனம் சிறப்புடையது. தலவிருட்சம்- ஆல். தீர்த்தம் - சிவகங்கை, பரமானந்த கூபம் முதலியன.

பொன்னம்பலம்: சுவாமி–நடராசப்பெருமான்; தேவி–சிவகாமியம்மை.
திருமூலட்டானம்: சுவாமி–திருமூலநாதர்; தேவி–உமையம்மை.

பொழிப்புரை : ஒளிமிகுகின்ற தீபமே! அழிவில்லாத ஒப்பற்றபொருளே! சென்று பற்றும் சுட்டறிவின் எல்லையைக் கடந்து நின்று (சிவஞானத்தால் அறியப்படும்) மேலான பேரறிவே! ஒளி பொருந்திய பளிங்கின் தோற்றத்தை யுடைய திரட்சியான மாணிக்க மலையே! (மெய்யன்பரது) உள்ளத்தின் கண்ணே தித்திக்கும் தேனே! அன்புபெருகும் (மெய்யடியாரது) மனத்தின்கண் பேரானந்தத்தை விளைவிக்கும் கனியே! தில்லை அம்பலத்தையே நடனம் புரியும் சபையாகக் கொண்டு (அங்குச்) சிதாகாயத்தில் ஆடும் (ஆதியும் அந்தமும் இல்லாத) தெய்வீக நடனத்தை விரும்பிச் செய்யும் உன்னை அடியவனாகிய யான் புகழ்ந்து உரைக்குமாறு (நீ) உரைத்தருள்வாயாக என்றவாறு.

விளக்கம்: உலகின்கண் உள்ள பிற ஒளிகள் வர வர ஒளிகுன்றும்; இறைவனாகிய ஒளிப்பிழம்போ என்றும் ஒளி குன்றாமல் எங்கும் நிறைபொருளாக நிற்கும் என்பார், “ஒளிவளர் விளக்கே” என்றார். உலப்பு - அழிவு. உணர்வு -

சுட்டி அறியும் அறிவு. சிவஞானத்தால் அன்றிப் பசுபாச ஞானத்தால் அறிய வொண்ணுத அறிவுப் பொருள் என்பார், "உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே" என்ருர்: "உரையுணர் விறந்து நின்றுணர்வதோர் உணர்வே" என்பது திருவாசகம்; "உணர்ந்தார்க்கு உணர்வறியோன்" என்பது திருக்கோவையார்.

"வெண்ணீறு சண்ணித்த மேனி" (அப்பர் தேவாரம்) என்றபடி திருமேனியில் பூசப்பெற்ற திருவெண்ணீறு குறித்துப் 'பளிங்கு' என்ருர். இங்குப் பளிங்கு திருநீறு பூசப்பெற்ற திருமேனிக்கு உவமை. மணி - மாணிக்கம். இறைவன் செம்மை பொருந்திய பேரொளிப் பிழம்பாய் உள்ளான் என்பது தோன்றத், "திரள்மணிக் குன்றே" என்ருர். "ஆடகச்சீர் மணிக்குன்றே" என்பது திருவாசகம். "மற்றவர் அறியா மாணிக்க மலையை" என்பது சேந்தனுர் திருவிசைப்பா. தேன், உண்ணும் பொருளில் மிக இனிய பொருளாக இருப்பதுடன் உடல் நோயைத் தீர்க்கும் மருந்தாகவும் உள்ளது. அதுபோல் இறைவன், உயிர்களின் மல நோயைத் தீர்க்கும் மருந்தாகவும், மலம் நீங்கின உயிர்களுக்கு நுகரும் இன்பப் பொருளாகவும் இருத்தல்பற்றித் "தித்திக்கும் தேனே" என்ருர்.

ஆனந்தக்கனி - இன்பத்தைத் தருகின்ற கனி எனினுமாம். அம்பலம் - தில்லையம்பலம், பொன்னம்பலம், சிற்றம்பலம். வெளி - 36 தத்துவங்களையும் கடந்து நின்ற தூவெளி; ஞானுகாசம். அரங்கு - சபை. தெய்வக்கூத்து - ஆனந்த தாண்டவம்: "இந்து வாழ்சடையான் ஆடும் ஆனந்த எல்லையில் தனிப்பெருங் கூத்து" என்பது பெரிய புராணம். தொண்டன் - தொண்டு செய்பவன்: இறைவனுக்கும் அடியவர்க்கும் பற்பல வகையில் அடிமைத் தொழில் செய்பவன்.

"அவனன்றி ஓரணுவும் அசையாது" என்ற முதுமொழிப்படி, இப்பதிகத்தின் ஒவ்வொரு செய்யுளின் ஈற்றடியில் "விளம்புமா விளம்பே", "பணியுமா பணியே", "கருதுமா கருதே" எனவரும் சொற்றொடர்கள், இறைவன் திருவருட்டுணையின்றி ஆன்மாவிற்கு யாதொரு செயலும் நிகழாது என்னும் சைவ சித்தாந்த நூற்கருத்தினைப் புலப்படுத்தல் காண்க.

விளக்கே, ஒன்றே, உணர்வே, குன்றே, தேனே, கனியே: ஆகுபெயர்கள்; இவை விளியேற்றன. உகந்தாயை: வினையாலணையும் பெயர். விளம்புமாறு என்பது விளம்புமா என ஈறுதொக்கது. 1

இடர்கெடுத் தென்னை ஆண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ!
அடல்விடைப் பாகா! அம்பலக் கூத்தா!
அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றுயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

பொழிப்புரை: (பிறவித்) துன்பத்தைக் கெடுத்து என்னைத் தடுத்தாட் கொண்டருளி, என்மனத்தினுள் இருந்த (அஞ்ஞானமாகிய) மிக்க இருளை வேரறக் களைந்து (சுடர்விட்டு) எழுந்த ஒளி பொருந்திய மாணிக்கத் தீபத்தினுள்ளே ஒளி விசுகின்ற தூய்மையான அழகிய ஒளியினுள்ளே ஒளி வடிவாய் விளங்குபவனே! வலிமை பொருந்திய இடபத்தை வாகனமாக உடையவனே! பொன்னம்பலத்தில் நின்று நடனம் ஆடுபவனே! பிரமனும் திருமாலும் அறிய

முடியாதவாறு மிக்க ஒளியை வீசிப் பரவி நின்றவனுகிய உன்னை அடியவனுகிய யான் வணங்கும் வண்ணம் (நீ) திருவருள்புரிவாயாக என்றவாறு.

விளக்கம்: இறைவன் அடியார்களின் பாசப் பிணிப்பையும், அஞ்ஞானக் காட்டையும் அறவே ஒழித்து மெய்யன்பு ஊட்டி ஆட்கொள்வார் என்பார், "இடர்கெடுத்து என்னை ஆண்டுகொண்டு என்னுள் இருட்பிழம்பு அற எறிந்து" என்ருர். இருட்பிழம்பு–இருட்கூட்டம்; மிக்க இருள். இறைவன் எங்கும் நிறைந்த தூய சோதியான ஞானத் திரளாக உள்ளான் என்பார், "தூயநற் சோதியுட் சோதீ" என்ருர்; "கற்பனை கடந்த சோதி கருணையே யுருவமாகி" என்பது பெரிய புராணம். பஞ்ச பூதங்களுள் ஒன்ருகிய தீயின் ஒளியை விலக்குதற்குத் "தூய, நல்" என்ற அடைமொழிகள் கூறப் பெற்றன. விடை – எருது. விடையை அறத்தின் வடிவம் என்பர். அதனை இறைவன் வாகனமாகக் கொண்டது, அறத்தினைப் பாதுகாத்து நடத்தும் தலைவன் என்பதைப் புலப்படுத்த என்பார், "அடல் விடைப் பாகா" என்ருர்.

யாவும் ஒடுங்கிய பேரூழிக் காலத்தில் இளைப்பாறிக் கிடக்கும் உயிர்களை மீட்டும் வினைக்குத் தக்கவாறு படைத்தல் முதலிய ஐந்தொழில்களைப் புரிதற்குச் செய்யும் அருள் இயக்கமே கூத்து என்பதாம். அக்கூத்தை இடையருமல் ஆடும் பெருமானை, "அம்பலக் கூத்தா" என்ருர். பிரம விட்டுணுக்கள் தம்முள்ளே மாறுபட்ட போது அவர்களின் மாறுபாட்டை ஒழிப்பான் வேண்டி இறைவன் சோதிமலையாக எழுந்தருள அச்சோதியின் அடிமுடியினை அவர்கள் அறிய முடியாமல் நின்ருர் என்பார், "அயனெடு மாலறியாமைப் படரொளி பரப்பிப் பரந்து நின்ருயை" என்ருர். "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை" என்பதும்,

"அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய், நில முதற்கீழ் அண்ட முற நின்றதுதான் என்னேடி" என்பதும் திருவாசகம்.

சோதீ, பாகா, கூத்தா : விளிகள். நின்றுயை : வினை யாலணையும் பெயர். பணியுமாறு என்பது பணியுமா என ஈறு தொக்கது. 2

தற்பரம் பொருளே! சசிகண்ட சிகண்டா!
சாமகண்டா! அண்ட வாணு!
நற்பெரும் பொருளாய் உரைகலந் துன்னை
என்னுடை நாவினுல் நவில்வான்
அற்பனென் னுள்ளத் தளவிலா உன்னைத்
தந்தபொன் னம்பலத் தாடீ!
கற்பமாய் உலகாய் அல்லையா ஞயைத்
தொண்டனேன் கருதுமா கருதே.

பொழிப்புரை: ஆன்மாவிற்கு மேலான கடவுளே! பிறைச் சந்திரனைத் தரித்த திருமுடியை யுடையவனே! நீல கண்டனே! சிதாகாயத்தில் உறைபவனே! நன்மையைத் தரத்தக்க பெரிய பொருளோடு கூடிய சொற்களைக் கலந்து, உன்னை என்னுடைய நாவினுல் துதிக்கும் பொருட்டு, எளியவனுகிய எனது உள்ளத்தில் முடிவு இல்லாத உன்னை இருக்கும்படி கொடுத்தருளிய பொன்னம்பலத்தில் ஆனந்தக் கூத்து ஆடுபவனே! ஊழிக்காலமாயும் எல்லா உலகங்களாயும் அவற்றின் வேருகியும் இருக்கின்ற உன்னைத் தொண்டனுகிய யான் நினைக்கும் வண்ணம் நினைந்தருள் புரிவாயாக என்றவாறு.

விளக்கம் : தன் + பரம் = தற்பரம். தன் என்றது ஆன்மாவை, பரம்பொருள்–மேலான கடவுள், கண்டம்–

துண்டு. சசி–சந்திரன். சசி கண்டம் – பிறைச்சந்திரன். சிகண்டம்-உச்சிச் சிகை. சசிகண்ட–சந்திரனைக் காத்த வீரனே எனினுமாம். சிகண்டா–சீகண்டருத்திரனே எனினுமாம். சாமம்–கருமை, அழகு. தேவர்களைக் காக்கும் பொருட்டு இறைவன் ஆலகால விடத்தினை உண்டு கண்டத்தில் இருத்தியமையால், "சாமகண்டா" என்றார். அண்டம் - ஆகாயம். இங்குச் சிதாகாயம், ஞானவெளி. வாணன் – (வாழ் + நன்) வாழ்பவன். உரை – சொற்கள். அற்பன்–இழிந்த அறிவுடையவன். கற்பம்–ஊழிக்காலம்.

இறைவன் உலகப் பொருளோடு வேற்றுமை இன்றிக் கலப்பால் ஒன்றாயும், உலகப் பொருளோடு ஒன்றாகாது பொருட்டன்மையால் வேறாகியும் நிற்றலால், "கற்பமாய் உலகாய் அல்லை ஆனாயை" என்றார்: "யாவையுமாய் அல்லையுமாம் சோதியனே" என்பது திருவாசகம் சிவபுராணம். அல்லை- அவை அல்லாமலும் என்றலுமாம்.

பொருளே, சிகண்டா, அண்டவாணா, பொன்னம்பலத் தாடீ: விளிகள். கருதுமாறு என்பது கருதுமா என ஈறு தொக்கது.

3

பெருமையிற் சிறுமை பெண்ணொடா ணாய்என்
பிறப்பிறப் பறுத்தபே ரொளியே!
கருமையின் வெளியே! கயற்கணாள் இமவான்
மகள்உமை யவள்களை கண்ணே!
அருமையின் மறைநான் கோலமிட் டரற்றும்
அப்பனே! அம்பலத் தமுதே!
ஒருமையிற் பலபுக் குருவிநின் றாயைத்
தொண்டனேன் உரைக்குமா றுரையே.

பொழிப்புரை: பெருமையோடு சிறுமையும், பெண்ணோடு ஆணும் ஆகி (நின்று) எனது பிறப்பு இறப்பு என்னும்

துன்பங்களை நீக்கியருளிய பெருஞ்சோதியே! கருநிறத்துடன் வெண்ணிற வொளி பொருந்தியவனே! கயல் மீன் போன்ற கண்களையுடைவளும் மலையரசன் மகளும் ஆகிய உமாதேவிக்குப் பற்றுக்கோடாக நிற்பவனே! (உன்னைக் காண்டற்கு) அருமையினையுடைய நான்கு வேதங்களும் ஒலமிட்டுக் கூவுகின்ற தலைவனே! பொன்னம்பலத்தே எழுந்தருளிய அமுதம் போன்றவனே! (நீ) ஒருவனாகத் திகழ்ந்து பல பொருள்களிலும் ஊடுருவிக் கலந்து நின்ற உன்னைத் தொண்டனாகிய யான் புகழ்ந்து சொல்லும் வண்ணம் உரைத்தருள் புரிவாயாக என்றவாறு.

விளக்கம்: இறைவன்,மேருமலைபோல் பெருவடிவாகவும் பரமாணுவைப்போல் நுண்ணிய வடிவாகவும் திகழ்பவன், ஆதலின் அவனைப், "பெருமையிற் சிறுமை" என்றார். "சிறியையாய்ப் பெரியையாய் நின்றநாளோ" என்பது அப்பர் தேவாரம். இறைவன் உயிர்களுக்குச் சத்தியாய்ச் சிவமாய் வெளிப்பட்டு அருளுவது பற்றிப், "பெண்ணொடு ஆண் ஆய்" என்றார். "அன்னையும் அத்தனும் ஆவாய்" என்பது அப்பர் தேவாரம். கருமையின் வெளியே-இங்குக் கருமை என்றது நீலகண்டத்தையும், வெளி (–வெண்மை) என்றது திருநீற்றுக் கோலத்தையும் குறிக்கும்; எனது கரிய ஆணவ இருளைப் போக்க வந்த அருள்வெளியாய் இருப்பவனே என்று பொருள் கூறினும் அமையும்: "திணிந்ததோர் இருளில் தெளிந்த தூவெளியே" என்பது திருவாசகம்.

இமவான்–பருவதராசன். இமம்–பனிமலை; மேருமலை. களைகண்–பற்றுக்கோடு, ஆதரவு. நான்மறை–இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்கள். மறை-மறைந்த (இரகசியப்) பொருளையுடையது; வேதம். ஓலம்–அபயம் அளித்தருளவேண்டும் என்று கூறப்படும்

முறையீட்டுச்சொல். அரற்றும் – கூவுகின்ற. தன்னை அடைந்தார்க்கு இனிமைச் சுவை பயந்து நிற்றலின் இறைவனை, "அமுதே" என்றார். அமுதம்–தேவர் உணவு. ஒருமையின் - ஒருவன் என்னும் தன்மையில் (இருந்து); ஒரு பொருளாகத் திகழ்ந்து என்றலுமாம்.

ஒளியே, வெளியே, களைகண்ணே, அப்பனே, அமுதே: விளிகள். கயற்கணாள் : உவமத்தொகை. 4

கோலமே! மேலை வானவர் கோவே!
குணங்குறி இறந்ததோர் குணமே!
காலமே! கங்கை நாயகா! எங்கள்
காலகா லா!காம நாசா!
ஆலமே அமுதுண் டம்பலஞ் செம்பொற்
கோயில்கொண் டாடவல் லானே!
ஞாலமே! தமியேன் நற்றவத் தாயைத்
தொண்டனேன் நணுகுமா நணுகே.

பொழிப்புரை : அழகிய வடிவம் பூண்டவனே! மேற் பதங்களில் உள்ள தேவர்களுக்கு அரசனே! குணங் குறி களைக் கடந்து நின்ற ஒப்பற்ற பண்பனே! காலத்தின் வடி வமாக இருப்பவனே! கங்கா தேவிக்குத் தலைவனே! யமனை வென்றவனே! மன்மதனை அழித்தவனே! நஞ்சினையே அமுதமாக உண்டருளிச் செம்பொன் வேயப் பெற்ற அம்பலவெளியைக் கோயிலாகக் கொண்டு ஆனந்ததாண்ட வம் புரிய வல்லவனே! உலகமாய் இருப்பவனே! நல்ல யோகியாகிய உன்னை (உறுதுணை யில்லாத) தனித்தவனும் தொண்டனுமாகிய யான்,நெருங்கும் வண்ணம் நீ நெருங்கி யருள்வாயாக என்றவாறு.

விளக்கம்: கோலம்-அழகு. இறைவன் அழகுக்கு எல்லையாக இருப்பவன் என்பார், 'கோலமே' என்றார். "கோலங்காட்டி யாண்டானை" என்பது திருவாசகம். இந்திர பதத்திற்கு மேற்பட்ட பிரமபதம் முதலியவற்றில் உள்ள தேவர்களை, "மேலை வானவர்" என்றார். குணம் - பண்பு. குறி - அடையாளம், இலட்சியம். "குணங்களும் குறிகளுமில்லாக் குணக்கடல்" என்பது திருவாசகம். காலம் - கால தத்துவ மாயிருப்பவனே என்றலுமாம். எல்லாத் தத்துவங்களும் தொழிற்பட்டுத் தோன்றுதற்கும் ஒடுங்குதற்கும் காரணமாக உள்ளது காலதத்துவம் ஆகும். பேரூழிக் காலத்து எல்லாம் ஒடுங்கியபோது இறைவன் ஒருவனே அப்போது விளங்கி நிற்பவன் என்பார், "காலமே" என்றார். காலன் + காலன் = காலகாலன். காலன் - உயிர்களின் ஆயுட்காலங்களைக் கணிப்பவன்; இயமன். மார்க்கண்டனுக்காக இயமனை இறைவன் உதைத்தமையால் இறைவனைக் "காலகாலா" என்றார். 'எங்கள்' என்பதை எல்லாவிளிகளுடனும் கூட்டுக.

காமன்-விருப்பத்தை உண்டுபண்ணுபவன்; மன்மதன். நாசன் - அழித்தவன். ஆலம் - விடம். செம்பொற்கோயில் - பொன்னம்பலம். ஞாலம் - பூமி, மண்; இறைவனது அட்ட மூர்த்தத்தினுள் 'மண்' என்பது ஒன்று; அதனால் இறைவனை, "ஞாலமே" என்றார். சிவபெருமான் கல்லாடை, சடைமுடி முதலிய யோகவேடம் பூண்டு கல்லால நிழலில் தட்சிணா மூர்த்தியாக வீற்றிருக்கும் நிலையைக் குறிப்பிப்பார், "நற்றவத்தாயை" என்றார்.

கோலமே, கோவே, குணமே, காலமே, நாயகா, காலா, நாசா, வல்லானே, ஞாலமே: விளிகள். குணங்குறி: உம்மைத்தொகை. நற்றவத் தாயை: வினையாலணையும் பெயர். நல் + தவம் = நற்றவம். கோயில்: இலக்கணப் போலி. 5

நீறணி பவளக் குன்றமே! நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே!
வேறணி புவன போகமே! யோக
வெள்ளமே! மேருவில் வீரா!
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா!
அம்பொன்செய் அம்பலத் தரசே!
ஏறணி கொடியெம் மீசனே! உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

பொழிப்புரை : திருவெண்ணீற்றை அணிந்த பவளமலை போன்றவனே! (நிமிர்ந்து) நின்ற நெற்றிக் கண்ணை உடையதான ஒப்பற்ற அக்கினி வடிவானவனே! வெவ் வேறாகிய அழகிய உலகங்களும் போகப் பொருள்களுமாய் இருப்பவனே! யோக முதிர்ச்சியினால் விளையும் (இன்பப்) பெருக்கே! மேருமலையாகிய வில்லை (ஏந்திய) வீரனே! கங்கா தேவியைத் தரித்த சடைமுடியை யுடைய எமது அற்புதமான ஆனந்தக் கூத்தனே! அழகிய பொன்னால் செய்யப்பெற்ற பொன்னம்பலத்தில் உள்ள அரசே! இடப வடிவம் எழுதிய அழகிய கொடியை யுடைய எமது தலைவனே! உன்னைத் தொண்டனாகிய யான் பொருந்தும் வண்ணம் (நீ) மனம் இசைந்து அருள்வாயாக என்றவாறு.

விளக்கம் : நீறு - பாவங்களை நீறாக்குவது; விபூதி. இது தன்னைத் தொழுது எழுவார் வினைகள் நீறாகும்படி சிவபெருமான் தனது திருமேனியில் அணிந்ததாகும். இறை வன் செம்மேனியம்மான் ஆதலால் அவனைப், ''பவளக் குன்றமே'' என்றார். ''செம்பவளத் திருவுருவர்''என்பது அப்பர் தேவாரம். சிவபெருமான் பிரமவிட்டுணுக்களின் பொருட்டு அக்கினித் தம்பமாக நின்றமை கருதி, ''நெருப்பே'' என்றார். புவனம் - உலகம். போகம் - இன்பப் பொருள்கள். சிவ

பெருமான் திரிபுரத்தை அழித்தற்கு எழுந்தபோது மேரு மலையை வில்லாக ஏந்தினர் என்பது வரலாறு. ஆறு - கங்காதேவி. அற்புதக் கூத்து - ஐந்தொழிற் கூத்துமாம்.

அம்பொன்செய் அம்பலம் - கனகசபை; பொன்னம் பலம். இறைவன் உயிர்களை ஆளுகின்றவன் என்பார், "அரசே" என்றார்; "ஆட்சி உலகை உடையாய் போற்றி" என்பது அப்பர் தேவாரம். இறைவன் ஆண்டான், உயிர்கள் அடிமை என்பது இங்கு அறியத்தக்கது. ஈசன் - (மக்கள் முதலியோர்க்கும், நிலம், மலை, கடல் முதலியவற்றிற்கும்) தலைவன். இசைதல் - இணங்குதல்.

குன்றமே, நெருப்பே, போகமே, வெள்ளமே, வீரா, கூத்தா, அரசே, ஈசனே: விளிகள். பவளக்குன்றம்: உவமத் தொகை. உடையது, அது: பகுதிப்பொருள் விகுதி. 6

தனதன்நற் றோழா! சங்கரா! சூல
 பாணியே! தாணுவே! சிவனே!
கனகநற் றூணே! கற்பகக் கொழுந்தே!
 கண்கள்மூன் றுடையதோர் கரும்பே!
அனகனே! குமர விநாயக சனக!
 அம்பலத் தமரசே கரனே!
உனகழல் இணையென் நெஞ்சினுள் இனிதாத்
 தொண்டனேன் நுகருமா நுகரே.

பொழிப்புரை: குபேரனுக்கு நல்ல தோழனே! இன்பஞ் செய் பவனே! சூலப்படையினைக்கையில் ஏந்தியவனே! அழிவில் லாதவனே! பேரின்ப வடிவினனே! அழகிய பொற்றூண் போன்றவனே! கற்பகத் தளிர் போலும் அழகனே! மூன்று கண்களையுடைய மேலான கரும்பு போன்ற இனியவனே! தூய்மையுடையவனே! முருகக் கடவுளுக்கும் விநாயகக்

கடவுளுக்கும் தந்தையே! பொன்னம்பலத்தில் (வந்து தரிசிக்க நிற்கும்) இந்திராதி தேவர்களுக்குத் தலைமை பூண்டவனே! தொண்டனாகிய யான் உன் திருவடிகள் இரண்டையும் என் மனத்தில் இனிமையோடு கலந்து அனுபவிக்கும்படி (நீ) திருவருள்புரிவாயாக என்றவாறு.

விளக்கம்: தனதன்-மிக்க செல்வமுடையவன்; குபேரன். இவன் விஞ்சையர், கின்னரர் முதலியோர்க்கு அரசன்; வடதிசைக் காவலன்; தவத்தால் இறைவனைத் தோழமை கொண்டவன். "பனிவளர் மாமலைக்கு மருகன் குபேரனொடு தோழமைகொள் பகவன்" என்பது சம்பந்தர் தேவாரம். சங்கரன்-(சம்-இன்பம்; கரன்-செய்கின்றவன்.) உயிர்களுக்கு இன்பத்தை அளிப்பவன். சூலம்-மூன்று கூர் முனைகளைக் கொண்ட ஆயுதம்; இஃது இச்சா சத்தி, கிரியா சத்தி, ஞான சத்தி வடிவுடையது. தாணு-எக்காலத்தும் அழியாது அசையாது நிலைத்திருப்பவன்; கடவுள். சிவன்-பேரின்ப வடிவினன்; எவ்வுயிர்க்கும் எப்பொழுதும் நன்மை செய்பவனுமாம். கனக நற்றூண்-கந்தழிநிலை: "மாசொன்றில்லாப் பொற்றூண்காண்" என்பது அப்பர் தேவாரம். சனகன்-தந்தை. அமரர்-(அமுதம் உண்டதனால்) மரணமில்லாதவர்; தேவர்கள். சேகரம்-தலை, முடிமணி. அமரர் சேகரனே-தேவர்களின் முடிமீது உள்ளவனே எனினுமாம். நுகர்தல்-அனுபவித்தல்.

தோழா, சங்கரா, பாணியே, தாணுவே, சிவனே, தூணே, கொழுந்தே, கரும்பே, அனகனே, சேகரனே: விளிகள். உன, அ: ஆறாம் வேற்றுமைப்பன்மையுருபு. 'கழல்' தானியாகு பெயராய்த் திருவடியை உணர்த்திற்று. நல் + தோழன் = நற்றோழன். நல் + தூண் = நற்றூண். அமரர் + சேகரன் = அமரசேகரன். 7

திறம்பிய பிறவிச் சிலதெய்வ நெறிக்கே
திகைக்கின்றேன் றனைத்திகை யாமே
நிறம்பொன்னும் மின்னும் நிறைந்தசே வடிக்கீழ்
நிகழ்வித்த நிகரிலா மணியே!
அறம்பல திறங்கண் டருந்தவர்க் கரசாய்
ஆலின்கீழ் இருந்தஅம் பலவா!
புறஞ்சமண் புத்தர் பொய்கள்கண் டாயைத்
தொண்டனேன் புணருமா புணரே.

பொழிப்புரை: மாறிமாறி வருகின்ற பிறவிகளில்(உழலுகின்ற) சிறு தெய்வங்களை அடையும் வழிகளில் திகைத்து நிற்கின்ற என்னைத் திகைக்காமல் பொன்னிறமும் மின்னிறமும் கலந்து நிரம்பிய திருவடியின் கீழ்ச் செல்லும்படி செய்த ஒப்பில்லாத (ஒளியையுடைய) மாணிக்கம் போன்றவனே! தருமத்தின் பலதன்மைகளை அருளிச்செய்து சனகாதி முனிவர்களுக்குக் குருமூர்த்தியாகிக் கல்லால மரத்தின் கீழ் எழுந்தருளிய பொன்னம்பலவனே! புறச் சமயத்தினராகிய சமணர் புத்தர்களின் பொய்ச் சமயங்களை உண்டாக்கின உன்னைத் தொண்டனாகிய யான் சேரும் வண்ணம் (நீ) சேர்ந்து அருள்வாயாக என்றவாறு.

விளக்கம்: திறம்புதல்-மாறுபடுதல். பிறவிச்சில தெய்வ நெறி-சைவ சமயமல்லாத பிற சமயத் தெய்வ மார்க்கம். சிவன் அன்றிப் பிறதெய்வங்கள் பிறப்பு இறப்பு உடையன என்பார், "திறம்பிய பிறவிச் சில தெய்வம்" என்றார். "செத்துச் செத்துப் பிறப்பதே தேவென்று, பத்தி செய் மனப் பாறைகட் கேறுமோ" என்பது அப்பர் தேவாரம். "சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர் சிறுநெறி" என்பது திருப்பல்லாண்டு. சேவடி-செம்மையான அடி; திருவடி. நிகழ் வித்த-செல்லும்படி செய்த. மணி-மாணிக்கம். உலகில்

பொன்னும் மணியும் முத்தும் உயர்ந்தவை; அவற்றுள் மணியே மிகச் சிறந்தது; ஆதலால் இறைவனை, "மணியே" என்றார். அறம் பல என்றது சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன; அறம், பொருள், இன்பம், வீடு எனினுமாம்.

அருந்தவர் – இங்குச் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்ற அருந்தவ முனிவர்கள் நால்வர்; இவர்கள் பிரமனின் மானச புதல்வர்கள். அரசு - தலைமை; இங்குக் குருமூர்த்தி. ஆல்–கல்லால மரம். ஆலின்கீழ் இருந்த அம்பலவன் - தட்சிணாமூர்த்தி. புறம்-புறச்சமயம். சமண் - சமணர். உலகில் புறச்சமயம் முதலிய பொய்ச் சமயங்களையும் உண்டாக்கியவன் இறைவனே ஆதலால் அவனை, "புறஞ்சமண் புத்தர் பொய்கள் கண்டாயை" என்றார். "வெவ்வேறாய் இருமூன்று சமயமாகிப் புக்கானை எப் பொருட்கும் பொதுவானானை" என்பது அப்பர் தேவாரம்.

மணியே, அம்பலவா: விளிகள். சேவடி: (செம்மை + அடி) பண்புத் தொகை. கண்டாயை : வினையாலணையும் பெயர். 8

தக்கன்நற் றலையும் எச்சன்வன் தலையும்
தாமரை நான்முகன் தலையும்
ஒக்கவிண் டுருள ஒண்திருப் புருவம்
நெறித்தரு ளியவுருத் திரனே!
அக்கணி புலித்தோல் ஆடைமேல் ஆட
ஆடப்பொன் னம்பலத் தாடும்
சொக்கனே! எவர்க்குந் தொடர்வரி யாயைத்
தொண்டனேன் தொடருமா தொடரே.

பொழிப்புரை : (தக்கன் சிவநிந்தையோடு செய்த வேள்வி யில்) அவனது நல்ல தலையும், எச்சன் என்பவனின் வலிய

தலையும், தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்கு முகங்களை யுடைய பிரம தேவனின் தலையும் ஒருமிக்க அறுபட்டுத் (தரையில்) உருளும்படி ஒளிமிக்க தம் திருப்புருவத்தை நெரித்துக் கோபித்தருளிய உருத்திர மூர்த்தியே! எலும்பு மாலையானது, அழகிய புலித்தோலாகிய ஆடையின் மீது மேன் மேலாடிக்கொண்டிருக்கப் பொற் சபையில் ஆனந்த நடனம் செய்யும் அழகனே! (திருமால் பிரமன் முதலிய தேவர்கள்) யாவர்க்கும் தொடர்ந்து பற்றி அறிதற்கு அரிதாகிய உன்னைத் தொண்டனாகிய யான் தொடரும் வண்ணம் (நீ) தொடர்ந்து அருள்வாயாக என்றவாறு.

விளக்கம்: தக்கன் - தட்சன். இவன் பிரமதேவனின் புதல்வன்; அறிவிலும் தவத்திலும் சிறந்தவன்; சிவபெரு மானிடம் மாறுகொண்டு வேள்விபுரிந்து வீரபத்திரரால் தண்டனை பெற்றுப் பின்னர் ஆட்டுத் தலையைப் பெற்ற வன். எச்சன் - யாகத் தலைவன் அல்லது யாகத்தின் அதி தெய்வம். புருவம் நெறித்தல் - கோபக் குறியைக் காட்டல். விண்டல் - விள்ளுதல் - வேறுபடுதல், அறுபடுதல். உருத் திரம் - கோபம். கோபத்தில் உதித்தவர் உருத்திரமூர்த்தி; இங்கு வீரபத்திரக் கடவுள். 'தக்கன் நற்றலையும்........ திருப்புருவம் நெறித்தருளிய உருத்திரனே': "தக்கனது பெருவேள்விச் சந்திரன் இந்திரன் எச்சன் அருக்கன், அங்கி, மிக்கவிதா தாவினொடும் விதிவழியே தண்டித்த விமலர்" என்ற சம்பந்தர் தேவார அடிகள் இங்கு ஒப்பு நோக்கற்பாலன.

அக்கு - எலும்புமாலை; உருத்திராக்க மணியுமாம். அணி - அழகு. தாருகவனத்து முனிவர்கள் சிவபெருமான் மீது பகைகொண்டு அவரை அழிக்க அபிசார வேள்வி புரிந்து அதனினின்று புலியை விடுக்க, அவர் அப்புலியைக்

கொன்று அதன் தோலை உடுத்தார் என்ற வரலாற்றை உட்கொண்டு இறைவன் புலித்தோல் உடுத்தலைக் கூறிய தாகும். சொக்கனே - அழகனே; பரிசுத்தனே எனினுமாம். தொடர்வு - பற்றியறிதல்.

உருத்திரனே, சொக்கனே: விளிகள். புலித்தோலாடைமேல், மேல்: ஏழனுருபு. ஆட ஆட: அடுக்குத்தொடர். 9

மடங்கலாய்க் கனகன் மார்புகீண் டானுக்
கருள்புரி வள்ளலே! மருளார்
இடங்கொள்முப் புரம்வெந் தவியவை திகத்தேர்
ஏறிய ஏறுசே வகனே!
அடங்கவல் அரக்கன் அருட்டிரு வரைக்கீழ்
அடர்த்தபொன் னம்பலத் தரசே!
விடங்கொள்கண் டத்தெம் விடங்கனே! உன்னைத்
தொண்டனேன் விரும்புமா விரும்பே.

பொழிப்புரை: நரசிங்க வடிவாய்(த் தூணில்) வெளிப்பட்டு இரணியனின் மார்பைக் கிழித்த திருமாலுக்கு அருள் செய்த கொடையாளனாகிய சரபமூர்த்தியே! (சிவ பூசையை மறந்து பௌத்த மதத்தில்) மயங்கிநின்ற (தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்ற) அசுரர்கள் வசிக்கும் இடமான திரிபுரம் எரிந்து அழியும்படி, நான்கு வேதங்களாகிய குதிரைகள் பூட்டப்பெற்ற தேரின்மேல் ஏறிய ஆண்சிங்கம் போன்ற வீரனே! வலிமை நிறைந்த அரக்கனாகிய இராவணனின் (அகங்காரம்) ஒடுங்கும்படி (அவனைக்) கயிலைமலையின்கீழ்த் திருவருள் கொண்டு நசுக்கிய கனக சபையில் எழுந்தருளிய அரசே! விடத்தைக் கண்டத்தில் அணிந்த எமது அழகனே! உன்னைத் தொண்டனாகிய யான் விரும்பும் வண்ணம் நீ விரும்பி யருள்வாயாக என்றவாறு.

விளக்கம் : மடங்கல்–சிங்கம்; இங்கு நரசிங்க மூர்த்தி. கனகம்–பொன். இதன் வடமொழி இரணியம். கனகன்–இரணியன். கனகன் மார்புகீண்டவன்–திருமால்; இவனுக்கு இறைவன் மீண்டும் காத்தல் தொழிலை அருளினார் என்பார் ''அருள்புரி வள்ளலே'' என்றார். வள்ளலே என்றது சரப மூர்த்தியை. முப்புரம்–பொன், வெள்ளி, இரும்பினால் அமைந்த மதில்களைக் கொண்ட திரிபுரம்; இது வேண்டும் போது எங்கும் பறந்து செல்லும் தன்மையுடையது. வைதிகத்தேர்–வேத சம்பந்தமான தேர்; நான்கு வேதங்களைக் குதிரையாகப் பூட்டப் பெற்றதேர். ''அருமறையைத் தேர்க் குதிரை ஆக்கிக் கொண்டார்'' என்பது அப்பர் தேவாரம். ஏறு–ஆண் சிங்கம். சேவகன்–வீரன்.

வல் அரக்கன் – இராவணன். வரை–கயிலைமலை. அடர்த்தல்–நசுக்குதல்; வருத்துதல். அருட்டிரு–திருவருள். இராவணன் கயிலைமலையைத் தூக்கியபோது இறைவன் அவனை அதன்கீழ் வைத்து நசுக்கியது அவனது கர்வத்தைப் போக்கி அவனை நல்வழி நிறுத்தச் செய்தமை திருவருளின் செய்கை என்பார், ''அருட்டிரு'' என்றார். 'அரக்கன் அரட்டு இருவரை' எனப் பாடம் கொண்டு, 'இராவணனின் குறும்பு அடங்கப்பெரிய கயிலைமலையின்'என்றுபொருள்கூறலுமாம். விடங்கொள்கண்டம்-நீலகண்டம். விடங்கன்-அழகன்.

வள்ளலே, சேவகனே, அரசே, விடங்கனே : விளிகள். கீண்டான் : வினையாலணையும் பெயர். வரை : இருமடியாகுபெயர்.

———

10

மறைகளும் அமரர் கூட்டமும் மாட்டா(து)
அயன்திரு மாலொடு மயங்கி
முறைமுறை முறையிட்(டு) ஓர்வரி யாயை
மூர்க்கனேன் மொழிந்தபுன் மொழிகள்

அறைகழல் அரன்சீர் அறிவிலா வெறுமைச்
சிறுமையிற் பொறுக்கும்அம் பலத்துள்
நிறைதரு கருணு நிலயமே! உன்னைத்
தொண்டனேன் நினையுமா நினையே.

பொழிப்புரை: ஒலிக்கின்ற வீரக்கழலை அணிந்த திருவடிகளையுடையசிவபெருமானே! வேதங்களும் இந்திராதிதேவர் கூட்டமும் அறியமாட்டாமல் பிரம விட்டுணுக்களுடனே மயங்கி நின்று பல தடவைகள் ஓலமிட்டும் அறிய முடியாத உன்னை, அறிவிலியாகிய யான், துதித்த அற்பமான சொற்களை, அறிவில்லாத பயனற்ற சிறியோரின் (செயலைப் பொறுக்குமாறு போலப்) பொறுக்கின்ற பொன்னம்பலத்துள் எழுந்தருளிய நிறைந்த கருணைக்கு இருப்பிடமாக இருப்பவனே! உன்னைத் தொண்டனாகிய யான் நினைக்கும் வண்ணம் நீ நினைத்தருள் புரிவாயாக என்றவாறு.

விளக்கம்: நினையுமா(று) என்றது 'நினையாமல் நினைந்து' (திருவிளையாடற் புராணம்) என்றபடி சீவபோதமாக நினையாமல் சிவபோதமாக நினைத்தலே சிறப்பாம். அயன் – பிரமன். முறையிடல் – ஓலமிடல்; அபயமளிக்க வேண்டும் என்று கதறல். மறைகளும்...... முறையிட்டு ஓர்வு அரியாயை–இவ்வடிகள் இறைவன் பெருமையை அளவிட்டுக் கூற இயலாது என்பதை அறிவிக்கும்: "அரிஅயன் இந்திரன் சந்திரா தித்தர் அமரரெல்லாம், உரியநின் கொற்றக் கடைத்தலை யாருணங் காக்கிடந்தார்" என்பது அப்பர் தேவாரம். மூர்க்கன் – அறிவில்லாதவன். இங்குத் திருமாளிகைத் தேவர் தம்மையும் தம் பாடலையும் "மூர்க்கனேன் மொழிந்த புன்மொழிகள்" என்று பணிவுடன் கூறுகின்றார். சீர்-புகழ். வெறுமை-பயனின்மை. புன்மை-அற்பம்.

அரன், நிலயமே: விளிகள். கழல்: தானியாகு பெயராய்த் திருவடிகளை உணர்த்திற்று. சிறுமையின், இன்: ஒப்புப் பொருள். 11

திருச்சிற்றம்பலம்

2. கோயில் – உயர்கொடியாடை

பண் – பஞ்சமம்

பாதாதி கேசம்*

திருச்சிற்றம்பலம்

உயர்கொடி யாடை மிடைபட லத்தின்
ஓமதூ மப்பட லத்தின்
பெயர்நெடு மாடத்(து) அகிற்புகைப் படலம்
பெருகிய பெரும்பற்றப் புலியூர்ச்
சியரொளி மணிகள் நிரந்துசேர் கனகம்
நிறைந்தசிற் றம்பலக் கூத்தா!
மயர்வறும் அமரர் மகுடந்தோய் மலர்ச்சே
வடிகள்என் மனத்துவைத் தருளே.

பொழிப்புரை : உயர்ந்த கொடிச் சீலைகள் நெருங்கிய கூட்டத்தினிடத்து, ஓமப்புகையின் கூட்டத்தோடு கீர்த்தி பெற்ற உயர்ந்த மாளிகைகளினின்றும் (எழுகின்ற) அகிற் புகைக்கூட்டம் கலந்து பெருகி (மூடியிட்டது போன்ற தோற்றத்தையுடைய) பெரும்பற்றப் புலியூரினிடத்தே, சிறந்த ஒளியுள்ள (நவ) மணிகள் வரிசையாய் பதித்திருக் கின்ற பொன் நிரம்பிய (அம்பலத்துள் உள்ள) சிற்சபையில் ஆனந்த தாண்டவம் புரியும் பெருமானே! (அஞ்ஞான) மயக்கம் நீங்குதற்குக் காரணமானதும், தேவர்களின் முடிகள் தோயப் பெற்றதுமான, தாமரைமலர் போன்ற உனது திருவடிகளை அடியேனது மனத்தில் வைத்தருள்வா யாக என்றவாறு.

---

* இப்பதிகத்தின் ஒவ்வொரு செய்யுளின் இறுதியிலும் சிவ பெருமானின் திருவடி முதல் திருமுடி வரையில் உள்ள சில உறுப்புக் களையும் அணிகளையும் சிறப்பித்துக் கூறுவதால் 'பாதாதிகேசம்' எனப் பெற்றது. திருவாலியமுதனார் அருளிய 1. 'கோயில்-பாதாதி கேசம்' என்ற திருவிசைப்பாவிலும் இவ்வாறே அமைந்துள்ளது.

விளக்கம்: மிடைதல் – நெருங்குதல். ஓமம் – இஃது அந்தணர்கள் நாடோறும் செய்யும் நித்தியாக்கினி முதலிய வற்றையும் விசேடமாகச் செய்யும் வேள்வி முதலிய வற்றையும் குறிக்கும். தூமப்படலம்–புகைக் கூட்டம். பெயர்—புகழ். அகில் – அகிற்கட்டை. அகிற்புகை – இது பெண்கள் தம் கூந்தலுக்கு ஊட்டுவது. பெரும்பற்றப் புலியூர்–மிக்க அன்புடன் புலிக்கால் முனிவர் பூசித்துப்பேறு பெற்ற ஊர்; சிதம்பரம். சியர்-சிறப்பு. மணிகள்—நவ மணிகள் அவை: கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம் என்பன. மயர்வு-மயக்கம்; அஞ்ஞானம்.

கூத்தா: விளி. தூமப்படலத்தின், இன்: (ஓடு என்னும் பொருளில் வந்தது;) உருபுமயக்கம். சியர் என்பது சீர் என்பதன் திரிபு; எதுகை நோக்கித் திரிந்தது. 1

கருவளர் மேகத் தகடுதோய் மகுடக்
கனகமா ளிகைகலந் தெங்கும்
பெருவளர் முத்தீ நான்மறைத் தொழில்சால்
எழில்மிகு பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் தெய்வப் பதிவதி நிதியம்
திரண்டசிற் றம்பலக் கூத்தா!
உருவளர் இன்பச் சிலம்பொலி அலம்பும்
உன்னடிக் கீழ(து)என் னுயிரே.

பொழிப்புரை: கருமை நிறைந்த மேகத்தின் நடுவிடத்தே சென்று பொருந்திய சிகரங்களையுடைய பொன் மயமான மாளிகைகள் எவ்விடத்தும் நிறைந்து பெருகி வளர்கின்ற மூன்று வைதீக அக்கினிகளோடு நான்கு வேதங்கள் (ஓதும் ஓதுவிக்கும்) தொழில்கள் மிகுந்த பொலிவுடன் விளங்கும் பெரும்பற்றப் புலியூராகிய மேன்மை நிறைந்துள்ள

தெய்வத் தன்மைகொண்ட தில்லைப்பதியின் கண், (என்றும் நீங்காது) பொருந்தும் (சிவஞானச்) செல்வம் திரண்டு கிடக்கும் சிற்சபையில் ஆனந்த தாண்டவம் புரியும் பெருமானே! எனது உயிரானது, இன்பத்தைத் தருகின்ற பொன்னிறம் மிகுந்த சிலம்புகள் மிக்கு ஒலிக்கும் உனது திருவடிகளுக்குக் கீழே இருக்கின்றது என்றவாறு.

விளக்கம்: கருவளர் மேகம் - சூல் (கருக்) கொண்ட மேகமுமாம்; அது காளமேகம். அகடு—வயிறு; இங்கு நடு விடம். மகுடம்—சிகரம். முத்தீ—மூன்று ஓமாக்கினி; அவை ஆகவநீயம், தக்கிணாக்கினி, காருகபத்தியம் என்பன. நான்மறைத் தொழில்—வேதாத்தியயனம். முத்தீ வளர்த்தலும் வேதாத்தியயனமும் அந்தணர் தொழில்களாம். வதிதல் - பொருந்துதல். நிதியம் - சிவஞானச் செல்வம். திரு - மேன்மை. உரு - நிறம்; பொன்னிறம். என் உயிர் உன்னடிக் கீழது என்றது திருவடிப் பேற்றை.

கூத்தா : விளி. முத்தீ : (மூன்றாகிய தீ) உருவகம். சால : உரிச்சொல். கீழது : குறிப்புவினை முற்று. மாளிகைகள் மேகமண்டலத்தை அளாவியிருக்கின்றன என்ற குறிப்பால் இப்பாடல் உயர்வு நவிற்சியணி ஆகும். 2

வரம்பிரி வாளை மிளிர்மடுக் கமலம்
கரும்பொடு மாந்துமே திகள்சேர்
பரம்பிரி செந்நெற் கழனிச் செங்கழுநீர்ப்
பழனஞ்சூழ் பெரும்பற்றப் புலியூர்ச்
சிரம்புணர் முடிவா னவர்அடி முறையால்
இறைஞ்சுசிற் றம்பலக் கூத்தா!
நிரந்தரம் முனிவர் நினைதிருக் கணைக்கால்
நினைந்துநின்(று) ஒழிந்ததென் நெஞ்சே.

பொழிப்புரை: எல்லை கடந்து துள்ளிப் பாய்கின்ற வாளை மீன்கள் விளங்குகின்ற குளங்களில் உள்ள தாமரை மலர்களைக் கரும்புகளோடு (ஆவலாய்) மேய்கின்ற எருமைகள் பொருந்தியுள்ள பரம்பு அடித்த செந்நெல் விளைகின்ற கழனிகளாலும், செங்கழுநீர் மலர்களுடைய வயல்களாலும் சூழப்பெற்ற பெரும்பற்றப் புலியூரினிடத்தே (உள்ள) சிரசில் தரித்த கிரீடத்தையுடைய (இந்திராதி) தேவர்கள் (நின்) திருவடியை முறைப்படி வணங்குகின்ற சிற்சபையில் ஆனந்த தாண்டவம் புரியும் பெருமானே! முனிவர்கள் எப்பொழுதும் (இடைவிடாமல்) தியானிக்கின்ற அழகிய (உனது) கணைக்கால்களின் அடியை என் நெஞ்சமானது நினையும் தொழிலில் நிலைத்துநின்று (பின்பு வேறு ஒன்றையும் நினைத்தலை) விட்டு நீங்கியது என்றவாறு.

விளக்கம்: வரம்பு-எல்லை. இரியல்-துள்ளுதல். மடு-ஆழமான நீர் நிலை; குளம். கமலம் - தண்ணீரை அலங்கரிப்பது; தாமரை. மாந்துதல் - மேய்தல். மேதி - எருமை. கழனி - பழனம் - வயல்கள். கமலம், கரும்பு, செந்நெல், செங்கழுநீர்,மேதி-இவை மருதநிலத்துக் கருப்பொருள்கள். பரம்பு இரி - பரம்பு அடித்தல் - உழுத நிலத்தைப் பலகைச் சட்டத்தால் சமப்படுத்துதல். முறை - விதிமுறை. நிரந்தரம் - எப்பொழுதும். முனிவர் - பற்றற்ற நிலையினையுடையவர். கணைக்கால் - முழங்காலிற்கும் பரட்டிற்கும் இடைப்பட்ட பாகம். ஒழிந்தது - நினைக்கின்றேன் என்ற தன் உணர்வையும் விட்டு நீங்கியது என்று பொருள் கூறலுமாம்.

கூத்தா: விளி. என் நெஞ்சு: ஆறும் வேற்றுமைத் தொகை. ஒழிந்தது: ஒன்றன்பால் வினை முற்று. 3

தேர்மலி விழவிற் குழலொலி தெருவில்
கூத்தொலி ஏத்தொலி ஒத்தின்
பேரொலி பரந்து கடலொலி மலியப்
பொலிதரு பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்நில(வு) இலயத் திருநடத் தியல்பில்
திகழ்ந்தசிற் றம்பலக் கூத்தா!
வார்மலி முலையாள் வருடிய திரள்மா
மணிக்குறங்(கு) அடைந்ததென் மதியே.

பொழிப்புரை: தேர்ப்பெரு விழாவில் தெருக்களிலே புல்லாங்குழல் ஓசையும் (பலவகையான) கூத்துக்களின் ஒலியும், (அன்பர்கள்) துதிக்கின்ற துதிகளின் ஒலியும், வேதங்களை ஓதுவதால் உண்டாகிய மிகுந்த ஒலியும் பரவி நின்று கடல் ஒலியினும் மிகுந்து ஒலிக்க விளங்குகின்ற பெரும்பற்றப் புலியூரினிடத்தே (உள்ள), சிறப்புப் பொருந்திய தாளத்திற்கு (இசைய ஆடும்) தெய்வத்திருக் கூத்தின் இயல்பிலே சிறப்புற்றுத் திகழ்கின்ற சிற்சபையில் ஆனந்ததாண்டவம் புரியும் பெருமானே! கச்சு அணிந்த தனங்களையுடைய உமாதேவியாரால் வருடப் பெற்ற திரண்ட பெரிய அழகிய (உனது) தொடைகளை எனது அறிவுபோய்ப் பொருந்தியது என்றவாறு.

விளக்கம்: தேரோடும் பெருவிழாவில் நிகழும் ஒலிகள் கடல் ஒலியினும் மிகுந்து இருந்தன என்பதாம். மலிதல்-மிகுதல். குழல் - புல்லாங்குழல். ஓத்து-வேதம்; இஃது ஓதப் படுதலின் ஒத்து எனப்பட்டது. பொலிதல் - விளங்குதல். பரந்து-பரவி. நிலவுதல்-விளங்குதல், பொருந்துதல். இலயம்-தாளம், தாளக்கட்டு. வார்-கச்சு. வருடுதல்-தைவரல், பிடித்தல். குறங்கு-தொடை. மதி-அறிவு.

கூத்தா: விளி. கடல் ஒலி: (கடலொலியின்) 'இன்' உருபு தொக்கது. இன்: எல்லைப் பொருள். 4

நிறைதழை வாழை நிழற்கொடி நெடுந்தெங்(கு)
இளங்கமு(கு) உளங்கொள்நீள் பலமாப்
பிறைதவழ் பொழில்சூழ் கிடங்கிடைப் பதணம்
முதுமதிற் பெரும்பற்றப் புலியூர்ச்
சிறைகொள்நீர்த் தரளத் திரள்கொள்நித் திலத்த
செம்பொற்சிற் றம்பலக் கூத்த!
பொறையணி நிதம்பப் புலியதள் ஆடைக்
கச்சுநூல் புகுந்ததென் புகலே.

பொழிப்புரை:மிகத் தழைத்த வாழை மரங்களும்,நிழலைச் செய்கின்ற (பூங்) கொடிகளும், நீண்டு உயர்ந்த தென்னை மரங்களும், இளமையான பாக்கு மரங்களும், மனத்தைக் கவரும்படியான பெரிய பலா மரங்களும், மா மரங்களும், பிறைச்சந்திரன் தவழ்கின்ற சோலைகளும் நெருங்கிய அகழியினிடத்தே உள்மேடைகளைக் கொண்ட பழைய மதில்கள் சூழ்ந்த பெரும்பற்றப்புலியூரின் கண் (உள்ள), கரைகள் கட்டித் தடுக்கப்பெற்ற நீரினிடத்தே (சிப்பியில் தோன்றிய) திரட்சி பொருந்திய கூட்டமாயுள்ள முத்துக்கள் பதிக்கப்பெற்ற செம்பொன்னினால் வேய்ந்த சிற்சபையில் ஆனந்த தாண்டவம் புரியும் பெருமானே! அரையிற் கட்டிய பாரத்தையுடைய அழகிய புலித்தோல் ஆடைமேல் (கட்டியுள்ள) நூற்கச்சையினிடத்து என் விருப்பம் புகுந்துகொண்டது என்றவாறு.

விளக்கம்: தழை நிறை வாழை-இலைமிகுந்த வாழை மரமுமாம். தெங்கு-தென்னை மரம். கமுகு-பாக்கு மரம். பல-பலா மரம். மா-மாமரம். கிடங்கு-அகழி. பதணம்-

மேடை. இங்கு மதிலினிடத்து மறைவாக உள்ள உள் மேடையைக் குறித்தது. சிறை-(பாது)காவல். தரளம்-இங்குத் திரட்சி. நித்திலம்-முத்து. நிதம்பம்-இங்கு அரை; இடுப்பு. புலியதள்-புலித்தோல். கச்சு நூல்-நூற்கச்சை - அரைப்பட்டிகை. புகல் - விருப்பம்.

கூத்த: அண்மை விளி. பலா என்றது, பல எனக் குறுகி நின்றது. புகலே, ஏ: அசை. 5

அதுமதி இதுவென்(று) அலந்தலை நூல்கற்(று)
அழைப்பொழிந்(து) அருமறை அறிந்து
பிதுமதி வழிநின்(று) ஒழிவிலா வேள்விப்
பெரியவர் பெரும்பற்றப் புலியூர்ச்
செதுமதிச் சமணும் தேரரும் சேராச்
செல்வச்சிற் றம்பலக் கூத்த!
மதுமதி வெள்ளத் திருவயிற்(று) உந்தி
வளைப்புண்(டு)என் னுள்மகிழ்ந் ததுவே.

பொழிப்புரை: அதுதான் அறிவு இதுதான் அறிவு என்று துன்பமுற்று (மனம்) அலைதற்குக் காரணமாகிய நூல்களைக் கற்று (ப் பிறரைவாதுக்கு) அழைத்துப் பிதற்றுதலை விட்டு, அருமையான வேதங்களை உணர்ந்து, பெருமையினையுடைய அறிவின் வழிநின்று நீங்குதல் இல்லாத வேள்விகளைச் செய்கின்ற அந்தணர்கள் (வாழ்கின்ற) பெரும்பற்றப்புலியூரினிடத்தே (உள்ள), அற்ப அறிவினையுடைய சமணர்களும் புத்தர்களும் அணுகாத திருவருட் செல்வம் (நிறைந்த) சிற்சபையில் ஆனந்த தாண்டவம் புரியும் பெருமானே! தேன்போலும் இனிய அறிவுப் பெருக்கத்தில் அழுந்தி, அழகிய (உனது) திருவயிற்றினிடத்துள்ள கொப்பூழின் வளைவைக் கண்டு அனுபவித்து என் உள்ளம் மகிழ்ச்சி யடைந்தது என்றவாறு.

விளக்கம்: அது மதி இது(மதி) என்று அலந்தலை நூல்-புறச்சமய நூல். பிதுமதி-பெருமையினையுடைய அறிவு. பிது-பிதா. பிதுமதி வழிநின்று-பிதாவாகிய மநுநூலின் (மநுதர்ம சாத்திரத்தின்) வழி நின்று என்று பொருள் கூறலுமாம். வேள்விப் பெரியவர்-இங்குத் தில்லைவாழ் அந்தணர்கள். செதுமதி-அற்ப அறிவு; அழிதற்குக் காரண மான அறிவுமாம். தேரர்-புத்தர். மது-தேன். உந்தி-கொப்பூழ். வளைப்பு-வளைந்த சுழி. உண்டல்-அனுபவித்தல்.

கூத்த: அண்மை விளி. சேரா: ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம். அது, இது: சுட்டுப்பொருள். 6

பொருவரைப் புயத்தின் மீமிசைப் புலித்தோல்
பொடியணி பூணநூல் அகலம்
பெருவரை புரைதிண் தோளுடன் காணப்
பெற்றவர் பெரும்பற்றப் புலியூர்த்
திருமரு(வு) உதரத் தார்திசை மிடைப்ப
நடஞ்செய்சிற் றம்பலக் கூத்த!
உருமரு(வு) உதரத் தனிவடம் தொடர்ந்து
கிடந்த(து)என் உணர்வுணர்ந்(து) உணர்ந்தே.

பொழிப்புரை:போர் செய்ய வல்ல மலை போன்ற புயத்தின் (முன்கையின்)மீதுபொருந்திய புலித்தோலையும், திருநீற்றை அணிந்த பூணூலைத் தாங்கிய மார்பையும், பெரிய மலையை யொத்த வலிய தோள்களையும் ஒருங்கு தரிசிக்கும் பேறு பெற்ற அந்தணர்கள் (வாழ்கின்ற) பெரும்பற்றப்புலியூரினி டத்தே(உள்ள),அழகு பொருந்திய வயிற்றின் மேல் அணிந் துள்ள மாலைகள் நான்கு திசைகளிலும் அலையும்படி சிற் சபையில் ஆனந்த தாண்டவம் புரியும் பெருமானே! அழகு டன் விளங்கும் வயிற்றின் மீது பொருந்திய ஒப்பற்ற மணி

வடத்தினிடத்து எனது அறிவு (நிலைத்து நின்று) அறிந்தறிந்து அனுபவித்து (வேறு தொழில்அற்றுக்) கிடந்தது என்றவாறு.

விளக்கம்: பொருவரை - வரைபொரு - மலையோடு மாறுபடுகின்ற என்றலுமாம். மீமிசை - மேற்புறம். பொடி - விபூதி. அகலம் - மார்பு. திரு - அழகு. உதரம்- வயிறு. தார் - (கழுத்தில் அணியும்) மாலை. உரு - அழகு. வடம் - (இரத்தின) மணிமாலை; அரைப்பட்டிகையுமாம். தனிவடம் - ஒற்றை வடமுமாம். இதனை 'ஏகாவலி' என்பர்.

கூத்த: அண்மை விளி. மீமிசை: ஒரு பொருட் பன்மொழி. 7

கணியெரி விசிறு கரம்துடி விடவாய்க்
கங்கணம் செங்கைமற் றபயம்
பிணிகெட இவைகண்(டு) அரன்பெரு நடத்திற்
பிரிவிலார் பெரும்பற்றப் புலியூர்த்
திணிமணி நீல கண்டத்(து)என் அமுதே!
சீர்கொள்சிற் றம்பலக் கூத்த!
அணிமணி முறுவற் பவளவாய்ச் செய்ய
சோதியுள் அடங்கிற்(று)என் அறிவே.

பொழிப்புரை: மதிக்கத் தக்க மழுவும், வீசுகின்ற கையும்,உடுக்கையும், பாம்பாகிய கங்கணமும், அபயமளிக்கும் செங்கையும் (ஆகிய) இவற்றை(த் தம் பிறவிப்)பிணி ஒழியுமாறு தரிசித்து, இறைவனின் பெருமை பொருந்திய திருநடனத்தைக் காணுதலினின்றும் நீங்காதவர்களாகிய பெரியோர்கள் (வாழ்கின்ற) பெரும்பற்றப் புலியூரினிடத்தே எழுந்தருளிய, மிகுந்த நீலநிறம் பொருந்திய மணி போன்று விளங்கும் கண்டத்தையுடைய எனது அமுதம் போன்றவனே! சிறப்பினைக் கொண்ட சிற்சபையில்

ஆனந்த தாண்டவம் புரியும் பெருமானே! (உனது) அழகிய முத்துப் போன்ற பற்களிடத்தும், பவளம் போன்ற வாயினிடத்தும் (அமைந்த) செம்மையான ஒளியின்கண் எனது நினைவு ஒடுங்கிக் கிடக்கின்றது என்றவாறு.

விளக்கம்: கணித்தல் - மதித்தல். எரி - மழு. விசிறுதல் வீசுதல். விடவாய் - வாயில் விடத்தையுடையது; பாம்பு. கங்கணம்-காப்பு. பிணி-பிறவிநோய். திணிமணி-நிறைந்த அழகுமாம். கண்டம்-கழுத்து. அணிமணி-அழகிய முத்து. முறுவல் - பல். சோதி - ஒளி. அறிவு-நினைவு.

அமுதே, கூத்த: விளிகள். மற்று: இடைச்சொல் பவளவாய்: உவமத்தொகை. 8

திருநெடு மால்இந் திரன்அயன் வானோர்
திருக்கடைக் காவலின் நெருக்கிப்
பெருமுடி மோதி உகுமணி முன்றிற்
பிறங்கிய பெரும்பற்றப் புலியூர்ச்
செருநெடு மேரு வில்லின்முப் புரம்தீ
விரித்தசிற் றம்பலக் கூத்த!
கருவடி குழைக்கா(து) அமலச்செங் கமல
மலர்முகங் கலந்த(து)என் கருத்தே.

பொழிப்புரை: அழகிய நீண்டவடிவு கொண்டு உலகளந்த திருமாலும், பிரமனும், இந்திரனும், தேவர்களும் (திருநந்தி தேவரின்) காவல் பொருந்திய திருக்கோயில் வாயிற்படியினிடத்து (நின்று உள்ளே புகமுடியாமல் ஒருவரோடொருவர்) நெருக்கப்பட்டுப் பெரிய கிரீடங்கள் (ஒன்றோடொன்று) மோதி (அதனால்) நவரத்தினங்கள் கீழே சிந்தி(ப் பிரகாசிக்கும்) முற்றம் விளங்கிய பெரும்பற்றப் புலியூரினிடத்தே (உள்ள), போரில் நீண்ட மேருமலையாகிய வில்லை (ஏந்திக்

கொண்டு) திரிபுரத்தை (நோக்கிநகைத்துத்) தீயைப்பரப்பிய சிற்சபையில் ஆனந்த தாண்டவம் புரியும் பெருமானே! (அடியேனது) பிறவிக்கடலை வற்றச் செய்யும் குண்டலம் அணிந்த திருச்செவியினிடத்தும் ஆணவ மலங்களைப் போக்கும் செந்தாமரை மலர் போன்ற திருமுகத்தினிடத்தும் என் கருத்தானது கலந்து பொருந்தியது என்றவாறு.

விளக்கம்: திருக்கடைக் காவல் - திருக்கோயிலின் வாயிற்படி. மணி-நவரத்தினங்கள். முன்றில்-சிற்றம்பலத்தின் முன்னிடம். செரு - போர். கரு - பிறவி. வடிதல்-வற்றுதல். குழை - குண்டலம்; காதணி. கருவடிகுழை-கருவில் வைத்து அமைத்த குழை என்றலுமாம். அமலம் - தூய்மையுமாம்.

கூத்த: அண்மை விளி. முன்றில்: (இல்முன்) இலக்கணப்போலி. உகு மணி: வினைத்தொகை. 9

ஏர்கொள்கற் பகமொத்(து) இருசிலைப் புருவம்
பெருந்தடங் கண்கள்முன் றுடையோன்
பேர்கள்ஆ யிரம்நூ ருயிரம் பிதற்றும்
பெற்றியோர் பெரும்பற்றப் புலியூர்ச்
சீர்கொள்கொக் கிறகும் கொன்றையும் துன்று
சென்னிச்சிற் றம்பலக் கூத்த!
நீர்கொள்செஞ் சடைவாழ் மதிபுது மத்தம்
நிகழ்ந்தஎன் சிந்தையுள் நிறைந்தே.

பொழிப்புரை: இரண்டு விற்களைப் போன்ற புருவங்களையும், அகன்ற பெரிய மூன்று கண்களையும் உடைய சிவபெருமானின் ஆயிரம் லட்சம் திருநாமங்களைப் (பக்தி மேலீட்டினால்) பிதற்றுகின்ற, அழகினைக் கொண்ட கற்பகத்தருவைப்போல் (விரும்பியவற்றை அளிக்கின்ற) பெரியோர்கள் (வாழ்கின்ற) பெரும்பற்றப் புலியூரினிடத்தே (உள்ள)

சிறப்பு நிறைந்த கொக்கு மந்தாரை மலரும் கொன்றை மலரும் பொருந்திய திருமுடியினையுடைய சிற்சபையில் ஆனந்த தாண்டவம் புரியும் பெருமானே! கங்கையைத் தரித்த செஞ்சடையின் கண் வாழ்கின்ற சந்திரனும் அன்று அலர்ந்த ஊமத்தமலரும் என் சிந்தையுள் நிறைந்து தங்குவன ஆயின என்றவாறு.

விளக்கம்: கற்பகம்-கற்பகத்தரு; இது தேவலோகத்தில் உள்ளது; விரும்பி வேண்டுவார்க்கு விரும்பியவற்றை அளிப்பது. சிலே-வில்: பிதற்றுதல்-பொருள் தெரிந்தோ தெரியாமலோ இடைவிடாமல் சொல்லிக்கொண்டிருத்தல். கொக்கிறகு-கொக்கு மந்தாரை மலர். நீர்-கங்காதேவி. மதி-இங்குப் பிறைமதி. புது-புதுமை. மத்தம்-ஊமத்தமலர். நிகழ்ந்த-தங்கின. பேர்கள் ஆயிரம் நூருயிரம் - ஆயிரமும் இலட்சமுமாம்: ‘‘ஆயிரம் பேருகந்தானும் ஆரூர் அமர்ந்த அம்மானே’’ என்பதும், ‘‘பூவனூர்ப் புனிதன் திருநாமந்தான் நாவில் நூறு நூருயிரம் நண்ணினுர்’’ என்பதும் ‘‘பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானை’’ என்பது, அப்பர் தேவாரம்.

கூத்த: அண்மை விளி. தடங்கண்: உரிச்சொல் தொடர். நிகழ்ந்த: பலவின்பால் வினைமுற்று. 10

காமனைக் காலன் தக்கன்மிக் கெச்சன்
படக்கடைக் கணித்தவன் அல்லாப்
பேய்மனம் பிறிந்த தவப்பெருந் தொண்டர்
தொண்டனேன் பெரும்பற்றப் புலியூர்ச்
சேமநற் றில்லை வட்டங்கொண்(டு) ஆண்ட
செல்வச்சிற் றம்பலக் கூத்த!
பூமலர் அடிக்கீழ்ப் புராணபூ தங்கள்
பொறுப்பர்என் புன்சொலின் பொருளே.

பொழிப்புரை : மன்மதனையும், யமனையும், தக்கனையும், (தவவலிமை) மிக்க எச்சனையும் அழியும்படி செய்து (பின்பு அவர்களுக்குத்) திருவருள் பாலித்தவனுகிய உன்னை அல்லாத பேய்த்தன்மை உடையவர்களை மனத்தினுலும் (நினைக்காமல்) நீங்கி நின்ற தவத்தினுல் மேம்பட்ட சிவத் தொண்டர்களுக்குத் தொண்டனுகிய என்னை, பெரும் பற்றப் புலியூராகிய காவல் பொருந்திய நல்ல தில்லைப் பதியை(த் தனது இருப்பிடமாகக்) கொண்டு (அங்கே) ஆட்கொண்ட, திருவருட் செல்வம் நிறைந்த சிற்சபையில் ஆனந்த தாண்டவம் புரியும் பெருமானே! எனது அற்பமான (துதிச்) சொற்களின் பொருளை உனது அழகிய தாமரை மலர்போன்ற திருவடியின் கீழ் உள்ள பழமையான பூத கணங்கள் பொறுத்தருளுவர் (அன்றோ?) என்றவாறு.

விளக்கம் : காலன்-யமன். பட-அழியும்படி. கடைக் கணித்தல்-திருவருள் பாலித்தல். பிறிதல்-நீங்குதல். சேமம்-காவல். தில்லை-தில்லைமரம் அடர்ந்த ஊர்; சிதம்பரம். பூ-அழகு. புராணம்-பழமை. பேய்-பேய்த்தன்மையுடைய அற்பர். ஆசிரியர் தாம் துதிக்கும் துதிப்பாடல்கள் எங்கே பொருள் வேறுபட்டுப் பழமையான பூத கணங்களுக்குக் கோபம் உண்டாகி விடுமோ என்பார், "பூத கணங்கள் பொறுப்பர்" என்ருர். இங்குத் திருமாளிகைத் தேவர் தம்மை மிகப்பணிவுடன், "தவப்பெருந் தொண்டர் தொண்டனேன்" என்று குறிப்பிடுகின்ருர்.

கூத்த: அண்மை விளி. மலர் அடி: உவமத்தொகை. தொண்டனேன்: வினையாலணையும் பெயர். நல்+தில்லை-நற்றில்லை. மிக்க+எச்சன்=மிக்கெச்சன்; இதில் அகரம் தொக்கது. "சிவப் பெருந் தொண்டர் தொண்டனேன்" என்றும் பாடம். 11

திருச்சிற்றம்பலம்

3. கோயில் – உறவாகிய யோகம்*

பண் – பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

உறவா கியயோ கமும்போ கமுமாய்
உயிராளி! என்னும்;என் பொன்னொருநாள்
சிறவா தவர்புரஞ் செற்ற கொற்றச்
சிலைகொண்டு பன்றிப்பின் சென்றுநின்ற
மறவா! என்னும்; மணிநீர் அருவி
மகேந்திர மாமலைமேல் உறையும்
குறவா! என்னும்; குணக்குன்றே! என்னும்;
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

பொழிப்புரை: எனது பொன்போலும் சிறந்த மகள், விளங்குகின்ற தில்லைப்பதியின்கண் உள்ள சிற்றம்பலத்திலே நடனம் ஆடும் பெருமானை(க் குறித்து), 'உயிர்களுக்கு(த் தொடர்பான) யோகமும் போகமுமாய் நின்று (என்) உயிரை ஆள்பவனே!' என்று சொல்லுவாள்; 'முன்னொரு நாள் மேன்மையில்லாதவரான அசுரர்களின் முப்புரத்தை அழித்த வெற்றி பொருந்திய வில்லைக் கைக்கொண்டு (மூகாசுரன் என்னும்) பன்றியின் பின்னே சென்று (அதனைக் கொல்லுதற்காக) நின்ற வேடனே!' என்று சொல்லுவாள்; 'இரத்தினங்களைக் கொழித்துக்கொண்டு ஓடிவரும் நீர் அருவிகளையுடைய மகேந்திரம் என்னும் பெரிய மலையின் மீது எழுந்தருளிய குறவனே!' என்று சொல்லுவாள்; 'நற்குணங்களுக்கு இருப்பிடமானவனே!' என்று சொல்லுவாள் என்றவாறு.

---

* இத்திருப்பதிகம் தலைவன் பிரிவுக்கு இரங்கும் தலைவியின் செய்கையைச் செவிலித்தாய் கூறுவதாக அமைந்துள்ளது.

விளக்கம்: என்னும் – என்று சொல்லுவாள். பொன் – திருமகள்; அழகு. சிறவாதவர்–மேன்மை இல்லாதவர்; பகைவர். புரம் – முப்புரம். மறவா–வேடனே. மகேந்திர மா மலை–இது பொதிய மலைக்குத் தெற்கே உள்ள வளம் பொருந்திய ஒரு மலை; பல ஊழிகளிலும் நீரில் அழுந்தி முழுகாத மலை. இங்குச் சிவபெருமான் உமாதேவியாருடன் எப்பொழுதும் எழுந்தருளியுள்ளார் என நூல் கூறும். மலை நாட்டிற்குரியவர் குறவர் ஆதலால், இங்கு இறைவனைக் 'குறவா' என்றார். குறவர்–மலைச்சாதியினர். இறைவன் தன் இறைமைக் குணங்களில் எக்காலத்தும் அசையாத நிலைமையன் ஆதலால், அவனைக் 'குணக்குன்றே' என்றார்.

அருச்சுனன் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்து கொண்டிருக்கும் போது அவனைக் கொல்லப் பன்றி வடிவுடன் வந்த மூகாசுரனைத் தொடர்ந்து சிவபெருமான் வேடவடிவு கொண்டு சென்றார் என்பது வரலாறு: "வேடனாய் விசயன் தன் வியப்பைக் காண்பான் வில்பிடித்துக் கொம்புடைய ஏனத்தின்பின் கூடினார்" என்பது அப்பர் தேவாரம்.

'உயிராளி' என்றவிடத்து 'எல்லா உயிர்களையும் ஆட்கொண்டவனே ஆயினும் என்னை நீர் ஆட்கொள்ள வில்லையே' என்று இறைவனை நிந்தித்தல் தொனிக்கிறது. இவ்வாறே 'மறவர்', 'குறவர்', 'குணக்குன்றே' என்னுமிடங்களிலும் புகழ்தல் போல் நிந்தித்தல் தொனிக்கும். விரக தாபத்தால் வருந்தும் தலைவி இவ்வாறு கூறுதல் மரபாம்.

உயிராளி, மறவா, குறவா, குணக்குன்றே: விளிகள். என்னும்: செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று; இது பெண்பாற்கு வந்தது. பொன்: உவமையாகு பெயர். 1

காடாடு பல்கணஞ் சூழக் கேழற்
கடும்பின் நெடும்பகற் கான்நடந்த
வேடா! மகேந்திர வெற்பா! என்னும்;
வினையேன் மடந்தைவிம் மாவெருவும்;
சேடா! என்னும்; செல்வர்மூ வாயிரஞ்
செழுஞ்சோதி அந்தணர் செங்கைதொழும்
கோடா! என்னும்; குணக்குன்றே! என்னும்;
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

பொழிப்புரை: தீவினையினேனுடைய மகள், விளங்குகின்ற தில்லைச்சிற்றம்பலத்தில் நடிக்கும் கூத்தப் பெருமானை(க் குறித்து), 'சுடுகாட்டில் ஆடுகின்ற பல்வகைப் பூத கணங்கள் (வேடுவர்களாய்ச்) சூழ்ந்து வரக் கொடிய பன்றியின் பின் நெடிய பகற்பொழுதில் காட்டில் நடந்த வேடுவனே! மகேந்திர மலையில் உள்ளவனே!' என்று சொல்லுவாள்; விம்மி அழுது அஞ்சுவாள்; 'பெருமையுடையவனே!' என்று சொல்லுவாள்; 'சிவநேயச் செல்வர்களும் மிக்க புகழுடைய மூவாயிரம் அந்தணர்களும் தமது சிவந்த கைகளைக் கூப்பி வணங்குகின்ற நெறி தவறாதவனே!' என்று சொல்லுவாள்; 'குணக்குன்றே' என்று சொல்லுவாள் என்றவாறு.

விளக்கம்: காடு - சுடுகாடு. கடும் கேழல் - கொடிய பன்றி; கொடிய மூகாசுரன் என்ற பன்றி. தன்மகளின் துன்பத்தைக் கண்டு பொறாத செவிலித்தாய், தன்னை நொந்து கொள்வாளாய், 'வினையேன்' என்றாள். விம்மல்-தேம்பியழுதல். வெருவுதல்-அஞ்சுதல். சேடு - பெருமை. சேடா - எல்லாம் அழிந்த காலத்தும் தான்மட்டும் அழியாது எஞ்சி நிற்பவனே எனினுமாம்; (சேடம்-மிச்சம்.) சோதி-புகழ். செல்வர் மூவாயிரஞ் செழுஞ்சோதி அந்தணர் – திருவருட்செல்வம் பெற்றவராகிய பெரும்புகழ் கொண்ட மூவாயிரம்

அந்தணர் என்றலுமாம். சோதி - (முத்தீ) ஒளியுடைய எனினுமாம். செல்வம் - இங்குச் செல்வன் கழல் ஏத்தும் செல்வமுமாம். கோடு-நெறி.

வேடா, வெற்பா, சேடா, கோடா, குணக்குன்றே: விளிகள். விம்மா (-விம்மி): செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். வெருவும்: செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று; இது பெண்பாற்கு வந்தது. 2

கானே வரு(ம்)முரண் ஏனம் எய்த
களியார் புளினநற்கா ளாய்!என்னும்;
வானே தடவும் நெடுங் குடுமி
மகேந்திர மாமலை மேலிருந்த
தேனே! என்னும்; தெய்வவாய் மொழியார்
திருவாளர்மூ வாயிரவர் தெய்வக்
கோனே! என்னும்; குணக்குன்றே! என்னும்;
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

பொழிப்புரை: (எனது மகள்), விளங்குகின்ற தில்லையம்பலக்கூத்தனை(க் குறித்து), 'காட்டிலேவருகின்ற மாறுபாடு கொண்ட பன்றியை (அம்பினால்) எய்து கொன்ற களிப்பு மிகுந்த நல்ல வேடக்காளையே!' என்று சொல்லுவாள்; 'ஆகாயத்தை அளாவுகின்ற நீண்ட சிகரங்களையுடைய பெரிய மகேந்திர மலை மீது இருந்த தேன் போன்றவனே!' என்று சொல்லுவாள்; 'தெய்வத்தன்மை பொருந்திய வேதத்தை ஓதுகின்றவர்களும், திருவருட் செல்வத்தையுடையவர்களும் ஆகிய (தில்லை) மூவாயிரவர்களுக்குத் தெய்வமாகிய தலைவனே!' என்று சொல்லுவாள்; 'குணக்குன்றே!' என்று சொல்லுவாள் என்றவாறு.

விளக்கம்: கான்-காடு. முரண்-மாறுபாடு, பகைமை; வலிமையுமாம். ஏனம்-பன்றி. களி-களிப்பு, மகிழ்ச்சி.

புளினக்காளை-வேடக்காளை; புளினர்-வேடர். காளை-யௌவன பருவம் வாய்ந்தவன். குடுமி-சிகரம். பேரின்பப் பிழம்பாக உள்ள இறைவன், தன்னை அடைந்தார்க்கு இனிமைச் சுவை பயந்து நிற்றலின், அவனைத் "தேனே" என்றார். தெய்வவாய்மொழி-வேதம். திருவாளர்-சிவஞானச் செல்வத்தைப் பெற்றவர். மூவாயிரவர்-தில்லை மூவாயிரம் தீட்சிதர்கள். கோன்-தலைவன்.

புளினக் காளாய், தேனே, கோனே, குணக்குன்றே: விளிகள். தேன்: உவமையாகு பெயர். நல்+காளாய்= நற்காளாய் 'வானே தடவும் நெடுங்குடுமி மகேந்திர மாமலை: இத்தொடர் உயர்வு நவிற்சியணி. 3

வெறியேறு பன்றிப் பின்சென்(று) ஒருநாள்
விசயற்(கு) அருள்செய்த வேந்தே!என்னும்;
மறியேறு சாரல் மகேந் திரமா
மலைமேல் இருந்தமருந் தே!என்னும்;
நெறியே! என்னும்; நெறிநின் றவர்கள்
நினைக்கின்ற நீதி வேதாந்தநிலைக்
குறியே! என்னும்; குணக்குன்றே! என்னும்;
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

பொழிப்புரை: (எனது மகள்), விளங்குகின்ற தில்லையம் பலக் கூத்தனை(க் குறித்து), 'முன் ஒருநாள் கோபம்மிகுந்து ஓடும் பன்றியை(த் துரத்திக்கொண்டு) பின்னே சென்று அருச்சுனனுக்கு அருள்புரிந்த அரசே!' என்று சொல்லுவாள்; 'மான்கள் உலாவும் மலைப்பக்கங்களையுடைய மகேந்திரம் என்னும் பெரிய மலையின் மேல் வீற்றிருந்த (பிறவிப் பிணிக்கு) மருந்து போன்றவனே!' என்று சொல்லுவாள்;

'(அன்பர்களை) நன்னெறியில் செலுத்துபவனே!' என்று சொல்லுவாள்; 'நன்னெறியில் (சன்மார்க்கத்தில்) நின்ற பெரியோர்கள் (இடைவிடாமல்) நினைக்கின்ற நீதியோடு (வரம்போடு) கூடிய வேதாந்தங்களில் கூறப்பெற்றுள்ள நிலைத்த இலட்சியப் பொருளே!' என்று சொல்லுவாள்; 'குணக்குன்றே!' என்று சொல்லுவாள் என்றவாறு.

விளக்கம்: வெறி-ஆவேசம், கோபம். விசயன்-அருச்சுனன்;இவனுக்குச் சிவபெருமான் பாசுபதம் தந்ததை, 'அருள் செய்த' என்றார்: "பஞ்சவரிற் பார்த்தனுக்குப் பாசுபதம் ஈந்துகந்தான்" என்பது சம்பந்தர் தேவாரம். மறி-மான். மறியேறு-மலையாடுகள் குதித்துக் குதித்து ஏறுகின்ற என்றலுமாம். சாரல்-மலைப்பக்கங்கள். உடலைப் பற்றிய நோய்க்கு நன் மருந்து இருப்பது போல உயிரைப் பற்றிய பிறவி நோய்க்கு மருந்தாக இருப்பவன் இறைவன்; ஆதலால், அவனை 'மருந்தே' என்றார். நெறி-நன்னெறி. நீதி வேதாந்தம்-இது சிவாகமப் பொருளுக்கு மாறுபடாமல் பதிப்பொருளைப் பற்றிக் கூறுவது. இதனை, "ஒரும் வேதாந்த மென்னும் உச்சியில் பழுத்த, ஆரா இன்ப அருங்கனி பிழிந்து, சாரங் கொண்ட சைவசித் தாந்தத் தேனமுது" எனவரும் பண்டார மும்மணிக்கோவை அடிகளால் அறியலாம்.

வேந்தே, மருந்தே, நெறியே, குறியே,குணக்குன்றே: விளிகள். மருந்து: ஆகுபெயர். 4

செழுந்தென்றல் அன்றில்இத் திங்கள் கங்குல்
திரைவீரை தீங்குழல் சேவின்மணி
எழுந்தின்(று) என்மேல் பகையாட வாடும்
எனைநீ நலிவதென் னே?என்னும்;

அழுந்தா மகேந்திரத்(து) அந்த ரப்புட்(கு)
அரசுக் கரசே! அமரர்தனிக்
கொழுந்தே! என்னும்; குணக்குன்றே என்னும்;
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

பொழிப்புரை: (எனது மகள்), விளங்குகின்ற தில்லையம்பலக் கூத்தனை(க் குறித்து), 'செழுமையான தென்றற் காற்று, அன்றில் என்னும் பறவை, இச்சந்திரன், இராப் பொழுது, கடலின் அலையோசை, இனிய குழலோசை, எருதின் கழுத்தில் கட்டிய மணியோசை (ஆகிய இவை) எழுந்து என்மீது பகை கொண்டு துன்புறுத்த அதனால் வாட்டமடைந்த என்னை நீ வருத்துவது ஏனோ' என்று சொல்லுவாள்; (நீரில்) அழுந்தாத மகேந்திர மாமலையில் உள்ள, ஆகாயத்தில் சஞ்சரிக்கும் பட்சிகளுக்கு அரசாகிய கருடனுக்கு (அருள் செய்த) தலைவனே! தேவர்களுக்கு ஒப்பற்ற இளந்தளிர்போன்ற தன்மையனே!' 'என்று சொல்லுவாள்; 'குணக்குன்றே!' என்று சொல்லுவாள் என்றவாறு.

விளக்கம்: அன்றில்-ஒரு பறவை. கங்குல்-இரவு.வீரை-கடல். வீரைத்திரை-கடலின் அலையோசை. சே-எருது; நலிதல்-வருத்துதல். தென்றல் வீசுதல், அன்றில் பறந்து செல்லுதல், சந்திரன் தோன்றுதல், ஆயர் குழலோசை, எருதுகளின் கழுத்தில் கட்டிய மணியோசை ஆகிய இவை மாலைக்கால நிகழ்ச்சிகள். இவை பிரிந்தாரை வருத்துவன. தலைவி இவற்றைக்கண்டு இரங்கியது மாலைப்பொழுது கண்டு இரங்கியது ஆகும்.கங்குலுக்கு இரங்குவது,'கங்குல் வரவுகண்டு வருந்துதல்' எனவும்,கடலோசைக்கு இரங்குவது, 'நெய்தல் கண்டுவருந்துதல்'எனவும் பெயர் பெறும்.அந்தரப்புட்கு அரசு -ஆகாயத்தில் சஞ்சரிக்கும் பட்சிகளுக்கு அரசனாகிய கருடன்; இவன் அருள்பெற்றதைச் சிவபராக்கிரமத்தில் காண்க,

அரசே, கொழுந்தே, குணக்குன்றே: விளிகள். என்னே: வினு. அழுந்தா: (அழுந்தாத) ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம். 5

வண்டார் குழலுமை நங்கை முன்னே
மகேந்திரச் சாரல் வராகத்தின்பின்
கண்டார் கவல வில்லாடி வேடர்
கடிநா யுடன்கை வளைந்தாய்!என்னும்;
பண்டாய மலரயன் தக்கன் எச்சன்
பகலோன் தலைபல் பசுங்கண்
கொண்டாய்! என்னும்; குணக்குன்றே! என்னும்;
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

பொழிப்புரை:(எனதுமகள்)'விளங்குகின்ற தில்லையம்பலக் கூத்தனை(க் குறித்து), 'வண்டுகள் மொய்க்கின்ற கூந்தலையுடைய உமாதேவியாருக்கு முன்னே, மகேந்திரமலைச் சாரலின் கண்ணே, கண்ட தேவர்கள் கவலைப்படும்படி பன்றியின் பின் வில்லை ஏந்திக் கொண்டு வேடர்களோடு விரைவாய்ஓடும் நாய்களுடன் (சென்று அப்பன்றியை) வளைத்துக்கொண்டவனே!, என்று சொல்லுவாள்; 'பழமையாகிய பிரமன், தக்கன், எச்சன், சூரியன் (இவர்களுடைய) தலைகளையும் பற்களையும் பசிய கண்களையும் (தக்கன் யாகத்தில்) பறித்துக்கொண்டவனே!, என்று சொல்லுவாள்; 'குணக்குன்றே!' என்று சொல்லுவாள் என்றவாறு.

விளக்கம்: உமைநங்கை - உமாதேவியார். வராகம்-பன்றி. கவலல்-கவலைப்படுதல். கொடிய இப்பன்றியால் இவர்களுக்கு யாது துன்பம் நேருமோ என்று கண்டோர் கவலைப்படுதலை, "கண்டார் கவல" என்றுர். வில் ஆடி-வில்லை ஏந்தி. கடி-விரைவு.மலரயன்-தாமரைப்பூவில் வீற்றிருக்கும்

பிரமதேவன். பகலோன்-சூரியன். தக்கன் யாகத்தில் பிரமன், தக்கன், எச்சன் இவர்களின் தலைகளையும், பன்னிரண்டு சூரியர்களில், பூஷன் என்பவனின் பற்களையும், பகன் என்பவனின் கண்ணையும் வீரபத்திரர் பறித்தார் என்பது வரலாறு.

கைவளைந்தாய், கொண்டாய், குணக்குன்றே: விளிகள். கடி: (விரைவு) உரிச்சொல். கை வளைந்தாய், கை: உபசர்க்கம். 'கண்டாரகல' என்றும் பாடம். 6

கடுப்பாய்ப் பறைகறங்கக் கடுவெஞ் சிலையும்
கணையும் கவணும் கைக்கொண்(டு)
உடுப்பாய் தோல் செருப்புச் சுரிகை
வராக முன்னேடி விளியுளைப்ப
நடப்பாய்! மகேந்திர நாத!நா தாந்தத்(து)
அரையா என்பார்க்கு நாதாந்தபதம்
கொடுப்பாய்! என்னும்; குணக்குன்றே! என்னும்;
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

பொழிப்புரை: (எனது மகள்), விளங்குகின்ற தில்லையம்பலக் கூத்தனை(க் குறித்து), 'மிகக் கடுமையாகப் பறைகள் ஒலிக்க, வேகமும் கொடுமையும் நிறைந்த வில்லையும் அம்பையும் கவண் என்னும் கருவியையுங் கைக்கொண்டு, புலித்தோலும், செருப்பும், சுரிகை (சிறு கத்தி)யும் தரித்த வணுய்ப் பன்றியின் முன்னே ஓடிக் கூக்குரல் (காதுகளைத் துளைக்கும்படி) முழக்கி நடந்தவனே! மகேந்திரமலைக்குத் தலைவனே!' 'நாத தத்துவத்தின் முடிவாய் இருக்கின்ற தலைவனே!' என்று துதிக்கும் அடியவர்களுக்கு நாத தத்துவத்தையும் கடந்த (சிவலோக)பதவியைக் கொடுப்பவனே!', என்று சொல்லுவாள்; 'குணக்குன்றே' என்று சொல்லுவாள் என்றவாறு.

விளக்கம்: கடுப்பு-கடுமை-வேகம். கறங்குதல்-ஒலித்தல். கணை-அம்பு. கவண்-கல்லெறி கயிறு. விளி-விலங்குகளை எழுப்பி ஓடச் செய்தற்காகச் செய்யும் கூப்பாடு. நாதாந்தம்-நாத தத்துவத்தின் முடிவு; இது சிவபதம். அரையா-தலைவனே.

நடப்பாய், நாத, அரையா, கொடுப்பாய், குணக்குன்றே : விளிகள். அரையன் (அரசன்): இடைப்போலி. 7

சேவேந்து வெல்கொடி யானே! என்னும்;
சிவனே!என் சேமத்துணையே என்னும்;
மாவேந்து சாரல் மகேந்தி ரத்தில்
வளர்நா யகா!இங்கே வாராய்என்னும்;
பூவேந்தி மூவா யிரவர் தொழப்
புகழேந்து மன்று பொலியநின்ற
கோவே! என்னும்; குணக்குன்றே! என்னும்;
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

பொழிப்புரை: (எனது மகள்), விளங்குகின்ற தில்லையம்பலக் கூத்தனை(க் குறித்து), 'இடபத்தின் வடிவம் எழுதப் பெற்றுள்ள வெற்றி பொருந்திய கொடியை யுடையவனே!' என்று சொல்லுவாள்; 'சிவபெருமானே! எனது (உயிரின்) பாது காவலுக்குரிய துணைவனே!' என்று சொல்லுவாள்; 'பன்றி முதலிய விலங்குகளைத் தன்னிடத்தே கொண்டுள்ள மலைச்சாரலையுடைய மகேந்திரமலையினிடத்து எழுந்தருளிய தலைவனே! (நீ) இங்கே வருவாயாக' என்று சொல்லுவாள்; '(தில்லை) மூவாயிரவராகிய அந்தணர்கள் மலர்களைக் கையில் ஏந்தி நின்று வணங்கப் புகழ் நிறைந்த பொன்னம்பலத்தில் சிறப்புடன் வீற்றிருக்கும் அரசே!',என்று சொல்லுவாள்; 'குணக்குன்றே!' என்று சொல்லுவாள் என்றவாறு.

விளக்கம்: சே-இடபம். சேவேந்து கொடி-இடபக் கொடி. இது சிவபெருமானுக்குரிய அடையாளக்கொடி ஆகும். சிவன்-என்றும் அழியாத பேரின்பம் தருபவன்; சிவபெருமான். சேமம்-பாதுகாவல். துணை-துணைவன். மா-விலங்கின் பொது; பன்றி, மான், யானை முதலியன. நாயகன்- தலைவன். மன்று-பொன்னம்பலம்.

வெல்கொடியானே, சிவனே, துணையே, நாயகா, கோவே, குணக்குன்றே: விளிகள். மூன்று + ஆயிரவர் = மூவாயிரவர். 8

தரவார் புனம் சுனைதாழ் அருவித்
தடம்கல் லுறையும் மடங்கல்அமர்
மரவார் பொழில்எழில் வேங்கை எங்கும்
மழைசூழ் மகேந்திர மாமலைமேல்
சுரவா! என்னும்; சுடர்நீள் முடிமால்அயன்
இந்திரன் முதல்தே வர்க்கெல்லாம்
குரவா! என்னும்; குணக்குன்றே! என்னும்!
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

பொழிப்புரை: (எனது மகள்), விளங்குகின்ற தில்லையம் பலக் கூத்தனை (க் குறித்து), '(மிக்க பயன்) தரும்படியான திணைப்புனங்களையும் மலைச் சுனையினின்று இழியும் அருவி களையும் (உடைய), பெரிய கற்பாறைகளின் கீழுள்ள குகை களில் வசிக்கும் போர்புரியும் சிங்கங்கள், குங்கும மரங் கள் பொருந்திய சோலைகள், அழகிய வேங்கை மரங்கள் (ஆகிய இவை) நிறைந்ததும், எல்லாப் பக்கங் களிலும் மேகங்களால் சூழப்பெற்றதுமான மகேந்திரம் என்னும் பெரிய மலையினிடத்து எழுந்தருளிய தேவ தேவனே!' என்று சொல்லுவாள்; 'ஒளி பொருந்திய நீண்ட

கிரீடங்களைத் தரித்த திருமால், பிரமன், இந்திரன் முதலிய எல்லாத் தேவர்களுக்கும் குருவாக விளங்குபவனே!' என்று சொல்லுவாள்; 'குணக்குன்றே!' என்று சொல்லுவாள் என்றவாறு.

விளக்கம்: தரவு-(பயன்) தருதல். புனம்-தினைப்புனம். கல்-கற்பாறை; இங்குக் குகை. அமர் மடங்கல் - போர் செய்யும் சிங்கம். மர - மரவம் - குங்கும மரம். வேங்கை-வேங்கை மரம். மழை-மேகம். சுரர்-தேவர். சுரவா-தேவ தேவனே; சிவபெருமானே. குரவன்-ஆசாரியன்; இங்குத் தட்சிணாமூர்த்தி ஆவர்.

சுரவா, குரவா, குணக்குன்றே, விளிகள். தரவு+ஆர்=தரவார். மர+ஆர்= மரவார். 9

திருநீ றிடாவுருத் தீண்டேன் என்னும்;
திருநீறு மெய்த்திரு முண்டத்திட்டுப்
பெருநீல கண்டன் திறங்கொண்(டு) இவள்
பிதற்றிப் பெருந்தெரு வேதிரியும்;
வருநீர் அருவி மகேந்தி ரப்பொன்
மலையின் மலைமக ளுக்கருளுங்
குருநீ என்னும்; குணக்குன்றே! என்னும்;
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

பொழிப்புரை: (எனது மகள்) தில்லையம்பலக் கூத்தனை(க் குறித்துத்), 'திருவெண்ணீற்றை அணியாத உருவத்தைத் தொடமாட்டேன்' என்று சொல்லுவாள்; பின்பு திருவெண்ணீற்றை(த் தன்) உடம்பின் மேலும் அழகிய நெற்றியின் மேலும் அணிந்து, பெருமை பொருந்திய நீலகண்டத்தை யுடைய சிவபெருமானது புகழை (த் தன் வசமிழந்து) சொல்லிக்கொண்டு, இவள் பெரிய தெருக்களின் வழியே திரிந்து கொண்டிருப்பாள்; 'இறங்கி ஓடி வருகின்ற நீரருவி

களையுடைய மகேந்திரம் என்னும் அழகிய மலையினிடத்து மலை மகளாகிய உமாதேவியாருக்கு (ச்சிவாகமப் பொருளை) அருள்புரிந்த குருமூர்த்திநீ, என்று சொல்லுவாள்; 'குணக் குன்றே' என்று சொல்லுவாள் என்றவாறு.

விளக்கம்: திருநீறு-விபூதி; பாவங்களை நீருக்குவது நீறு; மேலான ஐசுவரியம் விபூதி. திருநீறிடாதவர் யாவ ராயினும் தீண்டத் தகாதவரே என்பார், "திருநீறிடா உருத் தீண்டேன்" என்ருர்: "வெண்ணீறு, அணிகிலா தவரைக் கண்டால் அம்ம! நாம் அஞ்சுமாறே" என்பது திருவாசகம். மெய்-உடல். முண்டம்-நெற்றி. திறம் – மேன்மை, புகழ். பிதற்றிக்கொண்டு-(தன் வசம் இழந்து) வாய்க்கு வந்த வற்றைச் சொல்லிக்கொண்டு. பொன்-அழகு. மகேந்திர மலையில் சிவபெருமான் உமாதேவிக்குச் சிவாகமப் பொருளை உபதேசித் தருளினர் என்பது வரலாறு: "மன்னு மாமலை மகேந்திர மதனில், சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளி யும்" என்பது திருவாசகம்.

குணக்குன்றே: விளி. தீண்டேன்: தன்மையொருமை வினைமுற்று. திரியும்: செய்யும் என்னும் வாய்பாட்டு வினை முற்று. 10

உற்ருய்! என்னும்;உன்னை யன்றி மற்ருென்(று)
உணரேன்என்னும்; உணர்வுகள் கலக்கப்
பெற்ருய ஐந்தெ ழுத்தும் பிதற்றிப்
பிணிதீர வெண்ணீறிடப் பெற்றேன்என்னும்;
சுற்ருய சோதி மகேந்தி ரம்சூழ
மனத்திருள் வாங்கிச் சூழாதநெஞ்சிற்
குற்ருய்! என்னும்; குணக்குன்றே! என்னும்;
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

பொழிப்புரை: (எனது மகள்), விளங்குகின்ற தில்லையம் பலக் கூத்தனை(க் குறித்து), '(எனக்கு மிக நெருங்கிய) உறவினனே!' என்று சொல்லுவாள்; 'உன்னை அல்லாமல் வேறொன்றையும் அறியேன்' என்று சொல்லுவாள்; 'உணர்ச்சிகள் (இறை அறிவுடன்) கலந்து (சிவமயமே ஆகிப்), (பல நலங்களைச்) செய்வதாகிய திருவைந்தெழுத் தையும் இடைவிடாமல் செபித்து, உடற்பிணியும் உயிர்ப் பிணியும் நீங்கும் பொருட்டு, (நான்) திருவெண்ணீற்றை அணியும் பேற்றைப் பெற்றேன்' என்று சொல்லுவாள்; 'சுற்றிலும் பொருந்திய சோதிமயமான மகேந்திரமலையினை வலம் வந்து (அதனால்) மனத்திலுள்ள அஞ்ஞான இருளைப் போக்கிக் கொண்டு சிவத்தியானம் செய்யாத மனத்திலும் நிறைந்திருப்பவனே!' என்று சொல்லுவாள்; 'குணக் குன்றே!' என்றுசொல்லுவாள் என்றவாறு.

விளக்கம்: உற்றாய்-உற்றவனே, உறவினனே. கலக்கப் பெற்று-(இறை அறிவுடன்) கலந்து. ஆய-(பலநலங்களைச்) செய்வதாய. ஐந்தெழுத்து-பஞ்சாட்சரம். இது தூலம், சூக்கு மம், காரணம் எனப்பலவாம். ஐந்தெழுத்தின் பெருமையினை, "வாயிலே வைக்கும் அளவிலே மருந்தாகித், தீய பிறவிநோய் தீர்க்குமே;–தூயஏ, கம்பெருமான் தேவியொடு மன்னு கயி லாயத்(து), எம்பெருமான் ஓரஞ் செழுத்து"எனவரும் கயிலை பாதி காளத்திபாதி அந்தாதியால் அறிக. 'பிணிதீர வெண்ணீறி டப் பெற்றேன்': "அருநோய்கள் கெட வெண்ணீறணியா ராகில்" என்பது அப்பர் தேவாரம். பிதற்றல்-இடைவிடாமல் செபித்தல். வாங்கி-போக்கி சூழாத நெஞ்சு-தியானம் செய்யாத மனம். குற்றாய்-குன்றாய்-குன்றுதவனே.

உற்றாய், குற்றாய்: விளிகள். வெண்மை + நீறு = வெண்ணீறு. குன்றாய் என்பது எதுகை நோக்கிக் 'குற்றாய்' என ஆயிற்று. —— 11

வேருக உள்ளத்(து) உவகை விளைத்(து)
அவனிச் சிவலோக வேதவென்றி
மாருத மூவாயிர வரையும் எனையும்
மகிழ்ந்தாள வல்லாய்! என்னும்;
ஆரூர் சிகர மகேந்தி ரத்(து)உன்
அடியார் பிழைபொறுப் பாய்!மாதோர்
கூருய்! என்னும்; குணக்குன்றே! என்னும்;
குலாத்தில்லை அம்பலக் கூத்தனையே.

பொழிப்புரை: (என்து மகள்), விளங்குகின்ற தில்லையம்பலக் கூத்தனை(க் குறித்து), 'வெவ்வேருக மனத்தின் கண் பெருமகிழ்ச்சியை (பேரானந்தத்தை)விளைவித்துப் பூலோகத்தைச் சிவலோகமாகச் செய்து வேதம்ஓதும் மேம்பாடு மாறுபடாத (தில்லை) மூவாயிரவராகிய அந்தணர்களையும் (தாழ்ந்த) என்னையும் (ஒரேவிதமாகத்) திருவுளம் மகிழ்ந்து ஆட்கொள்ள வல்லவனே!'என்று சொல்லுவாள்; 'அருவிகள் நிறைந்த சிகரங்களைக் கொண்டுள்ள மகேந்திர மலையிடத்து (வழிபடும்) உனது மெய்யடியார்களின் பிழைகளையெல்லாம் பொறுத்தருள்பவனே! உமாதேவியாரை இடப்பாகத்தில் வைத்தருளிய சிவபெருமானே!' என்று சொல்லுவாள்; 'குணக்குன்றே!' என்றுசொல்லுவாள் என்றவாறு.

விளக்கம்: 'வேருக உள்ளத்து உவகை விளைத்து' என்றது வேதம் ஓதுவார் அடையும் மனநிகழ்ச்சிகளை. அவனி-பூலோகம். வென்றி-மேம்பாடு. ஆறு ஆர்-அருவிகள் நிறைந்த. மாது-உமாதேவியார். ஓர் கூறு - ஒருபாகம், இடப்பாகம்.

வல்லாய், கூருய், குணக்குன்றே: விளிகள். 12

திருச்சிற்றம்பலம்

---

4. கோயில் – இணங்கிலாவீசன்

பண் – காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

இணங்கிலா ஈசன் நேசத்(து)
இருந்தசித் தத்தி னேற்கு
மணங்கொள்சீர்த் தில்லை வாணன்
மணவடி யார்கள் வண்மைக்
குணங்களைக் கூறு வீறில்
கோறைவாய்ப் பீறற் பிண்டப்
பிணங்களைக் காணு கண்வாய்
பேசா(து)அப் பேய்க ளோடே.

பொழிப்புரை: ஒப்பில்லாத ஈசனாகிய சிவபெருமானிடத்து, அன்பினால் பொருந்தியிருந்த மனத்தையுடைய எனக்கு (எக்காலத்தும்) மகிழ்ச்சியோடு கூடிய சிறப்பு நிறைந்த தில்லைப் பதியின்கண் எழுந்தருளிய நடராசப்பெருமானது மங்கலமான அடியார்களின் ஈகைத் தன்மைகளை எடுத்துச் சொல்லாத மேன்மை இல்லாத தொளை போன்ற வாயினையும், துவாரங்களையுடைய உடலையும் (சுமந்து கொண்டிருக்கும் நடைப்) பிணங்களை (எனது) கண்கள் காண மாட்டா; (எனது) வாயும் (பயனற்று அலையும்) அந்தப் பேய்களோடு பேசாது என்றவாறு.

விளக்கம்: ஈசன்-யாவர்க்கும் எவற்றிற்தும் தலைவனாகிய சிவபெருமான். நேசம்-அன்பு, பக்தி. சித்தம்-மனம். மணம்-மகிழ்ச்சி, மங்கலம். வாணன்-வாழ்பவன். தில்லைவாணன்-நடராசப் பெருமான். வண்மை-ஈகை. வீறு இல்-மேன்மை இல்லாத. கோறை-துவாரம். பீறல்-துவாரம். பிண்டம்-உடல். பிணம்-(நடைப்) பிணம். சிவனடியார் அல்லாத

மற்றவர்களைக் காணுதலும் அவர்களுடன் பேசுதலும் கூடாது என்பதாம்: "ஈசனுக் கன்பில்லார்......பேசுவதென் அறிவிலாப் பிணங்களை நாம் இணங்கில், பிறப்பினிலும் இறப்பினிலும் பிணங்கிடுவர் விடுநீ" என்பது சிவஞான சித்தியார்.

சித்தத்தினேற்கு: வினையாலணையும் பெயர். வாழ் + நன் = வாணன். காணு: எதிர்மறை வினைமுற்று. கூறு: ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். அப்பேய், அ: சுட்டு. பேசாது: ஒன்றன்பால் வினைமுற்று. 1

எட்டுரு விரவி யென்னை
ஆண்டவன் ஈண்டு சோதி
விட்டிலங்(கு) அலங்கல் தில்லை
வேந்தனைச் சேர்ந்தி லாத
துட்டரைத் தூர்த்த வார்த்தைத்
தொழும்பரைப் பிழம்பு பேசும்
பிட்டரைக் காணு கண்வாய்
பேசா(து)அப் பேய்க ளோடே.

பொழிப்புரை: எட்டு உருவங்களோடு கலந்து நின்று என்னை ஆட்கொண்டவனும், திரண்ட சோதி வடிவினனும் (ஆகிய) ஒளி விட்டுப் பிரகாசிக்கின்ற மலர்மாலையை அணிந்த தில்லைப்பதிக்கு அதிபனை அடையப்பெறாத தீயவர்களையும், இழிந்த வார்த்தைகளைப் பேசிக்கொண்டு திரியும் குற்றேவல் செய்பவர்களையும், கொடிய வார்த்தைகளைப் பேசும் சைவ மதத்திற்குப் புறம்பானவர்களையும் (எனது) கண்கள் காண மாட்டா; (எனது) வாயும் (பயனற்று அலையும்) அந்தப் பேய்களோடு பேசாது என்றவாறு.

விளக்கம்: எட்டு உரு-அட்ட மூர்த்தம். அவை நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா

என்பன: "இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி இயமான னாய் எறியுங் காற்று மாகி, அருநிலைய திங்களாய் ஞாயி றாகி ஆகாசமாய் அட்டமூர்த்தி யாகி" என்பது அப்பர் தேவாரம். ஈண்டுதல்-திரளுதல். விட்டு இலங்குதல்-ஒளிவிட்டுப் பிர காசித்தல். அலங்கல்-மலர்மாலை. தில்லை வேந்தன்-நடராசப் பெருமான். துட்டர்-துஷ்டர்-தீய செயலைப்புரிபவர். தூர்த்த வார்த்தை-இழிந்த வார்த்தை; காமத்தை உண்டுபண்ணும் வார்த்தையுமாம். தொழும்பர் - குற்றேவல் செய்பவர், அடிமைகள். பிழம்பு-கொடுமை; இடம்பப் பேச்சுமாம். பிட்டர்-பிரஷ்டர்-திருவருள் நெறிக்குப் புறம்பானவர்; மதப் பிரஷ்டர்.

விரவி: வினையெச்சம். எட்டு: எண்ணுப்பெயர். அலங் கல்: தொழிற் பெயர். கண்: பால்பகா அஃறிணைப் பெயர். 2

அருட்டிரள் செம்பொற் சோதி
அம்பலத் தாடு கின்ற
இருட்டிரள் கண்டத் தெம்மான்
இன்பருக்(கு) அன்பு செய்யா
அரட்டரை அரட்டுப் பேசும்
அழுக்கரைக் கழுக்க ளாய
பிரட்டரைக் காணா கண்வாய்
பேசா(து)அப் பேய்க ளோடே.

பொழிப்புரை: அருள் திரண்டு வடிவெடுத்தாற் போன்ற செம்பொற் சோதியனும், பொன்னம்பலத்தில் ஆனந்த தாண்டவம் செய்கின்ற கருநிறம் நிறைந்த கண்டத்தினை யுடைய எம் தலைவனும் ஆகிய சிவபெருமானிடத்து (அன்பு செலுத்தி அதனால்) இன்பம் அடையும் அடியவர்களுக்கு அன்பைக்காட்டாத குறும்பு செய்பவர்களையும், கூச்ச

லிட்டு(ப் பயனற்ற வார்த்தைகளைப்) பேசுகின்ற பொருமை யுடையவர்களையும், கழுகுகள் போல் (பறித்துண்ணும்) பிரஷ்டரை (எனது) கண்கள் காண மாட்டா; (எனது) வாயும் அந்தப் பேய்த்தன்மையுடையவர்களோடு பேசாது என்றவாறு.

விளக்கம்: இருள் திரள் கண்டத்து எம்மான் - நீல கண்டப் பெருமான். இன்பர்-இன்பமானவர்; அடியவர். அரட்டு - குறும்பு; செருக்குமாம். அழுக்கு - அழுக்காறு; பொருமை. கழுக்கள்-கழுகுகள்.

அருள் + திரள் = அருட்டிரள். இருள் + திரள் = இருட் டிரள். கழுக்கள்-பெயர்ச்சொல். 3

துணுக்கென அயனும் மாலும்
தொடர்வருஞ் சுடராய் இப்பால்
அணுக்கருக்(கு) அணிய செம்பொன்
அம்பலத் தாடிக்(கு) அல்லாச்
சிணுக்கரைச் செத்தற் கொத்தைச்
சிதம்பரைச் சீத்தை ஊத்தைப்
பிணுக்கரைக் காணு கண்வாய்
பேசா(து)அப் பேய்க ளோடே.

பொழிப்புரை: திடுக்கிட்டு அஞ்சும்படி பிரமனும் திரு மாலும் தொடர்ந்து அறிதற்கு அரிய சோதி வடிவினனாகி, இங்கு (அடியவர்களாய்) அணுகினவர்களுக்குச் சமீபித்து (வந்து அருள் செய்யும்) பொன்னம்பலத்தில் நடனமாடுபவ னும் ஆகிய நடராசப் பெருமானுக்கு (அன்பர்) அல்லாத, முக்காலமும் சோம்பேறிகளையும், வீணான பாவிகளையும், இழிசெயல் புரிவோர்களையும், கீழ்மக்களையும், (மன) அழுக்கு நிறைந்த கயவர்களையும், (எனது) கண்கள்

காணமாட்டா; எனது வாயும் அந்தப் பேய்த்தன்மையுடைய வர்களோடு பேசாது என்றவாறு.

விளக்கம்: இறைவன் அகந்தை கொண்டவர்களுக்கு அரியவன்; அன்புகொண்டவர்களுக்கு எளியவன் என்பது முதலிரண்டு அடிகளின் கருத்து. துணுக்கம்-திடுக்கிடுதல்; அஞ்சுதல். இப்பால் - இவ்விடம். அணுக்கர் - அணுகியிருப் பவர். சிணுக்கர் - முக்காலழுபவர். அணிமை-சமீபம். செத் தல் - சாதல், பயனின்மை, வீண். கொத்தை-பாவிகள். சிதம்பர் - இழிசெயல்புரிவோர். சீத்தை-கீழ்மகன். பிணுக் கர் - பிணக்கர், மாறுபடுபவர், கயவர்.

அல்லா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். பிணக்கரை என்பது எதுகை நோக்கி பிணுக்கரை என்று ஆயிற்று. 4

திசைக்குமிக் குலவு சீர்த்தித்
 தில்லைக்கூத்(து) உகந்து தீய
நசிக்கவெண் ணீற(து) ஆடும்
 நமர்களை நணுகா நாய்கள்
அசிக்கஆ ரியங்கள் ஓதும்
 ஆதரைப் பேத வாதப்
பிசுக்கரைக் காணு கண்வாய்
 பேசா(து)அப் பேய்க ளோடே.

பொழிப்புரை: எட்டுத்திசைகளுக்கும் மேற்பட்டுப் பரவு கின்ற புகழினையுடைய தில்லையம்பதியில் இறைவன் புரியும் நடனத்தை விரும்பித் தீமைகள் (பாவங்கள்), அழியும்படி திருநீற்றைப்பூசும் சிவனடியார்களைச் சேராத நாய்போன்ற இழிந்தவர்களையும், (பகைவர்கள்) பரிகசிக்க வடமொழியி லுள்ள பிறசமய நூல்களை ஓதுகின்ற அறிவில்லாதவர்களை

யும்,(மத)பேதங்களைப் பற்றித் தர்க்கம் செய்யும் அற்பர்களை யும் (எனது) கண்கள் காணமாட்டா;(எனது)வாயும் அந்தப் பேய்த்தன்மையுடையவர்களோடு பேசாது என்றவாறு.

விளக்கம்: சீர்த்தி-கீர்த்தி, மிகுபுகழ். உகத்தல்-விரும்பு தல். தீய-தீயவை-கொடிய பாவங்கள். நமர்கள்-நம்மவர்கள்-சிவனடியார்கள். அசித்தல்-பரிகசித்தல். ஆரியம் - சமஸ் கிருதம்;இங்கு வடமொழியிலுள்ள பிறசமய நூல்கள். ஆதர் -அறிவில்லாதவர். பேதவாதம்-நாத்திகவாதம். பிசுக்கர்-அற்பர்; தீயவருமாம்.

வெண்ணீறது, அது: பகுதிப் பொருள் விகுதி. நமர்: கிளைப்பெயர். நணுகா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெய ரெச்சம்.

5

ஆடர வாட ஆடும்
அம்பலத்(து) அமிர்தே! என்னும்
சேடர்சே வடிகள் சூடத்
திருவிலா உருவி னுரைச்
சாடரைச் சாட்கை மோடச்
சழக்கரைப் பிழக்கப் பிட்கப்
பேடரைக் காணு கண்வாய்
பேசா(து)அப் பேய்க ளோடே.

பொழிப்புரை: 'படமெடுத்து ஆடுகின்ற பாம்புகள் ஆடா நிற்கப் பொன்னம்பலத்தில் நடனமாடுகின்ற அமிர்தம் போன்றவனே!' என்று துதிக்கின்ற பெருமை பொருந்திய சிவனடியார்களுடைய செம்மையான பாதங்களைத் தலையில் சூடிக் கொள்வதற்குப் பாக்கியமில்லாத (வீண்) உடம்பு எடுத்தவர்களையும், அற்பர்களையும், கோட்பேசித்திரியும் வம்பர்களையும், உறுதியற்ற பொய்ப் பேச்சையுடைய பேடியர் களையும் (எனது)கண்கள் காணமாட்டா;(எனது)வாயும் அந் தப் பேய்த் தன்மையுடையவர்களோடு பேசாது என்றவாறு.

விளக்கம்: ஆடு அரவு-ஆடுகின்ற நல்ல பாம்பு. தன்னை அடைந்தார்க்கு இனிமைச் சுவை பயந்து நிற்றலின் இறைவனை, 'அமிர்தே' என்றார். சேடு - பெருமை. சேடர் - சிவனடியார்கள். திரு இலா - பாக்கியமில்லாத, பேறு பெற்றிராத. உரு-வெற்றுடம்பு; வீண் உடம்பு. சாடர்-சாடை பேசுபவர்; அற்பர். சாட்கை-கோட்சொல்; நிந்தனை. சழக்கர்-வம்பர். பிழக்கு-பொய். பிட்கல்-பேசுதல். பேடர்-ஆண்மையற்றவர், பேடியர்.

ஆடரவு: வினைத்தொகை. அமிர்தே: விளி. சேவடி: பண்புத் தொகை.

6

உருக்கிஎன் உள்ளத் துள்ளே
ஊறலந் தேறல் மாறாத்
திருக்குறிப்(பு) அருளும் தில்லைச்
செல்வன்பாற் செல்லும் செல்வில்
அருக்கரை அள்ளல் வாய
கள்ளரை அவியாப் பாவப்
பெருக்கரைக் காணா கண்வாய்
பேசா(து)அப் பேய்க ளோடே.

பொழிப்புரை: என் (உள்ளத்தை) உருகச் செய்து (அவ்) உள்ளத்தினுள்ளே ஊறி வருகின்ற தேன் போன்ற பேரின்ப உணர்ச்சி நீங்காது இருக்கின்ற திருவருட் குறிப்பினை அருளுகின்ற தில்லைப்பதியின்கண் எழுந்தருளிய செல்வனாகிய கூத்தப்பெருமானிடம் சென்றடையும் மனப்போக்கு இல்லாத குறைந்த அறிவினையுடையவர்களையும், நரகத்தில் அழுந்துதற்குரிய திருடர்களையும், நீங்காத பாவங்களைப் பெருகச் செய்பவர்களையும் (எனது) கண்கள் காண மாட்டா; (எனது) வாய் அந்தப் பேய்த் தன்மையுடையவர்களோடு பேசாது என்றவாறு.

விளக்கம்: ஊறல்-சுரத்தல். தேறல்-தேன். செல்வு இல்-(மனப்) போக்கு இல்லாத. அருக்கர்-சுருங்கிய அறிவினர்; அருகிய மனமுடையவருமாம். அள்ளல்-நரகம். பெருக்கர்-பெருகச் செய்பவர். புண்ணியம் செய்யப்பெருது பாவப் பெருக்கமுடையவர்கள் நரகத்தில் அழுந்துவர் என்பது தோன்ற, 'அள்ளல் வாய கள்ளரை' என்ருர்.

அவியா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். செல்வன் பால், பால்: ஏழனுருபு. ஊறலம், அம் : அசை. 7

செக்கர்ஒத்(து) இரவி நூரு
யிரத்திரள் ஒப்பாம் தில்லைச்
சொக்கர்அம் பலவர் என்னும்
சுருதியைக் கருத மாட்டா
எக்கரைக் குண்ட மிண்ட
எத்தரைப் புத்த ராதிப்
பொக்கரைக் காணு கண்வாய்
பேசா(து)அப் பேய்க ளோடே.

பொழிப்புரை: செவ்வானம் போன்று நூருயிரம் சூரியர்கள் திரண்டதற்கு ஒப்பாகிய (ஒளி பொருந்திய) தில்லைப் பதியின்கண் எழுந்தருளிய அழகராகிய பொன்னம்பலவர் என்று சொல்லுகின்ற வேத வாக்கை நினைத்துப் பார்க்காத இறுமாப்புடையவர்களையும், கீழோர்களையும், கர்வங்கொண்ட வஞ்சகர்களையும், புத்தர் சமணர் முதலிய பொய்யர்களையும் (எனது) கண்கள் காணமாட்டா; (எனது) வாயும் அந்தப் பேய்த்தன்மையுடையவர்களோடு பேசாது என்றவாறு.

விளக்கம்: செக்கர்-சிவப்பு; செவ்வானம். இரவி-சூரியன். நூருயிரம் (இலட்சம்) சூரியர் போன்ற ஒளியையுடைய

சொக்கர். சொக்கர்-அழகர். சுருதி-வேதம். எக்கர்-இறுமாப்புடையவர். குண்டர்-கீழோர். எத்தர் - வஞ்சகர். புத்தராதி என்றது புறச் சமயவாதிகளை. பொக்கர்-பொய்யர்.

கருத மாட்டா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். குண்டர்+மிண்ட=குண்டமிண்ட. 8

எச்சனைத் தலையைக் கொண்டு
செண்டடித்(து) இடபம் ஏறி
அச்சங்கொண்(டு) அமரர் ஓட
நின்றஅம் பலவற்(கு) அல்லாக்
கச்சரைக் கல்லாப் பொல்லாக்
கயவரைப் பசுநூல் கற்கும்
பிச்சரைக் காணு கண்வாய்
பேசா(து)அப் பேய்க ளோடே.

பொழிப்புரை: எச்சனது தலையை (அரிந்து எடுத்துக்) கொண்டு (அதனைப்) பந்தாக அடித்து, (தக்கன் வேள்வியை அழித்த போது) தேவர்கள் பயந்து ஓடும்படி செய்து இடபவாகனத்தின் மேல் எழுந்தருளி நின்ற பொன்னம்பலத்தில் ஆடும் பெருமானிடத்து (அன்பர்) அல்லாத வெறுக்கத்தக்கவர்களையும், (ஞான சாஸ்திரங்களைக்) கற்காத தீக்குணம் பொருந்திய கீழ்மக்களையும், லௌகிக நூல்களைக் கற்கும் பித்தர்களையும் (எனது) கண்கள் காணமாட்டா; (எனது) வாயும் அப்பேய்த் தன்மையுடையவர்களோடு பேசாது என்றவாறு.

விளக்கம்: செண்டு - பந்து. கச்சல்-வெறுப்பு. பசுநூல்-இறைவனைப்பற்றி அறிவிக்காத உலகச் செய்திகளைப்பற்றி அறிவிக்கும் நூல்; லௌகிக நூல். அவ்வெற்று நூல் கற்பவரைப், 'பிச்சர்' என்றார். பிச்சர்-பித்தர்.

எச்சணை (- எச்சனது): உருபு மயக்கம். பிச்சர்: பித்தர் என்பதன் போலி. அல்லா, கல்லா, பொல்லா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள். 9

விண்ணவர் மகுட கோடி
மிடைந்தொளிர் மணிகள் வீசும்
அண்ணல்அம் பலவன் கொற்ற
அரசனுக்(கு) ஆசை இல்லாத்
தெண்ணரைத் தெருளா உள்ளத்(து)
இருளரைத் திட்டை முட்டைப்
பெண்ணரைக் காணு கண்வாய்
பேசா(து)அப் பேய்க ளோடே.

பொழிப்புரை : (சிவதரிசனத்திற்கு வரும்) தேவர்களின் கோடி கிரீடங்கள் (ஒன்றேடொன்று) நெருங்கிப் பிரகாசிக்கின்ற நவரத்தின மணிகள் (இடைவிடாது ஒளியை) வீசுகின்ற பெருமை பொருந்திய பொன்னம்பலத்தில் எழுந்தருளிய வெற்றி வேந்தனாகிய கூத்தப்பெருமானிடத்து அன்பு இல்லாத அறிவிலிகளையும், தெளிவடையாத மனத்தினையுடைய அஞ்ஞானிகளையும், வம்புச் சொற்கள் பேசும் பெண் தன்மையுடையவர்களையும் (எனது) கண்கள் காணமாட்டா; (எனது) வாயும் அப்பேய்த்தன்மை யுடையவர்களோடு பேசாது என்றவாறு.

விளக்கம்: மகுடகோடி என்றது அளவிறந்த எண்ணிக்கையினைக் குறிப்பதாகும். அண்ணல்-பெருமை. ஆசை-மிகுந்த பற்று; பக்தி. தெண்ணர்-அறிவில்லாதவர். இருள்-அஞ்ஞானம். திட்டை முட்டை - இவை வசை மொழிகள்: அன்றியும் வம்பரைக் குறித்தலுமாம். பெண்ணர் - பெண்மையுடையவர்: "ஆணலா தவரைக் கண்டால் அம்ம! நாம் அஞ்சு மாறே" என்பது திருவாசகம்.

அரசனுக்கு-(அரசனிடத்து): உருபு மயக்கம். தெருளா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். 10

சிறப்புடை யடியார் தில்லைச்
செம்பொன்அம் பலவற்(கு) ஆளாம்
உறைப்புடை யடியார் கீழ்க்கீழ்
உறைப்பர்சே வடிநீ(று) ஆடார்
இறப்பொடு பிறப்பி னுக்கே
இனியராய் மீண்டும் மீண்டும்
பிறப்பரைக் காணு கண்வாய்
பேசா(து)அப் பேய்க ளோடே.

பொழிப்புரை: மேன்மையினையுடைய அடியார்கள் வாழ்கின்ற தில்லைப்பதியின்கண் (உள்ள), செம்பொன்னால் ஆகிய சிற்சபையிலே ஆடுகின்ற பெருமானிடத்து, அடிமை பூண்டு ஒழுகும் மன வுறுதியினைக் கொண்ட அடியவருக்கு அடியவராய் ஒழுகும் மனவுறுதியினைக் கொண்டு, (சிவபெருமான்) திருவடி என்று சொல்லப்படும் (திருவருட்பேற்றிற்கு அறிகுறியாகிய) திருவெண்ணீற்றை உடல் முழுதும் அணியாதவர்களையும், இறப்பிற்கும் பிறப்பிற்குமே விருப்பமுடையவர்களாய் மீண்டும் மீண்டும் (உலகில் வந்து) பிறக்கின்ற கீழோர்களையும் (எனது) கண்கள் காண மாட்டா; (எனது) வாயும் அப்பேய்த்தன்மை யுடையவர்களோடு பேசாது என்றவாறு.

விளக்கம்: உறைப்பு-மனவுறுதி. நீறு ஆடார்-விபூதியை அணியாதவர். மீண்டும் மீண்டும்-மென்மேலும். காணு:எதிர்மறை வினைமுற்று. ஆடார்: வினையாலணையும் பெயர். 11

திருச்சிற்றம்பலம்

திருமாளிகைத் தேவர் அருளிய திருவிசைப்பா தெளிவுரை முற்றிற்று.

உ

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை

2. சேந்தனார்

அருளிய

திருவிசைப்பா

[தெளிவுரை]

1. திருவீழிமிழலை

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

ஏகநா யகனை இமையவர்க்(கு) அரசை
என்னுயிர்க்(கு) அமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற்(கு) அருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

திருவீழி மிழலை: சோழநாட்டுக் காவிரிக்குத் தென்கரையில் உள்ள சிவத்தலங்களுள்61-ஆவது தலம் திருவீழிமிழலை ஆகும். மிழலை-இது ஊரின் பெயர். வீழி-இது தலத்திற்குரிய கொடியின் பெயர். எனவே, கொடியின் பெயரால் 'வீழிமிழலை' என வழங்கப்பெறுகின்றது. திரு-அடை மொழி.

இத்தலம் பூந்தோட்டம் இரயில்வே நிலையத்திற்கு மேற்கில் ஒரு மைல் தூரத்தில் இருக்கும் திலதைப்பதிக்கு மேற்கே நான்கு மைல் தூரத்தில் உள்ளது.

இங்குத் திருமணக் கோலத்தோடு எப்பொழுதும் எழுந்தருளிய மணவாளப் பெருமான் திருவடியில் திருமால் சக்கரம் பெறும்பொருட்டு நாடோறும் ஆயிரம் தாமரைப் பூவைக்கொண்டு வழிபடும் போது ஒருநாள் ஒரு மலர் குறைய, அவர் தமது கண்ணை இடந்து அர்ச்சித்துச் சக்கரம் பெற்ருர் என்பது வரலாறு. இங்கு இறைவன் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலுக்கு (விமானத்திற்கு) 'விண்ணிழி விமானம்' என்று பெயர். இவ் விமானம் திருமால் விண்ணுலகத்திலிருந்து கொண்டு வந்து இறக்கியதாகும். தலத்துக்கொடி-வீழி. தீர்த்தம்-விஷ்ணு தீர்த்தம்.

இறைவனின் பெயர் – நேத்திரார்ப்பணேசுவரர், வீழியழகர்.
இறைவியின் பெயர் – சுந்தரகுசாம்பிகை.

பொழிப்புரை: ஒப்பற்ற ஒரே தலைவனுயிருப்பவனே, தேவர்களுக்கு அரசனுகத் திகழ்பவனே, எனது உயிர்க்கு அமிர்தம் போல இனியவனுயிருப்பவனே, இணையில்லாத சிவானந்தமாகிய இன்பத்தை ஊட்டும் தலைவனே, மேகம் போன்ற நிறத்தினனுன திருமாலுக்கு (ச்சக்கரம் அளித்து) அருள் செய்து (அத்திருமாலையே) பொன்னுலாகிய நீண்ட சிவிகையாகக் கொண்டு ஏறிச் செலுத்திய மேகம்போலும் கைம்மாறு கருதாத தலைவனுகிய சிவபெருமானே, மேன்மை மிகுந்த திருவீழிமிழலையில் தேவலோகத்தினின்றும் கீழே இறங்கி வந்த செழுமையான கோயிலிலே எழுந்தருளிய சிவயோகங்களுக்குத் தலைவனுயிருப்பவனே அல்லாமல் வேருெரு பொருளும் (உலகத்தில்) உள்ளதென்று யான் அறிந்திலேன் என்றவாறு.

விளக்கம்: ஏகநாயகன் - ஒப்பற்ற மேலான தலைவன்; சிவபெருமான். இவன் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தனி முதல்வன் ஆவன். போக நாயகன்-ஆன்மாக்களுக்குப் புவனபோகங்களை ஊட்டும் தலைவனுமாம். சிவிகை-பல்லக்கு. இங்கு இடபத்தையே 'சிவிகை'என்ருர்: 'மால் விடை'. மேகநாயகன்-இங்குச் சிவபெருமான். விண் இழி செழும் கோயில்-விண்ணுலகத்தினின்றும் பூமியில் வந்து இறங்கிய அழகிய விமானக் கோயில். யோகநாயகன்-சனகாதி முனிவர்களுக்குச் சிவயோகாதிகளை உபதேசித்த தலைவராகிய தட்சிணுமூர்த்தியுமாம்.

என்னுயிர்: வேற்றுமைத் தொகை. உணர்கிலேன்: தன்மையொருமை வினைமுற்று. யான்: தன்மையொருமைப் பெயர். 1

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்(டு) உள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

பொழிப்புரை: (நல்லறிவு தரக்கூடிய நூல்களைக்) கற்றவராகிய மெய்ஞ்ஞானிகள் அனுபவிக்கும்படியான (பேரின்ப உணர்வாகிய) கற்பக மரத்தின் கனி போன்று விரும்பியவற்றைத் தருபவனை, கரையில்லாத கருணை என்னும் பெருமை பொருந்திய கடல்போன்றவனை, அஞ்ஞானிகள் அறியாத மாணிக்க மலை போன்றவனை,(அன்பால்) நினைப்பவருடைய மனத்தின்கண் மாணிக்கச் சுடர்போன்று ஒளி

வீசுபவனே, பகைவர்களாகிய திரிபுராதிகளின் முப்புரங்களை அழித்த எங்கள் சிவபெருமானை, திருவீழிமிழலையின் கண் மேன்மையுற அமர்ந்தருளிய தலைவனாகிய இறைவனை எனது மனம் இன்பம் அடையுமாறு (பலமுறை) தரிசித்து எனது கண்களும் இன்பம் அடைந்தன என்றவாறு.

விளக்கம்: "கற்பகக்கனி": "கற்றவர்கள் உண்ணுங் கனியே போற்றி" என்பதும், "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்பதும் அப்பர் தேவாரம். மற்றவர்-ஞானிகள் அல்லாத மற்றையவர்; அஞ்ஞானிகள். செற்றவர்-துன்பஞ் செய்தவர்; பகைவர். உள்ளங்குளிர்தல்-மனம் மகிழ்தல். கொற்றம் - வெற்றி. கொற்றவன் - வெற்றியுடைய தலைவன். இறைவன்.

கரையிலா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். கண்-பால்பகா அஃறிணைப்பெயர். 2

மண்டலத் தொளியை விலக்கியான் நுகர்ந்த
 மருந்தைஎன் மாறிலா மணியைப்
பண்டலர் அயன்மாற்(கு) அரிதுமாய் அடியார்க்(கு)
 எளியதோர் பவளமால் வரையை
விண்டலர் மலர்வாய் வேரிவார் பொழில்சூழ்
 திருவீழி மிழலையூ ராளும்
கொண்டலங் கண்டத்(து) எம்குரு மணியைக்
 குறுகவல் வினைகுறு காவே.

பொழிப்புரை: (இவ்)வுலகப் பற்றை நீக்கி, நான் அனுபவித்த தேவாமிர்தம் போன்றவனை, எனது மாறுபாடு இல்லாத மாணிக்கம் போன்றவனை, முற்காலத்தில் தாமரை மலரின்மேல் இருக்கும் பிரமனுக்கும் திருமாலுக்கும் (காண்பதற்கு) அரியவனாய் மெய்யடியார்களுக்கு எளியவனாய்

ஒப்பற்ற பெரிய பவளமலை போன்றவனை, இதழ்கள்விரிந்து மலர்ந்த பூக்களினின்று தேன் ஒழுகுகின்ற சோலைகள் சூழ்ந்த திருவீழிமிழலை என்னும் தலத்தில் எழுந்தருளி ஆட்சிபுரியும் மேகம்போன்று கருத்து அழகிய கண்டத்தை யுடைய எமது குருமூர்த்தியாகிய வயிர மணியை (அடைக் கலமாக) அடைந்தால் வலிய வினைகள் வந்து அடைய மாட்டா என்றவாறு.

விளக்கம் : மண்டலத்து ஒளி-உலகப்பற்று; அது மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என மூன்றும். ஒளி-புகழ், பற்று. மருந்து-அமிர்தம். மால்-பெரிய. வரை-மலை. பண்டு-முற்காலம். வேரி - தேன்; வாசனையுமாம். விண்டு அலர் - இதழ்கள் விரிந்து. வார்தல் - ஒழுகுதல். கொண்டல்-கருமேகம். கண்டம்-கழுத்து. குருமணி-மிகச் சிறந்த ஆசாரியன். வல்வினை-கொடிய தீவினை. கொண்டல் அம் கண்டம்-அழகிய நீலகண்டம்.

மருந்து, வரை: ஆகுபெயர்கள். மால் + கு = மாற்கு. ஏ: அசை. 3

தன்னடி நிழற்கீழ் என்னையும் தகைத்த
சசிகுலா மவுலியைத் தானே
என்னிடைக் கமலம் மூன்றினுள் தோன்றி
எழுஞ்செழுஞ் சுடரினை அருள்சேர்
மின்னெடுங் கடலுள் வெள்ளத்தை வீழி
மிழிலையுள் விளங்குவெண் பளிங்கின்
பொன்னடிக்(கு) அடிமை புக்கினிப் போக
விடுவனோ? பூண்டுகொண் டேனே.

பொழிப்புரை : தன் திருவடி நீழலின் கீழே என்னையும் தடுத்தாட்கொண்ட சந்திரன் விளங்குகின்ற திருமுடியினை

யுடையவனை, தானுகவே என்னிடத்துள்ள மூன்று தாமரைகளினுள்ளும் உதித்தெழும் செழுமையான சூரியனை, ஒளிபொருந்திய அருட்பெருங் கடலினுள்ளே நீர்ப்பெருக்காயிருப்பவனை, திருவீழிமிழலை என்னும் தலத்துள் எழுந்தருளிய வெண்மையான படிகம் போன்ற இறைவனது அழகிய திருவடிகளுக்குத் தொண்டு பூண்டு, இனி (நான் அத்திருவடிகளை என்னை விட்டு) நீங்கும்படி விடுவனோ? (விடமாட்டேன்); (அவற்றை என் சிரமீது) அணிந்து கொண்டேன் என்றவாறு.

விளக்கம்: தகைத்தல் - தடுத்தாட் கொள்ளல். சசி - சந்திரன். மவுலி - திருமுடி. கமலம் மூன்று - அனுகதம், விசுத்தி, ஆக்ஞை ஆகிய மூன்று தாமரைகள். அனுகதம் - இருதயத்தில் முக்கோண வடிவுடன் பன்னிரண்டு இதழ்களைக் கொண்டிருக்கும் கமலம். விசுத்தி - கண்டத்தில் அறுகோண வடிவுடன் பதினுறு இதழ்களைக் கொண்டிருக்கும் கமலம். ஆக்ஞை புருவ மத்தியில் வட்டவடிவுடன் மூன்று இதழ்களைக் கொண்டிருக்கும் கமலம். சுடர்-சூரியன். மின்-ஒளி. பளிங்கு-வெண்மையான படிகம்.

மௌலி, சுடர், வெள்ளம், பளிங்கு: ஆகுபெயர்கள்; விடுவனோ, ஓ: எதிர்மறை. 4

இத்தெய்வ நெறிநன் றென்(று)இருள் மாயப்
பிறப்பறு இந்திர சாலப்
பொய்த்தெய்வ நெறிநான் புகாவகை புரிந்த
புராணசிந் தாமணி வைத்த
மெய்த்தெய்வ நெறிநான் மறையவர் வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
அத்தெய்வ நெறியிற் சிவமலா(து) அவமும்
அறிவரோ அறிவுடை யோரே.

பொழிப்புரை: (முழுமுதற் கடவுளான) சிவபெருமானை அடைதற்கு இந்த வழி நல்வழி என்று எண்ணி, அஞ்ஞானமும் வஞ்சகமும் கூடிய பிறவியை ஒழிக்கும் தகுதி இல்லாத இந்திரசாலம் போன்று அழியும் பொய்யாகிய சிறு தெய்வ வழிபாட்டு நெறியில் நான் செல்லாதபடி அருள் செய்த பழய உயர்ந்த சிந்தாமணி என்ற தேவமணி போன்ற சிவபெருமான், (ஏற்படுத்தி) வைத்த உண்மையான சிவமார்க்கத்தை அடையும் வழியில் நின்ற நான்கு வேதங்களில் வல்ல அந்தணர் (வாழும்) திருவீழிமிழலை என்னும் தலத்தில் விண்ணினின்று இறங்கி வந்த செழுமையான விமானக் கோயிலின் கண் (எழுந்தருளிய) சிவபெருமானை அல்லாது, (அச்சிவநெறியில் நிற்கும்) அறிவுடையோர் பயனற்ற ஒரு பொருளையும் அறிந்து கொள்வார்களோ? (அறியார்கள்) என்றவாறு.

விளக்கம்: தெய்வ நெறி - இறைவனை அடைதற்குரிய மார்க்கம். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இவை ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டு இறுதியாகிய ஞானத்தால் வீடடைதல் ஆகும்: "விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும், அரும்புமலர் காய் கனிபோல் அன்றோ பராபரமே" என்பது தாயுமானவர் பாடல். இருள் - அஞ்ஞானம்; அறியாமை. மாயம் - வஞ்சனை. இந்திரசாலம்-இல்லாத ஒரு பொருளை இருப்பதாகக் காட்டுவதும், கண்ட பொருளைக் காணாதவாறு செய்வதுமான ஒரு வித்தை; கண்கட்டு வித்தை. பொய்த் தெய்வ நெறி-சைவமல்லாத பிற மதத்தின் மார்க்கம். புராணம் - பழமை. சிந்தாமணி - விரும்பிய வற்றைக் கொடுக்கும் தெய்வ இரத்தினம். இது தேவலோகத்திலுள்ள இந்திரன் செல்வங்களில் ஒன்று. அவம் - வீண், சிவம் அ(ல்)லாது அவமும்;

"அவமே பிறந்த அருவினையேன் உனக்(கு) அன்பருள்ளாம் சிவமே பெறுந்திரு எய்திற்றிலேன்" என்பது திருவாசகம்.

அரு, புகா: ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள். அறிவரோ, ஓ: எதிர்மறை. 5

அக்கனு அனைய செல்வமே சிந்தித்(து)
ஐவரோ(டு) அழுந்தியான் அவமே
புக்கிடா வண்ணம் காத்தெனை ஆண்ட
புனிதனை வனிதைபா கனைஎண்
திக்கெலாங் குலவும் புகழ்த்திரு வீழி
மிழலையான் திருவடி நிழற்கீழ்ப்
புக்குநிற் பவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந்(து) அடிமைபூண் டேனே.

பொழிப்புரை: அந்தக் கனவு போன்று (மெய் போலத் தோன்றிப் பின்) மறையும் செல்வத்தையே (பெறும் வகையினை) ஆராய்ந்து, அக்கனவு போன்ற ஐம்புலன்களின் நுகர்ச்சியில் தோய்ந்து, யான் பயனின்றிப் (பிறவியில்) புகாதபடி தடுத்து என்னை ஆட்கொண்டருளிய பரிசுத்தமானவனை, உமாதேவியாரை (இடப்) பாகத்தில் பெற்றவனை, எட்டுத் திசைகளிலும் விளங்குகின்ற புகழையுடைய திருவீழிமிழலை என்னும் தலத்தில் எழுந்தருளிய சிவபெருமானின் திருவடி நிழலின்கீழே புகுந்து நிற்பவராகிய சிவனடியார்களின் அழகிய திருவடித் தாமரையில் பொருந்திய துகளை அணிந்து (நான்) அடிமைத் தொழிலை மேற்கொண்டேன் என்றவாறு.

விளக்கம்: உலக இன்பங்களை வெறுத்து இறை பணி புரியும் சிவனடியார்களுக்குத் தொண்டு செய்யும் தொழிலை நான் கைக்கொண்டேன் என்பதாம். கனு-கனவு. ஐவர்-ஐம்புலன்-ஐந்து பொறிகளுக்குரிய உணர்ச்சிகள்: அவை,

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன. "அக்கணு அணைய" என்பதை 'ஐவரோடு' என்பதனேடும் கூட்டுக. வனிதை - பெண்; இங்கு உமாதேவியார். பொன் - அழகு. அடிக்கமலம் - பாத தாமரை; திருவடி. பொடி - துகள்.

அக்கணு, அ: உலகறி சுட்டு. செல்வமே, ஏ: தேற்றம். நிற்பவர் தம், தம்: சாரியை. 6

கங்கைநீர் அரிசிற் கரையிரு மருங்கும்
கமழ்பொழில் தழுவிய கழனித்
திங்கள்நேர் தீண்ட நீண்டமா ளிகைசூழ்
மாடநீ டுயர்திரு வீழித்
தங்குசீர்ச் செல்வத் தெய்வத்தான் தோன்றி
நம்பியைத் தன்பெருஞ் சோதி
மங்கையோர் பாகத்(து) என்னரு மருந்தை
வருந்திநான் மறப்பனே? இனியே.

பொழிப்புரை: கங்கா நதியின் தீர்த்தம்போலும் புனிதமான நீரினை யுடைய அரிசிலாற்றங் கரையின் இரண்டு பக்கங்களிலும் மணம் கமழும் சோலைகளை அடுத்துள்ள வயல்கள் பொருந்திய சந்திரனை நேரே தொடுமாறு மிக உயர்ந்த மேல்மாடிகள் நிறைந்த மாளிகைகள் சூழ்ந்த மேன்மை பொருந்திய திருவீழிமிழலை என்னும் தலத்தில் எழுந்தருளிய சிறந்த (சிவஞானச்) செல்வத்தை (அருளும்) இறைவனாகிய தானாகவேதோன்றி நின்ற சிறந்தவனை, தனது பேரொளியாகிய உமாதேவியாரை இடப்பாகத்தில் உடைய எனது அருமையான தேவாமிர்தம் போன்றவனை இனிமேல் நான் மறந்து வருந்துவனே? என்றவாறு.

விளக்கம்: இனி, நான் துன்பமடையினும் திருவீழிமிழலை ஈசனை மறக்க மாட்டேன் என்பதாம். அரிசில் (அரிசொல்)-

இது காவிரியினின்று பிரியும் ஓர் ஆருகும்; அரி (திருமால்) சொல்ல வந்தமையால் அரி சொல் ஆறு என்ருயிற்று என்பது வரலாறு. தான்தோன்றி நம்பி-தானுகவே உண் டான சுயம்புலிங்கம். மருந்து-தேவாமிர்தம். வீழி-வீழி மிழலை. நேர்தீண்ட-சென்று தொட. 'வருந்தி நான் மறப் பனே'– நான்மறந்து வருந்துவனே என மாற்றுக.

மறப்பனே, ஓ: எதிர்மறை. இனியே, ஏ: அசை. திங்கள் நேர்தீண்ட நீண்ட மாளிகை: உயர்வு நவிற்சியணி. 7

ஆயிரங் கமலம் ஞாயி(று)ஆ யிரம்முக்
 கண்முக கரசர ணத்தோன்
பாயிருங் கங்கை பனிநிலாக் கரந்த
 படர்சடை மின்னுபொன் முடியோன்
வேயிருந் தோளி உமைமண வாளன்
 விரும்பிய மிழலைசூழ் பொழிலைப்
போயிருந் தேயும் போற்றுவார் கழல்கள்
 போற்றுவார் புரந்தரா திகளே.

பொழிப்புரை: முக்கண்கள் ஆயிரம் சூரியர்கள் ஒன்று கூடினுற்போல் ஒளியுள்ளவனும், திருமுகம் திருக்கை திருவடி ஆகிய இவை ஆயிரம் தாமரை மலர் போன்று அழகாய் உள்ளவனும், பாய்ந்து ஓடுகின்ற பெரிய கங்கா நதியையும் குளிர்ச்சி பொருந்திய சந்திரனையும் மறைத்து வைத்துள்ள பரவிய சடை ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற அழகிய திருமுடியினை உடையவனும், மூங்கிலைப்போலும் (திரண்ட) பெரிய தோள்களையுடைய உமாதேவியின் மண வாளனும் ஆகிய சிவபெருமான் (தமது இருக்கையாக) விரும்பிய திருவீழிமிழலை என்ற தலத்தைச் சூழ்ந்த சோலையின்கண் சென்று தங்கியிருந்தேனும் (இறைவன்

திருவடிகளைப் புகழ்ந்து) துதிக்கின்ற அடியவர்களுடைய பாதங்களை இந்திரன் முதலான தேவர்கள் போற்றிப் புகழ் வார்கள் என்றவாறு.

விளக்கம் : முக்கண் - வலக்கண் இடக்கண் நெற்றிக் கண் என மூன்று கண்கள். ஞாயிறு-சூரியன். பாய் இரும்-பாய்ந்து ஓடுகின்ற பெரிய. பனி-குளிர்ச்சி. கரந்த-மறைத்து வைத்துள்ள. படர்சடை-பரவியசடை. வேய்-மூங்கில். புரந் தரன் ஆதி-இந்திரன் முதலிய தேவர்கள். இங்கு மூர்த்தி, தலம்,அடியார் இம் மூன்றின் பெருமை விளங்குதல் காண்க.

பொழிலை (- பொழிலின் கண்) : உருபு மயக்கம். கழல்கள்: ஆகுபெயர். புரந்தரன் + ஆதி = புரந்தராதி. 8

எண்ணில்பல் கோடி சேவடி; முடிகள்
எண்ணில்பல் கோடி;திண் டோள்கள்
எண்ணில்பல் கோடி; திருவுரு நாமம்
ஏர்கொள்முக் கண்முகம் இயல்பும்
எண்ணில்பல் கோடி; எல்லைக்(கு)அப் பாலாய்
நின்(று)ஐஞ்னூற்(று) அந்தணர் ஏத்தும்
எண்ணில்பல் கோடி குணத்தர்ஏர் வீழி
இவர்நம்மை ஆளுடை யாரே.

பொழிப்புரை: எண்ணிறந்த பல கோடிக் கணக்கான செம்மையாகிய பாதங்களையும், எண்ணிறந்த பல கோடிக் கணக்கான திருமுடிகளையும், எண்ணிறந்த பலகோடிக் கணக்கான வலிய தோள்களையும், எண்ணிறந்த பலகோடிக் கணக்கான திருவுருவங்களையும், திருநாமங்களையும், அழ கினைக் கொண்ட முக்கண்கள் பொருந்திய திருமுகங்களை யும், தன்மைகளையும் (கொண்டு விளங்குபவரும்) அளவு கடந்து நின்று ஐந்நூறு அந்தணர்கள் துதித்து வழிபடு கின்ற எண்ணிறந்த பலகோடிக் கணக்கான குணங்களை

யுடையவரும் (ஆகிய) அழகிய திருவீழிமிழலையில் எழுந்தருளிய இச் சிவபெருமானே நம்மை ஆட்கொள்ளும் கடவுளாவர் என்றவாறு.

விளக்கம் : இறைவன், கணக்கிட்டுரைத்தற்கு இயலாத அடி, முடி, தோள், முகம் முதலிய திருவுறுப்புக்களோடு கலந்த திருமேனி யுடையவராகவும் இருப்பர் என்பதாம். இவ்விதமாக இருக்கும் மூர்த்தியை மகா சதாசிவ மூர்த்தி எனச் சிவாகமங்கள் கூறும். நாமம்-பெயர். ஏர்-அழகு. ''தில்லை மூவாயிரம்; திருவீழிமிழலை ஐந்நூறு''என்ற பழமொழிப்படி தில்லையில் மூவாயிரம் அந்தணர் இருந்தனர் போன்று திருவீழிமிழலையில் ஐஞ்னூறு அந்தணர் இருந்தனர் என்பர். மூவாயிரம் அந்தணரைத் தீட்சிதர் என்றும், ஐஞ்னூற்று அந்தணரை வீழிப்பிராமணர் என்றும் கூறுவர்.

ஏத்தும்: பெயரெச்சம். இவர்: சுட்டுப்பெயர். 9

தக்கன்வெங் கதிரோன் சலந்தரன் பிரமன்
சந்திரன் இந்திரன் எச்சன்
மிக்கநெஞ்(சு) அரக்கன் புரம்கரி கருடன்
மறலிவேள் இவர்மிகை செகுத்தோன்
திக்கெலாம் நிறைந்த புகழ்த்திரு வீழி
மிழலையான் திருவடி நிழற்கீழ்ப்
புக்கிருந் தவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந்(து) அடிமைபூண் டேனே.

பொழிப்புரை : தட்சன், வெம்மையான கிரணங்களை யுடைய சூரியன், சலந்தராசுரன், பிரமன், சந்திரன், இந்திரன், யாகத் தலைவனுன எச்சன், வலிமைமிகுந்த மனமுரமுடைய இராவணன், திரிபுரம், யானை, கருடன், யமன், மன்மதன் ஆகிய இவர்களுடைய வரம்பு கடந்த அகந்தையை அழித்தவனும், திசைகள் முழுமையும் நிரம்பிய புகழை

யுடைய திருவீழிமிழலையில் எழுந்தருளியவனுமான சிவ பெருமானின் திருவடி நீழலின் கீழ்ப் புகுந்து இருக்கின்ற மெய்யடியார்களுடைய அழகிய பாத தாமரையில் பொருந்திய துகளை (நான்) அணிந்து (அவர்களுக்குத்) தொண்டு புரியும் பணியை மேற்கொண்டேன் என்றவாறு.

விளக்கம்: தக்கனது வேள்வியில் தக்கன், சூரியன், பிரமன், சந்திரன், இந்திரன், எச்சன் ஆகிய இவர்கள் வீரபத்திரரால் தண்டனை பெற்றவர்கள். சலந்தராசுரன் இறைவனின் சக்கரப் படையால் இரண்டாக அறுபட்டவன். இராவணன் அகந்தையால் கயிலைக்கீழ் அகப்பட்டு வருந்தியவன். இறைவன் முப்புரத்தை நகைத்தும், மன்மதனை விழித்தும் அழித்தார்; தாருகவன முனிவர் விடுத்த யானையைக் கொன்றார்; யமனை உதைத்தார். சிவ நிந்தை செய்த கருடனை நந்தி தேவர் தண்டித்தார். பொன்னடிக் கமலப்பொடி-இதனை வடமொழியில் 'ஸ்ரீ பாத தூளி' என்பர். அடிமை-தொண்டு.

செகுத்தோன்: வினையாலணையும் பெயர். இருந்தவர் தம், தம்: சாரியை. ஏ: அசை. 10

உளங்கொள மதுரக் கதிர்விரித்(து) உயிர்மேல்
அருள்சொரி தரும்உமா பதியை
வளங்கிளர் நதியும் மதியமும் சூடி
மழவிடை மேல்வரு வானை
விளங்கொளி வீழி மிழலைவேந் தேயென்(று)
ஆந்தனைச் சேந்தன்தா தையையான்
களங்கொள அழைத்தால் பிழைக்குமோ அடியேன்
கைக்கொண்ட கனககற் பகமே.

பொழிப்புரை: இன்பமயமான (ஞான)ஒளியை மனத்தில் பொருந்துமாறு பரப்பி, உயிர்கள் மேல் அருள் மழையைப்

பொழிகின்ற உமாதேவியாரது கணவனை, வளம் மிகுந்த கங்கா நதியையும் (பிறைச்) சந்திரனையும் (சிரசில்) தரித்து இளமையான இடப வாகனத்தின்மேல் எழுந்தருளி வருகின்ற சிவபெருமானை, முருகக் கடவுளின் தந்தையை, 'விளங்குகின்ற புகழினையுடைய திருவீழிமிழலைக்கு அரசே!' என்று (என்னால்) முடிந்த வரையில் நான் கண்டத்தினால் கூடிய மட்டும் கூவி அழைத்தால், அடியேன் கைக்கொண்ட பொன்னிறம் பொருந்திய கற்பகத் தருவைப் போன்ற அவ்விசன் (என்னிடம் வரத்) தவறுவானோ? (தவற மாட்டான்) என்றவாறு.

விளக்கம்: மதுரம் - இன்பமயம், கதிர் - ஞானவொளி. அருள்-அருள்மழை. உமாபதி-சிவபெருமான். மழ-இளமை. விடை-இடபம். ஒளி-புகழ், சேந்தன்-சிவந்தவன்; முருகன். களம் - கண்டம்; குரல். கனகம் - பொன்.

வேந்தே: விளி. மழ: உரிச்சொல். பிழைக்குமோ, ஓ: எதிர்மறை.

11

பாடலங் காரப் பரிசில்கா(சு) அருளிப்
பழுத்தசெந் தமிழ்மலர் சூடி
நீடலங் காரத்(து) எம்பெரு மக்கள்
நெஞ்சினுள் நிறைந்துநின் றானை
வேடலங் காரக் கோலத்தின் அமுதைத்
திருவீழி மிழலையூ ராளும்
கேடிலங் கீர்த்திக் கனககற் பகத்தைக்
கெழுமுதற்(கு) எவ்விடத் தேனே.

பொழிப்புரை: பாடுகின்ற அலங்காரத்திற்கு வெகுமதியாக (த் திருஞானசம்பந்தருக்கும் திருநாவுக்கரசருக்கும் நாடோறும்) பொற்காசுகளை அருளிச்செய்து, (திருவருள்) கனிந்த செந்தமிழ்ப் பாமாலைகளை நீடித்து என்றும் அலங்காரமாயிருக்கும்படி சூட்டிக்கொண்டு, எமது பெருமைமிக்க

(அவ்விரு) அடியார்களின் மனத்திலே நிறைந்து நின்ற சிவபெருமானை, அழகிய வேடுவக்கோலம் பூண்ட அமுதம் போன்றவனை, திருவீழிமிழலை என்னும் ஊரை ஆளுகின்ற குற்றமற்ற நல்ல புகழையுடைய பொன்மயமான கற்பகத் தருவைப் போன்றவனை (நான்) அடைதற்கு எவ்விதத் தகுதியுடையேன்? என்றவாறு.

விளக்கம்: பாடு - படுகின்ற. பரிசில் - வெகுமதி. காசு- படிக்காசு (உணவுக்காகக் கொடுக்கப்படும் காசு). திருவீழி மிழலை இறைவர், சைவப்பெருமக்களாகிய அப்பருக்கும் சம்பந்தருக்கும் நாடோறும் படிக்காசு கொடுத்ததன் காரணம் தமிழோடு இசை கேட்கும் இச்சை பற்றியே ஆகும் என்பர்: "திருமிழலை, இருந்து நீர்தமிழோடிசை கேட்கும் இச்சையாற் காசு நித்தல் நல்கினீர்" என்பது சுந்தரர் தேவாரம். சிவபெருமான் சம்பந்தருக்கு வாசியுள்ள (வட்டமுள்ள) காசையும், அப்பருக்கு வாசியில்லாத காசையும் அருளினார். இதன் காரணத்தைச் சேக்கிழார், "திருமா மகனார் ஆதலினால், காசி வாசி யுடன் பெற்றார்; கைத்தொண் டாகும் படிமையினால் வாசி யில்லாக் காசுபடி பெற்று வந்தார் வாகீசர்" என்றார் (பெரிய புராணம்).

பழுத்த-சிறந்த பயனைத்தரவல்ல என்றுமாம். நீடு- நீடித்து. பெருமக்கள்-சைவப் பெருமக்களாகிய திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர். வேடு-வேடர்; இவர் ஒரு சாதி யினர். வேடு அலங்காரக் கோலம் - இஃது இறைவன் அருச்சுனன் பொருட்டு வேடுவர் கோலம் எடுத்ததைக் குறிப்பதாகும். கெழுமுதல்-அடைதல்.

செந்தமிழ்: பண்புத்தொகை. வேடு: ஆகுபெயர். 12

திருச்சிற்றம்பலம்

2. திருவாவடுதுறை*

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

பொய்யாத வேதியர் சாந்தைமெய்ப்
        புகழாளர் ஆயிரம் பூசுரர்
மெய்யே திருப்பணி செய்சீர்
        மிகுகா விரிக்கரை மேய
ஐயா! திருவா வடுதுறை
        அமுதே! என்றுன்னே அழைத்தக்கால்
மையார் தடங்கண் மடந்தைக்(கு)ஒன்(று)
        அருளா(து) ஒழிவது மாதிமையே.

திருவாவடுதுறை : சோழநாட்டுக் காவிரிக்குத் தென் கரையில் உள்ள சிவத்தலங்களுள் 36-ஆவது தலம் திருவாவடுதுறை ஆகும். ஊரின் பெயர், சாத்தனூர். இதன் மருஉப்பெயர் சாந்தை, சாந்தையூர் என்பதாகும். கோயிலின் பெயர், ஆவடுதுறை. திருக்கயிலாயத்தில் உமாதேவியார் சிவபெருமானேடு சொக்கட்டான் ஆடி மகிழ்ந்தமையால் பசு வடிவம் எய்தினுர். உமாதேவியார் அப்பசு வடிவத்துடன் இத்தலத்தில் வந்து இறைவனே வழிபட்டுப் பசு வடிவம் நீங்கப்பெற்ற காரணத்தால் இத்தலம்ஆவடுதுறை எனவழங்கப்பெற்றது. திரு-அடைமொழி.இத்தலம் நரசிங்கன்பேட்டை இரயில்வே நிலயத்திற்குத் தென் கிழக்கே ஒருமைல் தூரத்தில் உள்ளது. இத்தலத்தின் வேறுபெயர்கள்

---

* இத்திருப்பதிகம் தலைவன்பால் அன்புகொண்ட தலைவியின் துயரங்கண்டு செவிலித்தாய் அல்லது நற்ருய் இரங்கிக் கூறுவதாக அமைந்துள்ளது. அன்றியும் இப்பதிகம் அந்தாதித் தொடையால் வருவது. அந்தம்+ஆதி=அந்தாதி. முற்பாட்டின் இறுதியைப் பிற்பாட்டின் முதலாகக் கொண்டு பாடப்படுவது அந்தாதி.

கோமுத்தி, கோகழி, நவகோடி சித்தபுரம் முதலியன. தல விருட்சம் - அரசு. தீர்த்தம் - கோமுத்தி தீர்த்தம், பத்ம தீர்த்தம். நந்தி-தரும நந்தி தேவர்.

இங்கு இறைவன், தருமதேவதையை இடபமாக்கிக் கொண்டார்; அன்றியும் அதனைத் தனது சந்நிதியின் முன்னிடத்திலே அரசமரத்தின் நிழலில் கோயில் கொண்டு இருக்கும்படியும் அருள்புரிந்தார். தேவர்களும் முனிவர்களும் இறைவனிடம் வேண்டிக் கொண்டவாறு அவர் அரச மரநிழலில் அமைந்த அம்பலத்தில் ஆனந்த தாண்டவம் புரிகின்றூர். இவ்விடம் போதியம்பலம் எனப் பெயர் பெறும்.

இறைவனின் பெயர் – மாசிலாமணியீசர், செம்பொற்றியாகர்.
இறைவியின் பெயர் – ஒப்பிலாமுலையம்மை.

பொழிப்புரை: 'உண்மைப்பொருளைக் கூறுகின்ற நான்கு வேதங்களை ஓதும் அந்தணர்கள் வசிக்கும் சாத்தனூரின் கண் அழியாப் புகழ்களைக் கொண்டவர்களான ஆயிரம் அந்தணர்கள் மன உணர்ச்சியோடு கோயிற் கைங்கரியங்களைச் செய்கின்ற (செல்வச்) சிறப்புவாய்ந்த காவிரி(த் தென்) கரையில் வீற்றிருந்தருளும் தலைவனே! திருவாவடுதுறையில் எழுந்தருளிய தேவாமிர்தமே!' என்று (என்மகள்) உன்னைக் கூப்பிட்டால், மை தீட்டப் பெற்ற பெரிய கண்களையுடைய (என்) பெண்ணுக்கு(நீ) ஒரு வார்த்தையும் பேசாமல் இருப்பது அழகோ? (அழகாகாது) என்றவாறு.

விளக்கம் : பொய்யாத - பொய்கூருத, உண்மையினைக் கொண்ட. வேதியர்-வேதம் ஓதுபவர்; பிராமணர். சாந்தை-சாந்தையூர்-சாத்தனூர். பூசுரர்-பூலோகத்தேவர்; அந்தணர். திருப்பணி - கோயிற்கைங்கரியம்; சிவத்தொண்டு. காவிரிக்

கரை - காவிரியின் தென்கரை. ஐயா - அழகனே என்றலுமாம். மை - அஞ்சனம். மடந்தை - மடந்தைப் பருவப் பெண். மாதிமை - அழகு.

ஐயா, அமுதே : விளி. அழைத்தக்கால்: வினையெச்சம். தடங்கண், தட : உரிச்செல். மாதிமையே, ஏ : எதிர்மறை. சாந்தை; சாத்தனூர் என்பதன் மரூஉப் பெயர். 1

மாதி மணங்கம ழும்பொழில்
மணிமாட மாளிகை வீதிசூழ்
சோதி மதிலணி சாந்தைமெய்ச்
சுருதி விதிவழி யோர்தொழும்
ஆதி யமரர் புராணனும்
அணியா வடுதுறை நம்பிநின்ற
நீதி அறிகிலள் பொன்நெடும்
திண்டோள் புணர நினைக்குமே.

பொழிப்புரை : மாமரத்து (மலர்களின்) வாசனை வீசுகின்ற சோலைகளாலும், இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற உப்பரிகைகளைக் கொண்ட மாளிகைகளாலும், வீதிகளாலும் சூழப் பெற்ற ஒளிவீசும் மதில்களையுடைய அழகிய சாத்தனூரில் (வாழும்) உண்மைகளைக் கூறும் வேதங்களின் கட்டளைப்படி ஒழுகும் அந்தணர்கள் வணங்குகின்ற முதல்வனும், தேவர்களுக்கு முன்னோனும், அழகிய திருவாவடுதுறையில் எழுந்தருளிய நம்பியுமான சிவபெருமான் நின்ற நிலையினை (என் மகள்) அறியும் ஆற்றல் இல்லாதவளாகி (அவரது) அழகான உயர்ந்த வலிய தோள்களைத் தழுவ நினையாநின்ருள் என்றவாறு.

விளக்கம் : தலைவி, தலைவன் இருப்பிடம் திருவாவடுதுறை என்பதை அறிந்துகொள்ள முடியாதவளாகி அவரது

தோளைத் தழுவ நினைக்கின்ருள் என்பதாம். மாதி-மாமரம். மாடம் - உப்பரிகை; மேல்மாடி. மாளிகை - சிறந்த வீடு. மெய்ச்சுருதி - வேதம். புராணன் - பழமையோன். நம்பி - சிறந்தோன்; பெரியோன். பொன் - அழகு.

அறிகிலள் : முற்றெச்சம். நினைக்கும் : செய்யும் என்னும் முற்று. 2

நினைக்கும்; நிரந்தர னே!என்னும்;
    நிலாக்கோலச் செஞ்சடைக் கங்கைநீர்
நனைக்கும் நலங்கிளர் கொன்றைமேல்
    நயம்பேசும்; நன்னுதல் நங்கைமீர்!
மனக்கின்ப வெள்ளம் மலைமகள்
    மணவாள நம்பிவண் சாந்தையூர்
தனக்கின்பன் ஆவடு தண்டுறைத்
    தருணேந்து சேகரன் என்னுமே.

பொழிப்புரை : (எனது மகள் பலவாறு) நினைப்பாள்; 'எக்காலத்தும் நிலைத்திருப்பவனே!' என்று சொல்லுவாள்; நிலாவின் அழகினைக் கொண்ட சிவந்த சடையிலுள்ள கங்கை நீரால் நனைக்கப்பெற்ற அழகு மிகுந்த கொன்றை மாலையின் மீது (தனக்குள்ள விருப்பத்தை) இன்பம் படப் பேசுவாள்; நல்ல நெற்றியினை யுடைய பெண்களே (என் மகள்) மனத்திற்கு இன்பப் பெருக்கைத் தருகின்றவனும், உமாதேவியார்க்குக் கணவஞன சிறந்தோனும், வளமை நிறைந்த சாத்தனூர்க்கு இனியவனுமான சிவபெருமானைத் 'திருவாவடுதுறையிலுள்ள இளஞ்சந்திரனைத் தரித்த திருமுடியுடையவன்' என்று சொல்லுவாள் என்றவாறு.

விளக்கம்: நிரந்தரன் - என்றும் உள்ளவன். கோலம்-அழகு. நலம் கிளர்-அழகு மிகுந்த. கொன்றை-கொன்றை

மலர் மாலை. நயம் - இன்பம். மணவாளன் - மணாளன் - கணவன். தருணம்-இளமை. இந்து - சந்திரன். சேகரம்- தலை. 'தருணேந்து சேகரன்' என்ற தொடரை முற்காலத்தில் மக்கள் தங்கட்குப் பெயராக இட்டு வழங்கினர் எனக் கண்டராதித்த சோழன் ஆட்சியில் எழுந்த ஒரு கல் வெட்டுக் கூறுகிறது.

காதல் கொண்ட தலைவி, தலைவன் அணிந்துள்ள கொன்றை மலர்மாலையின் மீது அன்புகொண்டு இன்பப் பேச்சு நிகழ்த்துதல் மரபு.

மனத்துக்கு என்பதில் அத்துச்சாரியை குறைந்து மனக்கு என ஆயிற்று. சாந்தையூர் தனக்கு - சாந்தை யூர்க்கு; தன், அ: சாரியைகள். தருண + இந்து = தருணேந்து; இது வடமொழிப்புணர்ச்சி குணசந்தி. 3

தருணேந்து சேகர னே!எனும்
தடம்பொன்னித் தென்கரைச் சாந்தையூர்ப்
பொருள்நேர்ந்த சிந்தை யவர்தொழப்
புகழ்செல்வம் மல்குபொற் கோயிலுள்
அருள்நேர்ந் தமர்திரு வாவடு
துறையாண்ட ஆண்டகை யம்மானே!
தெருள்நேர்ந்த சித்தம் வலியவா
திலக நுதலி திறத்திலே.

பொழிப்புரை: 'விசாலமான காவிரியாற்றின் தென்கரையிலுள்ள சாத்தனூரில், மெய்ப்பொருளையே பேசுகின்ற மனத்தையுடைய அடியார்கள் வணங்கப்புகழும் செல்வமும் மிக நிரம்பிய அழகிய கோயிலிலே அருளை வழங்கிக் கொண்டு வீற்றிருக்கும் திருவாவடுதுறையை ஆண் டருளிய சிறந்தோனாகிய இறைவனே! இளஞ்சந்திரனைத்

தரித்த திருமுடியுடையவனே!' என்கின்ற, பொட்டு இட்ட நெற்றியினையுடைய (என் மகள்) விஷயத்தில் மட்டும் தெளிந்த அறிவுடன் கூடிய உன்மனம் (இரங்காமல்) வலிதாயிருக்கின்றது; (அதற்கு என்ன காரணம்?) என்ற வாறு.

விளக்கம்: 'அம்மானே, தருணேந்து சேகரனே' என்று என் மகள் தன் குறையைச் சொல்லிய பிறகும் நீ அவள் மாட்டு அருள்புரிய இரக்கம் கொள்ளாதது என்னே என்று செவிலி கூறுகின்ருள். பொன்னி-காவிரி. புகழ் செல்வம் மல்கு - யாவரும் புகழும் மேம்பாடாகிய செல்வம் நிறைந்த என்றலுமாம். ஆண்டகை-சிறந்தவன். அம்மான்-கடவுள். வலியவா - வலியதாயுள்ளது. திலகம் - பொட்டு. நுதல் - நெற்றி. திறம்-செய்தி.

புகழ் செல்வம்: வினைத்தொகை. வலியவா: வலிய வாறு என்றதன் தொகுத்தல். 4

திலக நுதல்உமை நங்கைக்கும்
  திருவா வடுதுறை நம்பிக்கும்
குலக அடியவர்க்(கு) என்னையாட்
  கொடுத்தாண்டு கொண்ட குணக்கடல்
அலதொன்(று) அறிகின்றி லேம்எனும்
  அணியும்வெண் ணீ(று)அஞ் செழுத்தலால்
வலதொன் றிலள்இதற்(கு) என்செய்கேன்?
  வயலந்தண் சாந்தையர் வேந்தனே!

பொழிப்புரை: அழகிய குளிர்ச்சியுள்ள வயல்களால் சூழப் பெற்ற சாத்தனூரில் உள்ளவர்களுக்கு அரசே! 'பொட்டு அணிந்த நெற்றியினை யுடைய உமாதேவியார்க்கும்,

திருவாவடுதுறை ஈசனுக்கும் (அடிமை பூண்டு ஒழுகும்) கூட்டமாகிய அடியார்களுக்கு(த் தொண்டு செய்யுமாறு) என்னை அடிமையாகக் கொடுத்து ஆண்டுகொண்டருளிய குணக்கடலாகிய சிவபெருமானை அல்லாமல் வேறு ஒன்றையும் அறிகின்றேம் இல்லை' என்று (என்மகள்) சொல்லுவாள்; வெள்ளிய திருநீற்றை அணிவதும், பஞ்சாட்சரத்தைச் செபிப்பதும் அல்லாமல் செய்யவல்ல காரியம் வேருென்றும் இல்லாதவளாக இருக்கின்ருள்; இதற்கு (நான்) என்ன செய்வேன்? என்றவாறு.

விளக்கம் : சிவபெருமானே! என்மகள் உன்னையே நினைக்கின்ருள்; விபூதியை அணிவதும் பஞ்சாட்சரத்தைச் செபிப்பதுமாக இருக்கின்ருள்; இன்னும் நீ அவளுக்கு அருளாதது ஏனே? என்பதாம். பஞ்சாட்சரத்தைச் செபிக்கும் போது, நகரத்தை முதலாகக் கொண்டு செபித்தல் வேத வழக்காம். சிகரத்தை முதலாகக் கொண்டு செபித்தல் சிவாகம வழக்காம். திருவாசகம் தமிழ் மறை ஆதலின் ஆரம்பத்தில் "நமச்சிவாய வாழ்க" என்று கூறப்பெற்றுள்ளது. மற்றைய மந்திரங்கள் எல்லாம் பிரணவத்தோடு கூடியே செபிக்கப்படுவன. பஞ்சாட்சர மந்திரம் பிரணவம் இன்றியே செபிக்கப்பெறுவது. பஞ்சாட்சரத்திற்கும்,பிரணவத்திற்கும் வேறுபாடு இல்லையாம். 'அறிகின்றிலேம்' என்றது தன்னையும், தன் தோழிகளையும் சேர்த்துக் கூறியதாம். குலக அடியவன்-கூட்டமாகிய தொண்டர். அலது-அல்லது. சாந்தையர் - சாத்தனூரில் வாழும் மக்கள்.

குணக்கடல்: உருவகம். செய்கேன்: எதிர்கால வினைமுற்று; இதில் 'க்' புதிய இடைநிலை. என்: வினு. 5

வேந்தன் வளைத்தது மேருவில்
அரவுநாண் வெங்கணை செங்கண்மால்
போந்த மதிலணி முப்புரம்
பொடியாட வேதப் புரவித்தேர்
சாந்தை முதல்!அயன் சாரதி
கதியருள் என்னும்இத் தையலை
ஆந்தண் திருவா வடுதுறையான்
செய்கை யாரறி கிற்பாரே?

பொழிப்புரை: 'சிவபெருமான், (ஆகாயத்தில்) சஞ்சரித்துக் கொண்டிருக்கும் மதிலோடு கூடிய அழகிய முப்புரங்கள் நீருகி எரிய, மேருமலையாகிய வில்லை வளைத்துக் கொண்டு வேதங்களாகிய குதிரைகள் பூட்டிய தேரையும், பிரமனுகிய சாரதியையும், வாசுகியாகிய வில்லின் கயிற்றையும், சிவந்த கண்களையுடைய திருமாலாகிய கொடிய அம்பையும் (உடன் பெற்று நின்ருர்); நீர்வளம் பொருந்திய குளிர்ந்த திருவாவடுதுறையில் எழுந்தருளிய இறைவன் (செய்த) செய்கையை யாவர் அறியவல்லார்? சாத்தனூர் முதல்வனே! இந்தப் பெண்ணுக்கு ஆதரவு அளிப்பாயாக என்று கூறுவாள் என்றவாறு.

விளக்கம்: வேந்தன்-சிவன். மேரு-மேருமலை. அரவு-வாசுகி. கணை- அம்பு. மால் - திருமால். போந்த - (வானத்தில்) சஞ்சரிக்கின்ற. பொடி - துகள். புரவி - குதிரை. அயன் - பிரமன். ஆம் - தண்ணீர். என்னும் - என்று கூறுவாள்.

தையலை (-தையலுக்கு): உருபு மயக்கம். வெங்கணை: பண்புத் தொகை. வேதப்புரவி: உருவகம். யார்: வினு. 6

கிற்போம் எனத்தக்கன் வேள்விபுக்(கு)
எழுந்தோ டிக்கெட்ட அத்தேவர்கள்
சொற்போலும் மெய்ப்பயன் பாவிகாள்!என்
சொல்லிச் சொல்லும்இத் தூமொழி

கற்போல் மனம்கனி வித்தளங்
கருணால யா!வந்திடாய் என்றால்
பெற்போ? பெருந்திரு வாவடு
துறையாளி! பேசா(து) ஒழிவதே.

பொழிப்புரை : பரிசுத்தமான மொழியைப் பேசும் இப் பெண்ணாகிய என் மகள், 'பாவிகளே! (உடலின்பயன்,) (நாங்கள்) செய்து முடிப்போம் என்று எண்ணித் தக்கன் வேள்விக்குச் சென்று (வீரபத்திரர் வந்தபொழுது அவ்விடத் தினின்று) எழுந்தோடி அழிந்த அத்தேவர்களுடைய வீர மொழிகளைப் போன்றுள்ளது; உடலின் பயன் என்ன கண் டீர்' என்று சொல்லுவாள்; 'கல்லைப்போன்ற எமது மனத் தைக் கனியச் செய்த கருணைக்கு இருப்பிடமானவனே! பெரிய திருவாவடுதுறையை ஆட்சிபுரிபவனே! (என் மகள் பால்) வந்தருள் வாயாக' என்றால் (வாய்) பேசாமல் சும்மா இருப்பது அழகோ? என்றவாறு.

விளக்கம்: இந்த யாக்கையின் பயன், வீர் வார்த்தை பேசித் தக்கன் வேள்விக்குச் சென்று வீரபத்திரரைக் கண் டதும் எழுந்தோடி அழிந்த தேவர்களின் வீரமொழியைப் போன்றது என்க. கிற்போம்-நாங்கள் செய்து முடிப்போம்; இது தேவர்களின் உட்கோள். "கல்போல் மனம் கனிவித்த" "கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை, வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனை" என்பது திருவாசகம். பெற்போ - அழகோ.

கருணாலயா, ஆவடுதுறையாளி, பாவிகாள்: விளிகள். தூ மொழி: அன்மொழித் தொகை. பெற்போ, ஓ : வினா. கருண + ஆலயம் = கருணாலயம்: வடமொழிப் புணர்ச்சி தீர்க்கசந்தி. 'புக்கெடுத்தோடிக்' என்றும் பாடம். 7

ஒழிவொன்றி லாவுண்மை வண்ணமும்
உலப்பிலள் ஊறின்ப வெள்ளமும்
ஒழிவொன்றி லாப்பொன்னித் தீர்த்தமும்
முனிகோடி கோடியா மூர்த்தியும்
அழிவொன்றி லாச்செல்வச் சாந்தையூர்
அணிஆ வடுதுறை ஆடினாள்
இழிவொன்றி லாவகை எய்திநின்(று)
இறுமாக்கும் என்னிள மானனே.

பொழிப்புரை : அழிதல் சிறிதும் இல்லாத (சிவஞானச்) செல்வத்தினைப் பெற்ற சாத்தனூரிலுள்ள அழகிய ஆவடு துறையில் (இன்ப வெள்ளத்தில்) மூழ்கினவளும், கெடுதலில் லாதவளுமாகிய இளமானை ஒத்த என்மகள், நீங்குதல் சிறிதும் இல்லாத (நிறைந்த) உண்மைத் தன்மையையும், (இடைவிடாது) ஊறிக் கொண்டிருக்கும் பேரின்ப வெள்ளத் தையும், வற்றுதல் சிறிதும் இல்லாத காவிரித் தீர்த்தத் தையும், எண்ணில்லாத முனிவர்களையும், எண்ணில்லாத இறைவன் திருவுருவங்களையும் சிறிதும் குற்றமில்லாத முறையில் அடைந்து நின்று (அதனால்) செருக்குற்றாள்; (இறைவனே! இவளுக்கு அருள் புரிதல் உன்கடனாகும்) என்றவாறு.

விளக்கம் : வண்ணம் - தன்மை. உலப்பு - அழிவு, கெடு தல். மூர்த்தி - கடவுள் திருவுருவம். ஆடினாள் - மூழ்கினாள். என் இள மான் அ(ன்)னே - இளமானை ஒத்த என் மகள். மான், இளநலத்திற்கு உவமை. ஒன்று என்பது சிறிதும் என்ற பொருளில் வந்தது.

இலா : ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். இறு மாக்கும் : செய்யும் என்னும் முற்று. 8

மானேர் கலைவளையுங் கவர்ந்துளங்
கொள்ளை கொள்ளவழக்(கு) உண்டே?
தேனே! அமுதே!என் சித்தமே!
சிவலோக நாயகச் செல்வமே!
ஆனேஅ லம்புபுனற் பொன்னி
அணியா வடுதுறை அன்பர்தம்
கோனே!நின் மெய்யடி யார்மனக்
கருத்தை முடித்திடுங் குன்றமே!

பொழிப்புரை: தேன் போலும் இனியவரே! அமுதம் போல உயிர்க்கு உறுதியானவரே! என் மனமாக இருப்பவரே! சிவலோகத்திற்குத் தலைமையினையுடைய (ஞானச்) செல்வமே! பசுக்கள் (ஒலியுடன்) முழ்குகின்ற காவிரியாற்றின் (கரையில் திகழும்) அழகிய ஆவடுதுறையிலுள்ள மெய்யன்பர்களுடைய அரசே! உனது மெய்யடியார்களின் மனத்திலுள்ள எண்ணங்களை முடித்து வைக்கவல்ல குன்று போன்றவரே! மான் போன்ற எனது மகளின் அழகிய ஆடையையும் கைவளைகளையும் கவர்ந்து கொண்டு மனத்தையும் கொள்ளைகொள்ள நியாயம் உண்டோ? என்றவாறு.

விளக்கம்: மான் - மான் போன்ற என்மகள். ஏர்- அழகு. கலை - ஆடை; மேகலையுமாம். வழக்கு - நியாயம். ஆன்-பசுக்கள். அலம்பும்-முழ்குகின்ற. இறைவன் - மெய்யடியார்களின் மனக் கருத்தை அறிந்து முடித்து வைக்கும் ஆற்றலுடையவர்: "வாயானை மனத்தானை மனத்துள் நின்ற கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னை" என்பதும், "மனத்திருந்த கருத்தறிந்து முடிப்பாய் நீயே' என்பதும் அப்பர் தேவாரம். தலைவிகொண்ட காதலினுல்உடல் மெலிவு நேர்ந்து ஆடை அவிழ்ந்து நழுவுதலும், வளையல் கழன்று விழுதலும், மனம் சோர்தலும் இயல்பு என்பதாம்.

உண்டே: வினு. தேனே, அமுதே, சித்தமே, செல்வமே, கோனே, குன்றமே : விளிகள். 9

குன்றேந்தி கோகன தத்(து)அயன்
அறியா நெறிஎன்னைக் கூட்டினுய்
என்றேங்கி ஏங்கி அழைக்கின்ருள்
இளவல்லி எல்லை கடந்தனள்
அன்றேஅ லம்புபு னற்பொன்னி
அணியா வடுதுறை ஆடினுள்
நன்றே இவள்நம் பரமல்லள்
நவலோக நாயகன் பாலளே.

பொழிப்புரை : 'கோவர்த்தனம் என்னும் மலையைக் குடையாகப் பிடித்த திருமாலும் தாமரை மலர்மேல் இருக்கும் பிரமனும் (தேடிக்) காண முடியாத திருவருள் நெறியிலே என்னையும் சேர்த்து விட்டாய் அல்லவா?' என்று மிக வருந்தி, இளங்கொடி போல்வாளாகிய என்மகள் (இறைவனைக் கூவி) அழைக்கின்ருள்; (அவள் துன்பத்தின்) எல்லையைக் கடந்து விட்டாள்; ஒலியுடன் (ஓடுகின்ற) காவிரி நதியின் அருகே திகழும் ஆவடுதுறையை அடைந்தாள்; இவள் நமது செயலுக்கு ஒத்தவள் அல்லள்; புதிய உலகத்துத் தலைவனுகிய இறைவனைச் சார்ந்தவள் ஆயினுள்; இது (நமக்கு) நன்ருயிருக்கின்றதா? என்றவாறு.

விளக்கம்: குன்று - கோவர்த்தனமலை. ஏந்தி-ஏந்தியவன், திருமால். கோகனதம்-தாமரை மலர். இளவல்லி-இளங்கொடி போன்றவள். அலம்புதல்-ஒலித்தல். ஆடினுள்-அடைந்தாள். நம்பரம்-நம் சார்பு. நவம்-புதுமை. அன்றே-அல்லவா. திருமால் குன்றேந்திய வரலாறு: முன்னெரு கால் கோகுலத்துள்ள ஆயர்கள் கண்ணபிரானின் ஆலோசனைக்

கிணங்கி இந்திரனுக்குச் செய்ய வேண்டிய பூசையைக் கோவர்த்தன மலைக்குச் செய்தனர். அதுகண்ட இந்திரன் பெருமழை பெய்வித்துக் கோகுலத்தை அழிக்க முயன்றான். உடனே கண்ணன் அம்மலையைத் தூக்கிக் குடையாகப் பிடித்துக் கோகுலத்தைப் பாதுகாத்தனன் என்பதாம்: "விலங்கல் ஒன்றேந்தி வன்மழை தடுத்தோனும்" என்பது சம்பந்தர் தேவாரம்.

குன்றேந்தி, ஏந்தி: வினையாலணையும் பெயர். இளவல்லி: அன்மொழித்தொகை: அன்றே, நன்றே, ஏ: வினாக்கள். 10

பாலும் அமுதமும் தேனுமாய்
ஆனந்தம் தந்துள்ளே பாலிப்பான்
போலும்என் ஆருயிர்ப் போகமாம்
புரகால காமபு ராந்தகன்
சேலுங் கயலுந் திளைக்குநீர்த்
திருவா வடுதுறை வேந்தனோ(டு)
ஆலு மதற்கே முதலுமாம்
அறிந்தோம் அரிவைபொய் யாததே.

பொழிப்புரை: பாலும் அமுதமும் தேனுமாக (என்)மனத்தினுள்ளே நின்று இன்பத்தைக் கொடுத்து அருள் செய்பவன்; எனது அருமையான உயிரினிடத்தும், இன்பத்தை விளைவிப்பவனாகி யமன் உடலையும் மன்மதன் உடலையும் திரிபுரத்தையும் அழித்தவன்; சேல்மீனும், கயல் மீனும் மகிழ்ந்து விளையாடுகின்ற (காவிரி) நீரையுடைய திருவாவடுதுறை இறைவனோடு விளையாடுவதற்கே முந்துவாள் (என்மகள்); இதுவே உண்மையாம்; இந்தப்பெண் இந்த வழிநின்று விலகாமையை அறிந்தோம் என்றவாறு.

விளக்கம்: உள்-மனம். பாலித்தல்-அருளுதல். புரம்-சரீரம். காலபுரம் - யமனது உடல். காமபுரம்-மன்மதனது உடல். புரம் - திரிபுரம். அந்தகன் - இங்கு அழித்தவன். சேல், கயல்-இவை மீன் வகைகள். திளைக்கும்-விளையாடுகின்ற. நீர் - காவிரி நீர். ஆலுதல்-விளையாடுதல். முதலும்-முந்தும். ஆம்-இது உண்மை. அரிவை-பெண்.

போலும்: அசை. ஆருயிர்: பண்புத் தொகை. புர +
அந்தகன் = புராந்தகன். 11

திருச்சிற்றம்பலம்

---

3. திருவிடைக்கழி*

பண் – பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

மாலுலா மனம்தந்(து) என்கையிற் சங்கம்
வவ்விஞன்; மலைமகள் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளுங்
குமரவேள் வள்ளிதன் மணளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தன்என் சேந்தன்
என்னும்என் மெல்லியல் இவளே.

திருவிடைக்கழி: சோழநாட்டுக் காவிரிக்குத் தென்கரையிலுள்ள சிவத்தலங்களுள் 47-ஆவது தலமாகவுள்ளதும், அட்டவீரட்டத்தலங்களில் ஒன்ருனதுமான திருக்கடவூருக்குத்

---

* இப்பதிகம் அந்தாதித் தொடை பெற்று முருகக் கடவுள் தோத்திரமாகவும், அது தலைவன்பால் அன்புகொண்ட ஒரு தலைவியின் துயரங்கண்ட நற்ருய் இரங்கிக் கூறும் மொழிகளாகவும் அமைந்ததாகும்,

தென்மேற்கில் 4 மைலிலும், தில்லையாடிக்கு நேர் மேற்கில் 2 மைலிலும் திருவிடைக்கழி என்ற தலம் உள்ளது. இது தேவாரப்பாடல் பெருத தலங்களுள் ஒன்று. திருவிடைக்கழி-இது முருகப்பெருமான் முதன்மையாக எழுந்தருளிய திருத் தலமாகும். இங்குத் தேவயானையம்மையார் இறைவனிடம் திருப்பரங்குன்றம் செல்ல விடை கேட்டதாலும், முருகப் பெருமானுக்கு இரணியாசுரனைக் கொன்ற பழி கழிந்ததாலும் "திருவிடைக்கழி" என ஆயிற்று. திரு-அடைமொழி. இத்தலத்தில் மகிழ மரம் சிவபெருமானுக்கும், குராமரம் முருகப்பெருமானுக்கும் உரியன. இங்கு மகிழ மரம் இருத்தலால், இத்தலம் மகிழவனம் எனவும் பெயர் பெறும்.

மகிழவனத்து இறைவன் திருக்காமேசுவரர். இறைவி திருக்காமேசுவரி. அம்மையார் தரங்கம்பாடிக்குச் சென்றதால் திருவிடைக்கழியில் அம்மன் ஆலயம் இல்லை.

ஸ்ரீசுப்பிரமணியக்கடவுள் குராமரத்தின் கீழ் யோக நிட்டையில் இருக்கின்றூர். அப்போது சிவபெருமான் அவருக்கு இத்தலத்தில் முதன்மைபெற்று விளங்க அருள் புரிந்து தான் பின் ஒதுங்கியுள்ளார். ஆகவே திருவிடைக் கழியில் தனித்து முருகப்பெருமான் முதன்மையாகத் திகழ் கின்றூர். தெய்வயானையம்மையார் தவக்கோலத்துடன் தனி ஆலயத்தில் எழுந்தருளியுள்ளார்.

இத்தலத்துத் தீர்த்தங்கள் சரவணப்பொய்கை; காசிக் கங்கைத் தீர்த்தம் என்ற கிணறு, ஆக இரண்டு ஆகும். முசுகுந்தன், வசிட்டன் முதலியோரும் அருணகிரிநாதர், சேந்தனுர் முதலியோரும் இத்தலத்தில் பூசித்து வழிபட்டு நற்பேறு பெற்றனர்.

இங்கு ஸ்ரீசுப்பிரமணியக்கடவுள் மூலத்தான மூர்த்தியாவர்.

பொழிப்புரை: 'பார்வதி தேவியின் மகனான முருகக் கடவுள், எனக்குக் காதலால் உண்டான மயக்கங்கொண்ட மனத்தைக் கொடுத்து, என் கையிலுள்ள சங்கு வளையல் களைக் கவர்ந்து கொண்டான்; விண்ணுலகத்தில் வாழ் கின்ற தேவர்களது குலம் முழுவதையும் ஆளுகின்ற குமரக் கடவுளும், வள்ளியம்மையினது கணவனும், சேல் மீன்கள் சஞ்சரிக்கின்ற (நீர் வளமுள்ள) வயல்களையுடைய திரு விடைக் கழி என்னும் தலத்தினிடத்து அழகிய குராமரத் தின் நிழலின் கீழே எழுந்தருளிய வேல் ஏந்திய பெரிய கையையுடைய முருகப்பிரானும் ஆகிய (அவன்) என் வேந்தன் (தலைவன்)' என்று எனது மெல்லிய தன்மை யுடைய தலைவியாகிய இவள் சொல்லுவாள் என்றவாறு.

விளக்கம்: மால்-காதல். சங்கம்-சங்குவளையல். சங்கம் வவ்வினான் - காதலால் உடல் மெலிந்து கைவளைகளை நெகிழச் செய்தான். மதலை-மகன். குலம் - கூட்டம். சேல்-சேல் மீன். குரா - ஒருவகை மரம்; தல விருட்சம். சேந்தன்-சிவந்த நிறத்தையுடையவன்; முருகன். மெல்லியல் - மெல் லிய சாயையுடைவள்.

சேந்தன் : காரணப் பெயர். தட : உரிச்சொல். 1

இவளைவா ரிளமென் கொங்கைபீர் பொங்க
எழில்கவர்ந் தான்;இளங் காளை
கவளமா கரிமேல் கவரிசூழ் குடைக்கீழ்க்
கனகக்குன் றெனவருங் கள்வன்
திவளமா ளிகைசூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
குவளைமா மலர்க்கண் நங்கையானைக்கும்
குழகன்நல் அழகன்நங் கோவே.

பொழிப்புரை: இளங்காளை போன்றவனும், சோற்றுத் திரளை உண்ணும் பெரிய யானையின் மீது சுற்றிலும் வெண் சாமரை வீசக் குடையின் கீழே பொன்மலை போல வருகின்ற கள்வனும், விளக்கம் பொருந்திய மாளிகைகளால் சூழப் பெற்ற திருவிடைக்கழி என்னும் தலத்தினிடத்து அழகிய குராமரத்தின் நிழலின் கீழே எழுந்தருளிய பெருமை வாய்ந்த நீலோற் பல மலர் போன்ற கண்களையுடைய நங்கையாகிய வள்ளியம்மையாருக்கும், தெய்வயானை யம்மையாருக்கும் மணவாளனும், நல்ல அழகையுடைய வனும் (ஆகிய) எமது தலைவன், இந்த என் தலைவியின் கச்சு அணிந்த இளமையும் மென்மையும் பொருந்திய தனங்களிலே பசலை நிறம் மிக (இவளது) இயற்கை அழகினைக் கவர்ந்து கொண்டான் என்றவாறு.

விளக்கம்: வார் - கச்சு. பீர் - பசலை நிறம், தேமல்; இது காதல் மிகுதியாகக் கொண்டபோது உடலில் தோன்றும் பொன்னிறம். கவளம் - சோற்றுத்திரள். கள்வன்-காண்போர் மனத்தைக் கொள்ளை கொள்பவன்; திருடன். இங்கு முருகன். திவளம்-விளக்கம். நங்கை-வள்ளியம்மை. யானை-தெய்வயானையம்மை. நங்கையானை-தெய்வயானை யம்மையுமாம். குழகன்-இளையோன்; முருகன். கவளமா கரிமேற்....குன்று என" என்ற தொடர் முருகக்கடவுள் யானை மீது பவனி வரும் கோலத்தை வர்ணிப்பது. பவனிவரும் போது தலைவி முருகன்மீது காதல் கொண்டாள் என்பதாம்.

குன்றுஎன, என; உவமவுருபு. மலர்க்கண்: உவமத் தொகை: காளை: உவமையாகு பெயர். இவளை எழில் கவர்ந்தான்: இங்கு இரண்டு செயப்படு பொருள் கூறியது. இதனை வடமொழியாளர் "த்விகர்ம கரித்தரிப்ரயோகம்" என்பர்.

கோவினைப் பவளக் குழமணக் கோலக்
குழாங்கள் சூழ்கோழிவெல் கொடியோன்
காவல்நற் சேனையென் னக்காப் பவன்என்
பொன்னை மேகலை கவர்வானே?
தேவின்நற் றலைவன் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
தூவிநற் பீலி மாமயி லூரும்
சுப்பிர மண்ணியன் தானே.

பொழிப்புரை: தெய்வத் தன்மையுடைய பவள நிறங் கொண்டு இளமை வாய்ந்த மணக் கோலங் கொண்ட கூட்டங்கள் சூழப் பெற்ற வெற்றி பொருந்திய கோழிக் கொடியை உடையவனும், காவலைச் செய்யும் நல்ல சேனை யைப் போல் யாவரையும் காப்பாற்றுபவனும், தேவர் களுக்கு நல்ல தலைவனும் (ஆகிய) திருவிடைக்கழி என்னும் தலத்தினிடத்து அழகிய குராமரத்தின் நிழலின் கீழே, எழுந்தருளிய சிறிய இறகுகளையும் நல்ல தோகையினையும் உடைய சிறந்த மயிலின் மீது ஏறிச் செல்லுகின்ற சுப்பிர மணியக் கடவுள், எனது அழகிய பெண்ணின் மேகலையைக் கவர்ந்து கொள்வானோ? என்றவாறு.

விளக்கம்: கோ - இறைமை; தெய்வத்தன்மை. குழ- இளமை. வெல் - வெற்றி. கோழிக்கொடி—சேவலின்வடிவம் எழுதப் பெற்ற கொடி. காவல் நற்சேனை என்னக் காப் பவன் - சேனாதிபதியைப் போலக் காப்பவன் என்றலுமாம். பொன்னை - இங்கு அழகிய பெண்ணை. மேகலை - எழுகோ வையினைக்கொண்ட ஓர் ஆபரணம். இஃது இடையில்அணி வதாகும். தேவு-தேவர்கள். தூவி-இறகு. பீலி-மயில் தோகை.

பொன்னை மேகலை: இரண்டு செயப்படுபொருள். கவர் வானே, ஏ: வினா; ஐயப் பொருள். தான், ஏ: அசைகள். 3

தானமர் பொருது வானவர் சேனை
மடியச்சூர் மார்பினைத் தடிந்தோன்
மானமர் தடக்கை வள்ளல்தன் பிள்ளை
மறைநிறை சட்டறம் வளரத்
தேனமர் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
கோனமர் கூத்தன் குலவிளங் களிறென்
கொடிக்கிடர் பயப்பதுங் குணமே?

பொழிப்புரை: தேவர்களது சேனை (போரில் சூரபன்மனால்) மடியத் தான், சூரபன்மனுடன்(போர் புரிந்து அவன் இறக்கும்படி) மார்பினைப் பிளந்தவனும், மானை ஏந்திய பெருமை வாய்ந்த கையினை யுடைய வள்ளலாகிய சிவபெருமானது புதல்வனும், வேதங்களில் மிகுதியாகச் சொல்லப்பெற்ற அறுவகைப் புண்ணியச் செயல்கள் வளரும்படியான தேன் பொருந்திய சோலைகள் சூழ்ந்த திருவிடைக்கழி என்னும் தலத்தினிடத்து அழகிய குராமரத்தின் நிழலின் கீழே எழுந் தருளிய தலைமை வாய்ந்த கூத்தாடுபவனாகிய சிவபெருமான் விரும்பிய இளைய யானை போன்றவனுமான முருகப்பெருமான் எனது கொடிபோன்ற பெண்ணுக்குத் துன்பத்தை உண்டுபண்ணுவது நல்ல தன்மை ஆகுமோ? என்றவாறு.

விளக்கம்: "சூர் மார்பினைத் தடிந்தோன்" என்றதனால் என் மகள் துன்புறுதற்குக் காரணமான காமனையும் தொலைப்பான் என்பது தொனிக்கும். சூர் - சூரபன்மன். மான் அமர் தடக்கை வள்ளல் - சிவபெருமான். சட்டறம் - (ஷட் + அறம்) அறுவகைப் புண்ணியச் செயல்கள். அவை ஈதல், ஏற்றல், ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல் என்பன. தேன் - தேன் வண்டுகளுமாம். கோன் அமர் - தலைமை வாய்ந்த. குலவு-விரும்பிய. கொடி-இங்குப்பெண்.

குணமே: ஏ: வினு. கொடி: உவமையாகு பெயர். தடிந்தோன்: வினையாலணையும் பெயர். குலவு + இளங் = குலவிளங். 4

குணமணிக் குருளைக் கொவ்வைவாய் மடந்தை
படுமிடர் குறிக்கொளா(து) அழகோ?
மணமணி மறையோர் வானவர் வையம்
உய்யமற்(று) அடியனேன் வாழத்
திணமணி மாடத் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
கணமணி பொருநீர்க் கங்கைதன் சிறுவன்
கணபதி பின்னிளங் கிளையே.

பொழிப்புரை: பெருமை வாய்ந்த கூட்டத்தாரான அந்தணர்களும், தேவர்களும், மற்றுமுள்ள உலகத்தவர்களும் ஈடேறவும் அடியனேன் வாழவும் உறுதியான அழகிய அலங்காரமுள்ள மாடங்கள் நிறைந்த திருவிடைக்கழி என்னும் தலத்தினிடத்து அழகிய குராமரத்தின் நிழலின் கீழே எழுந்தருளிய, மணித்திரள்களைத் தள்ளிக் கொண்டு ஓடும் நீரையுடைய கங்கா தேவியின் புதல்வனும், கணபதிக்குப்பின் தோன்றிய தம்பியாகிய சிறுவனுமான முருகப் பெருமான், நற்குணம் வாய்ந்த அழகிய சிறுமியும் கொவ்வைக் கனிபோலும் வாயினையுடையவளுமான என்மகள் படும் துன்பத்தைப் போக்கக் கவனியாமலிருப்பது அழகாமோ? என்றவாறு.

விளக்கம்: குணம்-நற்குணம். அணி-அழகு. குருளை-இங்குச் சிறுமி. கொவ்வை-கொவ்வைக்கனி. குறிக்கொள்ளுதல்-மனத்துட் கொள்ளுதல்; கவனித்தல். மணம்-கூட்டம். அணி-பெருமை. திண்-உறுதி. அம்-அழகு. அணி-அலங்

காரம். கணம்-திரள்; கூட்டம். மணி-இரத்தினம். பின் இளங் கிளை - தம்பியாகிய சிறுவன்.

அழகோ, ஓ: வினு. வையம்: இடவாகுபெயர். கொளாதது என்பது கொளாது என நின்றது. கிளையே, ஏ: அசை. 5

கிளையிளஞ் சேயக் கிரிதனைக் கீண்ட
ஆண்டகை கேடில்வேற் செல்வன்
வளையிளம் பிறைச்செஞ் சடைஅரன் மதலை
கார்நிற மால்திரு மருகன்
திளையிளம் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
முளையிளங் களி(று)என் மொய்குழற் சிறுமிக்(கு)
அருளுங்கொல் முருகவேள் பரிந்தே.

பொழிப்புரை : (தன் அடியவர்க்கு) உறவினனுன இளங் குமரனும், அக்கிரவுஞ்சமலையைப் பிளந்த ஆண்மையிற் சிறந்தவனும், குற்றமற்றவேற்படையினை (ஏந்திய) ஞானச் செல்வம் உடையவனும், வளைந்த இளம்பிறைச் சந்திரனைச் செஞ்சடையில் தரித்த சிவபெருமானது புதல்வனும், மேக நிறத்தையுடைய திருமாலின் அழகிய மருமகனும், நெருங்கிய இளஞ்சோலைகள் சூழ்ந்த திருவிடைக்கழி என்னும் தலத்தினிடத்து அழகிய குராமரத்தின் நிழலின் கீழே எழுந்தருளிய மிக இளைய யானை போன்றவனும் ஆகிய முருகக் கடவுள், அடர்ந்த கூந்தலையுடைய என் பெண்ணுக்கு இரங்கி அருளுவானோ? என்றவாறு.

விளக்கம் : செவிலித்தாய் முன்னர் 'அருளுங்கொல்' (அருளுவானோ) என்று ஐயுற்றுப் பின்னர் அருளுவான் எனத் தன்னைத் தேற்றிக்கொண்டாள் என்ற பொருள் கொள்ளலுமாம், கிளை-(அடியவர்க்கு) உறவு. சேய்-சிவந்த

நிறமுடையவன்; குமரன். கிரி-கிரவுஞ்ச மலை; மலைவடிவாக இருந்த அரக்கன். இவன் சூரபன்மன் தம்பி தாரகாசுர னுடைய மாயாபுரியில் இருந்தவன்; தென்னாடு நோக்கி வரும் அகத்தியருக்கு மலை வடிவுகொண்டு பலவித மாயை களால் இடையூறு செய்தவன்; அவர் சாபத்தால் மலை வடிவாகவே இருந்து முருகக்கடவுளின் வேலால் அழிந்த வன். மருகன் - வழித்தோன்றலுமாம். திளை-நெருங்கிய. முளை இளம்-மிக இளைய. பரிதல்-இரங்குதல்.

கிளை : ஆகுபெயர். அக்கிரி, அ : நெஞ்சறி சுட்டு. முளை இளம்: ஒரு பொருட் பன்மொழி. 6

பரிந்தசெஞ் சுடரோ? பரிதியோ? மின்னோ?
பவளத்தின் குழவியோ? பசும்பொன்
சொரிந்தசிந் துரமோ? தூமணித் திரளோ
சுந்தரத்(து) அரசிது என்னத்
தெரிந்தவை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
வரிந்தவெஞ் சிலைக்கை மைந்தனை அஞ்சொல்
மையல்கொண்(டு) ஐயுறும் வகையே.

பொழிப்புரை: (சகல கலைகளையும்) அறிந்த வேத நெறி யில் நிற்கும் அந்தணர்கள் வாழ்கின்ற திருவிடைக்கழி என்னும் தலத்தினிடத்து அழகிய குரா மரத்தின் நிழலின் கீழே எழுந்தருளிய, கட்டுகள் அமைந்த கொடிய வில்லைக் கையில் ஏந்திய வலிமையுடையவனான முருகப்பெருமான் மீது, அழகிய சொல்லையுடையவளாகிய என் மகள், (காம) மயங்கங் கொண்டு (அவனை), 'அன்புடன் கூடிய சிவந்த சோதி வடிவமோ? சூரியனோ? மின்னலோ? பவளக் கொடியின் கொழுந்தோ ? பசிய பொன்னை உருக்கி

ஊற்றிய செவ்வொளியோ? பரிசுத்தமான மாணிக்கத்தின் தொகுதியோ? அழகுக்கு அரசு இதுவோ?'என்று சந்தேகங் கொள்ளும் விதம் (இருந்தவாறு என்னே!) என்றவாறு.

விளக்கம்: பரிந்த - அன்புடன் கூடிய. "பரிந்த செஞ் சுடரோ": "அருளுடைச் சுடரே" என்பது திருவாசகம். பரிதி - வட்டமானது; சூரியன். குழவி - கொழுந்து. சிந்துரம்-செவ்வொளி. சுந்தரம் - அழகு. வைதிகர்-வேத நெறியில் ஒழுகும் பிராமணர். மைந்தன் - வலிமையுடைய வன்; குமரன். அஞ்சொல்-அழகிய சொல்லையுடைய பெண்.

ஒகாரங்கள் ஆறும்: ஐயம். பசும்பொன்: பண்புத் தொகை. அஞ்சொல்: அன்மொழித் தொகை. தூய்மை + மணி = தூமணி. வைதிகர்: தத்திதாந்த நாமம். 7

வகைமிகும் அசுரர் மாளவந்(து) உழிஞை
வானமர் விளைத்ததா ளாளன்
புகைமிகும் அனலிற் புரம்பொடி படுத்த
பொன்மலை வில்லிதன் புதல்வன்
திகைமிகு கீர்த்தித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
தொகைமிகு நாமத் தவன்திரு வடிக்(கு)என்
துடியிடை மடல்தொடங் கினளே.

பொழிப்புரை: (தனவர், தகுவர், தைத்தியர் என்ற) பல வகைப்பட்ட அசுரர்கள் மடியும்படி வந்து, மதிலை வளைத்துக்கொண்டு பெரிய போரினைச் செய்த முயற்சி யுடையவனும், புகை மிகுந்த தீயினுல் முப்புரத்தைச் சாம்ப லாக்கிய மேருமலையை வில்லாகக் கொண்ட சிவபெரு மானது புதல்வனுமாகிய, எல்லாத் திக்குக்களிலும் பரவிய புகழ் (மிகுந்த) திருவிடைக்கழி என்னும் தலத்தினிடத்து

அழகிய குரா மரத்தின் நிழலின் கீழே எழுந்தருளிய, எண்ணிக்கையில் மிகுந்த திருநாமங்களைப் பெற்ற முருகக் கடவுளது திருவடிகளைப் பெறுதற்காக, உடுக்கை போன்ற இடையையுடைய எனது பெண்ணானவள் பனை மடலால் செய்த குதிரையில் ஏறத் தொடங்கினாள் என்றவாறு.

விளக்கம்: உழிஞை - உழிஞைமாலை சூடிக்கொண்டு மதிலை வளைத்துப் போர் செய்தல். வான்-பெரிய. தாள்-முயற்சி. பொன்மலை-மேருமலை. வில்லி-வில்லையுடையவன். பொன்மலை வில்லி-சிவபெருமான். திகை-திசை; எல்லாத் திசை. கீர்த்தி-பெரும்புகழ். தொகை-எண்ணிக்கை. நாமம்-பெயர். தொகைமிகு நாமம்-ஆயிரம் நாமம் (சகஸ்ரநாமம்), அல்லது பல கோடி நாமம்: "எண்ணாயிரம் கோடி பேரார் போலும்" என்பது அப்பர் தேவாரம். துடி-உடுக்கை. இடை-இடுப்பு. மடல்-பனைமடலால் செய்த குதிரை. மடலேறுதல்-இஃது அகப்பொருள் துறையில் ஒன்று; இத்துறை காமம் மிக்க ஆடவர்க்கே உரியதாயினும் பக்திச் சிறப்பை முன்னிட்டுப் பெண்பாலார்க்கும் கொள்ளப்படும்.

வில்லி: குறிப்புவினையாலணையும் பெயர். துடியிடை: அன்மொழித் தொகை. 8

தொடங்கினள் மடலென்(று) அணிமுடித் தொங்கல்
புறவிதழ் ஆகிலும் அருளான்
இடங்கொளக் குறத்தி திறத்திலும் இறைவன்
மறத்தொழில் வார்த்தையும் உடையன்
திடங்கொள்வை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
மடங்கலை மலரும் பன்னிரு நயனத்(து)
அறுமுகத்(து) அமுதினை மருண்டே.

பொழிப்புரை : மனவுறுதியைக் கொண்ட வேத நெறியில் நிற்கும் வேதியர்கள் வாழ்கின்ற திருவிடைக்கழி என்னும் தலத்தினிடத்து அழகிய குராமரத்தின் நிழலின் கீழே எழுந்தருளிய சிங்கம் போன்றவனும்,மலர்ந்த பன்னிரண்டு கண்களையும் ஆறுமுகங்களையும் கொண்ட தேவாமிர்தம் போன்றவனுமான முருகப் பெருமானை (என் மகள் கண்டு காதலித்து) மயங்கி, மடல் ஏறுதலை முற்பட்டாள் என்று (அறிந்தும் அவன், தனது) அழகிய திருமுடியில் அணிந்த மாலையிலுள்ள புற இதழைக்கூட வழங்காதவன் ஆனான்; (மற்றும்), தன் பக்கத்தில் இடங்கொண்டுள்ள அந்தக் குறத்தியாகிய வள்ளியம்மையார் இடத்திலும் முருகக் கடவுள் கோபத்தைத் தெரிவிக்கும் படியான செய்கையையும் சொல்லையும் உடையவனாக இருக்கின்றான் என்றவாறு.

விளக்கம் : தொங்கல் - மலர்மாலை - குறத்தி - வள்ளியம்மையார். மறத் தொழில் - கோபச்செயல். திடம் கொள்- (வேதம் ஓதுவதில்) வல்லமை கொண்ட என்றலுமாம். மடங்கல் - சிங்கம். முருகன் தன் அடியார்களைக் காமம் முதலிய அறுபகையாகிய யானைகள் தாக்காதபடி அழித்து ஒழிக்கும் சிங்கம் போல்வான் என்பார் அவனை, ''மடங்கல்'' என்றார். பன்னிரு நயனத்து அறுமுகத்து அமுதினை : ''பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும்'' என்பது அப்பர் தேவாரம். மருண்டு - (காதலித்து) மயங்கி.

மடங்கல்,அமுது: உவமையாகு பெயர்கள். அருளான்: எதிர்மறை வினைமுற்று. 9

மருண்டுறை கோயில் மல்குநன் குன்றப்
பொழில்வளர் மகிழ்திருப் பிடவூர்
வெருண்டமான் விழியார்க்(கு) அருள்செயா விடுமே?
விடலையே எவர்க்கும்மெய் யன்பர்

தெருண்டவை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
குருண்டபூங் குஞ்சிப் பிறைச்சடை முடிமுக்
கண்ணுடைக் கோமளக் கொழுந்தே.

பொழிப்புரை : மெய்ப்பொருளாகிய இறைவனிடத்துப் பேரன்பு கொண்ட அடியார்களும் தெளிந்த அறிவினையுடைய வேதத்தில் வல்ல பிராமணர்களும் வாழ்கின்ற திருவிடைக்கழி என்னும் தலத்தினிடத்து அழகிய குரா மரத்தின் நிழலின் கீழே எழுந்தருளிய முன் கொண்டையினையுடைய அழகிய மயிரினையும், பிறைச்சந்திரனைத் தரித்த சடைமுடியினையும், மூன்றுகண்களையும் உடைய அழகிய வடிவு கொண்ட சிவபெருமானது குலக்கொழுந்தான முருகப்பெருமான் விரும்பி உறைகின்ற திருக்கோயிலினையும், (வளம்) நிறைந்த நல்ல (சிறு சிறு) குன்றுகளையும், (நன்ருக) வளர்ந்துள்ள சோலைகளையும் கொண்ட மகிழ்தற்குரிய திருப்பிடவூரினிடத்துள்ள மருண்ட மான் போலும் விழியினையுடைய என் மகளுக்கு, அருள் செய்யாமல் போவானே? (போகான்; அவன்) எல்லோர்க்கும் மேம்பட்ட குரிசில் ஆவான் என்றவாறு.

விளக்கம் : மருண்டு - இங்கு விரும்பி. திருப்பிடவூர் - இது திருவிடைக்கழியின் அருகே வடக்கில்உள்ள கடலாழி ஆற்றின் வட கரையில் உள்ளது. இவ்வூர் ஆற்று வெள்ளத்தால் அழிவுற்றபோது சிலர் திருவிடைக்கழிக்கும், சிலர் சற்று மேற்கிலும் குடியேறினர். அந்த இடமே தற்போது பிடவூர் (பிடையூர்)என வழங்குகிறது. (அன்றியும் திருச்சிராப்பள்ளியை அடுத்த பிரம்பலூருக்குச் செல்லும் பெருவழியில் உள்ள சிறுகனூருக்கு வடமேற்கில் சுமார் இரண்டு மைல் தொலைவில் உள்ள திருப்பிடவூர் என்றும் கூறுவர்,

(இவ்விரண்டிடங்களிலும் 'ஐயனார்' ஆலயம்சிறப்புடையது.) விடலை - யௌவனமுடையவன்; குரிசில். குருள் - முன் கொண்டை. குஞ்சி - ஆண் மயிர். கோமளம் - அழகு.

விடலையே, கொழுந்தே, ஏ : இரண்டும் அசைகள். விடுமே, ஏ : எதிர்மறை. செயா (செய்யாது) : எதிர்மறை வினையெச்சம். 10

கொழுந்திரள் வாயார் தாய்மொழி யாகத்
தூய்மொழி அமரர்கோ மகனைச்
செழுந்திரட் சோதிச் செப்புறைச் சேந்தன்
வாய்ந்தசொல் இவைசுவா மியையே
செழுந்தடம் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
எழுங்கதிர் ஒளியை ஏத்துவார் கேட்பார்
இடர்கெடும்; மாலுலா மனமே!

பொழிப்புரை : மயக்க உணர்வினையுடைய மனமே! பரிசுத்தமான திருவார்த்தைகளைப் பேசுகின்ற தேவர்கள் தலைவனும், செழுமையான திரண்ட சோதிவடிவினனுமான முருகக்கடவுளை(ப் பற்றிச்) செப்புறை என்ற ஊரினையுடைய சேந்தனாகிய யான் வளமையோடு கூடித்திரண்ட வாயினையுடைய தலைவியின் தாய்மார் (நற்றாய், செவிலித்தாய்) சொன்ன மொழிகளைப் போன்று இயற்றிய இப்பாடல்களினால், செழுமையான பெரிய பொழில்கள் சூழ்ந்த திருவிடைக்கழி என்னும் தலத்தினிடத்து அழகிய குரா மரத்தின் நிழலின் கீழே எழுந்தருளிய மேலே எழுந்து விளங்கும் சூரியனைப்போன்ற ஒளி வடிவு உடைய முருகப் பெருமானைத் துதிப்போர் (அல்லது), துதித்தலைக் கேட்போருடைய துன்பம் நீங்கும் என்றவாறு.

விளக்கம்: வாயார்-இங்குத் தலைவி. தாய்-நற்றாய் அல்லது செவிலித்தாய். மொழியாக வாய்ந்த சொல் எனக்கூட்டுக; சொன்ன மொழிகளைப் போன்று (இயற்றிய என்பது பொருள்), இவை - இப்பாடல்களினால். சுவாமியை–முருகக் கடவுளை. கதிர்-சூரியன். ஒளி-ஒளி வடிவான முருகக்கடவுள். மால்-மயக்கம்; அஞ்ஞானம். செப்புறை-இது சேந்தனாரது ஊர் என்பர். செப்புறையைச் சேந்தனாரின் குடிப் பெயர் என்றும் கூறுகின்றனர். 'செப்புரைச்' என்றும் 'செப்புதற்' என்றும் பாடம். [செப்பு உரை - புகழ்ந்து சொல்லும். செப்புதல் - சொல்லுதற்கு எழுந்த.] அமரர்கோமகன் - இங்கு முருகக் கடவுளைக் குறிக்கும்

மனமே: விளி. தாய் மொழி: வேற்றுமைத் தொகை. கெடும்: செய்யும் என்னும் முற்று. 11

திருச்சிற்றம்பலம்

சேந்தனார் அருளிய திருவிசைப்பா தெளிவுரை

முற்றிற்று

உ

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை

3. கருவூர்த் தேவர்

அருளிய

திருவிசைப்பா

[தெளிவுரை]

1. கோயில்

பண் – புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

கணம்விரி குடுமிச் செம்மணிக் கவைநாக்
கறையணல் கட்செவிப் பகுவாய்ப்
பணம்விரி துத்திப் பொறிகொள்வெள் ளெயிற்றுப்
பாம்பணி பரமர்தங் கோயில்
மணம்விரி தருதே மாம்பொழில் மொழுப்பில்
மழைதவழ் வளரிளங் கமுகந்
திணர்நிரை அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

பொழிப்புரை : கூட்டமாக விரிந்துள்ள தலைகளின் இடமாக(ப் பொருந்திய) சிவந்த மாணிக்கங்களையும், பிளவுபட்ட நாக்குகளையும், விடம்பொருந்திய மேல்வாய் களையும், கண்களாகிய காதுகளையும், பிளந்த வாய்களையும், விரிந்த படத்தில் (தோன்றும்) நெருங்கிய புள்ளிகளையும்; வெண்மையான பற்களையும் கொண்டுள்ள பாம்புகளை (ஆபரணமாக), அணிந்த மேலானவனாகிய சிவபெருமானது

கோயில்(எது என்னில்?) வாசனை பரவிய இனிய மாமரச் சோலைகளின் செறிவில் மேகங்கள் தவழும்படி வளர்ந்துள்ள இளம் பாக்கு மரங்களின் குலைகள் வரிசையாக அரும்பியுள்ள பெரும்பற்றப் புலியூர் என்னும் தில்லைப் பதியில் திகழும் (சிவஞானச்) செல்வம் வளர்கின்ற திருச்சிற்றம்பலமேயாம் என்றவாறு.

விளக்கம்: பாம்பணி பரமர்தம் கோயில் பெரும்பற்றப் புலியூரிலுள்ள திருச்சிற்றம்பலமாகும் என்க. இங்குப் பாம்பின் தன்மைகளை விசேடமாகக் கூறினுர். கணம்-கூட்டம். குடுமி-தலை. கவை-பிளவு. கறை-விஷம். அணல்-மேல்வாய்; கழுத்துமாம். கட்செவி-கண்ணே காதாக உடையது. பணம் - படம். துத்திப் பொறி - படத்தில் மிக நெருங்கிய புள்ளிகள். எயிறு-பல்; அது யமன், யமதூதி, காளன், காளத்திரி என நான்காம். தேமா - இனிய மாமரம். மொழுப்பு-செறிவு; அடர்த்தி. மழை-மேகம். கமுகு-பாக்கு மரம். திணர்-தாறுகள். திரு-(சிவஞானச்) செல்வம். பெரும் பற்றப் புலியூர்-இது வியாக்ர பாதர் (புலிக்கால் முனிவர்)க்குப் பெரும்பற்றுள்ள உறைவிடமாய் இருந்து அவர் நடராசப்பெருமானைப் பூசித்துப் பேறு பெற்றதனுல் பெற்ற பெயர்; தில்லை. திருச்சிற்றம்பலம்-இது நடராசப் பெருமான் எழுந்தருளிய இடமாகிய பொற்சபை. இது ஞானுகாசம் என்றும், தகராகாசம் என்றும் பெயர் பெறும்: "சிற்பர வியோமமாகும் திருச்சிற்றம்பலம்" என்பது பெரிய புராணம். 'கறையனல்' என்றும் பாடம். (கறை அனல்) – விஷமாகிய நெருப்பு என்றும் பொருள்.

செம்மை + மணி = செம்மணி. வெண்மை + எயிறு = வெள்ளெயிறு. கண் + செவி = கட்செவி. விரிதரு, விரிதா: பகுதி. கோயில்: இலக்கணப் போலி. 1

இவ்வரும் பிறவிப் பௌவநீர் நீந்தும்
ஏழையேற்(கு) என்னுடன் பிறந்த
ஐவரும் பகையே யார்துணை என்றால்
அஞ்சல்என் றருள்செய்வான் கோயில்
கைவரும் பழனங் குழைத்தசெஞ் சாலிக்
கடைசியர் களைதரு நீலம்
செய்வரம்(பு) அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

பொழிப்புரை : இந்தக் கடத்தற்கு அரிய பிறவியாகிய கடலில் நீந்துகின்ற அறிவில்லாதவனாகிய எனக்கு, என்னுடன் பிறந்த (ஐம்பொறிகளாகிய) ஐந்து பேரும் பகைவர்களே யாவர்; (பின்னர்) யாவர்? (எனக்குத்) துணை என்று கேட்டால், 'அஞ்சாதே' என்று அருள் செய்கின்ற நடராசப் பெருமானது கோயில் (எது என்னில்)? தாம் பயிரிட்டுத் திருத்திய வயல்களிடத்துச் செழித்த செந்நெற் பயிர்களின் களையாக முளைத்துள்ள நீலோற்பல மலர்களை உழத்தியர்கள் பிடுங்கி வயல்களின் வரப்புகளில் (எறிய அவை), அரும்பும்படியான பெரும்பற்றப்புலியூர் என்னும் தில்லைப் பதியில் திகழும் (சிவஞானச்) செல்வம் வளர்கின்ற திருச்சிற்றம்பலமே யாம் என்றவாறு.

விளக்கம் : பிறவிப் பெருங்கடலை நீந்துதற்கு எனக்கு யார் துணை என்றால், பெரும்பற்றப் புலியூர்த் திருச்சிற்றம்பலக் கோயிலில் எழுந்தருளி அருள் செய்யும் நடராச பெருமானே என்பதாம். "பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார், இறைவன் அடிசேரா தார்" என்பது திருக்குறள். பௌவநீர் - கடல். ஐவர் - ஐம்பொறிகளாகிய ஐவர். ஐம்பொறி - மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. இவை தத்தம்செயல்களில் கொண்டு போய் ஆன்மாக்களைப் பிறவித் துன்பத்தில் அழுத்துவதால், "ஐவரும் பகையே"

என்றார். பழனம்-வயல். குழைத்த-செழித்த. சாலி-ஒருவகை நெல்; செந்நெல். கடைசியர் - மருதநிலத்துப் பெண்கள்; உழத்தியர்கள். செய் - வயல். களை-பயிர் வளர்தற்குத் தடையாக உள்ள புல், பூண்டு முதலியன.

பிறவிப் பௌளம்: உருவகம். ஏழையேற்கு, ஏழையேன்: வினையாலணையும் பெயர். யார்: வினா. 2

தாயின்நேர் இரங்குந் தலைவ!ஓ என்றும்
தமியனேன் துணைவ!ஓ என்றும்
நாயினேன் இருந்து புலம்பினால் இரங்கி
நலம்புரி பரமர்தங் கோயில்
வாயில்நேர் அரும்பு மணிமுருக்(கு) அலர
வளரிளஞ் சோலைமாந் தளிர்செந்
தீயின்நேர் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

பொழிப்புரை: 'தாய்க்குச் சமானமாக இரங்குகின்ற தலைவனே! ஓ!' என்றும், '(துணையின்றித்) தனிப்பட்ட எனக்குத் துணைவனாயிருப்பவனே! ஓ!' என்றும், நாய்த் தன்மை யுடைய எளியேன் (வருந்தி) இருந்து புலம்பினேன் ஆனால் (என்மீது) இரக்கங் கொண்டு நன்மையைச் செய்கின்ற எவற்றிற்கும் மேலோனாகிய சிவபெருமானது கோயில்(எது என்னில்? மாதர்களுடைய சிவந்த) உதடுகளுக்கு ஒப்பாகக் காணப்படுகின்ற அழகிய முருக்கம்பூ மலர வளரா நின்ற இளஞ்சோலைகளில் மாந்தளிர்கள் சிவந்த தீயைப் போன்று தோன்றுகின்ற பெரும்பற்றப்புலியூர் என்னும் தில்லைப்பதியில் திகழும் (சிவஞானச்) செல்வம் வளர்கின்ற திருச்சிற்றம்பலமே யாம் என்றவாறு.

விளக்கம்: தன் குழந்தையின் துன்பங்கண்டு இரங்கும் தாயன்பு சிறந்ததாகலின், ''தாயின்நேர் இரங்கும்'' என்றார்.

"பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப் பரிந்து" என்பது திருவாசகம். பரமர்-எவற்றினும் மேலானவர்; கடவுள். வாய்-இங்கு உதடு. அரும்புதல் - தோன்றுதல். மணி - அழகு. முருக்கு-முள்ளு முருக்கமலர்; இது மிகச் செந்நிறம் உடைய மலர். 'மாந்தளிர் செந்தீ' : 'சீதப்புனலுண்டு எரியைக்காலும் சூதப் பொழில்' என்பது சுந்தரர் தேவாரம்.

நேர் : உவமவுருபு. ஓ : இரக்கச் சொல். முருக்கு : முதலாகு பெயர். 3

துந்துபி குழல்யாழ் மொந்தைவான் இயம்பத்
தொடர்ந்(து)இரு டியர்கணம் துதிப்ப
நந்திகை முழவம் முகிலென முழங்க
நடம்புரி பரமர்தங் கோயில்
அந்தியின் மறைநான்(கு) ஆரணம் பொதிந்த
அரும்பெறல் மறைப்பொருள் மறையோர்
சிந்தையில் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

பொழிப்புரை : துந்துபி, வேய்ங்குழல், யாழ், மொந்தை ஆகிய இசைக்கருவிகள் ஆகாயத்தில் ஒலிக்கவும், முனிவர்களின் கூட்டம் தொடர்ந்து வாழ்த்தவும், திருநந்திதேவர் கையிலுள்ள மத்தளம் மேகத்தின் இடியைப்போல முழங்கவும், ஆனந்த தாண்டவம் செய்கின்ற மேலான சிவபெருமானது கோயில் (எது என்னில்?) நான்கு வேதங்களின் முடிவாகிய உபநிடதங்களில் ஞானபாகம் நிரம்பியுள்ள பெறற்கரிய (நுண்ணிய) வேதப்பொருள்கள் அந்தணர்களின் சிந்தையில் (இடைவிடாது) வளருகின்ற பெரும்பற்றப் புலியூர் என்னும் தில்லைப்பதியில் திகழும் (சிவஞானச்) செல்வம் வளர்கின்ற திருச்சிற்றம்பலமேயாம் என்றவாறு.

விளக்கம்: துந்துபி - ஒருவகைப் பேரிகை. மொந்தை-ஒரு கண் பறை. நந்தி-திருநந்தி தேவர். முழவம்-மத்தளம். அந்தி-அந்தம்-முடிவு. ஆரணம்-வேதத்தின் முடிவு; உப நிடதம். இது ஞானபாகம். மறையோர் - வேதமுணர்ந்த பிராமணர். மறையோர் சிந்தையில் அரும்புவது திருச்சிற் றம்பலம்; அதுவே பரமர்தம்கோயில் என்க.

இயம்ப, துதிப்ப, முழங்க: வினையெச்சங்கள். 4

கண்பனி அரும்பக் கைகள்மொட் டித்(து)என்
 களைகணே! ஓலம்என்(று) ஓலிட்(டு)
என்பெலாம் உருகும் அன்பர்தம் கூட்டத்(து)
 என்னையும் புணர்ப்பவன் கோயில்
பண்பல தெளிதேன் பாடிநின் ருடப்
 பனிமலர்ச் சோலைசூழ் மொழுப்பில்
செண்பகம் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
 திருவளர் திருச்சிற்றம் பலமே.

பொழிப்புரை: கண்களில் ஆனந்தக் கண்ணீர் பனித் துளிகள் போல் ததும்பி நிற்க, கைகளை(த் தாமரை மொட்டுப் போலக் கூப்பி) அஞ்சலி செய்து வணங்கி, 'என்னுடைய ஆதரவே! அபயம்' என்று (கூவி) ஓலமிட்டு, எலும்புகள் எல்லாம் உருகுகின்ற அன்பர்களுடைய கூட் டத்தில் அடியேனையும் சேர்த்துவைப்போனாகிய இறை வனது கோயில் (எது என்னில்?) பல பண்களைத் தேன் வண்டுகள் சேர்ந்து பாடி நின்று விளையாடக் குளிர்ந்த பூஞ் சோலைகள் சூழ்ந்த (மிக) அடர்ந்துள்ள இடத்தில் சண்பக மலர்கள் மலருகின்ற பெரும்பற்றப் புலியூர் என்னும் தில்லைப்பதியில் திகழும் (சிவஞானச்) செல்வம் வளர்கின்ற திருச்சிற்றம்பலமேயாம் என்றவாறு.

விளக்கம்: மொட்டித்தல்-கூப்புதல். களைகண்-ஆதரவு. ஓலம்-அபயமளிக்க வேண்டும் என்ற குறிப்பு மொழி. என்பு-எலும்பு. பண்-இசை. மொழுப்பு - சோலை செறிந்த இடம். செண்பகம்-மணம் மிகுந்த மஞ்சள் நிறமான ஒரு வகைப்பூ. இப்பூவில் வண்டுகள் மொய்க்கா, அதனால் இப்பூ 'வண்டுணா மலர்' எனப் பெயர்பெறும். இச் சண்பக மலர் இறைவிக்கு உகந்த மலராகும். 'என்பெலாம் உருகும் அன்பர்': ''கூம்பலங் கைத்தலத்(து) அன்பரென் பூடுருகக் குனிக்கும், பாம்பலங் காரப் பரன்'' என்பது திருக்கோவையார்.

களைகணே: விளி. தெளி தேன்: வினைத்தொகை. 5

நெஞ்சிடர் அகல அகம்புகுந்(து) ஒடுங்கும்
நிலைமையோ(டு) இருள்கிழித்(து) எழுந்த
வெஞ்சுடர் சுடர்வ போன்(று)ஒளி துளும்பும்
விரிசடை அடிகள்தங் கோயில்
அஞ்சுடர்ப் புரிசை ஆழிசூழ் வட்டத்(து)
அகம்படி மணிநிரை பரந்த
செஞ்சுடர் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

பொழிப்புரை: மனத்திலுள்ள துன்பம் நீங்குமாறு (அடியார்களுடைய) உள்ளத்தின் கண் புகுந்து (அங்கேயே) ஒடுங்கி நிற்கும் தன்மையோடு, இருளைக் கிழித்துத் தோன்றிய வெப்பத்தையுடைய சூரியனின் சிவந்த கிரணங்கள் பிரகாசிப்பன போல ஒளியைப் பரப்பும் விரிந்த (செஞ்) சடையையுடைய சிவபெருமானது கோயில் (எது என்னில்?) அழகிய ஒளிவீசும் மதிலை வட்டமாகச் சூழ்ந்துள்ள கடல் போன்ற அகழியினுள் படிந்து கிடக்கும் மாணிக்கத் தொகுதிகள் பரவி நின்று சிவந்த ஒளியை வீசுகின்ற

பெரும்பற்றப்புலியூர் என்னும் தில்லைப்பதியில் திகழும் (சிவஞானச்) செல்வம் வளர்கின்ற திருச்சிற்றம்பலமேயாம் என்றவாறு.

விளக்கம்: இடர்-(பலவகைத்) துன்பம்; இது தன்னால், பிறரால், தெய்வத்தால் வரும் துன்பங்களுமாகும். வெஞ் சுடர்-(வெம்மையுடைய) சூரியன். துளும்புதல் - அசைதல்; பரவுதல். விரிசடை அடிகள்-சிவபெருமான். புரிசை-மதில். ஆழி-கடல். படி-படிந்து கிடக்கும். நிரை-தொகுதி; கூட் டம். செஞ்சுடர்-சிவந்த ஒளி. அரும்புதல்-வீசுதல்.

சுடர்வன என்பது சுடர்வ என நின்றது. செஞ்சுடர்- பண்புத் தொகை. 6

பூத்திரள் உருவஞ் செங்கதிர் விரியாப்
புந்தியில் வந்தமால் விடையோன்
தூத்திரள் பளிங்கில் தோன்றிய தோற்றம்
தோன்றநின் றவன்வளர் கோயில்
நாத்திரள் மறையோர்ந்(து) ஓமகுண் டத்து
நறுநெயால் மறையவர் வளர்த்த
தீத்திரள் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

பொழிப்புரை: செந்தாமரை மலர்த் தொகுதியைப் போன்று திருவுருவம் சிவந்த ஒளியை வீசி நிற்க, (அடிய வனது) உள்ளத்தில் வந்து எழுந்தருளிய திருமாலாகிய இடபத்தை யுடையவனும், பரிசுத்தமான (வெண்ணிறப்) பளிங்குக் குவியல் போன்று தோன்றிய காட்சி விளங்கும் படி தோன்ற நின்றவனுமாகிய சிவபெருமான் எழுந்தரு ளியகோயில் (எது என்னில்?) வேதியர்கள் (தத்தம்) நாவி னிடத்துத் திரண்ட வேதங்களின் பொருளையுணர்ந்து(ஓதி) ஓமகுண்டங்களிலே நறுமணம் பொருந்திய நெய்யினைக்

கொண்டு பெருக்கிய ஓமத்தீயின் தொகுதிகள் (என்றும்) தோன்றி விளங்கும் பெரும்பற்றப்புலியூர் என்னும் தில்லைப் பதியில் திகழும் (சிவஞானச்) செல்வம் வளர்கின்ற திருச் சிற்றம்பலமேயாம் என்றவாறு.

விளக்கம் : பூ-தாமரை மலர். “பூவெனப்படுவது பொறி வாழ் பூவே” என்பது நால்வர் நான்மணிமாலை. மால் விடை யோன் - திருமாலாகிய இடபத்தை வாகனமாக உடைய சிவபெருமான்; இதன் வரலாறு: சிவபெருமான் திரிபுரத்தை அழிக்கச் செல்லும் பொருட்டுத் தேவர்களால் ஆக்கிய தேரின் மீது ஏற, உடனே அதன் அச்சு முறிந்தது; அது கண்ட திருமால் சிவபெருமானிடம் கொண்டுள்ள அன்பு மேலீட்டினால் ஓர் இடப வடிவு கொண்டு எம்பெருமானைத் தாங்கி நின்றார் என்பதாம் : “தடமதில்கள் அவைமூன்றுந் தழலெரித்த அந்நாளில், இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ” என்பது திருவாசகம். மால்விடை- பெரிய இடபமுமாம். தூத்திரள் பளிங்கில் தோன்றிய தோற்றம் - இது திருவெண்ணீறு பூசப் பெற்ற திருமேனி யின் தோற்றத்தைக் குறிப்பதாகும். நறு நெயால் - நல்ல பசு நெய்யால் என்றலுமாம்.

பளிங்கில், இல் : உவமப்பொருள். பூத்திரள், தீத்திரள்: வேற்றுமைத் தொகைகள். 7

சீர்த்ததிண் புவனம் முழுவதும் ஏனைத்
திசைகளோ(டு) அண்டங்கள் அனைத்தும்
போர்த்ததம் பெருமை சிறுமைபுக்(கு) ஒடுங்கும்
புணர்ப்புடை அடிகள்தங் கோயில்
ஆர்த்துவந்(து) அமரித்(து) அமரரும் பிறரும்
அலைகடல் இடுதிரைப் புனிதத்
தீர்த்ததீர் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

பொழிப்புரை : சிறப்புடைய வலிமை வாய்ந்த உலகம் முழுவதையும், மற்றைத் திசைகளுடன் அண்டங்கள் எல்லாவற்றையும், (தம்மீது) மூடிக்கொண்ட தமது பெருமையில் சிறியதாம் தன்மையை அடைந்து ஒடுங்கிப் போகும் (பெரிய தொரு) செயலையுடைய இறைவனது கோயில் (எது என்னில்?) ஆரவாரஞ் செய்து கொண்டு வந்து பொருந்தி நின்று, தேவர்களும் மற்றவர்களும் (மூழ்கும்படியான) கடல் அலைகளைப் போன்று வீசுகின்ற அலைகளையுடைய பரிசுத்தமான தீர்த்த நீர் பெருகி விளங்கும் பெரும்பற்றப்புலியூர் என்னும் தில்லைப்பதியில் திகழும் (சிவஞானச்) செல்வம் வளர்கின்ற திருச்சிற்றம்பலமேயாம் என்றவாறு.

விளக்கம் : திண் - உறுதி. புணர்ப்பு - செயல். அடிகள் கடவுள். அமரித்தல் - பொருந்துதல். அலை கடல் - கடல் அலை. இடுதிரை-வீசுகின்றஅலை. புனிதத் தீர்த்தநீர்-பரிசுத்தமான புண்ணிய (சிவ) தீர்த்தங்கள். இவை சிவகங்கை, பரமானந்த கூபம், புலிமடு முதலியன. இவற்றில் மூழ்குவோர் சிவபுண்ணியமும் சிவப்பேறும் பெறுவர். புனிதம் என்றது தம்மிடம் வந்து மூழ்குவோருடைய பாவங்களைப் போக்கித் தூய்மை செய்தலை. தில்லைப்பதி, தீர்த்தத்தாலும் தலத்தாலும், மூர்த்தியாலும் சிறந்து விளங்குவது: "தீர்த்தம் என்பது சிவகங்கையே, ஏத்தருந்தலம் எழிற்புலியூரே, மூர்த்தி அம்பலக் கூத்தன துருவே" என்பது சிதம்பரச்செய்யுட் கோவை. மூர்த்தி, தலம், தீர்த்தம் இம்மூன்றையும் முறையே தரிசித்தும் வசித்தும், மூழ்கியும் வந்தவர்க்குச் சற்குருவின் அருள் பாலிக்கும் என்பதாம், பெருமைசிறுமை புக்கு ஒடுங்கும்...... அடிகள்:" "நுண்ணியான் மிகப் பெரியான் ஓவுளான் வாயுளான்" என்பது சம்பந்தர் தேவாரம்.

புனிதத் தீர்த்த நீர்; இருபெயரொட்டுப் பண்புத் தொகை. அமரித்து : வினையெச்சம். 8

பின்னுசெஞ் சடையும் பிறைதவழ் மொழுப்பும்
பெரியதங் கருணையுங் காட்டி
அன்னதேன் கலந்தின் னமு(து)உகந் தளித்தாங்(கு)
அருள்புரி பரமர்தங் கோயில்
புன்னைதேன் சொரியும் பொழிலகம் குடைந்து
பொறிவரி வண்டினம் பாடும்
தென்னதேன் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

பொழிப்புரை: பின்னிக் கொண்டிருக்கும் சிவந்த சடையையும், பிறைச்சந்திரன் தவழ்கின்ற திருமுடியையும், மிகுந்த தமது கருணையையும் (அன்பர்களுக்குக்) காட்டித் தாயானவள் தேன்கலந்த இனிய உணவை மன முவந்து ஊட்டினாற் போல அருள் செய்கின்ற மேலான சிவபெருமான் எழுந்தருளிய கோயில்(எது என்னில்?) புன்னை மலர்களின் தேன் சொரியப் பெற்ற சோலைகளின் உள்ளிடத்தைத் துருவிச் சென்று புள்ளிகளையும் கோடுகளையுமுடைய வண்டுக் கூட்டங்கள் பாடுகின்ற அழகிய இனிமை பொருந்திய பெரும்பற்றப் புலியூர் என்னும் தில்லைப் பதியில் திகழும் (சிவஞானச்) செல்வம் வளர்கின்ற திருச்சிற்றம்பலமேயாம் என்றவாறு.

விளக்கம்: பின்னு செஞ்சடை-பின்னே தொங்குகின்ற செஞ்சடை என்றலுமாம். மொழுப்பு - திருமுடி. அன்னை - தாய். குடைதல்-இங்கு உட்செல்லுதல். பொறி-புள்ளி. வரி-கோடு. தென்ன - அழகிய. தேன் - இனிமை. இங்குச் சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் திறத்திற்கு அன்னை தன் குழந்தைக்கு இனிய அமுதை உவந்து ஊட்டுதலை உவமையாகக் கூறியுள்ளது.

கலந்த + இன்னமுது = கலந்தின்னமுது : நிலைமொழியீற்றில் அகரம் தொக்கது. புன்னை - முதலாகு பெயர். 9

உம்பர்நா(டு) இம்பர் விளங்கியாங்(கு) எங்கும்
ஒளிவளர் திருமணிச் சுடர்கான்(று)
எம்பிரான் நடஞ்செய் சூழல்அங் கெல்லாம்
இருட்பிழம்(பு) அறஎறி கோயில்
வம்புலாங் கோயில் கோபுரங் கூடம்
வளர்நிலை மாடமா ளிகைகள்
செம்பொனால் அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

பொழிப்புரை: தேவலோகம், இவ்வுலகில் (வந்து) விளங்கியது போல எவ்விடத்தும் அழகிய மாணிக்கங்களின் ஒளியைப் போன்ற மேம்பட்ட ஒளியைக் கக்கி எமது தலைவனாகிய சிவபெருமான் நடனஞ் செய்கின்ற இடங்களிலெல்லாம் இருட் கூட்டம் முழுவதும் ஒழியச் செய்கின்ற கோயில் (எது என்னில்?) புதுமை பெருந்திய கோயிலும், கோபுரமும், மண்டபமும், ஓங்கி வளர்ந்த நிலைகளையுடைய மாடங்கள் அமைந்த மாளிகைப் பத்திகளும் செம்பொன்னினால் பொருந்தித் தோன்றுகின்ற பெரும்பற்றப் புலியூர் என்னும் தில்லைப்பதியில் திகழும் (சிவஞானச்) செல்வம் வளர்கின்ற திருச்சிற்றம்பலமேயாம் என்றவாறு.

விளக்கம்: உம்பர்-மேலிடம்; தேவர். இம்பர்-இவ்வுலகம். கான்று-கக்கி; வீசி. சூழல்-இடம். அற-முழுவதும். வம்பு-புதுமை; தெய்வமணமுமாம். கூடம்-மண்டபம்.

கான்று: வினையெச்சம். இருட் பிழம்பு: வேற்றுமைத் தொகை. செம்பொன்: பண்புத் தொகை. 10

இருந்திரைத் தரளப் பரவைசூழ் அகலத்(து)
எண்ணிலங் கண்ணில்புன் மாக்கள்
திருந்துயிர்ப் பருவத்(து) அறிவுறு கருவூர்த்
துறைவளர் தீந்தமிழ் மாலை

பொருந்தருங் கருணைப் பரமர்தங் கோயிற்
பொழிலகங் குடைந்துவண்(டு) உறங்கச்
செருந்திநின்(று) அரும்பும் பெரும்பற்றப் புலியூர்த்
திருவளர் திருச்சிற்றம் பலமே.

பொழிப்புரை: பெரிய அலைகளால் முத்துக்களைக் (கரை களில் சேர்க்கப்பெறும்) கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில் அழகிய(அறிவாகிய)கண் இல்லாத கணக்கற்ற அற்ப மாந்தர் (உயிர்) திருந்தும்படியான தக்க பருவத்தில் அறிவிலே சென்று பற்றும் தன்மை வாய்ந்த கருவூர் என்னும் இடத்தில் வளர்த்த இனிமைமிக்க தமிழ்ப் பாமாலையை (ஏற்றுக் கொண்ட) அரிய கருணையைப் பொழிகின்ற மேலான சிவபெருமானது கோயில் (எது என்னில்?) சோலைகளின் உட்புறத்திலுள்ள பூக்களைக் கிண்டி வண்டுகள் உறங்கச் செருந்தி மலர்கள் மலர்ந்து தோன்றுகின்ற பெரும்பற்றப் புலியூர் என்னும் தில்லைப்பதியில் திகழும் (சிவஞானச்) செல்வம் வளர்கின்ற திருச்சிற்றம்பலமேயாம் என்றவாறு.

விளக்கம்: தரளம்-முத்து. பரவை-பரந்து கிடப்பது; கடல். திரைத் தரளப் பரவை-அலைகளையும் முத்துக்களையும் உடைய கடல் எனினுமாம். அகலத்து-உலகத்து. புன்மாக்கள்-அற்ப மாந்தர். கருவூர்த் துறைவளர்-கருவிலே பரவி நின்று வளர்ந்த. கருவூர்த்தேவர் இயற்றிய சைவத் துறையை வளர்க்கின்ற என்றலுமாம். பரமர்-எவற்றிற்கும் மேலானவர்; வீடு அருள்பவர்; சிவபெருமான். கருவூர்த் தேவரின் தமிழ் மிகவும் இனிமை பயப்பது என்பதை, 'தீந் தமிழ் மாலை' என்ற சொற்றொடர் புலப்படுத்தும். அகம்-உள்ளிடம். செருந்தி-ஒருவகை மலர்.

பரவை: காரணப்பெயர். அருங்கருணை: பண்புத் தொகை. 11

திருச்சிற்றம்பலம்

2. திருக்களந்தையாதித்தேச்சரம்

பண் – புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

கலைகள்தம் பொருளும் அறிவுமாய் என்னைக்
கற்பினிற் பெற்றெடுத்(து) எனக்கே
முலைகள்தந்(து) அருளுந் தாயினும் நல்ல
முக்கணன் உறைவிடம் போலும்;
மலைகுடைந் தனைய நெடுநிலை மாட
மருங்கெலாம் மறையவர் முறையோத்(து)
அலைகடல் முழங்கும் அந்தணீர்க் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே.

திருக்களந்தை ஆதித்தேச்சரம்: இது கொங்கு நாட்டில் பொள்ளாச்சி தாலூகா கிணற்றுக்கடவு என்ற பொன்மலை (கனககிரி) வேலாயுத சுவாமி குன்றுக்குக் கிழக்கேயும், தென்சேரி கிரிக்கு (செஞ்சேரி மலைக்கு) மேற்கேயும் உள்ள செழிப்பான இடத்தில் திகழும் 'பெரிய களந்தை' என்னும் ஊரிலுள்ள சிவாலயமே 'ஆதித்தேச்சரம்' என்று, கோவைத் திருவாளர். C. M. இராமச்சந்திர செட்டியார் B. A., B. L., அவர்கள் கூறுகின்றார்கள். 'பொன் விளைந்த களத்தூரி லுள்ள சிவாலயத்தைத் 'திருக்களந்தை ஆதித்தேச்சரம்' என்றும் சிலர் கூறுவர். சோழ நாட்டுக் காவிரிக்குத் தென் கரையில் திருத்தருப்பூண்டிக்கு மேற்கே 5 மைலிலுள்ள திருக்களர் என்ற தலத்திற்குத் தென்மேற்கில் சுமார் 2மை லில் முள்ளியாற்றின் தென் கரையில் 'களப்பாள்' (களந்தை) என்னும் ஊரிலுள்ள சிவாலயமே, ''ஆதித்தேச்சரம்' என்று கொள்ளஇடந்தருகிறது. களப்பாள் என்னும் ஊரிலுள்ளசிவா லயமே 'திருக்களந்தையாதித்தேச்சரம்' ஆகும். இக்களந்தை என்ற தலத்தில்தான் ''கூற்றுவநாயனர்'' திருவவதாரம் செய்ததாகும். இது தேவாரம் பெருத வைப்புத் தலமாகும்.

களப்பாளுக்கு அண்மையில் திருவிசைப்பாப் பெற்ற 'திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம்' என்ற தலமும், திருத்தருப் பூண்டிக்கு அண்மையில் திருவிசைப்பாப் பெற்ற ''திருமுகத் தலை'' என்ற தலமும் உள்ள ஒரு தொடர்பு நோக்கி இக் களப்பாள் (கோயிற்களப்பாள்) என்ற தலம்தான் திரு விசைப்பாப் பெற்றது எனக்கொள்ள இடந்தருகிறது.

தொண்டைமண்டல சைவ வேளாளர்களின் கோத்தி ரங்களில் 'களப்பாளர் கோத்திரம்'என்பது ஒன்று. களப்பாளர் கோத்திர வழியில் வந்தவர்கள் வாழ்ந்த ஊர், 'களப்பாள்' என்பர். இது 'களந்தை' என மருவி நின்றது. திரு-அடை மொழி. விசயாலய சோழன் மகன் ஆதித்த சோழன் (கி. பி. 850–890) என்பவன் களப்பாள் என்ற தலத்தில் சிவாலயம் ஒன்று கட்டி வழிபட்டதனால் அது, 'ஆதித்தேச்சரம்' * (ஆதித்த + ஈச்சரம்) எனவழங்கப்பெற்றது.

திருக்களந்தையாதித்தேச்சரம் என்பதில் திருங்களந்தை என்பது தலத்தின் பெயர்; ஆதித்தேச்சரம் என்பது திருக் கோயிலின் பெயர். தீர்த்தம் – சிவதீர்த்தம். வழிபட்டோர் - கூற்றுவ நாயனர், ஆதித்த சோழன் முதலியோர்.

இறைவனின் பெயர் – ஆதித்தேச்சுவரர்.

இறைவியின் பெயர் – பிரபா நாயகி.

பொழிப்புரை: நூல்களால் உணர்த்தப்படும் பொருளும் அவற்ருல் பெறப்படும் அறிவுமாகி, என்னைக் கற்பு நெறி யால் பெற்றெடுத்து எனக்கே முலைப்பாலை(க் குடிக்கக்) கொடுத்தருளிய தாயைக்காட்டிலும் நல்லதைச் செய்கின்ற மூன்று கண்களையுடைய சிவபெருமான் (மகிழ்ந்து) எழுந் தருளிய இடம், மலையைக் குடைந்து இயற்றினுற் போன்ற

---

* இராசராசன் கட்டிய சிவாலயம் இராசராசேச்சரம் என்பது போல் ஆதித்த சோழன் கட்டிய சிவாலயம் 'ஆதித்தேச்சரம்'' எனப் பெயர் பெற்றதென்க.

நீண்ட (பெரிய) வாயில்களையுடைய மாடங்களின் இடங்களிலெல்லாம் வேதங்களை நன்குணர்ந்த அந்தணர்கள் வேதங்களை முறையாக ஓதுவதானது கடல் அலைகளைப் போல் முழங்குகின்ற அழகிய குளிர்ச்சி பொருந்திய நீர் வளமுள்ள திருக்களந்தை என்னும் தலத்தில் அழகுடன் விளங்கும் ஆதித்தேச்சரம் என்ற திருக்கோயிலாகும் என்றவாறு.

விளக்கம் : மலை குடைந்(த)து அனைய மாடம்-இது மாடங்களின் மிக்கவுயர்ச்சியைக் காட்டுவது. கலைகள்-நூல்கள். முக்கணன்-சூரியன் சந்திரன் அக்கினி என்ற மூன்று கண்களைக் கொண்ட சிவபெருமான். வலக்கண் சூரியனாகவும் இடக்கண் சந்திரனாகவும், நெற்றிக் கண் அக்கினியாகவும் கொள்ளப்படும். நெடுநிலை-பெரிய வாயில். ' ஓத்து-(ஓதப் படுவது) வேதம்; இது வழி வழியாக ஆசிரியர் வாய்மொழியாக முறை வைத்துச் சொல்ல மாணவர்கள் முறை வைத்து ஓதுவதாம். கற்பு-கற்பித்த வழியில் நிற்றல்.

தாயினும், இன்: ஐந்தாம் வேற்றுமை எல்லைப்பொருள்: முக்கணன்: காரண இடுகுறிப்பெயர். மருங்கு எ(ல்)லாம் ஒருமைப் பன்மை மயக்கம். போலும்: அசை. 1

சந்தன களபம் துதைந்தநன் மேனித்
தவளவெண் பொடிமுழு தாடுஞ்
செந்தழல் உருவிற் பொலிந்துநோக் குடைய
திருநுதல் அவர்க்கிடம் போலும்;
இந்தன விலங்கல் எறிபுனந் தீப்பட்(டு)
எரிவதொத்(து) எழுநிலை மாடம்
அந்தணர் அழலோம்(பு) அலைபுனற் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே,

பொழிப்புரை: கலவையோடு கூடிய சந்தனக் குழம்பு பூசப்பட்ட அழகிய திருமேனியில் கற்பூரம் போன்ற வெண்மையான திருநீற்றை எங்கும் உத்தூளனமாகப் பூசப் பெற்றுச் செந்தீப்போன்ற உருவத்தோடு விளங்கி நின்ற, அழகிய நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் எழுந்தருளிய இடம், விறகு மலைபோன்று வெட்டப்பட்ட காடு தீப்பற்றி எரிகின்ற தோற்றத்தைப் போல, ஏழு அடுக்குள்ள வாயில்களையுடைய மாளிகைகளில் அந்தணர்கள் ஓமாக்கினியை வளர்க்கின்ற அலைகளைக் கொண்ட நீர் நிலைகள் (சூழ்ந்த)திருக்களந்தை என்னும் தலத்தில் அழகுடன் விளங்கும் ஆதித்தேச்சரம் என்ற திருக்கோயிலாகும் என்றவாறு.

விளக்கம்: களபம்-கலவைச்சாந்து. தவளம் - கற்பூரம். வெண் பொடி-விபூதி. உரு-நிறம். நோக்கு-கண். திருநுதல் நோக்கு-நெற்றிக்கண். இந்தனம்-விறகு. விலங்கல்-மலை. புனம்-காடு. எறி-வெட்டப்பட்ட. அழல்-ஓமாக்கனி. மலை போன்ற விறகுக் குவியல் உள்ள காடு. தீப்பற்றி எரிவது போல, உயர்ந்த மாளிகைகளில் அந்தணர் வளர்க்கும் ஓமாக்கினி எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் என்க.

போலும்: அசை. ஒத்து: உவமவுருபு. பின்னிரண்டடிகளில் உள்ளது உவமையணி. 2

கரியரே இடந்தான் செய்யரே ஒருபால்
கழுத்திலோர் தனிவடஞ் சேர்த்தி
முரிவரே முனிவர் தம்மொ(டு)ஆல் நிழற்கீழ்
முறைதெரிந்(து) ஒருடம் பினராம்
இருவரே முக்கண் நாற்பெருந் தடந்தோள்
இறைவரே மறைகளும் தேட
அரியரே யாகில் அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே.

பொழிப்புரை: (உமாதேவியார் எழுந்தருளியிருப்பதால்) இடப்பக்கத்தில் கருமை நிறம் பொருந்தியவரே (ஆனால்), ஒரு பக்கத்தில் (வலப்பக்கத்தில்) செந்நிறம் உடையவரே; (தம்) கழுத்தில் ஒப்பற்ற (கண்டிகை) மாலை அணிந்து, சனகாதி முனிவர் நால்வர்களுக்குக் கல்லால நிழற்கீழ் (இருந்து ஞானயோக) முறையினை அறியும்படி செய்து விளங்குபவரே; ஒரே உடம்பில் ஆண் பெண் வடிவெற்று விளங்கும் தன்மையான இருவரே; மூன்று கண்களும் நான்காகிய பெரிய அகன்ற தோள்களுமுடைய சிவபெருமானே; (நான்கு) வேதங்களும் தேடி அறிதற்கு அருமையானவரே; அப்படியானால் அத்தகைய இறைவன் எழுந்தருளிய இடம், திருக்களந்தை என்னும் தலத்தில் அழகுடன் விளங்கும் ஆதித் தேச்சரம் என்ற திருக்கோயிலாகும் என்றவாறு.

விளக்கம்: இடந்தான் கரியவர் - உமையொருபாகர் வடிவம். இடங்கரியர் என்பதற்குத் திருமாலை இடப்பாகத்தில் உடையவர் என்று பொருள் கூறுதலுமாம்; இது சங்கரநாராயணர் வடிவம்: "மண்ணினையுண்ட மாயன் தன்னை ஓர் பாகங் கொண்டார்" என்பது அப்பர் தேவாரம். செய்யர் - செந்நிறங் கொண்டவர்: "சிவனெனும் நாமந் தனக்கே யுடையசெம்மேனி எம்மான்" என்பது அப்பர் தேவாரம். வடம்-கண்டிகை மாலை. முரிவர்-விளங்குபவர். முனிவர்-சனகாதிமுனிவர்கள். ஒருடம்பினராம் இருவர் - இது அர்த்தநாரீச்சுரர் வடிவம். "ஒருடம் பிருவ ராகி ஒளிநிலா எறிக்குஞ் சென்னிப்...பரம மூர்த்தி" என்பது அப்பர் தேவாரம்.

ஆகில் என்பதைக் கரியரே, செய்யரே முதலியவற்றோடு கூட்டுக. மூன்று + கண் = முக்கண். தடந்தோள், தட: உரிச்சொல்,

பழையராந் தொண்டர்க்(கு) எளியரே மிண்டர்க்(கு)
அரியரே பாவியேன் செய்யும்
பிழையெலாம் பொறுத்(து)என் பிணிபொறுத் தருளாப்
பிச்சரே நச்சரா மிளிரும்
குழையராய் வந்(து)என் குடிமுழு தாளுங்
குழகரே ஒழுகுநீர்க் கங்கை
அழகரே யாகில் அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே.

பொழிப்புரை : (சிவபெருமான்), தொன்று தொட்டுத் தொண்டு பூண்டு வரும் பழ வடியார்க்கு எளியவரே; (ஆனால்), முரடருக்கு அரியவரே; பாவியாகிய யான் செய்கின்ற குற்றங்களை யெல்லாம் பொறுத்தருளி, எனது (பிறவி) நோயைத் தீர்த்தருளாத பித்தரே; நஞ்சையுடைய பாம்பை ஒளிவீசும் காதணியாக அணிந்தவராய் வந்தருளி, என் குலம் முழுவதையும் ஆளுகின்ற (என்றும்) இளமைத் தன்மை யுடையவரே; ஒழுகுகின்ற நீரையுடைய கங்கா தேவியை(ச் சடையில் அணிந்த) அழகுடையவரே; அப்படியாகில், அத்தகைய இறைவன் எழுந்தருளிய இடம், திருக்களந்தை என்னும் தலத்தில் அழகுடன் விளங்கும் ஆதித்தேச்சரம் என்ற திருக்கோயிலாகும் என்றவாறு.

விளக்கம் : பழையராம் தொண்டர் - இவர் தொன்று தொட்டு அருந்தவம் செய்து, பக்தி வைராக்கியத்துடன் சிவத் தொண்டை மேற்கொண்டொழுகும் மெய்யன்பர் ஆவர். மிண்டர் - முரடர்; துஷ்டர். "பழையராம் தொண்டர்க்குஎளியரே, மிண்டர்க்கு அரியரே": "கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால் விரவாடும் பெருமானை" என்பது அப்பர் தேவாரம். பிச்சர்-பித்தர். நச்சு-விடம். குழை – காதணி. குழகர் – இளமையுடையவர்.

பிச்சர்: போலி. அருளா: ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சம். 4

பவளமே மகுடம் பவளமே திருவாய்
பவளமே திருவுடம்(பு) அதனில்
தவளமே களபம் தவளமே புரிநூல்
தவளமே முறுவல்ஆ டரவம்
துவளுமே கலேயும் துகிலுமே ஒருபால்
துடியிடை இடமருங்(கு) ஒருத்தி
அவளுமே ஆகில் அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே.

பொழிப்புரை: (சிவபெருமானின்) சடைமுடி, பவளம் போன்ற செந்நிறமே; அழகிய வாய், பவளம் போன்ற செந்நிறமே; அழகிய திருமேனி, பவளம் போன்ற செந் நிறமே; அத்திருமேனியில் கலவைச் சாந்தாகப் பூசப்பட்ட திருநீறு வெண்ணிறமே; முருக்கோடு கூடிய பூணூல் வெண்ணிறமே; திருநகை (பற்கள்) வெண்ணிறமே; ஆடுகின்ற பாம்பு வளேந்து தொங்கிக்கொண்டிருக்குமே; மேகலேயும் சேலேயும் உடுக்கைபோன்ற இடையில் தரித்த ஒரு பெண் (உமாதேவியார்) இடப்பக்கத்தில் இருப்பாளே; அப்படியாகில் அத்தகைய இறைவன் எழுந்தருளிய இடம், திருக்களந்தை என்னும் தலத்தில் அழகுடன் விளங்கும் ஆதித்தேச்சரம் என்ற திருக்கோயிலாகும் என்றவாறு.

விளக்கம்: மகுடம் - சடை முடி. தவளம்-வெண்ணிறம். களபம் - வெண்சாந்து; விபூதி. புரி-முருக்கு. நூல்-பூணூல். முறுவல் - பற்கள். கலே-இடையணி; மேகலே. துகில்-சேலே. துவளல் - வளேதல். துடியிடை - உடுக்கை போன்ற இடை. இட மருங்கு ஒரு பால் - இடப் பக்கத்தில். ஒருத்தி அவள்- ஒரு பெண்; உமாதேவியார். சிவபெருமானின் திருமுடி,

திருவாய், திருமேனி: இவை, பவளம்போல் செந்நிறமுடையவை. அவர் அணிந்துள்ள திருநீறு, பூணூல், அவரது பற்கள் : இவை வெண்ணிற முடையவை.

ஆடரவம் : வினைத்தொகை. துடியிடை : உவமத் தொகை. ஒருத்தி அவள் : இருபெயரொட்டு.

நீலமே கண்டம் பவளமே திருவாய்
நித்திலம் நிரைத்(து)இலங் கினவே
போலுமே முறுவல் நிறையஆ னந்தம்
பொழியுமே திருமுகம் ஒருவர்
கோலமே அச்சோ அழகிதே என்று
குழைவரே கண்டவர் உண்ட(து)
ஆலமே ஆகில் அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே.

பொழிப்புரை : (சிவபெருமானின்) திருக்கழுத்து நீல நிறமே; திருவாய் பவளம் போன்ற செந்நிறமே; பற்கள் (வெள்ளிய) முத்துக்களை வரிசையாகப் பதித்துப் பிரகாசிப்பன போலத் தோன்றுமே; திருமுகம் நிறைய மகிழ்ச்சியைக் காட்டுமே; 'ஆ! (அந்த) ஒப்பற்றவரது திருவுருவம் (எவ்வளவு) அழகானது' என்று பார்த்தவர்கள் மனம் உருகுவரே; (அவர்) உண்டது நஞ்சே; அப்படியானால் அத்தகைய இறைவன் எழுந்தருளிய இடம், திருக்களந்தை என்னும் தலத்தில் அழகுடன் விளங்கும் ஆதித்தேச்சரம் என்ற திருக்கோயிலாகும் என்றவாறு.

விளக்கம் : நீலம் - கருமணி. நித்திலம் - முத்து. நிரை-வரிசை. முறுவல்-பற்கள். ஆனந்தம்-பெருமகிழ்ச்சி. பொழிதல்-பெய்தல். கோலம்-உருவம்; வடிவம். அச்சோ-அதிசயம்

உணர்த்தும் சொல். குழைதல் - மனம் உருகுதல். ஆலம் - ஆலகால விஷம். இறைவன் நஞ்சுண்ட வரலாறு: "வடங்கெழு மலைமத் தாக வானவர்அசுரரோடு, கடைந்திடஎழுந்த நஞ்சங் கண்டுபஃ றேவர் அஞ்சி, அடைந்து நும்சரணம் என்ன அருள்பெரி துடைய ராகித், தடங்கடல் நஞ்சம் உண்டார் சாய்க்காடு மேவி னாரே" என்பது அப்பர் தேவாரம்.

கண்டம் நீலம், வாய் பவளம், முறுவல் நித்திலம்: இவை உருவகங்கள். அச்சோ : இடைச்சொல். நீலம் ஆகு பெயர். 6

திக்கடா நினைந்து நெஞ்சிடிந்(து) உருகும்
திறத்தவர் புறத்திருந்(து) அலச
மைக்கடா அனைய என்னையாள் விரும்பி
மற்றொரு பிறவியிற் பிறந்து
பொய்க்கடா வண்ணங் காத்தெனக்(கு) அருளே
புரியவும் வல்லரே எல்லே
அக்கடா ஆகில் அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே.

பொழிப்புரை : 'புகலிடமாக அடையத்தக்க ஆதரவு (நீயே) ஆவாய்' என்று எண்ணி மனம் கரைந்து உருகும் வகையினர் ஒருபுறம் இருந்து வருந்தவும், (ஒரு முயற்சியிலேனும் ஈடுபடாமல் உலகம் என்ற நீர் நிலையில் விழுந்து உழன்று கிடக்கும்) எருமைக்கடாவினைப் போன்ற என்னை இன்னமும் வேறொரு பிறவியில் பிறந்து பொய்ந் நெறியிற் சென்று அடையாதபடி ஆட்கொள்ள விரும்பிப் பாதுகாத்து எனக்கு இனிய கருணையையே செய்யவும் (சிவபெருமான்) வல்லவரே; (அவரது) பேரொளியே வியக்கத் தக்கதாக இருக்குமே அப்படியானால், அத்தகைய இறைவன் எழுந்தருளிய இடம், திருக்களந்தை என்னும் தலத்தில் அழகுடன்

விளங்குகின்ற ஆதித்தேச்சரம் என்ற திருக்கோயிலாகும் எனறவாறு.

விளக்கம்: திக்கடா (திக்கு + அடு + அ) எனப் பிரித்து, திக்கு-புகலிடம், அடு-ஆதரவு, ஆ-ஆவாய் எனப் பொருள் கொள்க. அன்றியும், திக்கு அடா-பல திசைகளில் உள்ள வர்களை வென்று, நினைந்து- (மேலும் வென்று மேன்மை பெற) எண்ணி (முடியாமல்), நெஞ்சு இடிந்து - மனம் உடைந்து, உருகும் திறத்தவர் - வருந்தும் தன்மையினர், புறத்திருந்து அலச - ஒருபால் இருந்து வருந்தவும் என்று பொருள் கூறலுமாம். மை - எருமை. பொய்க்கு அடாவண்ணம்-பொய்ந் நெறியில் சேராதபடி; பிறமதங் களில் நுழையாதபடி. எல் - ஒளி. அக்கடா - வியப்புச் சொல். ஏனையோர் சிறப்புக்களைப்பெற முடியாமல் வருந்தி நிற்க, எனக்கு மட்டும் அருள வல்லவர் என்றதனுல், அன்னவர்களுக்குக் கிடைக்கப் பெருத சிறப்புக்களையும் சிவபெருமான் எனக்குக் கொடுத்தார் என்பதாம். இகபரம் இரண்டையும் தரவல்லவர் திருக்களந்தை யீசன் என்பது போந்த பொருள்.

பொய்க்கு: உருபு மயக்கம். அனைய: உவமவுருபு. அலச: வினையெச்சம்.

7

மெய்யரே மெய்யர்க்(கு) இடுதிரு வான
விளக்கரே எழுதுகோல் வளையாண்
மையரே வையம் பலிதிரிந்(து) உறையும்
மயானரே உளங்கலந் திருந்தும்
பொய்யரே பொய்யர்க்(கு) அடுத்தவான் பளிங்கின்
பொருள்வழி இருள்கிழித் தெழுந்த
ஐயரே யாகில் அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே.

பொழிப்புரை : (சிவபெருமான்) மெய்யடியார்களுக்கு உண்மைப்பொருளாயிருப்பவரே; (உண்மையடியவர்க்கு) வைப்பு நிதிபோன்ற சோதி வடிவினரே; சித்திரிக்கப்பட்ட அழகிய வளையல்கள் அணிந்த உமாதேவியாரை (ஒரு பக்கத்தில் உடைமையால் அப்பாகம்) கருநிறம் வாய்ந்தவரே; உலகத்தில் பிச்சையின்பொருட்டுத் திரிந்து மயானத்தில் வாழ்பவரே, (யாவருடைய) மனத்தில் பொருந்தியிருந்தும் மெய்யுணர்வு இல்லாதவர்களுக்கு (வெளிப்படாது) மறைந்திருப்பவரே;பக்கத்திலுள்ள மேலானபளிங்குக்கல்ஒளியைத் தன் வழியே செலுத்துமாறு போல, (அஞ்ஞான) இருளைப் போக்கி (என்னுள்) எழுந்தருளி வந்த குருமூர்த்தியே; அப்படியானல் அத்தகைய இறைவன் எழுந்தருளிய இடம், திருக்களந்தை என்னும்தலத்தில் அழகுடன் விளங்குகின்ற ஆதித்தேச்சரம் என்ற திருக்கோயிலாகும் என்றவாறு.

விளக்கம்: இடு திரு - வைப்பு நிதி; புதையல். கோல் வளையாள்-அழகிய வளையல்கள் அணிந்த உமாதேவியார். மை-கருமை. மையர் - கரு நிறமுடையவர். கோல் வளையாண்மையர்-அழகிய வளையல்கள் அணிந்த உமாதேவியாரை ஆளத்தக்க கணவர் என்று பொருள் கூறலுமாம். வான் பளிங்கு-மேலான பளிங்குக்கல். இருள் - அஞ்ஞான இருள். ஐயர்-ஆசாரியர்; குரு; கு-அஞ்ஞானத்தை, ரு-நீக்குபவன்-எனவே, ஞானத்தைத்தைத் தருபவன் குரு.

கோலம் + வளை = கோல் வளை. இதில் நிலைமொழியீற்று அம் கெட்டுப் புணர்ந்தது. மெய்யர், விளக்கர், மையர் பொய்யர், மயானர்: குறிப்பு வினையாலணையும் பெயர்கள். "அடுத்த வான் பளிங்கின் பொருள்வழி" என்பது உவமானம். "இருள் கிழித்தெழுந்த ஐயர்" என்பது உவமேயம். இத்தொடர்கள் உவமை யணி 8

———

குமுதமே திருவாய் குவளையே களமும்
 குழையதே இருசெவி ஒருபால்
விமலமே கலையும் உடையரே சடைமேல்
 மிளிருமே பொறிவரி நாகம்
கமலமே வதனம் கமலமே நயனம்
 கனகமே திருவடி நிலைநீர்
அமலமே ஆகில் அவரிடங் களந்தை
 அணிதிகழ் ஆதித்தேச் சரமே.

பொழிப்புரை : (சிவபெருமானின்), அழகிய திருவாய், செவ்வல்லி மலர்போலச் செந்நிற முடையதே; திருக்கழுத்தும் நீலோற்பல மலர் போலக்கருநிற முடையதே; இரண்டு திருச்செவிகளும் குழைகளை உடையனவே; ஒரு பக்கத்தில் தூய்மையான மேகலாபரணமும் உடையவரே; புள்ளிகளையும் கோடுகளையும் உடைய நல்லபாம்பு திருச்சடைமேல் பிரகாசிக்குமே; திருமுகம் செந்தாமரை மலரே; திருக்கண்கள் செந்தாமரை மலரே; பாதக்குறடுகள் பொன்னிறமுடையனவே; குணங்களின் தன்மை மிகப் பரிசுத்தமே; அப்படியானல், அத்தகைய இறைவன் எழுந்தருளிய இடம், திருக்களந்தை என்னும் தலத்தில் அழகுடன் விளங்கும் ஆதித்தேச்சரம் என்ற திருக்கோயிலாகும் என்றவாறு.

விளக்கம்:குமுதம்-செவ்வல்லிமலர். குவளை-நீலோற் பல மலர். களம்-கழுத்து. விமலம்-பரிசுத்தம். மிளிர்தல்-பிரகாசித்தல். வரி-கோடு. நாகம்-மலைகளில் வாழ்வது; பாம்பு. (நகம்-மலை.) நயனம்-கண். கனகம் - பொன். திருவடி நிலை-பாதக்குறடு. நீர்(மை)-குணம். அமலம் - பரிசுத்தம்; களங்கமில்லாதது. திருவடிநிலை கனகமே - திருவடியாகிய உயிர்கள் சென்று அடையும் இடம் பொன்னிற முடையதே; நீர் அமலமே ஆகில் - இறைவனது தன்மைகள் தூய்மை

யுடையதா யிருக்குமேயானுல் என்றும் பொருள்கூறுவர். 'ஒருபால் விமல மேகலையும் உடையவர்' என்றது சிவபெருமான் தனது இடப்பால் அழகிய மேகலை என்னும் ஆபரணத்தை அணிந்த உமாதேவியாரை உடையவர் என்பதைக் குறிப்பதுமாகும். (திருவடி நிலை) நீர் அமலம் - இறைவனின் திருவடியில் பொருந்திய நீர் (பாவங்களைப் போக்கும்) பரிசுத்தமே ஆனுல் என்றும் சிலர் பொருள் கொள்வர். குழை-காதணி. சிவபெருமானின் காதணி பாம்பு ஆகும்: ''பாம்பிணையாக் குழை கொண்டோன்'' என்பது திருக்கோவையார். ''நச்சராமிளிரும் குழையர்''என்பது இப்பதிகம் 4 ஆவது பாட்டு.

குமுதம், குவளை: முதலாகுபெயர்கள். சடைமேல்,மேல்: ஏழனுருபு. பொறி வரி: உம்மைத்தொகை. நாகம்: காரணப் பெயர். 9

நீரணங்(கு) அசும்பு கழனிசூழ் களந்தை
நிறைபுகழ் ஆதித்தேச் சரத்து
நாரணன் பரவும் திருவடி நிலைமேல்
நலமலி கலைபயில் கருவூர்
ஆரணம் மொழிந்த பவளவாய் சுரந்த
அமுதமு றியதமிழ் மாலை
ஏரணங்(கு) இருநான்(கு) இரண்டிவை வல்லோர்
இருள்கிழித்(து) எழுந்தசிந் தையரே.

பொழிப்புரை: தண்ணீர் அழகாக இடையருது பாய்கின்ற வயல்கள் சூழ்ந்த திருக்களந்தைப்பதியில் உள்ள நிறைந்த புகழையுடைய ஆதித்தேச்சரம் என்ற திருக்கோயிலில், திருமால் துதித்து வழிபடுகின்ற (சிவபெருமானது) திருவடிகள்மீது, மிக்க நன்மையைத் தரத்தக்க பலகலைகளைப் பயின்ற கருவூர்த் தேவருடைய வேதங்களை ஓதும் பவளம் போன்ற வாயினிடத்துச் சுரந்த அமுதங்

கலந்த (பேரின்பத்தை அளிக்கும்) தமிழ் மாலையின் மிக்க அழகு பொருந்திய பத்துப் பாடல்களாகிய இவற்றைக் கற்றுப்பாட வல்லவர்கள் அஞ்ஞானத்தைப் போக்கி (ஞானம்) எழுந்த மனமுடையவரே ஆவர் என்றவாறு.

விளக்கம்: அணங்கு - அழகு. அசும்பு - கசிதல்; பாய்தல். இப்பதிக ஆசிரியர் திருக்களந்தை என்ற ஊரை "அந்தண் நீர்க் களந்தை" (முதற்பாட்டு) என்றும், "அலை புனற் களந்தை" (2- ஆம் பாட்டு) என்றும், "நீரணங்கசும்பு கழனி சூழ் களந்தை" என்றும் புகழ்வதால் சோழ நாட்டில் காவிரியின் தென்கரையில் உள்ள நீர் வள மிகுந்த திருக்களந்தையே ஆகும். பரவுதல் - துதித்தல். கருவூர்- கருவூர்த் தேவர். ஆரணம் - வேதம், வேதசாகைகள். கருவூர்த் தேவர் அந்தணர் குலத்தினர்; வேதம் ஓதும் பயிற்சியுடையவர்; ஆதலால் தமது வாயை, "ஆரணம் மொழிந்த பவளவாய்" என்று அவர் கூறிக்கொண்டனர். தமிழ் மாலை - தமிழ்ப் பதிகமாகிய மாலை; இது பத்துப் பாடல்களையுடையது. பத்துக்கு மேற்பட்ட பல பாடல்களையுடைய பகுதிக்கும் பதிகம் என்று கூறுதல் ஆன்றோர் வழக்கு. 'நலமலிகலைபயில் கருவூர்' - இத்தொடர் கருவூர்த் தேவர் சகல கலைஞானங்களும் கைவரப் பெற்றவர் என்பதைப் புலப்படுத்தும். ஏர் - அழகு. இருநான்கு இரண்டு - பத்து. இருள்-இங்கு அஞ்ஞானம்.

பவளவாய்: உவமத் தொகை. ஏர் அணங்கு: ஒரு பொருட்பன்மொழி. சிந்தையரே, ஏ: தேற்றம். 10

திருச்சிற்றம்பலம்

---

3. திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம்*

பண் – பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

தளிரொளி மணிப்பூம் பதஞ்சிலம்(பு) அலம்பச்
சடைவிரித்(து) அலையெறி கங்கைத்
தெளிரொளி மணிநீர்த் திவலைமுத்(து) அரும்பித்
திருமுகம் மலர்ந்துசொட்(டு) அட்டக்
கிளரொளி மணிவண்(டு) அறைபொழிற் பழனம்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வளரொளி மணியம் பலத்துள்நின் ருடும்
மைந்தன்என் மனங்கலந் தானே.

திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம்: † சோழ நாட்டுக் காவிரிக்குத் தென்கரையில் உள்ள சிவத்தலங்களுள் 111 ஆவது தலம், திருக்கோட்டூர் ஆகும். கோட்டூர்: கோடு-மரக் கிளை; கிளைகள் நிறைந்த மரங்களைக் கொண்ட சோலைகள் சூழ்ந்த ஊர் கோட்டூர் எனப்படும். இது பற்றியே இறைவனுக்குக் "கொழுந்து நாதர்" என்ற பெயர் வழங்குகிறது. "கொந்துலாமலர் விரிபொழிற் கோட்டூர் நற்கொழுந்தினை" என்பது சம்பந்தர் தேவாரம். இத்தலம் திருத்தருப்பூண்டிக்கு வட மேற்கே 8 மைலிலும், இராசமன்னார்குடிக்குத் தென் கிழக்கே 9 மைலிலும், திருக்களர்க்கு வடக்கே 4 மைலிலும் உள்ளது. இது ஊருக்கு மேல்பால் உள்ளதால் 'மேல்கோட்டூர்' எனப்படும். இதுவே தேவாரப்பதிகம் பெற்ற தலம். இத்

---

* இப்பதிகம் தலைவனிடம் காதல் கொண்ட தலைவியின் கூற்றாக அமைந்துள்ளது.

† இக்குறிப்புக்களைத்தந்து உதவிய நண்பர்: திரு. V. பக்கிரிசாமி செட்டியார் B. A., ஆனர்ஸ், B. Ed. அவர்கள், பள்ளித் துணைத் தணிக்கையாளர், திருமயம், திருச்சிராப்பள்ளி.

தலத்திற்குக் கீழ்ப்பகுதியில் உள்ள சிவாலயமே, 'திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலம்' ஆகும். இது தேவாரப் பாடல் பெறாத தலம் ஆகும். இங்கு ஐராவதத்தின் மணி விழுந்ததால் இந்த இடம் 'மணியம்பலம்' என்ற பெயர் பெற்றதாகும். சிவ பெருமான் திருநடனம் காட்டிய திருவம்பலங்கள் 64ஆகும். அவற்றுள் திருக்கீழ்க் கோட்டூர் மணியம்பலமும் ஒன்றும். திருக்கீழ்க்கோட்டூர் என்பது கோட்டூரின் கீழ்ப்பகுதியி லுள்ள ஊர்; மணியம்பலம் என்பது சிவாலயத்தின் பெயர்.

இத்திருக்கீழ்க்கோட்டூர் ஐராவதேச்சரம், நாக நாதேச் சரம், மணியம்பலம் என்ற பலபெயர்களைப் பெற்று விளங் குவது. தலவிருட்சம் - வன்னி. தீர்த்தம் - இந்திர தீர்த்தம், முனிதீர்த்தம் முதலியன. இங்குப் பிரமன், இந்திரன், ஐரா வதம், நாகர் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றனர்.

இறைவனின் பெயர் – அமுதலிங்கேசுவரர், ஐராவதேசுவரர், மணியம்பலநாதர்.

இறைவியின் பெயர் – அமுதாம்பிகை, மணியம்பலநாயகி.

பொழிப்புரை: தளிர்போலும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் மாணிக்கம் போன்ற அழகிய பாதங்களில் உள்ள சிலம்புகள் ஒலிக்கவும், விரித்த சடையின்மேல் அலைகள்மோதும் கங்கா நதியின் தெளிந்த ஒளியையுடைய அழகிய நீர்த் திவலைகள் முத்துக்கள்போல் அரும்பி, மலர்ந்த திருமுகத்தினின்றும் சொட்டுச் சொட்டாக விழவும், மேலான ஒளியை வீசும் நீலமணி போன்ற வண்டுகள் சோலைகளிலும் வயல்களிலும் தங்கள் ரீங்கார ஒலியினால் மிகுந்த ஆரவாரத்தைச் செய் கின்ற திருக்கீழ்க்கோட்டூர் என்னும் தலத்தில் திகழும் மிக்க ஒளியையுடைய மணியம்பலத்துள் நின்று நடனம் புரிகின்ற அழகனாகிய சிவபெருமான் என் மனத்தோடு கலந்து ஒன்றுபட்டான் என்றவாறு.

விளக்கம்: பதம்-பாதம். அலம்ப-ஒலிக்க. நீர்த்திவலை-நீர்த்துளி. மணிவண்டு-கருவண்டு. பழனம்-வயல். கெழுவு-மிகுந்த. கம்பலை-ஆரவாரம். மைந்தன்-அழகன்; வலியனுமாம். சொட்டு-துளி. அட்ட-விழ. என் என்றது தலைவியை.

அலம்ப, அட்ட, கலந்தான் எனமுடிக்க. நீர்த்திவலை: வேற்றுமைத் தொகை. 1

துண்டவெண் பிறையும் படர்சடை மொழுப்பும்
சுழியமும் சூலமும் நீல
கண்டமுங் குழையும் பவளவாய் இதழும்
கண்ணுதல் திலகமுங் காட்டிக்
கெண்டையுங் கயலும் உகளுநீர்ப் பழனங்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வண்டறை மணியம் பலத்துள்நின் றுடும்
மைந்தன்என் மனங்கலந் தானே.

பொழிப்புரை : ஒரு கலையாகிய வெள்ளிய பிறைச்சந்திரனையும், பரவிய சடைமுடியையும், உச்சிக் கொண்டையையும், சூலத்தையும், நீலகண்டத்தையும், காதணியையும், பவளம்போன்ற வாயின் உதடுகளையும், நெற்றிக்கண்ணின் மேல் அமைந்த பொட்டையும் காட்டிக்கொண்டு, சேல் மீனும் கயல்மீனும் குதிக்கின்ற நீரையுடைய வயல்களிடத்து (உழத்தியர்கள்) மிகுந்த ஆரவாரத்தைச் செய்கின்ற திருக்கீழ்க்கோட்டூர் என்னும் தலத்தில் திகழும் வண்டுகள் ரீங்காரம்செய்யும் மணியம்பலத்துள் நின்று நடனம் புரிகின்ற அழகனுகிய சிவபெருமான் என் மனத்தோடு கலந்து ஒன்றுபட்டான் என்றவாறு.

விளக்கம் : துண்டம்-துண்டு; இங்கு ஒருகலை. சடைமொழுப்பு-சடைமுடி; (மொழுப்பு-கட்டு). சுழியம்-உச்சிக்

கொண்டை. நீலகண்டம் - விஷம் உண்டதனுல் கறுத்த கண்டம். கெண்டை, கயல் - இவை மீன்களின் வகை. வண்டு அறை-வண்டுகள் ரீங்காரம் செய்கின்ற.

துண்ட வெண்பிறை: இருபெயரொட்டு. காட்டி நின்ருடும் மைந்தன் என முடிக்க. 2

திருநுதல் விழியும் பவளவாய் இதழும்
திலகமும் உடையவன் சடைமேல்
புரிதரு மலரின் தாதுநின்(று) ஊதப்
போய்வருந் தும்பிகாள்! இங்கே
கிரிதவழ் முகிலின் கீழ்த்தவழ் மாடம்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வருதிறல் மணியம் பலவனைக் கண்(டு)என்
மனத்தையுங் கொண்டுபோ துமினே.

பொழிப்புரை : அழகிய நெற்றிக் கண்ணையும், பவளம் போன்ற வாயினிடத்துள்ள உதடுகளையும்,(நெற்றிப்) பொட்டையும் உடையவனுகிய சிவபெருமானது சடைமுடியின் மேல் (உங்களுக்கு) விருப்பத்தைத் தரும்பூக்களின் மகரந்தப்பொடிகள் மெல்லிதாக விழும்படி ரீங்காரஞ் செய்யப் போய்வருகின்ற வண்டுகளே! மலைகளின் மீது தவழ்கின்ற மேகத்தின் கீழே தவழும் மாளிகைளில் (மக்களின் ஆடல் பாடல்களினுல்) மிகுந்த ஒலிகள் பொருந்திய திருக்கீழ்க் கோட்டூர் என்னும் தலத்தில் திகழும் ஒளிபொருந்திய மணியம்பலத்துள் நின்று நடிக்கும் தலைவனைக் கண்டு (அவனிடங் கலந்த) என்மனத்தைப் பெற்றுக் கொண்டு இங்கே திரும்பி வாருங்கள் என்றவாறு.

விளக்கம்: இப்பாடல் வண்டுவிடு தூது. தலைமகனைப் பிரிந்த தலைவி அவன்பால் தும்பியைத் தூதாக

விடுக்கின்ருள். புரி-விருப்பம். தாது - மகரந்தப் பொடி. தும்பி-வண்டு. கிரி-மலை. முகில்-மேகம். முகிலின் கீழ் தவழ் மாடம்-இது மாளிகைகளின் மேல் மேகங்கள் தவழ்கின்றன என்பதைக் குறிப்பது. இதனல் மாளிகைகளின் மிக உயர்ச்சி தோன்றுகின்றது. திறல்-ஒளி. இங்கே கொண்டுபோது மின்-பெற்றுக் கொண்டு இங்கே திரும்பி வாருங்கள். என் மனத்தையும் கொண்டு போதுமின் - (பிரிந்து வருந்தும்) என்மனத்தையும் கொண்டுபோய் அவனிடம் சேர்ப்பியுங்கள் என்று பொருள் கூறலுமாம். மணியம்பலவன்-மணியம் பலம் என்ற இடத்தில் நடிக்கும் சிவபெருமான்.

தும்பிகாள்: விளி. போதுமின்: முன்னிலைப் பன்மை வினைமுற்று. உடையவன்: வினையாலணையும் பெயர். "முகிலின் கீழ்த் தவழ் மாடம்"- இத்தொடர் உயர்வு நவிற்சியணி. 3

தெள்ளுநீ றவன்நீ(று) என்னுடல் விரும்பும்;
செவியவன் அறிவுநூல் கேட்கும்;
மெள்ளவே அவன்பேர் விளம்பும்வாய்; கண்கள்
விமானமே நோக்கிவெவ் வுயிர்க்கும்;
கிள்ளைபூம் பொதும்பிற் கொஞ்சிமாம் பொழிற்கே
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வள்ளலே! மணியம் பலத்துள்நின் ருடும்
மைந்தனே! என்னும்என் மனனே.

பொழிப்புரை: எனது உடல், (மனத்தைத்) தெளியச் செய்கின்ற திருவெண்ணீற்றைத் தரித்த சிவபெருமானது திருவெண்ணீற்றை (ப்பூசிக்கொள்ள) விரும்புகிறது; (எனது) காதுகள் அவனது சிவஞானத்தைப் பற்றித் தெரிவிக்கும் நூல்களையே கேளாநின்றன; (எனது)வாய், மெதுவாக அவனது திருநாமத்தைச் சொல்லுகின்றது; (எனது) கண்கள்

(அவனது) கோயிலின் விமானத்தையே பார்த்திருக்க (எனது மனம்) பெருமூச்சு விடுகிறது; கிளிகள் அழகிய மரச்செறிவுகளில் மழலைமொழி பேசி விளையாடி, மாஞ் சோலையை அடைதற்காக மிகுந்த ஆரவாரம் செய்கின்ற திருக்கீழ்க்கோட்டூர் என்னும் தலத்தில் எழுந்தருளிய வள்ளலே! மணியம்பலத்துள் நின்று நடிக்கும் வலிமையுடையோனே! என்று என்மனம் நினையாநிற்கும் என்றவாறு.

விளக்கம்: இப்பாடல் தலைவியின் இரங்கலைக் கூறுவது. அறிவு நூல்-சிவஞான நூல்கள். விமானம்-தூபி. நோக்கி-நோக்க. வெவ்வுயிர்க்கும்-மனம் பெருமூச்சு விடும். கிள்ளை-கிளி. பொதும்பு-மரச்செறிவு; சோலை. கொஞ்சுதல்-மழலைப் பேச்சுப் பேசி விளையாடல். மாம்பொழிற்கே கெழுவு-மாமரச் சோலையிலே பொருந்தி எனினுமாம் (கெழுவு - கெழுமி) வள்ளல்-வரையாது அளிக்கும் உதார சீலர். என்னும்-என்று நினைக்கும். மனன்-மனம்.

விரும்பும், கேட்கும், விளம்பும், வெவ்வுயிர்க்கும், என்னும்: செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றுக்கள். வள்ளலே, மைந்தனே: விளிகள். மனன்: கடைப்போலி. 4

தோழி!யாம் செய்த தொழில்என்?எம் பெருமான்
துணைமலர்ச் சேவடி காண்பான்
ஊழிதோ றூழி உணர்ந்(து)உளங் கசிந்து
நெக்குநைந்(து) உளங்கரைந்(து) உருகும்
கேழலும் புள்ளு மாகிநின் றிருவர்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
வாழிய மணியம் பலவனைக் காண்பான்
மயங்கவும் மாலொழி யோமே.

பொழிப்புரை: தோழியே! அனேக ஊழிக்காலங்களாக நினைந்து மனம் இளகி நெகிழ்ந்து நைந்து, உள்ளம் கரைந்து

உருகும் தன்மை வாய்ந்த பன்றியும் அன்னமுமாக வடிவுகொண்டு நின்ற திருமால் பிரமன் ஆகிய இருவரும் எம்பெருமானின் இரண்டு (செந்)தாமரை மலர் போன்ற திருவடிகளைக் காணும் பொருட்டு மிக்க ஆரவாரம் செய்கின்ற திருக்கீழ்க் கோட்டூர் என்னும் தலத்தில் திகழும் மணியம்பலத்துள் நின்று நடிக்கும் இறைவனை, (யாம்) காணும் பொருட்டு அறிவு கலங்கிக் காதல் மயக்கம் ஒழியோம்; (யாம் கைக்கொண்ட செயல் என்னே!) என்றவாறு.

விளக்கம்: துணை-இரண்டு; உயிர்த்துணையுமாம். ஊழி-உலக முடிவுக்காலம். கேழல்-பன்றி. புள்-பறவை; இங்கு அன்னப் பறவை. இருவர்-(முறையே) திருமால் பிரமன் ஆகிய இருவர். மால்-காதல். பிரமவிஷ்ணுக்களால் காண முடியாத மணியம்பலவனை நான் எப்படிக் காணவல்லேன்; ஆயினும் அவர்மீது கொண்ட காதல் நீங்காது நிற்கின்றேன் என்றுதலைவி இரங்கித் தோழியிடம் கூறுகிருள்.

தோழி: அண்மை விளி. காண்பான்: வினையெச்சம். வாழிய: அசை.

5

என்செய்கோம் தோழி!; தோழி!நீ துணையாய்
இரவுபோம்; பகல்வரு மாகில்
அஞ்சலோ என்னுன்; ஆழியும் திரையும்
அலமரு மாறுகண்(டு) அயர்வன்;
கிஞ்சுக மணிவாய் அரிவையர் தெருவில்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மஞ்சணி மணியம் பலவ!ஓ! என்று
மயங்குவன் மாலையம் பொழுதே.

பொழிப்புரை: தோழி! நீ(எனக்குத்) துணையாயிருக்க, (இந்த) இரவுக் காலம் (ஒருவாறு) கழியும்; (பிறகு) பகற் காலம் வருவதால் (நம்தலைவன் நம்மிடம் வந்து) அஞ்சாதே

என்று சொல்லமாட்டான்; (அப்பொழுது) கடலும் அதன் அலைகளும் ஒலித்து (என்னைக்) கலங்கும்படி செய்யும் என் பதை நோக்கி(நான்)தளர்கின்றேன்; முருக்கம் பூப்போன்ற செந்நிறம் பொருந்திய அழகிய வாயினையுடைய பெண்கள் வீதிகளில் (விளையாட்டுக்களால்) மிகுந்த ஆரவாரம் செய்கின்ற திருக்கீழ்க் கோட்டூர் என்னும் தலத்தில் திகழும் அழகைக் கொண்ட மணியம்பலத்துள் நின்று நடனம் ஆடுகின்றவனே! ஓ! என்று மாலைக் காலத்தைக்கண்டு மயங்குவேன்; தோழி! (நாம்) வேறு என்ன செய்ய வல்லோம்? என்றவாறு.

விளக்கம்: இப்பாடல் தலைவி பொழுது கண்டு இரங்கல் ஆகும். அஞ்சல் - பயப்படாதே. என்றுன்-என்று கூறுன். ஆழி - கடல். திரை - அலை. அயர்தல் - தளர்தல். அலமரு தல் - கலங்குதல். கிஞ்சுகம் - முருக்கம்பூ; இது செந்நிறம் பொருந்தியது. அரிவையர் - பெண்கள். ஓ - இரக்கம் குறிக் கும் சொல். மஞ்சு - அழகு; மேகமுமாம்.

செய்கோம்: தன்மைப்பன்மை எதிர்கால வினைமுற்று. தோழி: அண்மை விளி. ஓ: இரக்கம் குறிக்கும் இடைச் சொல். மாலையம் பொழுது: அம்: சாரியை. 6

தழைதவழ் மொழுப்பும் தவளநீற்(று) ஒளியும்
சங்கமும் சகடையின் முழக்கும்
குழைதவழ் செவியும் குளிர்சடைத் தெண்டும்
குண்டையும் குழாங்கொடு தோன்றும்
கிழைதவழ் கனகம் பொழியுநீர்ப் பழனம்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மழைதவழ் மணியம் பலத்துள்நின் ருடும்
மைந்தர்தம் வாழ்வுபோன் றனவே.

பொழிப்புரை : வில்வம் தரித்துள்ள திருமுடியும், வெண்மையான திருநீற்றின் ஒளியும்,சங்கொலியும்,சகடை என்ற வாத்தியப் பேரொலியும்,குழைஎன்னும் காதணிபொருந்திய திருச்செவிகளும், குளிர்ந்த செஞ்சடைக் கற்றையும், இடபமும் (ஆகிய இவை), திரள் திரளாகத் தோன்றுகின்ற ஒளி வீசும் பொற்பொடிகளைக் கொழிக்கின்ற நீர் நிறைந்த வயல்களில் (உழவர்கள் உழவுத்தொழிலால்) மிகுந்த ஆரவாரம் செய்கின்ற திருக்கீழ்க்கோட்டூர் என்னும் தலத்தில்திகழும் மேகங்கள் தவழ்கின்ற மணியம்பலத்துள் நின்று நடனமாடுகின்ற வலியோனாகிய இறைவனது செல்வங்கள் போலக் காணப்படுகின்றன என்றவாறு.

விளக்கம் : தழை - இங்கு வில்வம். வில்வம், கிளுவை, விளா, நொச்சி, மாவிலிங்கை என்பன பஞ்சவில்வமாகும். முக்கிளையான வில்வம் சிவபெருமானுக்குப் புனிதமான பத்திரமாகும். இதன் முள் சத்திவடிவாகும்; கோடு வேதமாகும்; வில்வத்தை ஆறுமாதம் வைத்தும் அர்ச்சனைக்குப் பயன்படுத்தலாம்; கிடைக்காவிடில் பூசித்ததைக் கழுவியும் சாத்தலாம். மொழுப்பு-இங்குத்திருமுடி. சங்கம்-(ஊதுகின்ற) சங்கு. சகடை-ஒரு விதவாத்தியம். இது ஜயகண்டை என்பதன் சிதைவு போலும்: "சகடையோ டார்த்தவன்றே" என்பது கம்பராமாயணம். சடைத்தெண்டு - சடைக் கற்றை. குண்டை - இடபம்; இது தரும தேவதையாகிய விடை. (குண்டை - இஃது அருகிய சொல்.) கிழை - ஒளி. மழை-மேகம். செல்வமல்லாத திருமுடி, நீற்றொளி, சங்கு, சகடை, குழை, சடைக்கற்றை, இடபம் ஆகிய இவற்றைச் செல்வம் போன்றன என்றது,அடியார்கள் இவற்றைச் சிவ ஞானச் செல்வமாக மதிப்பர் என்ற குறிப்பைக் கொண்டது.

மழை : பண்பாகு பெயர். வாழ்வு: கருவியாகு பெயராய்ச் செல்வத்தை உணர்த்திற்று. 7

தன்னக மழலைச் சிலம்பொடு சதங்கை
தமருகம் திருவடி திருநீறு
இன்னகை மழலை கங்கைகோங்(கு) இதழி
இளம்பிறை குழைவளர் இளமான்
கின்னரம் முழவம் மழலையாழ் வீணை
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மன்னவன் மணியம் பலத்துள்நின் ருடும்
மைந்தன்என் மனத்துள்வைத் தனனே.

பொழிப்புரை: தன்னிடத்திலுள்ள மழலை மொழிபோன்று ஒலிக்கும் சிலம்பும், சதங்கையும், உடுக்கையும், திருவடிகளும், திருவெண்ணீறும், இனிய புன்சிரிப்பும் மழலை மொழியும் உடைய கங்கையும்,கோங்க மலரும், கொன்றை மலரும், இளம்பிறைச் சந்திரனும், காதணியும் வளர்கின்ற இளமானும் (ஆகிய இவற்றையுடைய) கின்னர வாத்தியம், மத்தளம், மெல்லோசையுடைய யாழ், வீணை (ஆகிய இவை இடைவிடாது) மிகுந்த ஆரவாரம் செய்கின்ற திருக்கீழ்க் கோட்டூர் என்னும் தலத்தில் எழுந்தருளிய தலைவனும்,மணியம்பலத்துள் நின்று நடனம் செய்யும் அழகனுமாகிய சிவபெருமானை, என் மனத்தினுள்ளே இருக்கச் செய்தனன் என்றவாறு.

விளக்கம் : தன் அகம் - தன்னிடம். மழலை - திருந்தாத மெல்லிய வார்த்தை அல்லது மெல்லிய ஓசை. தமருகம் - உடுக்கை. இன்னகை - புன்சிரிப்பு. கோங்கு - கோங்கமலர். இதழி-கொன்றை மலர். குழை-காதணி. கின்னரம்-கின்னர வாத்தியம்; ஒருவகையாழுமாம். முழவம்-மத்தளம். யாழும் வீணையும் வெவ்வேறு இசைக் கருவிகள்: "இன்னிசை வீணையர் யாழினர் ஒரு பால்" என்பது திருவாசகம். 'சிலம்பு முதலியவற்றையுடைய மன்னவனை-மைந்தனை என் மனத்துள் வைத்தனன் என்றது' இடை விடாமல் இறைவனையும்

அவனுடைய செல்வங்களையும் தியானிக்கின்றேன் என்பதைக் குறிப்பிக்கும். 'மழலைச் சிலம்பு' என்ற தொடர் தஞ்சைப் பெரிய கோயிலில் (இராசராசேச்சரத்தில்) தொண்டுபுரிந்த தேவரடியாள் ஒருத்தியின் பெயராக இருந்தது என்பதை ஒரு கல்வெட்டுத் தெரிவிக்கிறது.

மழலைச் சிலம்பு : உவமத்தொகை. இன்னகை, இளமான் : பண்புத் தொகைகள். 8

யாதுநீ நினைவ(து)? எவரையாம் உடைய(து)?
எவர்களும் யாவையுந் தானாய்ப்
பாதுகை மழலைச் சிலம்பொடு புகுந்(து)என்
பனிமலர்க் கண்ணுள்நின் றகலான்
கேதகை நிழலைக்குருகென மருவிக்
கெண்டைகள் வெருவுகீழ்க் கோட்டூர்
மாதவன் மணியம் பலத்துள்நின் றாடும்
மைந்தன்என் மனம்புகுந் தானே.

பொழிப்புரை : எல்லா உயிர்களும் எல்லாப் பொருள்களும் தானேயாகி நின்றானும், பாதக்குறடு, மெல்லோசையான சிலம்பு என்பவற்றோடு உட்புகுந்து குளிர்ந்த தாமரை மலர் போன்ற என் கண்ணுள் நிலைத்து நின்று நீங்காதவனும், தாழம்பூவின் நிழலைக் கெண்டை மீன்கள் அணுகி (அதனைக்) குருகென்று (நினைத்துப்) பயந்து ஓடுகின்ற திருக்கீழ்க்கோட்டூர் என்னும்தலத்தில் எழுந்தருளிய பெருந்தவக் கோலங் கொண்டவனும், மணியம்பலத்துள் நின்று நடனம் புரியும் அழகையுடையவனும், ஆகிய எம் பெருமான் எனது மனத்துள் புகுந்து கொண்டான்; (ஆதலால்,மனமே!) நீ நினைவதற்கு (அவனைத் தவிர) வேறு என்ன உள்ளது?யாரை நாம்(துணையாகப்)பெற்றுள்ளோம்? என்றவாறு.

விளக்கம்: எவர்களும்-எல்லா உயிர்களும். யாவையும்-எல்லாப் பொருள்களும். பனி-குளிர்ச்சி. கேதகை-தாழம்பூ. குருகு-பறவைப்பொது. மருவி-அணுகி. வெருவு - பயந்து ஓடும். மா தவன்-தட்சிணுமூர்த்தி; இவர் சனகாதி முனிவர்க்காகத் தவக்கோலம் பூண்டவர். (மாது + அவன்): உமா தேவியை இடப்பாகத்தில் உடைய சிவபெருமான். மாதவன்-திருமாலுமாம். தாழையின் நிழலைக் கெண்டை மீன், குருகு என்று அஞ்சுதல்: "மடல் விண்ட முடத்தாழை மலர் நிழலைக் குருகென்று, தடமண்டு துறைக்கெண்டை தாமரையின் பூ மறைய" என்பது சம்பந்தர் தேவாரம்.

அகலான்: முற்றெச்சம். கேதகை: ஆகுபெயர். மாதவன்: சிலேடையணி. "கேதகை...வெருவு": மயக்க அணி. 9

அந்திபோல் உருவும் அந்தியிற் பிறைசேர்
அழகிய சடையும்வெண் ணீறும்
சிந்தையால் நினையிற் சிந்தையுங் காணேன்;
செய்வ(து)என்? தெளிபுனல் அலங்கல்
கெந்தியா வுகளுங் கெண்டைபுண் டரீகம்
கிழிக்குந்தண் பணைசெய்கீழ்க் கோட்டூர்
வந்தநாள் மணியம் பலத்துள்நின் ருடும்
மைந்தனே அறியும்என் மனமே.

பொழிப்புரை: மாலைக் காலத்துச் செவ்வானம் போன்ற திருவுருவையும், பிறைச்சந்திரனையுடைய செவ்வானம் போன்ற அழகிய சடையையும், வெண்ணிறமான விபூதியையும் மனத்தினுல் நினைந்து பார்க்கும்போது நான் நினைக்கின்றேன் என்ற உணர்ச்சியும் இழந்து அவன் வயம் ஆயினேன்; இனிச்செய்வது என்ன இருக்கிறது? தெளிந்த நீரில் ஒளிவிட்டுக்கொண்டு நெளிந்து சென்று

துள்ளிக் குதிக்கின்ற கெண்டை மீன்கள் தாமரைப் பூக்களைக் கிழிக்கின்ற குளிர்ச்சியான வயல்களில் (உழவர்கள் உழவுத் தொழிலை,) செய்கின்ற திருக்கீழ்க் கோட்டூர் என்னும் தலத்தில் திகழ்கின்ற புதுமையான மணியம்பலத்துள் நின்று நடனம் புரியும் வலிமையுடையோனே! என் மனக் கருத்தை அறியவல்லவன் என்றவாறு.

விளக்கம்: அந்தி-செவ்வானம்: "செவ்வானன்ன மேனி" என்பது அகநானூறு. அலங்கல் - ஒளி செய்தல். கெந்தித்தல்-குதித்தல். உகளல் - தாவுதல். புண்டரீகம் - தாமரை. பணை-வயல். வந்த - திகழ்கின்ற. நாள் - புதுமை; நாடோறும் எனினுமாம். சிந்தையும் காணேன் என்றது ஒரு தரம் நினைத்தவுடன் சித்த விருத்தி ஒடுங்குதலை.

என்: வினு. கெந்தியா: செய்யாஎன்னும் வாய்பாட்டு உடன்பாட்டு வினையெச்சம். காணேன்: தன்மை ஒருமை எதிர்மறை வினைமுற்று. மைந்தனே, ஏ : தேற்றம். 10

கித்திநின் ருடும் அரிவையர் தெருவில்
கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்
மத்தனை மணியம் பலத்துள்நின் ருடும்
மைந்தனை ஆரணம் பிதற்றும்
பித்தனேன் மொழிந்த மணிநெடு மாலை
பெரியவர்க்(கு) அகலிரு விசும்பில்
முத்தியாம் என்றே உலகர்ஏத் துவரேல்
முகமலர்ந்(து) எதிர்கொளும் திருவே.

பொழிப்புரை: கித்தி என்னும் விளையாட்டை நின்று கொண்டு ஆடுகின்ற பெண்கள் தெருக்களில் நிறைந்த ஆரவாரம் செய்கின்ற திருக்கீழ்க் கோட்டூர் என்னும் தலத்தில் எழுந்தருளிய பித்தனும், மணியம்பலத்துள்

நின்று நடனம் புரியும் வலிமையோனுமான சிவ பெருமானை, வேதத்தைப் பிதற்றுகின்ற பித்தனாகிய யான் (புகழ்ந்து) கூறிய அழகிய பெரிய தமிழ்ப் பாமாலையானது (ஓதுகின்ற பெருமையுடைய)பெரியோர்க்கு அகன்ற பெரிய தேவலோகத்தில் (இன்பத்துடன் இருப்பதோடு) முத்தியை யும் அளிக்கும் என்று கருதி உலகத்தவர் (இப்பாமாலையி னால் இறைவனைத்) துதிப்பாராயின் இலக்குமி தேவியும் முக மலர்ச்சியுடன்தானே எதிர்கொண்டு வந்து சிறப்பிப்பாள் என்றவாறு.

விளக்கம்: கித்தி-மகளிர் விளையாட்டுக்களில் ஒன்று. இஃது, ஒற்றைக்காலால் தத்தி நடந்து விளையாடல் என்பர். மத்தன் - பித்தன்; ஊமத்தை மலரை அணிந்தவனுமாம்: ''மத்த மாமலர் சூடிய மைந்தனர்'' என்பதும், ''பனிமத்த மலர் வைத்தார் பாம்பும் வைத்தார்'' என்பதும் அப்பர் தேவாரம். (மத்தம்-ஊமத்தை). ஆரணம் - வேதம். பிதற்றல்- இடைவிடாது சொல்லுதல். ''ஆரணம் பிதற்றும் பித்த னேன்'' என்றது கருவூர்த் தேவரை. இவர் அந்தணர் குலத் தினர் ஆதலால் தன்னை, ''ஆரணம் பிதற்றும்'' என்றார்; அன்றியும், ''செழுமறை தெரியும் திகழ்கருவூரனேன்'' என்று திருப்பூவணத் திருவிசைப்பாவிலும் கூறுவர். பித்தனேன்-இஃது அவரது பணிவுடைமையைக் காட்டுவது; பேரன்புடையவனாகிய யான் என்றலுமாம். நெடுமாலை - பெரிய பாமாலை. அதாவது பதிகம். இருவிசும்பு - தேவ லோகம்; சுவர்க்கம். முத்தி - வீட்டுலகம். திரு - இலக்குமி.

பித்தனேன்: வினையாலணையும் பெயர். எதிர்கொளும்: செய்யும் என்னும் முற்று. 11

திருச்சிற்றம்பலம்

4. திருமுகத்தலை

பண் – பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

புவனநா யகனே! அகவுயிர்க்(கு) அமுதே!
பூரணா! ஆரணம் பொழியும்
பவளவாய் மணியே! பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதீ! பன்னகா பரணா!
அவனிஞா யிறுபோன்(று) அருள்புரிந்(து) அடியேன்
அகத்திலும் முகத்தலை மூதூர்த்
தவளமா மணிப்பூங் கோயிலும் அமர்ந்தாய்
தனியனேன் தனிமைநீங் குதற்கே.

திருமுகத்தலை* : சோழநாட்டுக் காவிரிக்குத் தென்கரையில் திருத்தருப்பூண்டி என்னும் ஊருக்கு வடகிழக்கில் சுமார் 4 மைல் தொலைவில் தேவாரப் பாடல் பெறாத சிவத் தலங்களுள் ஒன்றாக உள்ளது திருமுகத்தலை ஆகும். இது திருத்தருப்பூண்டி நாகப்பட்டினம் செல்லும் பெருவழியில் 3 ஆவது மைலிலுள்ள கொக்காலடி என்ற ஊரில் இறங்கி, நேர் வடக்கே மாணுச்சேரி செல்லும் பாதையிலே ஒருமைலில் உள்ளது. இச்சிவத் தலம் மதுரைத் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனத்திற்குச் சொந்தமானது. தற்போது இத்தலம் 'பன்னத் தெரு' என வழங்கப்படுகிறது. இத்தலத்தில் எழுந்தருளிய மூர்த்தியின் பெயர் 'பன்னகாபரணர்' என்பதாகும். பன்னகாபரணர் வீற்றிருக்குமிடம் 'பன்னத்தெரு' என்று ஊருக்கு ஆயிற்றுப்போலும்.

---

* இக்குறிப்புக்களைத் தந்துதவிய நண்பர், திருத்தருப்பூண்டித் தமிழாசிரியர் வித்துவான் திரு. ந. சண்முகதேசிகர் அவர்களும், திருத்தருப்பூண்டி, இராசகொத்தமங்கலம், வைத்தியம் R.M. இராச லிங்கம் பிள்ளை அவர்களும் ஆவர்.

திருமுகத்தலைத் திருக்கோயிலின் உட் பிராகாரத்தில் ‘முகத்தலை லிங்கம்’§ என்ற பெயருடைய சிவ லிங்கம் ஒன்று உள்ளது. அதனைக் கல்வெட்டு ஒன்று “முகைத்தலை லிங்கம்” என்று கூறுகிறது. ஆலயத்திற்கு வெளியே எதிரிலுள்ள வயலை ‘முகத்தலைக்கோட்டகம்’என்கின்றனர். இத்தலத்துவிருட்சம்- பின்னை மரம். தீர்த்தம் - திருக்குளம் அல்லது சிவதீர்த்தம்.

இறைவனின் பெயர் – பன்னகாபரணர்.

இறைவியின் பெயர் – சாந்தநாயகி.

பொழிப்புரை : உலகத்திற்குத் தலைவனே! (உலகில் உள்ள) உயிரினுக்குள் இருந்து அமுதம் போன்ற இன்பத்தைத் தருபவனே! எங்கும் (நீக்கமற) நிறைந்தவனே! வேதங்களை (இருடிகளுக்கு) வெளியிடுகின்ற பவளம் போன்ற சிவந்த வாயினையுடைய மாணிக்கமே! தொண்டு செய்வார்க்கு இரங்கி அருளுகின்ற பசுபதியே! ‘பன்னகா பரணர்’ என்னும் திருநாமம் உடையவனே! உலகத்திலுள்ள சூரியன் (புறவிருளை நீக்குவது) போல, (எனது அஞ்ஞான இருளைப் போக்கி) அருள் செய்து (மேலும்), தனித்திருப்பவனுகிய எனது தனிமைத் தன்மை ஒழிதற்காக, அடியேனது மனத்தின் கண்ணும், திருமுகத்தலை என்னும் பழைய ஊரிலுள்ள வெண்மையான பெரிய வைரமணிகள் பதிக்கப் பெற்ற அழகிய திருக்கோயிலின் கண்ணும் (நீ) எழுந்தருளியிருந்தாய் என்றவாறு.

---

§ *முகத்தலை லிங்கம்: உருத்திரத்தில் தலை, முகம், தோள்மட்டும் உள்ள சிவலிங்கமும் உண்டு அதனையே முகத்தலை லிங்கம் என்று வழங்கினர் போலும். இந்த லிங்கத்தைப் பற்றிய செய்திகளைச் ‘சித்தாந்த சாராவளி’ என்ற நூலில் விரிவாய்க் காணலாம். முகலிங்கத்தையே முகத்தலைலிங்கம் எனக் கூறுவர். முகத்தலை லிங்கம் உள்ள கோயிலின் பெயர் ஊருக்குப் பெயராய் முற்காலத்தில் வழங்கிற்று என்பது கொள்ளக் கிடக்கின்றது.*

விளக்கம் : அக உயிர்க்கு - உயிரினுக்குள். அகவு உயிர்க்கு அமுதே எனப்பிரித்து, (உன்னை அன்பினால்) அழைக்கும் உயிர்களுக்கு அமுதம் போன்று இன்பம் அளிப்பவனே என்றலுமாம். பூரணன் - நிறைந்தவன். பன்னக ஆபரணா-பாம்புகளை ஆபரணமாகத் தரித்தவனே எனினுமாம். பன்னகம்-(காலால் அல்லது மார்பால் ஊர்ந்து செல்வது) பாம்பு. அவனி - உலகம். ஞாயிறு - சூரியன். மூதூர் - பழைய ஊர். தவளம் - வெண்மை. மணி - வைரம்.

நாயகனே, அமுதே, பூரணா, மணியே, பசுபதீ, பன்ன காபரணா : விளிகள். மூதூர் (முதுமை+ஊர்): பண்புத் தொகை. 1

புழுங்குதீ வினையேன் வினைகெடப் புகுந்து
புணர்பொருள் உணர்வுநூல் வகையால்
வழங்குதேன் பொழியும் பவளவாய் முக்கண்
வளரொளி மணிநெடுங் குன்றே!
முழங்குதீம் புனல்பாய்ந்(து) இளவரால் உகளும்
முகத்தலை அகத்தமர்ந்(து) அடியேன்
விழுங்குதீங் கனியாய் இனியஆ னந்த
வெள்ளமாய் உள்ளமா யினையே.

பொழிப்புரை : மனம் வருந்துகின்ற தீவினையேனது பாவங்கள் ஒழியும் பொருட்டு (என் மனத்தினுட்) புகுந்து, அடைய வேண்டிய மெய்ப் பொருள்களை ஞானநூல்களின் வாயிலாக (மழைபொழிவதுபோல்) பேரின்ப உணர்ச்சி யாகிய தேனை மிகுதியாகப் பொழியும் பவளம் போன்ற சிவந்த வாயினையும் மூன்று கண்களையுமுடைய மிக்க ஒளி பொருந்தி நீண்டுயர்ந்த மாணிக்க மலையே! (அலைகள்)ஒலிக் கின்ற இனியநீரில் துள்ளிக் குதித்து இளமையாகிய வரால் மீன்கள் புரள்கின்ற திருமுகத்தலை என்னும் தலத்தினிடத்து

விரும்பி எழுந்தருளி, அடியேன் உண்ணுகின்ற இனிய பழமாகவும் இனிதாகிய ஆனந்த வெள்ளமாகவும் என் மனம் முழுமையும் நிறைந்து இருக்கின்ருய்; இஃது என்ன ஆச்சரியம்! என்றவாறு.

விளக்கம் : புழுங்குதல் - வருந்துதல்; துன்பமடைதல். தீவினே-கொடிய வினே; துன்பம். புணர் பொருள்-அடைய வேண்டிய மெய்ப்பொருள். உணர்வு நூல்-ஞான நூல். மணி நெடுங்குன்று-பெரிய மாணிக்க மலே போன்றவன். தீம்-இனிய. உகளல்-குதித்தல்; புரளுதல். இறைவன் அன்பர்கள் உள்ளத்தில் இனிய கனியாகவும் ஆனந்த வெள்ளப் பெருக்காகவும் நிறைந்து நிற்கின்ருன் என்பதாம்.

குன்றே: விளி. ஆனந்த வெள்ளம்: உருவகம். ஆயினேயே, ஏ: அசை. புழுங்கு தீவினேயேன்: வினேத்தொகை. 2

கன்னெகா உள்ளக் கள்வனேன் நின்கட்
கசிவிலேன்; கண்ணில்நீர் சொரியேன்;
முன்னகா ஒழியேன்; ஆயினும் செழுநீர்
முகத்தலே அகத்தமர்ந்(து) உறையும்
பன்னகா பரணு! பவளவாய் மணியே!
பாவியேன் ஆவியுள் புகுந்த(து)
என்னகா ரணம்?நீ ஏழைநா யடியேற்(கு)
எளிமையோ பெருமையா வதுவே.

பொழிப்புரை : கல்லேப்போன்று உருகாத மனத்தையுடைய கள்வனுகிய யான், உன்னிடம் மனம் கசிந்து நிற்றலும் இல்லேன்; இருகண்களினின்றும் நீரைப்பொழிந்திலேன்; (உன்)முன் நின்று சிரித்து நீங்கினேன் இல்லே; ஆனலும், செழுமையான வளத்தைத்தரும் நீர் சூழ்ந்த திருமுகத்தலே என்னும் தலத்தினிடத்து விரும்பிக் கோயில்

கொண்டு எழுந்தருளிய பன்னகாபரணு! பவளம் போன்ற சிவந்த வாயினையுடைய மாணிக்கமே! (நீ) பாவியேனுகிய என்னுடைய உயிருக்குள்ளே நுழைந்தது என்ன காரணமோ? (அறியேன்); அறிவில்லாத நாய்போன்று இழிந்த அடியேனுக்கு (இப்பெரும் பேறு) எளிதாகக் கிட்டுவதோ? (அது) பெருமையும் ஆவதாகும் என்றவாறு.

விளக்கம்: நெகா-உருகாத. நெகாக் கல் உள்ளம் என மாற்றி நெக்கு விடாத (பிளந்து போதல் இல்லாத) கல்லைப் போன்ற மனம் என்றலுமாம். கசிதல்-மனம் கரைந்து ஒழுகுதல். முன் நகா-(உன்)முன்னே நகுதலை (சிரித்தலை). முன்நகா ஒளியேன்-உன்முன்னே விளையாட்டுப் புத்தியைப் போக்கினேனில்லை என்று கூறலுமாம். ஆவியுள்புகுந்தது-உயிருக்குள் உயிராக நுழைந்து நின்றது; அதாவது மனத்துள் நிறைந்து நின்றது. ஏழை-அறிவின்மை. நாய் நன்றி மறவாமை போல அடியவன் இறைவன் அருளிய பேருதவியை நினைத்து உருகும் தன்மையுடையேன் என்பார், 'நாயடியேற்கு' என்ருர்.

பன்னகாபரணு, மணியே: விளிகள். நெகா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். நகா: செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம். எளிமையோ, ஓ: எதிர்மறை. 3

கேடிலா மெய்ந்நூல் கெழுமியுஞ் செழுநீர்க்
கிடையனு ருடையஎன் நெஞ்சில்
பாடிலா மணியே! மணியுமிழ்ந்(து) ஒளிரும்
பரமனே! பன்னகா பரணு!
மேடெலாஞ் செந்நெற் பசுங்கதிர் விளைந்து
மிகத்திகழ் முகத்தலை மூதூர்
நீடினுய் எனினும் உட்புகுந்(து) அடியேன்
நெஞ்செலாம் நிறைந்துநின் ருயே,

பொழிப்புரை : கெடுதல் இல்லாத மெய்யுணர்வைக் கொடுக்கும் நூல்களைப் படித்து அதில் மிகப் பழகியும், செழுமையான நீரிடத்துக் கிடந்தும் (நீர் ஊறாத) தக்கையைப் போன்று (மெய்ந்நூற் கருத்துக்கள் ஒன்றும் பதியாத) என் மனத்தில் (அமர்ந்த) அழிவில்லாத மாணிக்கமே! மாணிக்கங்கள் ஒளியைக் கக்கிப் பிரகாசிக்கும் படியான பன்னகாபரணா!பரமனே! மேட்டு நிலங்களில் எல்லாம் செந்நெல்லின் பசுமையான கதிர்கள் விளையப்பெற்று மிக விளங்குகின்ற திருமுகத்தலை என்னும் பழமையான ஊரினிடத்தே நெடுங்காலமாக உறைகின்றாய் என்றாலும், அடியேன் மனத்துள் நுழைந்து மனம் முழுவதும் (நீ)நிறைந்து நின்றனை; (இஃது என் பேறு ஆகும்) என்றவாறு.

விளக்கம் : மெய்ந்நூல்-மெய்யுணர்வைத் தரும் நூல்; ஞானநூல். கெழுமுதல்-பொருந்துதல்; பழகுதல். கிடை-தக்கை; நெட்டி. கிடை அ(ன்)னார் உடைய-தக்கையைப் போன்ற; கிடையன்னாரை நட்பாக உடைய எனினுமாம். பாடு-அழிவு. பரமன்-மேலானவன்; சிவன். மேடு-மேட்டு நிலங்கள். நீடினாய் - நெடுங்காலமாக அமர்ந்துள்ளாய். ஞானநூல்கள் மிகப்படித்தும் மனத்தில் கருத்துக்கள் பதியாமைக்கு, எப்பொழுதும் நீரில் தக்கை கிடந்தும் நீர் ஊறாத தன்மை இங்கு உவமையாக வந்துள்ளது.

மணியே, பரமனே, பன்னகாபரணா: விளிகள். பாடு: முதனிலை திரிந்த தொழிற் பெயர். (படுதல், படு, பாடு.) 4

அக்கனா அனைய செல்வமே சிந்தித்(து)
ஐவரோ(டு) என்னொடும் விளைந்த
இக்கலாம் முழுதும் ஒழியவந்(து) உள்புக்(கு)
என்னைஆள் ஆண்டநா யகனே!

முக்கண்நா யகனே! முழுதுல(கு) இறைஞ்ச
முகத்தலை அகத்தமர்ந்(து) அடியேன்
பக்கல்ஆ னந்தம் இடையறா வண்ணம்
பண்ணினாய் பவளவாய் மொழிந்தே.

பொழிப்புரை: கனவைப் போன்று (நிலையற்ற) அப் பொருட் செல்வத்தையே (ஈட்டுவதிலும் பாதுகாப்பதிலும்) மனத்தைச் செலுத்தி ஐம்புலன்களுக்கும் எனக்கும் இடையில் தோன்றிய இக்கலகம் முழுவதும் நீங்குமாறு என் உள்ளத்துள்ளே புகுந்து எழுந்தருளி, என்னை அடிமையாக்கி ஆண்டுகொண்ட தலைவனே! மூன்று கண்களை யுடைய இறைவனே! உலகமுழுதும் துதிக்குமாறு திருமுகத்தலை என்னும் தலத்தில் விரும்பி எழுந்தருளியிருந்து பவளம் போன்ற சிவந்த திருவாயினால் உபதேசித்தருளி, அடியேனிடத்தில் இன்பமானது, இடையில் விட்டு நீங்காத படி அருள் புரிந்தாய் என்றவாறு.

விளக்கம்: கனா-கனவு; சொப்பனம்: இது நினைவும் நினைவு இல்லாமலும் தோன்றுவது; நிலையற்றது. செல்வம் நிலையற்றது என்பதை, 'அக்கனா அனைய செல்வம்' என்றார். ஐவர் - ஐம்புலன். கலாம் - கலகம்; சண்டை. ஆனந்தம் - இன்பம். மொழிந்து - உபதேசித்தருளி. தலைவனே! நீ என்னை ஆட்கொள்ளுமுன் ஐம்புலன்களுக்கும் அடியவனுக்கும் வாழ்க்கைப் போராட்டம் நிகழ்ந்துகொண்டே இருந்தது; நீ ஆட்கொண்ட பிறகு அந்தப் போராட்டம் முற்றிலும் ஒழிந்தது என்பதாம்.

நாயகனே: விளி. ஐவரோடு என்னொடும்: உருபு மயக்கம். இடையறா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். பண்ணினாய்: முன்னிலை வினைமுற்று. அக்கனா அனைய செல்வம்: இஃது உவமையணி ஆகும். 5

புனல்பட உருகி மண்டழல் வெதும்பிப்
பூம்புனல் பொதிந்(து)உயிர் அளிக்கும்
வினைபடு நிறைபோல் நிறைந்தவே தகத்(து)என்
மனம்நெக மகிழ்ந்தபே ரொளியே!
முனைபடு மதில்மூன் றெரித்தநா யகனே!
முகத்தலை அகத்தமர்ந்(து) அடியேன்
வினைபடும் உடல்நீ புகுந்துநின் றமையால்
விழுமிய விமானமா யினதே.

பொழிப்புரை: (சூளையில் வைத்துச் சுடுவதற்கு முன்) தண்ணீர்பட்ட மாத்திரத்தில் கரைந்து போவதும், மிகுந்த நெருப்பில் வைத்துச் சுட்டபொழுது அழகிய தண்ணீரைத் தன்னிடத்தே வைத்துக்கொண்டு உயிரைப் பாதுகாப்பது மான வேலைப்பாடு அமைந்த நீர்ச்சால்போல், மாறுபாடு அடைந்த எனது மனத்துள் நிறைந்து அம்மனம் உருக மகிழ்ந்து அருள் புரிந்த பேரொளி வடிவினனே! பகை கொண்டு வந்த முப்புரங்களை எரித்தழித்த தலைவனே! திரு முகத்தலை என்னும் தலத்தில் விரும்பி எழுந்தருளி, அடியே னது வினையினால் எடுத்த உடலில் நீபுகுந்து நின்றமையால் (அவ்வுடல் உனக்கு எழுந்தருளுதற்குச்) சிறந்த விமானம் ஆயிற்று என்றவாறு.

விளக்கம்: மண்டழல் - (மண்டு + அழல்) நிறைந்த நெருப்பு. நிறை-நீர்ச்சால்; தண்ணீர்ப்பானை. வேதகம்-மாறுபாடு. நெக-உருக. முனைதல்-எதிர்த்தல். முனைபடு-பகை கொண்டு வந்த. வினைபடும் உடல் - (எனது) வஞ்ச வினைக்குக் கொள்கலமாகிய உடல்; வினைகளை ஒழித்தற்கு எடுத்த உடல் என்றலுமாம். விமானம்-ஊர்தி அல்லது தூபியுமாம்.

பேரொளியே, நாயகனே: விளிகள். நிறைபோல்: உவமை. வினைபடும் உடல் : பெயரெச்சத் தொடர். 6

விரியுநீர் ஆலக் கருமையும் சாந்தின்
வெண்மையும் செந்நிறத் தொளியும்
கரியும்நீ ருடுங் கனலுமொத் தொளிரும்
கழுத்திலோர் தனிவடங் கட்டி
முரியுமா றெல்லாம் முரிந்(து)அழ கியையாய்
முகத்தலை அகத்தமர்ந் தாயைப்
பிரியுமா(று) உளதே? பேய்களோம் செய்த
பிழைபொறுத்(து) ஆண்டபே ரொளியே!

பொழிப்புரை: பேய் போன்றவர்களாகிய யாங்கள் செய்த பிழைகளைப் பொறுத்து ஆட்கொண்ட பேரொளி வடிவமானவனே! (பாற்) கடலினிடத்து எழுந்த ஆலகாலத்தின் கருமை நிறமும், கலவைச் சாந்துபோல விளங்கும் திருநீற்றின் வெண்ணிறமும், (திருமேனியின்) செந்நிற மான ஒளியும், கரியையும் நீறுபூத்த நெருப்பையும் ஒத்து விளங்கும் கழுத்திலே ஒப்பற்ற ஒற்றைவடம் என்னும் ஏகாவலியை அணிந்து, தோன்றக்கூடிய வகை எல்லாம் தோன்றி நின்று அழகுடையவனுகித் திருமுகத்தலை என்னும் தலத்தினிடத்து விரும்பி எழுந்தருளிய உன்னை (அடியவன்) பிரியும் வகை உண்டோ? (இல்லை) என்றவாறு.

விளக்கம்: கடலினும் விரிந்த (மிகுந்த) நீர் இல்லை ஆதலால், அதனை, 'விரியும்நீர்' என்ருர். ஆலம்-விஷம். விடம் தங்கிய இடத்திற்குக் 'கரி' உவமை என்க. நீறு ஆடும்-சாம்பல் பூத்த. தனிவடம்-ஏகாவலிஎன்ற மாலை; உருத்திராட்ச மாலையுமாம். முரிதல் - தோன்றுதல். அழகியை - அழகை உடையை. ஐம்புலன்களின் வசப்பட்டு மனம் பேய்போல்திரி பவர்களைப் 'பேய்களோம்' என்ருர். இறைவனது சிவந்த திரு மேனியில் வெண்ணீறும் கண்டத்தில் கறுப்பும் (விஷமும்) திகழ்வதற்கு நீறுபூத்த நெருப்பும் கரியும் உவமையாக வந்துள்ளன,

உளதோ, ஓ: எதிர்மறை. முதலிரண்டு அடிகள் உவமை அணி. பேய்களோம்: வினையாலணையும் பெயர். பேரொளியே: விளி.

—— 7

என்னையுன் பாத பங்கயம் பணிவித்(து)
என்பெலாம் உருகநீ எளிவந்(து)
உன்னையென் பால்வைத்(து) எங்கும்எஞ் ஞான்றும்
ஒழிவற நிறைந்தஒண் சுடரே!
முன்னையென் பாசம் முழுவதும் அகல
முகத்தலை அகத்தமர்ந்(து) எனக்கே
கன்னலும் பாலும் தேனும்ஆ ரமுதும்
கனியுமாய் இனியையா யினையே.

பொழிப்புரை: அடியவனை உனது திருவடித் தாமரைகளை வணங்கச் செய்து, எலும்புகள் எல்லாம் உருகும்படி நீ எளிதில் எழுந்தருளி வந்து, நின்னை என்னிடத்து நிலைக்கச் செய்து எவ்விடத்திலும் எப்பொழுதும் நீக்கமற நிறைந்து நின்ற அழகிய ஒளிவடிவானவனே! பழமையான எனது ஆணவமலம் முழுவதும் நீங்கத் திருமுகத்தலை என்னும் தலத்தினிடத்து விரும்பி எழுந்தருளி, அடியேனுக்குக் கருப்பஞ் சாறும் பாலும் தேனும் கிடைத்தற்கரிய தேவாமிர்தமும் பழமுமாகி இனிமையுடையை ஆயினுய்; (இஃது என்ன வியப்பு!) என்றவாறு.

விளக்கம் : பங்கயம்-தாமரை. "அவனருளாலே அவன்றுள் வணங்கி" என்பது திருவாசகம்; ஆதலின் இறைவன் தன்னை வணங்கச் செய்வித்து ஆட்கொள்கிருன் என்பதாம். முன்னை என்பாசம்-முற்பட்டுநின்ற ஆணவ மலம். கன்னல்-சர்க்கரையுமாம். இறைவன், தன்னை அடைந்தவர்க்குக் கன்னல், பால், தேன், அமிர்து, கனி இவற்றினும் இனியவன் என்பதாம்; "கனியினுங் கட்டி பட்ட கரும்பினும், பனிம

லர்க்குழற் பாவைநல் லாரினும், தனிமு டிகவித் தாளும் அரசினும், இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே'' என்பது அப்பர் தேவாரம். இப்பாடல் 'பாசநீக்கம்' கூறியது.

ஒண் சுடரே: விளி. எனக்கே, ஏ: தேற்றம். இனியை: வினையாலணையும் பெயர். பாதம் + பங்கயம் = பாத பங்கயம்: உருவகம். 8

அம்பரா! அனலா! அனிலமே! புவிநீ!
அம்புவே! இந்துவே! இரவி!
உம்பரால் ஒன்றும் அறிவொணு அணுவாய்!
ஒழிவற நிறைந்தஒண் சுடரே!
மொய்ம்பராய் நலஞ்சொல் முதறி வாளர்
முகத்தலை அகத்தமர்ந்(து) எனக்கே
எம்பிரா னுகி ஆண்டநீ மீண்டே
எந்தையும் தாயுமா யினையே.

பொழிப்புரை: ஆகாயமாய் உள்ளவனே! காற்றுய் உள்ளவனே! தீயாய் உள்ளவனே! நீராய் உள்ளவனே! நீ மண்ணுய் உள்ளவனே! சந்திரனுய் உள்ளவனே! சூரியனுய் உள்ளவனே! ஆன்மாவாய் உள்ளவனே! தேவர்களால் சிறிதும் அறிய முடியாத நீக்கமற நிறைந்து நின்ற பேரொளியே! (அறிவினுல்) மனவுறுதி உடையவராய் நன்மையைச் செய்யும் சொற்களைச் சொல்லுகின்ற பேரறிவுடைய மக்கள் (வாழ்கின்ற) திருமுகத்தலை என்னும் தலத்தினிடத்து விரும்பி எம்பிரானுகி, எழுந்தருளி, அடியவனை ஆட்கொண்ட நீயே மீண்டும் என் தந்தையுமாய்த் தாயுமாய் இருக்கின்றனை; (இஃது என் பேறு ஆகும்) என்றவாறு.

விளக்கம்: அம்பரம் - ஆகாயம். அனல்-தீ. அனிலம்-காற்று. புவி-மண். அம்பு-நீர். இந்து-சந்திரன். இரவி-

சூரியன். அணு-ஆன்மா. இங்குச் சிவபெருமானுடைய அஷ்ட மூர்த்தங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன: "மண்ணும் புனல் உயிரும்வரு காற்றுஞ்சுடர் மூன்றும், விண்ணும்முழு தானானிடம் வீழிம்மிழலையே" என்பது சம்பந்தர் தேவாரம். "இருநிலனாய்த் தீயாகி நீரு மாகி இயமான னாயெறியுங் காற்று மாகி அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாச மாயட்ட மூர்த்தியாகி" என்பது அப்பர் தேவாரம். மொய்ம்பு-மனவுறுதி. மூதறிவாளர்-பேரறிஞர். எம்பிரான் - எனது தலைவன். மீண்டு-மறுபடியும். இறைவன் அடியார்களுக்குத் தாயும் தந்தையுமாய் இருந்து அருள் செய்கின்றார்: "தந்தையுந் தாயுமாகித் தானவன் ஞானமூர்த்தி" என்பதும், "ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றி னராய்" என்பதும் அப்பர் தேவாரம்.

எந்தை (என் + தந்தை): மரூஉப்பெயர். ஒ(ண்)ணா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். முதுமை + அறிவு = மூதறிவு.

—— 9

மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய்
முகத்தலை அகத்தமர்ந்(து) இனிய
பாலுமாய் அமுதாம் பன்னகா பரணன்
பனிமலர்த் திருவடி இணைமேல்
ஆலையம் பாகின் அனையசொற் கருவூர்
அமுதுறழ் தீந்தமிழ் மாலை
சீலமாப் பாடும் அடியவர் எல்லாம்
சிவபதங் குறுகிநின் றாரே.

பொழிப்புரை : எல்லாப் பொருள்களுக்கும் முதன்மை யாகி, எல்லாப் பொருளும் அழிந்தபின் எஞ்சும் பொருளாகி, அழிவில்லாத முதற்பொருளாகித் திருமுகத்தலை என்னும் தலத்தினிடத்து விரும்பி எழுந்தருளி, இனிய பாலாகவும்

அமுதமாகவுமான பன்னகாபரணனுடைய குளிர்ச்சி பொருந்திய தாமரை மலர் போன்ற இரண்டு திருவடிகளின் மீது கருப்பஞ் சாற்றைக் காய்ச்சி எடுத்த வெல்லக் கட்டியை ஒத்த (இனிய) சொற்களால் கருவூர்த்தேவர் (செய்த) அமிர்தத்தை யொத்த இனிய தமிழ் மாலையை அழகாகப்பாடுகின்ற அடியவர்கள் எல்லாம் சிவ பதவியை அடைந்து நின்றவராவர் என்றவாறு.

விளக்கம்: பனி-குளிர்ச்சி. இணை-இரண்டு. ஆலை-கரும்பாலை; கருப்பஞ்சாறு. பாகு-கட்டி. சீலம்-அழகு.

ஆலையம்பாகு, அம்: சாரியை. நிற்பார் எனற்பாலது நின்றார் என்று இறந்த காலத்திற் கூறியது துணிவு பற்றி கால வழுவமைதி. பன்னக + ஆபரணன் = பன்னகாபரணன். 10

திருச்சிற்றம்பலம்

---

5. திரைலோக்கியசுந்தரம்*

பண் - காந்தாரம்

திருச்சிற்றம்பலம்

நீரோங்கி வளர்கமல
    நீர்பொருந்தாத் தன்மையன்றே;
ஆரோங்கி முகமலர்ந்தாங்(கு)
    அருவினையேன் திறம்மறந்தின்(று)
ஊரோங்கும் பழிபாரா(து)
    உன்பாலே விழுந்தொழிந்தேன்;
சீரோங்கும் பொழிற்கோடைத்
    திரைலோக்கிய சுந்தரனே!

---

* இப்பதிகத்தில் 3முதல் 10 பாடல்வரை தோழி தலைவனிடம் கூறும் கூற்றாக அமைந்தவை. முதல் இரண்டு பாடல் தலைவிகூற்று.

திரைலோக்கிய சுந்தரம்: ‡ சோழநாட்டுக் காவிரிக்கு வட கரையில் திகழும் சிவத்தலங்களுள் 39 ஆவது திருத்தல மான திருப்பனந்தாள் என்னும் ஊருக்குத் தென்கிழக்கில் சுமார் 3 மைல் தொலேவில் உள்ள தேவாரப்பாடல் பெருத சிவத்தலங்களுள் ஒன்ருக உள்ளது, திரைலோக்கியசுந்தரம் ஆகும். ஆடுதுறை என்னும் தலத்திலிருந்து வடக்கே திருப்பனந்தாள் செல்லும் வழியில் 3 மைல் வந்து, அதன் பின் 3 மைல் கிழக்கே சென்ருல் திரைலோக்கிய சுந்தரம் என்ற தலத்தை அடையலாம். திருப்பனந்தாளிலிருந்து செல்வதற்கு நல்ல பாதை உள்ளது.

'திரைலோக்கிய சுந்தரம்' என்னும் தலத்துக்குத் தற் போது திரைலோக்கி அல்லது திருலோக்கி எனப் பெயர் வழங்கு கிறது. திரைலோக்கிக்கு நேர் தெற்கில் சுமார் 2 மைலில் (துயிலிக்) கோட்டூர் என்ற சிறுகிராமம் உள்ளது. [கோட்டூர்- இது கோடை என மருவியது.] கருவூர்த் தேவர் இத்துயிலிக் கோட்டூரைக் கோடை எனக் கொண்டு திரைலோக்கியைச் சிறப்பித்துக் கூறுகின்ருர். தற்போது திரைலோக்கி தனி ஊரே ஆகும். திரைலோக்கி, திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்திற்குச் சொந்தமானது. முதலாம் இராசராசன் காலத் தில் கோட்டூராகிய கோடையும் திரைலோக்கியும் ஒன்ருக இருந்தது போலும். திரைலோக்கியில் கைலாசநாதர் கோயில் ஒன்று உண்டு. அங்குள்ள சிவலிங்கப் பெருமா னுக்கு முதலாம் இராசேந்திரசோழன் கங்கையினின்று கொண்டு வந்த கங்கையை அபிஷேகம் செய்தான் என ஒரு கல்வெட்டுக் கூறுகிறது. திரைலோக்கிக்குத் திரை லோக்கிய மாதேவிச் சதுர்வேதி மங்கலம் என்ற பெயர் முதலாம்

‡ இத்தலக் குறிப்புக்கள் சில, சிவநெறிச் செல்வர்: திருவாளர். S. முருகேசம் பிள்ளை (திருலோக்கி கார்பார்) அவர்கள் உதவியன.

இராசேந்திரன் கல்வெட்டில் உள்ளது. (திரைலோக்கிய மாதேவி என்பவள் முதலாம் இராசராசனின் மனைவியர்களில் ஒருத்தி ஆவள். இறைவன் பெயர் சுந்தரம், சுந்தரேசுவரர். ஆகவே, இத்தலம் திரைலோக்கிய சுந்தரம் என வழங்கியது போலும்.)

இத்தலத்து இறைவரைத் தேவகுரு, பிருகு முனிவர் முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்றனர். தருமன் என்னும் அந்தணனின் மகன் இங்குள்ள தீர்த்தத்தில் மூழ்கி ஊமைத் தன்மை நீங்கப்பெற்றான். தீர்த்தம்-இலக்குமி தீர்த்தம். தல விருட்சம்-கொன்றை (சரக்கொன்றை).

இறைவனின் பெயர் – ஸ்ரீ சுந்தரேசுவரர்.

இறைவியின் பெயர் – அகிலாண்டேசுவரி.

பொழிப்புரை : சிறப்புற்று ஓங்கும் பொழில்கள் சூழ்ந்த கோட்டூர் என்னும் ஊரைச் சார்ந்துள்ள திரைலோக்கி என்ற திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அழகுடையோனே! (போக்குதற்கு) அரிய தீவினையை யுடையவனான எனது மேன்மையை மறந்து இன்று ஊராரால் பழிக்கப் படுதலையும் கவனியாமல் ஒளிமிக்க முகம் மலர்ந்து உன்னிடத்தே சரண் அடைந்தேன்; (அவ்வாறு அடைந்தும்) நீரிடத்து உயர்ந்து வளர்கின்ற தாமரையிலையில் தண்ணீர் ஒட்டாமல் இருக்கும் தன்மையினைப்போல அல்லவா (நீ அடியவனிடம் ஒட்டாமல்) இருக்கின்றாய் என்றவாறு.

விளக்கம் : நீர் ஓங்கிவளர் கமலம் - இது நீர் நிலையின் அளவே தாமரைக் கொடியின் உயரம் என்பதாம்: "நீரளவே ஆகுமாம் நீராம்பல்" என்பது மூதுரை. கமலம்-தாமரையிலை. ஆர்-ஒளி. திறம்-மேன்மை. ஊர்-ஊரார். விழுந்தொழிந்தேன்-சரண் அடைந்தேன் : பழி-நிந்தை. 'தாமரையிலைத் தண்ணீர் போல' என்பது பழமொழி. இது கூடியும் கூடா

மல் நிற்கும் நிலை. தன்மை அன்றே-தன்மையினைப் போல அல்லவா. கோடை - இது துயிலிக் கோடடூர் என்ற ஊர்.

சுந்தரனே: விளி. கோடை: மரூஉப் பெயர். ஆங்கு: அசை. பாராது: வினையெச்சம். வளர் கமலம் : வினைத் தொகை. 1

நையாத மனத்தினனை
நைவிப்பான் இத்தெருவே
ஐயா!நீ உலாப்போந்த
அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழு(து)அருவி
கண்ணூரச் சொரிந்தாலும்
செய்யாயோ? அருள்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே!

பொழிப்புரை: கோட்டூர் என்னும் ஊரைச் சார்ந்துள்ள திரைலோக்கி என்ற தலத்தில் திகழும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அழகுடையோனே! உருகாதமனத்தை யுடைய என்னை உருகுவிக்கும் பொருட்டு, ஐயனே! நீ இத் தெருவின் வழியே பவனி வந்த அன்று முதல் இன்று வரையில் கைகள் (அஞ்சலியாகப்) பொருந்தும்படி தொழுது (மலை) அருவியைப்போல் கண்களினின்றும் (நீர்) பெருகு மாறு வடியச் செய்தாலும் அருள் செய்ய மாட்டாயா? என்றவாறு.

விளக்கம்: நையாத-உருகாத. நைவிப்பான் - உருகு விக்கும் பொருட்டு உலாப்போந்த-பவனி வந்த. அன்று - (உன்னைத் தரிசித்த) அந்நாள். ஆர-பொருந்த. அருவி - மலையருவி போல.

ஐயா, சுந்தரனே: விளிகள். நைவிப்பான்: பானிற்று வினையெச்சம். மனத்தினனை, மனத்தினன்:வினையாலணையும்

பெயர். அருள் செய்யாயோ, ஓ: விஞ. இப்பாடல் இரக்கச் சுவையை இனிது காட்டுவது. 2

அம்பளிங்கு பகலோன்பால்
அடைப்பற்ருய் இவள்மனத்தில்
முன்பளிந்த காதலும்நின்
முகந்தோன்ற விளங்கிற்ருல்;
வம்பளிந்த கனியே!என்
மருந்தே!நல் வளர்முக்கட்
செம்பளிங்கே! பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே!

பொழிப்புரை : நறுமணம் வீசுவதோடும் கூடிப் பழுத்த பழமே! எனக்குத் தேவாமிர்தம் போன்றவனே! அருள் நிறைந்த மூன்று கண்களையுடைய சிவந்த பளிங்குக் கல் போன்ற செம்மேனி யுடையவனே! சோலைகள் சூழ்ந்த கோட்டூர் என்னும் ஊரைச் சார்ந்துள்ள திரைலோக்கி என்ற தலத்தில் திகழும் திருக்கோயிலில் எழுந்தருளிய அழகுடையோனே! அழகிய பளிங்கானது, சூரியன் முன்னிலையில் உண்டாகின்ற ஒளியைப்போல, இவள் மனத்தில் முன்னே (தோன்றி) இருந்த முதிர்ந்த காதலும் நின் முகத்தைக் கண்டவுடன் விளக்கமாய்த் தோன்றியது என்றவாறு.

விளக்கம் : சூரியன்முன் வைக்கப்பெற்ற பளிங்கானது மிக்க ஒளியை அடைவதுபோல, உன் முகத்தைக்கண்ட போது இவள் முகத்தில் முன்னிருந்த முதிர்ந்த காதல் விளங்கித் தோன்றியது என்பதாம். பகலோன் - சூரியன். வம்பு-வாசனை, புதிதுமாம். அளிந்த - பழுத்த; முதிர்ந்த. மருந்து - தேவாமிர்தம். நல் - அருள்.

கனியே, மருந்தே, செம்பளிங்கே, சுந்தரனே: விளிகள். ஆல்: அசை. இச் செய்யுள் உவமையணி. 3

மைஞ்ஞின்ற குழலாள்தன்
　　மனந்தரவும் வளைதாரா(து)
இஞ்ஞின்ற கோவணவன்
　　இவன்செய்த தியார்செய்தார்?
மெய்ஞ்ஞின்ற தமர்க்கெல்லாம்
　　மெய்ஞ்ஞிற்கும் பண்பினுறு
செய்ஞ்ஞன்றி யிலன்;கோடைத்
　　திரைலோக்கிய சுந்தரனே.

பொழிப்புரை: கருநிறம் பொருந்திய கூந்தலையுடைய இப்பெண், தன் மனத்தை (இவனுக்கு)க் கொடுக்கவும் (இவளுடைய) வளையல்களை (இவளுக்கு)க் கொடுக்காமல் இவ்விடத்தே நின்ற கோவணாண்டியும் கோட்டூர் என்னும் ஊரைச் சார்ந்துள்ள திரைலோக்கி என்ற தலத்தில் திகழும் திருக்கோயிலின்கண் எழுந்தருளிய அழகுடையோனும் ஆகிய இவன் செய்த செயலை, யாவர் இதற்கு முன் செய்தனர்? (ஒருவரும் இல்லை); (ஆதலால் இவன்) உண்மை வழியில் நின்ற தம் அடியார்களுக்கெல்லாம் உண்மையாக நடந்து கொள்ளும் தன்மையினுல் உண்டாகும் செய்ந்நன்றியைப் பாராட்டுதல் இல்லாதவன் ஆயினுன் என்றவாறு.

விளக்கம்: மனம் தரவும் வளையல் தாராமையால், "செய்ஞ்ஞன்றி இலன்" என்ருர். இவன் செய்தது யார் செய்தார் என்றது இகழ்ச்சிக் குறிப்பு. மைஞ்ஞின்ற - மைந் நின்ற - கரு நிறம் பொருந்திய. இஞ்ஞின்ற-இந்நின்ற-இவ்விடத்தே நின்ற. மெய்ஞ்ஞின்ற-மெய்ந்நின்ற-மெய்ந் நெறியில் நின்ற. செய்ஞ்ஞன்றி-செய்ந்நன்றி.

மைஞ்ஞின்ற, இஞ்ஞின்ற, மெய்ஞ்ஞின்ற, செய்ஞ்ஞன்றி இவ்விடங்களில் 'ந' கரத்திற்கு 'ஞ'கரம் இடைப்போலியாய் வந்தது. செய்தது+யார்=செய்தியார்: குற்றியலிகரம். கோவணவன்: பழிப்பது போலப் புகழ்தல். 4

நீவாரா(து) ஒழிந்தாலும்
நின்பாலே விழுந்தேழை
கோவாத மணிமுத்தும்
குவளைமலர் சொரிந்தனவால்;
ஆவா!என்(று) அருள்புரியாய்;
அமரர்கணம் தொழுதேத்தும்
தேவா!தென் பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே!

பொழிப்புரை : தேவர் கூட்டங்கள் வணங்கித் துதிக்கின்ற தேவனே! அழகிய சோலைகள் சூழ்ந்த கோட்டூர் என்னும் ஊரைச் சார்ந்துள்ள திரைலோக்கி என்ற தலத்தில் திகழும் திருக்கோயிலில் எழுந்தருளிய அழகுடையோனே! நீ (இவளிடத்திற்கு) வாராமல் போனாலும், இப்பெண் உன்னிடத்துக் காதல் கொண்டு, கண்களாகிய நீலோற்பல மலர்கள் கோக்கப்படாத அழகிய முத்துக்களை (கண்ணீரை)ச் சொரிந்தன; (ஆயினும் நீ) ஐயோ! என்று இரங்கி அருள் செய்யாமல் இருக்கின்றாய் என்றவாறு.

விளக்கம்: ஏழை-பெண். கோவாத மணிமுத்து என்றது கண்ணீரைக் குறிக்கும். குவளை மலர் என்றது கண்ணைக் குறிக்கும். கணம் - கூட்டம். தென் - அழகு; தென்னாட்டிலுள்ள எனினுமாம். குவளை மலர்கள் முத்துக்களைச் சொரிந்தன என்றது ஓர் நயம்.

விழுந்த + ஏழை = விழுந்தேழை: தகரத்திலுள்ள அகரம் தொகுத்தல். கோவாத மணிமுத்து: குறிப்பு மொழி. (பறவாக்கொக்கு என்பது போல.) ஆல்: அசை. தேவா, சுந்தரனே: விளிகள். ஆவா: இரக்கச் சொல். புரியாய்: எதிர்மறை வினைமுற்று. இப்பாடல் இரக்கச் சுவையை இனிது காட்டுவது. 5

முழுவதும்நீ ஆயினும்இம்
மொய்குழலாள் மெய்ம்முழுதும்
பழுதெனவே நினைந்தோராள்
பயில்வதும்நின் ஒருநாமம்
அழுவதும்நின் திறம்நினைந்தே
அதுவன்றே? பெறும்பேறு;
செழுமதில்சூழ் பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே!

பொழிப்புரை: செழுமையான மதில்களும் சோலைகளும் சூழ்ந்த கோட்டூர் என்னும் ஊரைச் சார்ந்துள்ள திரைலோக்கி என்ற தலத்தில் திகழும் திருக்கோயிலில் எழுந்தருளிய அழகுடையோனே! நீ (உலகிலுள்ள) எல்லாப் பொருள்களிலும் கலந்து நின்ற போதிலும், தழைத்த கூந்தலையுடைய இப்பெண்ணிடத்து (நீவாராமையால்) தன் உடல் முழுதும் குற்றமுடையது என்றே நினைந்து மனம் தெளியாமல் இருக்கின்றாள்; (அவள் தன் வாயால் இடைவிடாமல்) சொல்லிச் சொல்லிப் பழகுவதும் உன் ஒப்பற்ற திருப்பெயர் தவிர வேறொன்றுமில்லை; அவள் புலம்புவதும் உன்னுடைய தன்மையை எண்ணியேதான்; ஒருவர் பெறத் தக்க மேன்மை அதுவே அல்லவா? என்றவாறு.

விளக்கம்: இறைவனின் திருநாமத்தைச் சொல்வதும் அவரது தன்மைகளை எண்ணுவதும் ஒருவர் பெறத்தக்க பேறு என்பதாம். மொய் - தழைத்த; நெருங்கிய. மெய்-உடல். பழுது-குற்றம்; நிலை யற்றது என்றலுமாம். ஓர்தல்-தெளிதல். திறம்-தன்மை. பேறு-பாக்கியம்.

ஓராள்: எதிர்மறை வினைமுற்று. முழுவதும், உம்: முற்றும்மை. அன்றே: வினா. பொய்யான உடலை மெய் என்றது மங்கல வழக்கு. 6

தன்சோதி யெழுமேனித்
　　தபனியப்பூஞ் சாய்க்காட்டாய்;
உன்சோதி எழில்காண்பான்
　　ஓலிடவும் உருக்காட்டாய்;
துஞ்சாகண் இவளுடைய
　　துயர்தீரு மாறுரையாய்
செஞ்சாலி வயற்கோடைத்
　　திரைலோக்கிய சுந்தரனே!

பொழிப்புரை: செந்நெல் விளையும் வயல்கள் சூழ்ந்த கோட்டூர் என்னும் ஊரைச் சார்ந்துள்ள திரைலோக்கி என்ற தலத்தில் திகழும் திருக்கோயிலில் எழுந்தருளிய அழகுடையோனே! தன்னுடைய சோதி மேலெழுந்து வீசுகின்ற திருமேனியில் பொன் போன்ற அழகிய சாயலை (நிறத்தை) நீ காட்ட மாட்டாய்; உனது சோதியின் அழகைக் காணும் பொருட்டு (இவள்) ஓலமிட்டு அழைக்கவும், அந்த வடிவழகை நீ காட்ட மாட்டாய்; அதனால், இவளுடைய கண்கள் உறங்க மாட்டா; (இவள்) துன்பம் தீரும் விதத்தை (எனக்கு)ச் சொல்லுவாயாக என்றவாறு.

விளக்கம்: மேனி-உடல். தபனியம்-பொன்: "செம்மானத் தொளியன்ன மேனியான்" என்பது அப்பர் தேவாரம். "பொன்னுர் மேனியனே" என்பது சுந்தரர் தேவாரம். சாய் - சாயலை. எழில் - அழகு. ஓலிடவும்-ஓலமிட்டு (அபயமிட்டு)க் கூவி அழைக்கவும். உரு-வடிவம். ஆறு-விதம். செஞ்சாலி-செந்நெல். துஞ்சா-உறங்கா.

காட்டாய், உரையாய்: முன்னிலை வினைமுற்று. காண்பான்: வினையெச்சம். துஞ்சா: வினைமுற்று. கண்: பால்பகா அஃறிணைப் பெயர். 7

அரும்பேதைக்(கு) அருள்புரியா(து)
ஒழிந்தாய்;நின் அவிர்சடைமேல்
நிரம்பாத பிறைதூவும்
நெருப்பொடுநின் கையிலியாழ்
நரம்பாலும் உயிர்ஈர்ந்தாய்;
நளிர்புரிசைக் குளிர்வனம்பா
திரம்போது சொரிகோடைத்
திரைலோக்கிய சுந்தரனே!

பொழிப்புரை: பெருமை வாய்ந்த மதில்களால் சூழப் பெற்ற குளிர்ந்த நந்தவனம் பாதிரி மலர்களைச் சொரி கின்ற கோட்டூர் என்னும் ஊரைச்சார்ந்துள்ள திரைலோக்கி என்ற தலத்தில் திகழும் திருக்கோயிலில் எழுந்தருளிய அழகுடையோனே! எனது அருமையான பெண்ணுக்கு நீ கருணை செய்யாமல் ஒழிந்தாய்; (அன்றியும்)உனது விளங்கு கின்ற (செஞ்)சடையின் மேலே (உள்ள), (கலை) முற்றாத இளம் பிறை சிந்துகின்ற நெருப்பினாலும் உன் கையிலிருக் கின்ற யாழ் நரம்பின் இசையாலும் (இவளுடைய) உயிரை நீ பிளந்து விட்டாய் என்றவாறு.

விளக்கம்:பேதை-பெண். தூவும்-சொரியும். அவிர்தல்-விளங்கல்; ஒளி வீசல். ஈர்தல்-பிளத்தல். நளிர்-பெருமை. புரிசை-மதில். வனம்-நந்தவனம். பாதிரம்போது-பாதிரிப்பூ. இங்கு இறைவன் கையில் யாழ் கூறியது, 'வீணாதட்சிணா மூர்த்தியை'க் குறிக்கும்: "தங்கையின் யாழும் வைத்தார்" என்பதும் "வருங்கடல், மீள நின்(று)எம் இறை நல்வீணை வாசிக்குமே" என்பதும் அப்பர் தேவாரம்.

ஒழிந்தாய், ஈர்ந்தாய்: முன்னிலை வினைமுற்றுக்கள். குளிர் வனம்: வினைத்தொகை. கையில்+யாழ்=கையினி யாழ்: இகரம் சாரியை. 8

ஆருத பேரன்பி
னவருள்ளங் குடிகொண்டு
வேருகப் பலர்சூழ
வீற்றிருத்தி அதுகொண்டு
வீருடி இவள்உன்னைப்
பொதுநீப்பான் விரைந்தின்னம்
தேருள்;தென் பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே!

பொழிப்புரை: அழகான சோலைகள் சூழ்ந்த கோட்டூர் என்னும் ஊரைச்சார்ந்துள்ள திரைலோக்கி என்ற தலத்தில் திகழும் திருக்கோயிலில் எழுந்தருளிய அழகுடையோனே! தணியாத மிகுந்த அன்பினையுடையவர்களது மனத்தின் கண் நீ குடி கொண்டு, (மேலும்) வேருகப் பலர் (உன்னைச்) சூழ்ந்திருக்க வீற்றிருக்கின்ருய்; அதனைக் காரணமாகக் கொண்டு (உன்) பெருமையில் ஈடுபட்டு இப்பெண் உன்னைப் பொதுத் தன்மையினின்று நீக்கித் தனக்கே உரியவனுகச் செய்யும் பொருட்டு விரைந்து இன்னமும் தேறுதலையடையாமல் இருக்கின்ருள் என்றவாறு.

விளக்கம்: இறைவன் யாவர்க்கும் பொதுவானவன்; அன்றியும் அவன் பேரன்புடையவர் உள்ளத்தைக் கோயிலாகக் கொண்டு வீற்றிருப்பவன்: "நினைப்ப வர்மனம் கோயிலாக் கொண்டவன்" என்பது அப்பர் தேவாரம். ஆருத- தணியாத. பேரன்பினவர் - பேரன்பு உடைய அடியார்கள். வீற்றிருத்தல் - சிறப்புடன் எழுந்தருளியிருத்தல். வீறு - பெருமை. ஆடி-ஈடுபட்டு. நீப்பான்-நீக்கித் தனக்கே உரிய வனுகச் செய்யும் பொருட்டு. தேருள் - தேறுதலையடையாள். இன்னம் - இன்னும்.

வீற்றிருத்தி: முன்னிலை வினைமுற்று. தேருள்: எதிர் மறை வினைமுற்று.

———

சரிந்ததுகில் தளர்ந்தஇடை
அவிழ்ந்தகுழல் இளந்தெரிவை
இருந்தபரி(சு) ஒருநாள்கண்(டு)
இரங்காய்;எம் பெருமானே!
முரிந்தநடை மடந்தையர்தம்
முழங்கொலியும் வழங்கொலியும்
திருந்துவிழ(வு) அணிகோடைத்
திரைலோக்கிய சுந்தரனே!

பொழிப்புரை : துள்ளி நடக்கும் நடையினையுடைய பெண்களின் பாடல்களினால் எழுகின்ற ஒலியும், ஆடலில் சிலம்பு முதலியவற்றின் அணிகளினால் உண்டாகும்ஒலியும்; செம்மையான முறையில் நிகழும் திருவிழாவினை அலங்கரிக் கின்ற கோட்டூர் என்னும் ஊரைச் சார்ந்துள்ள திரைலோக்கி என்ற தலத்தில்திகழும்திருக்கோயிலில் எழுந்தருளிய அழகு உடையோனே! எம்பெருமானே! நழுவின ஆடையோடும் துவண்ட இடையோடும், அவிழ்ந்த கூந்தலோடும் இந்த இளம்பெண் (துன்பப்பட்டுக் கொண்டு) இருந்த விதத்தினை நீ ஒரு நாளேனும் பார்த்து இரங்கினாயில்லை என்றவாறு.

விளக்கம்: சரிந்த துகில்-நழுவின ஆடை. தெரிவை, மடந்தையர்-பெண்கள். பரிசு-விதம், தன்மை. முரிந்த நடை-துள்ளி நடக்கும் நடை. முழங்கு - (பாடலினால்) எழுகின்ற. வழங்கு ஒலி-(ஆடலில் சிலம்பு முதலியவற்றின் அணிகளினால்) உண்டாகும் ஒலி. விழவு-திருவிழா. அணி - அலங்காரம்.

எம்பெருமானே, சுந்தரனே: விளிகள். இரங்காய்: முன்னிலை வினைமுற்று. இப்பாடல் தோழி கூற்றிலே வைத் துக்கூறி இரங்கற் குறிப்பைக் காட்டுவதாகும். 10

ஆரணத்தேன் பருகிஅருந்
தமிழ்மாலை கமழவருங்
காரணத்தின் நிலைபெற்ற
கருவூரன் தமிழ்மாலை
பூரணத்தால் ஈரைந்தும்
போற்றிசைப்பார் காந்தாரம்
சீரணைத்த பொழிற்கோடைத்
திரைலோக்கிய சுந்தரனே!

பொழிப்புரை: சிறப்பு வாய்ந்த சோலைகள் சூழ்ந்த கோட்டூர் என்னும் ஊரைச் சார்ந்துள்ள திரைலோக்கி என்ற தலத்தில் திகழும் திருக்கோயிலில் எழுந்தருளிய அழகுடையோனே! வேதங்களின் சாரமாகிய உபநிடத் தேனைக் குடித்து அருந்தமிழ் மாலை (கற்றுச் சிவமணம்) கமழப் பெற்ற காரணத்தினால் (புகழ்) நிலை பெற்ற கருவூர்த் தேவரால் காந்தாரப் பண்ணில் பாடப் பெற்ற பத்துப் பாடல்களையுடைய தமிழ்மாலை முழுவதையும் போற்றி இசையோடு ஓதுவார் (இறையருள் பெறுவார்) என்றவாறு.

விளக்கம்: ஆரணம்-வேதம். அருந்தமிழ் மாலை-நால்வர் அருளிய மெய்ஞ்ஞானத் தமிழ். கமழ - (சிவமணம்) வீச. பூரணம்-நிறைவு. இப்பதிகம் காந்தாரப் பண்ணினால் அமைந்தது என்பார் "போற்றிசைப்பார் காந்தாரம்" என்றார். அணைத்த-பொருந்திய; சூழ்ந்த.

ஆரணத்தேன்: உருவகம். போற்றி + இசைப்பார் = போற்றிசைப்பார் : இகரம் தொகுத்தல். சுந்தரனே: விளி. பூரணம் + அத்து + ஆல் = பூரணத்தால், அத்து : சாரியை. ஆல்: அசை. 11

திருச்சிற்றம்பலம்

6. கங்கைகொண்ட சோளேச்சரம்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

அன்னமாய் விசும்பு பறந்(து)அயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்று(ம்)நான் மறக்கேன்;
முன்னம்மா லறியா ஒருவனும் இருவா!
முக்கணா! நாற்பெருந் தடந்தோள்
கன்னலே! தேனே! அமுதமே! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே!

கங்கைகொண்ட சோளேச்சரம்: சோழநாட்டுக் காவிரியின் வடகரையில் கும்பகோணத்திலிருந்து வடக்கே சென்னை செல்லும் பெருவழியில் சுமார் 14 மைலில் உள்ள கொள்ளிடம்-கீழ் அணைக்கரைக்கு வடமேற்கே சுமார் 6மைலிலும், திருச்சிராப்பள்ளி அரியலூர் வழியாக ஜெயங்கொண்ட சோழபுரத்திற்குக் கிழக்கே சுமார் 4-மைலிலும் உள்ள ஊரே, கங்கைகொண்டசோழபுரம் ஆகும். இங்குள்ள சிவாலயமே கங்கைகொண்ட சோளேச்சரம் என்பதாம். இது தேவாரப்பாடல் பெருத வைப்புத் தலம் ஆகும்.

இராசராசனின் மகன் முதலாம் இராசேந்திரன் (கி. பி. 1014-1042) என்பவன் வடநாடு சென்று வெற்றியுடன் கங்கை நீர்கொண்டு வந்து புதிதாக அமைத்த நகரம் கங்கைகொண்ட சோழபுரம் என்பதாம். இது கங்காபுரி, கங்காபுரம், கங்கைமாநகர் எனப் பல பெயர் பெறும். இந்நகரில் புதிதாக இராசேந்திரனால் அமைக்கப்பெற்ற சிவாலயமே கங்கைகொண்ட சோளேச்சரம் என்பதாம்.

இராசேந்திர சோழன் (கங்கை கொண்ட சோழன்) தன் தந்தை தஞ்சையில் எடுப்பித்த பெரியகோயிலின் அமைப்பைப் பின்பற்றியே இச்சிவாலயத்தைக் கட்டினுன். ஆனுல் அதன் உருவத்தில் சற்றுச் சிறியது; சிற்பத் திறத்தில் மிக வுயர்ந்தது. ஆலயத்தின் விமானம் 100 அடிச் சதுரம் 170அடி உயரமாகும். மூலத்தான லிங்கம் தஞ்சைப் பெரிய கோயிலிலுள்ள சிவலிங்கப்பெருமானைப் போலவே மிகப்பெரியது; ஒரே கல்லால் அமைந்தது. உட்கோயிலுக்கு எதிரே முற்றும் செங்கற்களாலான பெரியநந்தி ஒன்று உள்ளது. சுற்றுப்பிராகாரம், மண்டபங்கள், தூண்கள் முதலியன சிறந்த சிற்ப வேலைப்பாடுகள் அமைந்தவை.

இச்சிவாலயம் தேவார திருவாசக ஆசிரியர்களுக்கு மிகவும் பிற்பட்டதாகும். தற்போது ஆலயம் சிதைந்துள்ளது; ஊரும் குடிவளம் குறைந்து திகழ்கின்றது.

இறைவனின் பெயர் – கங்கைகொண்ட சோளீச்சரர்,
பிரகதீசுவரர், பெருவுடையார்.
இறைவியின் பெயர் – பிரகந்நாயகி, பெரியநாயகி.

பொழிப்புரை : முற்காலத்திலே திருமாலால் அறிய இயலாத ஒப்பற்றவனுகிய பெருமை யுடையோனே! மூன்று கண்களை யுடையவனே! விசாலமான பெரிய நான்கு தோள்களையுடைய (இனிய) கரும்பின் சாறே! தேனே! தேவாமிர்தமே! கங்கைகொண்ட சோளேச்சரம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளி யிருப்பவனே! பிரமதேவன், அன்னப்பறவை வடிவாகி ஆகாயத்திலே பறந்து தேடும்படி அவ்வளவு பெரிய உருவத்தைக் கொண்ட நீ மிகச் சிறியவனுகிய என்னை ஆட்கொள்ளுதலை விரும்பி என் உள்ளத்துள்ளே நுழைந்து நின்ற(உனது)எளிய தன்மையை எப்பொழுதும் நான் மறக்கமாட்டேன் என்றவாறு.

விளக்கம்: அன்னம் - அன்னப்பறவை. விசும்பு - ஆகாயம். அயன்-பிரமதேவன். பெரிய-பெரிய வடிவம்; பெரும் பொருள் எனினுமாம். ஆள்-ஆட்கொள்ளுதற்கு. மால்-திருமால். இவன் பன்றிவடிவுகொண்டு தேடியவன். இருவா-பெருமையுடையோனே; இருவடிவமாய் (உமாமகேசுவர வடிவமாய் அல்லது அர்த்தநாரீசுவர வடிவமாய்) இருப்பவனே என்றலுமாம். தன்னை அடைந்தார்க்கு இனிமைச் சுவைபயந்து நிற்றலின் இறைவனைக், "கன்னலே, தேனே, அமுதமே" என்றார். இறைவன் அக்கினித் தம்பமாய் நிமிர்ந்து நின்ற காலத்தில் பிரமதேவன் அன்ன வடிவாய் ஆகாயத்தில் பறந்து தேடினான்; அப்பொழுதே திருமாலும் பன்றி வடிவாய்ப் பூமியை அகழ்ந்துகொண்டு தேடினான் என்பது வரலாறு: "மாலறியா நான்முகனுங் காணா மலையினை" என்பது திருவாசகம்.

இருவா, முக்கணா, கன்னலே, தேனே, அமுதமே, சோளேச்சரத்தானே: விளிகள். சோழ-சோள + ஈச்சரம் = சோளேச்சரம்: குணசந்தி. 1

உண்ணெகிழ்ந்(து) உடலம் நெக்குமுக் கண்ணா!
ஓலமென்(று) ஓலமிட்(டு) ஒருநாள்
மண்ணினின்(று) அலறேன்; வழிமொழி மாலை
மழலையஞ் சிலம்படி முடிமேல்
பண்ணிநின்(று) உருகேன்; பணிசெயேன் எனினும்
பாவியேன் ஆவியுள் புகுந்(து)என்
கண்ணினின்(று) அகலான்; என்கொலோ? கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

பொழிப்புரை: மனம் உருகி, உடல் (எலும்பு) இளகி (நின்று) 'முக்கண்ணனே! முறையோ' என்று முறையிட்டு

ஒரு நாளாயினும் பூமியில் நின்று உரத்த குரலில் கூவிக் கதறினேனில்லை; (சிவபெருமானை அடையும்) வழியைப் பற்றிக் கூறும் பாமாலை சூட்டப்பெற்றனவும், மழலைமொழி போல் மென்மையாக ஒலிக்கின்ற அழகிய சிலம்புகள் அணிந்தனவுமான திருவடிகளை என் முடியின்மேல் சூடி நின்று (அன்பினுல் கரைந்து மனம்) உருகப்பெற்றிலேன்; (திருவடிகளுக்குத்) திருத்தொண்டு செய்திலேன்; என்ருலும் கங்கைகொண்ட சோளேச்சரம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவன், பாவியேனுகிய எனது உயிருக்குள் நுழைந்து என் கண்களினின்றும் நீங்காதவனுயிருக்கின்ருன்; (இவன் இவ்வாறு செய்தற்குக் காரணம்) யாதோ? (அறியேன்) என்றவாறு.

விளக்கம்: நெகிழ்தல்-உருகுதல். ஓலம்-அபயம் அளிக்க வேண்டும் என்ற குறிப்புமொழி. வழிமொழி மாலை - (சிவபெருமான் திருவருள்) வழிநின்று மொழிந்த பாமாலை என்று பொருள் கூறலுமாம். மழலை - மெல்லிய மொழி. பண்ணி-அலங்கரித்து; சூடி. உருகுதல், அலறுதல், செய்தல் இம் மூன்று செயல்களும் மனம் மொழி மெய் என்ற முக்கரணங்களாலும் நிகழ்வனவாம். 'என் கண்ணினின்று அகலான்': "கண்ணின் மணியாகி நின்ருய் போற்றி" என்பது அப்பர் தேவாரம்.

அலறேன், உருகேன், செயேன்: எதிர்மறை வினைமுற்றுக்கள். என்கொலோ, என்: வினு. கொல்: ஐயம். ஓ: அசை. 2

அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே?
அன்பொடு தன்னை அஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத்(து) உள்ளம்அள் ளூறும்
தொண்டருக்(கு) எண்டிசைக் கனகம்

பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாம் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

பொழிப்புரை: கங்கைகொண்ட சோளேச்சரம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளி யிருப்பவனே அற்புதமான கடவுள்; இக்கடவுளைக் காட்டிலும் வேறு ஒரு கடவுள் உண்டோ? (இல்லை); தன்னை அன்புடன் பஞ்சாக்கரமாகிய சொல்லின் இடத்திலே வைத்து மனம் களிக்கின்ற (செபிக்கின்ற) மெய்யடியார்களுக்கு எட்டுத் திசைகளிலுமுள்ள பொன்னினது பலவகைப் பட்ட(நிதிக்)குவியல்களும், பசிய பொன்னாலாகிய மாளிகைகளும், பவளம்போலும் உதட்டினையுடைய பெண்களது பருத்த தனங்களும், கற்பகச் சோலையும் (ஆகிய) இவை முழுவதும் கிடைக்கும் என்றவாறு.

விளக்கம்: அற்புதம்-ஆச்சரியம். இங்குப் பலவற்றை எளிதில் கொடுப்பது,ஆச்சரியம். தன்னை என்றது கடவுளை. அஞ்செழுத்து-இது தூலபஞ்சாட்சரம்,சூக்கும பஞ்சாட்சரம் முதலியனவாம். "நானேயோ தவஞ்செய்தேன் சிவாய நம எனப்பெற்றேன்" என்பது திருவாசகம். 'சிவாய நம' இது சூக்கும பஞ்சாட்சரம். இவ்வாறு ஓதுவது ஆகமமுறை. சி-சிவம்; வா-அருள் (சத்தி); ய-ஆன்மா; ந-திரோதம்; ம-மலம்; இதுவே இதன் பொருள். சிவ என்பது சிவசக்தி. அள்ளூறல்-வாயூறல்; செபித்தல். கனகம்-பொன். பற்பதக் குவை-பல வகைப்பட்ட நிதிக் குவியல்கள். பவளவாயவர்-பவளம் போன்ற சிவந்த உதடுகளையுடைய பெண்கள்.

எட்டு + திசை = எண்டிசை. பல் + பதம் = பற்பதம். உண்டே: வினா. 3

ஐயபொட் டிட்ட அழகுவா ணுதலும்
அழகிய விழியும்வெண் ணீறும்
சைவம்விட் டிட்ட சடைகளும் சடைமேல்
தரங்கமும் சதங்கையும் சிலம்பும்
மொய்கொள்எண் டிக்குங் கண்டநின் தொண்டர்
முகமலர்ந்(து) இருகணீர் அரும்பக்
கைகள்மொட் டிக்கும் என்கொலோ? கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே!

பொழிப்புரை: கங்கைகொண்ட சோளேச்சரம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே! அழகாகத் திலகம் அணிந்த அழகிய ஒளிபொருந்திய நெற்றியும், அழகிய கண்களும், திருவெண்ணீறும், சிவத்தின் தன்மையை வெளிப்படுத்துகின்ற சடைகளும், அச்சடையின் மேல் அணிந்த (கங்கையின்)அலையும், சதங்கைகளும், சிலம்புகளும் (ஆகிய இவற்றை நின்பால்) தரிசித்த எட்டுத் திக்குகளிலும் கூட்டமாகக் கூடிநின்ற உனது அடியார்களுடைய முகம் மலரப்பெற்று, இரண்டு கண்களிலும் நீர் ததும்பக் கைகள் குவிந்து நிற்கும்; (இதற்குக் காரணம்) யாதோ? என்றவாறு.

விளக்கம்: இறைவனே! உன் திருவுருவம் உனது அடியார்களை மிக்க மகிழ்ச்சியில் ஈடுபடுத்துகிறது. ஐ-அழகு. வாள்-ஒளி. நுதல்-நெற்றி. சைவம்-சிவத்தன்மை. ‘சைவம் விட்டிட்ட சடைகளும்’ என்றதனால் சடையானது சைவத் திறத்திற்கே சிறப்பான அடையாளம் என்பது பெறப்படும். தரங்கம்-அலை. மொய்-கூட்டம். தொண்டர்-மெய்யடியார். மொட்டிக்கும்-குவிந்து நிற்கும்.

வாள் + நுதல் = வாணுதல். மொட்டிக்கும்-செய்யும் என்னும் முற்று. தரங்கம்: சினையாகுபெயர். 4

சுருதிவா னவனும்; திருநெடு மாலாம்;
சுந்தர விசும்பின்இந் திரனும்;
பருதிவா னவனும்; படர்சடை முக்கட்
பகவனும்; அகவுயிர்க்(கு) அமுதாம்;
எருதுவா கனனும்; எயில்கள்மூன்(று) எரித்த
ஏறுசே வகனுமாம்; பின்னும்
கருதுவார் கருதும் உருவமாம்; கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

பொழிப்புரை: கங்கைகொண்ட சோளேச்சரம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனே, வேதத்திற்குரிய தேவனான பிரமன் ஆவான்; நீண்ட வடிவெடுத்த திருமால் ஆவான்; அழகிய சுவர்க்கலோகத்தை ஆளும் இந்திரன் ஆவான்; சூரியதேவன் ஆவான்; விரித்த சடையையும் மூன்றுகண்களையும் உடைய உருத்திரமூர்த்தி ஆவான்; உடலிலுள்ள உயிர்களுக்குத் தேவாமிர்தம்போல் பேரின்ப உணர்ச்சியைத் தருபவன் ஆவான்; இடபத்தை வாகனமாகக் கொண்ட சிவபெருமான் ஆவான்; மும்மதில்களையும் எரித்த ஆண்சிங்கம் போன்ற வீரனும் ஆவான்; மேலும் நினைப்பவர்கள் நினைக்கின்ற உருவங்களையெல்லாம் உடையவனும் ஆவான் என்றவாறு.

விளக்கம்: எல்லா உருவங்களும் இறைவனது திருவுருவங்களே என்பதாம்: "எல்லாம் சிவனென்ன நின்றாய் போற்றி" என்பது அப்பர் தேவாரம். சுருதி-வேதம். சுந்தரம்-அழகு. பருதி-வட்டம். பருதிவானவன் - வட்டவடிவான சூரிய தேவன். எருது-இடபம். ஏறு-ஆண்சிங்கம். வழிபடுபவர் எவ்வுருவத்தை வைத்து வழிபட்டாலும் அவ்வுருவாய் இறைவன் வந்து அருள்வான் என்பார், "கருதுவார்கருதும் உருவமாம்" என்றார்: "ஆரொருவர் உள்குவார் உள்ளத்

துள்ளே அவ்வுருவாய் நிற்கின்ற அருளும் தோன்றும்'' என்பது அப்பர் தேவாரம். "யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி ஆங்கே,மாதொரு பாக னுர்தாம் வருவர்'' என்பது சிவஞான சித்தியார். ஆம்-ஆகும்; ஆவான்.

கங்கைகொண்ட சோளேச்சரத்தான் சுருதிவானவன் ஆவான், திருநெடுமால் ஆவான், இந்திரன் ஆவான்........ என்று கூட்டுக. ஆம்: செய்யும் என்னும் முற்றின் திரிபு. 5

அண்டமோ ரணுவாம் பெருமைகொண்(டு) அணுவோர்
அண்டமாம் சிறுமைகொண் டடியேன்
உண்டவூண் உனக்காம் வகைஎன துள்ளம்
உள்கலந்(து) எழுபரஞ் சோதி!
கொண்டநாண் பாம்பாம் பெருவரை வில்லில்
குறுகலர் புரங்கள்மூன்(று) எரித்த
கண்டனே! நீல கண்டனே! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே!

பொழிப்புரை : (தன்னளவை நோக்குமிடத்து) அண்டங்கள் (எல்லாம்) ஒப்பற்ற அணுவளவாய்த் தோன்றி நிற்க அத்தனைப் பெரியவனுயும்,அணுக்கள் எல்லாம் அண்டங்களாய்த் தோன்றி நிற்க அத்தனைச் சிறியவனுயும் (ஆமாறு நின்றவனே!), அடியேன் உண்ட ஆகாரம் உனக்கு ஆகும் வகையாக எனது உள்ளத்தினுள் இரண்டறக்கலந்து எழுகின்ற மேலான ஒளிவடிவினனே! (வாசுகி என்னும்) பாம்பை வில்லின் நாணுக (கயிருக) வும் மேரு மலையை வில்லாகவுங் கொண்டு பகைவருடைய திரிபுரங்களை எரித்த வீரனே! நீலகண்டனே! கங்கை கொண்ட சோளேச்சரம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருப்பவனே (அருள் புரிவாயாக) என்றவாறு.

விளக்கம்: இங்கு முதலடியுடன், "அண்டங்களெல்லாம் அணுவாக அணுக்களெல்லாம், அண்டங்களாகப் பெரிதாய்ச் சிறிதா யினுனும்" எனவரும் திருவிளையாடற் புராண அடியினை ஒப்பு நோக்குக. நாண்-வில்லின் கயிறு. பெருவரை-மேருமலை. குறுகலர்-பகைவர்; திரிபுர அசுரர். கண்டன்-வீரன். நீலம்-இங்கு, விடம். இங்கு மூன்ரு மடியுடன், "....பூண் நாகம் நாணுகப் பொருப்பு வில்லாக், கையினுர் அம்பெரிகால் ஈர்க்குக் கோலாக் கடுந்தவத்தோர் நெடும் புரங்கள் கனல்வாய் வீழ்த்த" எனவரும் அப்பர் தேவார அடிகளை ஒப்பு நோக்குக.

கொண்ட + அணு = கொண்டணு. கொண்ட + அடியேன் = கொண்டடியேன். சோதி, கண்டனே, நீல கண்டனே: விளிகள். 6

மோதலைப் பட்ட கடல்வயி(று) உதித்த
முழுமணித் திரள்அமு(து) ஆங்கே
தாய்தலைப் பட்டங்(கு) உருகிஒன் ருய
தன்மையில் என்னைமுன் ஈன்ற
நீதலைப் பட்டா லியானும்அவ் வகையே;
நிசிசரர் இருவரோ(டு) ஒருவர்
காதலிற் பட்ட கருணையாய்! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே!

பொழிப்புரை: (திரிபுர சங்கார காலத்தில் தப்பிப் பிழைத்த) இராக்கதர்கள் மூவரிடத்தும் அன்பிற்கு ஈடுபட்ட கருணையையுடையவனே! கங்கை கொண்ட சோளேச்சரம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருப்பவனே! மோதுகின்ற அலைகளோடு கூடிய பாற்கடலின் நடுவில் தோன்றிய முழுமையான இரத்தினத் தொகுதியும் அமுதமும்

அவ்விடத்தே தாயைப்போன்ற தலையன்பினைக் காட்டி உருகி ஒருருவாகிய தன்மையில் என்னை முன்னே பெற்றெடுத்த நீ வெளிப்பட்டுத் தோன்றினால் நானும் அவ்வாறே உன்னோடு உருகிக் கலந்து ஒன்ருய் விடுவேன் என்றவாறு.

விளக்கம்: கடல்-பாற்கடல். வயிறு-நடு; மத்தி. தலை-தலையன்பு. தலைப்பட்டால்-தோன்றினால். நிசிசரர்-இரவில் சஞ்சரிப்பவர்; அசுரர். இருவரோடு ஒருவர்-மூவர்; இவர் தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்போர். சிவபெருமான் திரிபுர அசுரர்களிடம் கருணை காட்டிய விதம்: "மூவெயில் செற்றஞான்(று) உய்ந்த மூவரில் இருவர் நின் திருக் கோயிலின் வாய்தல், காவ லாளரென் றேவிய பின்னை ஒருவன் நீகரி காடரங் காக, மானை நோக்கியோர் மாநடம் மகிழ மணிமு ழாமுழக் கவருள் செய்த, தேவ தேவநின் திருவடியடைந்தேன் செழும்பொழில்திருப் புன் கூருளானே" என்பது சுந்தரம் தேவாரம்.

கருணையாய்: விளி. ஈன்ற: பெயரெச்சம்; ஈன்-பகுதி. பட்டால் + யானும் = பட்டாலியானும், இ: சாரியை. "முழு மணித் தரள மதாங்கே" என்றும் பாடம். 7

தத்தையங் கனையார் தங்கள்மேல் வைத்த
தயாவைநூ ருயிரங் கூறிட்(டு)
அத்திலங்(கு) ஒருகூ(று) உன்கண்வைத் தவருக்(கு)
அமருல(கு) அளிக்கும்நின் பெருமை
பித்தனென்(று) ஒருகால் பேசுவ ரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னிவைத்த கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே!

பொழிப்புரை:(உன்னைப்)பித்தன் என்று ஒருதரம் சொன்னாராயினும் (அவர்) பிழை செய்தவற்றைப் பொறுத்தருள் செய்யும் (உனது) கையினை அடியவனின் சிரத்தின் மேல் வைத்து (ப்பரிசதீட்சையைச்) செய்த கங்கை கொண்ட சோளேச்சரம் என்னும் திருக்கோயிலின் கண் எழுந்தருளிய இறைவனே! கிளியைப்போன்ற அழகிய பெண்களின் மீது வைத்த அன்பை நூறுயிரம் (இலட்சம்) பங்காகச் செய்து அதில் ஒரு பங்கை உன்னிடத்தில் வைத்த அன்பர்களுக்கு நின் பெருமையானது சுவர்க்க லோகத்தை அளிக்கும் என்றவாறு.

விளக்கம் : தத்தை - கிளி. தத்தையங்கனையார்-கிளிபோலும் பேசும் சொற்களையுடைய பெண்களுமாம். தயா-தயை-அன்பு; இங்குக் காதல். அமர்-அமரர், தேவர். பித்தன்: “பித்தா பிறைசூடீ” என்பது சுந்தரர் தேவாரம். இறைவன்பால் காட்டும் மிகச் சிறிய அன்பிற்கே அமரருலகம் கிடைக்குமாயின், மிக்க அன்பு வைத்தற்கு அளவு கடந்த பரிசு கிடைக்கும் என்க. பிழைத்தவை பொறுத்தருள்செய்தல்: “தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும் நாதனை” என்பதும், “பின்னை என் பிழையைப் பொறுப்பானைப் பிழையெலாம் தவிரப் பணிப்பானை” என்பதும் சுந்தரர் தேவாரம். கைத்தலம் சென்னிமேல் வைத்தல், பரிச தீட்சை ஆகும்.

அமரர் + உலகு = அமருலகு : ர கரம் தொகுத்தல். பிழைத்தவை : வினையாலணையும் பெயர். “கைத்தலம் சென்னிமேல்” என்றும் பாடம். 8

பண்ணிய தழல்காய் பாலளா நீர்போல்
பாவமுன் பறைந்துபா லனைய
புண்ணியம் பின்சென்(று) அறிவினுக்(கு) அறியப்
புகுந்ததோர் யோகினில் பொலிந்து

நுண்ணியை எனினும் நம்ப!நின் பெருமை
நுன்னிடை ஒடுங்கநீ வந்(து)என்
கண்ணினுள் மணியிற் கலந்தனை; கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

பொழிப்புரை : கங்கை கொண்ட சோளேச்சரம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனே! மூட்டிய தீயினால் பாலோடு கலந்த நீரானது காய்ச்சப்பட்ட மாத்திரத்தில் பாலைவிட்டு நீங்கிவிடுவது போலப் பாவம் முன்னே ஓடப் பாலைப்போன்ற புண்ணியம் பின்னே சென்று அறிவினால் அறியும் வகையாக (என்னுள்ளே) புகுந்து, ஒரு யோக மார்க்கத்தில் விளங்கி, (நீ) நுட்பமாகக் காணப்படுவாய் ஆயினும் இறைவனே! உன் பெருமையானது உன்னிடத்தில் ஒடுங்கும்படி நீ (மிக எளியனாக) வந்து, கண்ணினுள் மணி கலந்து நிற்பதுபோல என்னொடு(ஒன்றுபடக்)கலந்து நின்றனை என்றவாறு.

விளக்கம் : இறைவனை யோகமார்க்கத்தால் வழிபடுவோர்க்குப் பாவமானது காய்ச்சப் பெற்ற பாலில் கலந்துள்ள நீர் போய்விடுவது போலப் போய்விடும்; தூய பால் மிகுந்து நிற்பது போலப் புண்ணியம் எஞ்சி நிற்கும் என்பதாம். பண்ணிய - மூட்டிய. காய் - காய்ச்சப்பட்ட. அளாம்-அளாவும்; கலந்த. பறைதல் - ஒடுதல். யோகு - சிவராச யோகம். மணி - கண்மணி. வந்து-மிக எளியனாக வந்து. இறைவன் மிக நுண்ணிய வடிவினும் விளங்குவார் என்பார், 'நுண்ணியை' என்றார் : "பரியர் நுண்ணியர் பார்த்தற் கரியவர்" என்பது அப்பர் தேவாரம். இங்குப் புண்ணியத்திற்குப் பாலும், பாவத்திற்கு நீரும் உவமையாகக் கூறப்பெற்றுள்ளன. நம்பன்-பக்தர்களின் விருப்பத்திற்குரியவன்: இறைவன்.

அளா(வு)ம்: விகாரம். நம்ப : விளி. மணியில், இல் : ஐந்தாம் வேற்றுமை ஒப்புப் பொருள். புகுந்தது: முற்றெச்சம். அறிவினுக்கு (அறிவினால்) : உருபு மயக்கம். கண்ணினுள், உள் : ஏழனுருபு. இப்பாடல் உவமையணி. 9

அங்கைகொண்(டு) அமரர் மலர்மழை பொழிய
அடிச்சிலம்(பு) அலம்பவந்(து) ஒருநாள்
உங்கைகொண் டடியேன் சென்னிவைத் தென்னை
உய்யக்கொண் டருளினை; மருங்கில்
கொங்கைகொண்(டு) அனுங்குங் கொடியிடை காணில்
கொடியள்என்(று) அவிர்சடை முடிமேல்
கங்கைகொண் டிருந்த கடவுளே! கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

பொழிப்புரை : தனங்களின் பாரத்தினால் துவளும் கொடி போன்ற இடையையுடையவரும் இடப்பாகத்தில் அமர்ந்திருப்பவருமான உமாதேவியார் கண்டால் கோபங்கொள்வார் என்று (எண்ணி), விளங்குகின்ற சடைமுடிமேல் கங்கா தேவியைப் பொதிந்து வைத்துக்கொண்டிருக்கின்ற எம் பெருமானே! கங்கைகொண்ட சோளேச்சரம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவனே! தேவர்கள் தங்கள் அழகிய கைகளால் பூ மழை பொழியத் திருவடிச் சிலம்புகள் ஒலிக்க, ஒருநாள் (அடியவனிடம்) எழுந்தருளி வந்து உம் கைகளால் அடியேன் சிரசின்மீது தொட்டு என்னையும் உய்யுமாறு ஆட்கொண்டு அருள் புரிந்தாய் என்றவாறு.

விளக்கம் : அங்கை (அம்+கை)-அழகிய கை. அலம்ப ஒலிக்க. மருங்கு-பாகம்; பங்கு; பக்கம். அனுங்கும்-அசையும், வருந்தும். கொடியிடை -இங்கு உமாதேவியார். 'ஒரு

நாள் உங்கை கொண்டு அடியேன்.......அருளினை’- இது பரிச தீட்சை.

உங்கை : ஆறும் வேற்றுமைத் தொகை. அருளினை: முன்னிலைவினைமுற்று. கொடியிடை: அன்மொழித்தொகை. கடவுளே : விளி. இறைவன் தனது சடையில் கங்கையை மறைத்து வைத்திருத்தலை, ஆசிரியர் தற்குறிப்பேற்றமாக அருகிருக்கும் உமாதேவியார் கங்கையைக் கண்டுவிட்டால் கோபிப்பார் என்று கூறுவதால் இது தற்குறிப் பேற்ற அணி.

10

மங்கையோ டிருந்தே யோகுசெய் வானை
வளர்இளந் திங்களை முடிமேல்
கங்கையோ(டு) அணியும் கடவுளைக் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானை
அங்கையோ டேந்திப் பலிதிரி கருவூர்
அறைந்தசொல் மாலையால் ஆழிச்
செங்கையோ(டு) உலகில் அரசுவீற் றிருந்து
திளைப்பதுஞ் சிவனருட் கடலே.

பொழிப்புரை: (ஒருபால்) உமாதேவியோடிருந்தே யோகம் செய்பவனைப்போல் காணப்படுபவனை, வளரா நின்ற இளம்பிறையைத் தமது திருமுடியின் மீது கங்கை யுடனே தரித்திருக்கும் சிவபெருமானை, கங்கை கொண்ட சோளேச்சரம் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருப்ப வனை, அகங்கையில் ஓடு ஏந்திக் கொண்டு பிச்சை ஏற்று உண்டு திரியும் கருவூர்த்தேவர் சொல்லிய பாடல்களாலாகிய மாலையால் (துதிசெய்தவர்), ஆக்கினைசக்கரம் ஏந்திய செம்மையான கையுடன் உலகில் சக்கரவர்த்தியாய் அரசு செலுத்திச் சிவபெருமான் திருவருட் கடலில் மூழ்கித் திளைத் தலும் செய்வர் என்றவாறு.

விளக்கம்: 'மங்கையோடிருந்தே யோகு செய்வானை': "...மான் மறிக் கையர் மங்கையைக், கெழுவினயோகினர் கெடில வாணரே" என்பதும், "நேரிழையைக் கலந் திருந்தே புலன்கள் ஐந்தும், வென்ருனை மீயச்சூர் மேவி ஞனை" என்பதும் அப்பர் தேவாரம். பலி-பிச்சை. கருவூர்-இங்குக் கருவூர்த் தேவர்; இவர் துறவி. சொல்மாலை-பதிகம். ஆழி-ஆக்கிஞசக்கரம். திளைத்தல்-மூழ்கியிருத்தல்.

அருட்கடல்: உருவகம். அகம் + கை = அங்கை. செங்கை: பண்புத்தொகை. 11

திருச்சிற்றம்பலம்

7. திருப்பூவணம்

பண் – பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

திருவருள் புரிந்(து)ஆள் ஆண்டுகொண்(டு) இங்ஙன்
சிறியனுக்(கு) இனியது காட்டிப்
பெரிதருள் புரிந்(து)ஆ னந்தமே தரும்நின்
பெருமையிற் பெரிய தொன்(று)உளதே?
மருதர சிருங்கோங்(கு) அகில்மரஞ் சாடி
வரைவளங் கவர்ந்திழி வைகைப்
பொருதிரை மருங்கோங்(கு) ஆவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே.

திருப்பூவணம்: பாண்டி நாட்டில் திகழும் சிவத்தலங்கள் பதினுன்கில் 11-ஆவது தலம் திருப்பூவணம் ஆகும். இது, திருப்புவனம், புட்பவனம், புட்பவனக் காசி, திருப்பூவணக் காசி எனப்பல பெயர்களைப் பெறும். இத்தலம் மதுரைக்குக்

கிழக்கே 12 மைல் தொலைவில் உள்ளது. திருப்பூவணக் கோயில்திருப்புவனம்இரயில்வே நிலையத்திலிருந்துகிழக்கே அரைமைல் தொலைவில் வைகைக் கரையில் திகழ்கின்றது.

இத்தலம் காசிக்கு வீசம் அதிகம் பெருமையுடையது; உமாதேவியார் நந்தவனம் வைத்துப் பூசிக்கப்பெற்றது; பிரமன் வழிபட்டது. பொன்னனையாள் என்னும் தாசிக்காகச் சொக்கலிங்கப்பெருமான் சித்தர் வடிவமாய் எழுந்தருளி இரசவாதம் செய்து சோமாஸ்கந்தர் திருவுருவை அமைக்கு மாறு அருள்புரிந்தார் என்பது திருவிளையாடற் புராணம். இத்தலத்து நந்திதேவர் சிறிது தலை சாய்ந்த கோலத்துடன் விளங்குவர். கோரக்கசித்தர்சித்தியடைந்ததலமும் இதுவே. இத்தலத்தைத் தமிழ்நாட்டு மூவேந்தர்களும் வழிபட்டுள்ள னர்: "முடிசேர் தென்னர் சேரர் சோழர்கள் தாம் வணங்கும் ...தென் திருப்பூவணமே" என்பது சம்பந்தர் தேவாரம். தல விருட்சம் - பலா. தீர்த்தம் - வைகைநதி, மணிகர்ணிகை, நள தீர்த்தம் முதலியன. சந்நிதி, கிழக்கு நோக்கியது.

இறைவனின் பெயர் – பூவணநாதர், புட்பவனநாதர்.
இறைவியின் பெயர் – மின்னம்மை, சுந்தரநாயகி.

பொழிப்புரை: மருதமரம், அரசமரம், பெரிய கோங்க மரம், அகில் மரம் (ஆகிய இவற்றை)அடித்துக் கொண்டும், மலையின் மேலுள்ள வளப்பமாகிய இரத்தினமணிகள் முதலிய பொருள்களை வாரிக்கொண்டும் இறங்கி ஓடி வருகின்ற வையையாற்றினது அலைகள்மோதுகின்றகரைகளின்பக்கத் திலுள்ளதும் பெரிய கடை வீதியினையுடையதுமான திருப் பூவணம் என்ற தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந் தருளிய இறைவனே!(நீ)மேன்மையான கருணையைப் புரிந்து (என்னை) அடியவனாக ஆட்கொண்டு இவ்வாறு சிறியே னுக்கு இன்பத்தைத் தரும் பொருள் இன்னது என்று

தெரிவித்து மிகுந்த கருணையைச் செய்து இன்பத்தையே தருகின்ற உனது பெருமையைக் காட்டிலும் பெரிதாகிய ஒன்றை (உவமித்தற்கு) உண்டோ? (இல்லை) என்றவாறு.

விளக்கம்: இறைவன் ஆன்மாக்களுக்கு அருள்புரிந்து இன்பத்தைத் தருகின்ற பெருமையினும் உயரிய பெருமை வேறில்லை என்பதாம். ஆள்-அடியவன். சாடுதல்-அடித்துக் கொண்டு வருதல். இரும்-பெரிய. ஓங்கு-பெரிய; உயர்ந்த எனினுமாம். ஆவண வீதி - கடைவீதி. மருது, அரசு, கோங்கு, அகில்-இவை மரவகைகள். வரை-மலை. வரைவளம்-மலையில் உண்டாகும் மணி, முத்து, குங்குமம், சந்தனம் முதலிய வளங்கள். இங்கு ஆவண வீதியினைக் கூறியதால் திருப்பூவணம் வாணிபப் பெருமைவாய்ந்த இடம் என்பதாம்.

உளதே, ஏ: எதிர்மறை. பெருமையின், இன்: ஐந்தாம் வேற்றுமை எல்லைப்பொருள். வரை: இருமடி ஆகுபெயர். கோயில்: இலக்கணப் போலி. 1

பாம்பணைத் துயின்றோன் அயன்முதல் தேவர்
பன்னெடுங் காலம்நிற் காண்பான்
ஏம்பலித் திருக்க என்னுளம் புகுந்த
எளிமையை என்று(ம்)நான் மறக்கேன்;
தேம்புனற் பொய்கை வாளைவாய் மடுப்பத்
தெளிதரு தேறல்பாய்ந்(து) ஒழுகும்
பூம்பணைச் சோலை ஆவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே.

பொழிப்புரை: குளங்களில் உள்ள வாளை மீன்கள் இனிய நீரை வாயினால் உண்டு கொண்டிருக்கத் தெளிந்த தேன் பாய்ந்து (குளத்தில்) ஒழுகும்படி செய்யும் அழகிய உயர்ந்த சோலைகள்சூழ்ந்ததும்(பெரிய)கடைவீதியினையுடையதுமான

திருப்பூவணம் என்ற தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய சிவபெருமானே! ஆதிசேடனுகிய படுக்கையில் பள்ளி கொண்டவனுன திருமாலும் பிரமன் முதலான தேவர்களும் மிக நீண்ட காலமாக உன்னைக் காணும் பொருட்டுப் பேராவல் கொண்டிருக்க, (நீ) எனது மனத்தினுள்ளே புகுந்து நின்ற (உனது) எளிய தன்மையை ஒருபோதும் நான் மறக்கமாட்டேன் என்றவாறு.

விளக்கம்: பாம்பு-ஆதிசேடன். அணை-படுக்கை. நிற்காண்பான் - உன்னைக்காணும்பொருட்டு. ஏம்பலித்தல் - பேராவல் கொள்ளல். தேம் - இனிய. வாய் - வாயினுல். மடுப்ப-உண்ண. தேறல்-தேன். பூ-அழகு. பணை-பெருமை; உயர்வு; வயலுமாம்.

காண்பான்: பானீற்று வினையெச்சம். நின் + காண்பான் நிற்காண்பான். —— 2

கரைகடல் ஒலியில் தமருகத்(து) அரையில்
கையினிற் கட்டிய கயிற்ருல்
இருதலை ஒருநா இயங்கவந்(து) ஒருநாள்
இருந்திடாய் எங்கள்கண் முகப்பே;
விரிதிகழ் விழவின் பின்செல்வோர் பாடல்
வேட்கையின் வீழ்ந்தபோ(து) அவிழ்ந்த
புரிசடை துகுக்கும் ஆவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே.

பொழிப்புரை: மிகப்பரந்து விளங்குகின்ற திருவிழாவின் போது (தேவாரப்பாடல்கள் பாடிக்கொண்டு செல்லும் அடியவர்களின்) பின்னே செல்வோர், பாட்டினிடத்துக் கொண்ட பெரு விருப்பாகிய பக்தியினுல் (மயங்கிக் கீழே) விழுந்த பொழுது, அவிழ்ந்து தொங்கின முறுக்கோடு கூடிய சடையை (மீண்டும் எடுத்துக்) கட்டுகின்றதும், (பெரிய)

கடைவீதியினை யுடையதுமான திருப்பூவணம் என்ற தலத்தில்திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய எம்பெருமானே! கடற்கரையில் எழுகின்ற அலைகளின் ஒலியைப் போல், உடுக்கையாகிய வாத்தியத்தின் இடையில் பிடித்த கையில் கட்டிய கயிற்றின் நுனியில் உள்ள நாவினுல் உடுக்கையின் இரண்டு பக்கமும் ஓசை உண்டாகும்படியாக ஒருநாள் (நீ) வந்து எங்கள் கண் முன்பாக இருக்க மாட்டாயா? என்றவாறு.

விளக்கம்: கரை கடல்-கடற்கரை எனமாறுக. தமருகம்-உடுக்கை. தாருக வனத்து முனிவர் தாம் செய்த அபிசார வேள்வியினின்றும் உடுக்கையைத் தோற்றுவித்துச் சிவபெருமான் மீது ஏவ, அதனை அவர் தம் கையில் ஏந்தி ஒலிக்கச் செய்தார் என்பதாம். இருதலை-இரண்டு பக்கம். இயங்க-ஒலிக்க. இருந்திடாய்-இருந்தருள்வாயாக என்றலுமாம். முகப்பு-முன்பாக. விழவு-திருவிழா. புரி-முறுக்கு. துகுக்கும்-கட்டுகின்ற. திருவிழாவில் இறைவன் வீதிவலம் வரும்போது, அடியார்கள் பின்சென்று தேவாரப்பாடல்களை ஓதிவரும் வழக்கம் இங்குக் கூறப்பட்டுள்ளது.

ஒலியில், இல்: ஐந்தாம் வேற்றுமை ஒப்புப்பொருள். இருந்திடாய்: முன்னிலை வினைமுற்று. 3

கண்ணியல் மணியின் சூழல்புக்(கு) அங்கே
கலந்துபுக்(கு) ஒடுங்கினேற்(கு) அங்ஙன்
நுண்ணியை எனினும் நம்ப!நின் பெருமை
நுண்ணிமை இறந்தமை அறிவன்;
மண்ணியன் மரபில் தங்கிருள் மொழுப்பின்
வண்டினம் பாடநின் றுடும்
புண்ணிய மகளிர் ஆவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே.

பொழிப்புரை: தரையினிடத்து இருள் தங்கும்படி (மிக) அடர்ந்த சோலேகளில் வண்டுக் கூட்டங்கள் ரீங்காரம் செய்ய, (அவற்றின் அருகே) சிவ புண்ணியத்தைச் செய்த தேவமாதர்கள் (பரத சாஸ்திர) முறைப்படி நின்று நடன மாடுகின்றதும், (பெரிய) கடைவீதியினே யுடையதுமான திருப்பூவணம் என்ற தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய சிவபெருமானே! (என்) கண்ணிற் பொருந்திய கருமணியின் உள்ளே (நீ) புகுந்து அங்கே ஒன்ருகக்கலந்து ஒடுங்கிய உனக்கு அவ்விடம் நுட்பமாயிருந்தாலும், எம் பெருமானே! (நீ மிகநுண்ணிய) அணுவின் தன்மையையும் கடந்து நின்ற உன் பெருந்தன்மையை (நான்) அறிவேன் என்றவாறு.

விளக்கம்: இயல்-பொருந்திய. சூழல் - (உள்) இடம். இறந்தமை-கடந்தமை. மரபின்-(பரத சாஸ்திர) முறைமைப் படி. மொழுப்பு-சோலே. கண்ணியல் மணி .... ஒடுங்கி னேற்கு: "கண்ணே கண்ணிற் கருமணியே மணியாடு பாவாய் காவாய்" என்பது அப்பர் தேவாரம்.

நம்ப: விளி. அறிவன்: தன்மை ஒருமை வினேமுற்று. தங்கிருள்: வினேத்தொகை. ஆடும்: பெயரெச்சம். 4

கடுவினேப் பாசக் கடல்கடந்(து) ஐவர்
கள்ளரை மெள்ளவே துரந்துன்
அடியிணே இரண்டும் அடையுமா(று) அடைந்தேன்;
அருள்செய்வாய்; அருள்செயா தொழிவாய்;
நெடுநிலே மாடத்(து) இரவிருள் கிழிக்க
நிலேவிளக்(கு) அலகில்சா லேகம்
புடைகிடந்(து) இலங்கும் ஆவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே.

பொழிப்புரை: உயர்ந்த (பல) அடுக்குகளே யுடைய மாளிகைகளிடத்தே இராக்காலத்தின் இருளேப்போக்குதற்கு

நிலையாக வைத்துள்ள தீபங்கள் எண்ணில்லாத பலகணி களின் பக்கத்திலே இருந்து விளங்குகின்றதும் (பெரிய) கடைவீதியினையுடையதுமான திருப்பூவணம் என்ற தலத்தில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளிய இறைவனே! கொடிய தீவினைகளாகிய கயிற்றினால் கட்டப்பட்டுப் பிறவிக் கடலுள் வீழ்த்தப்பட்ட நான் அவற்றினின்றும் தாண்டி, ஐம்புலன்களாகிய கள்வரை மெதுவாகத் துரத்தி, உனது ஒன்றோடொன்று ஒத்த திருவடிகள் இரண்டையும் அடைய வேண்டிய முறைப்படி அடைந்துள்ளேன்; (நீ) அருள் செய்வாயாக; (அல்லது) அருள் செய்யாவிட்டாலும் விடுவாயாக; (அஃது உன் விருப்பம்) என்றவாறு.

விளக்கம்: கடுவினை - தீவினை. பாசம் - கயிறு. கடல்-பிறவிக் கடல். ஐவர்-ஐம்புலன். இணை-ஒப்பு. இறைவன் திருவடிகளுக்கு அவையே ஒப்பாவன அன்றிப் பிறபொருள் ஒப்பாகா என்பதாம். அடையுமாறு - அடைய வேண்டிய முறைப்படி. அது சரியை கிரியை முதலிய தொண்டுகளைச் செய்து அடைதல். நிலை விளக்கு-நிலையாக நிறுத்தப்படும் விளக்கு; குத்து விளக்கு. சாலேகம்-சாளரம், பலகணி; சன்னல். "அருள் செய்வாய் அருள்செய்யா தொழிவாய்": "எண்டோள் முக்கண் எம்மானே!' நன்றே செய்வாய்;பிழை செய்வாய்; நானோ இதற்கு நாயகமே? என்பது திருவாசகம்.

ஐவர் கள்வர்: இருபெயரொட்டு. மெள்ள: (மெல்ல) போலி. விளக்கு: ஆகுபெயர். 5

செம்மனக் கிழவோர் அன்புதா என்றுன்
சேவடி பார்த்திருந்(து) அலச
எம்மனங் குடிகொண் டிருப்பதற் கியானார்?
என்னுடை அடிமைதான் யாதே?

அம்மனங் குளிர்நாட் பலிக்கெழுந் தருள
அரிவையர் அவிழ்குழல் சுரும்பு
பொம்மென முரலும் ஆவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே.

பொழிப்புரை: (கண்டவர்களின்) அம்மனம் (மிக) மகிழும்படி ஒருநாள் (பிட்சாடனர் கோலத்துடன் சிவபெருமான்) பிட்சை ஏற்க எழுந்தருளிய போது (அதனைக்கண்ட) மாதர்களின் கூந்தல் (காதலினால்) அவிழ, (அம்மாதர்களின் கூந்தலில் அணிந்த மலர்களில் மொய்த்துக் கொண்டிருந்த) வண்டுகள் பொம்மென்று எழுந்து இசைபாடுவதும்(பெரிய)கடை வீதியினையுடையதுமான திருப்பூவணம் என்ற தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய இறைவனே! திருந்திய மனத்தையுடைய பெரியோர்கள் '(உன்னிடத்து) அன்பை (எனக்குக்) கொடு' என்று சொல்லி, உனது செம்மையான திருவடிகளைத் தரிசித்துக் கொண்டிருந்தும் (அருள் கிடைக்காமல்) வருந்தி நிற்க, என்னுடைய மனத்தில் (நீ) எழுந்தருளியிருத்தலுக்கு யான் என்ன தகுதியுடையவன்? எனது அடிமைத் திறம்தான் என்ன தகுதியுடையது? (அறிகிலேன்) என்றவாறு.

விளக்கம்: செம்மனக் கிழவோர்-செம்மையாகத் திருந்திப் பண்பட்ட நல்ல பெரியோர்கள்; மெய்யன்பர்கள். தா-கொடு. அன்பு தா: "இறவாத இன்ப அன்புவேண்டிப்பின் வேண்டுகின்றார்" என்பது பெரிய புராணம். அலச-வருந்த. நாள்-ஒருதிருவிழா நாளில். பலி-பிட்சை. அரிவையர்-மாதர்கள். குழல்-கூந்தல். பொம்மென-ஒலிக் குறிப்பு.

என் மனம் என்பது எம்மனம் என எதுகை நோக்கித் திரிந்தது. ஆர்: யார் என்பதன் மரூஉ. ஆர், யாது: வினாக்கள். செம்மை + அடி = சேவடி. 6

சொன்னவில் முறைநான்(கு) ஆரணம் உணராச்
சூழல்புக்(கு) ஒளித்தநீ இன்று
கன்னவில் மனத்(து)என் கண்வலைப் படும்இக்
கருணையிற் பெரியதொன் றுளதே?
மின்னவில் கனக மாளிகை வாய்தல்
விளங்கிளம் பிறைதவழ் மாடம்
பொன்னவில் புரிசை ஆவண வீதிப்
பூவணங் கோயில்கொண் டாயே.

பொழிப்புரை: மின்னல் என்று சொல்லத்தக்க மிக்க ஒளியையுடைய பொன் மயமான மாளிகைகளின் முற்றங்களையும், விளங்குகின்ற இளம்பிறைச்சந்திரன் தவழ்கின்ற மாடங்களையும், பொன்போலும் ஒளிர்கின்ற மதில்களையுங் கொண்டு விளங்குவதும்,(பெரிய) கடைவீதியினையுடையதுமான திருப்பூவணம் என்ற தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய சிவபெருமானே! புகழ்ந்து சொல்லும் தகுதியினையுடைய நான்கு வேதங்களால் கண்டு அறிய முடியாத உள் இடத்தில் ஒளித்துக் கொண்ட நீ இன்று கல்லைப் போன்ற கடினமான மனத்தையுடைய எனது கண்ணாகிய வலையிலே அகப்பட்டுக் கிடக்கின்ற இந்தக் கருணையைவிடப் பெரிய தன்மை(ஒன்று)உண்டோ? (இல்லை) என்றவாறு.

விளக்கம்: வேதங்களால் அறியப்படாத தன்மை பொருந்திய இறைவன் அடியவர் மனத்துள் தாமே எழுந்தருளி அருள் புரிகின்றார் என்பதாம். சொல் நவில்முறை-புகழ்ந்து சொல்லும் தகுதி; சொற்கள் உச்சரித்தற்குரிய முறையுடன் கூடிய என்றலுமாம். அது உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம், ப்ரசயம் என்ற ஓசையின் கிரமமாக உச்சரித்தலே முறையாம். ஆரணம்-வேதம். கல்நவில்-கல் என்று சொல்லும்படி. வாய்தல்-முற்றம்; வாசல். முதல் இரண்டடியில் பெருமிதச் சுவை உள்ளது.

கண் வலை: உருவகம். உளதே,ஏ: எதிர்மறைவினா. வாய்தல், மாடம், புரிசை, ஆவண்வீதி ஆகிய இவற்றை யுடைய பூவணம் என்க. 7,8,9

பூவணங் கோயில் கொண்டெனை ஆண்ட
புனிதனை வனிதைபா கனைவெண்
கோவணங் கொண்டு வெண்டலை ஏந்தும்
குழகனை அழகெலாம் நிறைந்த
தீவணன் தன்னைச் செழுமறை தெரியும்
திகழ்கரு வூரனேன் உரைத்த
பாவணத் தமிழ்கள் பத்தும்வல் லார்கள்
பரமன(து) உருவமா குவரே.

பொழிப்புரை : திருப்பூவணம் என்ற தலத்தில் திருக் கோயில்கொண்டு என்னை ஆட்கொண்டருளிய பரிசுத்தனை, உமாதேவியாரை இடப்பாகத்தில் உடையவனை, வெண்மை யான கோவணம் உடுத்து வெள்ளிய தலையோட்டைக் கையில் ஏந்திய இளையோனை, அழகு முழுவதும் நிறைந்த தீப்போன்ற செந்நிறமுடையவனை, மேன்மை பொருந்திய வேதங்களையுணர்ந்த (புகழ்) விளங்குகின்ற கருவூரனாகிய யான் சொன்ன பாட்டின் தன்மையாயுள்ள தமிழ்த் துதிப் பாடல்கள் பத்தினையும் (கற்றுப்பாட)வல்லவர்கள் சிவபெரு மானது சாருப பதவியைப் பெறுவார்கள் என்றவாறு.

விளக்கம் : வனிதை - உமாதேவியார். வெண்டலை - வெள்ளிய ஈரப்பசையுள்ள தலையோடு. குழகன் - இளமை யோன். தீவ(ண்)ணன்-செம்மேனியன். செழுமை-மேன்மை. "செழுமறை தெரியும் திகழ் கருவூரனேன்" என்றது, கரு வூர்த்தேவர் வேதம் ஓதும் அந்தணர் குலத்தினர் என்பதைக் காட்டும். பாவணத் தமிழ் - பாட்டின் தன்மையாயுள்ள

தமிழ்: "ஆரூரன் சொன்ன பாவணத் தமிழ் பத்தும் வல்லார்" என்பது சுந்தரர் தேவாரம். பரமனது உருவம்-சிவசாருபம்.

பாவணத் தமிழ்கள் பத்தும் என்றுராயினும் தற்போது எட்டுப் பாடல்களே கிடைத்துள்ளன; 8, 9-பாடல்கள் கிடைக்கவில்லை.

வல்லார்கள், கள்: விகுதிமேல் விகுதி. ஆகுவர், கு: சாரியை. கருவூரனேன்:குறிப்பு வினையாலணையும் பெயர்.10

திருச்சிற்றம்பலம்

---

8. திருச்சாட்டியக்குடி

பண் – பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

பெரியவா கருணை இளநிலா எறிக்கும்
பிறைதவழ் சடைமொழுப்(பு) அவிழ்ந்து
சரியுமா சுழியங் குழைமிளிர்ந்(து) இருபால்
தாழ்ந்தவா காதுகள் கண்டம்
கரியவா தாமுஞ் செய்யவாய் முறுவல்
காட்டுமா சாட்டியக் குடியார்
இருகைகூம் பினகண்(டு) அலர்ந்தவா முகம்ஏழ்
இருக்கையில் இருந்தஈ சனுக்கே.

திருச்சாட்டியக்குடி: * சோழ நாட்டுக் காவிரிக்குத் தென் கரையில்84ஆவது சிவத்தலமான திருக்கீழ்வேளூர் என்னும் தலத்திலிருந்து மேற்கே திருக்கைச்சின்னம் வழியாகத் திருத்தருப்பூண்டி செல்லும் பெருவழியில் சுமார் 6 ஆவது

---

* இக்குறிப்புக்களைத் தந்து உதவிய நண்பர்கள் - திருவாரூர்த் தமிழாசிரியர் வித்துவான் திரு. M. இரத்தின தேசிகர் அவர்களும், திருக்கடவூர்த் தமிழ் நெடுங்கணக்கு ஆசிரியர் திரு. க. தியாகப்பச் செட்டியார் அவர்களும் ஆவர்.

மையில் (தேவாரப் பாடல் பெருத வைப்புத் தலங்களுள் ஒன்ருக) உள்ளது திருச்சாட்டியக்குடி ஆகும். தற்போது இவ்வூர் 'சாத்தியக்குடி' என வழங்குகிறது.

சாட்டியம்-ஜாட்டியம்; குடி-ஊர். சாட்டியம் என்பது சுரநோய்; அது வெப்ப மிகுதியால் வருவது. வெப்பு நோய்க்குத் தெய்வம் ஜ்வரதேவதை (தீக் கடவுள்): "எரிய லாது உருவமில்லை" என்பது அப்பர் தேவாரம். இத்தலத்தில் ஜ்வரதேவதை இறைவனைப் பூசித்தமையால் ஜாட்டியக் குடி எனப்பெயர் பெற்றது என்பர். இன்றும் வெப்பு நோயாளர் தம் நோய் நீங்க இத்தலத்து இறைவனை வழிபட்டு நலம் பெற்று வருகின்றனர். அன்றியும் இத்தலத்தில் சாண்டில்ய மகரிஷி (சாட்டிய முனிவர்) வழிபட்டுப் பேறுபெற்றதாலும் சாட்டியக்குடி எனப்பெயர் வந்தது என்பர். ஆலயத்தில் சாட்டிய முனிவரின் சிலை உருவம் பிரதிஷ்டை செய்யப் பெற்றுள்ளது.

திருசாட்டியக்குடி என்னும் தலத்தில் திகழும் திருக் கோயிலின் பெயர்'ஏழிருக்கை'என்பதாம்; (திருவாரூர்த் திருக் கோயில் 'பூங்கோயில்' என்பதுபோல்.) மூலாதாரம், சுவா திட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் ஆருதாரத்திற்கும் மேலுள்ள நிராதாரமாகிய துவாதசாந்தமான ஏழாவது இடத்தை ஏழிருக்கை என்றும் கூறுவர். ஏழிருக்கை என்ற சொல்வழக்கு அங்கே வழக்கில் இல்லை. ஆனல் திருச்சாட்டியக்குடித் திருவிசைப்பா ஒவ் வொரு பாடலிலும் "ஏழிருக்கையில் இருந்த ஈசனுக்கே" என்று வருகிறது.

இத்தலத்தில் மாசி மகத்தில் ஒருநாள் உற்சவம் மிகச் சிறப்புடையது. மேற்கு நோக்கிய சந்நிதி. தல விருட்சம்-வன்னிமரம். தீர்த்தம்-வேத புஷ்கரணி (இது சந்நிதியின்

மேல்பால் உள்ளது.) கொன்ன தீர்த்தம் (இது கோயிலின் கீழ்பால் உள்ளது).

இறைவனின் பெயர் – இருக்வேதநாதர், ஸ்ரீ வேதபுரீசுவரர்.
இறைவியின் பெயர் – வேதநாயகி.

பொழிப்புரை: (திருச்சாட்டியக்குடி என்னும் தலத்தில் திகழும்) ஏழிருக்கை என்ற திருக்கோயிலில் எழுந்தருளிய ஈசனுக்குக் கருணை பெரியதா யிருக்கின்றவாறும், இள நிலவை வீசும் பிறைச் சந்திரன் தவழ்கின்ற சடைமுடி அவிழ்ந்து உச்சிக் கொண்டை சரியுமாறும், குண்டலங்கள் விளங்கி இருபக்கங்களில் உள்ள காதுகளில் தொங்குமாறும்,கழுத்துக் கருமையாயிருந்தவாறும், சிவந்தவாயில் புன்னகை காட்டுமாறும், திருச்சாட்டியக்குடியில் உள்ள அடியார்களின் இருகைகள் குவிந்தவற்றை நோக்கித் திருமுகம் மலர்ந்தவாறும் (என்ன வியப்பு!) என்றவாறு.

விளக்கம்: சடைமொழுப்பு-சடைமுடி. சுழியம்-உச்சிக் கொண்டை. முறுவல் - புன்னகை. ஏழிருக்கை - இது திருச்சாட்டியக் குடியில் உள்ள திருக்கோயிலின் பெயர். திருச்சாட்டியக்குடியில் உள்ள அடியார்கள் இறைவனை வணங்கும் பொருட்டுக் குவிந்த கைகளைக் கண்டு,ஈசனுக்கு முகம் மலர்ந்தது என்க. ஈசன்-மக்கள் முதலிய யாவர்க்கும், மலை கடல் முதலிய எவற்றிற்கும் தலைவன்; இறைவன்.

பெரியவா, சரியுமா, தாழ்த்தவா, கரியவா, காட்டுமா, அலர்ந்தவா: இவை ஈறு தொகுத்தல். 1

பாந்தள்பூ ணாரம் பரிகலம் கபாலம்
பட்டவர்த் தனம்எரு(து) அன்பர்
வார்ந்தகண் அருவி மஞ்சன சாலை
மலைமகள் மகிழ்பெரும் தேவி

சாந்தமும் திருநீ(று) அருமறை கீதம்
சடைமுடி சாட்டியக் குடியார்
ஏந்தெழில் இதயம் கோயில்மா ளிகைஏழ்
இருக்கையுள் இருந்தஈ சனுக்கே.

பொழிப்புரை: (திருச்சாட்டியக் குடி என்னும் தலத்தில் திகழும்) ஏழிருக்கை என்ற திருக்கோயிலில் எழுந்தருளிய ஈசனுக்கு அணிகின்ற மாலை,பாம்பு ஆகும்; உண்ணும் பாத்திரம், மண்டை ஓடு ஆகும்; பட்டத்து யானை, இடபமாகும்; திருமஞ்சனஞ்செய்யும் இடம்,அன்பர்கள் கண்களினின்றும் பெருக்கெடுத்து ஓடுகின்ற அருவி ஆகும்; மலையரசன் மகளாகிய பார்வதி தேவியார்,மகிழ்ச்சிக்குரிய பெருந்தேவி ஆவார்; அணியும் சந்தனமும், திருநீறு ஆகும்; அரிய சாம வேதம், இன்னிசை ஆகும்; சடையானது, கிரீடம் ஆகும்; திருச்சாட்டியக் குடியில் உள்ள அன்பர்களது அழகு பொருந்திய மனமானது, கோயிலிலுள்ள மூலத்தான மாகும் என்றவாறு.

விளக்கம்: பாந்தள் - பாம்பு. ஆரம்-மாலை. பரிகலம்-உண்ணும் பாத்திரம்; பிட்சா பாத்திரம். பட்டவர்த்தனம்-பட்டம்தரித்த யானை. மஞ்சனசாலை-நீராடும் இடம். சாந்தம்-சந்தனம். எழில்-அழகு. இதயம்-மனம். அருமறை-இங்குச் சாமவேதம். கீதம் - இன்னிசை. சாட்டியக்குடியார் - திருச்சாட்டியக்குடியிலுள்ள அன்பர்கள்.

சாட்டியக்குடியார்: குறிப்பு வினையாலணையும் பெயர். 2

தொழுதுபின் செல்வ(து) அயன்முதற் கூட்டம்
தொடர்வன மறைகள்நான் கெனினும்
கழுதுறு கரிகா(டு) உறைவிடம் போர்வை
கவந்திகை கரியுரி திரிந்தூண்

தழலுமிழ் அரவங் கோவணம் பளிங்கு
செபவடம் சாட்டியக் குடியார்
இழுதுநெய் சொரிந்தோம்(பு) அழலொளி விளக்(கு)ஏழ்
இருக்கையில் இருந்த ஈசனுக்கே.

பொழிப்புரை: (திருச்சாட்டியக்குடி என்னும் தலத்தில் திகழும்) ஏழிருக்கை என்ற திருக்கோயிலில் எழுந்தருளிய ஈசனுக்கு உறைவிடம், பேய்கள் சஞ்சரிக்கும் சுடுகாடு ஆகும்; போர்த்துக்கொள்ளும் போர்வை, யானைத் தோல் ஆகும்; (உண்ணும்) உணவு, திரிந்து ஏற்கும் பிட்சை ஆகும்; (கட்டிக் கொண்டிருக்கும்) கோவணம், நெருப்புப் போலவிடத்தைக் கக்கும் பாம்பு ஆகும்; செபமாலையானது, பளிங்கு மாலை ஆகும்; திருச்சாட்டியக்குடியிலுள்ள வேதியர்கள் இளகிய நெய்யைச் சொரிந்து வளர்க்கின்ற ஓமத் தீயின் ஒளியானது விளக்காகும் என்றாலும், (அந்த ஈசனை) வணங்கிக் கொண்டு பின் செல்லும் கூட்டம், பிரமன் முதலிய தேவர் கூட்டமாகும்; (தேடிக்கொண்டு பின்னே) தொடர்ந்து செல்வன நான்கு வேதங்கள் ஆகும் என்றவாறு.

விளக்கம்: ஈசன் மிக்க பெருமை பொருந்தியவராயினும் அவர்க்கு உதவும் பொருள்கள் மிக்க எளிமையானவை என்பதாம். அயன் - பிரமன். கழுது-பேய்கள். உறு-வசிக்கின்ற. கரிகாடு-சுடுகாடு; மயானம். கவந்திகை - (கவளமாகிய) உணவு. கரி-யானை. உரி - தோல். பளிங்கு - பளிங்குக்கல்; ஒருவகைக் கண்ணாடிக்கல். செபவடம் - செபமாலை. சாட்டியக்குடியார் - திருச்சாட்டியக் குடியிலுள்ள பிராமணர். இழுது - இளகிய. நெய் - பசுவின் நெய். ஓம்புதல்-வளர்த்தல். விளக்கு - தீபம். தொடர்வன - தேடிக்கொண்டு தொடர்ந்து செல்வன.

மறை : காரணப்பெயர். போர்வை கவந்திகை கரியுரி திரிந்தூண்: நிரல்நிரையணி. 3

பதிகநான் மறைதும் புருவும்நா ரதரும்
பரிவொடு பாடுகாந் தர்ப்பர்
கதியெலாம் அரங்கம் பிணையல்மூ வுலகில்
கடியிருள் திருநடம் புரியும்
சதியிலார் கதியில் ஒலிசெயும் கையில்
தமருகம் சாட்டியக் குடியார்
இதயமாங் கமலங் கமலவர்த் தனைஏழ்
இருக்கையில் இருந்தஈ சனுக்கே.

பொழிப்புரை : (திருச்சாட்டியக்குடி என்னும் தலத்தில் திகழும்) ஏழிருக்கை என்ற திருக்கோயிலில் எழுந்தருளிய ஈசனுக்குப் பாடும் பாட்டுக்கள், நான்கு வேதங்கள் ஆகும்; தும்புருவும் நாரதரும் அன்போடு பாடுகின்ற கந்தர்வர் ஆவர்; (உயிர்களுக்கெல்லாம்)புகலிடமாயுள்ளது, (அவரது) நடனசாலை ஆகும்; மூவுலகங்களிலும் மிகுந்த இருளில் (அவர்) இருகைகளினாலும் அபிநயம் காட்டித் திருநடனம் செய்வர்; (அப்போது) தாளவொத்தோடு கூடிய (அவரது) திருநடனத்தில் (அவர்) கையில் (பிடித்திருக்கும்) உடுக்கை தானே ஒலி செய்து கொண்டிருக்கும்; திருச்சாட்டியக்குடி யிலுள்ள மெய்யன்பர்களின் இருதயமாகிய தாமரை (ஈச னுக்குக்) கமலாசனமாகும் என்றவாறு.

விளக்கம் : பதிகம்-இங்கு இசையோடு பாடும் பாட்டுக் கள். தும்புரு - இவர் கந்தர்வர்களில் ஒருவர்; யாழ் இசை யில் வல்லவர். நாரதர் - இவர் பிரமபுத்திரர்களில் ஒருவர்; யாழ் வாசிப்பதில் வல்லவர்; பெருந்தவமுடையவர். பரிவு- அன்பு. கந்தர்ப்பர் - கந்தருவர். கதி - (உயிர்கள்) புகலிடம். பிணையல் - இருகைகளினாலும் அபிநயம் காட்டுதல். கடி

இருள் - நிறைந்த இருள். சதி - தாளவொத்து. கதியில்-நடனத்தில். தமருகம்-உடுக்கை. கமலவர்த்தனை - கமலாசனம்.

புரியும், செ(ய்)யும் : செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று. கடி இருள் : உரிச் சொற்றொடர். 4

திருமகன் முருகன் தேவியேல் உமையாள்
திருமகள் மருமகன் தாயாம்
மருமகன் மதனன் மாமனேல் இமவான்
மலையுடை அரையர்தம் பாவை
தருமலி வளனுஞ் சிவபுரன் தோழன்
தனபதி சாட்டியக் குடியார்
இருமுகங் கழல்மூன்(று) ஏழுகைத் தலம்ஏழ்
இருக்கையில் இருந்தஈ சனுக்கே.

பொழிப்புரை: (திருச்சாட்டியக்குடி என்னும் தலத்தில் திகழும்) ஏழிருக்கை என்ற திருக்கோயிலில் எழுந்தருளிய ஈசனுக்குத் திருமகன், முருகன் ஆவன்; தேவியோ என்றால், உமையவள் ஆவள்; மாமனோ எனில், இமயமலையரசன் ஆவன்; இலக்குமி, சிறந்த ஆண்மகனான மன்மதனுக்குத் தாயாவள்; மன்மதன், சிவபெருமானுக்கு மருமகன் ஆவன்; மலையரசன் மகளான பார்வதி தேவியார் தருகின்ற மிக்க செல்வத்தினால் தனபதியாகிய குபேரன், சிவபெருமானுக்குத் தோழன் ஆவன்; திருச்சாட்டியக்குடியில் எழுந்தருளிய ஈசர் இரண்டு திருமுகமும் மூன்று கால்களும் ஏழு கைகளும் கொண்ட (அக்கினி தேவனின்)வடிவமாக நின்றும் அருள்புரிபவர் ஆவர் என்றவாறு.

விளக்கம்: திருமகள் - இலக்குமி. மருமகன் - சிறந்த ஆண்மகன். மதனன்-மன்மதன். மலி-மிக்க. சிவபுரன்-சிவபுரம் என்னும் தலத்தில் உள்ளவன்; சிவபெருமான்.

தனபதி-குபேரன். இருமுகம் கழல் (கால்) மூன்று ஏழு கை- இஃது அக்கினிதேவனின் திருவுருவாகும். இங்குச் சிவ பெருமானை அக்கினி தேவன்பூ சித்தமையால், அவன்வடிவ மாகவும் இருந்து வழிபடும் அன்பர்களுக்கு ஈசன் அருள் செய்கின்றார் என்பர்.

அரையர்: அரசர் என்பதன் இடைப்போலி. பாவை: உவமையாகு பெயர். இரண்டு + முகம் = இருமுகம். கழல்: தானியாகு பெயர். 5

———

அனலமே! புனலே! அனிலமே! புவனி
அம்பரா! அம்பரத்(து) அளிக்கும்
கனகமே! வெள்ளிக் குன்றமே! என்றன்
களைகணே! களைகண்மற்(று) இல்லாத்
தனியனேன் உள்ளங் கோயில்கொண் டருளும்
சைவனே! சாட்டியக் குடியார்க்(கு)
இனியதீங் கனியாய் ஒழிவற நிறைந்(து)ஏழ்
இருக்கையில் இருந்தவா(று) இயம்பே.

பொழிப்புரை: நெருப்பே! நீரே! காற்றே! நிலமே! ஆகாயமே! ஆகாயத்தின்று (எல்லாவற்றையும்) காக்கின்ற பொன்மயமானவனே! வெள்ளிமலைபோல் வெண்ணிற மானவனே! எனக்கு ஆதரவானவனே! வேறு ஆதரவு இல்லாத தனியேனது மனத்தின்கண் கோயில்கொண்டு எழுந்தருளிய சிவபெருமானே! திருச்சாட்டியக்குடியிலுள்ள அடியவர்களுக்கு மிக இனிய சுவையுள்ள பழமாகி, எங்கும் நீக்கமற நிறைந்து ஏழிருக்கை என்று சொல்லும் திருக்கோயிலின் மூலத்தானத்தில் நீ எழுந்தருளி இருக்கும் தன்மையினை அடியவனுக்குச் சொல்வாயாக என்றவாறு.

விளக்கம்: அனலம்-தீ. அனிலம்-காற்று. அம்பரம்-ஆகாயம். கனகம்-பொன், களைகண்-ஆதரவு, சைவன்-

சிவசம்பந்த முடையவன். சிவம்-மங்கலம். மங்கலத்தைச் செய்வோன் சைவன்; அவன் சிவபெருமான். "ஐயா றதனிற் சைவ னாகியும்" என்பது திருவாசகம். இறைவன் திரு முகங்கள் ஐந்தில் ஒன்று பொன்னிறமாதலால், 'கனகமே' என்றார். செந்நிறமாகிய இறைவன் திருமேனியில் விபூதி தரிக்கப்பட்டு வெண்ணிறமாக விளங்குவதால், "வெள்ளிக் குன்றமே" என்றார்.

தனியனேன் : வினையாலணையும் பெயர். தீங்கனி : பண்புத் தொகை. 6

செம்பொனே! பவளக் குன்றமே! நின்ற
திசைமுகன் மால்முதற் கூட்டத்(து)
அன்பரா னவர்கள் பருகும்ஆ ரமுதே!
அத்தனே! பித்தனே னுடைய
சம்புவே! அணுவே! தாணுவே! சிவனே!
சங்கரா! சாட்டியக் குடியார்க்(கு)
இன்பனே! எங்கும் ஒழிவற நிறைந்(து)ஏழ்
இருக்கையில் இருந்தவா(று) இயம்பே.

பொழிப்புரை: செம்பொன்னே! பவளமலையே! (தரிசிக்க வந்து) நின்ற திருமால் பிரமன் முதலிய தேவர்கள் கூட்டத்துள் (சிவபெருமானிடத்து மிக்க) அன்புடையரா யிருப்பவர்கள் அனுபவிக்கின்ற நிறைந்த அமுதே! ஐயனே! அறிவில்லாதவனாகிய எனது சம்புவே! அணுவடிவாயிருப்பவனே! மலைபோல் அசைவில்லாதவனே! சிவபெருமானே! சங்கரனே! திருச்சாட்டியக்குடியிலுள்ள அடியார்களுக்கு இன்பமளிப்பவனே! எங்கும் நீக்கமற நிறைந்து ஏழிருக்கை என்று சொல்லும் திருக்கோயிலின் மூலத்தானத்தில் நீ எழுந்தருளியிருக்கும் தன்மையினை அடியவனுக்குச் சொல்லுவாயாக என்றவாறு.

விளக்கம்: திசைமுகன் - பிரமதேவன். பித்தன் - அறி வில்லாதவன்; திகில் பிடித்தாற்போல நிற்பவன். சம்பு- சுகத்தைச் செய்பவன்; சிவன். தாணு-மலைபோல் அசை வில்லாதவன்.

ஆனவர்கள்: எழுவாயுருபு. சிவன், சங்கரன், சம்பு: காரணப் பெயர்கள். எங்கும், உம்: முற்றும்மை. 7

செங்கணா போற்றி! திசைமுகா போற்றி!
சிவபுர நகருள்வீற் றிருந்த
அங்கணா போற்றி! அமரனே போற்றி!
அமரர்கள் தலைவனே போற்றி!
தங்கள்நான் மறைநூல் சகலமுங் கற்றோர்
சாட்டியக் குடியிருந் தருளும்
எங்கள்நா யகனே போற்றி!ஏழ் இருக்கை
இறைவனே! போற்றியே போற்றி!

பொழிப்புரை: சிவந்த கண்களையுடைய திருமாலே! போற்றி; நான்கு முகங்களையுடைய பிரமனே! போற்றி; சிவபுரம் என்ற தலத்துள் எழுந்தருளிய அழகிய கருணைக் கண்களையுடையவனே! போற்றி; இறப்பில்லாதவனே! போற்றி; தேவர்களுக்குத் தலைவனாய் விளங்குபவனே! போற்றி; தத்தமக்குரிய நான்கு வேதங்களையும் (பிற)நூல் களையும் சகல கிரியைகளையும் கற்றோராகிய அந்தணர்கள் வாழ்கின்ற திருச்சாட்டியக்குடி என்னும் தலத்தில் எழுந் தருளியிருந்து (அன்பர்களுக்கு) அருள்புரிகின்ற எங்கள் தலைவனே! போற்றி; ஏழிருக்கை என்று சொல்லும் திருக் கோயிலின் மூலத்தானத்தில் எழுந்தருளிய இறைவனே! போற்றி; போற்றி என்றவாறு.

விளக்கம்: சிவபெருமானே எல்லாத் தேவர்களின் வடிவ மாய்த் திகழ்கின்றார் என்பதாம். அங்கணன்-அழகிய கண்

களையுடையவன். அமரன்-மரணமில்லாதவன். நூல்-இங்கு ஆறு சாஸ்திரமுமாம். சிவபுரநகர் - கும்பகோணத்துக்குத் தென்கிழக்கில் 3மைலில் உள்ள ஒரு சிவத்தலம்.

செம்மை + க(ண்)ணு = செங்கணு. 8

சித்தனே! அருளாய்; செங்கணு! அருளாய்;
சிவபுர நகருள்வீற் றிருந்த
அத்தனே! அருளாய்; அமரனே! அருளாய்;
அமரர்கள் அதிபனே! அருளாய்;
தத்துநீர்ப் படுகர்த் தண்டலைச் சூழல்
சாட்டியக் குடியுள்ஏழ் இருக்கை
முத்தனே! அருளாய்; முதல்வனே! அருளாய்;
முன்னவா துயர்கெடுத்(து) எனக்கே.

பொழிப்புரை: எல்லாப் பொருள்களுக்கும் முன்னுயிருப்பவனே! என்னுடைய (பிறவித்) துன்பத்தைப்போக்கி(நின்ற) (எல்லாம்வல்ல) சித்தனே! அருள்புரிவாயாக; செம்மையான (அழகிய) கண்களை யுடையவனே! அருள் புரிவாயாக; சிவபுரம் என்ற தலத்துள் வீற்றிருக்கின்ற ஐயனே! அருள் புரிவாயாக; மரணமில்லாதவனே! அருள் புரிவாயாக; தேவர்களுக்குத் தலைவனே! அருள்புரிவாயாக; குதித்தோடுகின்ற நீர்வளம் பொருந்திய வயல்களும் குளிர்ந்த சோலைகளும் சூழ்ந்துள்ள திருச்சாட்டியக்குடி என்னும் தலத்துள் ஏழிருக்கை என்ற திருக்கோயிலின் மூலத்தானத்தில் எழுந்தருளிய முத்தனே! அருள் புரிவாயாக; யாவற்றிற்கும் முதன்மையானவனே! அருள்செய்வாயாக என்றவாறு.

விளக்கம்: சித்தன்-மதுரையில் எல்லாம்வல்ல சித்தர் வடிவு கொண்டு அருளிய இறைவன். தத்துதல்-குதித்தோடுதல். படுகர்-வயல்கள். தண்டலை-குளிர்ந்தசோலைகள்.

சூழல்-இடம். முத்தன்-வீடுபேறு அளிப்பவன். முதல்வன்-எல்லாவற்றிற்கும் முதல்வனுய்த் தனக்கொரு முதல்வன் இல்லாதவன்: "முளைத்தானை யெல்லார்க்கும் முன்னே தோன்றி" என்பது அப்பர் தேவாரம். 'முன் அவா' எனப் பிரித்து, எனக்கு முற்பட்டு நிற்கும் (மண் பொன் பெண் என்ற) மூவாசைகளின் என்று பொருள் கூறலுமாம்.

தத்துநீர்: வினைத்தொகை. அருளாய்: முன்னிலை வினை முற்று. எனக்கு: உருபுமயக்கம். 9

தாட்டரும் பழனப் பைம்பொழிற் படுகர்த்
தண்டலைச் சாட்டியக் குடியார்
ஈட்டிய பொருளாய் இருக்கும்ஏழ் இருக்கை
இருந்தவன் திருவடி மலர்மேல்
காட்டிய பொருட்கலை பயில்கரு வூரன்
கழறுசொல் மாலைஈர் ஐந்தும்
மாட்டிய சிந்தை மைந்தருக்(கு) அன்றே
வளரொளி விளங்குவா னுலகே.

பொழிப்புரை: முயற்சிக்குத்தக்க பலனைக் கொடுக்கின்ற வயல்களையும், பசுமையான சோலைகளையும், நீர் நிலைகளையும், பூந்தோட்டங்களையும் உடைய திருச்சாட்டியக்குடி என்னும் தலத்திலுள்ள அடியார்கள் சம்பாதித்த பொருளாக இருக்கின்ற ஏழிருக்கை என்னும் திருக்கோயிலின் மூலத்தானத்தில் எழுந்தருளிய சிவபெருமானது திருவடி மலர்களின்மேல், மேலான நுண்ணிய பொருள்களைக் காட்டும் படியான (வேத) நூல்களில் (நல்ல) பயிற்சியுள்ள கருவூர்த் தேவர் பாடிய பாமாலைப் பாடல்கள் பத்தும், சிந்தையில் பதித்த (அன்பின் உறுதியுடைய) மக்களுக்கு அல்லவா ஒளி வளர்ந்து பிரகாசிக்கின்ற சிவலோகம் (சித்திக்கும்) என்றவாறு.

விளக்கம்: தாள் தரும் - முயற்சிக்குத் தக்க பலனைத் தரும். படுகர்-நீர்நிலை. தண்டலை-பூந்தோட்டம். ஈட்டுதல்-சம்பாதித்தல். கலை-நூல். சிந்தை மாட்டிய-மனத்தில் பதித்த. அன்றே-அல்லவா. வானுலகு-இங்குச் சிவலோகம்; கயிலாயம். 'வளரொளி வானுலகு விளங்கும்' எனினும் அமையும்.

தாள் + தரும் = தாட்டரும். பொருள் + கலை = பொருட்கலை. வளர் ஒளி: வினைத்தொகை. ஈர்ஐந்தும், உம்: முற்றும்மை. இருந்தவன்: வினையாலணையும் பெயர். 10

திருச்சிற்றம்பலம்

---

9. தஞ்சை இராசராசேச்சரம்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

உலகெலாம் தொழவந்(து) எழுகதிர்ப் பருதி
ஒன்றுநூ றுயிர கோடி
அலகெலாம் பொதிந்த திருவுடம்(பு) அச்சோ!
அங்ஙனே அழகிதோ; அரணம்
பலகுலாம் படைசெய் நெடுநிலை மாடம்
பருவரை ஞாங்கர்வெண் டிங்கள்
இலைகுலாம் பதணத்(து) இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத்(து) இவர்க்கே.

தஞ்சை இராசராசேச்சரம்: ஆதியில் தஞ்சன் என்னும் ஓர் அரக்கன் ஆண்ட ஊர் தஞ்சன் ஊர் ஆகும். அது தஞ்சன் புரி, தஞ்சாவூர் என வழங்கிப் பின்பு தஞ்சை எனமருவியது. தஞ்சைமாநகர் தற்போது தஞ்சாவூர் ஜில்லாவின் தலைநகர் ஆகும்; இது சோழ நாட்டின் முகமெனத் திகழ்வது.

தஞ்சைமாநகரில் முதலாம் இராசராச சோழன் (கி. பி. 985–1014) கட்டிய சிவாலயமே 'தஞ்சை இராசராசேச்சரம்' எனப் பெயர்பெறும். இச்சிவாலயம் இவனது ஆட்சி 20 ஆம் ஆண்டுமுதல் 23ஆம் ஆண்டுவரை கட்டப்பெற்றது. இவனது ஆட்சி 19ஆவது ஆண்டில் தில்லைச் சிற்றம்பலத்திற்கு இவன் நிபந்தங்கள் பல இயற்றி வழிபட்டான்; அப்போது தில்லைவாழந்தணர்கள் இவனுக்கு 'இராசராசன்' என்ற பட்டம் அளித்தனர் என ஒரு சாரார் கூறுவர். இவனது ஆட்சி 3ஆம் ஆண்டிலேயே (கி. பி. 988ல்) இவன் இராசராசன் என்றே கூறப்படுகிருன். சேரநாட்டு வெற்றி காரணமாக இவன் இப்பெயர் பெற்றனன் என்றும், இப்பெயர் இவனுக்கு இயற்பெயராகவே வழங்கியது என்றும் சிலர் கூறுவர்.

இராசராசேச்சரம், சோழ அரசர்கள் தமிழ் நாட்டில் கட்டிய கோவில்களுள் தலை சிறந்தது; சிற்ப வேலைகள் அமைந்தது. சுவாமி எழுந்தருளிய விமானம் 'தக்ஷிணமேரு' அல்லது உத்தம விமானம் எனப் பெயர்பெற்றது. இதன் உயரம் 216 அடி ஆகும். இராசராசேச்சரம் 'பெரிய கோயில்' எனவும் பெயர்பெறும். பெரிய கோயிலில் எழுந்தருளிய பெருவுடையார் ஆகிய சிவலிங்கம் மிகப்பெரியது. இது நருமதை நதி தீரத்திலிருந்து இராசராச சோழனால் கொண்டுவரப் பெற்றது என்பர். பெருவுடையாரின் எதிரே உள்ள பெரிய நந்தி ஒரே கல்லில் அமைந்தது. அது 12அடி உயரமும், 19அடி நீளமும் 8¼அடி அகலமும் உள்ளது.

பெருவுடையாராகிய சிவலிங்கப் பெருமானுக்கு இராசராசன் காலத்தில் இராசராசேச்சரமுடையார் என்றும் தக்ஷிணமேரு விடங்கர் என்றும், ஆடவல்லான் என்றும் திருநாமம் வழங்கப் பெற்றது; பிற்காலத்தில் இறைவர்க்குப் 'பெருவுடையார்' எனவும், இறைவிக்குப் 'பெரியநாயகி' எனவும் திருநாமம்

வழங்கலாயிற்று. வடமொழியில் சுவாமிக்குப் 'பிரகதீசுவரர்' எனவும், அம்மைக்குப் 'பிரகந் நாயகி' எனவும் திருநாமம் வழங்கி வருகின்றது.

இராசராசேச்சரமாகிய பிரகதீசுவரர் ஆலயம் தேவார திருவாசக ஆசிரியர்களுக்குப் பிற்பட்டது.

பொழிப்புரை: காவல்கள் பலவாக ஒன்றோடொன்று நெருங்கி(ப் பலவித) ஆயுதங்கள் அமைக்கப்பெற்ற உயர்ந்த அடுக்கு நிலைகளையுடைய பெரிய மலை(போன்ற) உப்பரிகைகளின் பக்கங்களில் வெள்ளிய சந்திரன் (தவழப் பெற்ற)இலைபோன்ற மதிலுறுப்புக்கள்பொருந்தியமதிலின் உள்மேடையோடுகூடிய மதில்களால் சூழப்பெற்ற தஞ்சை மாநகரில் உள்ள இராசராசேச்சரம் என்னும் பெரிய கோயிலில் எழுந்தருளிய இப்பெருவுடையார்க்கு உலகத்தார் எல்லோரும் வணங்கும்படியாக வந்து எழுகின்ற கிரணங்களையுடைய சூரியன் பல ஆயிரங்கோடி ஒன்று சேர்ந்த பரப்பு எல்லாம் திரண்டது போன்ற (மிக்க ஒளியையுடைய) திருமேனியானது, அவ்விதமாக அழகுள்ளதாயிருக்கின்றது; இஃது என்ன அதிசயம்! என்றவாறு.

விளக்கம்: உலகு-உயிர்கள். கதிர்-கிரணங்கள். பருதி-சூரியன். நூறு ஆயிர கோடி-இஃது எண்ணற்றன என்பதைக் குறிப்பது. அலகு-பரப்பு; இடவிரிவு. திருவுடம்பு-இறைவன் திருமேனி. அச்சோ-அதிசயம். அரணம்-காவல். படை - ஆயுதங்கள். மாடம்-உப்பரிகைகள். பருவரை-பெரிய மலை(போல்). ஞாங்கர்-பக்கம். இலை குலாம்-இலை போன்ற ஒருவகை மதிலுறுப்பு. பதணம் - மதிலின் உள் மேடை. இஞ்சி-மதில். பின்னிரண்டு அடிகள் தஞ்சை இராசராசேச்சரக் கோயிலுக்குத் தனியாக அகழியும் கோட்டை மதிலும் அமைந்திருத்தலைச் சிறப்பித்துக் கூறுகின்றன. தம்முடைய மனத்தில் எப்பொழுதும் இறைவர் இருப்பவர்

ஆதலின், அவரை அண்மைச் சுட்டாக, "இவர்க்கே" என்றார். இராசராசேச்சரத்திவர்க்குத் திருவுடம்பு அழகிது என்று முடிக்க.

உலகு-இடவாகு பெயர். அச்சோ: அதிசயச் சொல். அழகிதோ, ஓ: அசை. இவர்க்கு: அண்மைச் சுட்டுப் பெயர். —— 1

நெற்றியிற் கண்என் கண்ணின்நின் றகலா;
நெஞ்சினில் அஞ்சிலம்(பு) அலைக்கும்
பொற்றிரு வடிஎன் குடிமுழு தாளப்
புகுந்தன; போந்தன இல்லை;
மற்றெனக்(கு) உற(வு)ஏன்? மறிதிரை வடவாற்
றிடுபுனல் மதகில்வாழ் முதலை
எற்றுநீர்க் கிடங்கில் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.

பொழிப்புரை : மடங்கி விழுகின்ற அலைகளையுடைய வட வாற்றின் நீர் செல்லுபடியான மதகில் வாழ்கின்ற முதலைகள் வாரி எறிகின்ற நீரையுடைய அகழியோடு கூடிய மதில்களால் சூழப்பட்ட தஞ்சை மாநகரில் உள்ள இராசராசேச்சரம் என்னும் பெரிய கோயிலில் எழுந்தருளிய இப் பெருவுடையாரது நெற்றியிலுள்ள கண்கள் என் கண்களினின்றும் நீங்கமாட்டா; (அவரது) அழகிய சிலம்புகள் ஒலிக்கின்ற பொன்போலும் அழகிய திருவடிகள் என் குடும்பம் முழுவதையும் ஆட்கொள்ளும் பொருட்டு என் நெஞ்சினுள் புகுந்தன; (அவை மீண்டும்) வெளியே வரவில்லை; (ஆதலின் இவரைத்தவிர)வேறு உறவினர் எனக்கு எதற்கு? என்றவாறு.

விளக்கம் : இறைவனது அருள் இருக்க எனக்கு வேறு உறவினர் எதற்கு என்பதாம். நெற்றிக் கண் ஒன்று

யிருக்க, அது என் கண்களை விட்டு அகலா என்று பன்மை முடிபாகக் கூறியது ஒன்ருகிய நெற்றிக்கண் எனது இரண்டு கண்களிலும் முறையே நுழைந்து இரண்டு நெற்றிக் கண்களாய் நின்றன என்பதாம். அம் - அழகு. அலைக்கும் - ஒலிக்கும். பொன் - கிடைத்தற்கு அருமையான; அழகான. மறி - மடங்குதல். வடவாறு - இந்த ஆறுமுதற் பராந்தக சோழன் காலத்தில் வெட்டப்பட்டது; தஞ்சைமா நகரின் வடபாகத்தில் இராசாகோரியின் அண்மையில் ஓடுவது. கிடங்கு - அகழி. இஞ்சி - மதில்.

கண் அகலா, திருவடி போந்தன: பால்பகா அஃறிணைப் பெயர்கள் பன்மை முடிபேற்றன. இவர்க்கு : வேற்றுமை மயக்கம். இல்லை : குறிப்பு வினைமுற்று. 'வடபாற்றிடு புனல்' என்றும், 'வடபால் வண்புனல்' என்றும் பாடம். 2

சடைகெழு மகுடம் தண்ணிலா விரிய
வெண்ணிலா விரிதரு தரளக்
குடைநிழல் விடைமேற் கொண்டுலாப் போதும்
குறிப்பெனே? கோங்கிணர் அனைய
குடைகெழு நிருபர் முடியொடு முடிதேய்ந்(து)
உக்கசெஞ் சுடர்ப்படு குவையோங்(கு)
இடைகெழு மாடத்(து) இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.

பொழிப்புரை : கோங்கு மலர்க் கொத்தினைப் போன்ற (வெண் கொற்றக்) குடைகளையுடைய அரசர்களது கிரீடங்கள்ஒன்றோடொன்றுபட்டுத்தேய்ந்து(கீழே)சிந்திய சிவந்த ஒளியை வீசும்(இரத்தினமணிக் குவியல்கள்) உயர்ந்துள்ள இடங்களைக் கொண்ட மாளிகைகளை(த் தன்னகத்தேபெற்ற) மதில்களால் சூழப்பட்ட தஞ்சைமா நகரில் உள்ள இராசராசேச்சரம் என்னும் பெரிய கோயிலில் எழுந்தருளிய

இப்பெருவுடையார்க்குச் சடைகளால் ஆனமகுடத்தினின்று குளிர்ச்சி பொருந்திய நிலவொளி வீசவும், வெள்ளிய நிலவு ஒளிவிடுவது போன்ற முத்துக்குடையின் நிழலில் (அவர்) இடபவாகனத்தின் மீது எழுந்தருளிப் பவனி வருகின்ற கருத்து யாதோ? என்றவாறு.

விளக்கம்: பெருவுடையாராகிய சிவபெருமான் இடப வாகனத்தின் மீது எழுந்தருளி உலாவருதல், அடியார்களுக்கு அருள் செய்யும் நிமித்தமாகும். தரளம் - வெள்ளிய முத்து. விடை - தருமவிடை; இடபம். உக்க - சிந்திய. குவை - குவியல். ஓங்கு இடை - உயர்ந்த இடம். நிருபர்- அரசர். கோங்கு - கோங்கு மலர். இணர் - பூங்கொத்து. போதும்-வருகின்ற.

எ(ன்)னோ,ஓ: வினா. எனோ : இங்கு 'ன்' இரட்டிக்காமல் நின்றது. உக்க : பெயரெச்சம். உகு : பகுதி. 3

வாழியம் போதத்(து) அருகுபாய் விடையம்
வரிசையின் விளக்கலின் அடுத்த
சூழலம் பளிங்கின் பாசலர் ஆதிச்
சுடர்விடு மண்டலம் பொலியக்
காழகில் கமழும் மாளிகை மகளீர்
கங்குல்வாய் அங்குலி கெழும
யாழொலி சிலம்பும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.

பொழிப்புரை: மேகமண்டலத்தின் அளவு உயர்ந்து பரவிக் காணப்படும் (மதில்களின் மேல் அமைத்துள்ள) இடபங்களின் அழகிய வடிவங்களில் வரிசையாக (ஒளி மிகுவதற்காகப் பதிக்கப் பெற்று) விளங்கும் பளிங்குக் கற்கள், அடுத்துள்ள நந்த வனங்களிலுள்ள பசிய கீழிதழ்

களைக் கொண்ட பூக்கள் முதலியவற்றில் ஒளி வீச, (அது) சூரிய மண்டலம் போல விளங்கும்படி, திகழும் மதில்களால் சூழப்பட்ட தஞ்சைமா நகரிலுள்ள இராசராசேச்சரம் என்னும் பெரிய கோயிலில் எழுந்தருளிய இப்பெருவுடையார்க்கு வயிரம் பொருந்திய அகில் கட்டைகளின் புகைகளினுல் மணம் கமழும் மாளிகைகளிடத்து, இரவில் பெண்கள் தங்கள் தங்கள் விரல்களினுல் யாழை மீட்டி இனிய இசையை எழுப்புவார்கள் என்றவாறு.

விளக்கம்: அம்போதம் - மேகம். விடை - இடபம். சூழல் - பக்கம்; இங்கு நந்தவனம். பாசலர் - பசிய கீழிதழ் களையுடைய மலர்கள். மண்டலம் - சூரிய மண்டலம். காழ்-வயிரம். கங்குல் - இரவு. அங்குலி - விரல்கள். சிலம்பும் - இசையை எழுப்புவார்கள்.

வாழி: அசை. பளிங்கின், இன்: சாரியை. பசுமை + அலர் = பாசலர். கங்குல்வாய், வாய்: ஏழனுருபு. சிலம்பும்: செய்யுமென்னும் வாய்பாட்டு வினைமுற்று. 4

எவரும்மா மறைகள் எவையும்வா னவர்கள்
ஈட்டமும் தாட்டிருக் கமலத்
தவரும்மா லவனும் அறிவரும் பெருமை
அடலழல் உமிழ்தழற் பிழம்பர்
உவரிமா கடலின் ஒலிசெய்மா மறுகில்
உறுகளிற்(று) அரசின(து) ஈட்டம்
இவருமால் வரைசெய் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.

பொழிப்புரை: உவர்ப்பாகிய பெரிய கடலின் ஒலியைப் போன்று ஒலி செய்கின்ற பெரிய தெருக்களில் பொருந்திய அரச யானைகளின் கூட்டம் (அங்குமிங்கும்) உலாவுகின்ற

தும் பெரிய மலையைப் போலச் செய்யப்பெற்ற மதில்கள் சூழ்ந்ததுமான தஞ்சை மாநகரில் உள்ள இராசராசேச்சரம் என்னும் பெரிய கோயிலில் எழுந்தருளிய இப்பெருவுடையார், எத்தகைய பெருமை உடையவராலும், பெருமை வாய்ந்த வேதங்கள் எவற்ருலும், (இந்திராதி) தேவர்களின் கூட்டங்களாலும், தண்டினையுடைய அழகிய தாமரை மலரை ஆசனமாகக் கொண்ட பிரமதேவனுலும், திருமாலாலும் அறிதற்கு அரிய பெருமையுடைய வலிய நெருப்பை உமிழும்படியான அக்கினித் தம்பமாக நின்றவர் ஆவர் என்றவாறு.

விளக்கம்: தஞ்சை இராசராசேச்சரத்துப் பெருவுடையாராகிய சிவபெருமான் யாவராலும் அறிய இயலாத பெருமை வாய்ந்தவர் என்பதாம். மா-பெருமை. ஈட்டம்-கூட்டம். தாள்-தண்டு. திரு-அழகு. கமலத்தவர்-பிரமதேவர். கமலம்-தாமரை. அழல் பிழம்பர்-அக்கினித் தம்பமாய் நின்றவர். உவரி-உப்பையுடைய. மாமறுகு-பெரிய தெருக்கள்; இராச வீதி. களிற்று அரசு-அரச யானை; இது நான்கு காலும், துதிக்கையும், கோசமும், வாலும் ஆகிய ஏழு உறுப்பு நிலத்தில் தோய்வதாய், முன்பு உயர்ந்து பின்பு தாழ்ந்து உள்ளதாய், ஏழு முழம் உயர்ந்து ஒன்பது முழம் நீண்டு பதின்மூன்று முழம் சுற்றுடையதாய், முகம் துதிக்கை இவற்றில் செம்புள்ளியுடையதாய்ப் பகைவரைத் துதிக்கையாலும் கொம்பாலும் வாலாலும் கால்களாலும் கொல்ல வல்ல வலிமையுடையதாய் உள்ள யானை ஆகும். இவரும்-உலாவும். மால்வரை செய் - பெரிய மலைபோலக் கட்டப் பெற்ற. இஞ்சி-மதில்.

தாள் + திரு + கமலம் = தாட்டிருக்கமலம். கடலின், இன்: ஐந்தாம் வேற்றுமை ஒப்புப் பொருள். இவரும்:

பெயரெச்சம். இவர்க்கு என்ற நான்காம் வேற்றுமை, பொருள் நோக்கி முதல் வேற்றுமையாகக் கொள்ளப் பெற்றது; செய்யுள் 10 முடிய இங்ஙனமே கொள்க. 5

அருளுமா றருளி ஆளுமா றுள
அடிகள்தம் அழகிய விழியும்
குருளும்வார் காதும் காட்டியான் பெற்ற
குயிலினை மயல்செய்வ(து) அழகோ?
தரளவான் குன்றில் தண்நிலா ஒளியும்
தருகுவால் பெருகுவான் தெருவில்
இருளெலாங் கிழியும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.

பொழிப்புரை: அழகிய முத்துக்களைச் சேர்த்துக் கட்டிய கட்டு மலையில் (தோன்றும் ஒளியும்), குளிர்ந்த நிலவின் ஒளியும், (வளங்களைத்) தருகின்ற பூமியின் ஒளியும் (மிகப்) பெருகிச் சிறப்புற்ற வீதிகளில் (நிறைந்துள்ள) இருள் முழுமையும் நீங்கி நிற்கும் மதில்கள் சூழ்ந்த தஞ்சைமா நகரில் உள்ள இராசராசேச்சரம் என்னும் பெரிய கோயிலில் எழுந்தருளிய இப்பெருவுடையார் அருள்புரிய வேண்டிய வழியால் அருள்புரிந்து, ஆட்கொள்ள வேண்டிய வழியால் ஆட்கொண்டு (நின்ற), அந்த இறைவர் தமது அழகிய கண்களையும், புன்சடையையும், நீண்ட காதுகளையும் தெரியக்காட்டி, யான் பெற்ற குயில் போலும் (இனிய குரலையுடைய இப்) பெண்ணை மையல் செய்வது அழகாகுமோ? (ஆகாது) என்றவாறு.

விளக்கம்: அடிகள் - இறைவர். குருள் - புன்சடை. குயிலினை-குயில் போலும் இனிய குரலையுடைய பெண். மயல்-மையல். தரளம்-முத்து. தரு-(வளங்களைத்)தருகின்ற. கு-பூமி. வால்-ஒளி. வான்-அழகு; சிறப்பு. கிழியும்-நீங்கும்.

இப்பாடல் 'நற்ருய் இரங்கல்' என்ற துறையைச் சார்ந்தது. குயில்: உவமையாகு பெயர். அழகோ, ஓ: எதிர்மறை. எலாம்: பன்மை. 6

தனிப்பெருந் தாமே முழுதுறப் பிறப்பின்
தளிர்இறப்(பு) இலைஉதிர்(வு) என்ருல்
நினைப்பருந் தம்பாற் சேறலின் றேனும்
நெஞ்சிடிந் துருகுவ(து) என்னே?
சுனைப்பெருங் கலங்கற் பொய்கையங் கழுநீர்ச்
சூழல்மா ளிகைசுடர் வீசும்
எனைப்பெரு மணஞ்செய் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.

பொழிப்புரை: நீருற்றினையும் நீர்பாயும் மதகினையும் உடைய தடாகத்திலுள்ள அழகிய (செங்) கழுநீர்மலர்கள் சுற்றுப்புறங்களிலும், ஒளி வீசும் மாளிகைகளிலும், மற்றைய எல்லாப் பொருள்களிலும் மிகுந்த வாசனையைச் செய்வதும், மதில்கள் சூழ்ந்ததுமான தஞ்சை மாநகரில் உள்ள இராசராசேச்சரம் என்னும் பெரிய கோயிலில் எழுந்தருளிய இப் பெருவுடையார், ஒப்பற்ற பெருமையுடைய (அவர்), தாமே எல்லாப் பொருள்களிலும் கலந்து இருக்கப் பிறப்பு இனியதளிர் தளிர்ப்பதைப்போலவும், இறப்பு இலை உதிர்ந்து விழுதலைப் போலவும் (ஒன்றன்பின் ஒன்ருக நிகழ்வது)என்ருல், மனத்தினுல் நினைத்தற்கு அரிய (அவர்) தம்மிடத்துச் செல்லுதல் தற்போது நிகழாவிடினும் மனம் இடிந்து கரைந்து வருந்துவது என்ன காரணம்? என்றவாறு.

விளக்கம்: இறைவன் எல்லாப் பொருள்களிலும் பொருந்தி இருந்தாலும் உயிர்களுக்குப் பிறப்பு இறப்பு உண்டு; இறைவனிடம் தற்போது செல்லுதல் நிகழாவிட்டா

லும் அதற்காக வருந்துவதால் பயனில்லை; பின்னர் அவன் திருவடி அடைய அவனுக்குத் தொண்டு புரிக என்பதாம். தனி-ஒப்பற்ற. இங்குப் பிறவிக்கு, இனிய தளிரையும் இறத்தலுக்கு, இலை உதிர்தலையும் உவமையாகக் கூறி யுள்ளார். நெஞ்சு இடிந்து உருகுவது-மனம் உடைந்து வருந்துதல். சுனை-இங்கு நீரூற்று. கலங்கல்-நீர்பாயும் மதகு. சூழல்-சுற்றுப்புறம். எனை - மற்றைய பொருள்கள். பெருமணம் செய்-மிகுந்த வாசனையைச் செய்யும்.

என்னோ: வினு. சூழல்: இடப்பெயர். இன்தளிர், உவமானம். பிறப்பு, உவமேயம். இலை உதிர்தல், உவமானம். இறப்பு, உவமேயம். 7

பன்நெடுங் காலம் பணிசெய்து பழையோர்
தாம்பலர் ஏம்பலித் திருக்க
என்நெடுங் கோயில் நெஞ்சுவீற் றிருந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்;
மின்னெடும் புருவத்(து) இளமயில் அனையார்
விலங்கல்செய் நாடக சாலை
இன்நடம் பயிலும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.

பொழிப்புரை: பல நெடுங்காலமாகத் தங்களால் இயன்ற (சிவத்) தொண்டுகளைச் செய்து முன்னோர்கள் பலர் (தரிசிக்கும் பொருட்டு) வருந்திக் கொண்டிருக்க, மின்னல் (போலும் ஒளி வீசும்) நீண்டபுருவத்தினையுடைய இள மயில் போன்ற பெண்கள், மலையின் தோற்றத்தைப் போன்று உயர்ந்து காட்சி அளிக்கும் நாடகசாலைகளில் இனிய நடனம் செய்கின்றதும், மதில்கள் சூழ்ந்ததுமான தஞ்சைமா நகரில் உள்ள இராசராசேச்சரம் என்னும் பெரிய கோயிலில்

எழுந்தருளிய இப்பெருவுடையார், பெரிய கோயிலாக என் மனத்தினிடத்து வந்து வீற்றிருக்கும் எளிமைத் தன்மையை யான் எப்பொழுதும் மறக்க மாட்டேன் என்றவாறு.

விளக்கம்: பழையோர்-முன்னோர்கள்; பழவடியார்கள். ஏம்பலித்தல்-வருந்திக் கொண்டிருத்தல். எளிமை-எளிவந்த தன்மை. மின்-மின்னல். விலங்கல்-மலை. இன் நடம்-இனிய நடனம். "என்நெடுங் கோயில் நெஞ்சுவீற் றிருந்த எளிமையை என்றும் நான் மறக்கேன்": "அத்தாவுன் அடியேனை அன்பால் ஆர்த்தாய் அருள் நோக்கில் தீர்த்தநீர் ஆட்டிக் கொண்டாய், எத்தனையும் அரியநீ எளியை ஆனாய்" என்பது அப்பர் தேவாரம்.

மறக்கேன்: எதிர்கால வினைமுற்று. தாம்: அசை. பயிலும்: பெயரெச்சம். இப்பாடல் பெருமிதச் சுவையுடையது.8

மங்குல்சூழ் போதின் ஒழிவற நிறைந்து
வஞ்சகர் நெஞ்சகத்(து) ஒளிப்பார்;
அங்கழல் சுடராம் அவர்க்கிள வேனல்
அலர்கதிர் அனையவா ழியரோ!
பொங்கெழில் திருநீ(று) அழிபொசி வனப்பில்
புனல்துளும்(பு) அவிர்சடை மொழுப்பர்;
எங்களுக்(கு) இனியர்; இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.

பொழிப்புரை: மதில்கள் சூழ்ந்த தஞ்சை மாநகரில் உள்ள இராசராசேச்சரம் என்னும் பெரிய கோயிலில் எழுந்தருளிய இப்பெருவுடையார், அழகுமிகுந்த திருநீற்றுக் கோலத்தை அழிக்கும்படி, அழகுமிக்க கங்கைநீர் தளும்பிக் கசிகின்ற ஒளி பொருந்திய சடைமுடியை யுடையவர்; (அவர்) எங்களுக்கு இனிமையானவர்; நீக்கமற நிறைந்து மேகங்களால் சூழப் பெற்ற காலத்து(ச் சூரியன் ஒளி

மறைந்து இருப்பது போல) வஞ்சகருடைய மனத்தினிடத்துக் காணப்படாமல் மறைந்து நிற்பவர்; அழகிய திருவடி ஒளியில் மூழ்கிய அன்பர்களுக்கு இளவேனிற் காலத்தில் உதித்த சூரியனைப் போன்று வாழ்விக்கும் தன்மையுடையவர் என்றவாறு,

விளக்கம்: மங்குல்-மேகம். ஒழிவற-நீக்கமற. இறைவன் வஞ்சகர் மனத்திடைக் காணப்படாதவன்: "கரவாடும் வன்னெஞ்சர்க் கரியானை" என்பதும், "திருந்தா மனமுடையார் திறத்து என்றும் பொருந்தார்" என்பதும் அப்பர் தேவாரம். கழல்-திருவடி. இளவேனல்-இளவேனில். கதிர்-சூரியன். அழிபொசி - அழியும்படி. துளும்பு - தளும்புதல். சடை மொழுப்பர்-சடைமுடியையுடையவர்.

வாழியரோ, ஓ: அசை. கழல்-ஆகுபெயர். ஒளிப்பர், மொழுப்பர், இனியர்: வினைமுற்றுக்கள். 9

தனியர்எத் தனையொ ராயிர வருமாம்
தன்மையர் என்வயத் தினராம்
கனியரத் தருதீங் கரும்பர்வெண் புரிநூற்
கட்டியர் அட்டஆர் அமிர்தர்
புனிதர்பொற் கழலர் புரிசடா மகுடர்
புண்ணியர் பொய்யிலா மெய்யர்க்(கு)
இனியர்எத் தனையும் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவர்க்கே.

பொழிப்புரை: மதில்கள் சூழ்ந்த தஞ்சைமாநகரில் உள்ள இராசராசேச்சரம் என்னும் பெரிய கோயிலில் எழுந்தருளிய இப்பெருவுடையார், தனிமையானவர்; எவ்வளவோ ஆயிரம் வடிவம் கொள்ளும் தன்மையுடையவர்; என் வசப்பட்டவர் ஆவர்; கனியைப் போன்றவர்; அரிய இனிய

கரும்பு போன்றவர்; வெண்மையான முறுக்கிய பூணூலைத் தரித்தவர்; காய்ச்சின அரிய அமுதம் போன்றவர்; தூய்மையானவர்; பொன்மயமான வீரக்கழலை அணிந்தவர்; முறுக்கிய சடாமுடியையுடையவர்; புண்ணிய வடிவினர்; பொய்பேசாத மெய்யன்பர்களுக்கு மிகவும் இனிமையான வர் என்றவாறு.

விளக்கம்: தனியர் - ஒப்பற்றவருமாம். எத்தனை ஓரா யிரவருமாம் தன்மையர் - எவ்வளவோ ஆயிரம் பேர்களு டைய தன்மையையும் உடையவர் என்றலுமாம். புரிநூல்- முப்புரிநூல்; பூணூல். அட்ட - காய்ச்சின. அமிர்தம் - பால். எத்தனையும் இனியர்-மிகவும் இனிமையானவர்.

கனியர் + அத்து + அரு = கனியரத்தரு, அத்து: சாரியை. அட்ட: பெயரெச்சம். பொய்யிலா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். 10

சரளமந் தார சண்பக வகுள
சந்தன நந்தன வனத்தின்
இருள்விரி மொழுப்பின் இஞ்சிசூழ் தஞ்சை
இராசரா சேச்சரத் திவரை
அருமருந்(து) அருந்தி அல்லல்தீர் கருவூர்
அறைந்தசொல் மாலைஈ ரைந்தின்
பொருள்மருந்(து) உடையோர் சிவபதம் என்னும்
பொன்நெடுங் குன்றுடை யோரே.

பொழிப்புரை: தேவதாரு, மந்தாரம், சண்பகம், மகிழ், சந்தனம் ஆகிய மரங்கள் நிறைந்த நந்தவனத்தின் இருள் பரவியிருக்கின்ற இடமும் மதிலும் சூழ்ந்த தஞ்சைமா நகரில் உள்ள இராசராசேச்சரம் என்னும் பெரிய கோயிலில் எழுந்தருளிய இப்பெருவுடையாரிடத்து(ப் பிறவிப் பிணிக்கு)

அரிய மருந்து ஆகிய அவரது திருவருளைப்)பருகித் துன்பம் நீங்கப்பெற்ற கருவூர்த்தேவர்பாடிய பாமாலையாகிய இந்தப் பத்துப் பாடல்களின் பொருளாகிய மருந்தை உண்பவர்கள் (உணர்ந்து அனுபவிப்பவர்கள்) சிவபதம் என்னும் அழகிய பெரிய கயிலாய மலையைத் தனக்கு இருப்பிடமாகக்கொண் டவர்கள் ஆவார்கள் என்றவாறு.

விளக்கம்: சரளம் - ஒரு வகைமரம்; தேவதாரு என்பர். வகுளம் - மகிழமரம். மொழுப்பு - பரந்த இடம். அருமருந்து- திருவருளாகிய அரிய மருந்து. 'அருமருந் தருந்தி அல்லல் தீர் கருவூர்' என்ற தொடர்க்கு, கருவூர்த்தேவர் தாம் அரிய பச்சிலை முதலிய மருந்துகளைத் தின்று நரைதிரைமூப்பு என்ற துன்பம் இல்லாமல் உடல்வன்மை பெற்றுச் சித்தி நிலையடைந்தவர் என்றும், பழவினை வசமாக இவர் ஓர் நோயினால் பீடிக்கப் பெற்று அரிய காயகற்பங்களை அருந்தி நன்னிலை அடைந்தவர் என்றும் வரலாறு கூறும். அல்லல்-துன்பம். பொருள் - பாடலின் பொருள். பொன் நெடுங்குன்று - கயிலாய மலை; சிவபதம். சொல்மாலை - பதிகப் பாடல்கள்.

பொருள் மருந்து: (பொருளாகிய மருந்து) உருவகம். அறைந்த: பெயரெச்சம். 11

திருச்சிற்றம்பலம்

---

10. திருவிடைமருதூர்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

வெய்யசெஞ் சோதி மண்டலம் பொலிய
வீங்கிருள் நடுநல்யா மத்தோர்
பையசெம் பாந்தள் பருமணி உமிழ்ந்து
பாவியேன் காதல்செய் காதில்
ஐயசெம் பொற்ரேட் டவிர்சடை மொழுப்பின்
அழிவழ கியதிரு நீற்று
மையசெங் கண்டத் தண்டவா னவர்கோன்
மருவிடம் திருவிடை மருதே.

திருவிடைமருதூர்: சோழவளநாட்டில் காவிரிக்குத் தென்பால் திகழும் சிவத்தலங்களுள் 30ஆவது சிவத்தலம் திருவிடை மருதூர் ஆகும். இது தஞ்சை மாவட்டத்துள் தென்பகுதி இரயில்வேயில் மாயூரம் கும்பகோணம் பாதையில் உள்ள திருவிடை மருதூர் இரயில்வே நிலையத்திற்கு வடக்கே மிக அருகில் உள்ளது. காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த வீரசோழன் தங்கி இருந்ததால் வீரசோழபுரம் எனவும் இத்தலம் பெயர் பெறும்.

இத்தலம் வடமொழியில் மத்தியார்ச்சுனம் எனவும் பெயர் பெறும். அருச்சுனம்-மருது. மருதமரத்தைத் தல விருட்சமாகக் கொண்டு விளங்கும் தலம் மூன்று ஆகும். அவை, வடநாட்டிலுள்ள திருப்பருப்பதம்(ஸ்ரீசைலம்) ஆகிய மல்லிகார்ச்சுனமும், தெற்கே பாண்டி நாட்டிலுள்ள அம்பாசமுத்திரத்திற்கு அண்மையில் திகழும் திருப்புடை மருதூராகிய புடார்ச்சுனமும், சோழநாட்டிலுள்ள திரு இடைமருதூராகிய மத்தியார்ச்சுனமும் ஆகும்.

இத்தலத்துச் சிவாலயத்தில் எழுந்தருளிய ஸ்ரீ மகாலிங்கேசுவரர் என்ற திருநாமத்திற்கு ஏற்பத் திருவலஞ்சுழி விநாயகர் சந்நிதியாகவும், சுவாமி மலை முருகன் சந்நிதியாகவும், சிதம்பரம் நடராசர் சந்நிதியாகவும், திருஆலங்கடி (இரும்பூளை) தட்சிணாமூர்த்தி சந்நிதியாகவும், திருவாரூர் சோமாஸ் கந்தர் சந்நிதியாகவும், சூரியனார் கோயில் சூரியன் சந்நிதியாகவும், திருவாவடுதுறை திருநந்தி தேவர் சந்நிதியாகவும், திருச்சேய்ஞலூர் சண்டேசுவரர் சந்நிதியாகவும், சீகாழி வயிரவர் சந்நிதியாகவும் தனித்தலங்களாகவும் அமைந்துள்ளன.

இங்கு உமாதேவியார் தவம் செய்து இறைவனைச் சோதிவடிவில் தரிசித்துப் போற்றினார். இங்குள்ள மூகாம்பிகை சந்நிதி மிகவிசேடம். வரகுணபாண்டியன் முதலியோர் இத் தலத்து வழிபட்டனர். இவ்வாலயத்து வெளிப்பிராகாரமாகிய பெரிய சுற்றுப்பிராகாரம் அசுவமேதப் பிராகாரம் எனப் பெயர் பெறும். தல விருட்சம்-மருதமரம். தீர்த்தம்-காவிரி. இங்கு அயிராவணத்துறை மிக விசேடம். (அயிராவணத்துறை வீர சோழனாற்றங்கரை எனப்பெயர் பெறுகிறது).

இறைவனின் பெயர் – ஸ்ரீ மகாலிங்கேசுவரர், மருதவாணர்.

இறைவியின் பெயர் – பிருகத் சுந்தரகுசாம்பிகை,
நன்முலை நாயகி.

பொழிப்புரை: மிக்க இருளையுடைய நல்ல நடு இரவில் ஒரு படத்தையுடைய செந்நாகம் பெரிய மாணிக்கத்தை உமிழ்ந்ததால் உண்டாகும் ஒளி பொருந்திய சிவந்த சோதிவட்டம் போன்று விளங்க, பாவியேனால் காதலிக்கப் பட்ட (சிவபெருமான்) காதில் அணிந்த செம்பொன்னாலாகிய அழகிய தோடு (குழை) திகழ்கின்றது; அத்தகைய தோட்டினையும், விளங்கும் சடைமுடியினையும், மிக்க அழகு

பொருந்திய திருநீற்று(க் கோலத்தினையும்), (விஷத்தால்) கருநிறம் விளங்கும் சிவந்த கழுத்தினையும் (உடைய) விண்ணுலகத்தில் வாழும் தேவர்களுக்குத் தேவனாகிய சிவ பெருமான் எழுந்தருளியிருக்கும் தலம் திருவிடைமருதூரே ஆகும் என்றவாறு.

விளக்கம்: வெய்ய செஞ்சோதி - சூரியன். வீங்குதல்-மிகுதல். பை-படம். பாந்தள்-பாம்பு. மணி - மாணிக்கம்; அது செம்மணி. ஐ-அழகு. தோடு-காதணி; குழை. சடை மொழுப்பு - சடைமுடி. அழிவு அழகு - மிக்க அழகு. மை - கருமை. கண்டம்-கழுத்து. செம்பாந்தளின் பருமணி போலப் பொற்றோடும், சோதிவட்டம் போலச் சடைமொழுப்பும் பொலிய எனக்கொள்க. அண்டவானவர் கோன்-விண்ணு லகத்தில் வாழும் தேவர்களுக்குத் தலைவனாகிய சிவபெரு மான். மருவு-பொருந்தியிருக்கும்.

பொன் + தோடு + அவிர் = பொற்றோட்டவிர். பாவி யேன்: வினையாலணையும் பெயர். 1

இந்திர லோக முழுவதும் பணிகேட்(டு)
இணையடி தொழுதெழத் தாம்போய்
ஐந்தலை நாகம் மேகலை அரையா
அகந்தொறும் பலிதிரி அடிகள்
தந்திரி வீணை கீதமும் பாடச்
சாதிகின் னரங்கலந்(து) ஒலிப்ப
மந்திர கீதந் தீங்குழல் எங்கும்
மருவிடம் திருவிடை மருதே.

பொழிப்புரை: தேவலோகத்துள்ள தேவர்கள் யாவரும் சொன்ன ஏவல் கேட்டு இரண்டு திருவடிகளையும் வணங்கி எழுந்து நிற்க, ஐந்துதலை நாகத்தை இடுப்பில் மேகலை போல் கட்டிக்கொண்டு வீடுகள் தோறும் போய்ப் பிச்சைக்

காக அலைந்து திரிகின்ற சிவபெருமானுனவர், நரம்புகளை யுடைய வீணையின் இசையை எழுப்பிப்பாட, அதனேடு சாதி கின்னரமாகிய இசைக் கருவி கலந்து ஒலிக்க, (வேதியர் எழுப்பும்) வேதமந்திரமாகிய இசைப் பாடல்களும், இனிய குழலோசையும் எங்கும் பொருந்திய தலம் திருவிடைமரு தூரே ஆகும் என்றவாறு.

விளக்கம்: இறைவன் வாசிக்கும் வீணை யொலியோடு சாதி கின்னர ஒலியும், வேத மந்திர ஒலியும்,குழலொலியும் பொருந்திய இடம் திருவிடைமருதூர் என்பதாம். இந்திர லோகம் - சுவர்க்கலோகம்; தேவலோகம். மேகலை - இடுப் பில் அணியும் அணி. அரை-இடுப்பு. அகம்-வீடு. பலி-பிச்சை. அடிகள்-இறைவன். தந்திரி-நரம்பு. 'அடிகள் தந்திரி வீணை கீதமும் பாட'-இது வீணு தட்சிணுமூர்த்தி திருக்கோலம்: "பெருங்கடல் மூடிப்........... கங்காளராய், வருங்கடல் மீளநின்றெம் இறை நல்வீணை வாசிக்குமே" என்பதும், "பண்ணுெடி யாழ் வீணை பயின்ருய் போற்றி" என்பதும் அப்பர் தேவாரம். சாதி கின்னரம்-ஒருவித இசைக் கருவி. மந்திரம்-வேத மந்திரம். கீதம்-இசைப்பாட்டு.

அடிகள் பாட என இயைக்க. லோகம்: ஆகுபெயர். முழுவதும், உம்: முற்றும்மை. 2

பனிபடு மதியம் பயில்கொழுந் தன்ன
பல்லவம் வல்லியென்(று) இங்ஙன்
வினைபடு கனகம் போலயா வையுமாய்
வீங்குல(கு) ஒழிவற நிறைந்து
துனிபடு கலவி மலைமக ளுடனுய்த்
தூங்கிருள் நடுநல்யா மத்தென்
மனனிடை அணுகி நுணுகியுள் கலந்தோன்
மருவிடம் திருவிடை மருதே.

பொழிப்புரை: குளிர்ச்சி பொருந்திய சந்திரனிடத்துள்ள கொழுந்து என்று சொல்லத் தகுந்த தளிர் கொடி போன்று, இப்படிப் பல பொருள்களாகச் செய்யப்படுகின்ற (ஒரே பொருளாகிய) பொன்னைப்போல எல்லாப் பொருள்களுமாய், பெரிய உலக முழுவதும் நீக்கமற நிறைந்து நின்று, ஊடலோடு கூடிய இன்ப நுகர்ச்சியான கலவித் தொழிற் குரிய உமாதேவியோடு பொருந்தியவனுய்ப் பேரிருளின் நடுவாகிய இரவிலே என்மனத்தின் கண் சார்ந்து மிக நுட்பமாக உள்ளே கலந்து நின்றவனுகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் தலம் திருவிடைமருதுரே ஆகும் என்றவாறு.

விளக்கம்: பனி-குளிர்ச்சி. பல்லவம்-தளிர். வல்லி-கொடி. வினைபடு கனகம்-பலவிதமாகத்தொழிற்படும் பொன். வீங்கு-பெரிய. துனி-ஊடல், சிறுபிணக்கு. கலவி-இன்ப நுகர்ச்சி. 'துனிபடு கலவி': "துனியும் புலவியும் இல்லாயிற் காமம், கனியும் கருக்காயு மற்று" என்பதும், "ஊடுதல் காமத் திற்(கு) இன்பம்" என்பதும் திருக்குறள். தூங்கு இருள்-பேரிருள். யாமம்-இரவு. மனன்-மனம். நுணுகி-நுட்பமாக.

அன்ன, போல; உவமவுருபுகள். மனன்: கடைப் போலி. கலந்தோன்: வினையாலணையும் பெயர். 3

அணியுமிழ் சோதி மணியினுள் கலந்தாங்(கு)
அடியனேன் உள்கலந்(து) அடியேன்
பணிமகிழ்ந் தருளும் அரிவைபா கத்தன்
படர்சடை விடம்மிடற்(று) அடிகள்
துணியுமிழ் ஆடை அரையிலோ ராடை
சுடர்உமிழ் தரஅதன் அருகே
மணியுமிழ் நாகம் அணியுமிழ்ந்(து) இமைப்ப
மருவிடம் திருவிடை மருதே.

பொழிப்புரை: எரிகின்ற சுடுகாட்டில் வைக்கப்பட்ட பிணத்தின் கொழுப்பைத் தின்று ஏப்பத்தைவிட்டு விளங்குகின்ற பற்களையுடைய நெருப்பைக் கக்கும் வாயினையும், நெருங்கக் கட்டிய கழலினையும் உடைய பெரும் பேய்க் கூட்டங்கள் குதித்து ஆடுகின்ற மிக்க இருளையுடைய நல்ல நடு இரவிலே கருணை புரிவதைக் குறிக்கும் புன்சிரிப்பானது இளஞ் சந்திரனைப்போல ஒளி வீசவும், செவ்வானம் போன்று விளங்குகின்ற திருமேனியில் அணிந்த கீற்றுகளோடு கூடிய பாம்புகள் ஆடவும் ஆடுகின்ற எம் தலைவனாகிய சிவபெருமான் எழுந்தருளிய தலம் திருவிடைமருதூரே ஆகும் என்றவாறு.

விளக்கம்: எரிதரு - எரிகின்ற. கரிகாடு - சுடுகாடு; மயானம். நிணம் - கொழுப்பு. எயிறு - பல். துரு - நெருங்கக் கட்டிய. கழல் - வீரக்கழல்; அல்லது சதங்கை. கணம்-கூட்டம். எழுந்து ஆடும் - குதித்து ஆடுகின்ற. தூங்கு இருள் - மிக்க இருள். முறுவல் - புன் சிரிப்பு. முகிழ் நிலா - இளஞ் சந்திரன். அந்தி - செவ்வானம். அந்தி போன்று ஒளிர் திருமேனி: "செவ்வானத் தொளியன்ன மேனியான்" என்பது அப்பர் தேவாரம். வரி - கோடுகள்.

எரிதரு: ஒருசொல். எரிதா: பகுதி. இடுபிணம்: வினைத்தொகை. அந்திபோன்று: இது உவமானம். 6

எழிலையாழ் செய்கைப் பசுங்கலன் விசும்பின்
இன்துளி படநனைந்(து) உருகி
அழலையாழ் புருவம் புனலொடுங் கிடந்தாங்(கு)
ஆதனேன் மாதரார் கலவித்
தொழிலையாழ் நெஞ்சம் இடர்படா வண்ணம்
தூங்கிருள் நடுநல்யா மத்தோர்
மழலையாழ் சிலம்ப வந்(து)அகம் புகுந்தோன்
மருவிடம் திருவிடை மருதே.

பொழிப்புரை : அழகையும் தோற்கச் செய்யும் வேலைப் பாடுடைய பச்சை மட்கலங்கள் ஆகாயத்தினின்று மழைத் துளிகள் பட்ட அளவில் நனைந்து கரைந்து போக, நெருப் பில் சுடப்பட்ட அம் மட்கலங்கள் பின்னர், நீரில் கிடந்தா லும் கெடாதவாறு போல, மாதர்களோடு கலவித்தொழிலில் ஆழ்ந்து கிடந்த அறிவில்லாதவனாகிய எனது மனம் (உன் அருளாகிய பெருந்தீயில் மூழ்கிய பின், சிற்றின்ப நுகர்ச்சி யால் விளையும்) துன்பம் வந்து தாக்காதவாறு மிகுந்த இருளையுடைய நல்ல நடு இரவில் ஒப்பற்ற மெல்லிய யாழோசை ஒலிக்க என்மனத்துள் வந்து புகுந்தவனாகிய சிவபெருமான் எழுந்தருளிய தலம் திருவிடை மருதூரே ஆகும் என்றவாறு.

விளக்கம் : அடியவனிடம் சிற்றின்பத்தால் விளையும் துன்பம் தாக்காதபடி என்மனத்துள் வந்துஎழுந்தருளி ஆட் கொண்ட இறைவன் எழுந்தருளிய இடம் திருவிடைமருதூர் என்பதாம். இறைவனின் அருள் பெறாத நிலைக்குப் பச்சை மட்கலமும், இறைவனின் அருள்பெற்ற நிலைக்குச் சுட்ட மட்கலமும் உவமையாகும். எழிலை ஆழ் - அழகையும் தோற்கச் செய்யும். விசும்பின் இன்துளி - மழைத் துளி. அழலை ஆழ்பு உருவம் - நெருப்பில் வைத்துச் சுட்ட மட் கலம். ஆதனேன் - அறிவில்லாதவனாகிய யான். கலவித் தொழிலை ஆழ் நெஞ்சம் - புணர்ச்சித் தொழிலில் ஆழ்ந்து கிடந்த மனம். மழலை யாழ் சிலம்ப - மெல்லிய யாழோசை ஒலிக்க. அகம் - மனம்.

அழலை (அழலில்), தொழிலை (தொழிலில்) : உருபு மயக் கம். ஆதனேன், புகுந்தோன் : வினையாலணையும் பெயர்கள். 7

வையவாம் பெற்றம் பெற்றம்ஏ(று) உடையார்
மாதவர் காதல்வைத் தென்னை
வெய்யவாம் செந்தீப் பட்டஇட் டிகைபோல்
விழுமியோன் முன்புபின்(பு) என்கோ
நொய்யவா றென்ன வந்துள்வீற் றிருந்த
நூறுநூ றுயிர கோடி
மையவாங் கண்டத்(து) அண்டவா னவர்கோன்
மருவிடம் திருவிடை மருதே.

பொழிப்புரை: வைக்கோலை விரும்பும் இடபத்தின் மேல் பெருமையோடு எழுந்தருளியவரும், உமாதேவியை (இடப் பாகத்தே) உடையவருமான சிவபெருமான், என் மீது அன்பு வைத்துக் கொடிய செந்தீயினுல் சுடப்பட்ட செங்கற் களைப் போல (மாறுபடாதவண்ணம் என்னைச் செம்மை யாக்கி), மேன்மை பொருந்திய அச்சிவபெருமான் எனக்கு முன்னும் பின்னும் உள்ளான் என்று சொல்லும்படி, எளிமை யாக (என்) உள்ளத்தில் வந்து வீற்றிருக்கின்ற கருநிறம் கொண்ட கழுத்தினையுடைய எண்ணற்ற அண்டங்களில் உள்ள தேவர்களுக்குத் தேவனாகிய சிவபெருமான் எழுந் தருளிய தலம் திருவிடைமருதூரே ஆகும் என்றவாறு.

விளக்கம்: வை அவாம் - வைக்கோலை விரும்பும். பெற்றம்-எருது; இடபம். பெருமையுமாம். மாது அவர்-உமா தேவியை இடப்பாகத்தே உடையவர். காதல் - அன்பு. இட்டிகை - செங்கற்கள். என்கோ - என்று சொல்லும்படி. நொய்யவாறு என்ன-எளிமையாக. நூறுநூறுயிர கோடி. அண்டம் - எண்ணற்ற அண்டங்கள். மை அவாம் - கரு மையை விரும்பும் (கருமையான). கண்டம்-கழுத்து.

என்னை : உருபு மயக்கம். செந்தீ : பண்புத்தொகை. விழுமியோன்: வினையாலணையும் பெயர். 8

கலங்கலம் பொய்கைப் புனற்றெளி விடத்துக்
கலந்தமண் ணிடைக்கிடந் தாங்கு
நலம்கலந்(து) அடியேன் சிந்தையுட் புகுந்த
நம்பனே! வம்பனே னுடைய
புலங்கலந் தவனே! என்றுநின்(று) உருகிப்
புலம்புவார் அவம்புகார்; அருவி
மலங்கலங் கண்ணிற் கண்மணி அனையான்
மருவிடம் திருவிடை மருதே.

பொழிப்புரை : கலங்கலையுடைய அழகிய குளத்து நீரை(த் தேற்றாங்கொட்டை முதலியவற்றால்) தெளியச் செய்த விடத்து, (நீருடன்) கலந்திருந்த மண் அடியில் தங்கிய வாறு போல, நன்மையை அளிக்கும் திருவருளை (என்னு டன்) கூட்டி, அடியேனுடைய சிந்தையுட் புகுந்த நம் பெருமானே! வீணாகிய என்னுடைய அறிவினுள் கலந்து நின்றவனே! எக்காலத்தும் (உன் தொண்டில்) நின்று மனம் உருகி (வாய் விட்டுக்) கதறுகின்றவர்கள் பயனற்ற தன்மையை அடையார்கள்; (நல்ல பயனைப் பெறுவார்கள்) (அத்தகைய அடியவர்களது) நீர் அருவியைப் போல (ஆனந்தக் கண்ணீரைச் சொரியும்) கலங்கிய தோற்றத் தையுடைய அழகிய கண்களில் திகழும் கண்மணியினைப் போன்ற சிவபெருமான் எழுந்தருளிய தலம் திருவிடை மருதூரே ஆகும் என்றவாறு.

விளக்கம் : கலங்கல் - குழம்புதல். அம் - அழகு. தெளிவு - (தேற்றாங் கொட்டை முதலியவற்றால்) தெளிதல். இங்குக் கலங்கல் நீர் - ஆன்மாவிற்கும், மண் - ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலத்திற்கும், திருவருள்-நீரைத் தெளிவிக்கும் தேற்றாங் கொட்டை முதலிய பொரு ளுக்கும் உவமையாகும். நலம்-இங்குத் திருவருள். நம்பன்-

அடியவர்களின் விருப்பத்திற்குரிய பெருமான். வம்பனேன்- வீணனாகிய யான். ஒரு சிறந்த குறிக்கோளைக் கைக் கொண்டு தவச் செயலில் ஈடுபடாமல் உடலை ஓம்பிப் பய னற்ற செயலைச் செய்தொழுகும் தன்மையனை 'வம்பனேன்' என்றார். "தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார், அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு" என்பது திருக்குறள். சரியை முதலிய தவச்செயலை உடையவரே இறைவனுக்குச் சிறந்த அடியார் ஆவர்; இவ்வாறல்லாத அவச்செயல்களைச் செய்பவரே வீணர் ஆவர். புலம்-அறிவு. அவம் - பயனற்ற தன்மை. மலங்குதல் - கலங்குதல். கண்களில் நீர் அருவி போன்று வருதல் பக்தியின் அடையாளம்: "உடம்பெல் லாம் கண்ணாய் அண்ணா வெள்ளந்தான் பாயாதால்"என்பது திருவாசகம். கண்ணில் கண்மணி அனையான் - இங்குச் சிவ பெருமான்: "கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி" என்பதும் "கண்ணிலுள் மணி கச்சியே கம்பனே" என்பதும் அப்பர் தேவாரம்.

நம்பனே, புலங்கலந்தவனே: விளிகள். வம்பனேன், புலம்புவார்: வினையாலணையும் பெயர்கள். புகார்: எதிர் மறை வினைமுற்று. இச்செய்யுள் உவமையணி. 9

ஒருங்கிருங் கண்ணின் எண்ணில்புன் மாக்கள்
உறங்கிருள் நடுநல்யா மத்தோர்
கருங்கண்நின்(று) இமைக்குஞ் செழுஞ்சுடர் விளக்கம்
கலந்தெனக் கலந்துணர் கருவூர்
தருங்கரும் பனைய தீந்தமிழ் மாலை
தடம்பொழில் மருதயாழ் உதிப்ப
வருங்கருங் கண்டத்(து) அண்டவா னவர்கோன்
மருவிடம் திருவிடை மருதே.

பொழிப்புரை: ஒன்று சேர்ந்து தொழிலைச் செய்யும் இரண்டு கண்களையுடைய கணக்கற்ற மிக அறிவில்லாத மக்கள் தூங்குகின்ற நல்ல இருளையுடைய நடு இரவில் ஒப்பற்ற கருநிறம் பொருந்திய கண்களின்று பிரகாசிக்கும் செழுஞ்சுடர் ஒளியோடு கலந்து (பொருள்களைப் பார்ப்பது) போல, இறைவனுடைய அறிவோடு கலந்து உணரும் தன்மையை அடைந்த கருவூர்த் தேவர் செய்த கரும்புபோன்ற இனிய தமிழ் மாலையாகிய பதிகத்தைப் பெரிய சோலையினிடத்து மருதயாழுடன் கலந்துபாட, (அதனால்) வெளிப் பட்டுத்தோன்றும் கரிய கழுத்தினையுடைய தேவர்களுக்குத் தேவனாகிய சிவபெருமான் எழுந்தருளிய தலம் திருவிடை மருதூரே ஆகும் என்றவாறு.

விளக்கம்: நள்ளிரவிலே கண்ணினிடத்துக் கலந்த விளக் கொளி போல, இறைவனின் அறிவுடன் கலந்து எல்லாம் உணர்ந்தவர் கருவூர்த் தேவர் ஆவர். ஒருங்கு-ஒன்று சேர்ந்து தொழில் புரியும். புன்மாக்கள்-மிக அறிவில்லாத மக்கள். கருவூர்-கருவூர்த்தேவர். கலந்து உணர்-இறை வனின் அறிவோடு கலந்து உணரும் தன்மை. தரும்-செய்த; பாடிய. மருதயாழ்-ஒருவகை யாழ்: இது மருத நிலத்துக் குரிய யாழ் ஆகும். கருங்கண்டம்-நீலகண்டம்.

கலந்தென, என: உவவுமருபு. கருவூர்: இடவாகு பெயர். தீந்தமிழ்: பண்புத் தொகை. தடம் பொழில்: உரிச் சொல் தொடர். 10

திருச்சிற்றம்பலம்

கருவூர்த் தேவர் அருளிய திருவிசைப்பா தெளிவுரை

முற்றிற்று

உ

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை

4. பூந்துருத்தி நம்பி காடநம்பி

அருளிய

திருவிசைப்பா

[தெளிவுரை]

1. திருவாரூர்

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

கைக்குவான் முத்தின் சரிவளை பெய்து
    கழுத்திலோர் தனிவடங் கட்டி
முக்கண்நா யகராய்ப் பவனிபோந்(து) இங்ஙன்
    முரிவதோர் முரிவுமை அளவும்
தக்கசீர்க் கங்கை அளவுமன்(று) என்னே?
    தம்மொருப் பா(டு)உல கதன்மேல்
மிக்கசீ ராரூர் ஆதியாய் வீதி
    விடங்கராய் நடம்குலா வினரே.

திருவாரூர்: சோழவள நாட்டுக் காவிரித் தென்கரையில் திகழும் சிவத்தலங்களுள்87-ஆவது சிவத்தலம் திருவாரூர் ஆகும். இது மிகத் தொன்மை வாய்ந்த தலம்: "திருவினுள் சேர்வதற்கு முன்னே பின்னே," "அம்பலத்தே மன்னிக் கூத்தை ஆடுவான் புகுவதற்கு முன்னே பின்னே அணியாரூர் கோயிலாக் கொண்ட நாளே" என்பது அப்பர் தேவாரம். பிறக்க முத்தி

யளிப்பதும், பஞ்ச பூதத் தலங்களுள் *பிருதிவித் தலமாகத் திகழ்வதும், விராட் புருஷனுக்கு மூலாதாரத் தலமாக இருப்பதும், சாயரட்சை எனப்படும் பூசா காலத்தில் உலகிலுள்ள எல்லாச் சிவகலைகளும் ஒருசேர விளங்குவதும், தியாகேசர் எழுந்தருளிய ஏழு விடங்கத் தலங்களுள் முதன்மை பெற்றதும் ஆகிய சிவத்தலம் திருவாரூர் ஆகும். திரு-இலக்குமியும், ஆர்-பூமாதேவியும் பூசித்த ஊர் என்பது திருவாரூர் என்றதன் பொருளாம்.

திருவாரூர், தஞ்சை மாவட்டத்துள் தென் பகுதி இரயில்வேயில் மாயூரம் காரைக்குடி கிளை வழிக்கும் தஞ்சாவூர் நாகைப்பட்டினம் கிளை வழிக்கும் இடையில் உள்ள திருவாரூர்ச் சந்திப்பு இரயில்வே நிலையத்திற்கு வடக்கே சுமார் ஒன்றரை மைல் தொலைவில் உள்ளது.

திருவாரூர்த் திருக்கோயிலின் பெயர் பூங்கோயில் என்பது. இங்கு, "கோயில் ஐவேலி, குளம் ஐவேலி; செங்கழுநீர் ஓடை ஐவேலி" என்பது ஒரு பழமொழி. இத்தலம், பூமாதேவியின் இதய கமலம். இங்கு ஆயிரக்கால் மண்டபமாகி தேவாசிரிய மண்டபம் மிகச் சிறப்புடையது.

இத்தலத்துச் செல்வத் தியாகேசர் சந்நிதி மிகச்சிறந்தது. இவர், முசுகுந்த சக்கிரவர்த்தியால் இங்குப் பிரதிட்டை செய்யப்பெற்றவர்; வீதி விடங்கர் (விடங்கர்-சுயம்பு மூர்த்தி) எனவும் பெயர் பெற்றவர். தலவிருட்சம்-பாதிரி. தீர்த்தம்-தேவதீர்த்தம் (கமலால்யம்), செங்கழுநீரோடை முதலியன.

இறைவனின் பெயர் – வன்மீகநாதர் (வன்மீகம்-புற்று)
இறைவியின் பெயர் – நீலோத்பலாம்பிகை, கமலாம்பாள் (தவத்திருக்கோலம்)

---

*பிருதிவி-மண், பிருதிவித்தலம் காஞ்சிபுரமும் ஆகும். காஞ்சிபுரம், சத்திதத்துவம் மிகுந்தது; திருவாரூர், சிவதத்துவம் மிகுந்தது.

பொழிப்புரை: (தமது) கையில் வெண்மையான முத்துக்களால் பதிக்கப்பெற்ற சிறந்த வளையல்களை அணிந்து, கழுத்திலே ஒப்பற்ற மாலையைத் தரித்து, மூன்று கண்களையுடைய இறைவராய் (வீதியில்) திருவுலா வந்து, உலகிலே மிகுந்த சிறப்பினையுடைய திருவாரூரில் எழுந்தருளிய முழுமுதற்கடவுளாய், வீதியிலும் எழுந்தருளும் விடங்கராய் இருந்து நடனஞ்செய்கின்றார்; (அவர்) இவ்வாறு வளைந்தாடும் வளைவின் அழகிய தோற்றம், உமா தேவியார் இடத்திலேனும் தக்க சிறப்பினையுடைய கங்காதேவி இடத்திலேனும் சிறிதும் கிடையாது; (இப்படி இவர் ஆடும் கோலம் கொள்வதற்கு அவரது) மனக்கருத்துத் தான் யாதோ? என்றவாறு.

விளக்கம்: வால்முத்து அல்லது வான்முத்து. வால் முத்து-வெள்ளிய முத்து. வான்முத்து-பெருமை வாய்ந்த முத்து என்றலுமாம். முத்தின்சரி-முத்திழைத்த வளையல். வளை-சங்கு வளையல் என்றலுமாம். சரி வளையல்-சிறந்த வளையல்கள்; கழலும் தன்மையுள்ள வளையல்களுமாம். இறைவர், அர்த்த நாரீச்சுவர வடிவம் பெற்றதால் கையில் வளையலும் கழுத்தில் தனிவடமும் (மாலையும்) பூண்டார் என்க. பவனி-திருவுலா. முரிவதோர் முரிவு-வளைந்தாடும் வளைவு. உமை - உமாதேவியார். கங்கை - கங்காதேவி. ஒருப்பாடு - கருத்து; சம்மதம். உலகதன்மேல் - உலகில். வீதிவிடங்கர்-இவர் வீதியிலே எழுந்தருளி மனு நீதிச் சோழனுக்கு அருள் செய்தமையால் இப் பெயர் பெற்றார். இவரே தியாகராஜப் பெருமானாகிய சோமாஸ்கந்த மூர்த்தி ஆவர். சோமாஸ்கந்த மூர்த்தி, தமக்கு இடப்பால் அம்மையாரையும், தமக்கும் அம்மையார்க்கும் இடையில் முருகப் பெருமானையும் பெற்றுத்திகழ்பவர்; (விடங்கர் - உளியால் செதுக்கப்படாதவர்; சுயம்பு மூர்த்தி). தியாகராசப் பெரு

மானின் திருமுகத்தையும் அம்மையின் திருமுகத்தையுமே அன்பர்கள் எப்பொழுதும் தரிசிப்பர். அபிஷேக காலங்களில் திருக்கரத்தில் ஒரு பகுதியையும், மார்கழித் திருவாதிரையில் இடது திருப்பாதத்தையும், பங்குனி உத்திரத்தில் வலது திருப்பாதத்தையும் தரிசிக்க இயலும். மற்றைய திரு அங்கங்கள் மிக இரகசியமானவை. நடம் - நடனம். இது அஜபா நடனம் ஆகும். இந்நடனம் இருந்து ஆடுதலால் இறைவன் இருந்தாடும் பெருமான் எனப் பெயர் பெறுவார். வீதி விடங்கர் ஆன்மாக்கள் உய்யவேண்டி அழகராய் இருந்து நடனம் செய்கின்ருர் என்பதாம்.

சரிவளை: ஒரு பொருட் பன்மொழி. கைக்கு: (கையில்) உருபு மயக்கம். என்ஞே, ஓ: வினு. குலவினர்: வினைமுற்று. அன்று: குறிப்பு வினை முற்று. 1

பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப்
  பருகுதோ(று) அமுதமொத் தவர்க்கே
தித்தியா இருக்கும் தேவர்காள்! இவர்தம்
  திருவுரு இருந்தவா பாரீர்;
சத்தியாய்ச் சிவமாய் உலகெலாம் படைத்த
  தனிமுழு முதலுமாய் அதற்கோர்
வித்துமாய் ஆரூர் ஆதியாய் வீதி
  விடங்கராய் நடம்குலா வினரே.

பொழிப்புரை : சிவபெருமான் அருட்சத்தியாயும், சிவமாயும், உலகெலாம் படைத்த ஒப்பற்ற முழுமுதற் கடவுளாயும், உலகங்கள் தோன்றுவதற்கு வித்தாகிய பொருளாயும், திருவாரூரில் எழுந்தருளிய முழுமுதற் கடவுளாயும், வீதியிலும் எழுந்தருளும் விடங்கராயும் இருந்து நடனம் செய்கின்ருர்; தேவர்களே! (சிவபெருமானிடத்து அன்பு பூண்டு (பக்தி மயமாகி அவரது தன்மையை) உணர்பவர்கள்

திருவருளை (நன்றாக) நுகர்ந்து அநுபவிக்குந் தோறும் அவர்களுக்கே (அத்திருவருள்) அமுதம் போன்று தித்தித்திருக்கும்; இவருடைய திருவுருவம் (அருள் வடிவம்) இருந்த விதம் இத்தன்மையது என்று பாருங்கள் என்றவாறு.

விளக்கம்: பத்தி-இறைவனிடத்துக் கொள்ளும் பேரன்பு. அருள் - திருவருள். வாய் மடுத்து - உண்டு; நுகர்ந்து. பருகுதோறு - அநுபவிக்குந் தோறும். இருந்தவா - இருந்தவாறு. அதற்கு - அவ்வுலகத்திற்கு. வித்துமாய் - மூல காரணமாய். சத்தி முதல் வீதிவிடங்கர் வரை நிற்பவர் பரம்பொருளாவர்; அவர்இங்கு நடனமிடுவதற்குக் காரணம் ஆன்மாக்களிடத்துக் கொண்ட கருணையேயாம் என்பதாம்.

தேவர்காள் : விளி. பாரீர் : முன்னிலைப் பன்மை வினை முற்று. அவர்க்கே, ஏ : தேற்றம். 2

திருச்சிற்றம்பலம்

2. கோயில் — முத்துவயிரமணி

பண் - சாளரபாணி*

திருச்சிற்றம்பலம்

முத்து வயிரமணி மாணிக்க மாலைகண்மேல்
தொத்து மிளிர்வனபோல் தூண்டு விளக்கேய்ப்ப
எத்திசையும் வானவர்கள் ஏத்தும் எழில்தில்லை
அத்தனுக்கும் அம்பலமே ஆடரங்கம் ஆயிற்றே.

பொழிப்புரை : முத்துக்களினாலும் வைரங்களினாலும் அழகிய மாணிக்கங்களினாலும் செய்யப்பெற்ற மாலைகளின் மீது பூங்கொத்துக்கள் பிரகாசிப்பன போன்றும் தூண்டப்

* சாளரபாணி-இது நெய்தல் யாழின் ஒருதிறம் என்றும், புறநிலைப் பண் என்றும் கூறுவர்; இதனை ஆனந்த பைரவியில் சுத்தாங்கமாக ராகத்தோடு பாடுவதும் உண்டு; லயாங்கமாகப் பாடுவதும் உண்டு.

பட்ட விளக்கின் ஒளியைப்போன்றும் (இருக்கும்) தில்லை வெளி எல்லாத் திசைகளிலுமுள்ள தேவர்கள் புகழ்ந்து துதிக்கின்ற அழகிய பொன்னம்பலத்தில் எழுந்தருளிய இறைவனுக்கும் நடன சபையாக ஆயிற்று என்றவாறு.

விளக்கம்: தொத்து - பூங்கொத்து. போல்-போன்றும். தூண்டு - தூண்டப்பட்ட. ஏய்ப்ப - போன்றும். தில்லை அத்தன் - நடராசப் பெருமான். அம்பலம்-பொன்னம்பலம்; தில்லைவெளி. ஆடு அரங்கம் - நடன சபை. இங்கு நடனம், ஆனந்த தாண்டவ நடனம் ஆகும்.

போல், ஏய்ப்ப: உவமவுருபுகள். அம்பலமே, ஏ: தேற்றம். எத்திசையும், உம்: முற்றும்மை. ஆயிற்று; ஒன்றன்பால் வினைமுற்று. 1

கடியார் கணம்புல்லர் கண்ணப்பர் என்றுன்
அடியார் அமருலகம் ஆளநீ ஆளாதே
முடியாமுத் தீவேள்வி மூவாயி ரவரொடும்
குடிவாழ்க்கை கொண்டுநீ குலாவிக்கூத் தாடினையே.

பொழிப்புரை: (எம்பெருமானே!) சிறப்பு மிக்க கணம் புல்ல நாயனர், கண்ணப்ப நாயனர் என்று பெயர் கொண்ட உனது அடியார்கள் சிவபுரத்தை ஆளா நிற்க, நீ (அங்கு நின்றும்) ஆட்சி புரியாமல், (ஒருபோதும்) அழியாத மூன்று வகை அக்கினிகளாலான வேள்வியைச் செய்கின்ற தில்லை மூவாயிரம் அந்தணர்களோடும் உடனுறையும் வாழ்க்கையினைமேற்கொண்டு நீ மகிழ்ந்து ஆனந்தக் கூத்து ஆடுகின்றாயே; (என்னே உனது அருள்!) என்றவாறு.

விளக்கம்: கடி ஆர் - சிறப்புமிக்க. கணம்புல்லர் - இவர் வடவெள்ளாற்றுத் தென்கரையில் இருக்குவேளூர் என்ற ஊரிலே வாழ்ந்த பெருஞ் செல்வர்; தில்லையில் திருப்புலீச்

சரத்தில் (இளமையாக்கினுர் கோயிலில்) இருந்து அன்புடன் திருவிளக்கு இட்டுவந்தார்; இவரது செல்வம் நாளடைவில் குறைந்தது; கணம்புல் என்ற ஒருவகைப் புல் அரிந்து விற்று நெய் விளக்கிடலாயினுர்; இதனுல் இவர் கணம் புல்லர் எனப் பெயர் பெற்ருர். ஒரு நாள் கணம்புல் விலை யாகவில்லை; இவர் கணம்புல்லையே எரித்தார்; அதுபோதா தாயிற்று; தன் தலைமயிரையே எரிக்கலானுர்; உடனே சிவபெருமான் இவர்க்குத் திருவருள் செய்து தம் சிவ லோகத்தில் இருக்க அருளினுர் என்பது வரலாறு.

கண்ணப்பர்: இவர் பொத்தப்பி நாட்டு உடுப்பூர் என்ற ஊரில் வேடர்களுக்குத் தலைவனுன நாகன் என்பவனின் திருமகனுர்; திண்ணனுர் என்ற பெயர் பூண்டவர். இவர் விற்பயிற்சிக்குரிய பருவம் அடைந்தார்; முதன் முதலில் வேட்டை ஆடுதற்குக் காடு சென்ருர்; ஒரு பன்றியைக் கொன்ருர்; நாணன் காடன் என்ற தோழரோடு பொன் முகரியை அடைந்தார்; காளத்தி மலையை நோக்கி ஏறிச் சென்ருர்; இறைவரைக் கண்டார்; அவர்க்கு அமுது செய்விக்க நினைத்தார்; வாயிலே நீர்முகந்து கொண்டும், மலர்களைக் குடுமியில் செருகிக் கொண்டும், தசையைக் காய்ச்சிச் சுவைத்து நல்ல சுவையுள்ள தசைகளை எடுத்துக் கொண்டும் காளத்தியாரிடம் வந்தார்; படைத்தார். இவ் வாறு ஐந்து நாட்கள் முடிந்தன. சிவகோசரியார் என்னும் அர்ச்சகர் இந்த அனுசிதத்தைக் கண்டார்; யார் செய்தது என்று தெரியாது திகைத்தார்; இறைவன் ஏவலால் அங் கேயே மறைந்திருந்தார். ஆரும்நாள் திண்ணனுர் வந் தார்; இறைவனின் திருக்கண் ஒன்றில் குருதி வழிவதைக் கண்டார்; தனது ஒரு கண்ணை எடுத்து அப்பினுர். குருதி நின்றது. மற்ருெரு கண்ணில் குருதி வந்தது. தனது

மற்ளெரு கண்ணைத் தோண்ட அம்பை ஊன்றினர்; இறைவன், "நில்லு கண்ணப்ப" என்று அருள்புரிந்து தன் வலப் பக்கத்திலே இருக்குமாறு செய்தருளினர் என்பது வரலாறு.

அமருலகம் - இங்குச் சிவபதம். முத்தீ-காருகபத்யம். ஆகவனீயம், தட்சிணக்கினி என்ற மூன்று வைதிகாக்கினி. வேள்வி-இங்கு ஓமம். மூவாயிரவர்-தில்லையில் எழுந்தருளிய இறைவர்க்கு அணுக்கத் தொண்டுரிமை பூண்டு ஒழுகும் அந்தணர்கள் மூவாயிரவரான தீட்சிதர்கள்; இவர்களே தில்லை வாழந்தணர்கள் ஆவர். இம்மூவாயிரவரும் இறைவரை உள்ளிட்டு மூவாயிரவர் ஆவர்.

கடி: உரிச்சொல். முடியா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். ஆடினை: முன்னிலை வினைமுற்று. அமரருலகம் என்பது அமருலகம் என நின்றது; இடைக்குறை. மூன்று + ஆயிரவர் = மூவாயிரவர். 2

அல்லியம் பூம்பழனத்(து) ஆமூர்நா வுக்கரசைச்
செல்ல நெறிவகுத்த சேவகனே! தென்தில்லைக்
கொல்லை விடையேறி! கூத்தா(டு) அரங்காகச்
செல்வம் நிறைந்தசிற் றம்பலமே சேர்ந்தனையே.

பொழிப்புரை : அகவிதழ்களோடு கூடிய அழகிய பூக்கள் பொருந்திய வயல்களையுடைய திருவாமூரில் (அவதரித்த) திருநாவுக்கரசு சுவாமிகளை முத்தியை அடையும் பொருட்டு வழியினைக்காட்டிய வீரனே! அழகிய தில்லைப் பதியில் கொல்லையில் மேயும் தன்மையுடைய இடபத்தின் மீது எழுந்தருளியவனே! (சகல) செல்வ வளங்களும் நிரம்பின திருச்சிற்றம்பலம் என்னும் இடத்தையே (நீ) நடனமாடும் சபையாகக் கொண்டு அடைந்தாய் என்றவாறு.

விளக்கம்: அல்லி-அகவிதழ். அல்லி அம்பூ - ஆம்பலு மாம். பழனம்-வயல். ஆமுர்-திருவாமுர். இது தென்னார்க் காடு மாவட்டம் பண்ணுருட்டிக்கு மேற்கே சுமார் 5-மைலில் உள்ளது. திருநாவுக்கரசு: இவர் திருவாமுரில் வேளாண் மரபில் புகழனார்க்கும் மாதினியார்க்கும் புதல்வ ராக அவதரித்தார்; மருணிக்கியார் என்ற திருநாமம் பெற்றார். இவர் தமக்கையார் திலகவதியார். கலிப்பகையார் என்பவர் திலகவதியாரைத் திருமணம் புரிய இருந்தபோது போர் மேற் சென்று உயிர் நீத்தார். தம்பியார் பொருட்டுத் திலக வதியார் உயிர்வாழ்ந்தார். ஆனால் மருணீக்கியாரோ சமண் சமயம் புகுந்தார்; தருமசேனர் என்ற சிறப்பெய்தினார். திலக வதியார் திருவதிகை வீரட்டானத்து இறைவனை வேண்டத் தரும சேனருக்குச் சூலைநோய் வந்தது. சமணர்களின் மந்திர தந்திரங்களால் சூலையை நீக்க இயலவில்லை. தரும சேனர் பாடலிபுரத்தினின்று ஒருவரும் அறியாமால் திரு வதிகைக்கு வந்தார்; தம் தமக்கையாரைத் தொழுதார். திலகவதியார் திருநீற்றை அளித்தார். தம்பியாரும் விபூதியைத் தரித்துக்கொண்டு, "கூற்றாயினவாறு விலக்க கிலீர்" என்ற திருப்பதிகத்தைப் பாடினார். சூலை நீங்கியது. இறைவனும் திருநாவுக்கரசு என்ற திருப்பெயர் சூட்டினார்.

திருநாவுக்கரசர் சைவசமயஞ் சார்ந்தமை அறிந்த சமணர் பல்லவ அரசனிடம் (மகேந்திர பல்லவன் கி.பி.600-630) முறையிட்டனர். அந்த அரசனும் அவர்கள் சொற் கேட்டு நாவுக்கரசை நீற்றறையிலிட்டான்; நீற்றறை குளிர்ந்தது.நஞ்சுகலந்த பாற் சோறூட்டுவித்தான்;நஞ்சும் அமுதமாயிற்று. யானையை ஏவினான். யானை, ஏவிய பாகர்களையே கொன்று நாவரசை வணங்கி ஓடியது. பிறகு கல்லில் பிணித்துக் கடலில் இட்டான். கல் தெப்பமாகியது.

திருநாவுக்கரசரும் திருப்பாதிரிப்புலியூர் அண்மையில் கரையேறினர்; அதன்பின் திருப்பெண்ணகடத்தில் சூலமும் இடபமும் பொறிக்கப் பெற்றார்; திங்களூரில் அரவு தீண்டியிறந்த அப்பூதியடிகளாரின் மூத்த மகனை உயிர் பெறச் செய்தார்; திருவீழிமிழலையில் நித்தலும் காசு பெற்று அடியார்களை உண்பித்தார். திருமறைக் காட்டில் அடைபட்டிருந்த திருக்கோயில் கதவுகளைத் திறந்தருளினர். கயிலையில் ஒரு குளத்தில் மூழ்கித் திருவையாற்றில் வந்து எழுந்தார்; திருப்பூந்துருத்தியில் மடம் ஒன்று கட்டினர்; திருப்புகலூரில் சிவபெருமான் திருவடி நீழலை அடைந்தார் என்பது வரலாறு.

செல்ல-முத்தி அடைய. சேவகன் - வீரன். இறைவன் பிறப்பறுப்பதில் இணையற்ற வீரன் ஆதலால், அவனைச் 'சேவகனே' என்றார். தென் - அழகு. தென்னாட்டிலுள்ள எனினுமாம். கொல்லை - புன்செய் நிலம்; தோட்டம். கொல் ஐ விடை எனப் பிரித்துக் கொல்லும் தன்மையுடைய அழகிய இடபம் என்றும் பொருள் கொள்ளலுமாம்.

சேவகனே, ஏறி: விளிகள். சிற்றம்பலமே, ஏ:தேற்றம். சேர்ந்தனை : முன்னிலை ஒருமை வினைமுற்று. 3

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட்(டு) எமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையும்ஆட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானும் அணிதில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே.

பொழிப்புரை : (சிவபெருமான்) எம் உயிரைக் கட்டியிருக்கும் வலிய வினையாகிய நோயை அறவே ஒழித்திட்டு எம்மை ஆட்கொள்ளுகின்ற சீகாழித் தலைவரான திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகளையும் அடிமையாக ஆட்கொண்

டருளி, செலுத்தப்பட்ட அம்பு போன்ற (கூரிய) கண்களை யுடைய உமாதேவியாரும் தானுமாக அழகிய தில்லைப் பதியிலுள்ள செம்பொன்னுல் செய்யப் பெற்ற பொன்னம் பலமே எழுந்தருளி இருத்தற்கு இடமாயிற்று என்றவாறு.

விளக்கம்: பந்தம் - பிறவிக் கட்டு. வல்வினை - வலிய வினை; கொடிய வினை. காழி-சீகாழி. காழியர்கோன் சம்பந் தன் - இவர் சீகாழிப்பதியில் அந்தணர் மரபில் சிவபாத இருதயருக்கு மகனுராகத் திருவவதாரஞ் செய்தவர். இவர் பிரமதீர்த்தக் கரையில் உமாதேவியாரால் ஞானப் பால முதம் ஊட்டப் பெற்றுச் சிவ ஞானசம்பந்தர் ஆனுர்; திருக் கோலக்காவில் பொற்ருளம் பெற்ருர்; திருநெல்வாயில் அரத்துறையில் முத்துச்சிவிகை பெற்ருர். திருப்பாச்சிலாச் சிராமத்தில் கொல்லி மழவனது மகளுக்குற்ற முயலகன் என்னும் நோயைப் போக்கினுர்; திருப்பட்டீச்சரத்தில் முத்துப்பந்தர் பெற்ருர்; திருவாவடுதுறையில் தம்தந்தை யார் வேள்வி செய்தற் பொருட்டுப் பொற்கிழி பெற்ருர்; திருமருகலில் அரவு தீண்டி இறந்த வணிகனை உயிர்பெறச் செய்தார்; திருவீழிமிழலையில் நாடோறும் பொற்காசு பெற்று அடியார்களுக்கு அமுதூட்டினுர்; திருமறைக் காட் டில் மறைக்கதவினை மூடச்செய்தார்; பாண்டி நாட்டிற்குச் சென்று நெடுமாறனது வெப்புநோயைத் தீர்த்தருளினுர். 'போகமார்த்த' என்ற திருநள்ளாற்றுத் திருப்பதிகத்தை நெருப்பிலிட்டுப் பச்சைப் பதிகமாகக் காட்டினுர். 'வாழ்க அந்தணர்' என்ற திருப்பாசுரம் எழுதிய ஏட்டினை வைகையிலிட்டு எதிரேறிச் செல்லுமாறு செய்தார்; தாம் செய்த சூளுரையின்படி சமணர்கள் கழுவேறக் கண்டார்; திருக்கொள்ளம் பூதூரில் காவிரியில் ஓடம் விட்டுக் கரை யேறினுர்; திருத்தெளிச் சேரியில் இவர் மாமன் 'புத்தர்

சமண்கழுக்கையர்' என்ற பாசுரத்தைக் கூறிப் புத்த நந்தி என்பவனின் தலையில் இடிவிழச் செய்தார். ஞானசம் பந்தர் பிறகு, திருவோத்தூரில் ஆண் பனையைப் பெண் பனை ஆக்கிக் காய்க்கச் செய்தார்; மயிலாப்பூரில் எலும்பைப் பெண்ணுருவாக்கினர்; திருநல்லூர்ப் பெருமணத்தில் திரு மணச்சடங்குகள் முடிவுற்ற பொழுது அங்குத் தோன்றிய சிவசோதியில் பலருடன் கலந்தருளினர் என்பது வரலாறு.

உந்து - செலுத்தப்பட்ட. கண்ணுள் - இங்கு உமா தேவியார். செம்பொன் செய் அம்பலம் - பொன்னம்பலம்; பொற்சபை.

அம்பலமே இருக்கை ஆயிற்று என்க. எம் பந்தம்: ஆறும் வேற்றுமைத் தொகை. இருக்கை: தொழிற் பெயர்.

4

களையா உடலோடு சேரமான் ஆரூரன்
விளையா மதமாரு வெள்ளானை மேல்கொள்ள
முளையா மதிசூடி! மூவா யிரவரொடும்
அளையா விளையாடும் அம்பலம்நின் ஆடரங்கே.

பொழிப்புரை: நீங்காத உடலோடு சேரமான் பெருமாள் நாயனரும் ஆரூரராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளும் (முறையே குதிரையின் மேற்கொண்டும்) மதநீர் ஆறு போலப் பெருகி ஒடுகின்ற (அயிராவணம் என்ற) வெள்ளை யானையின் மேற்கொண்டும் கயிலையை அடைய, முளை போன்று வளைந்த பிறைச்சந்திரனை (ச் சடையில்) தரித்த வனே! (நீ) தில்லை மூவாயிரம் அந்தணர்களோடும் கலந்து நடனமாகிய விளையாட்டைச் செய்கின்ற திருச்சிற்றம்பலம் உனது நடன சபை ஆகும் என்றவாறு.

விளக்கம்: களையா உடல் - நீங்காத உடல்; மனித உடலை விட்டு நீங்காமல். விளையா-விளைந்து; பெருகி

(ஓடுகின்ற). மதம் ஆரு-மதநீர் ஆறுபோல. மதம்-கன்ன மதம், கபோல மதம், பீச மதம் என்பன. கபோல மதத்தை விடுத்துக் கைம்மதம் என்று கொள்வதும் உண்டு. வெள்ளானே-இது இந்திரலோகத்து நான்கு கொம்புகளேயுடைய ஐராவதம் என்ற வெள்ளேயானே அன்று; கயிலாயத்து இரண்டாயிரங் கொம்புகளேயுடைய அயிராவணம் என்ற வெள்ளேயானே என்பர்: "அயிரா வணம்ஏரு(து) ஆனே(று) ஏறி அமரர் நாடாளாதே ஆரூராண்ட" என்பது அப்பர் தேவாரம். முளே ஆம்மதி-முளேபோன்று வளேந்த பிறைச் சந்திரன். அளேயா-அளேந்து; கலந்து.

சேரமான் பெருமாள் நாயனுர்: இவர் சேரநாட்டில் கொடுங் கோளூரில் பெருமாக் கோதையார் என்ற பெயருடன் அரசராகத் திகழ்ந்து இருந்தார்; யாவும் யாரும் கழறினவும் அறியும் ஆற்றல் பெற்றமையால் கழறிற்றறிவார் எனப் பெற்ருர். இவர் தில்லேக்கூத்தப் பெருமானேப் பூசிப்பவர்; பூசை முடிவில் கூத்தப்பெருமானின் சிலம்பொலி கேட்பார்; ஒருநாள் சேரமானுக்குத் திருச்சிலம்பொலி கேட்கவில்லே. சேரமான் வருந்தினுர்; உயிர் துறக்கத் துணிந்தார். இறைவன், "வன்ருெண்டன் பாட்டில் யாம் ஈடுபட்டிருந்தமையால் நேரம் தாழ்த்தது" என்று அருளிச் சுந்தரரை நினேப்பித்தார். சேரமான் தாம் திருமுடி சூட்டப்பெற்ற நாளில் உலாவந்தபோது வண்ணுன் ஒருவன் உவர்மண் சுமந்து வர, அம்மண் மழையால் நனேந்து வழியப் பின் காய்ந்து வெண்ணிறமாகத் திகழக்கண்டு அவ்வண்ணுனே வணங்கினுர்; வண்ணுன், 'அடிவண்ணுன்' என, அரசரும், 'அடிச்சேரன்' என்று கூறி "வாரவேடம் நினேப்பித்தீர்; வருந்தாதேகும்" என்ருர். ஒரு சமயம் பாணபத்திரர் என்னும் யாழ்ப்பாணர் ஆலவாய்ச் சொக்கேசர் அருளிய திருமுகப்

பாசுரத்தைச் சேரமானிடம் கொணர்ந்து கொடுக்க, அதை அவர் ஏற்றுப் பாணபத்திரர்க்கு அளவில் செல்வம் அளித்துச் சிறப்பித்து அனுப்பினர். பின்பு சேரமான் தில்லை சென்று தரிசித்துத் திருவாரூர் அடைந்தார்; சுந்தரருடன் நட்புப் பூண்டார்; பல தலங்களைத் தரிசித்து அவரையும் தன்னுட்டிற்கு அழைத்துச் சென்றூர். சுந்தரரைத் தன் ஞட்டில் சிறப்பித்துப் பெரும்பொருள் அளித்தார். சுந்தரர் வெள்ளையானை மீதேறித் திருக்கயிலைக்குச் செல்ல, சேரமான் பெருமாளும் குதிரை மீது ஏறித் திருக்கயிலையினை அடைந்தார் என்பது வரலாறு.

சேரமான் பெருமாள் நாயனர் தில்லைக்குச் சென்ற போது 'பொன்வண்ணத் தந்தாதி'என்ற நூலையும், திருவாரூரில் "திருவாரூர் மும்மணிக் கோவை" என்ற நூலையும் பாடினர். திருக்கயிலையில் இறைவன் திருமுன்பு 'திருக் கயிலாய ஞானவுலா' என்ற நூலை அரங்கேற்றினர்.

சுந்தரமூர்த்தி நாயனர்: இவர் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் ஆதிசைவர் குலத்தில் சடையனருக்கும் இசை ஞானியாருக்கும் திருக்குமாரராக அவதரித்தவர். இவர் நம்பியாரூரர் என்ற பெயர் பெற்றூர்; நரசிங்க முனையரையரின் அபிமான புத்திரராக வளர்ந்தார்; சகல கலைகளையும் கற்றூர். அரசர் திருவும் வைதிகத்திருவும் பெற்றுத் திருமணச் சடங்குகள் நிறைவேறும் போது, சிவபெருமான் நம்பியாரூரரைத் தடுத்தாட் கொள்ள ஒரு கிழப்பிராமண வடிவுகொண்டு வந்து முறிச்சீட்டைக் காட்டி வழக்கிட்டு மணத்தைத் தவிர்த்துத் திருவெண்ணெய் நல்லூரில் வழக்கை முடிக்க அழைத்துச் சென்று அருட்டுறை ஆலயத்துள் மறைந்து இடபாருடராய்க் காட்சி அளித்து, "நீ முன்னமே நமக்குத் தொண்டன்; நீ என்பால் வன்சொல்

கூறினே; அதனல் 'வன்றெண்டன்' எனப்பெயர் பெறுவாய்; இன்று நம்மையே 'பித்தா' என்று பாடுக'' என்று அருள் செய்தார். அவ்வாறே பாடி வணங்கினர். பின்பு வன்றெண்டர் திருவதிகை அடைய அவர்க்குச் சிவபெருமான் திருவடி சூட்டியருளினர்; பலதலங்களைத் தரிசித்துக் கொண்டு திருவாரூரை அடைந்தார்; இறைவருடன் தோழமை பூண்டார். இறைவரின் துணைகொண்டு பரவையாரை மணந்தார். ஒருநாள் பரவையாருடன் தியாகேசரை வணங்கச் செல்லும்போது விறன்மிண்டரின் மெய்யன்பைக் கண்டு சிவனடியார்களைத் துதிக்கும் 'திருத்தொண்டத் தொகை' பாடியருளினர். பின்னர் சுந்தரர் குண்டையூரில் நெல்பெற்றார்; திருப்புகலூரில் செங்கல்லைப் பொன்னுகப்பெற்றார்: திருமுதுகுன்றத்தில் சிவபெருமான் கொடுத்தருளிய பொன்னை மணிமுத்தா நதியிலிட்டுத் திருவாரூர்க் கமலாலயத்தில் எடுத்து மகிழ்ந்தார். திருவொற்றியூரையடைந்து சங்கிலியாரை இறைவரின் துணையால் உறுதிமொழி கூறித் திருமணம் புரிந்து சில காலம் அங்கு வாழ்ந்தார்; தியாகேசரின் வசந்த விழாவைத் தரிசிக்கக் கருதித் திருவாரூர் நோக்கிப் புறப்பட்டார். இடைவழியில் கண்கள் இழந்தார்; பின்பு கோல் பெற்றார்; அதன்பின்பு ஒரு கண்ணும் மறு கண்ணும் பெற்றார். சுந்தரர் சங்கிலியாரை மணந்தமையை அறிந்து பரவையார் பிணக்குக் கொண்டார்; அதனைச் சுந்தரர் இறைவனல் தீர்த்துக்கொண்டார்; சேரமானுடன் நட்புப் பூண்டு பெருவிருந்து அளித்தார்; மலைநாட்டிற்குச் சென்றார்; சேரமானிடம் பெரும்பொருள் பெற்றுச் சோழநாடு திரும்பி வரும்போது கள்வரிடம் பொருளைப் பறிகொடுத்தார்; மீண்டும் அதனைப்பெற்றார்; திருவாரூர் அடைந்து சில காலம் சென்று மீண்டும் மலை நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றார். வழியில் முதலையுண்ட

பாலனை வருவித்தார்; பின்பு சேரமான் எதிர்கொண்டு அழைத்து உபசரிக்க இருந்தார். அப்போது சிவபெருமான் உத்தரவுப்படி வெள்ளையானை திருவஞ்சைக்களத்திற்கு வரச் சுந்தரர் அதில் ஏறித் திருக்கயிலையை அடைந்தார். அப்போது சேரமானும் குதிரை மீது எழுந்தருளிச் சுந்தரருடன் திருக்கயிலை அடைந்தார் என்பது வரலாறு.

களையா : ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். விளையா (விளைந்து, பெருகி), அளையா (அணைந்து,கலந்து): செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள். சூடி: வினையாலணையும் பெயர்; விளி. 5

அகலோக மெல்லாம் அடியவர்கள் தற்சூழப்
புகலோக முண்டென்று புகுமிட(ம்)நீ தேடாதே
புவலோக நெறிபடைத்த புண்ணியங்கள் நண்ணியசீர்ச்
சிவலோகம் ஆவதுவுந் தில்லைச்சிற் றம்பலமே.

பொழிப்புரை : (இறைவனே!) பூவுலகம் முழுதுமுள்ள அடியவர்கள் உன்னைச் சூழ்ந்துவர, அடையத் தக்க உலகம் வேறு உண்டு என்று கருதி நீ அவ்விடத்தைத் தேடிச்செல்லாமல், புவர்லோகம் முதலாய மேல் உலகங்களுக்குச்செல்லும் வழியை உண்டாக்கும் (சிவ) புண்ணியச் செயல்கள் பொருந்திய சிறப்பினையுடைய சிவலோகமாக விளங்குவதும் தில்லைத்தலத்திலுள்ள திருச்சிற்றம்பலமே ஆகும் என்றவாறு.

விளக்கம்: தில்லைச் சிற்றம்பலமே சிவலோகமாகத் திகழ்வது என்னும் பெருமையை இப்பாடல் கூறுவதாகும். அகலோகம் - பூலோகம். தன் - தன்னை; இங்கு உன்னை. புக-அடையத்தக்க. லோகம்-உலகம். தேடாதே-தேடாமல். புவலோகம்-புவர்லோகம் இது மேலுலகம் ஏழினுள் முதலாவது. ஆவதும்-விளங்குவதும்.

தன் + சூழ = தற்சூழ. படைத்த: பெயரெச்சம். உண்டு: குறிப்பு வினைமுற்று. 6

களகமணி மாடம் சூளிகைசூழ் மாளிகைமேல்
அளகமதி நுதலார் ஆயிழையார் போற்றிசைப்ப
ஒளிகொண்ட மாமணிகள் ஓங்கிருளை ஆங்ககற்றும்
தெளிகொண்ட தில்லைச்சிற் றம்பலமே சேர்ந்தனையே.

பொழிப்புரை: (சிவபெருமானே!) சுண்ணச்சாந்து (பூசிய) அழகிய மேல்மாடியும்நிலா முற்றமும் சூழ்ந்துள்ள மாளிகைகளின்மேல் கூந்தலினையும் பிறைச்சந்திரனை ஒத்த நெற்றியினையும் உடைய சிறந்த ஆபரணங்களை அணிந்த பெண்கள் (நின்னைத்) துதித்துப் பாடா நிற்க,(அப்பெண்கள் அணிந்துள்ள) ஒளியினைக்கொண்ட சிறந்த (ஆபரணத்தில் பதிக்கப்பெற்ற) இரத்தினமணிகள் மிகுந்த இருளை அங்கு நின்றும் நீக்குகின்றதனால் தெளிவுகொண்ட தில்லைப்பதியிலுள்ள சிற்றம்பலமே (நீ நடனமாடும் இடமாக) அடைந்தாய் (என்னே உனது அருள்!) என்றவாறு.

விளக்கம்: களகம்-சுண்ணச் சாந்து: "திண்களக மதிள் புடை சூழ்திருநறையூர்" என்பது பெரிய திருமொழி. அணி-அழகு. மாடம் - மேல்மாடி; உப்பரிகை. சூளிகை - நிலா முற்றம். அளகம்-கூந்தல். நுதல்-நெற்றி. ஆய்-ஆராய்ந்து எடுக்கப்பட்ட. இழை-ஆபரணம். ஆயிழையார்-பெண்கள்.

ஆயிழையார் : குறிப்பு வினையாலணையும் பெயர். சேர்ந்தனை: முன்னிலை வினைமுற்று. 7

பாடகமும் நூபுரமும் பல்சிலம்பும் பேர்ந்தொலிப்பச்
சூடகக்கை நல்லார் தொழுதேத்தத் தொல்லுலகில்
நாடகத்தின் கூத்தை நவிற்றுமவர் நாடோறும்
ஆடகத்தால் மேய்ந்தமைந்த அம்பலம்நின் ஆடரங்கே.

பொழிப்புரை: பழமையான உலகமாகிய நாடக மேடையில் (உயிர்களை யெல்லாம்) கூத்தாடச் செய்பவராகிய எம்பெருமானே! பாடகமும், பாத கிண்கிணியும், பலவகையான சிலம்பும் அசைந்து ஒலிக்கவும்,வளையலை அணிந்த கையினையுடைய பெண்கள் நாடோறும்(நின்னை) வணங்கித் துதிக்கவும், மாற்றுயர்ந்த பொன்னால் மூடப்பட்டுள்ள பொன்னம்பலமே உனது நடனமிடும் சபை ஆகும் என்றவாறு.

விளக்கம்: பாடகம்-காலணி வகையில் ஒன்று. நூபுரம்-பாதகிண்கிணி;இது கிண் கிண் என்று ஒலிக்கும் ஒரு வகைப் பாதச் சதங்கை. சூடகம்-கைவளையல். நல்லார்-பெண்கள். தொல்-பழைய. உலகில் - உலகமாகிய. நவிற்றுமவர்-செய்பவர். ஆடகம் - இது நால்வகைப் பொன்னுள் ஒன்று; சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் என்பன நால்வகைப் பொன். மேய்தல்-மூடுதல். இச் சிற்றம்பலத்திற்கு முதன் முதலில் சிம்மவர்மனாகிய இரணியவன்மனே பொன்வேய்ந்தவனாவன். அதன்பின்பு, முதல் ஆதித்த சோழன் (கி. பி. 871-907), முதற் பராந்தக சோழன் (கி. பி. 907–953) இவர்கள் தங்கள் தங்கள் ஆட்சியில் சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்து புதுப்பித்தவர்கள் ஆவார். ஒவ்வொரு பொன் ஓட்டிலும் ‘சிவாயநம’ என்ற சூக்கும பஞ்சாட்சரத்தை எழுதி வேய்ந்ததாகத் தில்லை உலா கூறுகிறது. ‘ஆடகத்தால் மேய்ந்தமைந்த அம்பலம்’: “எழில்பெறும் இமயத்தியல்புடை அம்பொன் பொலிதரு புலியூர்ப் பொது” என்பது திருவாசகம்.

நல்லார்: குறிப்புவினையாலணையும் பெயர். தொன்மை + உலகு = தொல்லுலகு. நவிற்றுமவர்: விளி. ஆடகம் + அத்து + ஆல் – ஆடகத்தால்; அத்து: சாரியை. ஆல்: மூன்றனுருபு. 8

———

உருவத்(து) எரியுருவாய் ஊழிதோ றெத்தனையும்
பரவிக் கிடந்தயனும் மாலும் பணிந்தேத்த
இரவிக்கு நேராகி ஏய்ந்திலங்கு மாளிகைசூழ்ந்(து)
அரவிக்கும் அம்பலமே ஆடரங்கம் ஆயிற்றே.

பொழிப்புரை: (எம்பெருமானே! நீ) அழகிய தீப்பிழம்பாகிய (தூண்) வடிவத்துடன் பல கற்ப காலம் அளவும் (எங்கும்) பரவி நின்றபோது பிரமனும் திருமாலும் (நின் அடிமுடிகாண இயலாது) வணங்கித் துதிக்கவும் சூரியனுக்குச் சமமாக ஒளி பொருந்தி விளங்குகின்ற மாளிகைகள் சூழ்ந்துள்ள (அர கர என்று) ஆரவாரித்தற்கு இடமாகிய சிற்றம்பலமே (உனக்கு) நடனமிடும் சபையாக ஆயிற்று என்றவாறு.

விளக்கம்: உரு - அழகு. எரி உரு - தீப்பிழம்பு. ஊழி - உலகமுடிவுக்காலம். பரவி-பரந்துநின்று. "உருத்து எரியுருவாய்........மாலும் பணிந்தேத்த": "செங்கண்மால் திகழ்தரு மலருறை திசைமுகன், தங்கையால் தொழுதெழத் தழலுருவாயினன்" என்பது சம்பந்தர் தேவாரம். இரவி-சூரியன். அரவிக்கும் - ஆரவாரித்தற்கு இடமான.

அயனும் மாலும் : எண்ணும்மை. அரவிக்கும் : பெயரெச்சம். ஆயிற்று : ஒன்றன்பால் வினை முற்று. 9

சேடர் உறைதில்லைச் சிற்றம் பலத்தான்தன்
ஆடல் அதிசயத்தை ஆங்கறிந்து பூந்துருத்திக்
காடன் தமிழ்மாலை பத்தும் கருத்தறிந்து
பாடும் இவைவல்லார் பற்றுநிலை பற்றுவரே.

பொழிப்புரை : சிவனடியார்கள் வசிக்கின்ற தில்லைப் பதியிலுள்ள திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளிய கூத்தப் பெருமானது ஆனந்த தாண்டவத்தின் அதிசயத் தன்

மையை அங்குக் கண்டறிந்த வண்ணம் திருப்பூந்துருத்தி நம்பி காடநம்பி செய்தருளிய தமிழ் மாலையாகிய (இப்) பத்துப்பாடல்களையும் (அவற்றின்) கருத்தையுணர்ந்து பாடும்படியான இத்தொழிலில் வல்லவர்கள் சிவபெருமானை அடைந்து நிற்கும் மோட்ச நிலையைப் பெற்று விளங்கு வார்கள் என்றவாறு.

விளக்கம் : சேடர் - அடியார்கள்; இவர்கள் எண்வகைப் பத்திகளையுடைய மெய்யன்பர்கள். எண்வகைப் பத்திகள் - சிவனடியாரை வணங்குதல், சிவதரிசனம் செய்தல், சிவ பூசை புரிதல், சிவத்தொண்டுகளைச் சிவார்ப்பணஞ் செய் தல், சிவசரிதங்களைக் கேட்டு மகிழ்ச்சியடைதல், மயிர்க் கூச்செறிதல், தியானித்தல், சிவகைங்கரியப் பொருளைக் கொண்டு சீவியாதிருத்தல் ஆகிய இவையாம். ஆடல் - ஆனந்த தாண்டவம். அதிசயம்-புதுமை. பற்றும் நிலை - இறைவனை பற்றி நிற்கும் நிலைமை: ''பற்றுக பற்றற்றான் பற்றினை''என்பது திருக்குறள். பாடும் இவை-பாடும் செயலில்.

ஆடல் : தொழிற் பெயர். சிற்றம்பலத்தான் : வினையா லணையும் பெயர். பத்தும், உம் : முற்றும்மை. பற்றுவர் : வினைமுற்று. 10

திருச்சிற்றம்பலம்

பூந்துருத்திநம்பி காடநம்பி அருளிய திருவிசைப்பா தெளிவுரை

முற்றிற்று

உ

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை

5. கண்டராதித்தர்

அருளிய

திருவிசைப்பா

[தெளிவுரை]

கோயில் – மின்னுருருவம்

பண் – பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

மின்னுருருவம் மேல்விளங்க
வெண்கொடிமா ளிகைசூழப்
பொன்னுர்குன்றம் ஒன்றுவந்து
நின்றது போலுமென்னுத்
தென்னுவென்று வண்டுபாடும்
தென்தில்லை யம்பலத்துள்
என்னுரமுதை எங்கள்கோவை
என்றுகொல் எய்துவதே?

பொழிப்புரை: மின்னலைப் போன்ற பெண்களினது உருவம் மேல்நிலைகளில் விளங்க வெண்மையான கொடிகளைக் கொண்ட மாளிகைகள் சூழ்ந்து இருக்கப் பொன்னுலாகிய மலை ஒன்று வந்து நின்றது போலும் என்று சொல்லும்படி, தென்னு என்று (இசையொலியை எழுப்பி) வண்டுகள் பாடுகின்ற அழகிய தில்லைப்பதியிலுள்ள பொன்னம்பலத்தில்

எழுந்தருளிய எனது அரிய அமிர்தத்தை எங்கள் இறைவனை அடைந்து தரிசிப்பது எந்நாளோ? என்றவாறு.

விளக்கம்: பல மாளிகைகளுக்கு நடுவில் பொற்குன்று போல் திகழ்வது தில்லைச் சிற்றம்பலம் என்க. மின்னார்- பெண்கள். மின்ஆர் உருவம் - மின்னலினது அரிய வடிவாகிய ஒளி என்றலுமாம். பொன்னார் குன்றம் - பொன் மலை. தில்லையில் உள்ள சிற்றம்பலத்திற்குப்பொன்மயமான மலை உவமையாக நின்றது. தென்னா-ஒலிக்குறிப்பு; அழகனே எனினுமாம்; தென் - அழகு. கோவை - இறைவனை; தலைவனை. 'தில்லை தரிசிக்க முத்தி' என்பது ஆன்றோர் வாக்கு.

போலும்: உவமவுருபு. என்றுகொல்: வினாப்பொருள். என்னா: வினையெச்சம். இச்செய்யுள் தற்குறிப்பேற்றவுவமையணி ஆகும். 1

ஓவாமுத்தீ அஞ்சுவேள்வி
ஆறங்க நான்மறையோர்
ஆவேபடுப்பார் அந்தணாளர்
ஆகுதி வேட்டுயர்வார்
மூவாயிரவர் தங்களோடு
முன்அரங்(கு) ஏறிநின்ற
கோவே!உன்றன் கூத்துக்காணக்
கூடுவ தென்றுகொலோ?

பொழிப்புரை: (என்றும்) அணையாத மூன்று வைதீகாக்கினிகளை (வளர்ப்பவரும்), ஐந்து வகையான யாகங்களை(ச் செய்பவரும்), வேதாங்கங்கள் ஆறினையும் (கற்றவரும்), நான்கு வேதங்களை ஓதுபவரும், கோமேதயாகம் செய்பவரும், அந்தணர்களும், நெய்விட்டுச் சிவாக்கினியை வளர்த்து மேம்பாடு அடைபவர்களும் ஆகிய (தில்லை) மூவாயிரம் தீட்சிதர்கள் ஆகிய இவர்களுடனே, முன்னர்

(பதஞ்சலி முனிவர் உனது ஆனந்த தாண்டவத்தைத் தரிசிக்க ஆவலுடன் நின்றபோது) நடனசாலையாகிய திருச் சிற்றம்பலத்தில் நடனமிட எழுந்தருளி நின்ற என் அரசே! உனது திருநடன தரிசனம் கிடைப்பது எந்நாளோ? என்றவாறு.

விளக்கம் : கூத்தப் பெருமானே! உனது திருநடனத்தைத் தரிசிக்கப் பெறுவது எந்நாளோ என்பதாம். முத்தீ - இது ஆகவனீயம், தக்கிணாக்கினி, காருகபத்தியம் என மூன்று : இவ்வ முறையே நாற்சதுரம், முச்சதுரம், வில் என்னும் வடிவாக அமைக்கப் பெற்றவை. ஆசாரியன் ஆகவனீயமாகவும், தாய் தக்கிணாக்கினியாகவும், தந்தை காருகபத்தியமாகவும் கருதப்படுவதாகும். அஞ்சு-ஐந்து. அஞ்சு வேள்வி - இது, பிரமயாகம், தேவயாகம், மானுட யாகம், பிதுர்யாகம், பூதயாகம் என ஐந்து; வேதம் ஓதுதல் பிரம யாகம் என்றும், நித்தியாக்கினி வளர்த்தல் தேவ யாகம் என்றும், விருந்தோம்புதல், மானுடயாகம் என்றும், நீர்க்கடனாற்றல் பிதுர் யாகம் என்றும், பலியிடல் பூத யாகம் என்றும் கூறப்படும். ஆறங்கம் - சிட்சை, வியாகரணம், சந்தசு, நிருத்தம், சோதிடம், கல்பம் என ஆறு. இவை வேதத்தின் அங்கங்கள். நான்மறை-இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்கு வேதம். ஆ-பசு, ஆன்மா. ஆவே படுப்பார்-பசுவின் (ஆன்மாவின்) தன்மையை (மும்மலங்களால் கட்டப்பட்டிருக்கும் தன்மையை) ஒழிப்பவர் என்றலுமாம். ஆகுதி வேட்டு-சிவாக்கினியை வளர்த்து. கோவே-அரசே. கூடுவது-கிடைப்பது.

அஞ்சு : ஐந்து என்பதன் போலி. கோவே : விளி. நின்ற : பெயரெச்சம். 2

—

முத்தீயாளர் நான்மறையர்
மூவாயிர வர்நின்றோே(டு)
ஒத்தேவாழும் தன்மையாளர்
ஓதிய நான்மறையைத்
தெத்தேயென்று வண்டுபாடும்
தென்தில்லை அம்பலத்துள்
அத்தா!உன்றன் ஆடல்காண
அணைவதும் என்றுகொலோ?

பொழிப்புரை: முத்தீயை (நாடோறும்) வளர்ப்பவர்களும் நான்கு வேதத்தை ஓதும் உரிமையுடையவர்களும் உன் திருவருள் வழி நின்று கூடிவாழும் வாழ்க்கையை மேற் கொள்பவர்களுமான (தில்லை) மூவாயிரம் அந்தணர்கள் (இடைவிடாமல்) ஓதிய நான்கு வேதங்களையும் தெத்தே என்று வண்டுகள் ரீங்காரம் செய்து கொண்டிருக்கும் அழகிய தில்லைப்பதியிலுள்ள பொன்னம்பலத்துள் எழுந் தருளிய அப்பனே! உனது திருநடனத்தைத் தரிசிக்க (அடியவன்) வந்து சேருவதும் எந்நாளோ? என்றவாறு.

விளக்கம்: தில்லை மூவாயிரவராகிய அந்தணர்கள் ஓதிய நான்மறையை அங்குலாவும் வண்டுகள் தெத்தே என்று பாடிக்கொண்டிருக்கும் என்று தில்லைப்பதியைச் சிறப்பித் துள்ளார். தெத்தே - ஒலிக்குறிப்பு. ஆடல் - திருநடனம்; அஃது ஐந்தொழில் நடத்தும் குறிப்புடையது: "தோற்றம் துடியதனில் தோன்றும் திதியமைப்பில், சாற்றியிடும் அங்கியினிலே சங்காரம்–ஊற்றமாய், ஊன்று மலர்ப்ப தத்தே உற்ற திரோதமுத்தி, நாற்ற மலர்ப்பதத்தே நாடு" என்பது உண்மை விளக்கம். அத்தன்-அப்பன்; தந்தை.

நின்றோடு, ஓடு: மூன்றனுருபு. அத்தா: விளி. ஆடல்: தொழிற் பெயர். காண: வினையெச்சம். 3

மானைப்புரையும் மடமென்நோக்கி
மாமலை யாளோடும்,
ஆனஞ்சாடும் சென்னிமேலோர்
அம்புலி சூடுமரன்
தேனைப்பாலைத் தில்லைமல்கு
செம்பொனின் அம்பலத்துக்
கோனைஞானக் கொழுந்துதன்னைக்
கூடுவது என்றுகொலோ?

பொழிப்புரை: மானையொத்த இளமையும் மென்மையு முள்ள பார்வையுடையவளான பெருமை பொருந்திய உமா தேவியாரோடுவீற்றிருக்கும், பசுவின் பால் முதலிய பஞ்ச கவ்வியம் அபிடேகம் செய்து கொள்ளும் திருமுடிமீது ஒப் பற்ற பிறைச்சந்திரனை அணிந்துள்ள சிவபெருமானை, தேன் போலும் இனியவனை, பால்போலும் சுவையுள்ளவனை, தில்லைப் பதியில் செழிப்பான செம்பொன்னுலாகிய சிற்றம் பலத்துள் எழுந்தருளிய இறைவனை, ஞானக்கொழுந்தினை (அடியவன்) வந்து தரிசிப்பது எந்நாளோ? என்றவாறு.

விளக்கம்: மடம்-இளமை. நோக்கி-பார்வையுடையவள். மா-பெருமை. மலைமகள்-மலையரசன் மகள்; உமாதேவியார். ஆன் - பசு. ஆன் அஞ்சு - பால், தயிர், நெய், பசுவின் நீர், பசுவின் சாணம் என்ற ஐந்து பொருளையும் விதிப்படி கூட்டிய கவ்வியம். ஆடுதல்-அபிடேகித்தல். "ஆன் ஐஞ்சு ஆடும் சென்னி": "தேன் நெய் பால் தயிர் தெங்கிள நீர் கரும் பின்தெளி, ஆன் அஞ்சாடு முடியான்" என்பது சம்பந்தர் தேவாரம். அம்புலி-(அழகுபுல்கி இருத்தல்) சந்திரன். அரன்-பாவங்களை அழிப்பவன்; சிவன். மல்குதல் - செழித்தல். செம்பொன்-மாற்றுயர்ந்த பொன். கொழுந்து-தளிர்.

ஐஞ்சு: ஐந்து என்பதன் போலி. தேன், பால்: உவமை யாகு பெயர்.

4

களிவானுலகிற் கங்கைநங்கை
காதலனே! அருளென்(று)
ஒளிமால்முன்னே வரங்கிடக்க
உன்னடியார்க் கருளும்
தெளிவாரமுதே! தில்லைமல்கு
செம்பொனின் அம்பலத்துள்
ஒளிவான்சுடரே! உன்னைநாயேன்
உறுவதும் என்றுகொலோ?

பொழிப்புரை : மகிழ்ச்சியுடன் இன்பம் அனுபவித்தற்குரிய தேவலோகத்தில் தோன்றிய கங்கையாகிய பெண்ணிடத்து அன்பு கொண்டவனே! '(எனக்கு) அருளினைச் செய்வாயாக' என்று ஒளி பொருந்திய மேனியினையுடைய திருமால் (தில்லையம்பலத்துத் திருவாயிலின்)முன்னே வரம் (பெறவிரும்பித் தவம்) கிடக்க,(அவர்க்கு அருள்புரியாமல்) உனது மெய்யடியார்களுக்கு அருள்புரியும் தெளிந்த அரிய அமிர்தம் போன்றவனே! தில்லைப்பதியில் செழுமையான பொன்னால் செய்யப்பெற்ற பொன்னம்பலத்திலுள்ள ஒளி பொருந்திய மேலான சோதி வடிவமுடையவனே! உன்னை நாய்போன்ற இழிந்த அடியேன் அடைந்து தரிசித்து நிற்பதும் எந்நாளோ? என்றவாறு.

விளக்கம் : களி-மகிழ்ச்சி. வானுலகின் கங்கை-தேவ கங்கை. காதலன்-அன்பன்; கணவன். "மால் முன்னே வரங்கிடத்தல்"-இது தில்லைச் சிற்றம்பலத்துத் திருவாயில் முன்றிலில்கோவிந்தராசப் பெருமாள் எழுந்தருளியிருப்பதை நினைவூட்டியது; அல்லாமலும், வியாக்ரபாத முனிவரின் புதல்வரான உபமன்யு முனிவர் பசியினால் பாலுக்கு அழுத போது, சிவபெருமான் திருப்பாற்கடலை அழைத்து அருந்தும்படி கொடுக்க, அதில் பள்ளிகொண்ட திருமால் அத்

திருப்பாற்கடலைப் பெறுதற்குப் பொன்னம்பலத்தின் முன்றிலில் வரங்கிடக்கின்ருர் என்பதாம்: "செங்கேழ்நறுநுதல் திருமகளொடும், அங்கவன் உறைதரும் ஆழிச் சேக்கையைப், புலிக்கால் முனிவரன் புதல்வனுக்கு, நலத்தகு கருணையின் நயந்த ளித்தனை, அவன் அதனுல், பாயலும் அமளியும் இன்றி மன்றநின், வாயிலின் நெடுநாள் வைகினன் ...."என்பது சிதம்பரச் செய்யுட்கோவை. நடராசப் பெருமான் தனது தூக்கிய திருவடியைக் காட்டத் திருமால் அதனைத் தரிசித்து 'மற்றைய திருவடியையும் அடியவன் தரிசிக்க அருள்புரிக' என்று தில்லையம்பலத்து முன்றிலில் வரம் கிடந்தார் என்றலுமாம்: "மற் ருங்கதும் காட்டிடென்று, வரங்கிடந் தான் தில்லை யம்பல முன்றிலம் மாயவனே"என்பது திருக்கோவையார் எண் 86. ஆர்-அரிய. வான் சுடர்-பெருஞ்சோதியுமாம்.

காதலனே,அமுதே,சுடரே: விளிகள். கங்கை நங்கை: (கங்கையாகிய நங்கை) இருபெயரொட்டு. 5

பாரோர்முழுதும் வந்திறைஞ்சப்
பதஞ்சலிக்(கு) ஆட்டுகந்தான்
வாரார்முலையாள் மங்கைபங்கன்
மாமறையோர் வணங்கச்
சீரான்மல்கு தில்லைச்செம்பொன்
அம்பலத் தாடுகின்ற
காரார்மிடற்(று)எங் கண்டனுரைக்
காண்பதும் என்றுகொலோ?

பொழிப்புரை: உலகத்தவர் எல்லாரும் வந்து வணங்கும் படி, பதஞ்சலி முனிவருக்கு முன்னே மகிழ்ந்து நடனம் புரிந்தவரும், கச்சணிந்த முலையினையுடையவளாகிய உமா

தேவியாரை இடப்பாகத்திலே பெற்றவரும் பெருமை வாய்ந்த தில்லைவாழந்தணர்கள் வணங்கச் சிறப்புடனே திகழ்கின்ற தில்லைப்பதியில் செம்பொன்னாலாகிய சிற்றம் பலத்தே நடமிடுகின்ற கருநிறம் பொருந்திய கண்டத் தையுடையவருமான எமது கற்கண்டு போன்ற இனிய வரைக் கண்டு தரிசிப்பதும் எந்நாளோ? என்றவாறு.

விளக்கம்: பார் - உலகம். பாரோர் - உலகத்தவர். பதஞ் சலி - பதஞ்சலி முனிவர்; இவர் பாம்புக்காலையுடையவர்; ஆதிசேடனின் அவதாரம்; தில்லையில் வியாக்ரபாத முனிவ ருடன் இருந்து இறைவனின் ஆனந்த தாண்டவ தரிசனத் தைக் கண்டு களித்து வந்தவர். வார்-கச்சு. மங்கை-உமை யம்மை. மாமறையோர் - தில்லைவாழ் அந்தணர்கள். கார்- கருமை; இங்கு விடம். மிடறு - கழுத்து. கண்டு அ(ன்)னார் கற்கண்டு போன்ற இனியவர். எம்கண்டனாரை - எமது ஞானவீரரை என்றலுமாம். (கண்டன்-வீரன்)

உகந்தான்: வினையாலணையும் பெயர். மா: உரிச் சொல். முழுதும், உம்: முற்றும்மை. 6

இலையார்கதிர்வேல் இலங்கைவேந்தன்
இருபது தோளும்இற
மலைதானெடுத்த மற்றவற்கு
வாளொடு நாள்கொடுத்தான்
சிலையால்புரமுன்(று) எய்தவில்லி
செம்பொனின் அம்பலத்துக்
கலையார்மறிபொற் கையினானைக்
காண்பதும் என்றுகொலோ?

பொழிப்புரை: இலைவடிவு அமைந்த ஒளியினைபுடைய வேற்படையை (த்தாங்கிய) இலங்கைக்கு அரசனாகிய இராவணனது இருபது தோள்களும் நெரியக் கயிலைமலை

யைத் தூக்கி எடுத்த அந்த இராவணனுக்கு வாட்படையும் (நீண்ட) ஆயுளும் கொடுத்தருளியவரும், மேருமலையாகிய வில்லால் முப்புரங்களை அழித்தற்கு அம்பைச் செலுத்த அவ் வில்லை ஏந்தியவரும் செம்பொன்னினால் அமைந்த சிற்றம் பலத்துள் எழுந்தருளிய கலைமான் கன்றை (ஏந்திய)அழகிய திருக்கரத்தையுடையவரும் ஆன பெருமானை (அடியவன்) தரிசிப்பதும் எந்நாளோ? என்றவாறு.

விளக்கம்: கதிர் - ஒளி. இற - நெரிய. அவற்கு-அந்த இராவணனுக்கு. வாள் - வாட்படை. நாள் - வாழ்நாள்; ஆயுள். இராவணன் கயிலை எடுத்து வாள், நாள் பெற்ற வரலாறு: இலங்கை மன்னனான இராவணன் திக்கு விசயம் செய்து கொண்டு குபேரனது புட்பக விமானமாகிய தேரின்மீது ஏறி ஆகாய வீதி வழியே சென்று கொண்டிருக்கும்போது கயிலை மலைக்குமேல் நேராக வரத் தேர் அசையாமல் நின்று விட்டது. உடனே இராவணன் தேரினின்றும் கீழே இறங்கித் தேர் தடைபட்டதை அறிந்தான். உடனே, இம் மலையை இடத்தை விட்டு எடுத்தெறியவேண்டும் என்று எண்ணிக் கயிலைமலையைப் பெயர்த்துத் தன் இருபது தோள் களாலும் தூக்கி எறிய முயன்றான். அப்போது கயிலைப் பெருமானாகிய சிவபெருமான் இதனை அறிந்து ஒரு காற் பெருவிரலால் ஊன்றினார். அதனால் இராவணன் மலையின் கீழ் அகப்பட்டுத் தோள்கள் நசுங்கிக் கதறினான்; பின்பு இறைவனை நோக்கிச் சாமவேதம் பாடினான். சிவபெருமான் அவனுக்கு இரங்கிக் காட்சி யளித்து இராவணன் (கதறி யவன்)என்ற பேரும், வாட்படையும், வாழ்நாளும் அளித்து அருளினார் என்பதாம். சிலை-வில். இது மேருமலையாகியவில்; வில்லி-வில்லையுடையவன். கலை ஆர்மறி-கலைமான் கன்று. (மறி-மான்) பொற்கை - அழகிய கை.

தான், மற்று : அசைகள். இற : வினையெச்சம். வில்லி: குறிப்பு வினையாலணையும் பெயர். 7

வெங்கோல்வேந்தன் தென்னன்நாடும்
ஈழமுங் கொண்டதிறல்
செங்கோற்சோழன் கோழிவேந்தன்
செம்பியன் பொன்னணிந்த
அங்கோல்வளையார் பாடியாடும்
அணிதில்லை அம்பலத்துள்
எங்கோன்ஈசன் எம்மிறையை
என்றுகொல் எய்துவதே?

பொழிப்புரை : கொடுங்கோல் வேந்தனாகிய பாண்டியனது நாட்டையும், ஈழ நாட்டையும் வென்று தனதாக்கிக் கொண்ட திறமையினையுடைய செங்கோலை மேற்கொண்ட சோழனும், உறையூர்க்கு அரசனும் ஆகிய (முதற் பராந்தகன் என்னும்)சோழன் பொன் வேய்ந்ததும், மிக அழகான வளையல்களை அணிந்த மாதர்கள் பாடி ஆடுகின்றதுமான அழகிய தில்லைப்பதியிலுள்ள சிற்றம்பலத்தில் எழுந்தருளிய எமது தலைவரும் எங்கும் நிறைந்தவருமான எமது சிவபெருமானை அடைந்து தரிசிப்பதும் எந்நாளோ? என்றவாறு.

விளக்கம் : வெங்கோல் வேந்தன் தென்னன்-மூன்றும் இராசசிம்மபாண்டியன். ஈழம் - ஈழநாடு ; இலங்கை. ஈழம் வெற்றி கொண்டபோது ஆண்ட அரசன் நான்காம் உதயன் (கி.பி.945–953).கோழி வேந்தனும் செங்கோற் சோழனும் ஆன (தில்லையில்) பொன் அணிந்த செம்பியன் என்பவன் முதற் பராந்தக சோழன் (கி. பி.907–953). அம்கோல் வளை-மிக அழகிய வளையல், ஈசன்-எங்கும் நிறைந்தவன்;

சிவன். கோழி - உறையூர். ஒரு கோழி கரிகாற் சோழன் ஏறி வந்த யானையைக் கொத்திக் கீழே தள்ளியதால் உறையூர்க்குக் கோழியூர் எனப் பெயர் வழங்கியது.

கோழி(யூர்): காரணப் பெயர். அம்கோல்: ஒருபொருட் பன்மொழி. கோல் : கோலம் என்பதன் கடைக்குறை. 8

நெடியானோடு நான்முகனும்
வானவரும் நெருங்கி
முடியான்முடிகள் மோதிஉக்க
முழுமணி யின்திரளை
அடியார்அலகி னால்திரட்டும்
அணிதில்லை அம்பலத்துக்
கடியார்கொன்றை மாலையானைக்
காண்பதும் என்றுகொலோ?

பொழிப்புரை : நீண்ட திருவிக்கிரம வடிவு கொண்ட திருமாலும், நான்முகனும் தேவர்களும் நெருக்கமாக நின்று கிரீடங்களோடு கிரீடங்கள் தாக்கி (அதனால்) சிந்திய முழு மணிகளின் தொகுதியைச் சிவத்தொண்டர்கள் திருவலகைக் கொண்டு திரட்டி (அப்புறப்படுத்தும்) அழகிய தில்லைப்பதியிலுள்ள சிற்றம்பலத்து எழுந்தருளியவரும், வாசனை நிறைந்த கொன்றை மாலையை அணிந்தவருமான சிவபெருமானைத் தரிசித்து வணங்குவதும் எந்நாளோ? என்றவாறு.

விளக்கம்: நெடியான்-திருமால். உக்க-சிந்தின. அடியார்-சிவத்தொண்டர்கள். அலகு-துடைப்பம். கடி-வாசனை. கொன்றை மாலையான்-சிவபெருமான்: "கண்ணி கார்நறுங் கொன்றை; காமர் வண்ணமார்பில் தாரும் கொன்றை" என்பது புறநானூறு.

உக்க: பெயரெச்சம், கடி: உரிச்சொல். 9

சீரான்மல்கு தில்லைச்செம்பொன்
அம்பலத் தாடிதன்னைக்
காரார்சோலைக் கோழிவேந்தன்
தஞ்சையர் கோன்கலந்த
ஆராஇன்சொற் கண்டராதித்தன்
அருந்தமிழ் மாலைவல்லார்
பேராவுலகிற் பெருமையோடும்
பேரின்பம் எய்துவரே.

பொழிப்புரை:மிகச்சிறப்பு நிறைந்த தில்லைப்பதியில் திகழும் பொன்னம்பலத்தில் எழுந்தருளி நடனமாடும் சிவபெருமானை,மேகங்கள் தவழ்கின்ற உயர்ந்த சோலைகளையுடைய உறையூர்க்கு அரசனும், தஞ்சை மாநகர்க்குத் தலைவனுமான கண்டராதித்தன்(திருவருளோடு)கலந்து பாடின தெவிட்டாத இனிய சொற்களுடன் கூடிய அரிய தமிழ் மாலையைக் கற்றுப் பாட வல்லவர்கள், திரும்பி வாராத முத்தியுலகில் பெருமையுடனே பேரின்பத்தையும் அடைந்து வாழ்வார்கள் என்றவாறு.

விளக்கம்: காரார் சோலை-(மர நெருக்கத்தால்) இருள் நிறைந்த சோலை என்றலுமாம். ஆரா-தெவிட்டாத. கண்டராதித்தன் - இவன் இப்பதிகம் 8ஆம் பாடலில் கண்ட முதற்பராந்தக சோழனின் இரண்டாவது மகன் ஆவன். பேராஉலகு - மோட்ச வுலகு. பேரின்பம் - இறைவனோடு, ஆன்மா இரண்டறக் கலத்தலால் அடையும் இன்பம்.

ஆரா, பேரா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள். அருந்தமிழ்: பண்புத்தொகை. 10

திருச்சிற்றம்பலம்

கண்டராதித்தர் அருளிய திருவிசைப்பா தெளிவுரை முற்றிற்று.

உ

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை

6. வேணாட்டடிகள்

அருளிய

திருவிசைப்பா

[தெளிவுரை]

கோயில் – துச்சான

பண் - புறநீர்மை

திருச்சிற்றம்பலம்

துச்சான செய்திடினும்
பொறுப்பரன்றே ஆளுகப்பார்;
கைச்சாலுஞ் சிறுகதலி
இலைவேம்புங் கறிகொள்வார்;
எச்சார்வும் இல்லாமை
நீயறிந்தும் எனதுபணி
நச்சாய்காண்; திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே!

பொழிப்புரை : அழகிய தில்லைப்பதியில் ஆனந்த தாண்டவம் செய்கின்ற நம்பெருமானே! கசந்தாலும் இளம் வாழைக்காய் (இளம்) வேப்பிலை (இவற்றை விரும்புபவர்கள்) கறி செய்தற்கு உபயோகிப்பார்கள்; (அதுபோல), அடிமையை விரும்புபவர்கள் (அவ்வடிமை) இழிவான செயல்களைச் செய்தாலும் பொறுத்துக்கொள்வார்கள்; ஆதலால், எவ்வித ஆதரவும் (அடியவன்) இல்லாதிருத்தலை நீ தெரிந்திருந்தும் எனது தொண்டை விரும்பாதிருக்கின்றாயே! என்றவாறு.

விளக்கம்: துச்சு-இழிவு. ஆள்-அடிமை. கைச்சாலும்-கைத்தாலும்; கசந்தாலும். சிறு கதலி-இளம் வாழைக்காய். இலை வேம்பு-(இளம்) வேப்பிலை அதாவது வேப்பங் கொழுந்து. இன்னும் வேப்பம் பூவும் கறிசெய்வர். கறி-கறிசெய்தற்கு. எச்சார்வும் - எவ்வித ஆதரவும். பணி-தொண்டு. நச்சாய்-விரும்பாதிருக்கின்ருய். நம்பானே-நம் பெருமானே; கடவுளே: "நம்பான் மேய நன்னகர் போலும் நமரங்காள்" என்பது சம்பந்தர் தேவாரம்.

கைச்சு: கைத்து என்பதன் போலி. நம்பன்: நம்பான் என நீண்டது. நம்பானே: விளி. அன்றே, காண்: அசைகள். முதலிரண்டடிகள் எடுத்துக்காட்டுவமையணி. 1

'தம்பானை சாய்ப்பற்ருர்'
என்னும் முதுசொல்லும்
எம்போல்வார்க்(கு) இல்லாமை
என்னளவே அறிந்தொழிந்தேன்;
வம்பானுர் பணிஉகத்தி;
வழியடியேன் தொழிலிறையும்
நம்பாய்காண்; திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே!

பொழிப்புரை: அழகிய தில்லைப்பதியில் ஆனந்த தாண்டவம் செய்கின்ற நம்பெருமானே! '(எவரும்) தம்முடைய பானையைச் சாய்த்து (நீரைப்) பிடிக்க மாட்டார்கள்' என்கின்ற பழமொழியும் எம்மைப் போன்றவர்க்குப் பொருந்தாமை என்னிடத்தே கண்டு கொண்டேன்; புதியராய் வந்தவரின் தொண்டினைப் பெரிதும் விரும்புகிருய்; வழிவழி வந்த அடியவனின் தொண்டினைச் சிறிதும் விரும்புகின்ருய் இல்லை என்றவாறு.

விளக்கம் : எவரும் தமது பானையைச் சாய்க்காமல் பிடித்து நீரை நிரப்பிக் கொள்வதுபோல, உனது அடியவனான எனது தொண்டினை ஏற்று என்னை உனது கருணையினால் நிரப்ப வேண்டும் என்பதாம். முதுசொல்-பழமொழி. வம்பு-புதுமை. பணி-தொண்டு. வழி-வழிவழி வந்த. இறை-மிகக் குறைந்த அளவு; துளி. நம்பு - விரும்பு. "தம் பானை சாய்ப் பற்றார்" என்பது ஒரு பழமொழி. -

நம்பானே : விளி. உகத்தி : முன்னிலை வினைமுற்று. காண் : அசை. 2

பொசியாதோ கீழ்க்கொம்பு
நிறைகுளமென் றதுபோலத்
திசைநோக்கிப் பேழ்கணித்துச்
சிவபெருமான் ஓஎனினும்
இசையானால் என்திறத்தும்
எனையுடையாள் உரையாடாள்;
நசையானேன்; திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே!

பொழிப்புரை: அழகிய தில்லைப்பதியில் ஆனந்த தாண்டவம் செய்கின்ற நம்பெருமானே! 'நீர் நிறைந்த குளத்தின் அருகிலே பள்ளத்திலுள்ள மரத்திற்கு (அக்குளத்தின் நீர் கசிந்து) பாயாதோ?' என்று சொல்லும் பழமொழியின் வார்த்தைக்கு இணங்கத் திக்குநோக்கி மருண்டு விழித்துச் சிவபெருமானே! ஓவென்று கதறினாலும் (என் வேண்டுகோளுக்கு) இணங்கினானில்லை; என்னை ஆளாக உடைய உமாதேவியார் (பழ அடியானாகிய) என்னிடத்திலும் பேசாதிருக்கின்றாள்; (அவன் அருளைப்பெற) ஆசைப்பட்டேன் என்றவாறு.

விளக்கம்: "நிறைகுளம் கீழ்க்கொம்பு பொசியாதோ" என்பது ஒரு பழமொழி. இப்பழமொழி எனக்குப் பொருந்த

வில்லை; ஏனெனில் சிவபெருமானைச் சரணுக அடைந்தநான் அவரை அணுகி முறையிட்டும் அருள் கிடைக்கவில்லை ஆதலின் என்பதாம். நிறைகுளம்-கருணை நிறைந்த சிவ பெருமானுக்கு உவமை. கீழ்க்கொம்பு-அருளை நோக்கி நிற்கும் அடியவனுக்கு உவமை. பொசிதல்-கசிதல்;பாய்தல். கொம்பு-இங்கு மரம். நசை - விருப்பம். பேழ்கணித்தல் - மருண்டு விழித்தல்; பெரிதும் மதித்தல் என்றலுமாம்: "பேழ் கணித்தால் பெறுதற் கரியன் பெம்மானே" என்பது திரு வாசகம்.

சிவபெருமான்: அண்மை விளி. ஆல்: அசை. இசை யான்: எதிர்மறைவினைமுற்று. நசையானேன்: தன்மை வினைமுற்று. கொம்பு: சினையாகு பெயர். 3

ஆயாத சமயங்கள்
அவரவர்கள் முன்பென்னை
நோயோடு பிணிநலிய
இருக்கின்ற அதனுலே
பேயாவித் தொழும்பனைத்தம்
பிரான்இகழும் என்பித்தாய்
நாயேனைத் திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே!

பொழிப்புரை: அழகிய தில்லைப்பதியில் ஆனந்த தாண்ட வம் செய்கின்ற நம்பெருமானே! ஆராய்ச்சி இல்லாத புறச் சமயத்தை அனுட்டிக்கும் அவ்வவர்களுக்கு முன்பாக அடியேனைப் பல நோய்கள் வருத்த (அதற்கு ஆட்பட்டு) இருக்கின்ற காரணத்தினுல் "இத்தொண்டனைப் பேய் என்று கருதித் தம்பிரானே (அருளாது) இகழ்கின்ருன்" என்று (அவர்கள்) நாய்போன்ற என்னைப் பரிகசிக்கும்படி செய்வித்தாய் என்றவாறு.

விளக்கம்: ஆயாத-ஆராய்ச்சி இல்லாத. சமயங்கள் அவரவர்கள்-புறச்சமயத்தை அனுட்டிக்கும் அவ்வவர்கள். நோயொடு பிணி-பல நோய்கள். பேயா-பேய் என்று கருதி. இத் தொழும்பனை-இத்தொண்டனை. தம்பிரான்-தம்பிரானே. தம்பிரான் - தனக்குத் தலைவன் இல்லாதவன்; கடவுள். இகழும்-(அருளாது) இகழ்கின்றான் (என்று பரிகசிக்க). என்பித்தாய்-என்று செல்லுமாறு செய்வித்தாய். நாயேனை-நாய் போன்ற என்னை.

நோயோடுபிணி: ஒருபொருட் பன்மொழி. நம்பானே: விளி. என்பித்தாய்: முன்னிலை வினைமுற்று. 4

நின்றுநினைந்(து) இருந்துகிடந்(து)
எழுந்துதொழும் தொழும்பனேன்
ஒன்றியொரு கால்நினையா(து)
இருந்தாலும் இருக்கவொட்டாய்
கன்றுபிரி கற்றாப்போல்
கதறுவித்தி; வரவுநில்லாய்
நன்றிதுவோ? திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே!

பொழிப்புரை: அழகிய தில்லைப்பதியில் ஆனந்த தாண்டவம் செய்கின்ற நம்பெருமானே! நிற்கும்போதும், உட்காரும் போதும், படுக்கும்போதும், எழுந்திருக்கும்போதும் (உன்னை) நினைந்து வணங்குகின்ற (உனது) அடியவனான நான் ஒரு சமயம் (ஐம்புலங்களும்) ஒற்றுமைப் பட்டு (உன்னை) நினையாமல் இருந்தாலும் (என்னை அவ்வாறு) இருக்கவிடமாட்டாய்; (எப்பொழுதும் உன்னை நினைக்குமாறு செய்வாய்); கன்றைப் பிரிந்த தாய்ப் பசுவைப்போல் கதறச் செய்கின்றாய்; (எனினும்) வந்து எதிரில் நிற்க மாட்டாய்; இச்செயல் (உனக்கு) நல்லதாமோ? என்றவாறு.

விளக்கம்: இங்கு, "நின்றும் இருந்தும் கிடந்தும் நினைமின்கள், என்றும் சிவன்ருள் இணை" என வரும் வருத்தமற வுய்யும் வழி என்ற நூலின் குறள் வெண்பாவினையும், "நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுன்னை". என வரும் அபிராமி அந்தாதி அடியினையும் நினைவிற் கொள்க. தொழும்பன் - அடியவன். ஒன்றி- (ஐம்புலன்களும்) ஒன்றுபட்டு; மனமொழி மெய்கள் ஒன்றி எனினுமாம். கற்றா- கன்றையுடைய பசு.

கன்று + ஆ = கற்றா. நம்பானே : விளி. நினையாது : வினையெச்சம். நில்லாய் : முன்னிலைவினைமுற்று. 5

படுமதமும் மிடவயிறும்
உடையகளி றுடையபிரான்!
அடியறிய உணர்த்துவதும்
அகத்தியனுக் கோத்தன்றே;
இடுவதுபுல் ஒரெருதுக்(கு)
ஒன்றினுக்கு வையிடுதல்
நடுவிதுவோ? திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே!

பொழிப்புரை : அழகிய தில்லைப்பதியில் ஆனந்த தாண்டவம் செய்கின்ற நம் பெருமானே! ஒழுகுகின்ற மத நீரையும் பானை போன்ற வயிற்றினையுமுடைய யானை முகக்கடவுளாகிய விநாயகரை மகனாக உடைய தலைவனே! அகத்திய முனிவருக்கு மூலத்தை (பிரணவத்தை) அறியும்படி நீ அறிவுறுத்தியதும் வேதநூல் அல்லவா? ஒரு எருதினுக்கு இடுவது புல்லும், மற்றோர் எருதினுக்கு இடுவது வைக்கோலுமாம்; இது நடுவு நிலைமை ஆகுமோ? என்றவாறு.

விளக்கம்: அகத்தியனுக்கு அருளுவது புல் இடுதலும், அடியவனுக்கு அருளாதது வைக்கோல் இடுதலும் போலு

மாகும். படுமதமும் மிடவயிறும் உடைய களிறு-ஒழுகும் மத நீரையும் பெரிய வயிற்றினையுமுடைய அயிராவணம் என்ற யானையை என்றலுமாம். மிட - மிடா-பானை. ஓத்து-வேதம். வை-வைக்கோல். நடுவு - நடுவு நிலைமை. அடி-மூலம்; பிரணவம்; திருவடியின் தன்மையுமாம்.

நம்பானே: விளி. இதுவோ, ஓ:வினா. இடுவது, இடுதல்: தொழிற்பெயர்கள். 6

மண்ணோடு விண்ணளவும்
மனிதரொடு வானவர்க்கும்
கண்ணவாய்; கண்ணகா(து)
ஒழிதலும்நான் மிகக்கலங்கி
அண்ணவோ என்றண்ணந்(து)
அலமந்து விளித்தாலும்
நண்ணயால்; திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே!

பொழிப்புரை : அழகிய தில்லைப்பதியில் ஆனந்த தாண்டவம் செய்கின்ற நம்பெருமானே! பூவுலகத்தோடு வானுலகம் வரையிலுள்ள மனிதர்கள் முதல் தேவர்கள் வரையுள்ள யாவர்க்கும் ஆதரவாக நீ இருக்கின்றாய்; (அடியவனுக்கு மட்டும் நீ) ஆதரவாகாமல் போதலும் நான் மிகவும் கலக்கமடைந்து 'பெருமை பொருந்திய தலைவனே' என்று அழுது துன்புற்று மேனோக்கிக் கூவி அழைத்தாலும் (என்னை வந்து) அடைந்தாயில்லை (இஃது என்னோ?) என்றவாறு.

விளக்கம் : இங்குப் பூவுலகம் வானுலகம் இரண்டை மட்டும் கூறினாரேனும் ஒழிந்த எல்லாவுலகத்தையும் கொள்க. கண் ஆவாய் - ஆதரவாக இருக்கின்றாய். அண்ணாத்தல்-மேனோக்குதல். அலமந்து-துன்புற்று. விளித்தல்-அழைத்தல். நண்ணாய் - (வந்து) அடைய மாட்டாய்.

நண்ணுயால், ஆல்: அசை. நம்பானே: விளி. அண்ணுவோ: புலம்பல்விளி. அலமந்து : வினையெச்சம்: அலமா : பகுதி. 7

வாடாவாய் நாப்பிதற்றி
உனைநினைந்து நெஞ்சுருகி
வீடாஞ்செய் குற்றேவல்
எற்றேமற் றிதுபொய்யில்
கூடாமே கைவந்து
குறுகுமா றியான்உன்னை
நாடாயால் திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே!

பொழிப்புரை: அழகிய தில்லைப்பதியில் ஆனந்த தாண்டவம் செய்கின்ற நம் பெருமானே! வாய் வாட்டமுற்று நாவினுல் உளறி,உன்னை நினைந்து மனம் உருகி முத்தியைப்பெறுதற்கு (நான்) செய்கின்ற குற்றேவல் இதைத் தவிர வேறு யாது உளது?(குற்றேவல்)பொய்யொடு கூடாமல் இருக்கக் கைகொடுத்து உதவி நான் உன்னைவந்து அடையும்படி நீ அருளமாட்டாயா? என்றவாறு.

விளக்கம்: வாடா-வாட்டமுற்று. பிதற்றி-உளறி. வீடு-மோட்சம். மற்று-வேறு. பொய்யில் கூடாமே-(நின்குற்றேவல்) பொய்யுடன் கூடாதிருக்க. கைவந்து-கைகொடுத்து உதவி. நாடாய்-அருளமாட்டாயா.

வாடா: (வாடி) செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். நம்பானே: விளி, எற்றே, ஏ: ஐயவினு. கைவந்து, கை: உபசர்க்கம். குறுகுமாறு + யான் = குறுகுமாறியான், இகரம்: குற்றியலிகரம். நாடாய்: எதிர்மறை முன்னிலை வினைமுற்று. —— 8

வாளாமால் அயன்வீழ்ந்து
காண்பரிய மாண்பிதனைத்
தோளாரக் கையாரத்
துணையாரத் தொழுதாலும்
ஆளோநீ யுடையதுவும்
அடியேன்உன் தாள்சேரும்
நாளேதோ? திருத்தில்லை
நடம்பயிலும் நம்பானே!

பொழிப்புரை: அழகிய தில்லைப்பதியில் ஆனந்த தாண்டவம் செய்கின்ற நம் பெருமானே! ஒரு தொண்டும் செய்யாமல் திருமாலும் பிரமனும் விரும்பி (உன்னைக்) காணுதற்கு அரிதாகிய மாண்பின் தன்மையைத் தோள்கள் பொருந்தவும், கைகள் பொருந்தவும், துணையாயுள்ள அடியார்கள் பொருந்தவும் (நான்) வணங்கினாலும் நீ என்னை அடியானாக உடையதுவும் (உண்மைதானோ?) அடியவனாகிய யான் உனது திருவடிகளை அடைதற்குரிய நாள் எந்நாளோ? (அறியேன்) என்றவாறு.

விளக்கம்: வாளா-ஒரு செயலும் செய்யாமல். மாண்பு இதனை - மேன்மையின் தன்மையை. துணை - அடியார்கள்; நண்பர். ஆர-பொருந்த. வீழ்தல்-விரும்புதல். காண்பு-காணுதல். ஆளோ-ஆளாக-அடியவனாக.

காண்பு: தொழிற் பெயர். நம்பானே: விளி. வீழ்ந்து: வினை யெச்சம். ஏதோ: ஓ: வினா; ஐயமுமாம். 9

பாவார்ந்த தமிழ்மாலை
பத்தரடித் தொண்டன்எடுத்(து)
ஓவாதே அழைக்கின்றான்
என்றருளின் நன்றுமிகத்

தேவே!தென் திருத்தில்லைக்
கூத்தாடீ! நாயடியேன்
சாவாயும் நினைக்காண்டல்
இனியுனக்குத் தடுப்பரிதே.

பொழிப்புரை: மேலான தேவனே! தென் திசையிலுள்ள அழகிய தில்லைப்பதியில் ஆனந்தக் கூத்து ஆடுபவனே! 'அடியவர்க்கு அடியவனாகிய ஒருவன், செய்யுள் வடிவாகப் பொருந்திய தமிழ்ப் பாடலின் தொகுதியை எடுத்துக் கூறி ஓயாமல் (எப்பொழுதும்) கூப்பிட்டுக் கொண்டே இருக்கின்றான்' என்று கருதி, (எனக்கு நீ) அருள்செய்யின் மிகவும் நன்று; இனி (உனது) நாயடியேனாகிய யான் சாகும் தருணத்திலேனும் உன்னைத் தரிசித்தலை நீ தடை செய்ய முடியாது என்றவாறு.

விளக்கம்: பா-பாட்டு. ஓவாது-ஓயாமல். தென்-தென்றிசை; அழகுமாம். இங்குப் "பவனெனும் நாமம் பிடித்துத் திரிந்துபன்னாள் அழைத்தால்,இவனெனைப் பன்னாள் அழைப் பொழியானென்(று) எதிர்ப்படுமே" எனவரும் அப்பர் தேவார அடிகளை நினைவிற்கொள்க. சா-சாதல். நினை-உன்னை.

தேவே, கூத்தாடீ: விளிகள். தடுப்பு: தொழிற் பெயர். நன்று: குறிப்பு வினைமுற்று. 10

திருச்சிற்றம்பலம்

வேணாட்டடிகள் அருளிய திருவிசைப்பா தெளிவுரை .

முற்றிற்று

உ

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை

7. திருவாலியமுதனார்

அருளிய

திருவிசைப்பா

[தெளிவுரை]

1. கோயில் - பாதாதிகேசம்

பண் – பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

மையல்மாதொரு கூறன்மால்விடை
ஏறிமான்மறி யேந்தியதடங்
கையன்கார்புரை யுங்கறைக்
கண்டன் கனல்மழுவான்
ஐயன்ஆரழ லாடுவான்அணி
நீர்வயல்தில்லை யம்பலத்தான்
செய்யபாதம் வந்தென்
சிந்தையுள்ளிடங் கொண்டனவே.

பொழிப்புரை: (மிக்க) காதல் கொண்ட உமாதேவியாரை இடப்பாகத்தே கொண்டவனும், திருமாலாகிய இடபத்தின் மீது ஊர்பவனும், மான்கன்றைப் பெரிய கையில் ஏந்திய வனும், மேகம் போன்று கறுத்த விடம் பொருந்திய கண்டத்தையுடையவனும், நெருப்பு மயமான மழு என்னும் ஆயுதத்தைத் தாங்கியவனும், பெரியோனும், நிறைந்த தீ (மழு) ஏந்தி நடனமாடுபவனும் அழகிய நீர் நிறைந்த

வயல்கள் சூழ்ந்த தில்லைப்பதியிலுள்ள பொன்னம்பலத்தில் எழுந்தருளியவனுமாகிய நடராசப்பெருமானுடைய சிவந்த திருவடிகள் என் மனத்தினுள் வந்து நின்று (அதனைத் தம்) இருப்பிடமாக ஆக்கிக் கொண்டன என்றவாறு.

விளக்கம்: இங்குத் திருவடிகளைத் தியானித்தது ஆகும். மையல்-காதல்; அன்பு. மால்விடை-பெரிய இடபமுமாம். மான்மறி-கலைமான். கறை-விடம். ஐயன்-பெரியோன்; தலைவன்; அழகனுமாம் (ஐ-அழகு). ஆர்-நிறைந்த. செய்ய-சிவந்த.

மையல்: மயல் என்பதன் முதற்போலி. மான்மறி: ஒரு பொருட்பன்மொழி. தடங் கை: உரிச்சொற்றொடர். கொண்டன-பலவின்பால் வினைமுற்று. 1

சலம்பொற்றாமரை தாழ்ந்தெழுந்த
தடமும்தடம்புனல் வாய்மலர்தழீஇ
அலம்பிவண் டறையும்அணி
யார்தில்லை அம்பலவன்
புலம்பிவானவர் தானவர்புகழ்ந்
தேத்தஆடுபொற் கூத்தனார்கழல்
சிலம்புகிண் கிணியென்
சிந்தையுள்ளிடங் கொண்டனவே.

பொழிப்புரை: தண்ணீர் தாழ்ந்திருக்க அதில் பொற்றாமரை மலர் மேலெழுந்து நிற்கும் குளமும், (அக்) குளத்து நீரினிடத்துள்ள தாமரைமலரை அணைந்து ரீங்காரம் செய்து கொண்டு வண்டுகள் (பூவினிடத்து) மோதுகின்ற அழகும் பொருந்திய தில்லைப்பதியிலுள்ள பொன்னம்பலத்தில் எழுந்தருளிய நடராசப் பெருமானை (நோக்கித்) தேவர்களும் வித்தியாதரர்களும் (அன்பினால்) ஆனந்தக்கண்ணீர்

சொரிந்து புகழ்ந்து துதிக்க, ஆனந்த தாண்டவம் செய்கின்ற அழகிய கூத்தப்பெருமானின் (வீரக்) கழல், சிலம்பு, கிண்கிணி என்ற சதங்கை இவை யாவும் என்மனத்தினுள் (வந்து அதனைத் தம்) இருப்பிடமாக ஆக்கிக் கொண்டன என்றவாறு,

விளக்கம்: இங்குக் கழல், சிலம்பு, கிண்கிணி இவற்றைத் தியானித்ததாகும். பொற்ருமரை-அழகிய தாமரை. தடம்-குளம். தழீஇ - அணைந்து. அறைதல் - மோதுதல்; மோதிக் கிண்டுதல். தானவர் - வித்தியாதரர்; இவர் மானுடரிலும் சிறிது உயர்ந்தவர்; தேவரிலும் சிறிது தாழ்ந்தவர். பொன் - அழகு. கிண்கிணி - கிண்கிண் என்று ஒலிக்கும் சதங்கை. கழல் - இது ஆண்பாலுக்குரிய அணிகலம். சிலம்பு,சதங்கை-இவை பெண்பாலுக்குரிய அணிகலங்கள். இங்கு இறைவன் அம்மை யப்பனுகத் திகழும் திருக்கோலத்தைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்.

தழீஇ (தழுவிய): சொல்லிசையளபெடை. கழல் சிலம்பு கிண்கிணி : உம்மைத் தொகை. 2

குருண்டவார்குழற் கோதைமார்குயில்
போன்மிழற்றிய கோலமாளிகை
திரண்ட தில்லைதன்னுள்
திருமல்கு சிற்றம்பலவன்
மருண்டுமாமலை யான்மகள்தொழ
ஆடுங்கூத்தன் மணிபுரைதரு
திரண்ட வான்குறங்கென்
சிந்தையுள்ளிடங் கொண்டனவே.

பொழிப்புரை: சுருண்ட நீண்ட கூந்தலையுடைய பெண்கள் குயிலைப் போலக் கொஞ்சிப் பேசுகின்ற அழகிய

மாளிகைகள் நிரம்பிய தில்லைப்பதியினுள் மேன்மை நிறைந்த சிற்றம்பலத்தை(த் தனக்கு) இடமாகக் கொண்ட வனும், பெருமை வாய்ந்த இமயமலை அரசன் மகளாகிய பார்வதி தேவியார் திகைத்து நின்று தொழுமாறு நடன மாடுகின்றவனுமான கூத்தப் பெருமானின் மாணிக்கத்தை யொத்த (அழகும் ஒளியும் கூடித்) திரண்டிருக்கின்ற பெருமை வாய்ந்த திருத்தொடைகள், என் மனத்தினுள் (வந்து அதனைத்தம்) இருப்பிடமாக ஆக்கிக் கொண்டன என்றவாறு.

விளக்கம்: இங்குத் திருத்தொடைகளைத் தியானித்த தாகும். குருண்ட-சுருண்ட. கோதைமார்-பெண்கள். மிழற் றிய-கொஞ்சிப் பேசுகின்ற. திரு-செல்வமுமாம். மருண்டு-திகைத்து. மலையான்-மலையரசன்; இமவான். மணி-மாணிக் கம். வான்-பெருமை. குறங்கு - தொடை. புரைதரு - ஒத்த.

மருண்டு, தொழ : வினையெச்சங்கள். மா: உரிச்சொல். தில்லை தன்னுள், தன் : சாரியை. 3

போழ்ந்தியானை தன்னைப்பொருப்பன்
மகளுமையச்சங் கண்டவன்
தாழ்ந்த தண்புனல்சூழ்
தடமல்கு சிற்றம்பலவன்
சூழ்ந்தபாய்புலித் தோல்மிசைத்
தொடுத்துவீக்கும் பொன்நூல்தன்னினெடு
தாழ்ந்த கச்சதன்றே
தமியேனைத் தளர்வித்ததே.

பொழிப்புரை: யானையைப் பிளந்து (அதனால்) மலையரசன் மகளாகிய உமாதேவிக்கு உண்டான அச்சத்தைக் கண்ட வனும், குளிர்ந்த நீர் சூழ்ந்த ஆழமான தடாகங்கள்

நிறைந்த (தில்லைச்) சிற்றம்பலத்தில் எழுந்தருளியவனு மாகிய சிவபெருமான், சுற்றிவந்து பாயும் புலியின் தோலைத் தன் அரையின்மீது அணிந்து (அதன்மேல்) இழுத்துக் கட்டிய அழகிய கயிற்றினோடு தொங்கும்படி விளங்கும் திருக்கச்சு அல்லவா? தனியேனாகிய என்னைத் தளர்ச்சியடையச் செய்தது என்றவாறு.

விளக்கம்: இங்குத் திருக்கச்சையைத் தியானித்ததா கும். இறைவனது கச்சு (இடைக்கட்டு) என் மனத்தை உருகச் செய்தது என்பதாம். போழ்ந்து-பிளந்து; கிழித்து. பொருப்பன்-மலையரசன். தொடுத்து வீக்கும்-இழுத்துக்கட் டும். பொன்நூல்-அழகிய கயிறு. தளர்வித்தது-இங்கு மனம் உருகுதலைக் குறித்தது. இங்கு யானையைப் பிளந்த மூர்த்தி கஜசம்மார மூர்த்தி ஆவர்.

யானைதன்னை, தன்: சாரியை. பாய்புலி : வினைத் தொகை. தோல்மிசை, மிசை : ஏழனுருபு. போழ்ந்து + யானை = போழ்ந்தியானை, இகரம்: குற்றியலிகரம். 4

பந்தபாச மெலாமறப்பசு
பாசம்நீக்கிய பன்முனிவரோ(டு)
அந்தணர் வணங்கும்
அணியார்தில்லை அம்பலவன்
செந்தழல்புரை மேனியுந்திகழுந்
திருவயிறும் வயிற்றினுள்
உந்திவான்சுழி என்னுள்ளத்(து)
உள்ளிடங் கொண்டனவே.

பொழிப்புரை : (ஆன்மாக்களைக்) கட்டியுள்ள மும்மலக் கட்டுகள் எல்லாம் அறுபட்டு ஒழியும்படி தன் முனைப்பாகிய உணர்ச்சியை நீக்கிய பல முனிவர்களோடு (மூவாயிரம்)

அந்தணர்களும் வணங்குகின்ற அழகு பொருந்திய தில்லைப் பதியில் எழுந்தருளிய பொன்னம்பலவனின் சிவந்த நெருப்பை ஒத்த திருமேனியும், விளங்குகின்ற அழகிய திருவயிறும், (அத்திரு) வயிற்றிலுள்ள சிறப்புற்ற உந்திச் சுழியும் என் மனத்தினுள் (வந்து அதனைத் தம்) இருப்பிடமாக ஆக்கிக் கொண்டன என்றவாறு.

விளக்கம்: இங்குத் திருமேனி, திருவயிறு, உந்திச் சுழி இவற்றைத் தியானித்ததாகும். முனிவர் - உலகப்பற்றை வெறுத்தவர். அந்தணர் - இங்குத் தில்லைவாழந்தணர்கள் மூவாயிரவர். செந்தழல்புரை மேனி - செம்மேனியம்மான். வான் உந்திச் சுழி - சிறப்புடைய உந்தியில் உள்ள சுழி; அதாவது கொப்பூழ்.

புரை : உவமவுருபு. எ(ல்)லாம் : இடைக்குறை. நீக்கிய - பெயரெச்சம். 5

குதிரைமாவொடு தேர்பலகுவிந்(து)
ஈண்டுதில்லையுட் கொம்பனாரொடு
மதுரவாய் மொழியார்
மகிழ்ந்தேத்து சிற்றம்பலவன்
அதிரவார்கழல் வீசிநின்றழ
காநடம்பயில் கூத்தன்மேல்திகழ்
உதரபந்தனம் என்னுள்ளத்(து)
உள்ளிடங் கொண்டனவே.

பொழிப்புரை: குதிரை யானை இவற்றோடு தேர்கள் பல ஒன்று சேர்ந்து நெருங்குகின்ற தில்லைப்பதியில் பூங்கொம்பை ஒத்த மகளிரொடு இனிய இசைப் பாடல்களைப் பாடுகின்ற அடியார் மகிழ்ந்து துதிக்கின்ற சிற்சபையில் எழுந்தருளியவனும், ஒலிக்கும்படி (கட்டப்பெற்ற) வீரக்

கழல்களை அணிந்த நீண்ட பாதங்களை வீசி நின்று அழ காகநடனம் செய்கின்றவனுமான நடராசப் பெருமான் மீது விளங்குகின்ற திரு அரைப்பட்டிகைகள் என் மனத்தினுள் (வந்து அதனைத் தம்) இருப்பிடமாக ஆக்கிக்கொண்டன என்றவாறு.

விளக்கம்: இங்கு உதரபந்தனத்தைத் தியானித்த தாகும். மா - யானை. ஈண்டுதல் - நெருங்குதல். கொம்பு அ(ன்)ஞர்-பூங்கொம்பை ஒத்த மகளிர். மதுரவாய் மொழி யார்-இனிய இசைப் பாடல்களைப் பாடும் அடியார். அழகா- அழகாக. உதரபந்தனம் - (ஆடவர் அணியும்) அரைப் பட்டிகை.

கழல் (பாதம்): தானியாகு பெயர். ஏத்து சிற்றம் பலவன்: வினைத்தொகை. 'உதரபந்தனம்........கொண்டன': ஒருமைப் பன்மை மயக்கம். 6

படங்கொள்பாம்பணை யானொடுபிரமன்
பரம்பரமா! அருளென்று
தடங்கையால் தொழவுந்
தழலாடுசிற் றம்பலவன்
தடங்கைநான்குமத் தோள்களுந்
தடமார்பினிற் பூண்கள்மேற்றிசை
விடங்கொள் கண்டமன்றே
வினையேனை மெலிவித்ததே.

பொழிப்புரை: படத்தையுடைய பாம்பைப் படுக்கையாகக் கொண்டவனுன திருமாலுடனே பிரமனும் (நின்னைநோக்கி) மிகவும் மேலானவனே! (எங்கட்கு) அருள் புரிவாயாக, என்று பெரிய கைகளால் (கூப்பி) வணங்கவும்(அவர்கட்கு அருள்புரியாமல்), அக்கினியைக் கையிலேந்தி ஆடுகின்ற

சிற்றம்பலத்தை யுடையவனுகிய நடராசப்பெருமானின் பெரிய திருக்கைகள் நான்கும், (அந்நான்கு திருக்கை களுக்கும் உரிய நான்கு) திருத்தோள்களும் பொருந்திய அகன்ற திரு மார்பினில் உள்ள ஆபரணங்களுக்கு மேற் பக்கத்தில் அமைந்த விடம் பொருந்திய திருக்கழுத்தும் அல்லவா? தீவினையுடையேனுகிய என்னை மெலியச் செய் தன என்றவாறு.

விளக்கம்: இங்குத் திருக்கைகளையும் திருத்தோள்களை யும் திரு மார்பையும் திரு நீலகண்டத்தையும் தியானித்த தாகும். பாம்பு - இங்கு ஆதிசேடன். அணை - படுக்கை. பாம்பணையான்-திருமால். பரம்பரம்-மேலானது. தட மார்பு-அகன்ற மார்பு. பூண்-ஆபரணம். மேற்று இசை-மேற்பக் கத்தில் பொருந்திய. மெலிவித்தது என்றது மனம் உருக் கிய தன்மையைக் குறித்தது ஆகும்.

பரம்பரமா: விளி. பாம்பணையான்: குறிப்பு வினையா லணையும் பெயர். தடங்கை, தடமார்பு: உரிச்சொற் றொடர்கள். 7

செய்யகோடுடன் கமலமலர்சூழ்தரு
தில்லைமாமறை யோர்கள்தாந்தொழ
வைய முய்யநின்று
மகிழ்ந்தாடு சிற்றம்பலவன்
செய்யவாயின் முறுவலும்திகழும்
திருக்காதும்கா தினின்மாத்திரைகளோ(டு)
ஐய தோடுமன்றே
அடியேனையாட் கொண்டனவே.

பொழிப்புரை: சிவந்த வரிகளுடன் கூடிய தாமரை மலர்கள் (பொருந்திய தடாகங்கள்) சூழப்பெற்ற தில்லைப் பதியிலுள்ள பெருமை வாய்ந்த (மூவாயிரம்) அந்தணர்கள்

வணங்கா நிற்க, உலகத்திலுள்ள ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு நின்று மகிழ்ந்து ஆனந்த தாண்டவம் ஆடுகின்ற சிற்றம்பலத்தில் எழுந்தருளிய நடராசப் பெருமானுடைய சிவந்த திருவாயினிடத்துத் தோன்றும் பற்களும், விளங்குகின்ற அழகிய திருக்காதுகளும், அத்திருக் காதுகளில் (திகழும்) மாத்திரை என்னும் அணிகளும், அழகான திருத்தோடும் அல்லவா? அடியேனாகிய என்னை ஆட்கொண்டனவாகும் என்றவாறு.

விளக்கம்: இங்கு முறுவல், காதுகள், மாத்திரைகள், தோடு இவற்றைத் தியானித்ததாகும். செய்ய கோடு உடன்-அழகிய சங்குகளுடன் என்றலுமாம் (கோடு-சங்கு). மாமறையோர்-தில்லை மூவாயிரவர். முறுவல் - புன்னகையுமாம். மாத்திரை-ஒரு வகைக் காதணி. ஐய-அழகான. தோடு-(பெண்களின்) காதணி.

வையம்: இடவாகுபெயர். மறையோர்கள்தாம், தாம்: சாரியை.

8

செற்றுவன்புரந் தீயெழச்சிலை
        கோலிஆரழல் ஊட்டினானவன்
எற்றி மாமணிகள்
        எறிநீர்த்தில்லை அம்பலவன்
மற்றைநாட்ட மிரண்டொடு
        மலருந்திருமுக மும்முகத்தினுள்
நெற்றி நாட்டமன்றே
        நெஞ்சுளேதிளைக் கின்றனவே.

பொழிப்புரை: வலிமையான முப்புரங்களையும் தீயெழுந்து அழிக்கும் பொருட்டு மேருமலையாகிய வில்லை வளைத்துத் தணிக்க முடியாத (பெருந்) தீயை உண்ணும்படி செய்தவனும், பெருமை பொருந்திய இரத்தினமணிகளை (அலையி

ஞல், வாரி எறிகின்ற நீர் நிலைகள் சூழ்ந்த தில்லைப்பதியில் எழுந்தருளியவனுமான பொன்னம்பலவனது அழகிய இரண்டு திருக்கண்களோடு மலர்ந்த திருமுகமும் அம் முகத்தினுள் (அமைந்த) நெற்றிக்கண்ணும் அல்லவா? என் மனத்தினுள்ளே பதிந்து இருக்கின்றன என்றவாறு.

விளக்கம்: இங்குத் திருக்கண்கள், திருமுகம், திரு நெற்றிக்கண் இவற்றைத் தியானித்ததாகும். செற்று-செற - அழிக்கும் பொருட்டு. புரம்-முப்புரம். சிலை கோலி-மேருமலையாகிய வில்லை வளைத்து. ஊட்டினன்-உண்ணும் படி செய்தான் எற்றிஎறி-வாரி எரிகின்ற. ஐ-அழகு. நாட் டம்-கண். திளைத்தல்-பதிதல். நெற்றி நாட்டம்-நெற்றியும் நெற்றிக் கண்ணும் என்றலுமாம்.

ஊட்டினனவன்: வினையாலணையும் பெயர். மற்று: அசை. திளைக்கின்றன: பலவின்பால் வினைமுற்று. 9

தொறுக்கள்வான்கம லமலருழக்கக்
கரும்புநற் சாறுபாய்தர
மறுக்கமாய்க் கயல்கள்
மடைபாய்தில்லை யம்பலவன்
முறுக்குவாசிகை தன்னெடுமுகிழ்த்தஅவ்
வகத்திமொட் டொடுமத்தமும்
பிறைக்கொள் சென்னியன்றே
பிரியாதென்னுள் நின்றனவே.

பொழிப்புரை: பசுக்கூட்டங்கள் சிறந்த தாமரை மலர் களை மிதித்துத் துவைக்கவும், கரும்பினது நல்ல சாறுனது (வயல்களில்) பாயவும், கயல்மீன்கள் மனக்குழப்பத்தோடு மடைகளில் பாய்கின்ற (செழிப்புமிக்க) தில்லைப்பதியில் எழுந்தருளிய நடராசப்பெருமானது, முறுக்கப்பட்ட பூமாலை யோடு தோன்றிய அந்த அகத்தி மொட்டும் ஊமத்தை

மலரும் பிறைச்சந்திரனும் (ஆகிய இவற்றைக்) கொண்ட திருமுடிகள் அல்லவா? (என்னைவிட்டுப்) பிரியாமல் என் மனத்துள் (வந்து) நிலைத்து நின்றன என்றவாறு.

விளக்கம்: இங்குத் திருமுடிகளைத் தியானித்ததாகும். தொறுக்கள்-பசுக்கூட்டங்கள். உழக்க-மிதித்துத்துவைக்க. மறுக்கம்-மனக்குழப்பம். வாசிகை-பூமாலை. முகிழ்த்தல்-தோன்றுதல். அகத்தி மொட்டு-அகத்தி மலர் மலரும்நிலை. இங்கு இவ்வகத்திமொட்டு இறைவனுக்குரியதாக ஆசிரியர் கூறியது புதுமையாகும். மத்தம்-ஊமத்தமலர். சென்னி-திருமுடிகள் சதாசிவமூர்த்திக்கு ஐந்து திருமுடிகள் உள்ளன என்பதை நினைவிற் கொள்ளற்பாலது.

உழக்க, பாய்தர: வினையெச்சங்கள். அவ்: பண்டறி சுட்டு. நின்றன: பலவின்பால் வினைமுற்று. 10

தூவிநீரொடு பூவவைதொழு
தேத்துகையின ராகிமிக்கதோர்
ஆவிஉள் நிறுத்தி
அமர்ந்தூறிய அன்பினராய்த்
தேவர்தாந்தொழ ஆடியதில்லைக்
கூத்தனைத்திரு வாலிசொல்லிவை
மேவ வல்லவர்கள்
விடையானடி மேவுவரே.

பொழிப்புரை: நீரினால் அபிடேகம் செய்து மலர்களினால் அர்ச்சித்து வணங்கித் துதிக்கும் கையினையுடையவர்களாய் மேலானதாகிய ஒப்பற்ற சுவாசத்தை உள்ளே நிறுத்தி, (மிக மனம்) விரும்பி உருகிய அன்புடையவர்களாய்த் தேவர்கள் வணங்க, ஆனந்தக்கூத்து ஆடிய தில்லைப்பதியில் எழுந்தருளிய நடராசப்பெருமானைத் திரு

வாலியமுதனார் புகழ்ந்து சொன்ன இப்பாடல்கள் பத்தினை யும் துதிக்க வல்லவர்கள் இடபவாகனனாகிய சிவபெருமா னின் திருவடிகளை அடைவார்கள் என்றவாறு.

விளக்கம்: பூஅவை-மலர்கள். ஆவி-சுவாசம்; உயிர்ப்பு. ஊறிய-(மிக மனம்)உருகிய. திருவாலி-திருவாலியமுதனார். இவை - இப்பாடல்கள். மேவ - துதிக்க. விடையான் - சிவ பெருமான்.

தேவர்தாம், தாம்: சாரியை. விடையான்: குறிப்பு வினையாலணையும் பெயர். 11

திருச்சிற்றம்பலம்

---

2. கோயில் - பவளமால்வரை*

பண் - நட்டராகம்

திருச்சிற்றம்பலம்

பவளமால் வரையைப் பனிபடர்ந்
தனையதோர் படரொளிதரு திருநீறும்
குவளைமாமலர்க் கண்ணியும் கொன்றையும்
துன்றுபொற் குழல்திருச் சடையும்
திவளமாளிகை சூழ்தரு தில்லை
யுள்திரு நடம்புரி கின்ற
தவள வண்ணனை நினைதொறும்
என்மனம் தழல்மெழு(கு)ஒக் கின்றதே.

பொழிப்புரை : பெரிய பவளமலையைப் பனிமூடினாற் போன்றதாகிய ஒப்பற்ற பரவிய ஒளியை வீசும் திருவெண்

---

* *இப்பதிகம் அந்தாதித் தொடையாக அமைந்துள்ளது. அன்றி யும் இப் பதிகம் தலைவனைக் காதலித்த தலைவியின் கூற்றாக அமைந் தது. தலைவி இரங்கலுமாம்.*

ணீறும், சிறந்த குவளைமலர் மாலையும், கொன்றை மலர் மாலையும், நெருங்கிய பொன்னிறமுள்ள சுருட்டி முடிக்கப் பட்ட திருச்சடையும் (உடையவனும்) வேலைப்பாடுகள் அமைந்த மாளிகைகள் சூழ்ந்த தில்லைப்பதியில் திருநடனம் செய்கின்ற (வெண்ணீறுபூசியதால்) வெண்ணிறம் பொருந் தியவனும் ஆகிய சிவபெருமானை நினைக்கும் போதெல் லாம் என் மனமானது நெருப்பிலிட்ட மெழுகுபோல் உருகு கின்றது என்றவாறு.

விளக்கம்: முதலடி சிவபெருமானது சிவந்த திருமேனி யில் திருவெண்ணீறு பூசிய திருக்கோலத்தைக் குறிப்பிட்ட தாகும். 'குவளை மலர்க்கண்ணி' என்பதற்குக் குவளை மலர் போன்ற கண்களையுடைய உமாதேவியார் என்றும், 'பொற் குழல்' என்பதற்கு அழகிய கூந்தல் என்றும் பொருள் கொள்ளலுமாம். இங்கு அம்மையப்பர்க்குரிய கோலத்தை நினைவூட்டலுமாம். மால்-பெரிய. பவளவரை - பவளமலை. இது சிவபெருமான் திருமேனிக்கு உவமை. பனி, இங்கு திருவெண்ணீற்றிற்கு உவமை. கண்ணி-மாலை. திவளம்- வேலைப்பாடுஅமைந்த. தவளம்-வெண்மை. தவளவண்ணன்- விபூதி பூசியதால் வெண்ணிறமுடையவன்; சிவபெருமான்.

முதலடி உவமையணி. படர்ந்த + அனைய = படர்ந் தனைய; அகரம் தொகுத்தல். —— 1

ஒக்க வோட்டந்த அந்தியும்
மதியமும் அலைகடல் ஒலியோடு
நெக்கு வீழ்தரு நெஞ்சினைப்
பாய்தலும் நிறையழிந்(து) இருப்பேனைச்
செக்கர் மாளிகை சூழ்தரு
தில்லையுள் திருநடம் வகையாலே
பக்க மோட்டந்த மன்மதன்
மலர்க்கணை படுந்தொறும் அலந்தேனே.

பொழிப்புரை:ஒருசேர ஓடிவந்த மாலைக்காலமும், சந்திரனும், அலைகளையுடைய கடல் ஒலியும்(சேர்ந்து) நெகிழ்ந்து விழுகின்ற (என்) மனத்தில் தாக்குதலும், கற்பின் வரம்பு கடந்திருக்கின்ற என்மீது,செந்நிற ஒளிவீசும் மாளிகைகள் சூழ்ந்துள்ள தில்லைப்பதியினுள் (எழுந்தருளிய கூத்தப் பெருமான்) அழகிய ஆனந்த தாண்டவத்தைச் செய்கின்ற விதத்தினால், பக்கத்தில் ஓடிவந்த மன்மதன் செலுத்திய மலர் அம்புகள் தைக்குந்தோறும் (நான்) மிக வருந்தினேன் என்றவாறு.

விளக்கம்: இங்குத் திருநடனம் தரிசித்ததால் ஏற்பட்ட காதல் மிகுதியைக் கூறியதாகும். ஒக்க ஒட்டந்த-ஒருசேர ஓடிவந்த. அந்தி-மாலைக்காலம். நிறை-கற்பின்வரம்பு. செக்கர்-செந்நிற வொளி. மலர்க்கணை-புட்ப பாணம்: தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம் என ஐந்துஅலந்தேன்-(நான்) மிக வருந்தினேன்.

ஒட்டந் தந்த என்பது ஒட்டந்த என விகாரமாயிற்று. இருப்பேனை: உருபுமயக்கம்; வினையாலணையும் பெயர். 2

அலந்து போயினேன்; அம்பலக்
கூத்தனே! அணிதில்லை நகராளீ!
சிலந்தியை'அர சாள்க'வென்(று)
அருள்செய்த தேவதே வீசனே!
உலந்தமார்க் கண்டிக் காகிஅக்
காலனை உயிர்செக வுதைகொண்ட
மலர்ந்த பாதங்கள் வனமுலை
மேலொற்ற வந்தருள் செய்யாயே.

பொழிப்புரை : அழகிய தில்லைப்பதியை ஆளுகின்ற அரசே! பொன்னம்பலத்தில் நின்று நடனம் புரியும் பெருமானே! (தனக்குத் தொண்டு செய்த) சிலந்திப்பூச்சியை (நோக்கிச், 'சோழனாகப் பிறந்து) அரசாள்வாயாக' என்று

அருள்புரிந்த தேவதேவே! எங்கும் நிறைந்தவனே! (அடியவன்) மிகவும் துன்பமடைந்து வருந்தி நிற்கின்றேன்; துன்பமடைந்த மார்க்கண்டனுக்காக அந்த யமனை உயிர் நீங்கும்படி உதைத்தருளிய பரவிய (உனது) பாதங்கள் (எனது) அழகிய தனங்களின் மீது ஒற்றுமாறு வந்து அருள் செய்வாயாக என்றவாறு.

விளக்கம் : அலந்து - துன்பமடைந்து. ஆளி - ஆளும் அரசே. சிலந்தி - இது சுதைச் சிலந்தி போன்ற பெருஞ் சிலந்தியின் வகையில் ஒன்று; விடத்தன்மை பொருந்தியது. இச்சிலந்தி முற்பிறப்பில் சிவகணத்தவருள் மாலியவான் என்ற பெயருடையதாய் இருந்தது. இம்மாலியவான், புட்பதந்தன் என்னும் சிவகணத்தவன் செய்யும் சிவத் தொண்டில் பொறாமையும் கோபமுங் கொண்டு தங்களுக்குள் இட்டுக் கொண்ட சாபத்தின் காரணமாகச் சிலந்தி வடிவம் பெற்றான். இச்சிலந்தி திருவானைக்காவில் நாவல் மரத்தடியில் எழுந்தருளிய இறைவனுக்கு வெயில்படாமல் தன் வாய் நூலால் பந்தலிட்டு மறுபிறவியில் கோச்செங் கணானாகப் பிறக்கும் பேறு பெற்றது: "சிலந்தியும் ஆனைக் காவில் திருநிழற் பந்தர் செய்து, உலந்தவண் இறந்த போதே கோச்செங்க ணானுமாகக், கலந்தநீர்க் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள், குலந்தனிற் பிறப்பித் திட்டார் குறுக்கைவீரட்ட னாரே" என்பது அப்பர் தேவாரம். மார்க்கண்டி-மார்க்கண்டேயர்; இவர் மிருகண்டு முனிவரின் புதல்வர்; இறைவனைப் பூசித்து யமனை வென்று நீண்ட ஆயுள் பெற்று விளங்குபவர். காலன்-(காலத்தைக் கணக்கிடுபவன்) இயமன். மலர்ந்த - விரிந்த; பரவிய.

கூத்தனே, ஆளி, தேவதேவ, ஈசனே : விளிகள். தேவ தேவ + ஈசனே = தேவதேவீசனே: அகரம் தொகுத்தல். 3

அருள்செய்(து) ஆடுநல் லம்பலக்
கூத்தனே! அணிதில்லை நகராளீ!
மருள்செய்(து) என்றனை வனமுலை
பொன்பயப் பிப்பது வழக்காமோ?
திரளும் நீள்மணிக் கங்கையைத்
திருச்சடைச் சேர்த்திஅச் செய்யாளுக்(கு)
உருவம் பாகமும் ஈந்துநல்
லந்தியை ஒண்ணுதல் வைத்தோனே!

பொழிப்புரை: அழகிய தில்லைப்பதியை ஆளுகின்ற அரசே! உயிர்களுக்குத் திருவருளைச் செய்து திருநடனம் புரிகின்ற நல்ல சிற்றம்பலத்தில் நடிக்கும் பெருமானே! திரண்டு ஓடி வரும் நீண்ட இரத்தினமணிகளையுடைய கங்கா நதியை அழகிய சடையில் முடித்து வைத்தருளி, அந்தச் செம்மையானவளாகிய உமாதேவிக்கு(த்தம்) வடிவில் ஒரு பாதியையும் அளித்து, நல்ல அழகிய தீயை (அக்கினியை) சிறந்த நெற்றியில் (கண்ணாக) வைத்தருளியவனே! என்னை மயக்கி அழகிய தனங்களின்மேல் பொன்னிறங் கொண்ட தேமலை உண்டுபண்ணச் செய்தது நீதியோ? என்றவாறு.

விளக்கம்: கங்கைக்கும் உமைக்கும் அருள் செய்த நீ எனக்கு மட்டும் அருள்புரியாது தேமல் (பசலை) பரவுமாறு செய்து வருத்துவது நியாயமோ?என்பதாம். மருள் செய்து-மயக்கி. முலை பொன்பயப்பிப்பது-முலைகளின் மேல் பொன் னிறமான தேமல் பரவச் செய்வித்தது. தேமல்-இது காதலுக்கு அடையாளக் குறி. திரளும் - திரண்டு ஓடிவரும். சேர்த்தி-சேர்த்தாய். செய்யாள் - செம்மையானவள்; உமாதேவியார். உருவம் - தம்வடிவில். நல் அம் தியை - நல்ல அழகிய தீயை (அக்கினியை).

கூத்தனே, ஆளி, வைத்தோனே : விளிகள். பயப்பிப்பது : பிறவினை. வழக்காமோ, ஓ : எதிர்மறைவினை. தீயை என்பது முதல் குறுகித் தியை என்று ஆயிற்று. 4

வைத்த பாதங்கள் மாலவன்
காண்கிலன்; மலரவன் முடிதேடி
எய்த்து வந்திழிந்(து) இன்னமும்
துதிக்கின்றார் எழில்மறை அவற்றாலே
செய்த்தலைக் கமலம் மலர்ந்தோங்கிய
தில்லை யம்பலத் தானைப்
பத்தியாற் சென்று கண்டிட
என்மனம் பதைபதைப் பொழியாதே.

பொழிப்புரை : (சிவபெருமான் பாதாளம் ஏழின்கீழே) வைத்த திருவடிகளைத் திருமாலானவன் (இன்னும் தேடிக்) காணப் பெற்றிலன்; தாமரைப்பூவில் வீற்றிருக்கும் பிரம தேவன் (சிவபெருமானின்) திருமுடியைத் தேடி(க் காணப் பெறாமையால்) களைப்புற்றுத் திரும்பி(ப் பூமியில்) இறங்கி வந்து அழகிய வேதங்களைக் கொண்டு இன்னமும் துதித்துக்கொண்டிருக்கின்றான்; வயல்களிடத்துத் தாமரை மலர்கள் மலர்ந்து விளங்குகின்ற தில்லைப்பதியில் எழுந்தருளிய நடராசப்பெருமானைப் பக்தியுடன் சென்று தரிசிக்க, என் மனமானது பதைபதைத்து நிற்றலிருந்து நீங்காது என்றவாறு.

விளக்கம்: திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிக் காண முடியாத எம்பெருமானைப் பக்தி செய்தால் விரைவில் காண முடியும் என்பதாம்: "பத்திசெய் அடியாரைப் பரம்பரத்து உய்ப்பவன்" என்பது திருவாசகம். திருமாலும் பிரமனும் அடிமுடி தேடியதைக், "காரடைந்த வண்ணனோடு

கனகமனையானும் பாரிடந்தும் விண்பறந்தும் பாதம் முடி காணூர்'' எனவரும் சம்பந்தர் தேவாரத்தால் அறியலாம். இறைவன் பக்தி வலையில் படுபவன்: ''பத்தி வலையிற் படுவோன் காண்க'' என்பது திருவாசகம். எழில் மறை-அழகிய வேதம். செய்-வயல். கண்டிட-தரிசிக்க.

செய்த்தலை, தலை: ஏழனுருபு. பதை பதைப்பு: அடுக்குத் தொடர். ஒழியாது: ஒன்றன்பால் வினைமுற்று. 5

தேய்ந்து மெய்வெளுத்(து) அகம்வளைந்(து)
அரவினை அஞ்சித்தான் இருந்தேயும்
காய்ந்து வந்துவந்(து) என்றனை
வலிசெய்து கதிர்நிலா எரிதூவும்;
ஆய்ந்த நான்மறை அந்தணர்
தில்லையுள் அம்பலத்(து) அரன்ஆடல்
வாய்ந்த மாமலர்ப் பாதங்கள்
காண்பதோர் மனத்தினை யுடையேற்கே.

பொழிப்புரை: நான்கு வேதங்களை நன்கு ஆராய்ந்த (மூவாயிரம்) அந்தணர்கள் வாழ்கின்ற தில்லைப்பதியிலுள்ள சிற்றம்பலத்துள் நின்று நடனம் ஆடுகின்ற சிவபெருமானது தாமரைமலர் போன்ற அழகிய திருவடிகளைத் தரிசிக்க வேண்டுமென்பதாகிய ஒப்பற்ற கருத்தினையுடைய என்மீது, வெள்ளிய கிரணங்களை வீசும் சந்திரன் மெலிந்து சரீரம் வெளுத்து உடல் வளைந்து பாம்புக்குப் பயந்து(தான்) இருந்தாலும், கோபித்து வந்துவந்து என்னைத் துன்புறுத்தி நெருப்பை வீசுகின்ருன் என்றவாறு.

விளக்கம்: அரவுக்கு அஞ்சுதல் பிறைச் சந்திரனின் செயல். அகம் வளைந்து - உடல் வளைந்து. காய்தல்-கோபித்தல். நிலா-பிறைச்சந்திரன். எரி தூவும்-நெருப்பை

வீசுகிருன். அரன்-பாவங்களை அழிப்பவன்; சிவன். மனத்தினை-கருத்தினை. 'இறைவனின் திருமுடியிலுள்ள பிறைச் சந்திரனே என்னை இவ்வாறு வருத்துவது'இறைவன் எனக்கு அருள் புரியாதகாரணத்தாலே ஆகும்' என்று மிக்க ஆற்ருமையைத் தலைவி குறிப்பித்ததாம்.

மலர்ப்பாதம்: உவமைத் தொகை. உடையேற்கு, அரவினை: இவை இரண்டும் உருபு மயக்கம். தூவும்: செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று. வந்துவந்து: அடுக்குத் தொடர். 6

உடையும் பாய்புலித் தோலும்நல்
அரவமும், உண்பதும் பலிதேர்ந்து,
விடைய(து) ஊர்வது, மேவிடங்
கொடுவரை, ஆகிலும் என்நெஞ்சம்
மடைகொள் வாளைகள் குதிகொளும்
வயல்தில்லை அம்பலத்(து) அனலாடும்
உடைய கோவினை அன்றிமற்(று)
ஆரையும் உள்ளுவ(து) அறியேனே.

பொழிப்புரை: (சிவபெருமான் அணியும்) ஆடையாவது, பாய்கின்ற புலியினது தோலும் நல்ல பாம்புமே; (அவர்) உண்ணும் உணவாவது, பிச்சைச் சோறே; (அவர்) ஏறிச் செலுத்துவது,இடபமே; (அவர்)எழுந்தருளியிருக்கும் இடம், கொடுமை மிக்க மலையே; இவ்வாறு இருந்தாலும், என் மனமானது, (நீர்) மடையில் ஓடி வருகின்ற வாளைமீன்கள் தாவிக்குதிக்கின்ற வயல்களையுடைய தில்லைப்பதியிலுள்ள சிற்றம்பலத்தில் நின்று மழுவேந்தி நடனமாடும் (என்னை அடிமையாக) உடைய இறைவனை அல்லாமல் வேறு ஒருவரையும் நினைத்தலை (நான்) அறியேன் என்றவாறு.

விளக்கம் : முதலிரண்டடி நிந்தாத்துதி. உடை-ஆடை. பலி-பிச்சை. விடை-இடபம். கொடுவரை-கொடுமை மிக்க மலை; இங்குக் கொடுமை கரடுமுரடான நிலை. மடை-நீர் மடை; கால்வாய். உடைய-(என்னை அடிமையாக) உடைய. கோ-இறைவன்; தலைவன். உள்ளுதல்-நினைத்தல்.

பாய்புலி: வினைத்தொகை. வரை: இருமடியாகுபெயர். ஆரை: யாரை என்பதன்மரூஉ. 7

அறிவும் மிக்கநல் நாணமும்
நிறைமையும் ஆசையும் இங்குள்ள
உறவும் பெற்றநற் றாயொடு
தந்தையும் உடன்பிறந் தவரோடும்
பிறிய விட்டுனை அடைந்தனன்
ஏன்றுகொள்; பெரும்பற்றப் புலியூரின்
மறைகள் நான்குங்கொண் டந்தணர்
ஏத்தநன் மாநடம் மகிழ்வானே!

பொழிப்புரை: சிதம்பரத்தலத்தின் கண் நான்கு வேதங்களாலும் தில்லைவாழந்தணர்கள் துதிக்கச் சிறந்ததிருநடனஞ் செய்தலை விரும்புகின்ற ஈசனே! தற்போதத்தையும், மிகுந்த நல்ல நாணத்தையும், மனஅடக்கத்தையும், (பொருள் மீது) ஆசையையும், இங்குள்ள உறவினரையும், (என்னைப்) பெற்றெடுத்த நல்ல தாயையும், தந்தையையும், உடன் பிறந்தாரையும் (நான்) பிரியுமாறு விடுத்துவிட்டு உன்னையே (அடைக்கலமாக) அடைந்துள்ளேன்; ஆதலால், என்னை ஏற்றுக்கொள்வாயாக என்றவாறு.

விளக்கம்: அறிவு (தற்போதம்),நாணம், மன அடக்கம், ஆசை இவற்றையும் நீக்கி, உறவினர், தாய் தந்தை, உடன் பிறந்தார் எல்லோரையும் நான் கைவிட்டு உன்னை

அடைந்தேன்; என்னை ஏற்றுக்கொள் என்பதாம். நிறை-கற்புமாம். பெரும்பற்றப் புலியூர்-இது மிகுந்த பற்றுள்ள புலிக்கால் முனிவர்க்கு உறைவிடமாய் உள்ள ஊர்; தில்லை. (புலி-இங்கு வியாக்கிரபாதர்.)

'பிரிய'என்பது எதுகை நோக்கிப்'பிறிய'என நின்றது. மகிழ்வோனே: விளி. ஏன்றுகொள்: முன்னிலை வினை முற்று. 8

'வான நாடுடை மைந்தனே!
ஓஎன்பன்; 'வந்தரு ளாய்'என்பன்;
'பால்நெய் ஐந்துடன் ஆடிய
படர்சடைப் பால்வண்ண னே!என்பன்;
தேன மர்பொழில் சூழ்தரு
தில்லையுள் திருநடம் புரிகின்ற
ஏன மாமணிப் பூணணி
மார்பனே! எனக்கருள் புரியாயே.

பொழிப்புரை: தேன் கூடுகள் பொருந்திய சோலைகள் சூழ்ந்த தில்லைப்பதியில் திருநடனம் செய்கின்ற, பன்றிக் கொம்பாகிய அழகிய ஆபரணத்தை அணிந்த திருமார்பை யுடையவனே! 'சிவலோகத்தை(த் தனது நாடாக) உடைய வலிமைவாய்ந்தவனே!ஓ என்று முறையிடுவேன்;'(நீ)வந்து அருள்புரிவாயாக' என்பேன்; 'பால், நெய், தயிர் முதலிய பஞ்சகவ்வியத்துடன் அபிடேகம் செய்யப்பெற்ற விரிந்த சடையையும் (விபூதி பூசியதால்) பால்போன்ற வெண்ணி றத்தையும் உடையவனே!' என்பேன்; (ஆதலால்) எனக்கு (நீ விரைந்து) அருள் செய்வாயாக என்றவாறு.

விளக்கம் : வானநாடு - தேவலோகம்; இங்குச் சிவ லோகம். மைந்து-வலிமை. பால் நெய் ஐந்து-பால், நெய்,

தயிர், கோமயம், கோசலம் என்ற ஐந்து பொருள்; இது பஞ்சகௌவியம். பால் வண்ணன்-வெண்ணிற முடையவன். தேன்-தேனடை. ஏனம்-பன்றி; இங்கு அதன் கொம்பு.

ஓ: முறையீடு. என்பன்: தன்மை ஒருமை வினைமுற்று. ஏனம்: முதலாகு பெயராய் அதன் கொம்பை உணர்த்திற்று. புரியாய்: முன்னிலை வினைமுற்று. 9

புரியும் பொன்மதில் சூழ்தரு
தில்லையுள் பூசுரர் பலர்போற்ற
எரிய தாடும்எம் ஈசனைக்
காதலித்(து) இனையவள் மொழியாக
வரைசெய் மாமதில் மயிலையர்
மன்னவன் மறைவல திருவாலி
பரவல் பத்திவை வல்லவர்
பரமன(து) அடியிணை பணிவாரே.

பொழிப்புரை: (யாவரும்) விரும்புகின்ற அழகிய மதில்கள் சூழ்ந்த தில்லைப்பதியில் வாழும் அந்தணர் பலர் துதிக்க, மழு ஏந்தி நடனம் ஆடுகின்ற எமது இறைவனிடம் அன்பு கொண்டு வருந்தியவளான தலைவி கூறிய மொழிகளாக, மலைகளைப்போன்று உயர்ந்து பருத்த மதில்களால் சூழப் பட்ட மயிலை என்னும் நகருக்குத் தலைவனும், வேதங்களில் வல்லவனுமான திருவாலி அமுதன் என்பவன் (செய்த) துதிப் பாடல்களாகிய இப்பத்துப் பாடல்களையும் (ஓதி இறைவனைத் துதிக்க) வல்லவர் சிவபெருமானுடைய இரண்டு திருவடிகளை (அடைந்து என்றும்) பணிந்து இருப்பவராவர் என்றவாறு.

விளக்கம்: புரியும்-(யாவரும்) விரும்புகின்ற. பூசுரர்-பூலோகத் தேவர்; அந்தணர்; இவர்கள் தில்லை மூவாயிரவர்

ஆவர். இனையவள்-வருந்தியவளான தலைவி. 'இளையவள்' என்று பாடங்கொண்டு இளம்பெண்ணுகிய தலைவி என்றும் பொருள் கூறுவர். மயிலை-திருமயிலாடுதுறை; மாயூரம். 'மறைவல திருவாலி' என்றதால் திருவாலி அமுதனுர் அந்தணர் குலத்தினர் என்பது வெளிப்படை. பரவல்-துதித்தல். பரமன்-மேலானவன்; சிவன்.

எரியது, அது: பகுதிப்பொருள் விகுதி. மாமதில்: உரிச்சொற்றொடர். பரவல்: தொழிற் பெயர். 10

திருச்சிற்றம்பலம்

---

3. கோயில் – அல்லாய்ப்பகலாய்

பண் – இந்தளம்

திருச்சிற்றம்பலம்

அல்லாய்ப் பகலாய் அருவாய்
உருவாய் ஆரா அமுதமாய்க்
கல்லால் நிழலாய் கயிலை
மலையாய் காண அருளென்று
பல்லா யிரம்பேர் பதஞ்சலிகள்
பரவ வெளிப் பட்டுச்
செல்வாய் மதில் தில்லைக்(கு)
அருளித் தேவன் ஆடுமே.

பொழிப்புரை: 'இரவாகியும் பகலாகியும் அருவாகியும் உருவாகியும் தெவிட்டாத அமுதமாகியும் (இருப்பதோடு), கல்லால மரநிழலிலிருப்பவனே! கயிலைமலையை யுடையவனே! '(யாம்) காணும்படி அருள் செய்வாயாக' என்று பதஞ்சலி முனிவர் போன்ற பல்லாயிரம் சிவனடியார்கள்

துதிக்க(த் தம்மிடத்தினின்றும்) வெளிப்பட்டு நின்று, மேகங்கள் தவழுகின்ற மதில்களையுடைய தில்லைப் பதியிலுள்ள அன்பர்களுக்கு அருள்செய்து, தேவதேவனாகிய சிவபெருமான் திருநடனம் ஆடுகின்றான் என்றவாறு.

விளக்கம்: அல்-இரவு. ஆரா-தெவிட்டாத. கல் ஆல்-கல்லாலமரம். பதஞ்சலி - பாம்புக்காலையுடைய முனிவர்; இறைவனது நடனத்தை இடைவிடாது தரிசித்துப் பக்திக் கடலில் மூழ்குபவர். தில்லையிலுள்ள சிவனடியார்கள் பல்லாயிரம்பேர்களும் பதஞ்சலி முனிவருக்கு ஒப்பாவர் என்பதாம். 'தில்லையைத் தரிசிக்க முத்தி' என்றபடி அன்பர்கள் இறைவனின் திருநடனத்தைக் கண்டு களிப்பதே முத்தியாம். செல்-மேகம். வாய் - பொருந்திய. தில்லைக்கு - தில்லையில் உள்ள அடியார்களுக்கு. ஆடும்-ஆடுகின்றான்.

ஆரா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். பரவ: வினையெச்சம். தில்லை: இடவாகுபெயர். ஆடும்: செய்யும் என்னும் முற்று. 1

அன்ன நடையார் அமுத
மொழியார் அவர்கள் பயில்தில்லைத்
தென்னன் தமிழும் இசையும்
கலந்த சிற்றம் பலந்தன்னுள்
பொன்னும் மணியும் நிரந்த
தலத்துப் புலித்தோல் பியற்கிட்டு
மின்னின் இடையாள் உமையாள்
காண விகிர்தன் ஆடுமே.

பொழிப்புரை : அன்னம் போன்ற நடையினையும் அமுதம் போன்ற இனிய சொற்களையும் உடைய மாதர்கள் வாழும் தில்லைப்பதியில் அழகிய நல்ல தமிழும் (இனிய) இசையும்

கலந்த சிற்றம்பலத்திலே பொன்னும் மணிகளும் நிறைந்த துள்ள இடத்தில், புலித்தோலைப் பிடரின்மேல் தரித்து மின்னற் கொடி போன்ற மெல்லிய இடையையுடைய உமா தேவியார் காணுமாறு விகிர்தனுகிய இறைவன் திருநடனம் ஆடுகின்ருன் என்றவாறு.

விளக்கம் : தில்லைச் சிற்றம்பலம் என முடிக்க. தென்னன் தமிழ் - அழகிய நல்ல தமிழ். தென்னன் தமிழ் - செந்தமிழுமாம். நிரந்த - நிறைந்துள்ள. பியல் - பிடர். மின் - மின்னல். விகிர்தன்-வேறுபாடுடையவன்; அல்லது(அன்பர் பொருட்டு) வெவ்வேறு வடிவங் கொள்பவன். குழந்தையின் குடல் மருந்தைச் சீரணிக்கும் வல்லமை இல்லாதது என்று தாய் மருந்தை உண்டு அதன்பயனைப் பாலின் வழியே அக்குழந்தைக்கு அளிக்கும் முறைபோல, உமா தேவியார் இறைவனின் திருநடனத்தைத் தான் முன்னர்த் தரிசித்து அதன் பயனை உயிர்கள் அனுபவிக்கச் செய்கின்ருள் என்பார், "மின்னின் இடையாள் உமையாள் காண விகிர்தன் ஆடுமே" என்ருர்: "பாலுண் குழவி பசுங்குடர் பொருதென,நோயுண் மருந்து தாயுண்டாங்கு,மன்னுயிர்த் தொகுதிக் கின்னருள் கிடைப்ப,வையமீன் றளித்த தெய்வக் கற்பின், அருள்சூற் கொண்ட ஐயரித் தடங்கட், டிருமாண் சாயல் திருந்திழை காணச், சிற்சபை பொலியத் திருநடம் புரியும், அற்புதக் கூத்த!" என்பது சிதம்பர மும்மணிக்கோவை.

பியற்கு : உருபு மயக்கம். மின்னின், இன் : சாரியை. விகிர்தன் : பெயர்ச் சொல். 2

இளமென் முலையார் எழில்மைந்
தரொடும் ஏரார் அமளிமேல்
திளையும் மாடத் திருவார்
தில்லைச் சிற்றம் பலந்தன்னுள்

வளர்பொன் மலையுள் வயிர
மலைபோல் வலக்கை கவித்துநின்(று)
அளவில் பெருமை அமரர்
போற்ற அழகன் ஆடுமே.

பொழிப்புரை: இளமையும் மென்மையும் பொருந்திய தனங்களையுடைய மகளிர் அழகிய வாலிபருடன் அழகு மிகுந்த படுக்கையின்மேலே இருந்து இன்பம் அனுபவிக்கின்ற செல்வம் நிறைந்த மாளிகை சூழ்ந்த தில்லைப்பதியிலுள்ள சிற்றம்பலத்துள் அளவற்ற பெருமையினையுடைய தேவர்கள் துதிக்க, உயர்ந்த பொன்மலையினுள் வயிரமலை இருந்ததுபோல் அழகனாகிய இறைவன் (தமது) வலக்கையினை வளைத்து நின்று ஆடுகின்றான் என்றவாறு.

விளக்கம்: 'பொன்மலையுள் வயிரமலை போல்' என்றது பொன்னம்பலத்துள் திருவெண்ணீறு பூசிய இறைவன் விளங்குவதைக் குறிப்பது. இறைவன் நடனமாட உலகம் நடைபெறும் என்பதற்கு ஏற்ப, மகளிரும் மைந்தரும் அமளியில் திளைப்பர் எனப்பட்டது. ஏர்ஆர் - அழகு நிறைந்த. அமளி - படுக்கை. திளையும் - இன்பம் அனுபவிக்கும். திருவார் - செல்வம் நிறைந்த. திருவார் என்பதைத் தில்லைக்கு ஏற்றி 'மோட்சச் செல்வம் தரும் தில்லை' என்று கூறினும் அமையும்.

அமளிமேல், மேல்: ஏழனுருபு. திளையும்: பெயரெச்சம். அழகன்: பண்புப்பெயர். 3

சந்தும் அகிலும் தழைப்பீ
லிகளும் சாதி பலவுங்கொண்(டு)
உந்தி இழியும் நிவவின்
கரைமேல் உயர்ந்த மதிற்றில்லைச்

சிந்திப் பரிய தெய்வப்
பதியுட் சிற்றம் பலந்தன்னுள்
நந்தி முழவங் கொட்ட
நட்டம் நாதன் ஆடுமே.

பொழிப்புரை: சந்தன மரங்களையும் அகில் மரங்களையும் தழைத்த மயில் தோகைகளையும் சாதிக்காய் மரம் பலா மரம் ஆகிய இவற்றையும் தள்ளிக்கொண்டு (மலைமீதிருந்து) கீழிறங்கி (ஓடி வருகின்ற) நிவவு நதியின் (தென்) கரையில் (திகழும்) உயர்ந்த மதில்கள் சூழ்ந்த நினைத்தற்கரிய தெய்வத்தன்மை பொருந்திய தில்லைப்பதியில் திகழும் திருச்சிற்றம்பலத்தினுள் நின்று, திருநந்திதேவர் மத்தளம் கொட்ட நடராசப் பெருமான் திருநடனம் ஆடுகிறான் என்றவாறு.

விளக்கம்: சந்து - சந்தனமரம். பீலி - மயில் தோகை. சாதி - சாதிக்காய் மரம். பல - பலாமரம். சாதி பலவும் - சாதிக்காய் மரம் முதலிய பல மரங்களையுமாம். உந்தி - தள்ளிக் கொண்டு. நிவவு-நிவாநதி; இது வட வெள்ளாறு ஆகும்; சிதம்பரத்திற்கு நேர் வடக்கே சுமார் 8 மைலில் வடவெள்ளாறு உள்ளது. "கௌவைக் களிற்றின் மருப்பும் பொருப்பில் கமழ்சந்தும் உந்தி நிவாவலங், கொள்தெய்வப் புனல் சூழ்ந் தழகாய தில்லை" என்பது பெரிய திருமொழி. சிந்திப்பு-நினைத்தல். நந்தி-திருநந்திதேவர்; இவர் சிலாதர முனிவரின் புதல்வர்; இறைவரது அணுக்கத்தொண்டர். முழவம்-மத்தளம். நட்டம்-நடனம்.

மதில் + தில்லை = மதிற்றில்லை: வேற்றுமைத் தொகை. உந்தி: வினையெச்சம். சிற்றம்பலம் தன்னுள்-இதில் தன்: சாரியை. 4

ஓமப் புகையும் அகிலின்
    புகையும் உயர்ந்து முகில்தோயத்
தீமெய்த் தொழிலார் மறையோர்
    மல்கு சிற்றம் பலந்தன்னுள்
வாமத்(து) எழிலார் எடுத்த
    பாதம் மழலைச் சிலம்(பு)ஆர்க்கத்
தீமெய்ச் சடைமேல் திங்கள்
    சூடித் தேவன் ஆடுமே.

பொழிப்புரை: ஓமம் செய்வதால் உண்டாகும், புகையும் (மகளிர் கூந்தலுக்கு) அகிற்கட்டையை எரிப்பதால் உண்டாகும் புகையும் மேலெழுந்து மேகங்களின் மீதுபடிய ஓமாக்கினியை வளர்க்கும் உண்மைத் தொழிலையுடைய வேதியர்கள் நிறைந்த தில்லைச் சிற்றம்பலத்தில், இடப்பக்கத்து அழகுமிக்க (அநுக்கிரகமாகிய தொழிலைச் செய்யும்) எடுத்த பாதத்தில் (குஞ்சிதபாதத்தில்) மென்மையான ஓசையையுடைய சிலம்பு ஒலிக்க,நெருப்பைப் போலச் செந்நிறமான ஒளி வீசும் சடைமேல் பிறைச்சந்திரனை அணிந்து எம்பெருமான் திருநடனம் ஆடுகின்றான் என்றவாறு.

விளக்கம்: முகில் தோய-மேகங்களின் மீது படிய. தீமெய்த்தொழிலார் மறையோர்-அக்கினி கோத்திரம், யாகம் முதலியன இடைவிடாமல் செய்யும் வேதியர்கள்; தில்லை வாழந்தணர்கள். வாமம்-இடப்பாகம். "வாமத்தொழிலார்" என்றும் பாடம்: இடப்பாகத்தில் (அனுக்கிரகமாகிய) தொழிலைச் செய்யும் என்பது பொருள். எடுத்த பாதம்-இறைவனது தூக்கிய பாதம்; குஞ்சித பாதம். மழலை-இங்கு மெல்லிசை. தீமெய்ச்சடை-செஞ்சடை.

'எடுத்த பாதம்', 'மழலைச் சிலம்பு' இந்த இரண்டு தொடர்மொழிகள்,முதலாம் இராசராசசோழனால் (கி. பி. 985-1014) தஞ்சைப் பெரிய கோயிலில் கைங்கரியங்கள் செய்வதற்கு

நியமிக்கப்பட்ட தளிச்சேரிப் பெண்டுகள் (தேவரடியார்கள்) சிலர்க்குப் பெயராய் அமைந்திருந்தன என்று ஒரு கல்வெட்டுக் கூறுகிறது.

தோய: வினையெச்சம். எடுத்த: பெயரெச்சம். மழலைச் சிலம்பு: வேற்றுமைத்தொகை. 5

குரவம் கோங்கம் குளிர்புன்னை
 கைதை குவிந்த கரைகள்மேல்
திரைவந் துலவும் தில்லை
 மல்கு சிற்றம் பலந்தன்னுள்
வரைபோல் மலிந்த மணிமண்
 டபத்து மறையோர் மகிழ்ந்தேத்த
அரவம் ஆட அனல்கை
 ஏந்தி அழகன் ஆடுமே.

பொழிப்புரை: குரவ மலரும் குளிர்ந்த புன்னை மலரும் தாழை மலரும் குவிந்து கிடக்கும் கரைகளின் மேல் (கடல்) அலைகள் வந்து உலாவப்பெற்ற தில்லைப் பதியிலே (அழகு) நிறைந்த சிற்றம்பலத்தில் மலை போல (உயர்ந்து) பொருந்திய இரத்தினமணி மண்டபத்துள் அந்தணர்கள் மகிழ்ந்து துதிக்க, (திருமேனியில் அணிந்த) பாம்புகள் ஆடவும், மழுவைக் கையில் ஏந்திக் கொண்டு அழகனாகிய எம்பெருமான் திருநடனம் ஆடுகின்றான் என்றவாறு.

விளக்கம்: கைதை-தாழை. குரவம், கோங்கம், புன்னை, கைதை-இவை நெய்தல் நிலத்திற்குரிய கருப்பொருள்களாம் திரை-(கடல்) அலைகள். வரை-மலை. மணி மண்டபம்-அழகிய ஆயிரக்கால் மண்டபமுமாம். அரவம்-பாம்பு.

குரவம், கோங்கம், அம்: சாரியைகள். திரை: ஆகு பெயர். ஆட, ஏந்தி: வினையெச்சம். 6

சித்தர் தேவர் இயக்கர்
முனிவர் தேனர் பொழில்தில்லை
அத்தா! அருளாய் அணியம்
பலவா! என்றென் றவரேத்த
முத்தும் மணியும் நிரந்த
தலத்துள் முளைவெண் மதிசூடிக்
கொத்தார் சடைகள் தாழ
நட்டம் குழகன் ஆடுமே.

பொழிப்புரை: சித்தர்களும் தேவர்களும் இயக்கர்களும் முனிவர்களும் (ஒன்று கூடி), தேன் பொருந்திய சோலைகள் சூழ்ந்த தில்லைப்பதியில் வீற்றிருக்கும் அத்தனே! அழகிய பொன்னம்பலத்தில் எழுந்தருளியவனே! (‘எங்கட்கு) அருள் புரிவாயாக’ என்று பலமுறை கூறி, அவர்கள் துதிக்க முத்துகளும் (மற்றைய) மணிகளும் (கலந்து) நிறைந்துள்ள சிற்சபையாகிய அரங்கத்துள் வெள்ளிய இளம்பிறைச் சந்திரனைத் தரித்துப் பூங்கொத்துக்கள் நிறைந்த சடைகள் தொங்க, அழகனாகிய இறைவன் திருநடனம் ஆடுகின்றான் என்றவாறு.

விளக்கம்: சித்தர்-பதினெண் கணங்களில் ஒரு பகுதி யார். இயக்கர்-இவர் தேவ சாதியில் ஒரு வகையினர்; குபேரன் உலகத்தவர். முனிவர்-உலகப்பற்றை வெறுத்த தவசிகள். அத்தன்-தந்தை; செல்வனுமாம். நிரந்த-(கலந்து) நிறைந்துள்ள. கொத்து ஆர்-பூங்கொத்துக்கள் நிறைந்த. முளைவெண்மதி-பிறைச்சந்திரன்.

அத்தா, அம்பலவா: விளிகள். சூடி-(சூட): செய்து என்னும் எச்சம் செய என் எச்சமாகப் பொருள் கொள் ளப்பட்டது. 7

அதித்த அரக்கன் நெரிய
விரலால் அடர்த்தாய்! அருளென்று
துதித்து மறையோர் வணங்கும்
தில்லைச் சிற்றம் பலந்தன்னுள்
உதித்த போழ்தில் இரவிக்
கதிர்போல் ஒளிர்மா மணிஎங்கும்
பதித்த தலத்துப் பவள
மேனிப் பரமன் ஆடுமே.

பொழிப்புரை : '(கயிலை மலையை எடுக்கும் பொருட்டு) ஆரவாரித்த இராவணன் என்னும் அரக்கன் (மலையின் கீழ் அகப்பட்டு) நெரியும்படி விரலால் ஊன்றி நெருக்கிய வனே! அருள்புரிவாய்' என்று அந்தணர்கள் (பலவாறு) துதித்து வணங்குகின்ற தில்லைச்சிற்றம்பலத்தினுள் உதய காலத்தில் தோன்றும் (இளஞ்) சூரியக்கிரணம் போல் (சிவந்த) ஒளியை (வீசும்) பெரிய இரத்தினமணிகள் எங்கும் பதிக்கப்பெற்றுள்ள அரங்கத்தில் பவளம் போன்ற (சிவந்த) திருமேனியினையுடைய மேலான எம்பெருமான் திருநடனம் ஆடுகின்றான் என்றவாறு.

விளக்கம்: அதித்த-அதிர்த்த-ஆரவாரித்த. அரக்கன்-இங்கு, இராவணன். விரலால்-கால் கட்டை விரலால். உதித்த போழ்தில் இரவிக்கதிர்-உதயகாலத்து இளஞ்சூரியக்கிரணம்; இஃது அரங்கில் பதிக்கப்பெற்ற மணிகளின் ஒளிக்கு உவமை. போழ்து-பொழுது. இரவிக் கதிர்-சூரியன் பவளமேனிப்பரமன் - செம்மேனியம்மான்: "பவளமேனியர் திகழும் நீற்றினர்" என்பது சம்பந்தர் தேவாரம்.

அதித்த, உதித்த, பதித்த, வணங்கும் : பெயரெச்சங்கள். அடர்த்தாய்: விளி. 8

மாலோ டயனும் அமரர்
பதியும் வந்து வணங்கிநின்(று)
ஆல கண்டா! அரனே!
அருளாய் என்றென் றவரேத்தச்
சேலா டும்வயல் தில்லை
மல்கு சிற்றம் பலந்தன்னுள்
பாலா டுமுடிச் சடைகள்
தாழப் பரமன் ஆடுமே.

பொழிப்புரை: திருமாலும் பிரமனும் தேவர்கள் தலைவனுகிய இந்திரனும் வந்து வணங்கி நின்றுகொண்டு, 'விடத்தைக் கண்டத்தில் உடையவனே!பாவங்களை அழிப்பவனே! (எங்களுக்கு)அருள்புரிவாய்' என்று பலமுறை கூறி, அவர்கள் துதிக்கக் கெண்டை மீன்கள் துள்ளிக் குதிக்கின்ற வயல்கள் நிறைந்த தில்லைச் சிற்றம்பலத்தினுள் நின்று, பாலினுல் அபிடேகம் செய்யப் பெற்ற திருமுடியிலுள்ள சடைகள் தொங்கி ஆட, மேலோனுகிய எம் பெருமான் திருநடனம் ஆடுகிருன் என்றவாறு.

விளக்கம்: அமரர்பதி - இந்திரன். ஆலம் - விடம். அரன் - பாவங்களை அழிப்பவன்; சிவபெருமான். சேல் - கெண்டை மீன். சேல் ஆடும் வயல் தில்லை என்றது நீர் வளம் மிக்க வயல்கள் சூழ்ந்த தில்லைப்பதி என்பதைக் காட்டும். பால் ஆடு-பால் அபிடேகம் செய்யப் பெற்ற: "பாலொடு நெய்தயிர் பலவும் ஆடுவர்" என்பது சம்பந்தர் தேவாரம். பால் ஆடு முடிச்சடைகள்-பக்கங்களில் அசைந்து ஆடுகின்ற திருமுடியிலுள்ள சடைகள் என்றலுமாம்.

ஆலகண்டா, அரனே: விளிகள். அருளாய்: முன்னிலை வினைமுற்று. தாழ: வினையெச்சம். 9

நெடிய சமணும் அறைசாக்
கியரும் நிரம்பாப் பல்கோடிச்
செடியுந் தவத்தோர் அடையாத்
தில்லைச் சிற்றம் பலந்தன்னுள்
அடிகள் அவரை ஆரூர்
நம்பி யவர்கள் இசைபாடக்
கொடியும் விடையும் உடைய
கோலக் குழகன் ஆடுமே.

பொழிப்புரை : பெரிய சமணர்களும், பேச்சில் வல்ல புத்தர்களும்; (அறிவு) நிரம்பாத பல கோடிக் கணக்கான குற்றம் பொருந்திய தவத்தைச் செய்பவர்களும் அடைய முடியாத தில்லைச் சிற்றம்பலத்தினுள் எழுந்தருளிய சுவாமி யாகிய சிவபெருமானை நம்பியாரூரராகிய சுந்தர மூர்த்தி சுவாமிகள் பண் இசையுடன் பதிகங்கள் பாட, (இடபக்) கொடியும் இடபவாகனமுங் கொண்ட அழகும் இளமையும் உடையோனுகிய சிவபெருமான் திருநடனம் ஆடுகிருன் என்றவாறு.

விளக்கம் : நெடிய - நீண்ட; பெரிய. அறைதல் - சொல்லுதல்; பேசுதல். சாக்கியர் - தேக்கமரக் காட்டில் தவம் புரிபவர்; புத்த சமயத்தினர். நிரம்பா - அறிவு நிரம்பாத; அதாவது குறைந்த அறிவினையுடைய. செடி-குற்றமாகிய செயல்கள்; இங்கு உடலுக்குத் துன்பம் விளைத்தல் முதலிய செயல்கள் : "செடித் தவம் செய்வார் சென்றுழிச் செல்லேன்" என்பது சுந்தரர் தேவாரம். ஆரூர் நம்பி-நம்பியாரூரர்; சுந்தரமூர்த்தி சுவாமிகள். இவர் திருவாரூர் தியாகராசப் பெருமானுக்கு வழி வழி அடிமை பூண்ட குடியிலே வந்தமையால் ஆரூரர் எனப்பெயர் பெற்ருர். இவர் பாட்டனுருக்கும் ஆரூரர் என்ற பெயர் இருந்ததாக வரலாற்ருல் அறியக் கிடக்கிறது. 'நம்பி' என்பது உயர் குல மரபுக்குரிய பெயர்

ஆகும்; ஆண்பாற் சிறப்புப் பெயருமாம். கொடி - இடபக் கொடி. விடை - தரும விடை; மால் விடை (விடை-இடபம்). கோலம்-அழகு. குழகன்-இளேயோன்.

நிரம்பா, அடையா : ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள். குழகன்-பண்புப்பெயர். 10

வானோர் பணிய மண்ணோர்
 ஏத்த மன்னி நடமாடும்
தேனார் பொழில்சூழ் தில்லை
 மல்கு சிற்றம் பலத்தானைத்
தூநான் மறையான் அமுத
 வாலி சொன்ன தமிழ்மாலைப்
பானேர் பாடல் பத்தும்
 பாடப் பாவ நாசமே.

பொழிப்புரை : தேவர்கள் வணங்கவும், உலகத்தவர்கள் துதிக்கவும், நிலையாகத் திருநடனம் புரிகின்ற தேன் பொருந்திய சோலைகள் சூழ்ந்த(செல்வம்)நிறைந்த தில்லைச் சிற்றம்பலத்தில் எழுந்தருளிய சிவபெருமானைத் தூய்மையான நான்கு வேதங்களை ஓதுகின்ற அந்தணர் குலத்தில் வந்த திருவாலி அமுதனார் சொன்ன பால்போலும் இனிய தமிழ் மாலைப் பாடல்கள் பத்தினையும் பாடினால் (பாடுவோரது) பாவங்கள் யாவும் அழியும் என்றவாறு.

விளக்கம் : மன்னி - நிலையாக; எப்பொழுதும். மல்கு- (செல்வம்) நிறைந்த. தூ - தூய்மை. அமுத வாலி - திருவாலியமுதனார். பால் நேர் - பாலைப்போலும் இனிய. பாட- பாடினால். பாவம்-இங்குத் தீவினைகள் முதலியன.

பால் + நேர் = பானேர். தூய்மை + நான்மறை = தூநான்மறை. 11

திருச்சிற்றம்பலம்

---

4. கோயில் - கோலமலர்*

பண் – பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

கோல மலர்நெடுங்கட்
கொவ்வைவாய்க்கொடி ஏரிடையீர்!
பாலினை இன்னமுதைப்
பரமாய பரஞ்சுடரைச்
சேலுக ளும்வயல்சூழ்
தில்லைமாநகர்ச் சிற்றம்பலத்(து)
ஏலவுடை எம்மிறையை
என்றுகொல் காண்பதுவே?

பொழிப்புரை: அழகிய செந்தாமரை மலர்போன்ற நீண்ட கண்களையும், கோவைக்கனி போன்ற வாயினையும், பூங்கொடி போன்ற அழகிய இடையையும் உடைய பெண்களே! பால்போலும் சுவையுள்ளவனை, அமுதம் போலும் இனியவனை, மேலாகிய பேரொளியுடையவனை,கெண்டை மீன்கள் துள்ளிப் பாய்கின்ற (நீர் நிறைந்த) வயல்கள் சூழ்ந்த பெருமை பொருந்திய தில்லைப்பதியிலுள்ள சிற்றம்பலத்தினுள் எழுந்தருளியுள்ள எனது சிவபெருமானை (யான்) தரிசிக்கப் பெறுவது எந்நாளோ? என்றவாறு.

விளக்கம்: கோலம்-அழகு. மலர்-செந்தாமரை; நீலோற்பல மலருமாம்.கொவ்வை-கோவைப்பழம்.வாய்-இங்குக்கீழுதடு. சேல்-கெண்டை மீன். உகளுதல்-பாய்தல். ஏலவுடை-ஏலுதலையுடைய; எழுந்தருளியுள்ள. இறைவன் இனியவன் ஆதலால் அவனைப் 'பால்' என்றும்,'அமுது' என்றும் கூறினார்: "கனியி னும்கட்டி பட்டகரும்பினும்...இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே" என்பது அப்பர் தேவாரம்.

---

* இப்பதிகம் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது.

கொடி ஏர் இடையீர்: அண்மை விளி; மகடூஉ முன்னிலையுமாம். பால், அமுது: உவமையாகு பெயர்கள். கொல்: அசை. என்று: வினு. மா: உரிச்சொல். 1

காண்பதி யான்என்றுகொல்
கதிர்மாமணி யைக்கனலை
ஆண்பெண் அருவுருவென்(று)
அறிதற்கரி தாயவனைச்
சேண்பணை மாளிகைசூழ்
தில்லைமாநகர்ச் சிற்றம்பலம்
மாண்புடை மாநடஞ்செய்
மறையோன்மலர்ப் பாதங்களே.

பொழிப்புரை: ஒளி வீசுகின்ற சிறந்த மாணிக்கத்தையொத்தவனும், நெருப்பை யொத்தவனும், ஆண் என்றும் பெண் என்றும் அருவம் என்றும் உருவம் என்றும் அறிதற்கு அருமையானவனும் (ஆகிய) உயர்ந்து பருத்த மாளிகைகள் சூழ்ந்த பெருமைவாய்ந்த தில்லைப்பதியிலுள்ள சிற்றம்பலத்தில் பெருமையுடைய அழகிய திருநடனம் புரிகின்றவனும் வேதியர்களில் (மூவாயிரவர்களில்) ஒருவனுமான நடராசப் பெருமானின் தாமரை மலர் போன்ற திருவடிகளை யான் தரிசிக்கப்பெறுவது எந்நாளோ? என்றவாறு.

விளக்கம்: கதிர்-ஒளி. மணி-மாணிக்கம். அரு-உருவமில்லது. உரு-உருவமுடையது. சேண்-உயரம். பணை-பருமை. மாண்பு-பெருமை. மறையோன்-தில்லை மூவாயிரம் அந்தணர்களில் ஒருவனுகிய நடராசப்பெருமான்.

காண்பது + யான் = காண்பதியான்; இகரம்: குற்றியலிகரம். மலர்ப்பதம்: உவமத் தொகை. 2

கள்ளவிழ் தாமரைமேற்
　　கண்(டு)அயனொடு மால்பணிய
ஒள்ளெரி யின்நடுவே
　　உருவாய்ப்பரந் தோங்கியசீர்த்
தெள்ளிய தண்பொழில்சூழ்
　　தில்லைமாநகர்ச் சிற்றம்பலத்
துள்ளெரி யாடுகின்ற
　　ஒருவனை யுணர்வரிதே.

பொழிப்புரை: தேன் ஒழுகும் தாமரைமலரின் மீது வீற்றிருக்கும் பிரமதேவனொடு திருமாலும் கண்டு வணங்க, ஒளி வீசும் அக்கினியின் நடுவே உருவம் உடையவராய்ப் பரவி உயர்ந்த சிறப்பினையுடைய, தெளிவான குளிர்ச்சி பொருந்திய சோலைகள் சூழ்ந்த பெருமை பொருந்திய தில்லைப்பதியிலுள்ள சிற்றம்பலத்திலே அழலேந்தி ஆடுகின்ற ஒப்பற்ற எம்பெருமானை அறிதல் அருமையாகும் என்றவாறு.

விளக்கம்: கள்-தேன். அயன்-பிரமதேவன். ஒள் எரி-மிக ஒளிவீசும் அக்கினித் தம்பம். தண்-குளிர்ச்சி. தங்களுக்குள் மாறுகொண்ட பிரமனும் திருமாலும் கண்டு வணங்க அக்கினிப் பிழம்பின் நடுவே பரவி நின்ற இறைவன் என்பதாம்; இவர் இலிங்கோற்பவ மூர்த்தி ஆவர்: "தாருறு தாமரை மேலயனுந் தரணி யளந்தானும், தேர்வறி யாவகை யால்இகலித் திகைத்துத் திரிந்தேத்த" என்பது சம்பந்தர் தேவாரம்.

கண்டு + அயனொடு = கண்டயனொடு. தாமரை மேல், மேல்: ஏழனுருபு. சிற்றம்பலம் + அத்து + உள் = சிற்றம்பலத்துள். உள்: ஏழனுருபு. 3

———

அரிவையோர் கூறுகந்தான்
அழகன்எழில் மால்கரியின்
உரிவைநல் உத்தரியம்
உகந்தான்உம் பரார்தம்பிரான்
புரிபவர்க் கின்னருள்செய்
புலியூர்த்திருச் சிற்றம்பலத்(து)
எரிமகிழ்ந் தாடுகின்ற
எம்பிரான்என் இறையவனே.

பொழிப்புரை: உமாதேவியாரைத் தனது இடப்பாகத்திலே வைத்து மகிழ்ந்தவனும், அழகியவனும், அழகிய பெரிய யானையின் தோலை (உரித்து) நல்ல மேலாடையாக விரும்பிப் போர்த்தவனும், தேவாதி தேவர்களுக்கெல்லாம் தலைவனும், (தன்னை) விரும்புகின்ற அடியவர்களுக்கு இனிய அருளைச் செய்கின்றவனுமான புலியூராகிய தில்லைச்சிற்றம்பலத்தில் அனலை(ஏந்தி)மகிழ்ந்து ஆனந்த தாண்டவம் ஆடுகின்ற எம்பெருமானே எனது தலைவனுவான் என்றவாறு.

விளக்கம்: அரிவையோர் கூறு உகந்தான்-இவர் அர்த்த நாரீச்சுவரமூர்த்தி ஆவர். அரிவை-உமாதேவியார். ஓர் கூறு-ஒரு பாகம்; இடப்பாகம். மால் கரி-மத மயக்கமுடைய யானையுமாம். உரிவை-தோல். உத்தரியம்-அங்கவத்திரம்; மேலாடை. உம்பர்-தேவர். தம்பிரான்-தமக்குத் தலைவன் இல்லாதவன்; தானே தலைவன்; சிவபெருமான். புரிபவர்-விரும்புபவர். எரி - அனல்; மழு. இறைவன் - எல்லாப் பொருள்களிலும் தங்கியிருப்பவன்; கடவுள்.

அழகன்: பண்புப் பெயர். உரிவை; (உரிக்கப்படுவது) காரணப் பெயர். உம்பரார்: இடவாகு பெயர். 4

இறைவனை என்கதியை
என்னுள்ளேஉயிர்ப் பாகிநின்ற
மறைவனை மண்ணும்விண்ணும்
மலிவான்சுட ராய்மலிந்த
சிறையணி வண்டறையுந்
தில்லைமாநகர்ச் சிற்றம்பலம்
நிறையணி யாம்இறையை
நினைத்தேன்இனிப் போக்குவனே.

பொழிப்புரை: (எனது) கடவுளை, எனக்குப் புகலிடமாக இருப்பவனை, என் உடம்பினுள் சுவாசமாகி நின்று மறைந்துள்ளவனை, பூமியிலும் வானிலும் நிறைந்த மேலான ஒளியாய்(இருப்பவனை), பெருகித் தோன்றிய சிறகுகளையுடைய அழகிய வண்டுகள் ஒலிக்கின்ற சிறந்த தில்லைப்பதியிலுள்ள சிற்றம்பலத்தில் நிறைந்த பேரழகாய் இருக்கும் சிவபெருமானை (நான் இடைவிடாமல்) தியானிக்கின்றேன்; (என் மனத்திலே வந்து தோன்றிய அவனை) இனிப் போக விடுவேனோ? (விடமாட்டேன்) என்றவாறு.

விளக்கம்: கதி-புகலிடம். மறைவன்-மறைந்துள்ளவன்; வேதவடிவானவனுமாம். உயிர்ப்பு-சுவாசம். என்னுள்ளே உயிர்ப்பாகி நின்ற மறைவனை: "என்னுளே உயிர்ப்பாய்ப் புறம்போந்துபுக் கென்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே" என்பது அப்பர் தேவாரம்.

கதி: ஆகு பெயர். நினைத்தேன்: தன்மை ஒருமை வினைமுற்று. போக்குவனே, ஏ: எதிர்மறை. 5

நினைத்தேன்; இனிப்போக்குவனோ?
நிமலத்திரளை நினைப்பார்
மனத்தி னுளேயிருந்த
மணியைமணி மாணிக்கத்தைக்

கனைத்திழி யுங்கழனிக்
கனகங்கதிர் ஒண்பவளம்
சினத்தொடு வந்(து)எறியுந்
தில்லைமாநகர்க் கூத்தனையே.

பொழிப்புரை: பரிசுத்தமான குவியலாய் விளங்குபவனை, (இடைவிடாது) நினைப்பவர் மனத்தினுள்ளே வீற்றிருக்கும் இரத்தினமணி போன்றவனை, அழகிய மாணிக்கம் போலத் திகழ்பவனை, வயல்களில் சப்தமிட்டுக்கொண்டு பாயும் (நீரானது) பொன்னையும் ஒளிவீசும் சிறந்த பவளத்தையும் கோபத்தோடு வந்து (எறிவதுபோல்) வீசி எறிகின்ற சிறந்த தில்லைப்பதியில் எழுந்தருளிய நடராசப் பெருமானை (நான் இடைவிடாமல்) நினைக்கின்றேன்; இனி (அவனை என் மனத்தினின்றும்) போக விடுவேனோ? (விடமாட்டேன்) என்றவாறு.

விளக்கம்: நிமலம்-பரிசுத்தம்; மாசின்மை. திரள்-திரட்சி. மணி-அழகு. கனைத்தல்-ஒலித்தல். கழனி-வயல். கனகம்-பொன். மாணிக்கம்-இங்கு இறைவனது திருமேனியின் செந்நிறத்திற்கு உவமை: "மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே" என்பது சுந்தரர் தேவாரம். "கனைத்திழியும்........எறியும் தில்லை"-இவ்வடிகள் தில்லைப்பதியின் வருணனை. தில்லைக் கூத்தன்-நடராசப்பெருமான்.

இழியும்: பெயரெச்சம். போக்குவனோ, ஓ: எதிர்மறை ஓகாரம். 6

கூத்தனை வானவர்தம்
கொழுந்தைக்கொழுந் தாயெழுந்த
மூத்தனை மூவுருவின்
முதலைமுத லாகிநின்ற

ஆத்தனைத் தான்படுக்கும்
அந்தணர்தில்லை அம்பலத்துள்
ஏத்தநின் ருடுகின்ற
எம்பிரானடி சேர்வன்கொலோ?

பொழிப்புரை: திருநடனம் செய்கின்றவனும், தேவர்களின் தலைவனும், இளையோனுய் (யாவர்க்கும்) முன்னே எழுந்து நின்ற பெரியோனும், பிரமன் திருமால் உருத்திரன் என்ற மூவருக்கும் முதல்வனுய் நின்றவனும், முதன்மையாக நின்ற பசுத்தன்மையை (தற்போதத்தை) ஒழிக்கும் பொருட்டு (யாகாதிகளைச் செய்யும்) (மூவாயிரம்) அந்தணர்கள் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலத்தில் (மெய்யன்பர்கள்) துதிக்க நின்று திருநடனஞ் செய்கின்ற எமது தலைவனும் ஆகிய கூத்தப் பெருமானின் திருவடிகளை (அடியவன் எப்பொழுது) அடை.வேனே? என்றவாறு.

விளக்கம்: கொழுந்து - செடிகொடிகளின் நுனியில் உள்ள தளிர்; இங்கு முதன்மை. மூத்தன் - யாவர்க்கும் முன்னே தோன்றியவன்: "முளைத்தானை யெல்லார்க்கும் முன்னே தோன்றி" என்பது அப்பர்தேவாரம். மூவுரு - பிரமன் திருமால், உருத்திரன் என்ற மூவர். ஆத்தனை-ஆ த(ன்)னை-பசுத்தன்மையை (தற்போதத்தை). படுத்தல் - நீக்குதல். அந்தணர்-தில்லைவாழந்தணர். ஏத்தல்-துதித்தல்.

தம், தான்: சாரியைகள். கொலோ, ஓ: ஐயம். கொல்: அசை. முதலாகி நின்ற எம்பிரான் எனக் கூட்டுக. 7

சேர்வன்கொலோ? அன்னைமீர்!
திகழும்மலர்ப் பாதங்களை
ஆர்வங்கொளத் தழுவி
அணிநீ(று)என் முலைக்கணியச்

சீர்வங்கம் வந்தணவுந்
தில்லைமாநகர்ச் சிற்றம்பலத்(து)
ஏர்வங்கை மான்மறியன்
எம்பிரான்என்பால் நேசனையே.

பொழிப்புரை : தாய்மார்களே! சிறந்த மரக்கலங்கள் வந்து சேரும் (கடற்கரைப் பகுதியினைக் கொண்ட) பெருமை பொருந்திய தில்லைப்பதியிலுள்ள சிற்றம்பலத்தில் (எழுந்தருளியவனும்),அழகிய அகங்கையில் மான்கன்றைப் பிடித்தவனும், எம்மை ஆண்டவனும், என்னிடம் அன்புடையவனுமான இறைவனது விளங்குகின்ற தாமரை மலர் போன்ற பாதங்களை (யான்) அன்பு பெருகத் தழுவி, (அவர் அணிந்துள்ள திருநீறு என் முலைகள்மீது படியும் பொருட்டு (அவரை) அடையும்படியான பேறு பெறுவேனோ? என்றவாறு.

விளக்கம்: ஆர்வம் - அன்பு. அணி - அணிந்துள்ள. நீறு - விபூதி. அணிய - அணியும் பொருட்டு. வங்கம்-மரக்கலம். அணவும்-சேரும். தில்லைநகர், நெய்தல் நிலச் சார்பும் உடையதாம். ஏர்வு-அழகிய. அங்கை-அகங்கை; அழகிய கையுமாம். மான்மறி-மான்கன்று; பெண்மானுமாம். எம்பிரான்-எம்மை ஆண்டவன்; எமது தலைவனுமாம். "என்போல் நேசனையே" என்றும், "என்போ நேசனையே" என்றும் பாடம்.

இது தலைவியிரங்கல். அன்னைமீர் : விளி (இது நற்றுயையும் செவிலித்தாயையும் குறிப்பது.) சேர்வன்: தன்மை யொருமை வினைமுற்று. 8

நேசமு டையவர்கள்
நெஞ்சுளேயிடங் கொண்டிருந்த
காய்சின மால்விடையூர்
கண்ணுதலைக் காமருசீர்த்

தேசமிகு புகழோர்
தில்லைமாநகர்ச் சிற்றம்பலத்(து)
ஈசனை எவ்வுயிர்க்கும்
எம்மிறைவன்என்(று) ஏத்துவனே.

பொழிப்புரை: (சிவ) பக்தியுடையவர்களது மனத்தினுள்ளே குடி கொண்டு வீற்றிருக்கின்ற, மிக்க கோபமுடைய பெரிய இடபத்தின்மீது எழுந்தருளிச் செல்கின்ற நெற்றிக்கண்ணை உடையவனும், அழகும் சிறப்பும் வாய்ந்த நாட்டில் மிகுந்த புகழைப் பெற்ற பெரியோர்கள் வாழ்கின்ற சிறந்த தில்லைப்பதியில் எழுந்தருளிய ஈசனும், எல்லாவுயிர்களுக்கும் (தலைவனுமாகிய கடவுள்) எமது சிவபெருமானே என்று (யான்) துதிப்பேன் என்றவாறு.

விளக்கம்: நேசம் - அன்பு; பக்தி. நெஞ்சு - மனம். காய்சினம் - மிக்க கோபம்; கொல்லும் கோபமுமாம். மால்-பெரிய; திருமாலுமாம். விடை - இடபம். காமரு சீர் - அழகும் சிறப்பும் வாய்ந்த. தேசம் - நாடு. ஈசன்-ஆண்டவன். ஏத்துவன் - துதிப்பன்.

புகழோர்: வினையாலணையும் பெயர். ஏத்துவன்: தன்மை ஒருமை வினைமுற்று. 9

இறைவனை ஏத்துகின்ற
இளையாள்மொழி இன்றமிழால்
மறைவல நாவலர்கள்
மகிழ்ந்தேத்துசிற் றம்பலத்தை
அறைசெந்நெல் வான்கரும்பின்
அணியாலைகள் சூழ்மயிலை
மறைவல ஆலிசொல்லை
மகிழ்ந்தேத்துக வானெளிதே.

பொழிப்புரை : சிவபெருமானைத் துதிக்கின்ற (காதல் கொண்ட) இளம்பெண்ணினது சொற்கள்போன்று இனிய தமிழ்ப்பாடல்களால், வேதங்களில் வல்ல புலவர்களாகிய வேதியர்கள் மகிழ்ந்து துதிக்கின்ற (தில்லைச்) சிற்றம் பலத்தை(ப் புகழ்ந்து), (உழவர்களின் ஆரவார ஒலி) ஒலிக் கின்ற செந்நெல் வயல்களாலும் பெரிய கரும்புகளை அறைக்கும் அழகிய ஆலைகளாலும் சூழப்பெற்றுள்ள திரு மயிலையில் வாழும் வேதங்களில் வல்ல (அந்தணராகிய) திருவாலி அமுதனார் சொன்ன சொல்லால் மகிழ்ந்து துதி யுங்கள்; (துதித்தால்) சிவலோகம் எளிதிற் கிடைக்கும் என்றவாறு.

விளக்கம்: இளையாள் மொழி-தலைவி கூற்றாக. இளை யாள்-இளம்பெண். இன் தமிழ்-இனிய தமிழ்ப்பாடல்கள். மறை-வேதம். நாவலர்-நாவில் வல்லவர்; இங்கு அந்த ணர்கள். வான்-பெரிய. மயிலை-மாயூரம். அறை செந்நெல் வான் கரும்பின் அணியாலைகள் சூழ் மயிலை-இவ்வடி திரு மயிலை மருதநிலச் சிறப்புடையது என்பதைக் காட்டும். ஆலி - திருவாலிய முதனார்; இவர் அந்தணர் என்பதை, "மறைவல" என்ற அடைமொழி காட்டுகின்றது. சொல்லை- சொன்ன சொல்லால். வான்-இங்குச் சிவலோகம்.

சொல்லை: உருபு மயக்கம். ஏத்துக : வியங்கோள் வினைமுற்று. 10

திருச்சிற்றம்பலம்

திருவாலியமுதனார் அருளிய திருவிசைப்பா தெளிவுரை

முற்றிற்று

—

உ

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை

8. புருடோத்தம நம்பி

அருளிய

திருவிசைப்பா

[தெளிவுரை]

1. கோயில் – வாரணி*

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

வாரணி நறுமலர் வண்டு கிண்டு
பஞ்சமம் செண்பக மாலைமாலை
வாரணி வனமுலை மெலியும் வண்ணம்
வந்து வந்திவைநம்மை மயக்குமாலோ;
சீரணி மணிதிகழ் மாடம் ஓங்கு
தில்லையம்பலத் தெங்கள் செல்வன்வாரான்;
ஆரெனை அருள்புரிந்(து) அஞ்சல் என்பார்?
ஆவியின் பரமென்றன் ஆதரவே.

பொழிப்புரை: வண்டுகள் கிளருகின்ற (தேன்) ஒழுகுகின்ற அழகிய நறுமணமுள்ள மலர்களும், அழகிய செண்பக மலர் மாலையும், மாலைக்காலமும் (ஆகிய) இவை, கச்சணிந்த அழகிய (என்) முலைகள் மெலிந்து போகுமாறு

* இப்பதிகம் தலைவி கூற்றாக அமைந்துள்ளது; அந்தாதித் தொடையாகவும் வருவது.

பலகால் வந்து நம்மை மயங்கச் செய்யும்; சிறப்பும் அழகும் பொருந்திய இரத்தினங்கள் (பதிக்கப்பெற்றுத்) திகழும் மாளிகைகள் உயர்ந்து விளங்கும் தில்லைச்சிற்றம்பலத்திலுள்ள எங்கள் செல்வனுகிய கூத்தப்பெருமான் (அருள்புரிய) வரமாட்டான்; (என்மீது) கருணை கொண்டு என்னை அஞ்சாதே என்று சொல்கின்றவர் யாவர் உள்ளனர்? (ஒருவரும் இல்லை); என் உயிர்க்குப் பாதுகாப்பாய் உள்ளது எனது அன்பு ஒன்றேதான் என்றவாறு.

விளக்கம்: வார் அணி நறுமலர் கிண்டு வண்டு பஞ்சமம்-(தேன்) ஒழுகும் அழகிய நறுமணமுள்ள மலர்களில் கிளருகின்ற வண்டுகள் (பாடும்) பஞ்சமப் பண்ணும் என்று கூறலுமாம். வார்தல்-ஒழுகுதல். பஞ்சமம்-அழகு; ஒருபண். மாலை-மாலைக்காலம். வார்-கச்சு. வனம்-அழகு. மணி-இரத்தினங்கள் (பதிக்கப்பெற்று). ஆவி-உயிர். பரம்-சார்பு; துணை; பாதுகாப்பு. ஆதரவு-அன்பு. "ஆவியின் பரமன்றெனுதரவே" என்று பாடங்கொண்டு, என் உயிர்க்குக் காவலாய் உள்ளது தில்லை மன்றின்கண் எனக்கு உள்ளது ஆகிய அன்பு ஒன்றே என்றலுமாம்.

ஆல், ஓ: அசைகள். வாரான்: எதிர்மறை வினைமுற்று. ஆர்: யார் என்பதன் மரூஉ. மயக்கும்: செய்யும் என்னும் முற்று. 1

ஆவியின் பரம்என்றன் ஆதரவும்
 அருவினை யேனைவிட்(டு) அம்மஅம்ம!
பாவிவன் மனமிது பையவேபோய்ப்
 பனிமதிச் சடையான் பாலதாலோ;
நீவியும் நெகிழ்ச்சியும் நிறையழிவும்
 நெஞ்சமும் தஞ்சமி லாமையாலே
ஆவியின் வருத்தம் இதாரறிவார்?
 அம்பலத்(து) அருள்நடம் ஆடுவானே!

பொழிப்புரை: தில்லைச் சிற்றம்பலத்தில் (ஆன்மாக்களுக்கு) அருள்புரியும் பொருட்டு ஆனந்த தாண்டவம் ஆடுகின்ற எம்பெருமானே! (என்) உயிர்க்குப் பாதுகாப்பாய் இருக்கும் எனது அன்பும், கொடுவினையேனாகிய என்னை விட்டுவிட்டு நீங்கப் பாவியேனுடைய வன்மையான மனமானது மெல்லவே போய்க்குளிர்ச்சி பொருந்திய சந்திரனைத் தரித்த சடையையுடைய சிவபெருமானிடத்துச் சேர்கின்றது; இஃது என்ன அதிசயம்! (வேறு) ஆதரவு ஒன்றும் இல்லாமையால் உண்டான சோர்வும், மன உருக்கமும், மன உறுதியின் அழிவும், மனத்தின் தன்மையும், உயிருக்குண்டான வருத்தமும் ஆகிய இவற்றை யார் அறிவார்கள்? என்றவாறு.

விளக்கம்: பரம்-பாதுகாப்பு. ஆதரவு - அன்பு. பாவி-பாவியேன். வல்-வன்மை. பைய-மெதுவாக. பனி-குளிர்ச்சி. நீவி - சோர்வு. நிறை - மனவுறுதி. தஞ்சம் - ஆதரவு. நெகிழ்ச்சி-மன உருக்கம். ஆவியின் வருத்தம்-உயிர்க்கு உண்டாகிய துன்பம்.

அம்ம அம்ம: வியப்பிடைச்சொல்; அடுக்குத்தொடர். ஆல், ஓ: அசைகள். பாலது: குறிப்பு வினைமுற்று. ஆர்: வினா. ஆடுவானே: விளி. "அருநடம்" என்றும் பாடம். 2

அம்பலத் தருள்நடம் ஆடவேயும்
யாதுகொல் விளைவதென்(று) அஞ்சிநெஞ்சம்
உம்பர்கள் வன்பழி யாளர்முன்னே
ஊட்டினர் நஞ்சைஎன் றேயும்உய்யேன்;
வன்பல படையுடைப் பூதஞ்சூழ
வானவர் கணங்களை மாற்றியாங்கே
என்பெரும் பயலைமை தீரும்வண்ணம்
எழுந்தரு ளாய்எங்கள் வீதியூடே.

பொழிப்புரை : (எம்பெருமானே! நீ) தில்லையம்பலத்தில் (ஆன்மாக்களுக்கு) அருள் வழங்கும் ஆனந்த தாண்டவத்தைச் செய்து கொண்டிருக்கக் கண்டும், முற்காலத்திலே தேவர்களாகிய வலிய பழிகாரர்கள் விடத்தை உண்ணச் செய்தார்கள் என்றும், என்ன (தீங்கு) விளையுமோ என்றும் (நினைத்து), மனம் அச்சமடைந்து மிக்க துன்பத்தினால்(நான்)பிழைத்திரேன்;(ஆதலால்) (விடத்தை உண்ணச் செய்த) தேவர் கூட்டங்களை அங்கேயே அழித்து எனது (உடலில்) மிகுதியாக (அமைந்த) பசலைத் தன்மை நீங்குமாறு எங்கள் வீதியின் வழியே, வலிய பல படைக்கலங்களை ஏந்திய பூதங்கள் சூழ (த்திருவுலாவாக) எழுந்தருள்வாயாக என்றவாறு.

விளக்கம்: இது தலைவி இரங்கல் துறை. இறைவன் திருநடனத்தைக் கண்ட தலைவிக்குக் காதல் மிகுந்து உடலில் பசலை உண்டாயிற்று; அது தீரத் தமது வீதிக்கு எழுந்தருளுமாறு வேண்டுகின்றாள் என்பதாம். உம்பர்கள் - தேவர்கள். முன்னே-பாற்கடல் கடைந்த அக்காலத்திலே. ஊட்டினர்-உண்ணச் செய்தனர். உய்யேன்-பிழைத்திரேன். வன்பல படை-பற்பல வலிமை வாய்ந்த ஆயுதங்கள். பூதம்-பூத கணங்கள். மாற்றி-அழித்து. பயலைமை-பசலை; இது, முகம் மார்பு முதலிய இடங்களில் தோன்றும் பசுமை நிறமான (பொன்னிறமான) தேமல்; இது காதலால் பிரிவின்கண் நேரும் நோய்களில் ஒன்று. எங்கள் என்பது தன்னையுள்ளிட்ட பெண்களையும் குறித்தலாகும்.

கொல்: அசை. உய்யேன்: எதிர்மறை வினைமுற்று. பயலை: பசலை என்பதன் போலி. பயலைமை: மை பகுதிப் பொருள் விகுதி. வீதியூடு, ஊடு: ஏழனுருபு. ஆடுவை எனினும் என்பது ஆடவேயும் என மருவி நின்றது. 3

எழுந்தருளாய் எங்கள் வீதியூடே
ஏதமில் முனிவரோ(டு) எழுந்தஞானக்
கொழுந்தது வாகிய கூத்தனே!நின்
குழையணி காதினில் மாத்திரையும்
செழுந்தட மலர்புரை கண்கள்மூன்றும்
செங்கனி வாயும்என் சிந்தைவௌவ
அழுந்தும்என் ஆருயிர்க்(கு) என்செய்கேனோ?
அரும்புனல் அலமருஞ் சடையினானே!

பொழிப்புரை: அருமையான கங்கை நீர் ததும்பும் சடையினையுடைய கங்காதர மூர்த்தியே! எங்கள் வீதிவழியே பவனி வருவாயாக; குற்றமற்ற முனிவர்களிடத்திலே எழுந்த மெய்ஞ்ஞானக் கொழுந்தாகிய தில்லைக் கூத்தப் பெருமானே! குழைஎன்னும் ஆபரணத்தை அணிந்த உனது காதிலுள்ள மாத்திரை என்னும் அணிகலனும்,(நீர் நிறைந்த) செழுமையான குளத்தினில் தோன்றிய தாமரைமலரைஒத்த மூன்று கண்களும், சிவந்த கோவைக்கனி போன்ற திருவாயும் என் மனத்தைக் கொள்ளை கொள்வதால் (உயிர் துன்பத்தில்) ஆழும்; (ஆதலால்) என் அரியஉயிர்க்கு (நேர்ந்த துன்பத்தைப் போக்கநான்) என்னசெய்வேன்? என்றவாறு.

விளக்கம்: ஏதம்-குற்றம்; அது காமம், வெகுளி, மயக்கம் என மூன்று. குழை-காதணி. மாத்திரை-ஒரு விதமான காதணி. தடம்-நீர்நிலை; குளம். செழும் தடம் மலர்-செழித்த பெரிய தாமரை மலர் என்றலுமாம். கண்கள் மூன்று-வலக் கண், இடக்கண், நெற்றிக் கண் என மூன்று. அழுந்தும்-(உயிர் துன்பத்தில்) ஆழும். புனல்-கங்கை நீர். அலமரும்-ததும்பும்.

முனிவரோடு: உருபு மயக்கம். கொழுந்தது, அது: பகுதிப் பொருள் விகுதி. அழுந்தும்: செய்யும் என்னும் முற்று. 4

அரும்புனல் அலமருஞ் சடையினுனை
அமரர்கள் அடிபணிந்(து) அரற்றஅந்நாள்
பெரும்புரம் எரிசெய்த சிலையின்வார்த்தை
பேசவும் நையும்;என் பேதைநெஞ்சம்
கருந்தட மலர்புரை கண்ட!வண்டார்
காரிகை யார்முன்(பு)என் பெண்மைதோற்றேன்;
திருந்திய மலரடி நசையினுலே
தில்லையம் பலத்(து)எங்கள் தேவதேவே!

பொழிப்புரை: தில்லையம்பலத்தில் எழுந்தருளிய எங்கள் தேவ தேவனே! பெரிய தடாகத்தில் (பூத்த கருங்குவளை) மலரை ஒத்த (கரிய) கண்டத்தையுடையவனே! அரிய கங்கை நீர் ததும்புகின்ற சடையினையுடைய உன்னைத் தேவர்கள் முற்காலத்தில் அடிபணிந்து (அசுரர்களின் கொடுமைக்கு ஆற்ருது) அழுது (முறையிடத்) திரி புரத்தை எரித்தற்கு (ஏந்திய மேருமலையாகிய உனது) வில்லை(ப் போன்ற புருவத்தின் அழகினது) புகழை (நான்) பேசவும் எனது பேதை மனம் வருந்தும்; திருத்தமாக அமைந்த (உனது) தாமரைமலர் போன்ற திருவடி மீது கொண்ட விருப்பத்தினுல், வளையலை அணிந்த பெண்களின் முன்பு எனது பெண்மைக் குணங்களை (நான்) இழந்து விட்டேன் என்றவாறு.

விளக்கம் : அரற்ற-அழுது முறையிட. பெரும்புரம்-பெரிய மும்மதில்கள் பொருந்திய திரிபுரம். சிலை-(மேருமலை யாகிய) வில்; இங்குப் புருவத்தைக் குறித்தது. வார்த்தை-புகழ். நையும்-வருந்தும். கரும் தடம்-பெரிய தடாகம். மலர்-இங்குக் கருங்குவளை. கண்டம்-கழுத்து. மலர்புரை கண்ட-நீலகண்டனே. வண்டார் (வண்டு + ஆர்) - வளையல்கள் பொருந்திய; (வண் + தார்) - வளமான பூ மாலையை அணிந்த என்றலுமாம். பெண்மை-பெண்மைக்

குணங்கள்; அவை, நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்பன. நசை-விருப்பம். மக்களை நோக்க இந்திரனும் அவனுக்கு உட்பட்டவரும் தேவராதல் போல அத்தேவரை நோக்கச் சிவபெருமான் தேவ தேவன் ஆவன். தேவதேவன் மகாதேவன் எனவும் பெயர் பெறுவன்.

கண்ட, தேவதேவே: விளிகள். தோற்றேன்: தன்மை ஒருமை வினைமுற்று. மலரடி-உவமத்தொகை. நையும்: செய்யும் என்னும் முற்று. 5

தில்லையம் பலத்தெங்கள் தேவதேவைத்
தேறிய அந்தணர் சிந்தைசெய்யும்
எல்லைய தாகிய எழில்கொள்சோதி!
என்னுயிர் காவல்கொண் டிருந்தஎந்தாய்!
பல்லையார் பசுந்தலை யோ(டு)இடறிப்
பாதமென் மலரடி நோவநீபோய்
அல்லினில் அருநடம் ஆடில்எங்கள்
ஆருயிர் காவலிங்(கு) அரிதுதானே.

பொழிப்புரை: தில்லை அம்பலத்தின்கண் எழுந்தருளிய எங்கள் தேவ தேவனை (மெய்யாகிய இறைவன் என்று) மனம் தெளிந்த (மூவாயிரம்) அந்தணர்கள் (இடைவிடாமல்) நினைக்கின்ற அளவினையுடையதாகிய அழகைக் கொண்ட ஒளிவடிவமானவனே! எனது உயிரைப் பாதுகாத்தலாகிய தொழிலை மேற்கொண்டிருக்கும் எனது தந்தையே! பற்களோடுகூடிய பசுமையாகிய தலையோட்டை ஏந்திக் கால் தடுக்கி, உனது மெல்லிய தாமரைமலர் போன்ற திருவடி வருந்துமாறு நீ சுடுகாட்டிற்குச் சென்று இருளினில் அருமையாகிய திருநடனத்தை ஆடினால் இவ்விடத்தில் எங்களுடைய அரிய உயிரைக் காப்பாற்றுவது அரிதே ஆகும் என்றவாறு.

விளக்கம் : தேறிய அந்தணர் - வேதாகம சாத்திரங்களை நன்கு ஆராய்ந்து சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்று மனம் தெளிந்த தில்லைவாழந்தணர் மூவாயிரவர். எல்லை - அளவு. பல்லையார்-பற்களுடன் கூடிய. பசுந்தலை- இது பசுமையான பிரம கபாலம். பாதம் இடறி - கால் தடுக்கி. நோவ - வருந்துமாறு. அல் - இருள். காவல்- காப்பது.

சோதி, எந்தாய் : விளிகள். என் தந்தை என்பது எந்தை என மருவிற்று. பின்னர் எந்தாய் என விளியேற்றது. பசுந்தலை:பண்புத் தொகை. மலரடி:உவமத் தொகை. அரிது : குறிப்பு வினை முற்று. காவல் : தொழிற்பெயர். 6

ஆருயிர் காவலிங்(கு) அருமையாலே
அந்தணர் மதலைநின் அடிபணியக்
கூர்நுனை வேற்படைக் கூற்றஞ்சாயக்
குரைகழல் பணிகொள மலைந்ததென்றால்
ஆரினி? அமரர்கள் குறைவிலாதார்;
அவரவர் படுதுயர் களையநின்ற
சீருயி ரே!எங்கள் தில்லைவாணா!
சேயிழை யார்க்(கு)இனி வாழ்வரிதே.

பொழிப்புரை : தில்லைப்பதியில் வாழ்கின்ற எங்கள் பெருமானே! இவ்வுலகத்தில் (தனது) அரிய உயிரைக் காப்பாற்றுதல் மிக அரியதானபடியினாலே, மிருகண்டு முனிவரின் புதல்வரான மார்க்கண்டேயர் (உனது) திருவடிகளைப் பூசித்து வணங்கக் கூரிய நுனி பொருந்திய சூலப் படையினை ஏந்திய இயமன் கீழே விழுமாறு ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த (உனது) திருவடிகள் வழிபடுதலாகிய பணியை ஏற்றுக் கொள்ளும் பொருட்டு உதைத்தது

என்ருல், (உன்னைப்போல் உயிரைப் பாதுகாப்பவர்) இனி வேறு யார் உளர்? (ஒருவருமிலர்); தேவர்களும் குறை நீங்கியவர்கள் ஆனுர்கள்; அவரவர்கள் அடைகின்ற துன்பங்களைப் போக்குவதற்காக முற்பட்டு நின்ற சிறந்த உயிர்க்குயிரானவரே! மாதர்களுக்கு இனி (க்காதலால் மாய்வதே அன்றி) உயிர் வாழ்தல் அரிதாகும் என்றவாறு.

விளக்கம் : அந்தணர் - இங்கு மிருகண்டு முனிவர்; இவர் மிருக கண்டுய முனிவரின் புதல்வர். அந்தணர் மதலை - அந்தணச் சிறுவன் என்றலுமாம்; அவன் மார்க்கண்டேயன். வேல் - இங்கு ஆயுதப் பொது; சூலப்படை : இது மூன்று கூர்நுனியினையுடைய ஆயுதம். கூற்று - உடலையும் உயிரையும் வேறு பிரிப்பவன்; இயமன். குரை கழல்- ஒலிக்கின்ற வீரக்கழல் அணிந்த பாதம். மலைந்தது-உதைத்தது. களைதல் - போக்குதல். தில்லைவாணன் - தில்லையில் வாழ்பவன்; நடராசப்பெருமான். சேயிழையார் - செம்மையான ஆபரணங்களை அணிந்த பெண்கள்.

கூற்று + அம் = கூற்றம். அம் : சாரியை. கூற்று : காரணப் பெயர். கழல்: தானியாகு பெயர். வாழ் + நன் = வாணன். வாணு, சீருயிரே:விளிகள். 7

சேயிழை யார்க்கினி வாழ்வரிது;
    திருச்சிற்றம் பலத்தெங்கள் செல்வனே!நீ
தாயினும் மிகநல்ல என்றடைந்தேன்;
    தனிமையை நினைகிலை; சங்கரா!உன்
பாயிரும் புலியத ளின்னுடையும்
    பையமே லெடுத்தபொற் பாதமுங்கண்(டு)
ஏயிவள் இழந்தது சங்கம்ஆவா!
    எங்களை ஆளுடை ஈசனேயோ.

பொழிப்புரை : (தில்லைத்) திருச்சிற்றம்பலத்தில் எழுந் தருளிய ஞானச் செல்வமுடைய எங்கள் பெருமானே! எங் களை அடிமையாக உடைய கடவுளே! மாதர்களுக்கு இனி (உயிருடன்) வாழ்தல் அரிதாகும்; நீ தாயைக் காட்டிலும் நன்மை செய்வாய் என்று (நான் உன்னைத் தஞ்சமாக) அடைந்தேன்; (பெண்களின்) தனிமையை (நீ) எண்ணிப் பார்க்கின்றாயில்லை; சுகத்தைச் செய்யும் இறைவனே! பாயும் தன்மையுடைய பெரிய புலியின் தோலாகிய உனது ஆடை யையும் மெல்ல மேலே தூக்கிய அழகிய குஞ்சித பாதத் தையும் கண்டு (காதல் மிகுதியால்) ஐயோ! சங்கினாலாகிய கைவளையல்களை இவள் இழந்தாள் என்றவாறு.

விளக்கம் : அரிது - இங்கு இறைவன் அருள் புரியாத தனால் அவன் மீது கொண்ட மையலால் பெண்கள் உயிர் வாழ்தல் அருமையானதாம். செல்வன்-ஞானச் செல்வம் உடையவன்; இறைவன்: “சென்றடையாத திருவுடை யானை” என்பது சம்பந்தர் தேவாரம். தாய் அன்பிற் சிறந் தவள் ஆதலால், ‘தாயினும்’ என்றார். தனிமை-காதலனோடு கூடி இராது தனித் திருக்கும் நிலைமை. சங்கரன் - சுகத் தைத் தருபவன்; சிவபெருமான். எடுத்த பொற்பாதம் - தூக்கிய அழகிய பாதம்; குஞ்சிதபாதம்: “தில்லையுட் சிற்றம் பலத்துநட்டம், ஆட எடுத்திட்ட பாதமன் றேநம்மை ஆட்கொண்டதே” என்பது அப்பர் தேவாரம். அதள் - தோல். உடை - ஆடை. பைய - மெல்ல. சங்கம்- சங்குவளையல். ஆவா - ஐயோ. ஆள் - அடிமை.

செல்வனே, சங்கரா, ஈசனே: விளிகள். ஓ:அசை. அதள் (இன்) உடை, இங்கு இன் : அல்வழிச்சாரியை. தாயின், இன் : ஐந்தாம் வேற்றுமை எல்லைப் பொருள். ஆவா : இரக்கக் குறிப்பு இடைச்சொல். 8

எங்களை ஆளுடை ஈசனேயோ
இளமுலை முகம்நெக முயங்கிநின்பொற்
பங்கயம் புரைமுகம் நோக்கிநோக்கிப்
பனிமதி நிலவதென் மேற்படரச்
செங்கயல் புரைகண்ணி மார்கள்முன்னே
திருச்சிற்றம் பலமுட னேபுகுந்து
அங்குன பணிபல செய்துநாளும்
அருள்பெறின் அகலிடத் திருக்கலாமே.

பொழிப்புரை: எங்களை அடிமையாகக் கொண்ட இறைவனே! (எனது) இளமையாகிய தனங்களின் முன்பக்கம் அழுந்த (உன்னை) அணைந்து, உனது அழகிய தாமரை மலரை ஒத்த திருமுகத்தைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்து, (உனது) சடையின் மேலுள்ள குளிர்ச்சியான (பிறைச்) சந்திரனின் ஒளி என்மேல் பரவச், செவ்விய கயல்மீன்களைப் போன்ற கண்களையுடைய (பிற) பெண்களுக்கு முன்பாகத் (தில்லைத்) திருச்சிற்றம்பலத்தினுள் விரைந்து போய் அங்கே உனக்குரிய பல தொண்டுகளை நாடோறும் செய்து (உன்) திருவருளைப் பெற்றால் (இந்த) நிலவுலகத்தில் (இன்பத்தோடு வாழ்ந்து) இருக்கலாம் என்றவாறு.

விளக்கம்: இங்குத் தலைவி காதலால் இரங்கிக் கூறியது. நெக-அழுந்த. மதிநிலவு-பிறைச் சந்திரனின் ஒளி. படர-பரவ. கண்ணிமார்கள்-கண்களை யுடைய மாதர்கள். ‘செங்கயல்புரை கண்ணிமார்கள் முன்னே’ என்றது தன்னை இகழ்ச்சி செய்யும் பிற பெண்களின் முன்னர் என்பதாம். பலபணி-மெழுகுதல், திருவலகிடுதல், பூமாலை தொடுத்தல், தோத்திரம் செய்தல் முதலிய தொண்டுகள். அகலிடம்-நில உலகம்.

ஈசனேயோ, ஓ: அசை. நோக்கி நோக்கி: அடுக்குத் தொடர். நிலவு + அது + என் = நிலவதென்; அது: பகுதிப்

பொருள் விகுதி. உன, அ: ஆறும் வேற்றுமை யுருபு, பன்மைப் பொருள். —— 9

அருள்பெறின் அகலிடத் திருக்கலாமென்(று)
அமரர்கள் தலைவனும் அயனும்மாலும்
இருவரும் அறிவுடையா ரின்மிக்கார்
ஏத்துகின் றார்இன்னம் எங்கள்கூத்தை;
மருள்படு மழலைமென் மொழியுமையாள்
கணவனை வல்வினை யாட்டியேனுன்
அருள்பெற அலமரும் நெஞ்சம்ஆவா!
ஆசையை அளவறுத் தார்இங்காரே?

பொழிப்புரை: 'சிவபெருமானின் திருவருளைப் பெற்றால் உலகில் துன்பம் நீங்கி இன்பமுற்றிருக்கலாம்' என்று தேவர் களுக்குத் தலைவனான இந்திரனும், பிரமனும், திருமாலும், அறிவு நிறைந்தவர்களில் மேம்பட்டவராகிய பதஞ்சலி, வியாக்கிரபாதர் என்ற இரு முனிவர்களும் இன்னமும் எங்கள் கூத்தனாகிய நடராசப் பெருமானைத் துதிக் கின்றார்கள்; அஞ்சுந் தன்மையும் மழலைச்சொற்களைப் போன்ற மென்மையான சொற்களைப் பேசும் தன்மையும் உடைய உமாதேவியாரது நாயகனிடம், கொடிய தீவினை யாகிய கயிற்றினால் (பிணித்து) ஆட்டப்படுவேனாகிய நான் திருவருளைப்பெறும் பொருட்டு (என்) மனம் துன்புறுகிறது; அந்தோ! ஆசையின் அளவை இவ்வளவென்று வரை யறுத்துக் கூறுபவர் இவ்வுலகில் யாவர் இருக்கின்றார்கள்? (ஒருவருமிலர்) என்றவாறு.

விளக்கம்: அறிவுடையாரின் மிக்கார் இருவரும்-சிவ ஞானம் மிக்கவரில் உயர்ந்தோரான பதஞ்சலி, வியாக்கிர பாதர் என்ற இருமுனிவர்களும். கூத்தை - கூத்தனை, நட ராசப்பெருமானை. மருளுதல்-அஞ்சுதல். அருள்பெற-திரு

வருளைப்பெறும் பொருட்டு. அலமரும்-துன்புறும்; சுழலும். ஆவா - அந்தோ. இங்கு - இவ்வுலகில். ஆசைக்கு அளவு இல்லை என்பதை, “ஆசைக்கோர் அளவில்லை அகிலமெல் லாங்கட்டி ஆளினும் கடல்மீதிலே, ஆணைசெலவே நினை வர்” எனவரும் தாயுமானவர் பாடல் அடியால் அறியலாம்.

வினையாட்டியேன் : வினையாலணையும் பெயர். ஆவா: வியப்பிடைச் சொல். ஆர்: யார் என்ற வினுவின் மரூஉ. 10

ஆசையை அளவறுத் தார்இங்காரே?
அம்பலத்(து) அருநடம் ஆடுவானை
வாசநன் மலரணி குழல்மடவார்
வைகலுங் கலந்தெழு மாலைப்பூசல்
மாசிலா மறைபல ஓதுநாவன்
வண்புரு டோத்தமன் கண்டுரைத்த
வாசக மலர்கள்கொண் டேத்தவல்லார்
மலைமகள் கணவனை அணைவர்தாமே.

பொழிப்புரை: ஆசை அளவின் எல்லையை வரையறுத் தவர் இவ்வுலகில் யாவர் உளர்? (ஒருவருமிலர்; ஆதலால் ஆசை மிகுதியினுல்) (தில்லைச்) சிற்றம்பலத்தில் அரிய ஆனந்த தாண்டவம் புரியும் பெருமானை, வாசனை பொருந் திய நல்ல மலர்களை அணிந்த கூந்தலையுடைய பெண்கள் நாடோறும் கூடிநின்று (ஆரவாரித்து) எழும் மாலைக் காலத்துப் பேரொலியைக் கண்டுகூறிய, குற்றமற்ற வேத சாத்திரங்கள் பலவற்றை ஓதுகின்ற நாவினையுடைய (சொல்) வளமை பொருந்திய புருடோத்தம நம்பியினது சொற் களாகிய பூக்களால் தொடுத்த மாலையான பாடல்களைக் கொண்டு (இறைவனைத்) துதிக்க வல்லவர்கள் மலையரசன் மகளாகிய பார்வதி தேவியாரின் கணவராகிய சிவபெரு மானை அடைந்து இன்புறுவர் என்றவாறு.

விளக்கம்: வைகலும் - நாடோறும். பூசல் - பேரொலி. மாலைப்பூசல்-மாதர்கள் மாலைக் காலத்தில் அந்திவானம், பிறைச்சந்திரன் முதலியவற்றை நோக்கி இரங்கி வாய் விட்டொலிக்கும் பேரொலி. மாசுஇலா-குற்றமற்ற. வாசக மலர்கள்-சொற்களாகிய மலர்கள்; சொல்மலரால் தொடுத்த மாலை ஆகிய பாட்டுக்கள்.

ஓதுநாவன்: வினைத்தொகை. நாவன்: குறிப்புவினையாலணையும் பெயர். அணைவர்: வினைமுற்று. தாம், ஏ: அசைகள். 11

திருச்சிற்றம்பலம்

2. கோயில் – வானவர்கள்*

பண் – பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

வானவர்கள் வேண்ட வளர்நஞ்சை உண்டார்தாம்
ஊனமிலா என்கை ஒளிவளைகள் கொள்வாரோ?
தேனல்வரி வண்டறையுந் தில்லைச்சிற் றம்பலவர்
நானமரோ என்னாதே நாடகமே ஆடுவரே.

பொழிப்புரை: தேனை (உண்ணும்) நல்ல இசைப்பாட்டைப் பாடும் வண்டுகள் ஒலிக்கின்ற தில்லைச் சிற்றம்பலத்தில் எழுந்தருளிய பெருமான், 'நான் உறவுடையேன்' என்று கருதாமல் திருநடனமே புரிகின்றார்; (மேலும்), (இந்திராதி) தேவர்கள் வேண்டிக்கொள்ள, (மேன்மேலும்) எழுந்து பெருகி வந்த ஆலகால விடத்தை உண்டு தேவர்களைப் பாதுகாத்த கருணையாளரான சிவபெருமான், குற்றமில்லாத எனது கையில் அணிந்த ஒளியினையுடைய வளையல்களைக்

* இத்திருப்பதிகம் தலைவி இரங்கலைக் கூறுவது; அந்தாதித் தொடையாய் அமைந்தது.

கழலச் செய்து எனக்கு (ப்பெருந்) துன்பம் விளைவிப்பாரோ? என்றவாறு.

விளக்கம்: வளர்-மேலும் மேலும் எழுந்து பெருகி வந்த. வளை-வளையல்; சங்கு வளையல். ஊனம்-குற்றம். வரி-இசைப் பாட்டு; கோடுகள் எனினுமாம். அறையும்-ஒலிக்கின்ற. நமர்-நம்மவர்; உறவினர். என்னுதே-என்று கருதாமல். நாடகம்-நடனம்; ஆனந்த தாண்டவம். 'வானவர்கள் வேண்ட வளர் நஞ்சை உண்டார்'' : "சங்கையொன் றின் றியே தேவர், வேண்டச் சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவா, சிங்கமே'' என்பது அப்பர் தேவாரம்.

தாம், ஏ: அசைகள். கொள்வாரோ, ஓ : ஐய வினு. நமரோ, நமர் : கிளைப்பெயர். ஓ : அசை. தேன் + நல்= தேனல். 1

———

ஆடிவருங் காரரவும் ஐம்மதியும் பைங்கொன்றை
சூடிவருமா கண்டேன்; தோள்வளைகள் தோற்றாலும்
தேடியிமை யோர்பரவும் தில்லைச்சிற் றம்பலவர்
ஆடிவரும் போதருகே நிற்கவுமே ஒட்டாரே.

பொழிப்புரை : (இந்திராதி) தேவர்கள் தேடி (அறிய இயலாது வருந்தித்) துதிக்கின்ற தில்லைச்சிற்றம்பலத்தில் எழுந்தருளிய கூத்தப்பெருமான், (படம் எடுத்து) ஆடி வருகின்ற கரியபாம்பினையும், அழகிய பிறைச்சந்திரனையும், பசிய கொன்றை மலர் மாலையினையும் அணிந்து கொண்டு வருகின்ற விதத்தை (நான்) தரிசித்தேன்; (அப்பொழுது அவ்வீசர் மீது கொண்ட காதலால் என்) தோள் வளையல்கள் கழன்று விழுந்தாலும் (விழட்டும்); (அவர்) திருநடனம் புரிந்து கொண்டு வரும்போது (அவரது) அருகிலே நிற்ப தற்கும் இடங்கொடுக்க மாட்டார்கள் போலிருக்கிறதே! என்றவாறு.

விளக்கம்: கார் அரவு-கரிய பாம்பு. ஐம்மதி-அழகிய பிறைச்சந்திரன். தோள்வளைகள்-தோளில் அணியும் அணி வகைகள். பரவுதல்-துதித்தல். ஒட்டார்-இடங்கொடார்.

வருமாறு என்பது வருமா என ஈறுதொக்கது. பைங் கொன்றை-பண்புத்தொகை. நிற்கவுமே, ஒட்டாரே, ஏ: இரண்டும் அசைகள். 2

ஒட்டா வகைஅவுணர் முப்புரங்கள் ஓரம்பால்
பட்டாங்(கு) அழல்விழுங்க எய்துகந்த பண்பினுர்
சிட்டார் மறையோவாத் தில்லைச்சிற் றம்பலவர்
கொட்டா நடமாடக் கோல்வளைகள் கொள்வாரே!

பொழிப்புரை: பொருந்தி நில்லாத பகைக் குணத்தை யுடைய அசுரர்களின் மூன்று மதில்களைக்கொண்ட திரி புரத்தை ஓரம்பினுல் (அதாவது புன்சிரிப்பினுல் நோக்கிய) அவ்விடத்தே நெருப்பு உண்ணுமாறு அழியச் செய்து மகிழ்ந்த தன்மையரும், அந்தணர்களாகிய பெரியோர்கள் ஓதும் வேத ஒலி நீங்காத தில்லைச்சிற்றம்பலத்தில் எழுந் தருளியவருமான நடராசப்பெருமான், (மத்தள) முழக்கத் துடன் திருநடனம் ஆட, (அதனுல் எனக்கு மையலை உண்டாக்கி எனது) அழகிய கை வளையல்களைக் கழலச் செய்கின்ருரே! என்றவாறு.

விளக்கம்: ஒட்டா வகை அவுணர்-திரிபுரத்து அசுரர்கள். ஓர் அம்பால்-திருமாலாகிய ஓர் அம்பினுல். சிவபெருமான் கையில் அம்பு இருந்தது; அது பயன்படாமல் புன்னகை யால் முப்புரம் அழிந்தது: "ஈரம்பு கண்டிலம் ஏகம்பர் தங்கையில், ஓரம்பே முப்புரம் உந்தீபற, ஒன்றும் பெரு மிகை உந்தீபற" என்பது திருவாசகம். பட்டு-அழிந்து. சிட் டார் (சிட்டர்)-பெரியோர். கொட்டா-முழக்கி. கோல் வளை-அழகிய (வேலைப்பாடு அமைந்த) வளையல்.

ஒட்டா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். சிட்டர்: சிட்டார் என நீண்டது. கொட்டா (கொட்டி): செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். 3

ஆரே இவைபடுவார்? ஐயங் கொளவந்து
போரேடி என்று புருவம் இடுகின்றார்;
தேரார் விழவோவாத் தில்லைச்சிற் றம்பலவர்
தீராநோய் செய்வாரை ஒக்கின்றார்; காணீரே.

பொழிப்புரை: சிறந்த தேர்த் திருவிழா நீங்காது நடக்கின்ற தில்லைச் சிற்றம்பலத்தில் எழுந்தருளிய பெருமான் (இல்லந்தோறும்) பிச்சை ஏற்க வந்து, 'ஏடி! போருக்கு வருவாய்!' என்று அழைப்பது போல் புருவத்தை நெரிக்கின்றார் (அதாவது கண்வைத்து நோக்குகின்றார்); (அதனால் எனக்கு) நீங்காத துன்பத்தைச் செய்கின்றவர்களை ஒத்து விளங்குகின்றார்; நீங்களே இதனைப் பாருங்கள்; யாவர்தாம் இத்துன்பங்களைச் சகிக்க வல்லவர்? (ஒருவருமிலர்) என்றவாறு.

விளக்கம்: இவை - இத்துன்பங்களை. ஐயம் - பிச்சை. போர்ஏடி - போருக்கு வருவாய்அடி. ஏடி - அடியே. புருவம் இடுதல் - புருவத்தை நெரித்தல்; கண்வைத்து நோக்குதல். பூருவம் புருவம் எனக்குறுகியது எனக்கொண்டு, பூருவமிடுகின்றார் - பூருவவிருத்தாந்தம் பேசுகின்றார் என்றும் பொருள் கூறுவர். பிச்சை ஏற்க வந்து போரிட முற்படுகின்றார் என்றது, தலைவி காதல் மிகுதியால் சொல் தடுமாறிக் கூறியதாகும்.

ஆர்: யார் என்பதன் மரூஉ. ஓவா: ஈறு கெட்ட எதிர்மறைப்பெயரெச்சம். காணீர்: முன்னிலை வினைமுற்று. 4

காணீரே என்னுடைய கைவளைகள் கொண்டார்தாம்
சேணுர் மணிமாடத் தில்லைச்சிற் றம்பலவர்
பூணுர் வனமுலைமேல் பூஅம்பால் காமவேள்
ஆணுடு கின்றவா கண்டும் அருளாரே!

பொழிப்புரை : மிக உயர்ந்த அழகிய உப்பரிகைகளைக் கொண்ட மாளிகைகள் சூழ்ந்த தில்லைச் சிற்றம்பலத்தில் எழுந்தருளிய பெருமான் எனது கைவளையல்களைக் கவர்ந்து கொண்டார்; (அப்போது) அணிகலங்களை அணிந்த அழகிய எனது தனங்களின்மீது மலர்களாகிய அம்பினுல் மன்மதன் ஆண்மையைச் செலுத்துகின்ற தன்மையைக் கண்டும் அவர் (எனக்கு) அருள் புரியாமல் இருக்கின்ருரே! இதனை நீங்களே பாருங்கள்! என்றவாறு.

விளக்கம் : சேண் ஆர் - மிக உயர்ந்த. மாடம்-உப்பரிகை. பூண் - அணிகலம். வனம் - அழகு; இங்கு மென்மை, திரட்சி, ஒளி முதலியன. பூ அம்பு-புட்பபாணம்; அது தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம் என ஐந்து ஆகும். வேள் என்பது முருகனையும் உணர்த்தும் சொல்; ஆதலின் அவனை விலக்கி இங்கு மன்மதனை உணர்த்துதற்குக் 'காம' என்ற அடை கொடுக்கப்பட்டது. காமம் பொதுவாக எப்பொருளிலும் செல்லும் அவா; சிறப்பாக மகளிரைப்பற்றி நிகழ்வதைக் குறிப்பதாகும். காமவேள் - விருப்பத்தை உண்டுபண்ணுபவன்; மன்மதன். ஆண் ஆடுகின்றவா - ஆண்மைத்தனத்தைச் செலுத்துகின்ற விதத்தை; அதாவது போர்செய்கின்ற தன்மையை.

ஆடுகின்றவாறு என்பது ஆடுகின்றவா என ஈறு தொக்கு நின்றது. காமவேள் : இருபெயரொட்டுப் பண்புத் தொகை. தாம் : அசை. 5

ஏயிவரே வானவர்க்கும் வானவரே என்பாரால்
தாயிவரே எல்லார்க்குந் தந்தையுமாம் என்பாரால்
தேய்மதியஞ் சூடிய தில்லைச்சிற் றம்பலவர்
வாயினைக் கேட்டறிவார் வையகத்தார் ஆவாரே.

பொழிப்புரை: 'ஏ (இங்குள்ள) இவர், தேவர்களுக்கும் தேவர்(மகா தேவர்)' என்று பெரியோர்கள் கூறுவார்கள்; 'இவரே எல்லோர்க்கும் தாயும் தந்தையும் ஆவார்' என்று சொல்லுவார்கள்; பிறைச்சந்திரனைத் தரித்த தில்லைச் சிற்றம்பலத்தில் எழுந்தருளிய பெருமானின் வாய்மொழியாகிய வேதாகம சாத்திரங்களை(ப் பெரியோர்கள் மூலம்) கேட்டறிந்து (அதன்படி) ஒழுகுபவர் உலகை ஆளும் அரசர் ஆவார் என்றவாறு.

விளக்கம்: வானவர்க்கும் வானவர் - மகா தேவர். கடவுள் யாவர்க்கும் தாய்தந்தை ஆவர்: "தந்தையும் தாயுமாகித் தானவன் ஞான மூர்த்தி" என்பதும், "இம்மூவுலகுக்கு, அன்னையும் அத்தனும் ஆவாய் அழல்வண்ணநீயலையோ" என்பதும் அப்பர் தேவாரம். தேய்மதி - பிறைச் சந்திரன். வாயினை - வாய் மொழியினை; வேதாகம சாத்திரங்களை. வையகத்தார் - உலகை ஆளும் அரசர். 'வாயின' என்றும் பாடம்.

ஏ: இரக்கக் குறிப்பு. இவர்: சுட்டுப் பெயர். ஆல் இரண்டும் அசைகள். தேய் மதி: வினைத்தொகை. அறிவார்: வினையாலணையும் பெயர். 6

ஆவா! இவர்தம் திருவடிகொண்(டு) அந்தகன்றன்
மூவா உடலவியக் கொன்றுகந்த முக்கண்ணர்
தேவா மறைபயிலுந் தில்லைச்சிற் றம்பலவர்
கோவா இனவளைகள் கொள்வாரோ? என்னையே.

பொழிப்புரை : அந்தோ! தெய்வத்தன்மை பொருந்திய வேதங்கள் முழங்குகின்ற தில்லைச்சிற்றம்பலத்தில் எழுந்தருளிய பெருமானும், தமது திருவடியினாலே யமனுடைய மூப்பு அடையாத உடலம் அழியுமாறு (அவனை உதைத்துக்) கொன்று மகிழ்ந்த முக்கண்களை உடையவருமான இவர், எனது (கையில் அணிந்த) கோவாத கூட்டமாகிய வளையல்களைக் கவர்ந்து கொள்வாரோ! என்றவாறு.

விளக்கம்: ஆ ஆ-அந்தோ. அந்தகன்-யமன். மூவா-மூப்பு அடையாத. அவிய - அழிய. தேவு ஆம் மறை-தெய்வத்தன்மை பொருந்திய வேதம். பயிலல் - ஒலித்தல்; முழங்குதல். இனம்-கூட்டம். வளைகள்-சங்கு வளையல்கள். சிவபெருமான், மார்க்கண்டேயர் பொருட்டுத் தமது திருவடியினால் யமனை உதைத்து அழித்தார் என்பது வரலாறு. "பாலனை யோட வோடப் பயமெய்து வித்த உயிர்வவ்வு பாசம் விடுமக், காலனை வீடு செய்த கழல்போலும்...." தசபுராணம்-அப்பர் தேவாரம்.

ஆ ஆ: இரக்கக் குறிப்பு. அந்தகன்றன், தன்:சாரியை முக்கண்ணர்: காரண இடுகுறிப் பெயர். என்னை: (எனது) உருபு மயக்கம். மூவா, கோவா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்.

7

என்னை வலிவாரார் என்ற இலங்கையர்கோன்
மன்னும் முடிகள் நெரித்த மணவாளர்
செந்நெல் விளைகழனித் தில்லைச்சிற் றம்பலவர்
முன்னந்தான் கண்டறிவார் ஒவ்வார்இம் முத்தரே.

பொழிப்புரை: என்னைத் துன்புறுத்த வல்லவர் யார் என்று இறுமாந்திருந்த இலங்கைக்கு அரசனாகிய இராவணனது நிலைபெற்ற தலைகள் (பத்தையும்) (மலையின் கீழ் வைத்து) நசுக்கிய உமாதேவியாரின் கணவரும், செந்நெல் விளைகின்ற வயல்களால் சூழப்பெற்ற தில்லைச் சிற்றம்

பலத்தில் எழுந்தருளிய பெருமானுமாகிய இம்முத்தர் இதற்கு முன்னர் தாம் கண்டறிந்தவர்போல இல்லை; (தற்போது என்னைக் கண்டறியாதவர்போல நடிக்கின்றார்) என்றவாறு.

விளக்கம்: வலிவார்ஆர் - துன்புறுத்தவல்லவர் யார்? என்னைவலி வாரார்-எனது வலிமைக்கு ஒருவரும் நிகராக மாட்டார் என்றலுமாம். சிவபெருமான் எழுந்தருளிய கயிலை மலையை இராவணன் கருவங்கொண்டு தூக்கியபோது அவர் அவனது முடிகளை மலையின்கீழ் அகப்படச் செய்து நெரித்தார் என்பது வரலாறு: "தருக்கின வாளரக்கன் முடி பத்திறப் பாதந்தன்னால், ஒருக்கின வாறு" என்பது அப்பர் தேவாரம். இறைவன் எப்பொழுதும் நித்திய கலியாண கோலத்துடன் விளங்குகின்றார் என்பார், 'மணவாளர்' என்றார். கழனி - வயல். முத்தர் - இயல்பாகவே பாசங்களினின்று நீங்கியவர்; முத்தியைத் தருபவருமாம்; சிவன்.

தான்-அசை. முன்னம்: காலப் பெயர். விளைகழனி: வினைத்தொகை.

8

முத்தர் முதுபகலே வந்தென்றன் இல்புகுந்து
பத்தர் பலியிடுக என்றெங்கும் பார்க்கின்றார்;
சித்தர் கணம்பயிலும் தில்லைச்சிற் றம்பலவர்
கைத்தலங்கள் வீசிநின் றுடுங்கால் நோக்காரே.

பொழிப்புரை: இயல்பாகவே பாசங்களினின்று நீங்கியவரும், ஞானிகளின் கூட்டம் வாழ்கின்ற தில்லைச்சிற்றம்பலத்தில் எழுந்தருளியவருமான எம்பெருமான் கைகளை வீசி நின்று ஆடும்போது (என் மீது) அருள் நோக்கம் வைக்காமல் இருக்கின்றார்; நடுப்பகலிலே வந்து எனது வீட்டிற்குள் புகுந்து 'அன்பு உடையவர்களே! பிச்சையிடுவீர்களாக' என்றுகூறி எங்கும் (நோக்கைச் செலுத்திப்)

பார்க்கின்றார்; (ஆனால் என்னைமட்டும் பார்க்கின்றாரில்லை) என்றவாறு.

விளக்கம்: முதுபகல்-நடுப்பகல்; பட்டப்பகல். பத்தர்-அன்பர்களே! பலி-பிச்சை. சித்து-அறிவு. சித்தர்-மேலான அறிவுடையர்; இங்கு ஞானிகள். கணம்-கூட்டம்.

பத்தர்: விளி. இடுக: வியங்கோள் வினைமுற்று. நோக்கார்: எதிர்மறை வினைமுற்று. ஆடுங்கால்: வினையெச்சம்.9

நோக்காத தன்மையால் நோக்கிலோம் யாமென்று
மாற்காழி ஈந்து மலரோனை நிந்தித்துச்
சேக்காத லித்தேறும் தில்லைச்சிற் றம்பலவர்
ஊர்க்கேவந்(து) என்வளைகள் கொள்வாரோ? ஒண்ணுதலீர்!

பொழிப்புரை: ஒளி பொருந்திய நெற்றியையுடைய பெண்களே! திருமாலுக்குச் சக்கரத்தை அளித்துத் தாமரை மலரில் இருக்கும் பிரமனைத் தண்டித்து, இடபத்தின் மீது விரும்பி எழுந்தருளும் தில்லைச் சிற்றம்பலத்தில் உள்ள எம்பெருமான் (நம்மைப்) பார்க்காத காரணத்தினாலே நாமும் (அவரைப்) பார்க்கவில்லை என்று (அவர் எண்ணியபடியால்) (அவர் நம்) ஊருக்கே வந்து எனது வளையல்களைக் (கழலச் செய்து) கொண்டு போவாரோ? என்றவாறு.

விளக்கம்: மாற்கு-மாலுக்கு. ஆழி-சக்கரப்படை. ஈந்து-அளித்து. மலரோன்-பிரமதேவன். நிந்தித்தல்-இங்குத் தண்டித்தல்; அஃது ஐந்தலைகளில் ஒன்றைக்கிள்ளி எறிதல்; ஆலயம் இல்லாமல் போகச் சபித்தல் முதலியன. சே-இடபம். காதலித்தல்-விரும்புதல். ஒள்-ஒளி; அழகுமாம். நுதல்-நெற்றி. இங்கு இறைவன் திருமாலுக்குச் சக்கரம் அளித்ததை அருளலாகவும், பிரமனைத் தண்டித்ததை அழித்தலாகவும், இடபத்தின் மீது எழுந்தருளியதைக் காத்தலாகவும் கொள்க.

ஒள் + நுதலீர் = ஒண்ணுதலீர்: விளி. மால்+கு= மாற்கு. நோக்கிலோம்: தன்மைப் பன்மை எதிர்மறை வினைமுற்று. கொள்வாரே, ஓ: வினு: 10

ஒண்ணுதலி காரணமா உம்பர் தொழுதேத்தும்
கண்ணுதலான் தன்னைப் புருடோத்தமன் சொன்ன
பண்ணுதலைப் பத்தும் பயின்றுடிப் பாடினுர்
எண்ணுதலைப் பட்(டு)அங்(கு) இனிதா இருப்பாரே.

பொழிப்புரை: அழகிய நெற்றியையுடைய ஒரு தலைவி காரணமாகத் தேவர்கள் வணங்கித் துதிக்கின்ற நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானைப் புருடோத்தம நம்பி பாடிய பண்ணோடு கூடிய அழகிய பத்துப்பாடல்களையும் கற்று (ப்பக்தியினுல்) ஆடிப் பாடியவர்கள் சிவலோகத்தில் (நன்கு)மதிக்கப்பெற்று இன்பத்துடன் வாழ்ந்திருப்பார்கள் என்றவாறு.

விளக்கம்: 'ஒண்ணுதலி காரணமா' என்றது தலைவனைப் பிரிந்து நின்ற தலைவி இரங்கலாகக் கூறியதை. கண்ணுதலான்-சிவபெருமான்; இவரைத் துதிப்பதற்கு இவரருள் வேண்டும்: "அவன ருளாலே அவன்தான் வணங்கி" என்பது திருவாசகம். உம்பர்-தேவர்கள். பண்ணுதல் ஐ-பண்ணுடன் பாடிய அழகிய. பயின்று-கற்று. எண்ணுதலைப்பட்டு-(நன்கு) மதிக்கப்பெற்று. அங்கு என்றது சிவலோகத்தை.

பத்தும்: முற்றும்மை. பாடினுர்: வினையாலணையும் பெயர். அங்கு: இடப்பெயர். 11

திருச்சிற்றம்பலம்

புருடோத்தம நம்பி திருவிசைப்பா தெளிவுரை

முற்றிற்று

உ

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை

9. சேதிராயர்

அருளிய

திருவிசைப்பா

[தெளிவுரை]

கோயில் – சேலுலாம்*

பண் – பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

சேலு லாம்வயல் தில்லையு ளீர்!உமைச்
சால நாள்அயன் சார்வதி னால்இவள்
வேலை யார்விடம் உண்டுகந் தீர்என்று
மால தாகும்என் வாணுதலே.

பொழிப்புரை : கெண்டை மீன்கள் உலாவுகின்ற வயல்கள் சூழ்ந்த தில்லைப்பதியில் எழுந்தருளிய பெருமானே! ஒளி பொருந்திய நெற்றியையுடைய எனது(மகளாகிய) இவள், உம்மை நீண்ட நாட்கள்(உம்) அருகிலே சார்ந்திருந்தமையால், பாற்கடலில் தோன்றிய விடத்தை (நீர்) உண்டு மகிழ்ந்தீர் என்று மயக்கத்தை அடைந்திருக்கின்றாள் என்றவாறு.

விளக்கம் : சேல்-சேல்மீன்; கெண்டை மீன். சாலநாள்-நீண்ட நாள். அயன் - அயல் - அருகு. வேலை - கடல் : இங்குப் பாற்கடல். மால் - மயக்கம். வாள்-ஒளி. என் வாள்

* இப்பதிகம் நற்றாய் கூற்றாக அமைந்தது; அந்தாதித் தொடையாக வருவது. (நற்றாய்–பெற்றதாய்.)

நுதல்-ஒளி பொருந்திய நெற்றியை யுடைய எனது பெண். 'தில்லையுளீர்! உம்மை அயன் சார்வதினுல் இவள் திருமால் ஆவள்' என்னும் வேறு ஒரு பொருள் தொனித்தல் அறிக. (அயன் - பிரமன்) தில்லையுளீர் - தில்லைப்பதியாகிய சிதம் பரத்தில் எழுந்தருளிய கூத்தப்பெருமானே.

தில்லையுளீர்: விளி. சால: உரிச்சொல். உகந்தீர்: முன் னிலைப் பன்மை வினைமுற்று. மாலது, அது: பகுதிப் பொருள் விகுதி. வாள் + நுதல் = வாணுதல்: அன்மொழித் தொகை. 1

வாணு தற்கொடி மாலது வாய்மிக
நாணம் அற்றனள் நான்அறி யேன்இனிச்
சேணு தற்பொலி தில்லையு ளீர்!உமைக்
காணில் எய்ப்பிலள் காரி கையே.

பொழிப்புரை : ஒளி பொருந்திய நெற்றியையுடைய (பூங்) கொடி போன்ற என்மகள் (உம்மீது) மையல் கொண்டு வெட்கம் முழுவதையும் இழந்து விட்டாள்; இனி நான் இன்னது செய்வதென்று அறியேன்; வான்முகடள வும் உயர்ந்து விளங்கும் (மாளிகைகள் சூழ்ந்த) தில்லைப் பதியில் எழுந்தருளிய பெருமானே! உம்மைக் கண்டால் (இப்) பெண் இளைப்பில்லாதவள் ஆவள் (துன்பம் நீங்கிய வள் ஆவள்) என்றவாறு.

விளக்கம் : கொடி - பூங்கொடி போன்றவள். நாணம்- வெட்கம். இது பெண்களின் குணங்கள் நான்கில் ஒன்று. சேண்-நெடுந்தூரம்; வானம். நுதல்-நெற்றி; முகடு. சேணு தல் - வானத்தின் உச்சி. எய்ப்பு - இளைப்பு; துன்பம். காரிகை - அழகு; இங்கு அழகுடைய பெண்.

கொடி : உவமையாகுபெயர். அறியேன் : எதிர்மறை வினைமுற்று. தில்லையுளீர்: விளி. காரிகை : பண்பாகு பெயர். சேணுதல் பொலிதில்லை : உயர்வு நவிற்சியணி. 2

காரி கைக்கரு ளீர்;கரு மால்கரி
ஈரு ரித்தெழு போர்வையி னீர்!மிகு
சீரி யல்தில்லை யாய்!சிவ னே!என்று
வேரி நற்குழ லாள்இவள் விம்முமே.

பொழிப்புரை: 'பெரிய மதமயக்கமுடைய யானையின் தோலை இழுத்து உரித்து மேற்போர்வையாகக் கொண்டவரே! மிக்க சிறப்பினையுடைய தில்லைப்பதியில் எழுந்தருளியவரே! சிவபெருமானே!' என்று (கூவி அழைத்து) வாசனை பொருந்திய அழகிய கூந்தலையுடையவளான இப்பெண் அழாநின்ருள்; (ஆதலால் இந்தப்) பெண்ணுக்கு அருள் செய்யக் கடவீர் என்றவாறு.

விளக்கம்: கருமால் கரி-கரிய பெரிய யானையுமாம். ஈர்த்தல்-இழுத்தல். கரி ஈர் உரித்து ஏழு போர்வையினீர்-இவர் கஜ சம்மார மூர்த்திஆவர். மிகு சீர் இயல்-மிக்க சிறப்பினையுடைய. வேரி-வாசனை. விம்மும்-அழாநின்ருள். அருளீர்-அருளமாட்டீரோ என்று இரங்கிக் கூறியதுமாம்.

போர்வையினீர், தில்லையாய், சிவனே: விளிகள். குழலாள்: குறிப்பு வினையாலணையும் பெயர். விம்மும்: செய்யும் என்னும் முற்று.

—— 3

விம்மி விம்மியே வெய்துயிர்த்(து) ஆளெனு
உம்மை யேநினைந்(து) ஏத்துமொன்(று) ஆகிலள்
செம்ம லோர்பயில் தில்லையு ளீர்!எங்கள்
அம்மல் ஓதி அயர்வு றுமே.

பொழிப்புரை: பெருமையுடைய பெரியோர்கள் வாழ்கின்ற தில்லைப்பதியில் எழுந்தருளிய பெருமானே! எங்களுடைய அழகிய வளப்பமாகிய கூந்தலையுடைய இப்பெண், தேம்பித் தேம்பி அழுது பெருமூச்சு விட்டு 'என்னை ஆட்கொள்வாய்' என்று சொல்லி உம்மையே எண்ணித்

துதிக்கின்ருள்; ஒன்றுக்கும் பயன்படாதவளாய் சோர்வு அடைகின்ருள் என்றவாறு.

விளக்கம்: விம்மல்-தேம்பியழுதல். வெய்து உயிர்த்து-பெருமூச்சு விட்டு. ஆள்-ஆட்கொள்வாய். செம்மலோர்-பெருமையுடைய பெரியோர்கள்; தில்லைவாழந்தணர்களுமாம். அம்-அழகு. மல்-வளப்பம். ஓதி-கூந்தலையுடையவள். பயில்-வாழ்கின்ற. அயர்வு-சோர்வு.

தில்லையுளீர்: விளி. ஏத்தும், அயர்வுறும்: செய்யும் என்னும் முற்றுக்கள். ஆள்: ஏவல் வினைமுற்று. 4

அயர்வுற்(று) அஞ்சலி கூப்பிஅந் தோ!எனை
உயவுன் கொன்றையந் தார்அரு ளாய்எனும்
செயலுற் ருர்மதில் தில்லையு ளீர்!இவண்
மயலுற் ருள்என் றன்மா திவளே.

பொழிப்புரை: (நுட்பமாகிய) வேலைப்பாடுகள் நிறைந்துள்ள மதில்களையுடைய தில்லைப்பதியில் எழுந்தருளிய பெருமானே! என் பெண்ணுகிய இவள், இவ்விடத்து (உம் மீது) காதல் கொண்டுள்ளாள்; (மேலும் இவள்) தளர்ச்சி அடைந்து அஞ்சலியாகக் கை குவித்து, 'ஐயோ! (நான்) பிழைக்க உனது அழகிய கொன்றைப் பூக்களால் தொடுக்கப்பெற்ற மாலையை எனக்குக் கொடுத்தருள்வாயாக' என்று சொல்லுகிருள் என்றவாறு.

விளக்கம்: அஞ்சலி-கும்பிடுதல். அந்தோ-ஐயோ. உய-பிழைக்க. கொன்றை அம் தார்-அழகிய கொன்றை மாலை. தார்-மாலை; செயல்-(நுட்பமாகிய) வேலைப்பாடுகள். இவண்-இவ்விடத்து. மயல்-காதல் மயக்கம். மாது-அழகிய பெண்.

எனை: உருபுமயக்கம். இவண்: இடப்பெயர். அந்தோ: இரக்கச் சொல்; திசைச் சொல்லுமாம். எனும்: செய்யும் என்னும் முற்று. 5

மாதொர் கூறன்வண் டார்கொன்றை மார்பன்என்(று)
ஓதில் உய்வன்ஒண் பைங்கிளி யே!எனும்
சேதித் தீர்!சிரம் நான்முக ஊத்தில்லை
வாதித் தீர்என் மடக்கொடி யையே.

பொழிப்புரை: பிரமதேவனது சிரங்கள் ஐந்தில் ஒன்றைத் துண்டித்தவரே! என்னுடைய இளங்கொடிபோன்ற பெண்ணைத் தில்லையினிடத்து வருந்தும்படி செய்தீர்; (அவள் தான் வளர்க்கும் பசுங்கிளியினைப் பார்த்து), 'அழகிய பசுமையான கிளியே! (நீ சிவபெருமானைக் குறித்து) உமா தேவியாரைத் தனது ஒருபாகத்தில் வைத்திருப்பவன் என்றும், வண்டுகள் மொய்க்கின்ற கொன்றை மாலையை அணிந்த திருமார்பையுடையவன் என்றும் (நீ)கூறினால் (நான்) பிழைப்பேன்' என்று சொல்லுகிறாள் என்றவாறு.

விளக்கம்: மாது-உமாதேவியார். ஆர்-மொய்க்கின்ற. ஓதில்--(நீ) கூறினால். ஒண்மை-அழகு. எனும்-என்று சொல்லுகிறாள். நான்முகனைச் சிரம் சேதித்தீர்: "அங்க மலத்(து) அயன்சிரங்கள் ஐந்தில் ஒன்றை அறுத்தவன் காண்" என்பது அப்பர் தேவாரம். வாதித்தீர்-வருந்தும்படி செய்தீர். மடக்கொடி-இங்குப்பெண்.

பைங்கிளியே, சேதித்தீர்: விளிகள். உய்வன்: தன்மை யொருமை வினைமுற்று. எனும்: செய்யும் என்னும் முற்று. நான்முகனை: உருபு மயக்கம். மடக்கொடி: அடையடுத்த ஆகு பெயர்.

6

கொடியைக் கோமளச் சாதியைக் கொம்பிளம்
பிடியை என்செய்திட் டீர்?பகைத் தார்புரம்
இடியச் செஞ்சிலை கால்வளைத் தீர்!என்று
முடியும் நீர்செய்த மூச் சறவே.

பொழிப்புரை: (உம்மைப்) பகைத்தவர்களாகிய மூன்று அசுரர்களின் முப்புரத்தின் கோட்டை தகருமாறு செவ்விய மேருமலையாகிய வில்லின் அடியைக் காலால் (மிதித்து) வளைத்த பெருமானே! பூங்கொடி போன்ற இடையையுடையவளும்,இளமை அழகு வாய்ந்தவளும்,கொம்புகளைக் கொண்ட இளம் பெண்யானை போன்றவளுமான எனது பெண்ணை என்ன செய்துவிட்டீர்? நீர் செய்த (இந்த) மயக்கம் எப்பொழுது நீங்கும்? என்றவாறு.

விளக்கம்: கோமளம்-இளமையழகு. பிடி-பெண்யானை. பகைத்தார்-பகை கொண்டவராகிய திரிபுர அசுரர்கள். இடிய-அழிய; எரிந்து சாம்பலாக. செம்-செவ்விய; அழகிய. சிலை - (மேருமலையாகிய) வில். மூச்சு அறவு-மயக்கம்; உயிர்ப்பு நீங்குதலுமாம். என்று முடியும் - எப்பொழுது நீங்கும்; என்று இறந்துபடுவாளோ எனினுமாம்.

செய்திட்டீர்: இதில் இடு என்பது துணைவினை. வளைத்தீர்: விளி. என்று: காலப்பெயர். என்: வினா. 7

அறவ னே!அன்று பன்றிப் பினேகிய
மறவ னே!எனை வாதைசெய் யேல்எனும்;
சிறைவண் டார்பொழில் தில்லையு ளீர்!எனும்
பிறைகு லாம்நுதற் பெய்வ ளையே.

பொழிப்புரை: பிறைச் சந்திரனைப் போல விளங்குகின்ற நெற்றியினையுடைய மிகுதியான வளையல்களை அணிந்த (என்) பெண்ணானவள், ‘(சனகாதி நால்வர்க்கு அறத்தைச் சொன்ன) தருமவடிவினனே! (அருச்சுனனுக்குப் பாசுபதம் அருளச்சென்ற) அப்பொழுது (மூகாசுரன் என்னும்) பன்றியின் பின்சென்ற வேடனே! என்னைத் துன்புறுத்தாதே’ என்று அரற்றுகிருள்; ‘சிறகுகளையுடைய வண்டுகள்

நிறைந்த சோலைகள் சூழ்ந்த தில்லைப்பதியில் எழுந்தருளிய பெருமானே!' என்று அரற்றுகிருள் என்றவாறு.

விளக்கம்: அறவனே - தருமவடிவினனே. மறவனே-வேடனே: "மறவனை அன்று பன்றிப்பின் சென்ற மாயனை நால்வர்க்கு ஆலின்கீழ் உரைத்த, அறவனை" என்பது சுந்தரர் தேவாரம். பிறைகுலாம்-பிறைச் சந்திரனைப் போல விளங்கும். பெய்வளை - மிகுதியாக இடப்பெற்ற வளையலை யுடையவள். 'இறைவனே! நீ அறவடிவினனுக இருந்தும் இவளுக்கு அருளாதது ஏனே' என்ற குறிப்புத் தொனித்தலை அறிக.

அறவனே, மறவனே, தில்லையுளீர்: விளிகள். பெய் வளை: அன்மொழித் தொகை. செய்யேல்: எதிர்மறைவினை முற்று.

8

அன்ற ருக்கனைப் பல்லிறுத்(து) ஆனையைக்
கொன்று காலனைக் கோளிழைத் தீர்எனும்;
தென்ற லார்பொழில் தில்லையு ளீர்! இவள்
ஒன்றும் ஆகிலள் உம்பொ ருட்டே.

பொழிப்புரை: தென்றல் காற்று உலாவும் சோலைகள் சூழ்ந்த தில்லைப்பதியில்திகழும் பெருமானே!(தக்கன்வேள்வி செய்த)அக்காலத்தில் சூரியனுடைய பற்களை உடைத்து, (தாருகவனத்து முனிவர்கள் விடுத்த) யானையைக்கொன்று, யமனை (மார்க்கண்டனுக்காக உதைத்து அவன்) உயிரைக் கொள்ளுதலைச் செய்தீர்' என்று(உம்மை இப்பெண்)சொல்லு கிருள்; உம்மிடங் கொண்டகாதல் காரணமாக இவள் ஒன்றுக்கும் உதவாமல் இருக்கிருள் என்றவாறு.

விளக்கம்: அருக்கன் - சூரியன். காலன் - உயிர்களின் காலங்களைக் கணக்கிடுபவன்; இயமன். கோள்-கொலை. ஒன்றும்-ஒன்றுக்கும். ஆகிலள்-ஆகாமலிருக்கிருள்.

தில்லையுளீர்: விளி. காலன்: காரணப்பெயர். ஆனை: யானை என்பதன் மரூஉ. 9

ஏயு மாறெழிற் சேதிபர் கோன்தில்லை
நாய னாரை நயந்துரை செய்தன
தூய வாறுரைப் பார்துறக் கத்திடை
ஆய இன்பம் எய்தி இருப்பரே.

பொழிப்புரை: (சகல வளங்களும்) பொருந்தும் விதத்தில் அழகிய சேதி நாட்டிற்கு அரசனான சேதிராயர் என்பார், தில்லைப்பதியில் எழுந்தருளிய தலைவரான நடராசப்பெருமானை விரும்பிப் புகழ்ந்து உரைத்தனவாகிய இப்பத்துப் பாடல்களையும் தூய்மையான நெறியில் நின்று பாடுகின்றவர்கள் சிவலோகத்தில் மேலான பேரின்பத்தை அடைந்து இருப்பார்கள் என்றவாறு.

விளக்கம்: ஏயும்-(சகல வளங்களும்) பொருந்தும். சேதிபர்கோன்-சேதிராயர். தில்லைநாயனார்-நடராசப்பெருமான். நயந்து-விரும்பி. தூயவாறு - தூய்மையான நெறி. துறக்கம்-சுவர்க்கம்; இங்குச் சிவலோகம். ஆய இன்பம் - மேலான இன்பம்; பேரின்பம்.

செய்தன (செய்தபாடல்கள்): வினையாலணையும் பெயர். துறக்கத்திடை, இடை: ஏழனுருபு; அத்து: சாரியை. 10

திருச்சிற்றம்பலம்

சேதிராயர் திருவிசைப்பா தெளிவுரை

முற்றிற்று.

ஆகத் திருப்பதிகங்கள் – 28
திருப்பாடல்கள் – 288
திருவிசைப்பா தெளிவுரை முற்றிற்று.

உ

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை

2. சேந்தனுர்

அருளிய

திருப்பல்லாண்டு*

[தெளிவுரை]

கோயில்-மன்னுக

பண் - பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை! வளர்கநம்
பத்தர்கள்! வஞ்சகர் போய்அகல!
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க

---

* தில்லை நடராசப்பெருமான் தம் அடியாராகிய சேந்தனுரின் அன்பின் திறத்தை உலகிற்குக் காட்டவேண்டும் என்ற அருள் நோக்கம் கொண்டு, மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் தாம் திருத்தேர் கொண்டருளும்போது தேரைப் பூமியில் அழுந்துமாறு செய்தார். அதுபோழ்து அன்பர்கள் யாவரும் அறியச் சேந்தனுர் திருப்பல்லாண்டு என்ற இத் திருப்பதிகம் பாடத் திருத்தேர்தானே அசைந்து ஓடி நிலையினை அடைந்தது என்பது வரலாறு.

இவ்வரலாற்று அற்புதத்தை நினைவு கூர்தற்பொருட்டுத் திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்து அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் சிதம்பரத்தில் "பல்லாண்டு விளக்கு நிதி" என்ற ஒரு பேரறக் கட்டளையை நிறுவித் தில்லையில் மார்கழித் திருவாதிரை முன்னுள் தேர்த் திருவிழா அன்று ஆண்டு தோறும் பல திருமுறைவாணர்களைக் கொண்டு திருத்தேருக்கு முன்னே திருப்பல்லாண்டை ஓதிக்கொண்டுவரச் செய்கின்றுர்கள்.

அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

கோயில்: சைவ வரம்பின்படி கோயில் என்பது சிதம்பரத்தலத்தைக் குறிப்பது. இது திரு என்ற அடைமொழி இன்றிக் கோயில் எனவே வழங்கும் தனிச்சிறப்புடையது. இத்தலம் சோழநாட்டுக் காவிரிக்கு வட கரையில் உள்ள சிவத்தலங்களுள் முதன்மை பெற்றது; பஞ்ச பூதத்தலங்களில் ஒன்று (ஆகாயம்); ஆருதாரத் தலங்களில் ஒன்று (இருதயம்); தரிசிக்க முத்தியைத் தருவது. தில்லை – நகரின் பெயர்; இது தில்லை என்ற ஒருவகை மரம் நிறைந்திருந்ததால் பெற்ற பெயர் ஆகும். திருச்சிற்றம்பலம் – கோயிலின் பெயர். இதனை வட மொழியாளர் சிதம்பரம் என்பர். சிதம்பரம் என்பது சித் அம்பரம் எனப்பிரிக்கப்பட்டு (சித்-அறிவு,ஞானம்; அம்பரம் - வெட்டவெளி). ஞானுகாசம் என்ற பொருளுடையது. இது நடராசப் பெருமான் எழுந்தருளிய இடம். மூலலிங்கப் பெருமான் எழுந்தருளிய இடம் திருமூலட்டானம் எனப்படும்.

இத்தலம் சிற்றம்பலம், பொன்னம்பலம்,§தில்லைவனம், பூலோக கயிலாயம், பெரும்பற்றப்புலியூர், புலியூர், சிதம்பரம் முதலிய பல திருப்பெயர்களைக் கொண்டு விளங்குவது; மூர்த்தி, தலம், தீர்த்தம் இம்மூன்றினுலும் சிறப்புற்றுத்

---

§ *பொன்னம்பலம் என்பது பொற்சபை. (கனகசபை, சிற்சபை சிற்றம்பலம் எனவும் பெயர் பெறும்.) திருவாலங்காட்டில் இரத்தின சபையும், தில்லையில் பொற்சபையும், மதுரையில் வெள்ளி சபையும் திருநெல்வேலியில் தாமிரசபையும், திருக்குற்றலத்தில் சித்திர சபையும் ஆகிய ஐந்து சபை (ஐவகை மன்றம்) உள்ளன; இவ்வைந்தும் தனித்தனிச் சிறப்புடையன.*

திகழ்வது. பிரமாண்டமாகிய சரீரத்தில் இடைகலை நாடி இலங்கையிலும், பிங்கலநாடி இமயத்திலும், சுழுமுனைநாடி தில்லைப்பதியிலும் ஓடுகின்றன. இச்சுழுமுனைநாடியில் நடராசப் பெருமான் ஆனந்ததாண்டவம் புரிகின்றார். அன்றியும், இவர்க்குரிய அர்த்தசாம பூசையில் இவர் 1000 சிவ கலைகளுடன் விளங்குகின்றார். இதனால் 'தில்லையைத் தரிசிக்க முத்தி' என்ற முதுமொழி எழுந்ததாகும். சிதம்பர ரகசிய தரிசனம் மிகச்சிறப்புடையது.

இங்குத் தலவிருட்சம் - ஆல். தீர்த்தம் - சிவகங்கை, பரமானந்த கூபம், புலிமடு முதலியன.

பொன்னம்பலம் : இறைவன் – நடராசப்பெருமான்
இறைவி – சிவகாமியம்மையார்

திருமூலட்டானம் : இறைவன் – திருமூலநாதர்
இறைவி – உமையம்மையார்.

பொழிப்புரை : (நம் மெய்யன்பர்களாகிய பத்தர்கள்) தில்லைப் பதியை அடைவார்களாக! நம் இனத்தவர்களாகிய பத்தர்கள் மேன்மேலும் பெருகி ஓங்குக! வஞ்சகர்கள் (தில்லையினின்றும்) நீங்கிச் செல்லட்டும்! அன்னநடை போலும் நடையினையுடைய உமாதேவியாரின் கணவராகிய சிவபெருமான், பொன்னால் செய்யப் பெற்று இனிதாக உள்ள பொன்னம்பலமாகிய மண்டபத்தின் (பொற்சபையின்) உள்ளே எழுந்தருளி, உலகமெல்லாம் (இருள் நீங்கி) விளக்கம் பெற, அடியவர்களாகிய நமக்கு அருள் செய்து, இனிமேல் வரக்கடவதாகிய மறு பிறவி (வாராமல்) அறுக்கும் பொருட்டு, ஒரு நல்ல வழியை (திருவருள் நெறியை) எமக்குக் கைகூடும்படி தந்த பித்தனைப் புகழ்ந்தே 'பல்லாண்டு வாழ்க' எனக் கூறி (நாம்) வாழ்த்துவோம் என்றவாறு.

விளக்கம்: மன்னுதல்-சேர்தல். தில்லை மன்னுக-தில்லைப் பதி என்றும் நிலைபெற்று இருப்பதாக என்றலுமாம். நம்-இங்குநம் இனத்தவர் (சிவனடியார்கள்). பத்தர்கள்-இறைவனிடம் பேரன்பாகிய பக்தியை யுடையவர்கள்; மெய்யன்பர்கள். வளர்க-பெருகி ஓங்குக; மேன்மையுறுக எனினுமாம். வஞ்சகர்-அகத்தில் அன்பிலாதவர்; இவர் பிறப்பால் அன்றி வஞ்சக ஒழுக்கத்தால் இழிந்த தன்மையுடைவர்; புறச் சமயிகள். களைகளைப் பிடுங்கி எறியப் பயிர்கள் நன்றாகச் செழித்து வளர்வன போல, வஞ்சகர்கள் ஒழிந்தால் பத்தர்கள் எங்கும் பரவி ஓங்குவார்கள் என்பதாம்.

பொன் செய் மண்டபம்-(உயர்ந்த) பொன்னால் செய்யப் பட்ட தகடு வேய்ந்த மண்டபம்; பொற்சபை; சிற்றம்பலம். இஃதுஇரணியவர்மனுக்குப்பின்பு,முதலாம் ஆதித்தசோழன் (கி. பி. 871-907) கொங்குநாட்டை வென்று அங்கிருந்து பொன் கொண்டு வந்து தில்லைச் சிற்றம்பல முகட்டை அப்பொன்னால் வேய்ந்த செய்தியைத் திருத்தொண்டர் திருவந் தாதி, "சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம் பலமுகடு, கொங்கிற் கனகம் அணிந்த ஆதித்தன் குலமுதலோன்" எனக் கூறுகிறது. அதற்குப் பின்பு முதற்பராந்தக சோழன் (கி.பி. 907-953) தில்லைச் சிற்றம்பல முகட்டைப் பொன் வேய்ந்து புதுப்பித்தான் என்று திருவாலங்காட்டுப் பட்டயம் கூறுகிறது. இந்த முதற்பராந்தகனைக் "கோதிலாத் தேறல் குனிக்கும் திருமன்றம், காதலாற் பொன்வேய்ந்த காவலனும்" என விக்கிரம சோழன் உலா மிகப்புகழந்து பேசுகின்றது. ஒவ்வொரு பொன் ஓட்டிலும்'சிவாய நம'என்ற சூக்கும பஞ்சாட்சரத்தை எழுதி வேய்ந்ததாகத் தில்லை உலா என்ற நூல் புகல்கின்றது. இன்செய் மண்டபம்-இனிதாக உள்ள சிற்றம்பலம் என்றும் கூட்டுக.

நீக்கமற எங்கும் நிறைந்து விரிந்து நின்ற சிவபெருமான் சுருங்கிய இடமான பொற்சபைக்கண் எழுந்தருளியது வஞ்சகராகிய தீயோரை ஒழித்தற்கும் பத்தர்களுக்குத் திருவருள் நெறி (முத்தி நெறி) காட்டி அருள்புரிவதற்குமே ஆகும். அடியோமுக்கு-இது தம்மையும் தம்முடன் இருக்கும் அடியார்களையும் குறிப்பது. பின்னைப்பிறவி-இனிமேல் வரக் கடவதாகிய மறுபிறவி. இறைவன் முன்னர் ஞான நூற்பொருளையும் திருவைந்தெழுத்தையும் குருவாக வந்து உபதேசித்துப் பின்னர், 'இந்நெறியே ஒழுகுக' என்று கூறி அநுபவ நிலையினைக் காட்டியதை, 'நெறிதந்த' என்றார்.

இப்பிறவியினால் அடைந்த துன்பம் மிக இருப்பினும் இனிப் பிறவி வாரா வழியைக் காட்டி இறைவன் காத்து ஆட்கொண்டான் என்பார், "பின்னைப் பிறவி அறுக்க நெறி தந்த பித்தன்" என்றார்: "பெற்றாலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மைவந் தெய்தினேன்" என்பது சுந்தரர் தேவாரம். "மீட்டேயும் பிறவாமல் காத்தாட் கொண்டான் எம்பெருமான்" என்பதும், "மீட்டிங்கு வந்து வினைப் பிறவி சாராமே, கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே" என்பதும் திருவாசகம். இறைவன், ஆன்மாக்களைப் பிறப்பித்து வினைக்கட்டை அறுத்துக் காத்தல், பிறவியிற் புகாதபடி அழிவில்லாத பேரின்பத்தை அனுபவிக்கச்செய்து காத்தல் எனக் காத்தல் இருவகைப்படும். பித்தன்-சிவபெருமான்; பேரன்புடையவனுமாம்: "பித்தராய்த் திரியும் எம்பெருமான்" என்பது சம்பந்தர் தேவாரம். "பித்தா பிறை சூடி பெருமானே அருளாளா" என்பது சுந்தரர் தேவாரம்.

சேந்தனார் சிவபெருமானிடம் கொண்டுள்ள பக்திக் கடலில் மூழ்கிப் பரவசப்பட்டு, அவனது பேராற்றலையும் அடியார்களைக் காக்கும் திறலையும், என்றும் அழியாத

நிறைவையும் அறிந்திருப்பினும் இறைவனைப் "பல்லாண்டுகள் வாழ்க" என, வாழ்த்துக் கூறுதல் உபசாரமே ஆகும். இது பக்தி நிலையில் எழுந்த செயலாம். பல்லாண்டு கூறும் பத்தர்கள் மனத்துள் சிவபெருமான் எப்பொழுதும் நீங்காது வீற்றிருப்பான்: "பல்லாண்டிசை கூறும் பத்தர்கள் சித்தத்துள் புக்குத் தேடிக் கண்டுகொண்டேன் திருவாரூர் அம்மானே" என்பது அப்பர் தேவாரம். இறைவனை நாம் வாழ்த்துதல் நம் வாழ்க்கை இன்பத்தை மிகுவிக்கும் என்பதாம்: "வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்" என்பது திருவாசகம்.

அன்ன நடை மடவாள் உமை கோனுகிய பித்தற்கு எனக் கூட்டுக. மன்னுக, வளர்க, அகல: வியங்கோள் வினை முற்றுக்கள். பித்தன் + கு = பித்தற்கு: (பித்தனை) உருபு மயக்கம். பல + ஆண்டு = பல்லாண்டு. கூறுதும்: தன்மைப் பன்மை வினைமுற்று. 1

மிண்டு மனத்தவர் போமின்கள்;
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்;
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து;
அண்டங் கடந்த பொருள்அள
வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும்என்றும் உள்ளபொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

பொழிப்புரை: செருக்குக் கொண்டு மாறுபடப்பேசும் மனத்தினையுடையவர்கள் போங்கள்; மெய்யடியாராக இருப்பவர்கள் விரைந்து வாருங்கள்; (சிவபெருமானிடத்துப் பேரன்பு) செலுத்தியும், (அவனருளைப்) பெற்றும், தலை

முறை தலைமுறையாய் அடியார் கூட்டத்துள் கலந்து, எம்பெருமானுக்குத் தொண்டு புரியுங்கள்; (அப்பெருமானை) அண்டங்கள் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி அவற்றிற்கு மேலும் அப்பாற்பட்ட பொருள் (என்றும்), அளவில்லாத தான ஒப்பற்ற இன்ப வெள்ளமாகிய பொருள் (என்றும்), முற்காலத்தும் இக்காலத்தும் எக்காலத்தும் உள்ள (பராபரப்) பொருள் என்றும் (சிவபெருமானைப் புகழ்ந்தே) 'பல்லாண்டு வாழ்க' எனக் கூறி(நாம்)வாழ்த்துவோம் என்றவாறு,

விளக்கம்: மிண்டுதல்-செருக்குக் கொள்ளுதல். மிண்டு மனத்தவர்-மனத்தில் தோன்றியவாறு செய்து செருக்குடன் பேசுபவர்; புறச்சமயிகள் என்றலுமாம். மெய்யடியார்கள்-உண்மை ஒழுக்கமும் இறைவனிடம் உள்ளன்பும் உடைய பத்தர்கள்; இவர்களே பாச நீக்கமும் சிவப்பேறும் ஒருங்கே பெறும் தகுதியுடையவர்கள் ஆவர். ஒன்றுபட்ட கருத்துடையார் ஒருவழிக்கூடி ஒரு செயலைச் செய்யின் அது மிகவும் சிறக்கும்; ஆதலால் மெய்யடியார்கள் எல்லோரும் திரண்டு வருக என்பார், "மெய்யடியார்கள் விரைந்து வம்மின்" என்றார். கொடுத்தும்-இறைவனிடம் பேரன்பு செலுத்தியும்; கடவுள் சம்பந்தமாகத் தாம் பெற்ற அனுபவத்தைப் பிறர்க்கு எடுத்துச் சொல்லியுமாம். கொண்டும்-இறைவன் அருளைப் பெற்றும்; கடவுள் சம்பந்தமாகப் பிறர் பெற்ற அனுபவத்தைக் கேட்டுக் கைக் கொண்டுமாம்.

குடிகுடி - தலைமுறை தலைமுறைத் தொடர்பாக; வாழையடி வாழையாக; பரம்பரையாக. ஈசன்-யாவர்க்கும் யாவற்றிற்கும் தலைவனாகிய இறைவன். திருமால், பிரமன், இந்திரன் முதலிய தேவர்களால் தொழுதேத்தப் பெறும் இறைவன், தனக்கு ஆட் செய்யும் தொண்டர்களை அத்

தேவர்களால் தொழுதற்கேற்ற சிறப்புடையவராக ஆக்கு கின்ருர். ஆதலால், ''ஈசற்கு ஆட் செய்மின்'' என்ருர்: ''தொழப்படுந் தேவர் தொழப்படுவானைத்தொழுதபின்னைத், தொழப்படுந் தேவர்தம்மால் தொழுவிக்கும்தம் தொண டரையே'' என்பது அப்பர் தேவாரம். 'அண்டங் கடந்த பொருள்': ''ஏழுலகும் கடந்து அண்டத்தப்பால் நின்ற பேரொளியைப் பெரும்பற்றப் புலியூரானை'' என்பது அப்பர் தேவாரம். 'பண்டும் உள்ள பொருள்'; 'இன்றும் உள்ள பொருள்': ''முன்னவன் காண் பின்னவன் காண் மூவாமேனி முதல்வன்காண்'' என்பது அப்பர் தேவாரம். ''முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம்பொருளே பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே'' என்பது திருவாசகம். என்றும் உள்ள பொருள்-தோற்றமும் அழிவும் இல்லாத என்றும் நிலைத்துள்ள பொருள். இது 'மெய்ம்மை' என்றும், 'சத்து' என்றும் கூறப்படும்: ''என்றும் உள்ளார் இடைமருது மேவி இடங்கொண்டாரே'' என்பது அப்பர் தேவாரம்.

போமின்கள்: முன்னிலைப்பன்மை ஏவல் வினைமுற்று. கள்: விகுதிமேல் விகுதி. குடி குடி: அடுக்குத் தொடர். ஆனந்த வெள்ளம்: உருவகம். பண்டும் இன்றும் என்றும், உம்மை: எண்ணும்மை. என்றே, ஏ: தேற்றம். 2

நிட்டையி லாவுடல் நீத்தென்னை
    ஆண்ட நிகரிலா வண்ணங்களும்
சிட்டன் சிவனடி யாரைச்
    சீராட்டுந் திறங்களுமே சிந்தித்(து)
அட்ட மூர்த்திக்கென் அகம்நெக
    ஊறும் அமிர்தினுக்(கு) ஆலநிழற்
பட்டனுக்(கு) என்னைத்தன் பாற்படுத்
    தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

பொழிப்புரை: தியானம் செய்யாத உடலின் தன்மையினை நீங்கும்படி செய்து, என்னை அடிமையாகக் கொண்ட ஒப்பற்ற (பல) தன்மைகளும், மேலானவனுகிய சிவபெருமானது மெய்யடியார்களைப் பெருமைப்படுத்தும் பல இயல்புகளும் ஆகிய இவற்றையே மனத்தில் நினைத்து, எட்டு உருக் கொண்ட மூர்த்தியினை, என்மனம் உருகும்போது (உண்டாகும்) ஊற்றுகிய பேரானந்த உணர்ச்சியினைத் தரும் தேவாமிர்தம் போன்றவனை, கல்லால மரநிழற்கீழ் எழுந்தருளிய ஞானுசாரியனை, அடியவனைத் தன் வயமாக்கிக் கொண்டவனை(ப் புகழ்ந்தே) 'பல்லாண்டு வாழ்க' எனக் கூறி (நாம்) வாழ்த்துவோம் என்றவாறு.

விளக்கம்: நிட்டை-தியானம்;இஃது இறைவன் பெருமையினை இடைவிடாமல் நினைத்தல்; இவ்வாறு நினைப்பவர் மனத்தை இறைவன் தனக்குக் கோயிலாகக் கொள்வான்: "நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்" என்பது அப்பர் தேவாரம். "உள் ளம் பெருங்கோயில்" என்பது திருமந்திரம். இத் தியானுநுபவம் மிக மிக, ஞானமாகிய உள்ளொளியும் உடலொளியும் பெருகி நிற்கும்: "ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி" என்பது திருவாசகம். நிட்டையில்லா உடல் பயனற்ற உடலாகும். வண்ணங்கள்-பல தன்மைகள்; இவை, பற்பலசமயங்களில் பலவாறுஇறைவன் அருள்புரிந்த தன்மைகளை நினைத்து இன்புறுவன. சிட்டன்-சிரேட்டன்; மேலானவன்: "சிட்ட னைச்சிவ னைச் செழுஞ் சோதியை" என்பது அப்பர் தேவாரம். சிவன்-பேரின்ப வடிவினன். சீராட்டல் - பெருமைப்படுத்தல். அட்டமூர்த்தி - இவர் மண், நீர், தீ, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், உயிர் ஆகிய எட்டும் கொண்ட வடிவினர்; இவ்வெட்டும் இறைவனுக்கு உடல் என்பர்: "மண்ணெடு நீர் அனல் காலோ டாகாயம் மதிஇரவி, எண்ணில்வரும் இய

மானன்......ஆம் பேராளன்" என்பது சம்பந்தர் தேவாரம். இவ்வெட்டு வகைப் பொருள்களும் அல்லாமல் உலகம் என்பது ஒன்றில்லை.

அகம்-உள்ளம். தன்னை அடைந்தவர்க்கு இனிமைச் சுவை பயந்து நிற்றலின் இறைவனை, 'அமிர்து' என்ருர். அரிய பொருளாக இறைவன் இருத்தலின் அவனை, 'அமிர்து' என்றலுமாம். ஆல நிழல்-கல்லால மர நிழல். பட்டன்-ஞானசாரியன்; குருமூர்த்தி. "அறமுரைத்த பட்டன் தன்னை" என்பது அப்பர் தேவாரம். இங்குச் சனகர் முதலிய அருந்தவ முனிவர் நால்வர்க்கு இறைவன், தட்சிணமூர்த்தியாகக் கல்லாலின் கீழ் எழுந்தருளி அறம் முதலியவற்றை உபதேசித்த நிலையைக் குறிப்பதாம்; "ஆலின்கீழ் அறம் நால்வர்க்கு அன்றுரைத்தான்" என்பது அப்பர் தேவாரம். இறைவன் தன்னடியாரின் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் கெடுத்துத் தனது திருவருளாகிய புனித நீரில் மூழ்குவித்துத் தன்வயமாக்குவான் என்பார், "என்னைத் தன் பாற்படுத்தான்" என்ருர். "மலங்கெடுத்து மாதீர்த்தம் ஆட்டிக்கொண்ட மறையவனை" என்பது அப்பர் தேவாரம். "சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனை யாண்ட, அத்தன்" என்பது திருவாசகம்.

நிட்டையிலா : ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். அட்டமூர்த்திக்கு, அமிர்தினுக்கு, பட்டனுக்கு, தன்பாற் படுத்தானுக்கு : உருபுமயக்கங்கள். 3

சொல்லாண் டசுரு திப்பொருள்
சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்!
சில்லாண் டிற்சிதை யுஞ்சில
தேவர் சிறுநெறி சேராமே

வில்லாண் டகன கத்திரள்
மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

பொழிப்புரை : புகழ்ந்து சொல்லப் பெற்ற வேத சிவா கமங்களின் பொருளை (நன்கு) ஆராய்ந்து உணர்ந்த பரி சுத்தமான மனத்தினையுடைய சிவத் தொண்டர்களாக இருக்கின்றவர்களே! (நீங்கள்), சில ஆண்டுகளில் அழிந்து விடுகின்ற திருமால் பிரமன் இந்திரன் முதலாய தேவர் களுடைய குறுகிய கொள்கையினையுடைய மதங்களில் ஈடுபடாமல் நின்று, பொற்குவியல் போன்று திகழும் மேருமலையை வில்லாகக்கொண்ட வீரமுடையவனும், (அற வடிவாகிய) இடபத்தை ஊர்தியாக உடையவனும் பல ஆண்டுகள் (உள்ளவன்) என்னும் சொல்லின் அளவைக் கடந்து நின்றவனும் ஆகிய சிவபெருமானைப் புகழ்ந்தே 'பல்லாண்டு வாழ்க' எனக் கூறி (நாம்) வாழ்த்துவோம் என்றவாறு.

விளக்கம் : சொல் - இங்கு புகழ். சுருதிப் பொருள் - வேத சிவாகமப் பொருள்; சைவ சித்தாந்த நுண்பொருள் : "ஓரும்வே தாந்தமென் றுச்சியிற் பழுத்த, ஆரா இன்ப அருங்கனி பிழிந்து, சாரங் கொண்ட சைவசித் தாந்தத், தேன்" என்பது பண்டாரா மும்மணிக்கோவை. வேத நெறியி னின்று விரதாதிகளை அனுட்டித்தோர் சுவர்க்காதி போகங் களையும் சிவாகம நெறியினின்று சரியை கிரியை யோகங் களை அனுட்டித்தோர் பதமுத்திகளையும் பெறுவர். தூய் மனம் - இடையறுது சிவ சிந்தனையுடைய மனம். தொண்டர் - பற்றற்றுத் தொண்டு செய்யும் அடியவர். சமயவாதிகள் சமயவாதஞ் செய்து வீண் பொழுது போக் குவர் என்ற கருத்தை உட்கொண்டு மெய்யடியார்களை

தடையின்றி அளிக்கும் தன்மை வாய்ந்தது. இறைவன் அடியவர்க்குக் 'கரவாத கற்பகன்': "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்பதும், "அடியார்கள் வேண்டிற்றியும் விண்ணவனே விண்ணப்பம் கேட்டு நல்கும் செய்யவனே" என்பதும் அப்பர் தேவாரம். கடலுக்கு எல்லே உண்டு; ஆனுல், இறைவனின் பெருங்கருணைச் செய லுக்கு எல்லே இல்லே என்பார் அவரைக், "கரையில் கருணைக் கடல்" என்ருர். பாங்கன்-(எப்பொழுதும் பக்கத்திலுள்ள) தோழன்; அழகனுமாம்.

இரந்து இரந்து: அடுக்குத் தொடர். என்: விஞ. செய வல்லம்: தன்மைப் பன்மை விணைமுற்று. கற்பகம்: உவமை யாகு பெயர். பாங்கற்கு: உருபு மயக்கம். 5

சேவிக்க வந்தயன் இந்திரன்
செங்கண்மால் எங்குந்திசை திசையன
கூவிக் கவர்ந்து நெருங்கிக்
குழாங்குழா மாய்நின்று கூத்தாடும்
ஆவிக்(கு) அமுதைஎன் ஆர்வத்
தனத்தினே அப்பனே ஒப்பமரர்
பாவிக்கும் பாவகத்(து) அப்புறத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

பொழிப்புரை: பற்பல அண்டங்களிலுள்ள திருமால், பிரமன், இந்திரன் ஆகியோர் (சிவபெருமானேத்) தரிசிக்க வந்து, எவ்விடத்தும் திக்குகள்தோறும் நின்று ஓல மிட்டு (த்தாம் தாம் முன்னர் என்று) இடத்தை ஆக்கிர மித்து (ச்சென்று) நெருக்கிக் கூட்டங் கூட்டமாய் நின்று (தரிசிக்க, அப்பொழுது)ஆனந்த தாண்டவம் புரியும்(என்) உயிர்க்கு அமிர்தம் போன்றனே, எனது பேரன்பாகிய செல்

வத்தையுடையவனை,(எனது)தந்தையை, தேவர்கள் உவமை சொல்லுவதற்காக நினைக்கின்ற நினைப்பிற்கு அப்பாற் பட்டவனாகிய சிவபெருமானை (ப்புகழ்ந்து) 'பல்லாண்டு வாழ்க' எனக்கூறி (நாம்) வாழ்த்துவோம் என்றவாறு.

விளக்கம்: சேவித்தல்-வணங்குதல்; தரிசித்தல். செங் கண்மால் - சிவந்த கண்களையும் கரிய நிறத்தையும் உடையவன்; திருமால். கூவி - ஓலமிட்டு; கூச்சலிட்டு. கவர்ந்து-(முன்னர் இருக்க இடத்தை) ஆக்கிரமித்து. ஆவி- உயிர். அமுது-தேவர் உணவு; இது கிடைப்பதற்கு அரிய பொருள். தன்னை அடைந்த உயிர்க்கு இனிமைச் சுவை அளித்து நிற்றலின் இறைவனை, "ஆவிக்கு அமுதை" என்றார். ஆர்வம்-பேரன்பு; பிரீதி. தனம்-செல்வம்; உண் மைச்செல்வம் (வீடுபேறு). அமரர் ஒப்பு-தேவர்கள் உவமை செல்லுவற்காக. 'ஒப்பு அமரா' என்று பாடங்கொண்டு, 'ஒப்பு அமரா பாவிக்கும் பாவகத்து அப்புறந்தான்' - (தனக்குச்) சமானமாக அமைய வேறொருவரும் இல்லாத வனும் நினைக்கின்ற நினைப்புக்கு அப்பாற்பட்டவனும் என்றலுமாம். பாவகம்-எண்ணம்; நினைப்பு. அப்புறத் தான்-யாவற்றையும் கடந்த அப்பாற்பட்டவன்; தத்துவாதீ தன்; கடவுள்.

செங்கண்மால்: காரணப் பெயர். அமுது, தனம்: ஆகு பெயர்கள். அப்புறத்தானுக்கு: உருபுமயக்கம். குழாங்குழா மாய்; அடுக்குத் தொடர். 6

சீருந் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு
பெற்றேன்; பெற்றதார் பெறுவாருலகில்?

ஊரும் உலகுங் கழற
உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

பொழிப்புரை: சிறந்த மேன்மையும் திருவருட் செல்வமாகிய புண்ணியமும் (மிக) விளங்கச் சிவலோகத்தைத் தன் உலகமாக உடைய தலைவனது சிவந்த திருவடியின் கீழ் (இருந்து), (பிறர்) எவரும் பெறுதற்கரிய அறிவினைப் பெற்றேன்; இவ்வுலகில் (நான்) பெற்ற பேற்றை யார் பெற வல்லவர் (என்று) ஊரிலுள்ளவர்களும் உலகத்தவர்களும் புகழ்ந்து பேசவும், உமாதேவியாரின் கணவனுகிய சிவபெருமானுக்கு ஆட்பட்ட தன்மையினை உலகிலுள்ளவர்களும் விண்ணுலகிலுள்ளவர்களும் அறிந்து போற்றும் வகையில் (பக்தி மேலீட்டினுல்)நாக்குக்குளறி(அச்சிவபெருமானைப் புகழ்ந்தே) 'பல்லாண்டு வாழ்க' எனக்கூறி (நாம்) வாழ்த்துவோம் என்றவாறு.

விளக்கம்: சீர்-சிறப்பு; மேன்மை. திரு-திருவருட் செல்வம்; புண்ணியம். சிவலோக நாயகன் - சிவபெருமான். சேவடி- செவ்விய திருவடியுமாம். ஆரும்-எவரும். அறிவு-இங்குச் சிவஞானம்; சிவபெருமானே நம் இறைவன்; அவனுக்கு ஆட்படுதலே பெறத்தக்க பேருகிய அறிவுமாம். 'சிவலோக நாயகன் சேவடிக் கீழ் (இருந்து) ஆரும் பெருத அறிவு பெற்றேன்' என ஆசிரியர் தன்னை வியந்து கூறுகின்ருர்: "சிறுமானேந்தி தன் சேவடிக் கீழ்ச் சென்றங்கு இறுமாந்திருப்பன் கொலோ"என்பது அப்பர் தேவாரம். கழற-புகழ்ந்துபேச. உழறி-(நாக்குக்)குளறி. உமை மணவாளன்-சிவபெருமான். பார்-உலகு; உலகிலுள்ள மக்கள். விசும்பு-விண்ணுலகு; விண்ணுலகிலுள்ள தேவர்கள். பரிசு-விதம்; வகை.

பெற்றேன்: தன்மை ஒருமை வினைமுற்று. ஆர்: யார் என்பதன் மரூஉ. ஊர், உலகு, பார், விசும்பு; இடவாகு பெயர்கள். செம்மை + அடி = சேவடி: பண்புத் தொகை. 7

சேலுங் கயலுந் திளேக்குங்
கண்ணார்இளங் கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங்
குமென்று புண்ணியர் போற்றிசைப்ப
மாலும் அயனும் அறியாநெறி
தந்து வந்தென் மனத்தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின்
ருனுக்கே பல்லாண்டு கூறுதுமே.

பொழிப்புரை: சேல்மீனும் கயல்மீனும் மகிழ்ந்து பிறழ்ந்து திரிவது போன்ற கண்களையுடைய மாதர்களின் இளமை யான தனங்களின்மீது பூசிய செங்குங்குமம் போல(ச் சிவபெருமானின்) திருவெண்ணீறு அணிந்த திருமார்பு விளங்குகின்றதென்று (சிவ)புண்ணியச் செயலைப்புரியும் சிவனடியார்கள் (அதனைப்) புகழ்ந்து துதித்துக் கொண்டு இருக்கவும், திருமாலும் பிரமனும் அறிய முடியாத திரு வருள் நெறியினை (எனக்கு) அருளி, என்மனத்தினுள்ளே வந்து, (இனிமை பயக்கும்) பாலையும் அமுதையும் ஒத்து நின்றவனுகிய சிவபெருமானை(ப் புகழ்ந்தே) 'பல்லாண்டு வாழ்க' எனக்கூறி (நாம்) வாழ்த்துவோம் என்றவாறு.

விளக்கம்: சேல், கயல்-இவை மீன்வகைகள். திளைத்தல்-மகிழ்ந்து பிறழ்தல். செங்குங்குமம்-சிவந்த குங்குமப் பூ, இதனைச் சந்தனக் குழம்புடன் கலந்து வாசனைக்கும் குளிர்ச் சிக்கும் மார்பில் பூசிக்கொள்வது வழக்கம். பொடி-திரு வெண்ணீறு; இது பாவங்களைப் பொடிப்படுத்திப் போக்கு

வது. புண்ணியர்-சரியை, கிரியை முதலிய சிவபுண்ணியச் செயலைப்புரியும் சிவனடியார்கள். அடியார் கூட்டத்துடனே கலந்து நின்று இறைவனைப் போற்றித் துதித்தலே சிறப்பாம்: "பரவுமின்; பணிமின்; பணிவாரொடே விரவுமின்" என்பதுஅப்பர் தேவாரம்.

பெண்கள் மார்பில் அணிந்த செங்குங்குமக் குழம்பு காமுகர்க்கு அப்பெண்களின் மீது காதல் பெருக்குவது போலச் சிவபெருமான் திருமார்பினிடத்து அணிந்த திருவெண்ணீறு அடியவர்களுக்கு அச் சிவபெருமான் மீது பக்தியைப் பெருக்கும் தன்மையுடையதாம் என்பது முதல் இரண்டடியின் உட்கருத்து. மாலும் அயனும் அறியா நெறி-பிரமவிட்ணுக்களால் அறிய முடியாத இறைவனின் நிலை: "மாலறியா நான்முகனுங் காணு மலையினை" என்பது திருவாசகம். இறைவன் தன்னை அடைந்த அன்பர்களுக்கு என்றும் இனிமைப் பொருளாக விளங்குதலின் அவனைப், "பாலும் அமுதமும் ஒத்து நின்ருன்" என்ருர்.

அறியா: ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். நின்ருனுக்கு: உருபு மயக்கம். முதலிரண்டடிகள் உவமை அணி ஆகும். 8

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று)அருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

பொழிப்புரை: (வியாக்கிரபாத முனிவரின்) குழந்தையாகிய உபமன்யு முனிவர் (பசியினால்) பாலை விரும்பி (உண்ண) அழுதலும், (அவர்க்குப்) பாற்கடலையே அழைத்து (உண்ணக்) கொடுத்தருளிய பெருமானும், அக்காலத்தில் திருமாலுக்கு(ச் சலந்தராசுரனைப் பிளந்த சுதர்சனம் என்னும்) சக்கரப்படையைக் கொடுத்தருளிய இறைவனும், (என்றும்) நிலைபெற்றுத் திகழும் தில்லையம்பதியில் (வேதங்களை இடைவிடாமல்) ஓதி ஆரவாரம் செய்யும் அந்தணர்கள் (தீட்சிதர்கள்) வாழ்கின்ற சிற்றம்பலம் என்னும் பொற்சபையை(த் தமக்கு) இடமாகக் கொண்டு (அன்பர்களுக்கு) அருள் புரிந்து ஆனந்த தாண்டவம் புரிய வல்லவனும் ஆகிய சிவபெருமானை(ப் புகழ்ந்தே) ‘பல்லாண்டு வாழ்க’ எனக்கூறி (நாம்) வாழ்த்துவோம் என்றவாறு.

விளக்கம்: பாலகன்-வியாக்கிரபாத முனிவரின் குழந்தையாகிய உபமன்யு முனிவர். வேண்டி-(உண்ண) விரும்பி. வியாக்கிரபாத முனிவரின் குழந்தையான உபமன்யு முனிவர் தன் தாய்மாமனாகிய வசிட்டர் ஆசிரமத்துக் காமதேனுவின் பாலை உண்டு வளர்ந்தார்; பின்பு தந்தையின் ஆசிரமம் வந்தபோது அத்தகைய பாலை வேண்டி அழுதார். தந்தை குழந்தையை நோக்கிக், “குழந்தாய்! எம்பெருமானைக் கருதித் தவம் புரிக” என்று கூற, அவ்வாறே குழந்தை தவம் புரிந்தது. சிவபெருமான் உபமன்யு முனிவரின் பேரன்பைக் கண்டு பாற்கடலைக் கூவி அழைத்து அவர்க்கு உண்ண அளித்தருளினார் என்பதாம்: “ஆவின் பால்கண் டளவில் அருந்தவப், பாலன் வேண்டலும் செல்லென்று பாற்கடல், கூவி னான்” என்பதும், “பாலனுக் காயன்று பாற்கடல் ஈந்து” என்பதும் அப்பர் தேவாரம்.

திருமால் ததீசிமுனிவருடன் போரிட்டுத் தன்னிடம் இருந்த சக்கரத்தை இழந்தார். பின்பு அவர், சிவபெருமான் தன் திருவடிவிரலால் தரையில் கீறி உண்டாக்கப் பட்டுச் சலந்தராசுரனைப் பிளந்த சக்கரத்தைப் பெற அவரை வேண்டிப் பூசை புரிந்தார்; நாள்தோறும் ஆயிரம் செந் தாமரைப் பூக்களால் அர்ச்சித்து வழிபட்டு வருகையில், ஒரு நாள் சிவபெருமான் திருமாலின் அன்பு நிலையை உலகத்த வர்க்கு அறிவிக்கத் திருவுளங் கொண்டு ஒரு மலரை மறைத்திடத் திருமால் ஒரு மலர் குறைந்ததைக் கண்டு மனம் தளர்ந்து,தம் கண்ணையே பறித்து மலராக இட்டு வழி பட்டார்; அதனுல் மகிழ்ந்த எம்பெருமான் சக்கரத்தையும் கண்ணையும் அருளினுர் என்பதாம்: "பங்கயம் ஆயிரம் பூவினில் ஓர்பூக் குறையத், தங்கண் இடந்தரன் சேவடி மேற் சாத்தலுமே, சங்கரன் எம்பிரான் சக்கரமாற்(கு) அருளியவா(று), எங்கும் பரவிநாம் தோணுேக்கம் ஆடாமோ" என்பது திருவாசகம்.

மன்னிய - (மெய்யன்பர்கள் நீங்காது) நிலை பெற்ற என்றலுமாம். ஆலிக்கும் - (நடராசப் பெருமானின் காட்சி யைக் கண்டு) களித்திருக்கின்ற. அந்தணர் - மூவாயிரம் தீட்சிதர்கள். பாலித்து - (அன்பர்களுக்கு) அருள் புரிந்து. இடமாகப்பாலித்து-இடமாகக் கருதியுமாம். நட்டம்-நடனம்.

பாலுக்கு, வல்லானுக்கு: உருபு மயக்கம். செய்தவன்: வினையாலணையும் பெயர். ஈந்த: பெயரெச்சம். 9

தாதையைத் தாளற வீசிய
சண்டிக்கிவ் அண்டத்தொடு முடனே
பூதலத் தோரும் வணங்கப்பொற்
கோயிலும் போனகமும் அருளிச்

சோதி மணிமுடித் தாமமும்
நாமமும் தொண்டர்க்கு நாயகமும்
பாதகத் துக்குப் பரிசுவைத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

பொழிப்புரை : (தன்) தந்தை (எச்சதத்தரின்) கால்கள் அற்று விழும்படி வெட்டிய (அந்தணச் சிறுவராகிய விசார சருமர் என்ற) சண்டேசுரர்க்கும் அப்பொழுதே தேவர் களோடு மண்ணுலகத்தவரும் வணங்குமாறு அழகிய கோயிலும் (சிவ நின்மாலியமான) அமுதும் தந்தருளி (இன்னும் பரிவட்டமும்) ஒளி பொருந்திய அழகிய இண்டை மாலையும், சண்டேசுரர் என்னும் திருப்பெயரும் (சண்டி சர் பதவியும்) தொண்டர்க்கு எல்லாம் அதிபதியாகவும் (ஆகிய இவற்றை) (விசாரசருமர் செய்த) பெரும் பாவச் செயலுக்கு வெகுமதியாகக் கொடுத்தருளிய சிவபெரு மானை (ப்புகழ்ந்தே) 'பல்லாண்டு வாழ்க' எனக் கூறி (நாம்) வாழ்த்துவோம் என்றவாறு.

விளக்கம் : தாதை - தன்னைத் தந்தவன்; தந்தை. தாள்- கால்கள்: "தாதைதனைத் தாளிரண்டும்" என்பது திருவாசகம். சண்டி - விசாரசருமராகிய சண்டேசுரர். அண்டம் - இங்கு அண்டத்திலுள்ள தேவர்கள். உடனே - அப்பொழுதே; இது தாதையின் கால்களை வெட்டியதற்கும், சண்டேசுரர் என்ற பெயருடன் தொண்டர்க்குத் தலைவராகப் பெற்ற தற்கும் கால இடையீடு இன்மையை உணர்த்தி நின்றது. வணங்க - (சிவதரிசனம் அல்லது சிவ பூசை முடிவுற்றதும்) வணங்குமாறு. பொற்கோயில் - அழகிய கோயில்; இது சிவாலயத்தில் அபிடேகத் தீர்த்தத் தொட்டிக்கு அடுத்து அமைந்துள்ள தனிக் கோயில். போனகம் - (நின்மாலிய மான) திருவமுது. முடித்தாமம் - திருமுடியில் அணியும்

மாலை; இண்டைமாலை; இம்மாலை சரக்கொன்றை மலரால் அல்லது வில்வத்தால் தொடுக்கப் பெற்றது. நாமம்-திருப் பெயர்; இது சண்டேசுரர் என்ற பெயர் ஆகும். நாயகம்-முதன்மை; அதிபதி. பாதகம் - பெரும் பாவச் செயல். இது தன்சிவ பூசைக்கு இடையூறு செய்த தனது தந்தையின் கால்களை மழுவால் வெட்டி வீழ்த்திய செயல். பரிசு-வெகுமதி; இங்குக் கோயில், போனகம், முடித்தாமம், நாமம், நாயகம் முதலியன அளித்தலைக் குறித்தல்.

சிவபெருமானின் திருவடிகளுக்கு அன்புடையவரான விசாரசருமர், தன் சிவபூசைக்கு இடையூறு செய்த தந்தையின் கால்களை வெட்டிய பாதகச் செயல் புண்ணியச் செயலாக மாறியது என்பார், "பாதகத்துக்குப் பரிசு" என்ருர். "அரனடிக்(கு) அன்பர் செய்யும் பாவமும் அறம தாகும்... ....நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே" என்பது சிவஞானசித்தியார்.

சோழ நாட்டுக் காவிரிக்கு வடகரையில் திகழும் திருச்சேய்ஞலூரில் அந்தணர் குலத்தில் எச்சதத்தன் என்பவர்க்கு விசாரசருமர் என்ற ஒரு மகனுர் இருந்தார். அவர் வேதங்களை நன்கு பயின்றவர்; அவ்வூரில் பசுக்களை மேய்ப்பவன் பசுவொன்றை அடித்ததைக் கண்ட பொழுது விசாரசருமர் தாமே பசுக்களை மேய்க்கலானுர்; பசுக்களும் மேய்ந்து நன்கு பால் சொரியத் தொடங்கின; மண்ணியாற்றின் தென்கரையில் ஆத்தி மரத்தடியில் மணலினுல் சிவலிங்கம் அமைத்துப் பசுவின் பாலைக்கொண்டு திருமஞ்சனம் ஆட்டினுர். இவர் இங்ஙனம் செய்வதைச் சொல்லக் கேட்டு அறிந்த இவரது தந்தை ஒரு நாள் இவரது செயலை நேரில் கண்டார்; பாற்குடங்களைக் காலால் இடறினுர்; அதனைக் கண்ணுற்ற விசார

சருமர் மிகச் சினந்து தம்முன் கிடந்த ஒரு சிறு கோலை எடுக்க, அது மழுவாக மாறச் சிவாபராதம் செய்த தந்தையின் கால்களை வெட்டினர். விசாரசருமரின் சிவபக்தியைக் கண்ட சிவபெருமான் அங்கு எழுந்தருளி, "நாம் சூடும் மலர்களும் உடுக்கும் ஆடைகளும், உண்ட பரிகலமும் உனக்கே யாகுக" என்று கூறித் தொண்டர்களுக்கெல்லாம் அதிபதியுமாக்கிச் சண்டேசப் பதமும் தந்தருளினர் என்பதாம். "நிறைந்தமா மணலைக் கூப்பி நேசமோடாவின் பாலைக், கறந்து கொண் டாட்டக் கண்டு கறுத்த தன் தாதை தாளை, எறிந்தமா ணிக்கப் போதே எழில் கொள்சண் டீசன் என்னச், சிறந்தபே ரளித்தார் சேறைச் செந்நெறிச் செல்வ னாரே" என்பது அப்பர் தேவாரம். "தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச், சாதியும் வேதியன் தாதைதனைத் தாளிரண்டும், சேதிப்ப ஈசன் திருவருளால் தேவர் தொழப், பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்" என்பது திருவாசகம்.

தாதையை, வைத்தானுக்கு: உருபுமயக்கம். அண்டம்: இடவாகுபெயர். தாள் : பால்பகா அஃறிணைப்பெயர். முடித் தாமம் : வேற்றுமைத் தொகை. 10

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
யாளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

பொழிப்புரை: குழலின் ஒலியும், யாழின் ஒலியும் நடன மாடும் ஒலியும், எவ்விடத்தும் கூட்டமாக (அடியார்கள்) பெருகி நின்று துதிக்கும் (தோத்திர) ஒலியும் திருவிழாவின் ஒலியும் (ஆகிய இவ்வொலிகள் எல்லாம்) ஆகாயத்தின் அளவும் சென்று, மேன்மேலும் பெருகி அதிகரிக்கின்ற திருவாரூரில் (எழுந்தருளிய) இளமை வாய்ந்த இடபத்தை வாகனமாக உடைய சிவபெருமானுக்குத் தலைமுறை தலை முறையாக அடிமை பூண்ட ஆடவரும் மகளிரும் மணம் புரிந்து கொண்ட குடும்பத்தில் பிறந்த பழமையான அடி யாரோடும் கூடி நின்று எம் தந்தையாகிய சிவபெரு மானை(ப் புகழ்ந்தே) ‘பல்லாண்டு வாழ்க’ எனக்கூறி (நாம்) வாழ்த்துவோம் என்றவாறு.

விளக்கம்: முதலிரண்டடிகள் திருவாரூர்ச் சிவாலயத் தின் சிறப்பினைக் கூறுவன. குழல்-புல்லாங்குழல். இது துளைக் கருவி. யாழ்-நரம்புகள் கொண்ட இசைக்கருவி. ஏத்து ஒலி-துதிக்கும் தோத்திர ஒலி. விழவொலி-திருவிழாக் காலங்களில் உண்டாகும் மக்களின் பேரொலி. விண்-ஆகா யம்; தேவருலகமுமாம். விம்மி - (மேன்மேலும்) பெருகி. திருவாரூர்-(திரு + ஆர் + ஊர்) திரு-இலக்குமியும், ஆர்- பூமாதேவியும், பூசித்த ஊர்; ஆரூர் பூமாதேவியின் இதய மாகவும் திகழ்வதாம். இலக்குமி தவம் செய்தமையை, “மருக்கமழ் மலர்மென்பாவை மாதவம் புரிதலாலே, திருக் கமலாலயப் பேர் பெற்றதிச் செல்வ மூதூர்” எனவரும் திருவாரூர்ப் புராணச் செய்யுளினுலும், பூமாதேவியின் இதய கமலம் என்பதை, “மேதினிக், காதல் மங்கை இதய கமல மா மாதொர் பாகனுர் ஆரூர் மலர்ந்ததால்” எனவரும் பெரிய புராணச் செய்யுளினுலும் அறியலாம். மழவிடையான் - இளையதாகிய இடப வாகனத்தையுடையவன்; சிவபெரு

மான்: "மழவிடையாய்! நின்பதம் போற்றி போற்றி" என்பது அப்பர் தேவாரம்.

வழி வழி ஆளாய்-தலைமுறை தலைமுறையாக அடிமை பூண்டவராய்; அல்லது தாய்மரபு தந்தைமரபு என்ற இரு மரபும் சிவபெருமானுக்கு அடிமை செய்வோராய்: "வழி வழி யாளாகும் வண்ணம் அருள் எங்கள் வானவனே" என்பது அப்பர் தேவாரம். "ஏழேழ் படிகால் எமையாண்ட பெம்மான்'' என்பது சுந்தரர் தேவாரம். "மாதொரு பாகனுர்க்கு வழிவழி யடிமை செய்யும்'' என்பது பெரியபுராணம். ''திருவாரூரின், மழவிடையாற்கு வழி வழியாளாய் மணஞ் செய் குடிப்பிறந்த, பழஅடியார்' என்பது இங்குச் சுந்தர மூர்த்தி சுவாமிகளைக் குறித்து நிற்பது என்றும் கூறுவர். சுந்தரர் தாயாராகிய இசை ஞானியாரின் தந்தை ஞானசிவா சாரியாரும், அவர் முன்னோரும் திருவாரூர் தியாகேசப் பெருமானுக்கு வழிவழி அகத் தொண்டு பூண்டு ஒழுகியவர்கள். சுந்தரர் தந்தையாராகிய சடையனாரும் அவர் முன்னோரும் திருநாவலூர்ப் பெருமானுக்கு வழி வழி அகத்தொண்டு பூண்டுஒழுகியவர்கள். மணம் செய் குடி-விதிப்படி திரு மணம்செய்து கொண்ட குடும்பம். பழ அடியார்-தொண்டு புரிவதில் அனுபவம்பெற்ற சிவனடியார்கள். எம்மான்-எம் தந்தை; சிவபெருமான்: "எம்மான் எம் அனையென் றனக் கென்தனை" என்பது சுந்தரர் தேவாரம்.

மழவிடை, மழ : உரிச்சொல். வழிவழி: அடுக்குத் தொடர். பழ அடியார் : பண்புத் தொகை. 11

ஆரார் வந்தார்? அமரர்
குழாத்தில் அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன்
அங்கி இரவியும் இந்திரனும்

தேரார் வீதியில் தேவர்
குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும்
ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

பொழிப்புரை : அழகினையுடைய (மார்கழித்) திருவாதிரை நாளில் (இங்குச் சிவபெருமானைப் புகழ்ந்து பாடுதற்குத்) தேவர் கூட்டத்துள் யார் யார் வந்தனர்? திருமாலுடன் பிரமதேவனும், அக்கினி தேவனும், சூரிய தேவனும், இந்திரனும் (வந்தனரா? நன்று;) தேரோடும் (சிவமே நிலவும் நான்கு) திருவீதியிலும் தேவர்களின் கூட்டங்கள் எல்லாத் திசைகளிலும் நிறைந்து நிற்க உலகெலாம் நிறைந்த (இறைவனின்) பழமையான புகழைப் பாடிக் கொண்டும் (மெய்ம்மறந்து கூத்து) ஆடிக்கொண்டும் (அவனைப்) ‘பல்லாண்டு வாழ்க’ எனக் கூறி (நாம்) வாழ்த்துவோம் என்றவாறு.

விளக்கம் : அமரர் - தேவாமிர்தம் உண்டதனால் மரணம் இல்லாதவர்கள்; தேவர்கள். அணி - (அலங்கார) அழகு. ஆதிரை நாள் - (இது மார்கழித் திங்களில் மதி நிறைந்த நன்னாளில் வரும்) திருவாதிரை நட்சத்திரம். இத்திருவாதிரை நாள் சிவபெருமானுக்கு மிக உகந்த நன்னாள் ஆகும். “ஆதிரை நாளுகந் தானும் ஆரூர் அமர்ந்த அம் மானே” என்பது அப்பர் தேவாரம். அணியுடை ஆதிரை நாள் என்றது, கண்ணுக்கும் கருத்துக்கும் மிக அழகிய ஆருத்திரா தரிசனத்தைக் குறித்தலே. (ஆருத்திரா - ஆருத்திரை - திருவாதிரை நாள்) நாராயணன் - பாற்கடலில் பள்ளி கொண்டவன்; திருமால். அங்கி - அக்கினி தேவன். தேரார்வீதி - தேரோடும் மாடவீதி. குழாங்கள் - கூட்டங்கள். பார் - பூமி; உலகம். புகழ்தல் - இறைவனுடைய அருட்செயல்

களை இனிய பாட்டு வடிவிலும் உரைநடை வடிவிலும் கூறிப் பாராட்டுதல். இறைவன் செயலைப் புகழ்ந்து பாடுதலும் ஆடுதலும் வேண்டுமென்பார், "தொல்புகழ் பாடியும் ஆடியும் என்றார்: "ஆடிப்பாடிஅண் ணாமலை கைதொழ, ஓடிப் போம்நம துள்ள வினைகளே" என்பதும், "பூமாலை புனைந் தேத்திப் புகழ்ந்துபாடித், தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி" என்பதும் அப்பர் தேவாரம்.

ஆர் ஆர்: அடுக்குத் தொடர்; வினா. ஆர்: யார் என்பதன் மரூஉ. அமரர்: காரணப் பெயர். திசையனைத்தும். உம்: முற்றுமை. தொல்புகழ்: பண்புத் தொகை. 12

எந்தை எந்தாய் சுற்ற(ம்)முற்றும்
எமக்கமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யுஞ் சிவன்சீர்
அடியார் அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
எனைப்புகுந் தாண்டுகொண் டாருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே.

பொழிப்புரை: எனது தந்தையும், எனது தாயும் (எனது) உறவினரெல்லாருமாகி, எமக்கு அமிர்தமாகி (நின்ற) எம்பெருமானே என்று பலகாற் சொல்லித் துதித்து இடைவிடாமல் நினைக்கின்ற சிவபெருமானது சிறப்புற்ற அடியார்களுக்கு அடிமைபுரியும் நாய் போன்ற செப்புறை என்ற ஊரிலுள்ள முடிவில்லாத பேரானந்தத்தைப் பெற்ற சேந்தனாகிய என்னை '(வலிய வந்து) ஆட்கொண்டு, (என்னுள் புகுந்து, (எனது ஆணவம் முதலிய) மலக் கட்டுகளை ஒழியச் செய்து, (எனது) அரிய உயிர் மீது அருள் பாலித்து

விளங்குபவனே' என்று (சிவபெருமானைப் புகழ்ந்தே) 'பல்லாண்டு' வாழ்க' எனக் கூறி (நாம்) வாழ்த்துவோம் என்றவாறு.

விளக்கம் : எந்தை - எனது தந்தை. சுற்றம் - உறவினர். சிந்தை செய்தல் - இடைவிடாமல் நினைத்தல். நாய் இழிபிறப்புடையதாயினும் நன்றி மறவாமை உடையது; அது போல் இறைவன் தமக்கு அருளிய செயலை நினைந்து உருகும் இயல்பு தமக்கு உண்டு என்பதைக் குறிக்கத் தம்மை, 'நாய்' என்ருர். செப்புறை - இது சேந்தனுரின் ஊர் என்பர்; சிலர் குடிப்பெயர் என்றும் கூறுவர். அந்தம்-முடிவு. பந்தம் - (ஆணவம் முதலிய) மலக்கட்டு. பரிவு-அன்பு; அருள்.

எந்தை : மரூஉப்பெயர். செய்யும் : பெயரெச்சம். ஆருயிர்: பண்புத்தொகை. "செப்புரை", 'செம்மிறை' என்றும் பாடம் 13

திருச்சிற்றம்பலம்

சேந்தனுர் திருப்பல்லாண்டு தெளிவுரை

முற்றிற்று.

திருவிசைப்பாப் பதிகம்	– 28	செய்யுள்	– 288
திருப்பல்லாண்டு பதிகம்	– 1	செய்யுள்	– 13
ஆக	– 29	ஆக	– 301

உ

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை

செய்யுள் முதற்குறிப்பகராதி

திருவிசைப்பா

திருப்பல்லாண்டு

உ

SIVA SIVA

Panniruthirumurai Publication Endowment
In memory of
Sri-la-Sri ADI KUMARAGURUPARA SWAMIGAL
Immovable property worth Rs. 50,000

This Endowment is made by Sri-la-Sri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avergal, Sri Kasi Mutt, Tirupanandal, in memory of the great Scholar Sri Adi Kumaragurupara Swamigal who spread Tamil culture from Cape Comorin to the Himalayas in the 17th century, for propagating the twelve Thirumurais, 1 to 3; sung by Tirugnansambandamurthy Nayanar; 4 to 6; by Tirunavukkarasu Nayanar; 7; by Sundaramurthy Nayanar; 8; by Saint Manikkavachakar; 9; by Thirumaligai Thevar and Senthanar etc; 10; Thirumula Nayanar; 11; Seraman Perumal Nayanar and others and 12: by Sekkilar. The object is to inculcate devotion for the Thirumurais in the student population and train them into good citizenship of the Bharat.

2. The property so endowed is detailed in the schedule hereto attached and consists of Acres 43, Cents 98, wet and dry lands etc. in Marathurai village, No. 3 Marathurai vattam and a house and 15 cents dry in Tirupanandal village in Kumbakonam Taluk, Tanjore District and belonging to the donor with patta and miras in his name. The value of the property is Rs 50,000 and the estimated annual income is about Rs. 2,500.

3. The said property is to be vested in the Kumaragurupara Swamigal Mutt at Srivaikuntam, Tirunelveli District and it shall be administered by the Managing Trustee of the said Mutt as provided hereunder. The annual net income from the property i. e. excluding Government dues, establishment charges, maramat expenses etc. shall be utilised for the purpose mentioned in para 4 infra. The Managing Trustee of the said Kumaragurupara Swamigal Mutt shall be responsible for the safe and proper investment of the said funds and for making the same available for the regular and efficient conduct of the endowment.

4. The Managing Trustee of the said Mutt at Srivaikuntam should arrange to have the twelve Thirumurais to be printed and published in their serial order or according to necessity arising at any time for a particular Thirumurai. When publishing each Thirumurai the title sheet should contain a note that the publication is made out of the endowment founded on 8-4-1950 by Sri-la-Sri Kasivasi Arulnandi Tambiran Swamigal Avl., Sri Kasi Mutt, Tirupanandal, in grateful memory of SRI ADI KUMARAGURUPARA SWAMIGAL. 25 (twenty five) copies of each publication should be sent free to the Donor and his Successors-in-interest. The other copies should be arranged to be widely distributed in sale at not more than the actual cost. The sale proceeds of the books shall be added to the corpus of the fund with the Managing Trustee. It will be within the discretion of the Managing Trustee to supply copies free of cost to selected well known Libraries, (one copy to each library) serving the needs of lovers of Tamil Literature and culture.

5. A regular account of receipt and expenditure shall be maintained by the said Managing Trustee, which shall be audited by a certified auditor every year. The Managing Trustee shall send to the Donor and his Successors-in-interest annually a copy of the audit report along with an account showing under different heads, the Thirumurais published, number of copies printed, freely distributed, sold and remaining on hand, the income received there from, the amount spent in publishing Thirumurais and the amount of sale proceeds added to the corpus of the fund, with the Managing Trustee.

6. The income from the property and the sale proceeds of the publication as shown above shall be utilised for the printing and publishing the above mentioned twelve Thirumurais only.

7. This endowment shall not be used or diverted for any purpose other than that for which it is provided as above, and shall be managed as above provided by the present Managing Trustee of Sri Kumaragurupara Swamigal Mutt, and his successors (Managing Trustee) being in perpetuity.

Dated 8-4-1950 (Sd.) *Kasivasi Arulnandi Tambiran.*

Registered at Tiruvadamarudur Sub-Registrar's office on General Stamp of Rs. 375 on 14-4-1950 as number 794 in Book 1 volume 1002, pages 181-186.

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் கருணை பாலித்தருளிய பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதிச் சொத்தின் வருமானத்திலிருந்து விலைக்கு வாங்கப் பெற்ற நன்செய் நிலங்கள், கட்டப்பெற்ற கட்டிடங்களின் பெறுமானம் ஆகிய இவற்றின் விபரங்கள்.

நன்செய் நிலங்கள்

கிரயத் தேதி	கிராமத்தின் பெயர்	சர்வே எண்	பரப்பு ஏ. செ.	விலை
1) 5-4-52	திருப்புளியங்குடி (ஸ்ரீவைகுண்டம் தாலூகா)	732/2	0-18	ரூபா.
		958/2	0-55	3,600
2) 18-4-52	ஷை ஷை	808/2	0-10	1,575
		809/1 & 962A	0-25½	
	கூடுதல் ஏக்கர்.		1-08½செ.	ரூ.5,175

கட்டடங்கள்

ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மணிவிழாச் சின்னம்

"ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி சாமிநாத சுவாமிகள் அருளகம்"

29-3-59 முதல் 30-3-60 வரை கட்டப்பெற்ற

மட்டப்பா காரைக்கட்டு வீடுகள்	7
ஓட்டடுக்கு வீடுகள்	6
கார் ஷெட்	1

காலிமனை விலை, நான்கு பக்கம் காம்பவுண்டு மதில்கள், மின்சாரவிளக்கு அமைப்புச் செலவு உட்படப் பெறுமானம் .... ரூ. 16,721-28

1964ம் வருஷத்தில் புதிதாக கட்டப்பெற்ற

ஓட்டடுக்கு வீடுகள்	2
சாமான்கள் வைக்கும் ஓட்டடுக்கு அறைகள்	2

ஆக கட்டிடங்கள் நான்குக்கும் செலவானது ரூ. 2065-00

ஆகக் கட்டிடங்கள் மொத்தப்பெறுமானம் 18,786-28

உ

சிவ சிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி
அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
நிறுவியுள்ள தருமங்கள்

எண்	தரும விபரம்	முதற் பொருள் ரூபாய்
1.	திருமுறை வளர்ச்சிக்கு ஆக 41 தருமங்கள்	12,24,900
2.	கல்வி அபிவிருத்திக்கு ஆக 72 தருமங்கள் ...	37,45,125
3.	சைவ சித்தாந்தம் பரப்ப ஆக 7 தருமங்கள்	1,56,000
4.	அன்னதானம் செய்ய ஆக 138 தருமங்கள்	23,93,500
5.	வைத்தியம் செய்ய 6 தருமங்கள்	4,23,500
6.	பொது தருமங்கள் - ஸ்நான கட்டம், அகதிகள் நன்கொடை, தண்ணீர்ப் பந்தல், ஒளிவளர் விளக்குகள், பசுப் பரிசு, கோ சம்வர்த்தனம், படிக் காசு நிதி, கல்லெழுத்து முதலியன 88 தருமங்கள்	11,45,890
	ஆகத் தருமங்கள் 352-க்கு ...	90,88,915

உ

சிவ சிவ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவிசைப்பா ஆசிரியர்களின் துதி

நின்மலனின் அருளாலே நீத்துலக வாழ்க்கையினைச்
சோன்மயனைச் சிவனவனைத் துதித்தினிய சொலினால்எம்
புன்மையினைப் போக்கியமா ளிகைத்தேவன் முதற்புலவர்
நன்மலர்த்தாள் இணைபணிந்து மனத்தகத்து நாட்டுவமே.

—அருணகிரி புராணம்.

செந்தமிழார் மாளிகைத்தே வன்முதலோர் சேவடியும்
வந்தனைசெய்(து) உய்ந்தேம் மகிழ்ந்து.

—பரமததிமிரபானு.

குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம். 12-64